# தமிழரசு



விழாக் காலங்களில் விண்மீன் போல்
பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.




மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஊட்டியில், செல்வி கஸ்தூரி என்ற பெண்ணின் தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக தமது சொந்தப் பணத்திலிருந்து ரூ.10,000 நிதி உதவி வழங்கியதோடு, செல்வி கஸ்தூரிக்கு சேரன் போக்குவரத்துக் கழகத்தில் மீண்டும் பணியாற்ற உத்தரவிட்டார்கள் (6.7.1992).

Verified

## இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| உதகையில் முதல்வர் | ... | 2 |
| கர்மவீரர் காமராசர் | ... | 5 |
| மாங்கனிக் கண்காட்சி | ... | 8 |
| தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும் | ... | 9 |
| கால்நடை வளர்ப்போம் மீன்வளம் சேர்ப்போம் | ... | 17 |
| நூல் நயம் | ... | 23 |
| புரட்சித் தலைவியின் முதலாண்டு ஆட்சி - ஒரு கண்ணோட்டம் | ... | 24 |
| நகர் ஊரமைப்பு நலப்பணிகள் | ... | 31 |
| கூட்டுறவுத் துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள் | ... | 33 |
| வனவளம் காப்போம்! | ... | 35 |
| மாணவர் பக்கம் | ... | 39 |
| திருச்சி மாவட்ட ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி | ... | 41 |
| அநாதை — கவியரசர் கண்ணதாசன் சிறுகதை | ... | 42 |
| கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் | ... | 46 |



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆடித் திங்கள் - 1
மலர்: 23
இதழ்: 2
16-7-1992

— கடைசிப் பக்க அட்டையில்...



# உதகையில் முதல்வர்

மலர்க் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்காக மே மாதத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஊட்டியின் ரம்மியமான மற்றும் இயற்கை எழிலார்ந்த சூழ்நிலையைப் பேணிக் காக்க வேண்டு மென்றும், ஏற்கெனவே குறைந்து வரும் வனப்பகுதிகள் மேலும் அழிக்கப்படு வதையும், பல மாடிக் கட்டடங்கள் கட்டப் படுவதையும் தடை செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்றும், ஊட்டியின் புராதன அழகையும் சோலா காடுகளின் (Shola Forest) தனித்தன்மையைப் பாதுகாத்துப் பரா மரிக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரி வித்தார்.

ஊட்டிக்கு வரும் எல்லாச் சுற்றுலாப் பயணிகளையும், வயது வித்தியாசமில்லா மல் கவருகின்ற ஊட்டி ஏரியின் அழகைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற ஆகாயத் தாமரை (Water Hyacinth) என்ற நீர்த் தாவரத்தை முழுமையாக நீக்கி, ஏரியைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றி, ஊட்டியின் பழைய எழிலைக் கொண்டு வரவேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்கிணங்க, அரசு அதிகாரிகள் இப்பணியில் ஈடுபட்டு ஆய்வு மேற்கொண்டனர், அந்தச் சீர மைப்புப் பணியின் முதற்கட்டமாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 3.7.1992 அன்று ஊட்டி ஏரியையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும், அந்தப் பகுதியில் உள்ள பலவேறு ஆக்கிரமிப்புகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊட்டியைச் சுற்றியுள்ள வடக்கு ஏரிச் சாலை, மான் பூங்கா, அர்பொரேட்டத் தில் (Arobaratum) உள்ள பாதுகாக்கப் பட்ட தாவர வகைகள் உள்ள பகுதி, குழந்தைகள் பூங்கா ஆகிய இடங்களில் இறங்கிப் பார்வையிட்டார். மான் பூங்கா வில் சில மான்களை வாஞ்சையுடன் தட்டிக்கொடுத்து, அவைகளுக்கு உணவை யும் தன் கையால் வழங்கினார். அர் பொரேட்டத்தைப் பார்வையிடும் போது அந்தத் தோட்டம் இன்னும் சிறப்பாகப் பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத் தினார்.

குழந்தைகள் பூங்காவுக்கு அருகில் அமைந்துள்ள கழிவு நீர்க் கால்வாய் நீரை இனிமேல் சுத்தப்படுத்திய பின்பு தான் விட வேண்டும் என்ற அறிவுறுத்தினார். ஏரியில் புதிதாக வளர்ந்துள்ள ஆகாயத் தாமரை தாவரத்தை ஜூலை மாதம் இறுதிக்குள் முழுமையாக நீக்கவேண்டும் என்றும், பின்னர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆட்களை நியமனம் செய்து புதிதாக வளரும் நீர்த் தாவரத்தை உடனுக்குடன் களைந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

ஏரியைச் சுற்றி 200 மீட்டர் தூரத் திற்குள் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை யும், அனுமதியின்றிக்கட்டப்பட்ட கட்டடங் களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத் தினார். ஏரியைச் சுற்றிப் பசுமையான மரங்களை வளர்த்து, மீண்டும் ஒரு அடர்த்தியான வனப்பகுதியாக அதனை மாற்ற வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

ஏரியின் ஓரத்திலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றும், குழந்தை களுக்கானரயில்செல்லும்பாதையைவிரிவு படுத்தி, அதன் முடிவில் பொம்மை ரயில் நிலையம் ஒன்றையும், சிற்றுண்டிச் சாலை யையும் அமைக்கவேண்டுமென்றும்கருத்து தெரிவித்தார். ஏரியின் நடுவில் தற் போதுள்ள மிதக்கும் சிற்றுண்டிச் சாலையை நவீனமயமாக்க வேண்டுமென் றும், ஏரி அசுத்தமாவதைத் தடுப்பதற்கு எல்லாப் படகுகளிலும் ஒரு சிறிய குப்பைத் தொட்டி, அமைக்க வேண்டு மென்றும் கருத்துத் தெரிவித்தார். ஏரி ஓரத்தில் அமைந்துள்ள படகு வீடு மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகிய கட்டடங்களை இயற்கையோடு இணைந்த வனப்பு மிகுந்த கட்டடங்களாக மாற்றி அமைக்கத் திட்டம் மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார். ஏரியைச் சுற்றி அடுக்குத் தளங்கள் (Terracing) நன்முறையில் அமைக்கப்பட்டு ஏரியின் அழகு பாது காக்கப்பட வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இயந்திரப் படகில் ஊட்டி ஏரியை ஒருமுறை சுற்றி வந்தார். பின்னர், சிறிய ரயிலில் பயணம் செய்து ஏரியின் பல வேறு பகுதிகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் Cairn Hill-இல் உள்ள சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சி மையத்திற்கு (Eco Awareness Centre)வருகை தந்து வனத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத் தினார். அருகாமையில் உள்ள 'சோலா காடு'-களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வனத்துறை அதிகாரிகளுடன் சோலா காடுகளைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி ஆலோசனை நடத்தினார். சுற்றுப் புறச் சூழல் விழிப்புணர்ச்சி மையத்திற்கு வருகை புரிந்ததன் நினைவாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரக்கன்று ஒன்றை நட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, அதாவது 3 மணி நேரம் இந்த ஆய்வினை மேற்கொண்டார்.

ஊட்டி ஏரியின் அழகுக்கு ஒரு சவா லாக இருக்கின்ற ஆகாயத் தாமரைத் (Hyacinth) தாவரத்தை எவ்வாறு ஒழிப்பது என்பதைக் குறித்தும், ஏரியின் அழகை மேம்படுத்த மீதமுள்ள ஆக்கிர மிப்புகளை எவ்வாறு அகற்றலாம் என் பதைக் குறித்தும், இச்சுற்றுலா இடத்தை

## ஏழைப் பெண்ணுக்கு உதவி!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் ஊட்டி நகரத்தைச் சார்ந்த செல்வி கஸ்தூரி என்ற 18 வயது பெண், தனது ஏழ்மை நிலையை விளக்கி நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது தாயாருக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க நிதி உதவி செய்ய வேண்டுமென்று 3.7.92 அன்று மனு ஒன்றினைக் கொடுத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவரது ஏழ்மை நிலையையும், பிரச்சினைகளையும் கேட்ட றிந்து ஆவன செய்வதாகக் கூறினார்கள். பின்னர் 6.7.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், மனுதாரர் செல்வி கஸ்தூரியை நேரில் வர வழைத்து, தனது சொந்தப் பணத்திலிருந்து அவ ருடைய தாயாரின் மருத்துவச் செலவுக்காக ரூ.10,000 வழங்கினார்கள். அப்பொழுது மனுதாரர் செல்வி கஸ்தூரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், தான் கடந்த 8 ஆண்டுகளாக சேரன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் கூட்டுறவுப் பண்டக சாலையில் பணிபுரிந்து வந்ததாகவும், தற்பொழுது பணி நீக்கம் செய்யப்பட்டு வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், முறையிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனுதாரர் செல்வி கஸ்தூரி யின் கோரிக்கையை ஆய்வு செய்து, அதே இடத் தில் அவரைப் பணி அமர்த்தத் தக்க மேல் நட வடிக்கையை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

மேலும் கவர்ச்சிகரமாக்கச் செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், முதலமைச்சரின் செயலாளர் திரு எஸ்.ஆர். கருப்பண்ணன், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கபிலன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனாநாயர், வேளாண்மைப் பொறியியல் துறைத் தலைமைப் பொறியாளர் திரு. கிருஷ்ணசாமி மற்றும் உயர் அதிகாரிகளுடன் பின்னர் ஆலோசனை நடத்தி, மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.



★ பெண்கள், விழிப்படைந்தால் குடும்பம முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

- பெருந்தலைவர் காமராசர்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டம், பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்திருக்கின்ற படகு குழாமை (Boat Club) 6.7.92 அன்று பார்வையிட்டார்.

இயற்கை அழகுமிக்க அந்தப் பைக்காரா ஏரி கிட்டத்தட்ட 17 கி.மீட்டர் நீளமுள்ளது. அதை விசைப்படகு மூலம் சுற்றிப் பார்த்தார்கள். தற்போது அந்த ஏரி முப்படைகளையும் சேர்ந்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற இடமாக அமைந்திருக்கிறது. இயற்கை எழில் சூழ்ந்த இந்தப் பைக்காரா ஏரிக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் அங்குச் சுற்றுலாப் பயணிகளுக்கெனச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் படகு குழாம் ஒன்றை ஏரியின் ஒரு பகுதியில் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுலாத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் மிக அதிகமான அளவில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுவர்.

சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த இடத்தில் வசதி செய்யும்பொழுது, இயற்கை எழில் மிக்க இந்த ஏரிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். முப்படை வீரர்கள் பயிற்சி நிலையத்திற்கு இடையூறு இன்றி வனத்துறையினரிடம் கலந்து, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் படகுக் குழாமிற்கு ஒரு தனி வழி ஒன்று அமைக்கப்படும். ஆனால், அதே சமயத்தில், சுற்றுலாப் பயணிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து, படகு குழாம் செல்ல, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புப் பேருந்துகள் மூலம் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவார்கள். மற்ற தனியார் வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டா. இதன் மூலம் அங்கு உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் பாதுகாக்கப்படும். மேலும், அந்தப் பகுதியில் சுற்றுலா மையம் (Tourist Complex) ஒன்று உருவாக்கப்படும். இதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனச் சுற்றுலாத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பைக்காரா நீர்த்தேக்கத்திற்குச் சென்றபோது, வெலிங்டனில் உள்ள ராணுவப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் ஒய்.கே. வதேரா அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ப. சிவகாமி, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர் ஆகியோர் உடன்சென்றார்கள்.



# கர்மவீரர் காமராசர்



— முதல் பக்க அட்டையில்...

ஒருவருடைய புகழ், அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைப் பொறுத்து அமைவதில்லை; எவ்வளவு பட்டங்களையும் - பதவிகளைச் செல்வங்களையும் பொற்றிருந்தார் என்பவைகளின் அடிப்படையிலும் நிலைத்து நீடிப்பதில்லை.

குறிப்பிட்ட அந்த நபர், தனது நலத்தில் எவ்வளவு உறுதியாக இருந்தார் - தன் மனைவி மக்களை எவ்வாறெல்லாம் நலமுறச் செய்திருந்தார் - தன்னுடைய உற்றார் உறவினர்களுக்கெல்லாம் எவ்வளவு உதவிகரமாக இருந்தார் என்பதன் அடிப்படையிலும் அன்னாரின் பெருமை விரிந்து பரவி விழுதுவிடுவதில்லை!

வேறு எப்படி இருந்தால்தான் ஒருவரது புகழும் பெருமையும் நீடித்து நிலைக்கும் என்று தானே கேட்கிறீர்கள்?

கர்மவீரர் காமராசரைப் போல இருந்தால போதும்; உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இடம் பிடித்து விடலாம்!

ஆம்; மேலே நாம் கூறியவற்றுக்கெல்லாம் நேர் மாறாக வாழ்ந்து மறைந்த பெருமையாளர்தான் காமராசர்.

முதுகுத்தண்டு வளைகிறவரை மூத்து முதிர்ந்து நீண்டகாலம் வாழ்ந்தவரில்லை அவர்.

உயர்நிலைப் பள்ளி வரை கூடச் செல்லாத அவர், ஒரு பட்டத்தையும் பெற்றவரில்லை.

மக்கள் கொடுத்த மாபெரும் ஆதரவால், ஒன்பதாண்டுக் காலம் ஒப்பற்ற தமிழக முதல்வராக அவர் பதவி வகித்தார்.

'அன்றாடங் காய்ச்சி' என்பார்களே? அப்படிப் பட்ட மிக வறிய குடும்பத்தில் பிறந்த அவருக்குத் தெரிந்ததெல்லாம் பிறர்நலம் பேணுவது தானே தவிர, தன்னலம் என்றால் துளியும் தெரியாது.

மனை, மனைவி, மக்கள் போன்ற வாழ்க்கைப் பந்தங்களிலெல்லாம் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரில்லை.

முதலமைச்சராக உள்ள தனது மகனிடம் - 'மாதாமாதம் வீட்டுச் செலவுக்கு அனுப்பும் பணத்தில் ஒரு நூறு கூட்டி அனுப்பு' என்று தாயார் விருதுநகரிலிருந்து சொல்லியனுப்ப, 'அந்தக் கிழத்துக்கு இருநூறு போதாதாமா?' என்று அலட்சியமாகவும், குத்தலாகவும் கேட்ட அவர், உற்றார் உறவினர்களாலெல்லாம் வெறுப்போடுதான் நோக்கப்பட்டாரே தவிர, விருப்போடு எதற்காகவும் அணுகப்படவில்லை.

இவ்வாறான தன்மைகளால் தான் காமராசரின் புகழ் கடல் போல் பரவியிருந்ததே தவிர - 1954 முதல் 1963-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அவர் வகித்த பதவியினாலோ, எட்டுப்பேர் கொண்ட அவர்தம் அமைச்சரவையினாலோ அல்லவே அல்ல!

'இளமையில் வறுமை இன்னா' என்ற இன்னா நாற்பது பாடல் அடிகளை அனுபவித்துணர்ந்தவர் அவர். இதனாலேதான், தாம் ஆட்சிப் பொறுப் பேற்ற பின் - ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கினார்; உயர்நிலைப் பள்ளிப் படிப்பு உயர்குடிப் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி ஏழை எளிய மக்களுக்கும் இலவசமாகக் கிடைத்திட வைத்தார்; பசிப்பிணி என்னும் பாவி அண்டாதபடி நலிந்தோர் குடும்பத்துப் பிள்ளைகளுக்குப் பகலுணவு அளித்துப் படிப்பில் கவனம் செலுத்தச் செய்தார்.

1930-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள், விருதுப்பட்டியில் (இன்றைய விருதுநகர்) குமாரசாமி - சிவகாமி ஆகியவர்களின் அருந்தவப் புதல்வனாகப் பிறந்தவர் காமராசர். அப்போது அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காமாட்சி என்பதாகும்.

இளமை முதலே 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு தவாது' என்பது அவர் எண்ணமாக இருந்தது.

கிராமங்கள் மீதும் கிராம மக்கள் மீதும் அவருக்கிருந்த பற்றும் பாசமும் அளவிடற்கரியதாகும்.

அவருடைய பேச்சிலோ எழுத்திலோ, கரடு முரடான தர்பார் வாசகங்களைக் காணவே முடியாது; எல்லோருக்கும் புரியும் எளிய தமிழிலேயே அவர் எழுத்தும் பேச்சும் இருக்கும். பாமர மக்களெல்லாம் அவரைப் பாசமிக்க தலைவராக மதித்திட இதுவும் ஓர் காரணம்.

மிகச் சிறந்த அரசியல் வாதியாக் அவர் பிற்காலத்தில் வட இந்தியராலும் மதிக்கப்பட்டார்; இதற்கு முழுமுதல் காரணம், அவர் சிறந்த ராஜதந்திரியாக விளங்கியது மட்டுமல்ல; அரசியலை அநாகரிகத்தின் சாயல்கூடப் படியாமல் கையாண்ட விதம் தான் என்பது கற்றறிவாளர் கருத்தாகும்.

'பெருந்தலைவர்' என்று அவரை நாடு பாராட்டிாலும், தன்னை வெறும் தொண்டனாகக் கருதிப்பாடுபடுவதிலேயே அவா மிகக் கொள்வார் அவர்.

எதிரிகள் தன்னை எரி நெருப்பாகச் சாடினாலும் - பதிலுக்குத் தானும் தரக்குறைவாகப் பேசும் குணம் அவருக்கு இருந்ததில்லை.

'படிக்காத மேதை' என்று பாராட்டப் பெற்ற காமராசரை ஒரு முறை 'பூகோளம் படிக்காதவரா நாடாளுவது'? என்று யாரோ விமர்சித்து விட்டார்கள். இது பற்றித் தன்னிடம் கேட்டவர்களிடம் பெரியவர் காமராசர் என்ன சொன்னார் தெரியுமா?

'எந்த நாடு எங்கே இருக்கு, எந்த ஊரு எங்கே இருக்குங்கிற சங்கதியெல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். அதுமட்டுமில்லைங்கிறேன். எந்த ஊரு





வழியா எந்த ஊருக்கெல்லாம் போகலாம், அந்தந்த ஊரு ஜனங்களோட மொழி - நாகரிகம் எல்லாம் என்ன? - எந்தெந்த ஊர்ல என்னென்ன ஆறு ஓடுது, அப்பிடிங்கிறதும் எனக்குப் புரியும். இது போதாதா? கோடுகோடா போட்டிருக்கிற படத்தைப் பார்த்துப் படிச்சாத்தான் பூகோளம்னா அது எனக்குத் தேவையில்லைங்கிறேன்'.

- இதுதான் காமராசர் பதில்; எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது பார்த்தீர்களா?

மிக வறிய குடும்பத்திலே பிறந்து, மிக உயர்ந்த நிலையைத் தம் உண்மை உழைப்பாலே அடைந்த காமராசர், தந்தை பெரியார் அவர்களால் 'பச்சைத் தமிழர்' என்று கூறிப் பாராட்டப் பெற்றார். மூதறிஞர் ராஜாஜி, அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., ஆகியோரும் அவரைப் பலபடப் போற்றிப் புகழ்ந்ததுண்டு.

விடுதலைப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தியின் நம்பிக்கைக்கு உரியவரான அவர் இந்திய விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றுச் சிறை சென்றதுண்டு; தியாகத் தழும்புகளை ஏற்றதுண்டு. படிப்படியான அவரது அரசியல் முன்னேற்றம் இவ்வாறாகப் பலத்த அஸ்திவாரம் உடையதாக இருந்தது.

இந்தியப் பிரதமர் பதவி வகித்த காலத்தில் - ஜவகர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோர் எதிர்பாராமல் மறைந்தபோது, இந்தியாவில் எவ்வித அரசியல் நெருக்கடியும் நேராதிருக்கக் காரணமே காமராசரின் அரசியல் சாமர்த்தியம் தான்' என்று உலகமே உவந்து பாராட்டியதுண்டு.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், சோவியத் நாட்டுக்கும் சென்றபோதும் சாதாரண வேட்டி-சட்டையிலேயே சென்றவர் காமராசர்; அது மட்டுமல்ல; பிறமொழி தெரிந்திருந்தும் தமிழில் தான் பேசுவேன் என்றும் பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

அந்த அளவுக்குத் தாய்மொழிப் பற்றாளராக இருந்த அவரைத் தமிழிலக்கியத்தின் எதிரி என்றார்கள் சிலர்; ஆனால் அந்தப் பொய்வாதம் மெய்யாகவில்லை.

புதுவையில் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இல்லத்தில், திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை முதன் முதல் திறந்து வைத்தபோது தமிழக முதல்வராக இருந்த காமராசர் என்ன பேசினார் தெரியுமா?

'நான் தமிழைப் பற்றியோ தமிழிலக்கியங்களைப் பற்றியோ அவ்வளவாக அறியாதவன் தான்; ஆனால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்ப் புலவர்; தமிழ் இலக்கண இலக்கியத்திலெல்லாம் நல்ல தேர்ச்சி பெற்றவர்; அவர் சொல்கிறார் திருவள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பார் என்று. ஆகவே, இதை நான் ஒத்துக் கொள்கிறேன்.''

- என்று மனம் திறந்து கருத்தறிவித்தார் அவர். அந்தத் திருவள்ளுவரின் படம்தான் பின்னர் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

1972-இல் தாமிரப்பத்திர விருதும் பெற்ற கர்மவீரர் காமராசர் பெரிதும் உடல் நலிவுற்றிருந்தார். காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் (1975) மறைந்தார். தன்னிகரற்ற அந்தத் தியாகத் தலைவனின் மறைவுச் செய்தி தமிழகத்தையே உலுக்கிவிட்டது எனலாம்.

மத்திய அரசு காமராசர் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. சென்னை மாநகரிலே அவரது நினைவாகத் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது; தமிழ்நாடு அரசு - விருது நகரிலும், சென்னையிலும் உள்ள காமராசர் இல்லங்களை நினைவில்லங்கள் ஆக்கியது. மெரீனா கடற்கரைச் சாலை காமராசர் சாலை ஆக்கப்பட்டது. 'காமராசர் மாவட்டம்' உருவாகியது; 'காமராசர் பல்கலைக் கழகம்' அமைக்கப்பட்டது. உழைப்பால் உயர்ந்த அவர் புகழ், தமிழ்போல் தழைத்திடும் என்றென்றும்.

- பி.எல். ராஜேந்திரன்.

## மனங்கவரும்

# மாங்கனிக் கண்காட்சி

**மா**ண்புமிகு முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின் படியும் அதைத் தொடர்ந்து அவர்களது ஆணையின்படியும் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் 5.6.92 முதல் 9.6.92 முடிய அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கண்காட்சியின் தொடக்க விழா 5.6.92 அன்று கிருஷ்ணகிரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் திடலில் நடந்தது. இவ்விழாவில் தோட்டக்கலைத்துறை இயக்குநர் திரு. ஆர். ஸ்ரீராம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஏ. தசரதன் இ.ஆ.ப. அவர்கள் விளக்கவுரை ஆற்றினார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பு மலர் வெளியிட்டுத் தலைமையுரையாற்றினார். மேலும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள், மாங்கனிக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசினார்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் திரு. ஜி. ரங்கராவ் இ.ஆ.ப. அவர்களும், செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். மேலும் கண்காட்சி விழா நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. முனிவெங்கடப்பன், திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. சிங்காரம், திரு. எம்.ஜி. சேகர், டாக்டர் வி. புருஷோத்தமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். தோட்டக்கலை இணை இயக்குநர் திரு. எம்.ஏ. இரியன் நன்றியுரையாற்றினார்.

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 10.7.1992 அன்று ஊட்டியில் உள்ள 'தமிழகம்' அரசு விருந்தினர் மாளிகையில், சமூகநலத் துறை சார்பில், நலிவுற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்களையும், தம் சொந்தப் பொறுப்பில் சேலை, ரவிக்கை ஆகியவை களையும் வழங்கினார்.**



இக்கண்காட்சியில் தமிழகம் மட்டுமன்றி மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து 50-க்கும் மேற்பட்ட மாங்கனி இரகங்கள் கொண்டுவரப்பட்டன. இக்கண்காட்சியில், 300-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டு மாங்கனி மட்டுமன்றி இதர பழங்கள், காய்கறிகள், வாசனைத் திரவியங்கள், மலைப் பழங்கள், மலர்கள் ஆகியவைகளையும் இக்கண்காட்சியில் போட்டிக்கு வைத்தனர். மேலும், இக்கண்காட்சியில் சிறந்த மாங்கனிக்குப் பரிசும் அதிக அளவு சிறந்த மா இரகங்களை வைத்துப் பரிசுகளைப் பெறுபவர்களுக்குக் கேடயமும் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியில் 75 அரசுத் துறை அரங்குகளும் 42 தனியார் அரங்கங்களும் இடம் பெற்றன. அரசுத் துறையினர் தத்தம் துறையின் மூலம், அரசு மக்களுக்கு ஆற்றிவரும் நற்பணிகள் திட்டங்கள், பற்றி மக்கள் எளிதில் தெரிந்துகொள்ளும் வகையில் அரங்கம் அமைத்திருந்தனர்.

இவ்விழாவின் ஒவ்வொரு நாளும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மா சாகுபடிக் கருத்தரங்கு, பட்டுச் சாகுபடிக் கருத்தரங்கு, சொட்டுநீர்ப் பாசனக் கருத்தரங்கு போன்ற கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் நவீன முறைகள் பற்றியும் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள், உயர் அலுவலர்கள் மூலம் அறிந்திட இக்கண்காட்சியும், கருத்தரங்குகளும் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தன.

**மு. கிருஷ்ணன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி**

## தழைத்தோங்கும்

# தமிழ்வளர்ச்சியும் பண்பாடும்



**மா**ண்புமிகு முதலமைச்சரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில திங்களில் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையையும் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். அன்று முதல் தமிழ் வளர்ச்சிக்குப் புதுப்பொலிவும் மெருகும் மிளிரலாயின. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உள்துறை, தொழில் துறை முதலிய பெரிய துறைகளுக்குக் காட்டும் ஆர்வத்தைப்போலத் தமிழ் வளர்ச்சியிலும் பரிவு காட்டியதோடு கலை வளர்ச்சியும், தமிழ் வளர்ச்சியும் நாட்டில் மலரும் பல்வேறு வளர்ச்சிகளுக்கு வேராக அமையும் துறையாகக் கருதியதை நன்றியோடு நாம் நினைவு கூர்கிறோம். கலை வளர்ச்சிக்குப் புதிய பொலிவும் தமிழ் வளர்ச்சிக்குப் புதிய வலிவும் பெருகுவதற்கான பல முயற்சிகள் இந்த அரசின் ஓராண்டுச் சாதனைகளாக உருவாகியுள்ளன.

### "தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும்"

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சிமொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு, மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த தமிழ் மொழி வழக்கை விரிவான முறையில் ஆட்சியிலும், அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்தல், கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாக அரசு செயலகத்தில 1984-ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப் பெற்றது.

இத்துறையின் பொறுப்பில் அமைநத அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன. தமிழ் வளர்ச்சியும், பண்பாட்டு மலர்ச்சியும் நாள்தோறும் மிக்கோங்கிச் சிறப்பெய்தி வருகின்றன.

### தமிழ் வளர்ச்சித் துறை

ஆட்சி மொழித்திட்டச் செயலாக்கத்தில் அமைந்த முன்னேற்றம் குறித்து, துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலமைந்த சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும், தமிழாய்வு அலுவலர்களும் ஆய்வு செய்துள்ளனர்.

ஆட்சி மொழி திட்டச் செயலாக்கத்தைத் தன்னாட்சி நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தும் வகையில் அரசுக்குக் கூடுதல் செலவில்லாமல் இப்போதுள்ள அலுவலர்களைக் கொண்டே ஆட்சி மொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்ற "ஈராண்டு எழுச்சித் திட்டத்தை" மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் அனைத்துத் தன்னாட்சி நிறுவனங்களிலும் அரசு அலுவலகங்களிலும் ஆட்சிமொழித் திட்டம் முனைப்புடன் செயற்படுத்தப் படும்.

### ஆட்சிச் சொல்லகராதி

அரசுப் பணியாளர்கள் இடர்ப்பாடின்றி எளிதில் தமிழைப் பயன்படுத்துவதற்கியலும் பொருட்டு முன்னர் வெளியிடப் பெற்ற ஆட்சிச் சொல்லகராதியின் நான்காம் பதிப்பின் மறுபதிப்பு இவ்வாண்டில் அச்சிட்டுப் பல்வேறு துறைகளுக்குத் தேவைக்கேற்ப வழங்கப் பெற்றது. ஆட்சிச் சொல்லகராதியின் ஐந்தாம் பதிப்பிற்கும், ஆட்சிச் சொல்லகராதியின் இணைப்பு வெளியீட்டிற்கும் புதிய சொற்கள் தொகுக்கப் பெறுகின்றன.

### ஆட்சிமொழிக் கருத்தரங்கு

அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சிமொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகளைத் திட்டமிட்டு துறை நடத்தி வருகிறது. திட்டமிடப்பெற்றவாறு நீலகிரி, தென் ஆர்க்காடு, சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் நடத்தப் பெற்றன. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கருத்தரங்கை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தமிழிற் சிறந்த வரைவுகள்-குறிப்புகள் - பரிசு வழங்கல்

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழிற் சிறந்த வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு திருத்தியமைத்து, ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும் 5 பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவு

களுக்குப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன.

மாணவர்கள் தமிழ் மொழியின் பால் காட்டும் ஈடுபாட்டினை ஊக்குவிக்கக் கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கென ரூ.75,000/- நிதியுதவி வழங்க அரசு இவ்வாண்டில் ஆணையிட்டது. 28 கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கு ரூ.53,500 நிதியுதவியாக வழங்கப் பெற்றது.



**மொழியாக்க நூல் வெளியீடு**

தமிழிற் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளில் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் வெளியிட இத்திட்டம் வகை செய்கின்றது. இத்திட்டத்தின்படி இதுவரை 13 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இம்மொழி பெயர்ப்புத் திட்டத்தின்படி கம்பராமாயணத்தின் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் ஆகியன ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம்**

கடந்த ஆண்டில் வெளிவந்த நூல்களில் 42 சிறந்த நூல்களுக்குப் பரிசாக ரூ.1.27 இலட்சம் ''திருவள்ளுவர் திருநாளில்'' வழங்கப்பட்டது.

**நூற்பதிப்பு நிதியுதவி வழங்கு திட்டம்**

இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் 34 நூலாசிரியர்களுக்கு முதல் இரண்டாம் தவணையாக ரூ.96,670 நிதியுதவி வழங்கப் பெற்றது.

**தமிழிருக்கை நிறுவுகை - ஆராய்ச்சிப் பணிகள் - பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல் - நிதியுதவித் திட்டம்:**

பிற மாநிலங்களில் தமிழ் வளர்க்கும் நோக்கில், அரசு நிதியுதவி வழங்குகிறது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்படி ரூ.37,56,627 மானியமாக பிற மாநிலங்களுக்கு வழங்கப் பெற்றது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 360 தமிழறிஞர்கள் நிதியுதவி ஒப்பளிக்கப் பெற்றுள்ளனர். ஒவ்வொருவரும் திங்கள் தோறும் ரூ.400 நிதியுதவி பெறுகின்றனர். இவ்வாண்டில் 20 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெற்றது.

**வரலாற்று வரைவுத் திட்டம்**

முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல்பழங்காலம், சங்க காலம் பகுதி 1 (அரசியல்) சங்ககாலம் பகுதி 2 (வாழ்வியல்) பல்லவர், பாண்டியர் காலம் (முதற் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டில் பல்லவர் பாண்டியர் காலம் - தொகுதி 3-இல் இரண்டாம் பகுதியும், சோழப் பெருவேந்தர் காலம் பற்றிய நான்காம் தொகுதியினையும் வெளியிட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று, தரவுகள் தொகுப்புப் பணி நிறைவடைந்துள்ளது.

**விழாக்களும், விருதுகளும்:**
**திருவள்ளுவர் திருநாள் விழா**

திருவள்ளுவர் திருநாளை அரசு விழாவாகத் தமிழ் வளர்ச்சித் துறை நிகழ்த்துகிறது. ஆண்டுதோறும் திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் எழுதும் சிறந்த அறிஞர்களுக்குத் திருவள்ளுவர் விருது



வழங்கப் பெறுகிறது. இவ்விருதுக்குத் தெரிவு செய்யப் பெறுபவர் ரூ.20,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் வழங்கப் பெறுகின்றார். இவ்வாண்டு சனவரித் திங்கள் 15-ஆம் நாளில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப் பெற்றது.

**திரு.வி.க. விருது**

தெரிவு செய்யப்பெறும் நாடறிந்த எழுத்தாளருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. விருதாளருக்கு ரூ.10,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் அளிக்கப் பெறுகின்றன. 'பெண்ணின் பெருமை' என்னும் பேரிலக்கியம் தந்த திரு.வி.க. பெயரிலமைந்த இவ்விருது, இவ்வாண்டு முதன் முதலாகப் பெண் எழுத்தாளரும், நாடறிந்த கதையாசிரியருமாகிய திருமதி இராஜம்கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப் பெற்றது.

**பாவேந்தர் விருது**

ஆண்டுதோறும் வழங்கப்பெறும் பாவேந்தர் விருது, கவிஞர் இ. முத்துராமலிங்கம் அவர்களுக்கு முதலமைச்சரால் வழங்கப் பெறவுள்ளது.

**கம்பர் விழா**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் திருவழுந்தூரில் ஆண்டுதோறும் கம்பர் விழா அரசு விழாவாக நடத்தப் பெறுகிறது. இவ்வாண்டு 22.3.92-இல் திருவழுந்தூரில் கம்பர் விழா மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யர் பிறந்தநாள் விழாவும், விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழாவும் சிறப்புற நடத்தப்பெற்றன.

சங்கப் புலவர்களின் பெருமைகளைப் போற்றிப் பரப்பும் வண்ணம் நினைவுத் தூண் நிறுவும் திட்டம் தோற்றுவிக்கப் பட்டது. சங்கப் புலவர்கள் வாழ்ந்த இடங்கள் என அறியப்படும் முதன்மையான இடங்களில் அரசின் சார்பில் நினைவுத் தூண்கள் நிறுவப்பெறும். இவ்வாண்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள ஒக்கூரில் மாசாத்தியார்-மாசாத்தனார் நினைவுத் தூண் அமைக்கப் பெற்று 10.12.1991-இல் திறப்புவிழா நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கருவூரில் கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர்க்கும் நினைவுத் தூண் நிறுவப்பட்டு 11.5.1992-இல் திறப்பு விழா நடைபெற்றது. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் இடைகழிநாட்டு நல்லூரில், நல்லூர் நத்தத்தனார்க்கும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாங்குடியில் மாங்குடி மருதனார்க்கும் நினைவுத்தூண்கள் நிறுவும் பணிகள் முடிவடைந்துள்ளன. விரைவில் திறப்பு விழாக்கள் நடைபெறவுள்ளன.



**திருக்குறள் வகுப்பு**

வள்ளுவர் கோட்டத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் திருக்குறள் வகுப்பு நடத்தப் பெறுகிறது. நாள்தோறும் மாலை இருவேளைகளிலும் வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் பாடலிசையும் நிகழ்கிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

வளர்தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையில் வளப்படுத்தும் நோக்கில் அமைந்த இந்நிறுவனத்தில் திங்கள், வாரக் கருத்தரங்குகள் நடத்தப் பெறுகின்றன. அறிஞர்களும், ஆய்வாளர்களும் கட்டுரையளிக்கும் கருத்தரங்கேற்றமாக நிகழ்வுகள் திகழ்கின்றன. இவ்வாண்டில் தமிழும் பிற துறைகளும், தகவல் பண்பாட்டு நோக்கில் தமிழ்த் திரைப்படம், நாட்டுப்புறத் தெய்வங்கள் விழாக்கள், சடங்குகள், தமிழ் நாளிதழ்களின் தமிழ்ப்பணி ஆகிய பொருண்மைகளில் கருத்தரங்குகள் நிகழ்த்தப் பெற்றன. தமிழர் சமூக மரபுச் செல்வம் என்னும் தேசியக் கருத்தரங்கம் இவ்வாண்டில் நடத்தப் பெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை ஆந்திரத்தில் திருப்பதியிலும், கருநாடகத்தில் பெங்களூரிலும், கேரளத்தில் திருவனந்தபுரத்திலும் தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து இந்நிறுவனம் சிறப்பாக நடத்தியதன் தொடர்பாக, பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவில் பாவேந்தரின் 100 பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு கன்னடம், மலையாளம், தெலுங்கு மொழிகளில் மொழியாக்கம் செய்து நூலக வெளியிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. உயராய்வு நிலையில் மதிக்கப் பெறும் பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரை நூல்கள் அறக்கட்டளைப் பொழிவுகள் என்ற வகையிலும் இவ்வாண்டில் எட்டு நூல்கள் வெளியிடப் பெற்றன. அறிவியற் பெருந்தகை பெ.நா. அப்புசாமி அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்நிறுவனம் இவ்வாண்டில் நிகழ்த்தியது.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்) தமிழர் சமூகவியல், தமிழ் அறிமுக நிலை, சென்னை நகரக் கிளை மொழிகள் ஆய்வு, 18-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழரல்லாதவர்க்கான எளிய இலக்கணம், அழகியல் தமிழ் வேற்றுமையுருபுகளும் ஆங்கில முன்னொட்டுகளும், பெருந்தகை பெ.நா. அப்புசாமி நூற்றொகை, கணிணியின் உதவியால் சொல்லடைவு தயாரித்தல் போன்ற திட்டப் பணிகளுக்கான தரவுகள் திரட்டப்



**★ ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியிலும் நாட்டின் ஒருங்கிணைந்த நலன் உறைந்து கிடக்கிறது; அதேபோல், பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிதான் பரந்துபட்ட இந்தியாவின் உயர்வுக்கு ஊக்கமளிக்கும் என்பதையும் நாம் உணர வேண்டும்.**

பெற்று, பணிகள் வளர்நிலையில் உள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வலுவூட்டுதற்கு, உயர்நிலைக் குழு ஒன்றை அமைக்கவும், இந்நிறுவனத்திற்கு யுனெஸ்கோ நிதியுதவி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரால் தனி வகையில் ஆய்ந்து தொகுக்கப் பெற்ற அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் மடலம் 1985-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் துறையால் தெரிவு செய்யப் பெற்றுக் காக்கப் பெறுகின்றன.

**கல்வெட்டுப் பிரிவு**

கல்வெட்டாய்வாளர்கள் ஆங்காங்கே ஊர்ப் புறங்களுக்குச் சென்று பழங் கோயில்கள், மண்டபங்கள் முதலிய இடங்களில் விரிவான ஆய்வு நடத்தியதில் 7,550 கல்வெட்டுக்கள் கண்டறிந்து படிக்கப் பெற்றன. சுமார் 2,000 கல்வெட்டுக்கள் பல்வேறு தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன. இப்பணியை மேலும் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆழ்கடல் அகழாய்வு**

தமிழ்நாட்டு அரசின் பெருமுயற்சியால் ஆழ்கடல் தொல்பொருளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொல் வளையமும், சில ஈயத் துண்டுகளும் காணப்படுகின்றன. இந்த ஈயத் துண்டில் ஒருபுறம் 1792 என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இக்கப்பல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தரை தட்டிய கப்பலாகலாம் என்று உணர முடிகிறது.

வரலாற்றுத் தொன்மையை வரம்பிட்டு அறியவும், இலக்கியக் குறிப்புகளை உறுதி செய்து தெளியவும் முற்படும் இவ்வரிய ஆழ்கடல் அகழாய்வு நெடுங்காலப் பணியாகவும் நினைத்து நினைத்து உறுதி கண்டுபிடிக்க வேண்டிய நிலைப் பணியாகவும் மலைப்பை உண்டாக்குகிறது. முன்னரே சிலமுறை முயன்று நின்று போன இப்பணியில் தனியார்வம் காட்டி இவ்வரசு ஊக்கியுள்ளது. பூம்புகார்ப் பகுதி கடலடியில் மறைந்தது போலவே

## மிதிவண்டியில் நிதி!



பார்வை அற்றோரிடம் அனுதாபம் ஏற்படுவது இயற்கை. ஆனால் வெறும் அனுதாபத்தினால் என்ன பயன்?

இதை உணர்ந்துதானோ என்னவோ, மஹாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த ஏழு வயது சிறுவன் சுனில் சாஸ்திரி, தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்ய முன்வந்துள்ளான். அதுவும் கூட சாதாரண உதவியல்ல, சாதனையுடன் கூடிய உதவி.

நாட்டின் தலைநகரான புது தில்லியிலிருந்து மஹாராஷ்டிர, மாநிலத் தலைநகரான பம்பாய் வரை சைக்கிளில் பயணம் செய்து பார்வையற்றோர் சங்கத்திற்காக நிதி திரட்ட இருக்கிறான் இச்சிறுவன்.

இரு நகரங்களுக்கும் இடைப்பட்ட தொலைவோ 1,400 கி.மீ.

ஜூன் முதல் தேதியன்று புது தில்லியில் உள்ள விஜய் சவுக் (வெற்றிச் சதுக்கம்) என்ற பொருத்தமான பெயர் கொண்ட இடத்திலிருந்து சுனில் சாஸ்திரி தனது சைக்கிள் பயணத்தை ஆரம்பித்தான். இந்திய விமானப் படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் என்.சி.சூரி, சிறுவன் சுனிலை அன்போடு அள்ளியெடுத்து வாழ்த்தி, சைக்கிள் பயணத்தை துவக்கி வைத்தார்.

மிதிவண்டியில் நிதி திரட்டப் புறப்பட்டுள்ள சுனிலின் உருவம் சிறிதானாலும் உள்ளம் பெரிதல்லவா!

தனி இயக்ககமாக 1989-இல் மீளவும் தோற்றுவிக்கப்பட்டு இயங்குகிறது. பேரகரமுதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்கள் சொல்லடைவு செய்யப்பட்டுள்ளன. 'ஆ' முதல் 'ஔ' முடிவுள்ள இரு பகுதிகளை அச்சிடும் பணி இவ்வாண்டில் தொடங்கப் பெற்றுள்ளது.

**தொல்பொருள் ஆய்வு இயக்ககம்**

தொல்பொருள் ஆய்வுத்துறை 1961-இல் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழகத்தில் 66 வரலாற்று நினைவிடங்கள் தொல்பொருள் ஆய்வுத் பொருள் துறையும், கோவா தேசியக் கடலாய்வு மையமும் இணைந்து பூம்புகார் கடற்பகுதியில் ஆய்வுகள் நிகழ்த்தின. ஆய்வின் விளைவாகத் தரை தட்டிய கப்பல் ஒன்றும் சில கட்டடப் பகுதிகளும் கடலடியில் 22 மீட்டர் ஆழத்தில் கண்டறியப் பெற்றன. கடற்கரையை ஒட்டிக் காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் சில சிதைந்த பழங் கட்டடப் பகுதிகளும், கடற்கரையிலிருந்து சுமார் 4½ கி.மீட்டர் தொலைவில் கடலடியில் ஒரு கட்டடப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் முழு விவரங்கள் மேலும் ஆய்வில் உள்ளன. தரை தட்டிய கப்பலில் இரும்பு இப்போது மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியின் கீழும் தரங்கம்பாடி வரையிலும் நிலப்பரப்பு புதைந்திருக்கலாம் என்றெல்லாம் புதிய ஊகங்களும் இப்போது கருத்துக்கு விருந்தாயமைந்துள்ளன. அவ்வகையில் கடலாய்வுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். ரூ.157 இலட்சத் திட்ட மதிப்பீட்டில் செயற்படும் இக்கடலாய்விற்கு, கடந்த ஆண்டில் ரூ.10 இலட்சமும், இவ்வாண்டில் ரூ.10 இலட்சமும், ஒதுக்கீடு செய்யப்பெற்றது.

இவ்வாண்டில் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும் (ஓராண்டுக் காலம்)



கோடைக் காலப் பயிற்சியும் (மூன்று வாரம்) நடத்தப் பெற்றன. ஓராண்டுப் படிப்பில் முதுகலை பயின்ற மாணவர்களும், கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியில், பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும் பயின்றனர்.

கல்வெட்டாய்வாளர் பயிற்சியில் பங்குபெறுவதற்குத் தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு வழங்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, இக்கல்வெட்டுப் பயிலகத்தில் இப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பெற்றது.

வரலாற்று வல்லுநர்கள் பலரும் கலந்துகொண்டு கருத்துரைக்கும் வகையில் 16.5.92-இல் கருவூர் வரலாற்றுக் கருத்தரங்கு தொல்பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பெற்றது.

**அறிவாராய்ச்சிக்குத் தகைமை விருது!**

ஜவகர்லால் நேரு தகைமையாளர் நிதியுதவித் திட்டம் போலவே தொல்பொருளியல், மானுடவியல் போன்ற தொன்மைப் பொருண்மைகளில் ஆய்வு செய்வோர்க்கு நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆராய்ச்சியாளருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு அறிவாராய்ச்சிக்கு அரசளிக்கும் பரிசாகவும் அமைகிறது.

**சிறப்புமிக்க கண்டுபிடிப்புகள்**

பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள், நடுகற்கள், மதகுக் கல்வெட்டுக்கள் கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள் என முப்பத்தைந்து தொன்மங்கள் கண்டெடுக்கப் பெற்றன.

**சிறப்புக் கண்காட்சி**

அழகன்குளத்தில் அகழ்ந்தெடுக்கப் பெற்ற பொருட்களைப் பொதுமக்கள் பார்வையிடச் சிறப்புக் கண்காட்சி அமைக்கப் பெற்றது.

**அகழ்வைப்பகங்கள்**

ஆறு அகழ்பொருள் வைப்பகங்களில் காட்சிப் பேழைகள், குறிப்பு அட்டைகள், சிற்பங்கள் முதலியன பொதுமக்கள், பள்ளிக் குழந்தைகள் காண்பதற்கேற்ப பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பதினைந்து வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற தொல்பொருட்கள் பொதுமக்கள் எளிதில் காணும் வகையில் அகழ்வைப்பகங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. இந்திய மாநிலங்களுள் நெடும் பழமை வாய்ந்த பகுதிகள் சிலவும் தமிழகத்தில் கண்டறியப் பட்டுள்ளன. அவ்வகையில் பழந்தரைப் பகுதியாகக் கருதப்படும் பூண்டியில் தொல்மனை நினைவகம் ஒன்றை உருவாக்க அரசு கருதியுள்ளது.

**அரசு அருங்காட்சியகத் துறை**

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும், பெருமையும் பூண்டது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு பழங்கலைப் பொருள்களைத் திரட்டுவதிலும் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இக்காட்சியகம் அமைந்துள்ளதோடு தொல்பழங்காலப் பொருள்களையும் பேணிக் காக்கிறது. பல்வேறு மாநில மக்களும் ஆர்வத்தோடு திரண்டுவந்து காணும் காட்சியகமாகவும் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்த பெருமை அருங்காட்சியகத்திற்குரியது.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற அரசு கொள்கையின்படி 1979-ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்த 'அருங்காட்சியகக் கலையரங்கு' இவ்வாண்டில் காண்போர் களிப்புறும் வண்ணம் தண்வளி அரங்காக அமைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

**சிறுவர் அருங்காட்சியகம்**

அருங்காட்சியக வளாகத்தில் அமைந்த சிறுவர் அருங்காட்சியகம் வரலாற்று மாட்சி, வளப்புமிகு பொம்மைக் காட்சிகள் இயற்கை எழில், இயற்பியல், அறிவியல் புதுமைகள்தொடர்பான கூடங்களைக் கொண்டதாகும். கலை இயற்கை




மாண்புமிகு முதல்வர் அவர்களால்- தமிழகத்தில்- சென்னை மாநகரில்- பெண் போலீசாரே பணியாற்றும் மகளிர் காவல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது; மங்கையர் சங்கடம் நீக்கும் இவ்வாறான காவல் நிலையங்கள், விரைவில் தமிழகமெங்கும் அமைக்கப்படும்.




யியல் தொடர்புடைய பொருண்மைகளைப் பற்றிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளச் செயல்முறை வடிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் தாமே இயக்கி அறியும் வண்ணம் மின்னணு விளையாட்டுக் கருவி, சுழலாடி வழியாக மின் ஆக்கம், வளிமத் தந்திக் கருவிகள் முதலியன சிறுவர் அருங்காட்சியகத்தில் நிறுவப்பட்டுள்ளன. தொல் பழங் காலத்தே இருந்த மறைந்த பெருவிலங்கின இழைம வடிவங்கள் காட்சியக முகப்பு வெளியில் நிறுவப்பட்டுள்ளன.

**கூடங்கள் சீரமைப்புப் பணி**

நாற்புறமும் காணும் வகையில் திருத்திய படிமங்களைச் சீரமைக்கும் முதற் கட்டப் பணி முடிந்து இரண்டாம் நிலைப் பணி நடந்து வருகின்றது. பாலூட்டிகள் கூடத்தை மாற்றியமைக்கும் பணியும் முடிக்கப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளில் பிற காட்சியகங்களை மறுசீரமைப்புச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூடமும் புதுப்பிக்கப்பட்டுப் பணிகள் நிறைவடைந்தன.

கலை-பண்பாட்டு இயக்கத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அருங்காட்சியகத்தால் அமைக்கப் பெற்ற 'தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியை'யும் பல்லவபுரம் ஊரமைவுத் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள். அருங்காட்சியக மலர் ஒன்றும், தொன்மக் கலைப் படிமங்களைப் பற்றிய ஐந்து பழம்பெரும் நூல்களும் (மறுபதிப்பு) அருங்காட்சி இயக்ககத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

**கலை பண்பாட்டு இயக்ககம்**

கலை வளம் பொலிந்த நம் தமிழகத்தில் தனியார் அமைப்புகளுடன் அரசின் பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் இணைந்து கலைப் பணிகளை ஆற்றுகின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம், சென்னையிலும் மதுரையிலும் இயங்கும் தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையங்கள், சென்னையிலும், குடந்தையிலும் இயங்கும் அரசு ஓவியக் கைவினைத் தொழிற் கல்லூரிகள், மாமல்லையின் கட்டடச் சிற்பக் கல்லூரி ஆகியன கலைப் பணிகளுக்குரிய ஆக்கமும் ஊக்கமும் வழங்குகின்றன. கலை பண்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் இவ்வமைப்புகளை ஒருங்கிணைத்துப் புதிய இயக்ககத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென அரசு திட்டமிட்டது. அதன்படி கலை பண்பாட்டு இயக்ககம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் முத்தமிழ்க் கலைவிழா நிகழ்ச்சியோடு தொடங்கி வைக்கப் பெற்றது. தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கம் புகழுடன் பொலியவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால், கலை பண்பாட்டைக் கவினார்ந்த முறையில் வளர்க்கத் தொடங்கி வைக்கப் பெற்ற இவ்வியக்ககம், முத்தமிழ்க் கலை விழாவை ஏப்ரல் (1992) திங்களில் சீரும் சிறப்புமாக நடத்தியது. தொடர்ந்து 37 கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெரும் புகழ் ஈட்டியது. நடனம், வாய்ப்பாட்டு, நட்டுவாங்கம், நாட்டிய நாடகம், பட்டிமண்டபம் எனக் கலைகள் பலவும் இந் நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுக் கண்டோர் இதயம் கவர்ந்தன.

கலை பண்பாட்டு இயக்ககத்தின் சார்பில் வாரந்தோறும் புதன், சனிக் கிழமைகளில் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகள் பாங்குற நடைபெறுகின்றன. வளரும் கலைஞர்களும், பல்துறை வித்தகர்களும் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றனர். இளங்கலைஞர்களை ஊக்குவிப்பது மட்டுமன்றி, முதுநிலைக் கலைஞர்களின் பயனுரைகளையும் பெற்று அவர்களையும் போற்ற வேண்டுமென அரசு கருதியது. இவ்வகையில் திங்கள்தோறும் முதுநிலைக் கலைஞர் ஒருவரின் காட்சியுரை நடத்தவும் அரசு திட்டமிட்டு இதற்கென ரூ.7,500 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கலை பண்பாட்டு இயக்ககத்தின்



அமைப்புகளில் ஒன்றாய் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இயங்குகிறது. இம்மன்றத்திற்கு மாபெரு கலைஞர்களான வயலின் வேந்தர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் ஆகிய இருவரையும் முறையே தலைவராகவும், உறுப்பினர் செயலராகவும் இவ்வரசு நியமித்தது. இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் இவ்வாண்டில் 39 கலைப் பெருமக்கள் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர் முப்பெருங் கலைஞர்கள் 'பொற்கிழி' அளித்துப் போற்றப் பெற்றனர்.

நாதசுரம், நாட்டியம், வாய்ப்பாட்டு, வீணை ஆகிய கலைகளில் ஊக்குவிக்கும் வகையில் 22 இளங்கலைஞர்கள் தெரிவு செய்யப் பெற்றனர். இக் கலைஞர்களுக்குப் புகழ்வாய்ந்த கலை மன்றங்களில் நிகழ்ச்சிகள் நடத்த உரிய வாய்ப்புகள் உருவாக்கி வழங்கப் பெறுகின்றன. இவ்வகையில் இதுவரையில் 38 நிகழ்ச்சிகளை இவ்வியக்ககம் அமைத்து வழங்கியுள்ளது.

பண்பாட்டுக் கொள்கொடைத் திட்டத்தின்படி, பீகார் கலைக்குழுவையும், இலட்சத் தீவுகள் கலைக் குழுவையும் வரவேற்று தமிழகத்தில் 11 கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடத்தப் பெற்றன. தமிழகக் கலைக்குழு குசராத், அரியானா மாநிலங்களுக்குச் சென்று 13 கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை சேர்த்தது.

அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரி முத்தாப் பிள்ளை ஆகிய இசைப் பெருமக்களைப் போற்றும் வகையில் சீர்காழியில் 'தமிழிசை மூவர்' விழா, 33 கலை நிகழ்ச்சிகளோடு சீரார்ந்த முறையில் தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையத்தால் நடத்தப் பெற்றது. தொன்மைத் தமிழிசையைப் பரப்பும் வகையில் பழந்தமிழ்ப் பனுவல்கள், தேவார, திவ்வியப் பிரபந்தப் பாடல்களும், தமிழிசைக் கீர்த்தனைகளும், சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மைய மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு, இம்மாணவர்கள் சென்னை சங்கீத வித்வத் சபையிலும், ராணி சீதை மன்றத்திலும், திருக்கழுக்குன்றம் இசை மாநாட்டிலும், பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகளிலும், பங்கு கொண்டு இவ்விசை நிகழ்ச்சிகளை நடத்தினர். ஆடற்கலை பயிலும் மாணவிகள் வள்ளலார், தேவாரமூவர், பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பாடல்களுக்கேற்ப நாட்டிய நாடகங்களும் அமைத்து வழங்கினர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாச சுவாமிகள், பம்மல்



★ நமது மக்கள் தொகையில், ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்திவிடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகம் உள்ள சமூகத்தில் ஒரு அரசின் கடமை என்ற கருத்தில், பெண்கள் முன்னேற்றம், மகளிர் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.

சம்பந்தனார், டி.என். இராசரத்தினம் ஆகிய கலைப் பெருமக்களின் புகழ் போற்றும் வகையில் 'ஐவர் விழா'-வை இயல், இசை, நாடக மன்றம் நடத்தியது.

மதுவின் தீமைகளை விளக்கி மக்...ளை நன்னெறிப்படுத்தும் கரு த்தமைந்த 'வெளிச்சம்' நாடகத்தை இம்மன்றம் 1.5.92-இல் அரங்கேற்றியது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந் நாடக அரங்கேற்ற விழாவிற்குத் தலைமை யேற்றுச் சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், 'கார்த்திக் பைன் ஆர்ட்ஸ்' அமைப்புடன் இணைந்து 'கோடை நாடக விழா'-வை சூன் திங்களில் நடத்தி வருகிறது. எட்டு நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் பல்வேறு நாடகங்கள் அரங்கேறுகின்றன.

கலை பண்பாட்டு இயக்கக அமைப்புகளில் ஒன்றான ஓவிய நுண்கலைக் குழுவின் சார்பில் உதகையில் 'வண்ணக் கலையரங்கு' இவ்வாண்டில் திறந்து வைக்கப் பெற்றது. இவ்வியக்கப் பொறுப்பில் இயங்கும் ஜவகர் பாலபவன் பள்ளி மாணவர்களின் 'கோடை விடுமுறைப் பயிற்சி வகுப்புகள்' நடத்தப் பெற்றன. 500 மாணவர்கள் இப் பயிற்சி வகுப்புகளால் பயனுற்றனர். இம்மாணவர்களின் 'கோடை முகாம்' புதுவையில் பயனுற நடத்தப் பெற்றது. இதில் 50 மாணவர்கள் பங்கு பெற்றுப் பயனுற்றனர்.

இவ்வாறு நாளும் பொழுதும் கலை வளர்ச்சியால் பொலிவுற்று மிளிரும் இந்நல்லாண்டின் சாதனைகள் பல்லாண்டுகள் தொடர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை பல்லாண்டு பாடி மகிழ்கிறது.

**எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்கிற நோக்கில், தமிழின் தொன்மையை, வன்மையை, வளப்பை எடுத்துக்காட்டும் வகையில், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை பல்வேறு சிறப்புப் பணிகளைப் பாங்காய் ஆற்றி வருகின்றது.**

## தொற்று நோய் மருத்துவமனை நவீன தொற்று நோய்கள் நிறுவனமாக மாற்றி அமைக்கப்படும்

தண்டையார்ப்பேட்டையில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 1928-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் சென்னை மாநகராட்சித் தொற்று நோய்த்தடுப்பு மருத்துவமனையை, 2-93-இல் விரிவுபடுத்தி நவீன வசதிகளுடன் கூடிய தொற்று நோய்கள் நிலையமாக மாற்றி அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

354 படுக்கை வசதிகள் கொண்ட தொற்றுநோய் மருத்துவமனையில் தற்போது காலரா, வயிற்றுபோக்கு, சின்னம்மை, தட்டம்மை, டைஃபாய்டு, புட்டாளம்மை, திடீர்க் காய்ச்சல், மலேரியா சுரம் ஆகியவற்றுக்கென 9 பிரிவுகள் தனித் தனியே உள்ளன. இவை அனைத்தும் புதுப்பிக்கப்பட வுள்ளன. இவற்றுடன் தொழுநோய், காச நோய்களுக்கான இரு பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டு மொத்தம் 11 பிரிவுகளாக இந்நிலையம் செயல் படும். தற்போது 'சி' வகுப்பு சிறப்பு ஒரு வார்டு மட்டுமே உள்ளது. புதி தாகத் தனித்தனி அறைகள் கொண்ட அனைத்து வசதியுடைய 'ஏ' வசதி சிறப்பு வார்டும் இவ்வாண்டு உரு வாக்கப்படும்.

**புறநோயாளிகள் பிரிவு**

புறநோயாளிகளுக்கெனத் தொடங் கப்பட்ட பிரிவு நாளொன்றுக்குச் சராசரி 300 பேருக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. வடசென்னை யில் வாழும் தொழிலாளர் மற்றும் குடிசைவாழ் மக்கள் நலத்திற்காக இப்பகுதி புதுக்கட்டடங்களுடன் விரிவுபடுத்தப்பட்டு 24 மணி நேரமும் இயங்கும் வகையில் மாற்றி யமைக்கப்படும். பல்வேறு நோய் களுக்கான இரத்தப் பரிசோதனை களும், குறைந்த கட்டணத்தில் செய் வதோடு ஈ.சி.ஜி., எக்ஸ்ரே முதலிய வசதிகளும் புதிதாகச் செய்து தரப் படும்.

**புதிய வசதிகள்**

1. 354 படுக்கை வசதிகள் 500 படுக்கைகளாக உயர்த்தப்படும்.

2. தற்போது காலரா நோயாளி களுக்கு நரம்பூசி மூலம் செலுத்தப் படும் திரவ உற்பத்தி நிலையம் புதுப் பிக்கப்படும்.

3. தற்போதுள்ள சலவை இயந் திர நிலையத்தின் திறனை அதி கரிக்கும் வகையில் புதிய சலவை இயந்திரங்கள் பொருத்தப்படும்.

4. தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கையை உடனுக்குடன் எடுப்ப தற்கு வசதியாக செய்திகளை அவ் வப்போது தருவதற்கு வசதியாக மின்னணுத் தொலைத் தொடர்பகம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

5. தொற்று நோய் மருத்துவமனை வளாகம் முழுவதும் மின் விளக்குகள் அமைக்கப்படும்.

6. தொற்றுநோய் மருத்துவமனை யில் உள்ள நுண்ணுயிர் ஆராய்ச்சி நிலையம் விரிவுபடுத்தப்பட்டு பல் வேறு தொற்றுநோய்கள் மருந்து களுக்கு எதிராகத் தொற்றுநோய்க் கிருமிகள் எவ்விதம் செயல்படுகின் றன என்பன போன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

7. மருத்துவமனையில் குடிநீர் மற்றும் வடிகால்கள் செப்பனிடப் பட்டு பம்பு ரூம் அறைகள் கட்டி புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனி மேல்நிலைத் தொட்டி கட்டி ஆழ்துளைக் கிணறு அமைத்து இணைப்புத் தரப்படும். இவ்வாறு கூடுதல் வசதிகளும் மேம் பாட்டுப் பணிகளும் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க மாநக ராட்சி நடவடிக்கை எடுத்துவருகிறது.

## பொன்மொழிகள்

தனக்குக் கிடைக்கிற ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத் தில் உயர முடியும்.

- ஆபிரகாம் லிங்கன்

அனுபவம் ஒரு கடுமையான ஆசிரியர்; அது சோதனையைத் தந்த பிறகு தான் பாடத்தைப் போதிக்கிறது.

- பெர்னாட்ஷா

உங்களைத் தெரிந்து கொள்ள உங்கள் மூளையை உபயோகியுங்கள்; பிறரைத் தெரிந்து கொள்ள உங்கள் இதயத்தைப் பயன்படுத்துங்கள்!

- ஷேக்ஸ்பியர்

• ஒரு மனிதனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது. ஆனால், அவன் தனது கடமையை எம்முறையில் செய்கிறான் என் பதை அறிந்து மதிப்பிடுவதே முறையானது.

• செயல் - செயல் - எந்நேரமும் செயலில் ஈடு பட்டு, வாழ்க்கையை முழுமையாக வாழ வழி செய்துகொள்.

சுவாமி விவேகானந்தர்.



# கால்நடை வளர்ப்போம் மீன்வளம் சேர்ப்போம்

**கால்நடை மற்றும் மீனளத் துறையின் மூலம் கடந்த ஓராண்டில் நிகழ்ந்த சாதனைகள் பலப்பல.**

**20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறப்பு, சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம், பால்பண்ணை வளர்ச்சி, கன்று வளர்ப்பு, கோழி வளர்ப்பு கடல் மீனளம், மீனவர்க்கான நிவாரண நடவடிக்கைகள் முதலான பணிகளில் இத்துறை முன்னேற்றம் கண்டு வருகிறது.**

கால்நடை வளர்ப்புத் துறையின் சார்பில் பல்வேறு ஆக்கப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்புத் துறையின் செயலாக்கத்திற்காகப் பின்வரும் திட் டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறப்பு ரூ.20.55 இலட்சம். செட்டி நாட்டில் மாவட்டக் கால்நடைப் பண் ணையில் சாணன் வெள்ளாடுப் பிரிவை ஏற்படுத்துதல் ரூ. 10.56 இலட்சம். கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களை மருத்துவப் பரிசோதனை மையங்களாக நிலை உயர்த்துதல் ரூ.0.30 இலட்சம். மதுரை யில் வெறி நாய்க்கடி மருத்துவப் பிரிவை ஏற்படுத்துதல் ரூ.4.73 இலட்சம்.

**உலக வங்கி உதவியுடன் கால்நடை மேம்பாட்டுத் திட்டம்**

மூன்று உறைவிந்து சேமிப்பு நிலையங் களைகோயம்புத்தூர், வேலூர், மதுரை யில் நிறுவுதல்.

உறைவிந்து தொழில் நுணுக்கம் 243 செய்முறை இனவிருத்தி நிலையங்களுக்கு விரிவுபடுத்துதல்.

செயற்கை முறை இனவிருத்தி வேலை தொடங்க 500 சிறிய அள விலான திரவ நைட்ரஜன் குடுவைகள் துணை மையங்களுக்கு அளித்தல்.

விவசாயிகளுக்கு இலவசமாகப் பசுந் தீவன விதைகள், கன்றுகள் ஆகியவற்றை அளிப்பது தொடரப்பட்டுள்ளது.

கால்நடைநோய் பரவுவதைக் கண்டறி யும் பிரிவு கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய இடங் களில் நிறுவப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையின் விரி வாக்கப்பிரிவு வலிமைப்படுத்தப்படுகிறது.

**சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்**

1,050 ஆடு வளர்ப்புப் பிரிவுகள், 3,500 கன்று வளர்ப்புப் பிரிவுகள், 25 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக மொத்தம் ரூ.222 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 4,575 விவசாயக் குடும்பங் களுக்கு இப்பிரிவுகளை ஏற்படுத்தியதற் காக, மானியம் அளிக்கப்படுகின்றது.

**மத்திய சிறப்பு உதவித் திட்டம்**

மாநிலத்தில் 1,550 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்காக ரூ.65.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத் திட்டம், இந்துமத ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 1,550 விவசாயக் குடும்பங்களுக்கும் முழுவதுமாகப் பய னளிக்கிறது. (திட்டச் செலவின் 50 சதவிகிதம் மானியமாகும்).

**பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்**

135 சிறிய பால்பண்ணைகள், 155 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆகியன அமைக்கவும், 80 கலப்பினக் கன்றுகள் வளர்க்கவும், 200 சிறிய பசுந்தீவனப் பண்ணைகள் அமைப்பதற்கும் ரூ.60.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உதக மண்டலத்தில் உள்ள மாவட்டக் கால் நடைப் பண்ணையின் அடிப்படை வசதி களை மேம்படுத்த ரூ.12.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அபிஷேகப்பட்டி யில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண் ணைக்கு 'முர்ரா' இன எருமை மாடுகள் வாங்க ரூ.9.00 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**பால்பண்ணை வளர்ச்சித்துறை**

எருமைப்பாலின் கொள்முதல் விலை, 23.2.92 முதல் ஒரு கிலோ கொழுப்புச்



லிருந்து முதல் முறையாக முட்டைகளை அயல்நாடுகளுக்கு அனுப்ப முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை குவைத், துபாய், பஹ்ரைன் போன்ற நாடுகளுக்கு 9 தடவை கப்பல்களில் முட்டைகள் ஏற்றி அனுப்பப்பட்டன. அவ்வாறு கப்பல்களில் மொத்தம் 26.4 இலட்சம் முட்டைகள் அனுப்பப்பட்டன. இதன் மூலம் இது நாள் வரை 1.05 இலட்சம் ரூபாய் ஆதாயம் கிடைத்துள்ளது.

**மீனளத் துறையின் மூலம் செயல்படுத்தும் புதிய திட்டப் பணிகள் வருமாறு**

**கடல் மீனளம்**

கடலோரப் பகுதிகளிலும், தொலை கடல் பகுதிகளிலும், மீன் பிடிக்கப் பயன்படுத்தக்கூடிய, 28 அடி அளவுடைய 'மரைன் பிளைவுட் மீன்பிடிப் படகு' எனப்படும் புதிய எடைக்குறைவான மீன்பிடிப் படகிற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தற்போதைய அரசு கொண்டு வந்துள்ளது. கியருடன் கூடிய (Gear) ஒவ்வொரு படகின் விலை ரூபாய் ஒரு இலட்சம் ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் 70 பிளைவுட் மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு ரூ.2.00 இலட்சம் 20 சதவிகிதம் உதவித்தொகை நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்க, கால்நடை வளர்ப்பு - மீனளத் துறையின் 30.3.92-ஆம் நாளிட்ட அரசாணையில் அரசு ரூ.50.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**சென்னை, மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்தல்**

இந்தக் கடல்வாழ் உயிரினக் காட்சியகத்தில் பல்வேறுபட்ட கடல் நீர்வாழ் உயிரினங்கள் காட்சிக்கு வைக்கப்படும். இந்தக் காட்சியகம் இளங்குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பொழுதுபோக்கு வசதிகளை அளிப்பதுடன், ஒரு கடல் ஆராய்ச்சி கல்வி மையமாகவும் விளங்கும். இது உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைச் சென்னைக்கு வரவழைக்கும் சிறந்த சுற்றுலா மையமாகவும் விளங்கும். எனவே, சென்னையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்துவது, சென்னை மாநகருக்கு அழகு சேர்ப்பதுடன் பொழுதுபோக்கு வசதிகளையும் அளிக்கும். மேலும் அது கடல் ஆராய்ச்சி மையமாகவும் விளங்கும். தற்போது சென்னை மெரினாக் கடற்கரையில் மீன்காட்சியகம் ஒன்று உள்ளது. மெரினாக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்காக 1991-92-ஆம் ஆண்டில் அரசு ரூ.5.00 இலட்சம் அனுமதித்துள்ளது.

**உள்நாட்டு மீனளம்**

**மீன்சினைகள் உற்பத்திக்காக தனியார் மீனவர்களுக்கு நிதியுதவி**

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீன்சினைகளின் தேவை 170 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் சராசரி அளவு கிட்டத்தட்ட 60 மில்லியன் ஆகும். அது 170 மில்லியன் மீன் குஞ்சுகளாக உயர்த்தப்படவேண்டும்.

மீன்சினைகள் தேவையில் நமது மாநிலத்தில் பற்றாக்குறையை ஈடுசெய்ய, குறைந்த செலவிலான தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, 10 இலட்சம் மீன்சினைகளை உற்பத்தி செய்வதற்காக 15 தனியார் மீன்சினை உற்பத்தியாளர்களுக்கு 25 சதவிகிதம் உதவித்தொகை வழங்க அரசு, 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3.75 இலட்சம் அனுமதித்துள்ளது. மீன்சினைப் பண்ணை ஒன்றுக்கான மூலதனச் செலவு ரூ.1.80 இலட்சம் ஆகும். அரசு 1992-93- ஆம் ஆண்டில் 35 தனியார் மீன்சினை உற்பத்தியாளர்களுக்கு ரூ.8.75 இலட்சம் அனுமதித்துள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட பயன்பெறுவோருக்கு, சென்னையிலுள்ள பணியாளர் பயிற்சி நிறுவனத்தில் மீன்சினைப் பண்ணைகள் நிருவாகம் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற பிறகு அவர்கள் மீன்சினைப் பண்ணைகள் தொடங்க வங்கிக் கடன் பெறுவர். அதன் பின்னர் வங்கிகள் மூலம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். 1991-92-ஆம் ஆண்டில் பயன்பெறுவோர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



**தூநீர் இறால் மீன்குஞ்சு பொரிப்பு**

கால்நடை வளர்ப்பு - மீனளத் துறையின் 14.5.1992-ஆம் நாளிட்ட 154-ஆம் எண். அரசாணையில் தனியார் மீன்குஞ்சு உற்பத்தியாளர் மூலம் 10 மில்லியன் இறால் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யத் தூநீர் இறால் மீன்குஞ்சு பொரிப்பு மையத்தை ஏற்படுத்துவதற்காக, செலவில் 25 சதவிகிதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு ரூ.2.5 இலட்சம் அனுமதித்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அத்தகைய குஞ்சு பொரிப்பு நிலையங்கள் ஏழு ஏற்படுத்தப்படும்.

**இறால் வளர்ப்பிற்காக உவர்நீர்ப் பகுதிகளை மேம்படுத்துதல்**

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ரூ.15.26 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு, 50 எக்டேர் உவர்நீர் நிலப் பகுதியில் இறால் மீன் வளர்ப்புப் பணியை மேற்கொள்ளும். இந்த உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பைக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், சிதம்பரனார் மாவட்டத்தில் தருவைகுளத்தில் தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்த தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்குப் பங்கு மூலதன உதவியாக ரூ.25 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் ஒன்றான ஒருங்கிணைந்த உவர்நீர் மீன் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்களை இறால் குஞ்சு பொரிப்பு



நிலையத்தை மேம்படுத்த தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ.25 இலட்சம் (மத்திய அரசு பங்கு ரூ.12.5 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.12.5 இலட்சம்) வழங்க அரசு இவ்வாண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, இத்தொகை பெறப்பட்டு தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர் நல நடவடிக்கைகள்**

**மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு கிராமங்களில் வாழும் கடல்வாழ் மீனவர்கள் தகுந்த நிலத்தை அரசிடம் ஒப்படைத்தால் அந்நிலத்தில் அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 1991-92-ஆம் ஆண்டில், ரூ.3.57 கோடி செலவில், தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில், மீனவர்களுக்காக 27 கிராமங்களில் 2,100 வீடுகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் 2,100 மீனவர்கள் பயனடைவர்.

**மீனவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள்**

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் சைமன் காலணியில் 5.12.90 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மீன்பிடி கருவிகளை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட 75 மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

**இறந்துவிட்ட மீனவரின் குடும்பத்திற்கு, உடல் ஊனமுற்ற மீனவர்களுக்கு அளிக்கப்படும் காப்புறுதி நிவாரணத் தொகையை அதிகரித்தல்**

தமிழ்நாட்டில் 1,66,912 மீனவர்களுக்காகச் செலுத்தப்படும் காப்புறுதி பிரீமியத் தொகையை 1.7.91-ஆம் நாள் முதற்கொண்டு ஆண்டொன்றுக்கு மீனவர் ஒருவருக்கு ரூ.9-லிருந்து ரூ.10.84 ஆக உயர்த்தி தமிழ்நாடு அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. இந்தக் காப்புறுதி பிரீமிய தொகையின் அளவு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, 1.7.1991 முதற்கொண்டு விபத்தில் இறந்துவிடுபவர்களைப் பொறுத்தமட்டில் அவர் குடும்பத்திற்கும் நிரந்தரமாக உடல் ஊனமுற்று விடுபவர்களுக்கும் வழங்கப்படும் காப்புறுதி நிவாரண தொகையின் அளவு ரூ.15,000 லிருந்து ரூ.21,000 ஆகவும், ஓரளவிற்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் காப்புறுதி நிவாரணத் தொகையின் அளவு ரூ.7,500-லிருந்து ரூ.10,500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டம்**

இதுவரை இத்திட்டத்தின் கீழ், மீனவர் ஒருவரிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் 9 மாதம் வசூலிக்கப்பட்டு, மீனவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் மாநில அரசு அதன் பங்குத் தொகையாக வழங்கி, மொத்தம் வரும் ரூ.180-யை மீன்பிடித் தொழிலை செய்ய முடியாமலிருக்கும் கால அளவில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60 வீதம் 3 தவணைகளில் வழங்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் திங்கள் ஒன்றுக்கு 45 ரூபாய் என்ற அதிகரிக்கப்பட்ட சந்தாத் தொகையை 8 மாதக் காலத்திற்கு வசூலிப்பதற்கும், அவ்வாறு சந்தாத் தொகையைச் செலுத்திய ஒவ்வொரு மீனவருக்கும் மாநில அரசுப் பங்காக மாதமொன்றுக்கு ரூ.45 ரூபாயையும் மத்திய அரசுப் பங்காக மாதமொன்றுக்கு 45 ரூபாயையும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையுடன் சேர்த்து திருப்பிக் கொடுக்க தமிழ்நாடு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. முழுத்தொகையான 1,000 ரூபாய் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில், மீன்பிடிக்க இயலாத காலத்தில் 4 மாதத்திற்கு 4 தவணைகளில் மீனவர் ஒவ்வொருவருக்கும், மாதமொன்றுக்கு 250 ரூபாய் என்ற வீதத்தில் திருப்பிக் கொடுக்கப்படும்.

**மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்**

**பங்கு மூலதன உதவித்தொகை**

தற்போது மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்காக 63 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த ஆண்டில் பங்கு மூலதன உதவித் தொகையாக 85,000 ரூபாய் 5 சங்கங்களுக்கு அளிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**மீனவ மகளிருக்கான அலுமினியக் கொள்கலன்கள்**

இந்த ஆண்டில் சென்னையிலுள்ள தமிழ்நாடு சமூக நலவாரியம், 24 மீனவ மகளிர் சங்கங்களுக்கு 1,09,600 ரூபாயை மீன்களைக் கொண்டு செல்வ



தற்காக 1,360 அலுமினியக் கொள்கலன்களை வாங்க, 50 சதவிகிதம் உதவித் தொகையாக வழங்க அனுமதியளித்தது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்**

சென்னை, மாதவரம் பால்பண்ணையைத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்குத் தலைமையிடமாக அமைப்பதற்குப் பொருத்தமான இடம் என அரசு தெரிந்தெடுத்துள்ளது.

பல்கலைக் கழக மானியக் குழுச் சட்டத்தின் (12'B) பிரிவின் கீழ், நிறுவன மேம்பாட்டு மானியங்கள் உட்பட, அனைத்துச் செயல் நோக்கங்களுக்கும் மத்திய நிதியுதவியைப் பெறுவதற்குத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தகுதியுடையதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.1.65 கோடியுடன் பால் பண்ணை நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்காக, இறைச்சி மேம்பாட்டுக் கழகத்தின் கொடுவள்ளி வளாகம், இப்பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேம்பாட்டுப் பணிக்காக, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ரூ.53 இலட்சம் மானியத் தொகை அனுமதித்துள்ளது.

**கல்வி**

1991-92-ஆம் கல்வியாண்டில், பட்டப்படிப்பு நிலையில், பட்ட மேற்



சத்து/வெண்ணெய் சத்துள்ள பால் ரூ.67.15-லிருந்து ரூ.90-ஆக உயர்த்தப்பட்டது. இதனால் கூட்டுறவு ஒன்றியத்திற்கு ஒரு இலட்சம் லிட்டருக்கும் அதிகமாக எருமைப்பால் கிடைத்தது.

பசும்பால் கொள்முதல் விலை, மொத்தத்தில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.32.30-லிருந்து ரூ.36.15 ஆக உயர்த்தப்பட்டது.

தொடக்கப்பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 14.40 இலட்சம் லிட்டர் ஆகும். இதில், நாளொன்றுக்கு 11.64 இலட்சம் லிட்டர்கள் மாவட்ட ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டன.

பால்பெருக்குக் காலங்களில், புயல், மழைக்காலங்களிலும் தொடர்ந்து பெய்யும் கனத்த மழைக்காலங்களிலும் கூட, சென்னையில் சாதாரணமாக, பால் கொள்முதல் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 1991 நவம்பர் முதல் நாளொன்றுக்குச் சுமார் 2.00 இலட்சம் முதல் 3.00 இலட்சம் லிட்டர் வரையில் பால் அளவு குறைந்தது. இச்சூழ்நிலைகளிலும் கூட, பெருநகர் விற்பனை முந்தைய ஆண்டைவிடவும் 3 சதவீதம் அதிகமாக இருந்தது (நாளொன்றுக்கு 6.70 இலட்சம் லிட்டரிலிருந்து 7.10 இலட்சம் லிட்டராக அதிகரித்தது).

பால் உற்பத்தியாளர்கள் இணையம் விற்பனையில் புதிய சாதனைகளைப் படைத்துள்ளது. இது, கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விற்பனையை விடவும் மிக அதிகமாகும்.

எண்ணற்ற பால்பொருட்கள் விற்பனை செய்யப்படும் வகையில் சில்லறைக் கடைகள் திறக்கப்பட்டன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஐஸ்கிரீம்கள் மற்றும் பால்கோவா ஆகியவற்றிற்குப் பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

**ஆய்வுப் பணியாளர்கள்**

தவறான செயல்களில் ஈடுபட்டதாகச் சுமார் 80-க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. 'ஆவின்' அமைப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 129 மனைகளில் 54 மனைகள் ஒதுக்கப்பட்டன. காமராசர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட பால்பண்ணை ஒன்றை அமைப்பது தொடர்பாக ரூ.34.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. புதிதாக 617 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன; இதனால், 35,000 கிராம உழவர் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்; இவர்கள் கூட்டுறவுப் பால் உற்பத்தி இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவற்றில், மேற்படி 146 பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பெண்களுக்கென்றே அமைக்கப்பட்டுள்ளன. இதில், சுமார் 7,500 கிராமப் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**ஆதி திராவிடர்கள் நலத்திட்டம், கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர்கள் நலத்திட்டம், மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டம் (தாட்கோ)**

ரூ.407.44 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு, 25,544 கறவை மாடுகள் வாங்கப்பட்டு பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

**கன்று வளர்ப்புத் திட்டம்**

சுமார் 2,650 கலப்பினங்கன்றுகளைச் சீரிய முறையில் பராமரிப்பதற்காக 2,650 பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. தரமான எருமைக்கன்றுகளை சொந்தமாக வைத்துள்ள உழவர்களுக்குப முதல் தடவையாக இத்தகைய நிதியுதவி அளிக்கப்பட்டது. 850 எருமைக்கன்றுகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

**கால்நடை சுகாதாரத் திட்டங்கள்**

கிராம அளவில் 4,45,325 கால்நடைளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**கால்நடை வளர்ப்பு**

2,250 கால்நடை மருந்தகங்களில் உறைவிந்து வசதிகளுடன் கூடிய கால்நடை வளர்ப்பு வசதிகள் உள்ளன. கூட்டுறவுச் சங்க அளவிலான பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு 6.25 இலட்சம் செயற்கைமுறை இனவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 75,000 கிடாரிக்கன்றுகள் பிறந்துள்ளன.

உதகமண்டலத்திலும் ஈரோட்டிலுமுள்ள உறைவிந்து நிலையங்களில் 13 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

**செம்முறைப்படுத்துதல்**

பெருநகர் பால்பண்ணைகளை நாள்தோறும் கண்காணிக்கும் முறையினால் நல்ல பயன் கிடைத்துள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் 7 சதவிகிதமாக இருந்த கொழுப்பு, கொழுப்பில்லாத திடப்பொருள் இழப்பு, 1991-92-ஆம் ஆண்டில் 3.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. பெருநகர் பால்பண்ணைகளின் திறனளவு பயன்பாடு சுமார் 128 சதவிகிதம் ஆகும்.

பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள கன்னியாகுமரி, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களையும் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது.

பிளாஸ்டிக் மணிகளை உருக்கி நாளொன்றுக்கு 10 டன் பாலிதீன் பைகள் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை ரூ.2.5 கோடி செலவில் உளுந்தூர்ப்பேட்டையில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்**

தமிழ்நாட்டில் கோழி வ்ளர்ப்பை மேம்படுத்தும் பொருட்டு ரூ.100 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் முழுவதும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 12.7.1973 அன்று ஏற்படுத்தப்பட்டது.

வணிக முறையிலான கலப்பினக் கோழிக்குஞ்சு வளர்ப்பு முறையைக் கொண்டு வந்தவுடன் இம்மாநிலத்தில் கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை 1·2 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. நம்முடைய நாட்டில் தமிழ்நாடு கோழி வளர்ப்பில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 1989-90-ஆம் ஆண்டு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30.95 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் பங்கு மூலதனம் 50 சதவிகிதம் கடன்) காமராசர்



மாவட்டத்திலுள்ள அனுப்பன் குளத்தில் புதிய கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்தைத் தொடங்க அரசு ஒப்புதலளித்துள்ளது. கால்நடை வளர்ப்புத் துறையிடமிருந்து 'டாப்கோ' நிலத்தை எடுத்துக் கொண்டுள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் கோழிக்குஞ்சு உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91-ஆம் ஆண்டு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.32.45 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் பங்கு மூலதனம் 50 சதவிகிதம் கடன்) கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றுமொரு கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்தை ஏற்படுத்த அரசு ஒப்புதலளித்துள்ளது. நிலம் தெரிந்தெடுக்கப்பட்டு உடைமையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டடப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஜப்பான் வகை குயில் காடைக் குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு வாய்ப்பிருப்பதால் 1989-ஆம் ஆண்டிலிருந்து செங்கற்பட்டில் ஜப்பான் வகை காடைக் குஞ்சு பொரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றுமொரு ஜப்பான் வகை காடைக் குஞ்சு பொரிப்பு நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம் தெக்குப்பாளையத்தில் 1991 ஜூனிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

'டாப்கோ'வின் தீவனக் கலவைப் பிரிவு நந்தனம் (சென்னை), திருப்பூர் (கோயம்புத்தூர்), கப்பலூர் (மதுரை) ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், மத்திய அரசும் டாப்கோவும் செலவை சமமாகப் பங்கீட்டுக் கொள்ளும் வகையில், ரூ.21 இலட்சம் செலவில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்தில் 8 மணி நேரமுறை மாற்றுப் பணியில் 50 மெட்ரிக் டன் கோழித் தீவனம் தயாரிக்கும் திறன் கொண்ட நவீன கோழித் தீவன கலவைத் தொழிற்சாலை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோழி வளர்ப்புக்குத் தரமான தீவனத்தைத் தயாரித்து விற்பனை செய்வதை மேம்படுத்த இது பெரிதும் உதவும். கோழித் தீவனத்திற்காகத் தரமுள்ள தனிவலிக் கலவை தயாரிப்பதற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள சேஷஞ்சாவடியில் ரூ.1.78 இலட்சம் செலவில் தன் சொந்தப் பயனுக்காக 'டாப்கோ', கனிவளக் கலவைத் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1991 பிப்ரவரியிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

தீவனத் தயாரிப்புப் பிரிவுகள் தயாரித்த கோழித் தீவனத்தை விற்பனை செய்வதற்காக, 'டாப்கோ', சென்னை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், மதுரை, நாமக்கல், தருமபுரி ஆகிய இடங்களில் விற்பனைப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. உடல் ஊனமுற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பற்றிருப்பவர்களுக்கும் தேசிய திட்டத்தின் கீழ், சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு, 'டாப்கோ', சில்லறை விற்பனை நிலையங்களுக்கு விற்பனை முகவர்களை நியமித்துள்ளது. இதுவரை 96 பேர்களுக்கு இது தொடர்பாக உதவியளிக்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களில் 650 கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காகச் சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.33.85 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டில் தாமதமாக நிதி வழங்கப்பட்டதால், 1991-92-ஆம் ஆண்டில் தான் பணி மேற்கொள்ளப்பட்டது. 706 கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4.50 இலட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூருக்கு அருகே தெக்குப்பாளையத்தில் கோழி தோலுரிக்கும் நவீனக் கூடம் ஒன்றைத் தொடங்கும் மற்றொரு திட்டத்தை மேற்கொள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கருதியுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொழிற்சாலை 1992-93-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

**முட்டைகள் ஏற்றுமதி**

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், அது தொடங்கப்பட்ட காலத்தி

படிப்பு நிலையில், இப்பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளில், பருவமுறை தேர்வு நடத்தும் கல்வி முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கப் படிப்புகளில்; கால்நடை அறிவியல் பட்ட மேற்படிப்பும், கால்நடைப் பராமரிப்பும் பொருளாதாரப் படிப்பும் கொண்டுவரப் பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில், தூத்துக்குடி, மீன் வளர்ப்பு-ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து துறைகளில் மீன் அறிவியல் பட்ட மேற்படிப்புப் பாட வகுப்பும், இரண்டு துறைகளில் பி.எச்டி., படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன.

இப்பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளில், பட்டப்படிப்பு நிலையிலும், பட்ட மேற்படிப்பு நிலையிலும் ஆக இரு நிலைகளிலும் 1543-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்படிப்புகளைப் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டில், கால்நடை அறிவியல் பட்டப்படிப்பில் (B.V.Sc.,) 224 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில், 54 பேர் மாணவியர். கால்நடை அறிவியல் பட்ட மேற்படிப்பில் 39 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில் 6 பேர் மாணவியர். மீன் அறிவியல் பட்டப்படிப்பில் 17 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மீன் அறிவியல் பட்ட மேற்படிப்பில் 9 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் முறையே ஒவ்வொரு மாணவியும் உள்ளனர்.

சென்னை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் இல்லத்தில், மாணவிகளுக்கென, தனியாக ரூ.14.85 செலவில் ஒரு இல்லம் கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், கல்வித் தகுதியின் அடிப்படையில் 14 பேருக்கு படிப்புதவித் தொகை வழங்கவும், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மெட்ரிக் படிப்பிற்குப் பிந்திய படிப்பு பயிலும் 13 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கவும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், கால்நடை மருத்துவம் பயிலும் 21 மாணவர்களும், மீனளம் பயிலும் 4 மாணவர்களும் படிப்புதவி பெறும் இளநிலை ஆராய்ச்சி மாணவர்களாகத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

> **புத்தகங்கள் நமக்கு வழி காட்டுவதோடு தனிமையிலே நாம் இருக்கும்போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன், நமக்கு நாமே பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.**
>
> - கோலியர்

இப்பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பின்னர், 17 அறநிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டில் 3 அறநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கல்வி - பயிற்சி**

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில், ஸ்ரீநகரில் உள்ள, வேளாண்மை- தொழில் நுட்பத் துறைக்கான எஸ்.கே. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கால்நடை அறிவியல் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவமனை பயிற்சி, இந்த மருந்தகத்தில் அளிக்கப்பட்டது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள கால்நடைப் பரிசோதனை சிகிச்சைத் துறையில், கால்நடை மருத்துவம் குறித்த மூன்று படிப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

கால்நடை உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், கால்நடை வளர்ப்புத் துறை உதவி இயக்குநர்கள், 'டாப்கோ' தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் போன்ற பல்வேறு அமைப்புகளின் அதிகாரிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேலும், பணியிடைப் பயிற்சி வகுப்புகள் 6 நடத்தப்பட்டன. இதில் 87 அதிகாரிகள் பங்கேற்றனர்.

கோழி வளர்ப்பு, பால்பண்ணை, முயல் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கால்நடைக் கலப்புத் தீவனப் பயிர் வளர்ப்பு, ஒருங்கிணைந்த வாத்து வளர்ப்பு, மீன் வளர்ப்பு முதலிய வகுப்புகள் இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு மையங்களில் நடத்தப்பட்டன.

**ஆராய்ச்சி**

மாதவரத்தில், 'வைரஸ்' கிருமிகள் தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கென்று ஒன்றும், நுண்ணுயிர்க்கிருமிகள் தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கென்று ஒன்றுமாக, இரண்டு கால்நடை ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவப் பெண்களுக்கு மீன்பிடிப் பொருட்களைத் தயாரிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக, பயிற்சி வகுப்புகள் தொகுதி தொகுதியாக நடத்தப்பட்டன.

கால்நடை மருத்துவப் பயனுக்காகவும் பொதுமக்கள் சுகாதார நலப் பயன்பாட்டிற்காகவும் 'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) என்கிற தனி சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டது.

இங்கிலாந்து நாட்டின், வெப்ப மண்டல கால்நடை மருத்துவ மையம், கால்நடைச் சுகாதார ஆய்வு மையத்தை, கால்நடை காசநோய் ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற இணைப்பு நிலுவையாக அங்கீகரித்தது.

மத்தியஅரசின் தரிசு நில மேம்பாட்டுத் துறை, நடப்பாண்டில் வேளாண்-காடு வளர்ப்புத் திட்டத்திற்காக, ரூ.38 இலட்சம் அனுமதித்தது.

கல்வி, பயிற்சிக்காக, பொதுப்பணித் துறையைச் சேர்ந்த சித்தாறு அணை, தூத்துக்குடி மீன் வளர்ப்பு-ஆராய்ச்சி நிலையத்திற்கு (FC & RI) மாற்றப்பட்டது.

பாறை வகை லரப்ஸ்டர்கள் தொடர்ந்து கிடைக்கும் வகையில் வளர்க்கப்பட்டன. அவற்றைப் பிடித்து வைத்து வளர்க்கும் கால அளவில் அவை, 2 இலட்சத்திற்கு அதிகமான 'லார்வாக்களை' உற்பத்தி செய்துள்ளன.

**மருத்துவமனை**

கண்காணிப்பு வசதி கொண்ட இ.இ.ஜி. (E.E.G.) இ.சி.ஜி. (E.C.G.) கருவிகள், கண் பரிசோதனைக் கருவிகள் போன்ற நவீன சாதனங்கள் கொண்ட தொடக்கப் பரிசோதனைப் பிரிவு, பொதுமக்களின் நலனுக்காகத் தொடங்கப் பட்டது. மேலும் நிணநீர் மாற்றுச் சிகிச்சை, இரத்த மாற்றுச் சிகிச்சை வசதிகள் கொண்ட மும்முரச் சிகிச்சைப் பிரிவும் தொடங்கப்பட்டது.

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களின் நலனுக்காக, நடப்பாண்டில் நடமாடும் மருந்தகம் செயல்படத் தொடங்கியுள்ளது.



# நூல் நயம்

### சன்மார்க்கம்

**ஆசிரியர்:** மகாத்மா காந்தி
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்
காந்தி மியூசியம் வளாகம்
மதுரை-625 020.

பக்கம்:48 விலை:ரூ.5/-

அண்ணல் காந்தியடிகளின் 'நீதி தர்மம்' என்ற குஜராத்தி நூலின் மொழி பெயர்ப்பாகும் இது. 1921-ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தென்றல் திரு.வி.க. இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார். வாழ்விலும் தொழிலிலும் நீதி கடைபிடிக்க வேண்டும். அதுவே சிறந்த கடவுள் வழிபாடு ஆகும். தன்னலமே நீதியை மறக்கச் செய்யும். தன்னலங் கருதாது உயிர்கட்குச் சேவை செய்வதே கடவுள் வழிபாடு என்று சன்மார்க்க நெறியைச் சொல்லும் இந்நூல் ஏழாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. தர்மமும், சத்தியமும் வாழ அறிவுரை நிரம்பிய நூல்.

—மாமூலன்

### 'இனிப்பு - காரம் - பலகார வகைகள்'

**ஆசிரியர்:** வசந்தி அம்மாள்
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:80 விலை:ரூ.10/-

'இனிப்பு - காரம் - பலகார வகைகள்' என்னும் இந்தச் சமையல் புத்தகம் எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளது. பலவகையான இனிப்பு மற்றும் கார வகைகள் தனித்தனியாகப் பட்டியலிடப் பட்டு ஒவ்வொன்றும் செய்முறை பற்றியும் அவற்றைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றின் அளவுகள் பற்றியும் விவரமாக தரப்பட்டுள்ளன.

சமையலின்போது கவனிக்க வேண்டியவை பற்றி இந்நூலின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருப்பது உபயோகமானதும் பாராட்டுக்குரியதுமாகும். இல்லத்தரசிகளுக்கும், சமையலில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—ஜே. சந்திரன்

### SIDDHA SYSTEM OF HOME REMEDIES

**ஆசிரியர்:**
டாக்டர் எஸ். சிதம்பரத்தாணுப் பிள்ளை
**வெளியீடு:**
சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்,
ஈ-32, அண்ணா நகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:125 விலை:ரூ.150/-

நம் உடலில் ஏற்படும் நோய்களைக் குறிப்பிட்டு, மருத்துவ ஆலோசனை அளிப்பதோடு, நோய்தீர்க்கும் மருந்தை எவ்வாறு தயாரிக்க வேண்டும், தயாரிப்பதற்கு என்னென்ன பொருட்கள் எந்த அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும், அதை எப்படி உட்கொள்ள வேண்டும் என்பதை விவரமாகவும், தெளிவாகவும் எழுதியுள்ளார் இந்நூலாசிரியர்.

நூல் எளிய முறையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. நோய்களின் பெயர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மஞ்சள்காமாலை நோய்க்கு JAUNDICE (ஜாண்டிஸ்) என்பதை ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு MANJAL KAMALAI என்று குறிப்பிட்டு, ஒரு மருத்துவச் சொல் அகராதி தேவையில்லாதவாறு நாம் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

நாள்தோறும் அவ்வப்போது ஏற்படும் சிறிய, பெரிய நோய்களுக்கு எளிய முறையில் நாமே, நமக்கு மருத்துவம் செய்து கொள்ளும் அளவிற்கு இப்புத்தகம் ஒரு மருத்துவராகவே விளங்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல்.

—ஆர். இராஜசேகரன்

### கேள்வி ஞானம்

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்
**வெளியீடு:**
பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள்
முதல் தெரு
சென்னை-600 014

விலை: ரூ.15 பக்கம்: 112

கேள்வியும் பதிலும் இணைந்த அறிவுபூர்வமான நூல்.

வாழ வைப்பது எது?
தாயின் அன்பு.
தாழ வைப்பது எது?
தானெனும் அகந்தை.

இப்படிப் பல எண்ணப் பிழிவுகள் இதயத்தைத் தொடுகின்றன.

### தையற்கலை வழிகாட்டி ஆண்கள் உடை (இரண்டாம் பாகம்)

**ஆசிரியர்:** ஆர்.எஸ். பாலகுமார்
**வெளியீடு:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:96 விலை:ரூ.7/-

தமிழ் படிக்கத் தெரிந்து, கொஞ்சம் தையற்கலையில் ஆர்வம் இருந்தால் போதும் இந்நூலின் துணையுடன் ஓர் சிறந்த தையற் கலைஞராக பரிணமிக்க முடியும்.

துணிகளை வெட்டுதல், தைத்தல் மட்டுமல்ல நூல் வகை, ஊசி வகை, துணிகளில் படிந்துள்ள கறைகளை நீக்கும் வகை, இஸ்திரி போடுதல் ஆகியவையும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்களின் வகைகள், அவற்றின் பயன்கள் ஆகியவையும் இந்நூலில் உண்டு.

இந்நூலுக்கு விளக்கப்படங்கள் மிகமிக அவசியம். அவை குறைவின்றி, தெளிவாக, பெரிய, பெரிய படங்களாக வெளியிடப்பட்டுள்ளன. உண்மையில் இந்நூல் தையல் கலைக்குச் சிறந்த வழிகாட்டி தான்.

- என்.கே. சாமி.

### நினைவுகள் உன்னோடு தான்

**ஆசிரியர்:** லட்சுமி ராஜரத்தினம்
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்,
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:152 விலை:ரூ.17/-

திருமணத்திற்கு முந்திய நாட்களில் மணமகளின் மகிழ்ச்சிச் சிதறல்களோடு கதை தொடங்குகிறது.

அழகிய திறமைமிக்க நல்ல மனிதனான மணமகன், திருமணத்திற்கு முன்பு நோய்வாய்ப்பட்டுச் சுகம் பெற்று, தாலி கட்டிய பிறகு மீண்டும் நோயுற்று... காணாமல் போய்விடுகிறான். இடையில் திருமணத்திற்கு முன்பு வேறு ஒருவனிடம் நெருங்கிப் பழகித் தன்னை இழந்த கதாநாயகி, காணாமல்போன கணவனைத் தேடுகிறாள்.

இறுதியில் கணவனைச் சந்திப்பது தமிழ்த் திரைப்படங்களில் வருவதுபோல் இருந்தாலும் ஆசிரியரின் கதை சொல்லும் முறைக்கும், வேகமான எழுத்துக்காகவும் இக்கதையை சுவைத்துப் படிக்கலாம்.

- என். குமார்.

# புரட்சித்தலைவியின் முதலாண்டு ஆட்சி- ஒரு கண்ணோட்டம்



**இ**ந்தியத் துணைக் கண்டத்தின் தேர்தல் வரலாற்றுச் சாதனைகள் அனைத்தையும் முறியடித்து, அரசியலில் இதுவரை யாரும் செய்யாத மகத்தான புரட்சியை ஏற்படுத்தி, போட்டியிட்ட 167 இடங்களில் 163 இடங்களை வென்ற அ.இ.அ.தி.மு.க.-வின் ஈடு இணையற்ற புரட்சித் தலைவி, மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ் நாட்டின் 18-வது முதல்வராக 24.6.1991 அன்று பதவியேற்றார். அவரது சீரிய தலைமையில் பதினெட்டுப் பேர் கொண்ட அமைச்சரவை அன்று பதவியேற்றது.

தமிழக வரலாற்றில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வராகப் பொறுப் பேற்ற முதல் பெண்மணி என்னும் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையே சாரும். இந்தியத் திருநாட்டில் மாநில முதல்வராகப் பொறுப் பேற்கும் ஆறாவது பெண் முதலமைச்சர் என்ற பெருமைக்கு உரியவர். தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் முதன் முறையாக 30 பெண்கள் உறுப்பினரானார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி. அவர்களின் 366 நாள் ஆட்சியில் 366-க்கும் மேற்பட்ட சாதனைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், முக்கியமான சில சாதனைகள் மட்டும் கீழே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

**மலிவு விலை மது ஒழிப்பு**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதும், முதல் நடவடிக்கையாக மலிவு விலை மதுக்கடைகளை மூடிவிட ஆணையிட்டார். முதல்வரின் முதல் ஆணை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த

என். இளங்கோ



முடிவினால் அரசுக்கு கடந்த நிதியாண்டில் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.320 கோடி ஆகும். என்றாலும் பாமர மக்களை அழிவுப் பாதையில் இருந்து மீட்பதற்காகவே தைரியமான இம்முடிவினை முதல்வர் அவர்கள் எடுத்தார்கள். மது விலக்கின் நன்மைகளை மக்களிடையே விளக்கி, மதுவின் கொடுமைகளிலிருந்து மக்களைமீட்க, தகுந்த பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின்படி, மது விலக்குப் பிரச்சாரத் திரைப்படம் ('நீங்க நல்லா இருக்கனும்') ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரூ.2 இலட்சம் செலவில் நாடகம் ஒன்று ('வெளிச்சம்') தயாரிக்கப்பட்டு தமிழ் நாடெங்கும் நடைபெற்று வருகிறது.

**சட்டம் ஒழுங்கு நிலைமை**

அமைதிப் பூங்காவாக திகழ்ந்த தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை, மிகப்பெரிய சவாலை எதிர்கொண்ட நேரத்தில்தான் இவ்வரசு பொறுப் பேற்றது. இலங்கைத்தீவிரவாதிகளின் கட்டுப் பாடற்ற பயங்கர நடவடிக்கைகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டன. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் அப்பாவி இலங்கைத் தமிழர்களின் நடமாட்டங்கள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டன. நமது காவல் துறையினருக்கு இலங்கைத் தீவிரவாதிகளால் விடப்பட்ட கடுமையான சவால்களைச் சமாளிக்க ஏதுவாக காவல்துறை நவீன மயமாக்கப்பட்டது. எந்தவித சவாலையும் சமாளிக்கும் வகையில் அவர்களுக்குச்சிறந்த பயிற்சியும் நவீன ஆயுதங்களும் வழங்கப்பட்டன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை தொடரவிட்டிருந்தால், தமிழகமும் நிச்சயமாக ஒரு காஷ்மீராகவோ, ஒரு பஞ்சாபாகவோ மாறியிருக்கும் என்பதைத்தான் ராஜீவ்காந்தியின் படுகொலை சந்தேகத்திற்கு இடமின்றிச் சுட்டிக்காட்டியது. தமிழகம் தலைசிறந்த மாநிலமாக, அமைதிப் பூங்காவாக, ஒருமைப்பாட்டின் உறைவிடமாகத் திகழ மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளில் காவல்துறையினரின் பங்கு மகத்தானது.

**தொழிற் கொள்கை**

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை கொண்டு வந்தே தீருவது என உறுதிபூண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20.1.1992 அன்று தொழிற்சாலைகளில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி, முதலீடு திரட்டுதல், ஊக்கத் திட்டங்கள், வரிச்சலுகைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் மேம்பாட்டுக்கான ஒரு புதிய தொழிற் கொள்கையை வெளியிட்டார். இப்புதிய கொள்கையினால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பன்மடங்கு பலன்கள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு தொழிற் துறையில் எடுக்கப்பட்ட சில முயற்சிகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் நிறுவு திறனுடன் கரும்புச் சர்க்கரை

## பொதுமக்கள் அளித்த மனுக்களின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 முதல் வாரந்தோறும் பொது மக்களை மாவட்டவாரியாகச் சுழல்முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.**



**22.6.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் குறைகளைக் கனிவுடன் கேட்டு அவைகளுக்குத் தீர்வு காண உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என உறுதியளித்தார்கள்.**

**22.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 3 பேர்களுக்கு ரூபாய் 47,000-மும், மூவலூர் இராமாமிர்தம் நினைவுத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கு ரூ.5,000-மும், கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2 பேருக்குத் தலா ரூ.5,000 வீதமும், சலவைத் தொழில் செய்ய, சிறுதொழில் செய்ய 5 பேர்களுக்கு ரூ.22,000 கடன் உதவியும், இரண்டு பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ.9,500-ம், 22 பெண்களுக்கு விதவை உதவித் தொகையும் வழங்கினார்கள்.**

**இதுதவிர விதவை சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் இருவருக்கும், நிலப்பட்டா 7 நபர்களுக்கும், மனைப்பட்டா 15 நபர்களுக்கும், மூன்று சக்கர வண்டி 5 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 15 பேர்களுக்கும், தையல் இயந்திரம் 4 பேர்களுக்கும், சலவைப்பெட்டிகள் 5 பேர்களுக்கும், ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் இருவருக்கும், மற்றும் 6 நபர்களுக்கு காலிபர்களும் ஒருவருக்கு காதுகேட்கும் கருவியும் வழங்கப் பட்டன. மொத்தம் 97 பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22.6.92 அன்று அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.**

யிலிருந்து செய்தித்தாள் தயாரிக்கும் தொழிற்சாலை.

புகளூர் காகிதத் தொழிற்சாலை ரூ.475 கோடி செலவில் விரிவாக்கம்.

மேட்டூரில் 'டிட்கோ' மூலம் கூட்டுத் துறையில் ரூ.159 கோடி மதிப்பீட்டில் தேனிரும்பு தயாரிக்கும் தொழிற்சாலை.

தஞ்சை மாவட்டத்தில் 'டிட்கோ' மூலம் ரூ.75 கோடி செலவில் அலுமினியத் தொழிற்சாலை.

சிவகங்கையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கிராபைட் சுத்திகரிப்பு ஆலை. இத்திட்டத்தில் ரூ.200 கோடி அளவில் உப தொழிற்சாலைகள் அமைய வாய்ப்பு.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் உத்தம சோழபுரத்தில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் கூட்டுத் துறையில் 'காஸ்டிக் சோடா' தயாரிப்புத் தொழிற்சாலை.

சிதம்பரனார் மாவட்டம் 'குதிரை மொழித் தேரியில்' இங்கிலாந்து நாட்டு நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் ரூ.450 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் டைட்டானியம் டையாக்சைடு தயாரிக்கும் தொழிற்சாலை.

திருநெல்வேலி-கட்டபொம்மன், தஞ்சாவூர், நாகப்பட்டினம்- காயிதே மில்லத், தென்னார்க்காடு, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் புதிய சர்க்கரை ஆலைகள்.

**ஆலயத் திருப்பணிக்கோர் அற்புதத் திட்டம்**

தமிழ்நாடு, பழம்பெரும் கோயில்களின் உறைவிடம் ஆகும். ஆனால், ஆயிரக்கணக்கான சிறு கோயில்கள் சிதைந்த நிலையில் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாகத் திருப்பணி வேலை எதுவும் நடைபெறவில்லை. பல கோயில்கள் அன்றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன. இக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யவும் பராமரிக்கவும் பெரும் தொகை தேவைப்படுகிறது. இச்சீரிய பணிக்கு 'முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' என்னும் நிதியை ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்மானித்தார். இந்த நிதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.1,00,008 வழங்கித் தொடங்கி வைத்தார். மாநில அளவில் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியமும் மாவட்ட அளவில் குழுக்களும் அமைக்கப்பட்டு இத்திருப்பணி சிறப்பாகச்செயல்பட்டுவருகின்றது.



**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவாக...**

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவை என்றென்றும் பசுமையாக மக்களின் மனதில் நிலை நிறுத்தும் வண்ணம் பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது.

இதுநாள் வரை 'செங்கல்பட்டு மாவட்டம்' என அழைக்கப் பெற்ற மாவட்டம் இனி 'செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்' என அழைக்கப்பெறும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.

31.1.1992 அன்று சட்டப்பேரவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

மெரினா கடற்கரையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சதுக்கத்தை மாற்றியமைக்கும் பணி ரூ.1.25 கோடி செலவில் துரிதமாகச் செயல்பட்டு வருகின்றது.

ஒரு வேளை உணவுகூட இல்லாமல தவிக்கும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி, நோயற்ற வலிவுள்ள ஒரு புதிய தலைமுறையை உருவாக்கிட, உலகெங்கிலும் பாராட்டைப் பெற்ற சத்துணவுத் திட்டத்தை அளித்தவர் புரட்சித் தலைவர் என்பதைக் கருத்தில் கொண்டு, இதுவரை 'தமிழ்நாடு அரசு சத்துணவுக் கூடங்கள்' என்று அழைக்கப்படுபவை இனிமேல் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள்' என்று அழைக்கப்படும் என ஆணையிடப்பட்டது.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று 1.4.92 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**சிறப்புத்தன்னிறைவுத் திட்டம்**

ஊரகப்பகுதிகளில், சாலைகளை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல், தெருவிளக்குகளை அமைத்தல், குடிநீர் வசதி, பாசன ஏரிகளைப் புதுப்பித்தல், சத்துணவு மையங்களைக் கட்டுதல், தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.





**எழில்மிகு சென்னை - 2000**

சென்னை மாநகரத்தை எழில் கொஞ்சும் நகரமாக விளங்கச் செய்திட 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டத்தின் கீழ் சீர்மிகு திட்டங்கள் செவ்வனே தீட்டப்பட்டுள்ளன. இதன்கீழ் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றரூ.1,250 கோடி மதிப்பீட்டில் மகத்தான திட்டங்கள் தீட்டப்பட்டுப் படிப்படியாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் முதற்படியாக மூர்மார்க்கெட்டின் புதிய வளாகம் 28.11.91 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.



**ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி சேலை**

பொங்கல் திருநாளை முன்னிட்டு 7.1.92 அன்று விழுப்புரத்தில் ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்'**

அனைவருக்கும் சுகாதார நல்வாழ்வு அளிக்க வேண்டும். தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும். நோய்த் தடுப்பு, புது சுகாதாரத் திட்டங்கள் கிராமங்களைச் சென்றடைய வேண்டும். தொழுநோய், காச நோய், கண் நோய் போன்றவைகளைத் தீர்க்க கிராம மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள் செய்துதர வேண்டும், என்ற உயர்ந்த நோக்கங்களுடன் 'புரட்சித் தலைவி மருத்துவத் திட்டம்' 18.1.92 அன்று சென்னையில் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக நடந்தேறி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பத்தாயிரம் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதியில் இருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான தெலுங்கு கங்கைத்திட்டம்குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. எஸ். ஜனார்த்தன ரெட்டி அவர்களும் 11.1.92 அன்று புதிய உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். இதன்படி சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டு வரும் திட்டத்தை 1995- 96-ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிப்பதென ஒப்புக் கொள்ளப்பட்டது. அதிலும் குறிப்பாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாக கிருஷ்ணா நதி நீர்சென்னைக்குக்கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம்**

பெண்கள் முன்னேற்றத் திட்டத்திற்கெல்லாம் மகுடம் வைத்தது போல, ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 3.3.92 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்தார். இதன் மூலம் பெண்களைக் குழுக்களாக ஏற்படுத்தி அவர்கள் தொழில் செய்ய வங்கிக் கடனும் மானியமும் ஏற்பாடு செய்யப்படுவதோடு, மூலப் பொருள்கள் பெறுவதற்கும், உற்பத்தியான பொருட்களை விற்பதற்கும் அரசு ஆங்காங்கே வசதி செய்து தருகிறது. இந்தத் தொடக்க விழாவில், 10,000-க்கும் மேற்பட்ட பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு உதவிகள் வழங்கப்பட்டன. ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் இந்த உன்னத முயற்சி தமிழ் நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

**நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் உதயம்**

நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கீழ்த்தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம்- காயிதே மில்லத் மாவட்டமாக 18.10.91 அன்று உதயமானது. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். நாகப்பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டம் தமிழகத்தின் 22-வது மாவட்டமாகும்.

**போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏழு தேசிய விருதுகள்**

சாலைப் போக்குவரத்தில் மிகச் சிறந்த உற்பத்தி செயல்திறன், கிராமப்புற பேரக்குவரத்துச் சேவை, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்காக அகில இந்திய அளவில் வழங்கப்படும் விருதுகளில் இதுவரை எந்த மாநிலமும் புரியாத மாபெரும் சாதனையைத்தமிழகப்போக்குவரத்துக் கழகங்களான 'அன்னை சத்யா', 'சோழன்', 'பட்டுக்கோட்டை அழகிரி', 'இராணி மங்கம்மாள்' ஆகிய போக்குவரத்துக் கழகங்கள் ஏழு விருதுகளைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மை இடம் பெற்றுள்ளன.

**மகளிர் காவல் நிலையம்**

இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகரில், முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும் முதல் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 13.4.92 அன்று கிரீம்ஸ் சாலையில் தொடங்கி வைத்தார்.

**மக்கள் தொடர்பு**

தமிழகத்தின் வேறு எந்த முதல்வரும் இதுவரை ஏற்படுத்திக் கொள்ளாத நேரடி மக்கள் தொடர்பினை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்திக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு நேரிடையாக உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்து வருகிறார்கள். 9.3.92 முதல்

வாரந்தோறும் பொதுமக்களைச் மாவட்ட வாரியாகச் சுழல் முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நேரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

இந்த மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை எடுத்து, அறுவைச் சிகிச்சைக்காகவும், ஏழைகளின் திருமணச்செலவிற்காகவும், கலப்புத்திருமண உதவியாகவும், சிறு தொழில் தொடங்கவும், விதவைகளுக்கு உதவித் தொகையாகவும், நிலப் பட்டாக்களும், முதியோர்களுக்கும், ஊனமுற்றோர்களும் தேவையான உதவிகள் மற்றும் இதர சமூக நலத்திட்ட உதவிகள் என ஏராளமான உதவிகளை முதல்வர் நேரிடையாக வழங்குவது உண்மையிலேயே ஈடு இணையற்றதாகும்.

**காவிரி நதி நீர்ப்பிரச்சினை**

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினை முறைப்படியும், சட்டப்படியும், நியாயப் படியும் தீர்க்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசின் அனுமதியைப் பெறாமலும் தமிழகஅரசின் ஒப்புதலைப் பெறாமலும், கர்நாடக அரசு புதிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தமிழகத்திற்குத் தொடர்ந்து பாதகம் ஏற்படுத்தி வந்துள்ளது. 27 தடவைகள் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் முடிவேதும் ஏற்படாததால் பிரச்சினை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டது. நடுவர் மன்றத்திடம் தமிழக அரசு இடைக்காலத் தீர்ப்பைக் கோரியது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி நடுவர் மன்றமும் 25.6.91 அன்று ஒரு இடைக்காலத் தீர்ப்பினை வழங்கியது. இடைக்காலத் தீர்ப்பு முழுத் திருப்தியை அளிக்காவிட்டாலும் உடனடியாக இந்தத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதைத் தமிழக அரசு வரவேற்றது.

கர்நாடக அரசோ, இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்திருப்பது மட்டுமல்லாமல் அதற்கு எதிராக ஒரு அவசரச், சட்டத்தையும் வெளியிட்டது. 'காவிரியில் தண்ணீர் விடவேண்டும்' என்று நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்துவதற்கு இந்த அவசரச் சட்டம் மூலம் தடை விதித்தது. மைய அரசு தலையிட்டு இப்பிரச்சினையில் நியாயம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கோரியது. ஆனால், மைய அரசு உச்ச நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டது.

இதற்கிடையில் காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் தீர்ப்பை



மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட வேண்டும். அத்தீர்ப்பு இறுதியானது, படுகை மாநிலங்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் அவற்றால் அமலாக்கப்பட வேண்டியதுமாகும். இவ்வுத்தரவு கர்நாடக அரசு நிராகரிப்பது நியாயமற்றதாகும். இதனால் உண்டாகும் சிக்கல்களை எடுத்துரைத்து, மத்திய அரசு அவ்வுத்தரவை தனது அரசிதழில் வெளியிடவும், கர்நாடகம் அவ்வுத்தரவை ஏற்றுச் செயல்படவும்,ஆவன செய்யக்கோரி, 5.7.91 அன்று முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்குச் செய்தி அனுப்பினார். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதுபற்றிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 11.7.91 அன்று தமிழ்நாட்டைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து இடைக்கால உத்தரவை அமல்படுத்த வலியுறுத்தினர். 16.7.91 அன்று முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து இது குறித்து வலியுறுத்திப் பேசினார். மேலும், தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொருட்டு தமிழக அரசே மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தத்தை அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் 26.7.91 அன்று அமைதியான முறையில் நடத்தியது.

நடுவர் மன்றத்தீர்ப்பை ஏற்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவிரி நதியிலிருந்து பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு 6 டி.எம்.சி. தண்ணீரை ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் விட வேண்டும் என 31.7.1991 அன்று உத்தரவிட்டார்.

22.11.91 அன்று உச்ச நீதிமன்றம் 'காவிரியில் 205 டி.எம்.சி. நீர் திறந்து விட வேண்டும்' எனத் தீர்ப்புக் கூறியது. 'கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது' என்று கூறியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்றது முதல் எடுத்த பல்வேறு தீவிர நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றியே இது என அனைவராலும் பாராட்டப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பங்கீடு சம்பந்தமாக நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பினை அரசிதழில் வெளியிட வேண்டுமென முதல்வர் அவர்கள் 3.12.91 அன்று அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் டெல்லி சென்று பிரதமரைக் கேட்டுக் கொண்டார். முதல்வரின் கோரிக்கையை ஏற்று பிரதமர் அவர்கள் நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, கர்நாடகத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொண்ணாக் கொடுமைகளின் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் தமிழகம் நோக்கி ஓடி வந்தனர். அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் தமிழக அரசு தாயுள்ளத்துடன் செய்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் விடாமுயற்சியின் காரணமாக கர்நாடகத்தில் அமைதி திரும்பியது. திக்கற்று தமிழகம் ஓடிவந்த அப்பாவித் தமிழர்கள் கர்நாடகம் திரும்பினார்கள்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி, தமிழக முதல்வர்களுடன் பிரதமர் அவர்கள் 17.2.92 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து நிலைமைகள் ஓரளவு சீரடைந்தாலும் நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் ஒரு தீர்வும் ஏற்படவில்லை.

**புரட்சித் தலைவி அவர்களுக்கு டாக்டர் பட்டம்**

உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமை நடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம், இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத்தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயல்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும், தமிழனத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச்சிந்தனைகளை எடுத்துக் கூறும் தெளிவினுக்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு 19.12.1991-ஆம் நாள் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் 134-வது பட்டமளிப்பு விழாவில், டாக்டர் பட்டம் வழங்கப் பட்டது.

**முடிவுரை**

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு இதுவரை ஏற்படாத மகத்தான சவாலை இலங்கைத் தீவிரவாதிகள் முன்வைத்த, மிகவும் சோதனையானதொரு காலகட்டத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். தமிழகத்தை மற்றொரு பஞ்சாபாக மாற்ற எத்தனித்த கொடுமையான தீவிரவாத நடவடிக்கைகளை இரும்புக் கரம் கொண்டு நசுக்கினார். புரட்சித் தலைவி அவர்களால் தமிழகம் மீண்டும் அமைதிப் பூங்காவாக மலரத் துவங்கியது. எந்த ஒரு பொருளாதாரப் புரட்சிக்கும் அமைதியான சூழ்நிலை இன்றியமையாததாகும். அந்தச் சூழ்நிலையை அமைத்தவுடன் புதிய தொழில் கொள்கையினை அறிவித்து, தமிழகத்தில் மகத்தானதொரு தொழில் புரட்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். தொழில் மயமாக்கத்திற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து, அதன் வளர்ச்சிக்கு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி முன்னேற்றப்பாதையில் தமிழகத்தைப் படுவேகமாக கொண்டு செல்லும் பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும். தமிழகத்தை ஆண்ட எந்த ஒரு முதல் அமைச்சரும் சந்தித்திராத புதிய புதிய சவால்களையும், இன்னல்களையும் சிக்கல்களையும் இந்தப் பெண் முதல்வர் சந்திக்க நேரிட்டது. சரியான நேரத்தில் தீவிரவாதத்தை ஒடுக்கித் தமிழகத்தைப் பேராபத்திலிருந்து காப்பாற்றி இரும்புப் பெண்மணி என்று பெயரெடுத்தார். இவரது நடவடிக்கையால் தமிழகம் எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுப் புகழாமல், தமிழக வரலாற்றினை எழுதிவிட முடியாது. தமிழகம் முன்னேற்றப் பாதையில் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருந்தாலும், சரியான நேரத்தில், சரியான பாதையில், மிகச் சீரிய தலைமையேற்று, தமிழகத்தை நடத்திச் செல்கிறார் புரட்சித் தலைவி என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தமிழகத்தின் பொற்காலம் தொடங்கிவிட்டது. அரசியல் பொருளாதார சமூகத் துறைகளில் மாபெரும் புரட்சிகள் நடைபெறத் துவங்கி ஓராண்டாகிவிட்டது. இந்த மாபெரும் மறுமலர்ச்சியில் நமது பங்கைத் தவறாமல் செலுத்திட நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். இரண்டாயிரமாவது ஆண்டு துவக்கத்தில், செல்வம் செழித்தோங்கும் குதூகலமான தமிழகத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்!



அறிவியல் விந்தை:

# பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் எரியக் கூடிய மின்சாரப் பல்பு!

பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்து எரியக் கூடிய மின்சாரப் பல்பு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வழக்கமான இதரப் பல்புகள் பயன்படுத்தும் மின்சக்தியில், 75 சதவீதத்தைத் தான் இந்தப் பல்பு பயன்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் புதிய பல்புக்கு என்ன பெயர் தெரியுமா? 'இ-லாம்ப்'.

வாஷிங்டனில் எடிசன் மின்சாரக் கழகத்தின் ஆண்டுக் கூட்டம் ஜூன் முதல் தேதியன்று நடந்தபோது, இந்தப் புதிய பல்பு அறிமுகப்படுத்தப்பட்டது. கலிபோர்னியாவைச் சேர்ந்த 'இன்டர் சோர்ஸ் டெக்னாலஜீஸ் ஆஃப் சன்னிவேல்' என்னும் நிறுவனம் இந்தப் புதிய பல்பை உருவாக்கியுள்ளது.

இந்தப் பல்பு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மணி நேரம் வரையில் எரியும் திறன் படைத்ததாகும்! அதாவது தினசரி 4 மணி நேரம் எரியவிட்டால், பத்திலிருந்து பதினான்கு ஆண்டுக்காலம் வரைக்கும் இந்தப் பல்பு உழைக்குமாம்! இதர சாதாரணமான பல்புகள் 750 முதல் 1,500 மணி நேரமே எரியும் திறன் படைத்தவை. அதாவது 6 மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரையிலேயே இவை உழைக்கும்.

இந்தப் புதிய பல்பு மிகவும் சிக்கனமானதாகும். பல ஆண்டுகளுக்கு இந்த ஒரே பல்பைப் பயன்படுத்துவதன் மூலம், அடிக்கடி பல்புகளை மாற்றும் செலவு குறையும். இதன் மூலம் ஒரு பல்புக்கு 50 டாலர்கள் முதல் 100 டாலர்கள் வரையில் மிச்சம் பிடிக்க முடியும்.

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் இந்தப் புதிய பல்பு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த சில ஆண்டுகளிலேயே இந்தப் புதிய எலெக்ரானிக் பல்பு மிகவும் பிரபலமடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீடுகளிலும், கடைகளிலும் சர்வசாதாரணமாக இது பயன்படுத்தப்படக்கூடும்.

## இது எப்படி எரிகிறது?

வெண்ணிற ஒளியுடன் பிரகாசிக்கும் சாதாரணமான பல்புகளுக்குள் கம்பியொன்று இருக்கிறது. மின்சாரம் இந்தக் கம்பி வழியாகப் பாயும்போது அந்தக் கம்பி பிரகாசிக்கத் தொடங்குகிறது. இதனால் வெளிச்சம் பரவுகிறது. இந்தச் சாதாரண விளக்கை 1879-ஆம் ஆண்டில் தாமஸ் ஆல்வா எடிஸன் கண்டுபிடித்தார்.

நீல நிற ஒளியைப் பாய்ச்சுகின்ற டியூப் லைட்களின் உள்ளே ஒருவித வாயு அடைக்கப்பட்டுள்ளது. டியூப் லைட்டின் உள்ளே இருக்கும் எலெக்ட்ரோடுகள் இந்த வாயுவை ஒளிரச் செய்கின்றன.

இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'இ-லாம்ப்'பிலும் இதே வாயுதான் அடைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பல்பினுள், இதர சாதாரண பல்பில் உள்ளது போன்ற கம்பியோ, அல்லது டியூப் லைட்டில் உள்ளது போன்ற எலெக்ட்ரோடுகளோ ஏதுமில்லை. இந்தப் பல்புக்குள் ஒரு காந்தக் கம்பிச்சுருள் வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி உயர் அலைவரிசை கொண்ட ரேடியோ சிக்னல்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த ரேடியோ சிக்னல்கள் பல்புக்குள் இருக்கும் வாயுவோடு கலந்து வினைபுரியும்போது, ஒருவிதப் 'பிளாஸ்மா' உருவாகிறது. இந்தப் பிளாஸ்மாவானது பல்புக்கு உள்ளே பூசப்பட்டிருக்கும் பாஸ்பரஸ் மீது பட்டதும் ஒளி ஏற்படத் தொடங்குகிறது.

சாதாரண ஹோல்டர்களிலேயே இந்த பல்பைப் பொருத்த முடியும். இதரச் சாதாரண பல்புகளைப் போன்ற நல்ல ஒளியை இந்தப் பல்பும் தருகிறது. ஆனால், இதரப் பல்புகளைக் காட்டிலும் மிகவும் குறைவான உஷ்ணத்தையே இது உண்டாக்குகிறது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்


தமிழரசு

சந்தா விவரம்

தமிழ் ......... ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் : தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.




# நகர் ஊரமைப்பு நலப் பணிகள்

" உள்ளாட்சித் துறையின் ஓர் அங்கமான நகர்-ஊரமைப்புத் துறையின் இந்த ஓராண்டுக் காலச் சாதனைகள் பற்றி இக் கட்டுரையில் விவரிக்கப்படுகிறது. "

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு மலர்ந்து ஓராண்டு காலமாகிறது. இந்தக் குறைந்த காலத்திலேயே நிறைந்த பணிகளையாற்றிப் பெருமைகொண்டிருப்பது நகர்-ஊரமைப்புத் துறை.

இத்துறை கீழ்க் கண்டுள்ள மூன்று முக்கியப் பணிகளைச் செயலாற்றி வருகின்றது.

1. மண்டலத்திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பது மற்றும் கட்டடங்கள் கட்டுவது தொடர்பான மேல்முறையீடுகளில் தீர்வு காண்பது போன்ற சட்ட பூர்வமான பணிகள்.

2. மைய அர்சின் நிதி உதவியுடன் செயலபடுத்தப்படும் சிறிய மற்றும் மத்திய நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்டங்களில் நகரங்கள் மற்றும் நகராட்சிகளுக்குத்தக்க உதவியளிக்கும் வளர்ச்சிப் பணிகள்.

3. மனைப் பிரிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கூடங்களுக்குத் திட்ட அனுமதி வழங்குதலில் தக்க ஆலோசனைகள் தெரிவிப்பது.



★ மனிதனின் எல்லா உலகங்களையும்விடப் பெரியது மனம். அது, பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது நினைவுக்கேற்றபடி குறுகத் தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

—அறிஞர் அண்ணா

### சட்டபூர்வமான திட்டங்கள் தயாரிப்பது

இத்துறை கடந்த ஓராண்டில் கீழ்க்கண்டுள்ள 11 நகரங்களுக்கு முழுமைத்திட்டம் தயாரித்து, அவைகளை அரசின் ஒப்பளிப்பிற்காக அளிக்கப்பட்டுள்ளன.

ஆத்தூர், காஞ்சிபுரம், மதுராந்தகம், கோயம்புத்தூர், கொடைக்கானல், வேலூர், கடையநல்லூர், பல்கலை நகர், மேலூர், மணப்பாறை, கோபிச்செட்டிப்பாளையம்.

இவற்றில் ஆறு முழுமைத் திட்டங்களுக்கு அரசு இசைவு/ஒப்பளிப்பு அளித்துள்ளது. எஞ்சிய 5 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இத்துறை பலநகரங்களுக்கான 23 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து, அவற்றிற்கு இசைவு அளித்துள்ளது. மற்றும் 17 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இறுதி ஒப்புதலும் அளித்துள்ளது.

### வளர்ச்சிப் பணிகள்

மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் இம்மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி உதவிகளை இத்துறை அளித்து வருகின்றது. சிறிய மற்றும் மத்திய ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.177.68 இலட்சங்கள் செலவில் 15 திட்டப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு ஆண்டில் ரூ.238.70 இலட்சங்கள் முதலீட்டில் 11 திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொடங்கப்பட்டுள்ள இத்திட்டப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.235.93 இலட்சங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.606.75 இலட்சங்கள் முதலீட்டில் 40 வளர்ச்சிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் ரூ.296.82 இலட்சங்கள் முதலீட்டில் 16 வளர்ச்சிப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொடங்கப்பட்டுள்ள இத்திட்டங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.466.64 இலட்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### ஆலோசனை மற்றும் அறிவுறுத்தும் பணிகள்

கடந்த ஓர் ஆண்டில் இத்துறை 61,758 மனைகள் அடங்கிய 570 மனை உட்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

*பிற பணிகள்*

வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதில் நகர வான் வழிப்படங்கள் மற்றும் செயற்கைக் கோள் வழிப்படங்கள் போன்ற நவீனமான தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி வருகின்றது. நகர வான் வழிப்படங்கள் ஆறு நகரங்களுக்கும் மற்றும் மலைப்பிரதேசமான உதக மண்டலத் திற்கும் எடுக்கப்பட்டு அவைகள் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பழம் பெருமை வாய்ந்த நகரங்களின் இயற்கை அழகைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் இந்நகரங்களில் நில உபயோ கங்கள் பலவகையாகப் பிரிக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள் ளது. இக்கொள்கையின் அடிப்படையில் கொடைக்கானல் நகரத்திற்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் உதக மண்டலம், குன்னூர், வால்பாறை மற்றும் ஏர்க்காடு போன்ற நகரங்களிலும் முறையான நில உபயோகங் களுக்கான வழிவகை செய்யப்பட்டு வருகின்றது. மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சரித்திரப் புகழ் வாய்ந்த மாமல்லபுரம் நகரத்திற்கான பல வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த வழி வகை செய்யப் பட்டுள்ளது.

மாநில ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 40 நகரங்களில்

**• புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையில் நிறுத்தப்பெற்றுள்ள கலங்கரை விளக்கங்கள்.**

**—இ.பி.விப்பிள்**

1991-92-இல் நிறைவேற்றப்பட்டுவரும் - வணிகமையம், அங்காடி, கடைகள், பேருந்து நிலையம், பூங்கா, நாளங்காடி போன்றவற்றிற்காக, அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகை 606.75 இலட்சம் ரூபாயாகும்.

மேலும் - மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் பல மாவட்டத்தை யும் சேர்ந்த 16 நகரங்களில் - சமுதாயக் கூடம், பேருந்து நிலையம், வணிகமையம், கடைகள், அங்காடி மேம்பாடு போன்ற பல திட்டப் பணிகளுக்காக ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.296.82216 இலட்சமாகும்.

அதே நேரத்தில் - இந்த வகையில் நகருக்குக் கிடைக்கும் மைய அரசின் உதவி பற்றியும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

மைய அரசு நிதியுதவியோடு 1991-92-இல், சிறிய மற்றும் மத்திய தர நகரங்கள் 15-இல், ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் - பேருந்து நிலையங்கள், சந்தைகள் ஆகிய திட்டப்பணிகள் நிறைவேற 277.48 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

## குழந்தைகள் கலை விழா



கோடை விடுமுறையை முன்னிட் டும், குழந்தைகளுக்குச் சுற்றுலா, தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு பற்றி விழிப் புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரை யின் பேரில் கடந்த மே மாதம் 22 முதல் 24-ஆம் தேதி வரை 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்', "குழந்தைகள் கலை விழாவை" (Children's Carnival) நடத் தியது.

பொதுமக்களிடமும், குழந்தைகளிடை யேயும், பெரிய வரவேற்பைப் பெற்ற இவ்விழாவினைத் தொடர்ந்து விடு முறைக்குப் பின் பள்ளிகள் திறக்கும் இச்சமயம் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வண்ணம் 'புத்தக விழா' ஒன்றைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கியதன் பேரில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஜூன் 26 முதல் 30-ஆம் தேதி வரை சென்னை தீவுத்திடலில் புத்தக விழாவை நடத் தியது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் முதல் 'புத்தக விழா' (Book Fair) இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புத்தக விழாவில் பள்ளி சிறார்க் கும், கல்லூரி மாணவ மாணவியருக்கும் தேவையான புத்தகங்கள், புத்தகப் பை, எழுது பொருட்கள், இதரப் பொருட் களும் கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டன. தமிழ்ப் புத்தக விற்பனை யாளர்களுக்குக் குறைந்த வாடகையில் இடம் தரவும், சில வகையான புத்தகங் களைக் குறைந்த விலையில் விற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஐந்து நாட்கள் நடந்த இவ்விழாவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் பல்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி களும், பட்டிமன்றங்களும் நடத்தப் பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசுகளை வழங்கியது.



# கூட்டுறவுத் துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள்

**கிராமப் பகுதிகளில் நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு இயக்கம் பெரும்பங்கு வகிக்கிறது. பயிர்க்கடன், சிறு வியாபாரிகளுக்குக் கடன், குறுகிய கால நடுத்தரக்கால விவசாயக் கடன்கள், நகைக் கடன்கள், பண்ணை சாராக் கடன்கள் போன்ற பல்வேறு கடன்களை வழங்கி ஏழை எளியோர் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுக்கிறது கூட்டுறவு இயக்கம்.**

தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் கடந்த எண் பது ஆண்டுகளுக்கும் மேலாக, மக்களின், குறிப் பாக கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரி வினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது. தமிழகத்தில் உள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங் கங்கள் மக்களின் பல தரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்குப் பணியாற்றி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பிற துறைகளி லும் ஈடுபட்டு மக்கள் தொகை யின் எல்லாப் பிரிவினருக்கும் பலனளித்துள்ளன.

**உடனடி கடன் வழங்கும் திட்டம்**

கடன் வழங்கல் நடைமுறையை எளிதாக்கவும், கடன் தவணைதவறாத உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களைத் துரிதமாக வழங்குவதை உறுதிப்படுத்தவும் நடப்பு ஆண்டில் எல்லாத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் உடனடி கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

**சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்**

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் (நாபார்டு) வழி முறைகளின் படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன.



**சிறு வியாபாரிகளுக்குக் கடன்**

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு உதவி புரிய அதிக பட்சமாக ரூ.500 வரை ஒருவருக்குத் தேவையின் அடிப்படையில் சிறு கடன்கள் வழங்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு, தேவை அடிப்படையில் சிறு கடன்கள் வழங்கல் என்ற சிறப்புத் திட்டச் செயலாக்கம் குறித்து கூர்ந்து ஆராய ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில், நகரக் கூட்டுறவு வங்கிகளும் இவ்வகைக் கடன்களை வழங்க கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் 4,371 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.17.74 இலட்சம் அளவிற்கு, மேலே குறிப்பிட்ட கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.

**கடன்கள் வழங்குவதற்கான நிலவள வங்கிகட்குப் புதிய வழிகள்**

பால்பண்ணை, ஆடுவளர்ப்பு, கோழிப் பண்ணை ஆகிய பல தரப்பட்ட காரியங்களுக்காகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் கீழ். மட்டும் இந்நாள் வரை நிலவள வங்கிகள் நாபார்டு உதவியுடன் கடன்களை வழங்கி வந்தன. நிலைமையை அனுசரித்து தொடக்க நிலவள வங்கிகள் பிற இனங்களுக்கும் பின்வருமாறு கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

**பண்ணை சாராப் பிரிவுகட்குக் கடன் வழங்கல்**

நாபார்டினால் அறிவிக்கப்பட்டுள்ள உதவித் திட்டத்தின்படி கிராமக் கைவினைஞர் கைத்திறனாளர்கள் மற்றும் சிறிய அளவிலான வாணிபம் செய்பவர்கட்குப் பண்ணைச் சாராக் கடன் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டு முதல் நிலவள வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. இவ்வகை நிதியுதவி கிராமமக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவியை விரிவடையச் செய்யவும் உதவுகிறது. நாபார்டினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காது நிலவள வங்கிகள் இத் திட்டத்திற்குக் கடன் வழங்கலாம் என்பதும், அவ்வாறு வழங்கப்படும் கடன் அளவில் 100 சதவீதம் அளவிற்கு நாபார்டு மறு நிதியுதவி செய்வதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத் திட்டத்தின் கீழ் தனி நபர் ஒருவருக்கு அதிகப் பட்சமாக ரூ.50,000 கடன் வழங்கலாம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதிற்கெதிராக 1991-92-இல் நிலவள வங்கிகள் ரூ.3.84 கோடி அளவிற்குக் கடன் வழங்கியுள்ளன.

உலகத்திலேயே மிகவும் மலிவான பொருள் அன்புதான், அது தன்னைப் பெறுபவனுக்கும் வழங்குபவனுக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.

—இங்கர்சால்

**விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் திட்டம்**

விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் பொருட்டு ஊக்கத்திட்டத்தினைச் செயல்படுத்த கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை எண். 231-இல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி கூட்டுறவுக் கடன்களைப் பெற்றுள்ள அனைத்துக் கடன்தாரர்களும் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களின் 1.7.1991 அன்றுள்ள தவணை தவறிய நிலுவையின் அசலை 30.6.1992-க்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். மேலும், 1.7.1991 முதல் 30.6.1992 வரை திருப்பிச் செலுத்த வேண்டிய எல்லா நிலுவைகளையும் திருப்பிச் செலுத்த வேண்டும். அந்த மாதிரியான விவசாயிகளுக்கு 1.7.1991 அன்றுள்ள தவணை தவறிய வட்டி அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசு ஊக்கத் தொகையாக வழங்கும் இந்த ஊக்கத் திட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்லாக் கடன்களுக்கும் பொருந்தும்., ஆனால் நகைக் கடன்கள் மற்றும் பண்ணை சாராக் கடன்களுக்கும் இத்திட்டம் பொருந்தாது.

இந்த ஆணை வழங்கப்படுவதற்கு முன்னர் அல்லது 1.7.1991-க்குப் பிறகு கடனாளிகள் 1.7.1991-இல் உள்ள தவணை தவறிய வட்டி மற்றும் அபராத வட்டியைத் திருப்பிச் செலுத்தி இருந்தால் அவர்களுக்கும் இந்த ஊக்கத் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 13 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தால் பயனடைவர் என எதிர் பார்க்கப்படுகிறது. மாநில அரசுக்கு இத்திட்டத்தினால் ரூ.69.07 கோடி செலவாகும்.

**கூட்டுறவுத் துறையின் முக்கியப் பணிகளின் முன்னேற்றம்**

கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகள் **விவசாயக் கடன்கள் வழங்குதல், நகைக் கடன்கள் வழங்குதல் பண்ணை சாராக் கடன்கள் வேளாண்மை இடுபொருள் விநியோகம் வேளாண் விளைபொருள் விற்பனை நுகர்பொருள் விநியோகம் மற்றும் கிடங்கு கட்டுதல் ஆகியவையாகும்.**

***1991-92-ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகள் அனைத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.***





# வனவளம் காப்போம்

வனச் செல்வங்களைப் பாதுகாக்கவும், வன வளத்தை மேம்படுத்தவும், தமிழக அரசு பல்வேறு முக்கியத் திட்டங்களைத் தீட்டி சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

வனத்தைப் பாதுகாப்போம்.
வனச் செல்வங்களைப் பாதுகாப்போம்
வனச் செல்வங்களைத் திருடுவோரைக்
கடுமையாகத் தண்டிப்போம்.

என்ற கோட்பாடுகளுடன் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் நிலப்பகுதி 1,30,057 சதுர கி.மீ. ஆகும். இதில் வனப்பகுதி 22,698.51 சதுர கி.மீ. ஆகும். தேசிய வனக்கொள்கைப்படி, குறைந்தது 33 சதவீதம் வனப்பகுதி இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கையில், தற்போதைய வனப்பகுதி சுமார் 17.45 சதவீதம் மட்டுமே ஆகும். பல்வேறு திட்டப் பணிகளுக்காக 1991-92-இல் ரூ.4,302.71 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பு, புதுப்பித்தல், உற்பத்தி, சமுதாயக் காடுகள், முன்னிலைக் காடுகள் போன்ற ஐம்பெரும் பிரிவுகளாக வனத்திட்டங்கள் பிரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. கீழ்க் கண்ட திட்டங்கள் வனத் துறையால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| மாநில மண் வளப் பாதுகாப்பு | ரூ.116.26 இலட்சங்கள் |
| மாநிலக்காடு வளர்ப்புத் திட்டம் | ரூ.3,334.11 இலட்சங்கள் |
| மத்திய அரசு பொறுப்பேற்பவை | ரூ.134.06 இலட்சங்கள் |
| மத்திய அரசு பொறுப்பேற்பவை (50:50 அடிப்படையில்) | ரூ.273.51 இலட்சங்கள் |
| தன்னாட்சி நிறுவனங்கள் — மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | ரூ.224.75 இலட்சங்கள் |
| மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் | ரூ.220.02 இலட்சங்கள் |
| மொத்தம் | ரூ. 4,302.71 இலட்சங்கள் |

**“வன வளமே சமுதாய வளத்துக்கும், நலத்துக்கும் அடிப்படையாய் விளங்குகிறது. வனத்துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் நம்முடைய வனவளம் காப்பாற்றப்படுகிறது.”**

1992-93-இல் ரூ.5,045 இலட்சம் செலவில் திட்டப்பணிகள் வனத் துறையால் செயல்படுத்தப் படும். 1991-92-இல் 44,000 எக்டேர் பரப்பில் காடு வளர்த்தல் 18,000 எக்டேர் பரப்பில் விமானங்கள் மூலம் விதைகளைத்



தூவுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. 1992-93-இல் 1,70,000 ஏக்கர் (68,000 எக்டேர்) பரப்பளவில் பல்வேறு வனத் தோட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

வனச் செல்வங்களைப் பாதுகாக்க நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், வானகங்கள் வாங்க ரூ.70 இலட்சம் 1991-92-இல் ஒதுக்கப்பட்டு அவைகளை வாங்குவதற்குரிய நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுதாய நலக்காடுகள் திட்டம் 1981-82 முதல் சுவிடன் நாட்டு உதவியுடன் மக்களோடு இணைந்த காடுவளர்ப்புப்பணிகளுக்காக தமிழகத் தில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மலைவாழ் மக்கள் நலத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள் ளன. புறம்போக்கு மற்றும் ஒதுக்கு நிலங்களில் மக்கள் பயன்படும் வகையில் கிராமப் பகுதி களிலும் சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. முதல் கட்டப் பணிகள் ரூ.57 கோடி முதலீட்டில் 1.38 இலட்சம் எக்டேர் பரப்பளவில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டப் பணிகள் (1988-93) ரூ.85.40 கோடி செலவில் காடு வளர்ப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புன் செய் நிலங்கள், வேளாண்மைக் காடுகள், மரப் பட்டாத் திட்டம், சமுதாய தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், இடைமுகத் தளக்காடு வளர்க்கும் திட்டம், விதைநாற்று உற்பத்தி விரிவாக்கத் திட்டம், ஆராய்ச்சி, பயிற்சி போன்ற பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

சந்தன மரக்கடத்தலைத் தடுப்பதற்காகப் பல் வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன. திட்டமிட்ட வனப்பாதுகாப்புப் பணி தொடங்கப்பட்டு 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 2,385 சந்தன மரக் கடத்தல் குற்றங்களைக் கண்டுபிடித்து ரூ.1,147.08 இலட்சம் மதிப்புள்ள 73¼ டன் சந்தனமரம் கைப்பற்றப்பட்டுள்ளது. ஏனைய வனக்குற்றங்கள் 1991- ஆம் ஆண்டு முடிய மொத்தம் 37,710 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.4|3 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. காடுகளில் திருட்டுத் தனமாக மரம் வெட்டுதலைத் தடுக்கும் பொருட்டு மொத்தம் 7 விறகு மண்டிகள் அரசால் அமைக்கப் பட்டுள்ளன.

1991-92-இல் 1,012 டன் சந்தனக் கட் டைகள் பொது ஏலத்தில் விற்கப்பட்டு ரூ.2,300 இலட்சம் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

வனக் குற்றங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட 618 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ஏப்ரல் மே மாதம் வரை 640 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் வனக்குற்றங்களுக் காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே காலக் கட்டத்தில் 20 நபர்கள் குண்டர்கள் சட்டத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1990-91-இல் சந்தனமரக் கடத்தல் குற்றத்திற்காக நான்கு பேர் மட்டுமே குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். 1990-ஆம் ஆண்டு இறுதியில் இத்துறையில் 320 வாகனங்கள் மட்டுமே





இருந்து வந்தன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் செலவில் 168 வாகனங்கள் (129 மோட்டார் சைக்கிள், 39 ஜீப்) போன்றவை வாங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுத் துள்ளது. 1992-93- இல் மேலும் சில வாக னங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வனத்துறையின கீழ் 3 வனக்கழகங்கள் செயல் பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் ரூ.60 கோடி அளவில் 7,800 ஏக்கர் பரப்பள வில் தேயிலை வளர்க்கும் திட்டம் வகுக்கப்பட்டு 1991-92-இல் 330 ஏக்கர் (131 எக்டேர்) நிலத்தில் தேயிலை நடப்பட்டுள்ளது. இதன் செயல்திறன் 2,450 இலட்சம் அளவிற்கு வளர்ந்து 1992-93-இல், 2,470 இலட்சம் அளவிற்கு அதி கரிக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

2. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் உயர் விளைச்சல் தரும் கூழ்மரத் தோட்டம் வளர்க்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. நபார்டு வங்கி கடனுதவி தர முன் வந்துள்ளது. இதன் செயல் திறன் இந்த ஆண்டில் 748 இலட்சம் அளவுக்கு வளர்ந்து 1992-93-இல் 860 இலட்சம் அளவுக்கு உயரும். 1991-92-இல் 12,875 ஏக்கர் (5,180 எக்டேர்) உயர் விளைச்சல் தரும் கூழ் மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு 1992-93-இல் 12,500 ஏக்கர் (5,000 எக்டேர்) அளவில் வளர்ச்சிப் பணி தொடங்கும்.

3. அரசு ரப்பர்க் கழகம் 1991-92-இல் 944 இலட்சம் அளவுக்குச் செயல்திறன் வளர்ந்து 1.056 இலட்சம் அளவுக்கு உயரும் நிலையில் வளர்ந்துள்ளது. ரப்பரின் விற்பனை விலை குறைந்ததால் ரப்பர் பொருட்களின் தேக்கம் உள்ளது. ஆயினும் அவற்றைச் சீர்திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாய் அதிகரிக் கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேற்கண்ட திட்டப் பணிகளுடன் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் 7 ஆண்டு காலத்தில் 45,000 எக்டேர் பரப்பளவில் வனத் தோட்டங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப் பட்டு 1991-92-இல் 5 தோட்டங்கள் நிறுவப் பட்டு நாற்றங்கால் அமைத்தல், உபகரணங்கள் வாங்குதல் போன்ற பணிகள் செயல்படுகின்றன. 45,000 எக்டேர் பரப்பளவில ரூ.117 இலட்சம் செலவில் தாழ்ந்த வனப்பகுதிகளில் வான்வழி விதைத் தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வண்டலூரில் வன ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு 1991-92-இல் ரூ.17.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு 1992-93-இல் மேலும் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**★ மக்களாட்சிச் சிறப்புக் கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழவேண்டுமெனில், நமக்குள் போட்டி பொறாமைகளை வித்திட்டு வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக்காப்பது ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமை ஆகும்.**

தேசிய வனக்கொள்கையைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் உள்ள வாழ்க்கைச் சூழலை மேம் படுத்த வனங்களையும் தரிசு நிலங்களையும் பசுமை யாக்குவதே அரசின் முழு முயற்சியாக இருக்கும். பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை முறைப் படுத்தி 10 ஆண்டுகளில் முடிப்பதன் மூலம் நமது திட்ட அணுகுமுறை சிறப்பாக அமையும்.

அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த நம் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டு அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றிற்கு நிலையான வருமானம் கிடைக்க பல்வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. கிராம மக்களுக்கு காடுகள் மூலம் நேரிடையாகவோ மறைமுக மாகவோ வேலைவாய்ப்புகள் கிடைக்கவழிவகை செய்யப்படுகின்றன. தனியார் நிலங்களில் பசுமைப் புரட்சி செய்யும் நோக்கில், சமூக காடுகளை வளர்க்கத்தேவையான தொழில் நுட்பம், விதைகள் வழங்கும் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. கோயில் நிலங்கள், நிறுவன நிலங்கள், சமூக நிலங்கள் போன்ற பகுதிகளில் காடுகள் வளர்க்கும் பணி சுவிடன் நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள் மூலமும் நபார்டு வங்கயின் உதவியுடனும் தேவை யான கடன் வசதிகள் தனியார்கள் பெற அரசு ஒத்துழைப்புத்தரும்.

எனவே, மிகுந்த அளவில் காடுகள் வளர்ப் பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளர்ந்து நாட்டுக்கும், குறிப்பாக கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும்.






## மாணவர் பக்கம்



### கானகம் தரும் பாடம்!

—இரா. இரகுபதி

கோடி கோடிப் பறவைகள்
காட்டில் வாழுது — அவைகள்
நாட்டில் வாழும் மனிதருக்குப்
பாடம் சொல்லுது!

இனிய இனிய தேனீக்கள்
கூடு கட்டுது — அது
இதய முள்ள மனிதருக்கும்
இனிமை ஊட்டுது!

அழகு முகாய்ப் பூச்செடிகள்
ஆட்டம் போடுது — நல்
ஆனந் தத்தை மனிதருக்கு
அள்ளி வழங்குது!

துள்ளித் துள்ளி அருவிகள்
தொடர்ந்து பாயுது — அரும்
தூய்மைதனை மனிதருக்குத்
துலக்கிக் காட்டுது!

கோப தாப விலங்குகளும்
கூடி மகிழுது — என்றும்
கூட்டு றவின் மேன்மையினைக்
காட்டி வாழுது!

### அறிவுச் சுடர்

★ **உலகத்திலேயே மிகவும் குளிரான பகுதி எது?**

ரஷ்ய நாட்டின் சைபீரியாவிலுள்ள ஓயம்யா கோன் என்ற கிராமம்.

★ **இந்தியாவில் பழமையான நிலக்கரிச் சுரங்கம் எங்கு உள்ளது?**

வங்காளத்தில் ராணிகஞ்ச் என்ற சுரங்கம்.

★ **பால்பாயிண்ட் பேனா யாரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?**

1937-ஆம் ஆண்டு, ஹங்கேரி நாட்டு லாஸ்லோ ஜோசப்பிரோ என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

★ **இந்தியாவிலேயே எந்த மாநிலத்தில் முதல் முதலாகக் கூட்டுறவு நகர வங்கி ஆரம்பிக்கப் பட்டது?**

தமிழ்நாட்டில்.

★ **இந்தியாவில் எத்தனைத் தேசியப் பூங்காக்கள் உள்ளன?**

47 பூங்காக்கள் உள்ளன.

★ **பருத்தி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

சீனா.

★ **கடலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

இந்தியா.

★ **ரப்பர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

மலேசியா.

கே. துரைதமிழ்ச்செல்வி,
ம. சந்தானம்,
அரசு ஆரம்பச் சுகாதார நிலையம்,
பழையனூர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.

## செயற்கைக் கோளில் இந்தியாவின் சாதனை!

இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் 'ஆரியபட்டா' 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் விண்வெளியில் செலுத்தப்பட்டது. சுமார் 360 கிலோ கிராம் எடையே கொண்ட இந்தச் செயற்கைக் கோள் முன்னாள் சோவியத் யூனியன் ஏவுகணையிலிருந்து செலுத்தப்பட்டது.

செயற்கைக் கோள் தயாரிப்பில் மற்ற நாடுகளுடன் போட்டி போடும் அளவுக்கு இந்தியா வளர்ந்திருக்கிறது. நமது முதல் செயற்கைக் கோள் 'ஆரியபட்டா' விண்ணில் செலுத்தப்பட்ட இந்த குறுகிய காலத்திலேயே இந்தியா சொந்தமாகவே செயற்கைக் கோள் தயாரிக்கும் முயற்சியில ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் பலநோக்குத் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் 'இன்சாட்-2ஏ' ஜூலை மாதம் தென் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்ச் கயானாவிலிருந்து விண்வெளியில் செலுத்தப்படவிருக்கிறது. இந்தச் செயற்கைக் கோளின் மொத்த எடை 1.9 டன் ஆகும்.

வெறும் 360 கிலோ கிராம் எடை கொண்ட ஆரியபட்டாவிலிருந்து இன்று 1.9 டன் எடை உடைய இன்சாட்-2ஏ தயாரிப்பில் வெற்றி கண்டிருப்பது, இந்தியா விஞ்ஞானத்துறையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

### இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட செயற்கைக் கோள்கள்:

ஆரியபட்டா - 360 கிலோ கிராம் - 1975 ஏப்ரல் மாதத்தில் சோவியத் யூனியனிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

பாஸ்கரா-1 444 " - 1979 ஜூன்
ரோகிணி - 35 " - 1979 ஆகஸ்ட்
ரோகிணி - 35 " - 1980 - ஜூலை
ரோகிணி - 32 " - 1981 - மே
ஆப்பிள் (Apple) - 650 - 1981 - ஜூன்
பாஸ்கரா-11 - 436 " - 1981 - நவம்பர்
ரோகிணி - 41.5 " - 1983 - ஏப்ரல்
சிராஸ் (SROSS) - 150 (( 1987 - மார்ச்
I RS - 1A - 975 " - 1988 - மார்ச்
SROSS - 150 " - 1988 ஜூலை
I RS - 1B - 975 " - 1991 - ஆகஸ்ட்
SROSS - 106 " - 1992 - மே

## அனுபவ மொழிகள்

நாம் எவ்வளவு செய்யப் போகிறோம் என்பது அல்ல முக்கியமானது; எவ்வாறு செய்யப் போகிறோம் என்பதே முக்கியம். அதிகமாகச் செய்வதைக் காட்டிலும், செய்வதைத் திருந்தச் செய்வதே பெருமை.

- ரஸ்கின்

வளமான காலத்திலே நண்பர்கள் தெரிந்து கொள்வது நம்மை; வறுமைக் காலத்திலே நாம் தெரிந்து கொள்வது அவர்களை!

- இங்கர்சால்

## மிகச் சிறிய மாவட்டம்

நாட்டிலேயே மிகச் சிறிய மாவட்டமான தென் காரோ குன்றுகள், ஜூன் மாதம் 18-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மாவட்டத்தில் மொத்த மக்கட் தொகை 62,354. இதன் தலைநகர் பெயர் பக்மாரா.

இந்த மாவட்டத்தில் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பில் 34 பேர் மட்டுமே வசித்து வருகிறார்கள். மொத்தம் 539 கிராமங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளன.

## நவீன ரக ஹெலிகாப்டர்

தொழில்நுட்ப ரீதியில் மிகவும் முன்னேறிய இலகுரக ஹெலிகாப்டர் ஒன்று நமது நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகில் இத்தகைய ஹெலிகாப்டரைச் சொந்தமாக வடிவமைத்துள்ள 2-வது நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகிறது. இதற்கு முன்பு இத்தகைய இலகுரக ஹெலிகாப்டரை வடிவமைத்த ஒரே நாடு அமெரிக்கா மட்டுமே.

இந்த ஹெலிகாப்டர் வடிவமைப்பின் மூலம் இந்தியா, விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் எந்த வளர்ச்சி அடைந்த நாட்டுக்கும் குறைந்தது அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

## துணுக்குகள்





## திருச்சி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமிருந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 22.6.1992 அன்று மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்றார்.

மனுக்கொடுத்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 546 நபர்களைத் தேர்ந்தெடுத்து 13.7.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். திருச்சியிலிருந்து அரசுச் செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாகத் தையல் இயந்திரம் 5 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 20 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 45 நபர்களுக்கும், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும், தமிழக அரசு கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் 10 பேர்களுக்கும், கண்பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கும், தாட்கோவின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 2 டிராக்டர்கள், 2 மினி வேன்கள், 3 லாரிகள், 2 சுற்றுலாச் சீருந்துகள் ஆகியவையும், நகர்ப்புற வேலைவாய்ப்புக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 50 நபர்களுக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 253 பேர்களுக்கு ரூ.2,500 முதல் ரூ.12,500 வரை ரூபாய் 13 இலட்சத்து 8 ஆயிரத்து 944 மானியத்துடன் இணைந்த கடனும், நிலப்பட்டா 5 நபர்களுக்கும், வீட்டு மனைப்பட்டா 50 நபர்களுக்கும், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான் 5 நபர்களுக்கும், முடநீக்கியல் சாதனம் 10 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க நிதி உதவி 10 நபர்களுக்கும், மூன்று சக்கர சைக்கிள் 5 நபர்களுக்கும், செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் இயந்திரம் 10 நபர்களுக்கும், ஸ்டெபிலைசர் டூல்ஸ் கிட் 10 நபர்களுக்கும், பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகங்கள் 28 பள்ளி மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்பட்டன.

மொத்தம் 546 நபர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். நலத்திட்ட உதவிகள் பெற்ற 546 நபர்களில் 368 பேர் பெண்களாவர். நலத்திட்ட உதவிகள் பெற வந்த 4 தாய்மார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 பெண் குழந்தைகளுக்குத் தனலட்சுமி, விஜயலட்சுமி, ராஜலட்சுமி, மகாலட்சுமி எனப் பெயர் சூட்டினார்.

# அநாதை!

-கவியரசர் கண்ணதாசன்



பதினாறு வருடங்கட்கு முன் நடந்த சம்பவம். நான் மூன்று வயதுக் குழந்தையாயிருந்தேன். என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் பரம ஏழைகள். அவர்களுக்கு நான் ஒரே பிள்ளை, ஆம்; என் வாழ்விலேயே பெருத்த மாறுதல் ஏற்படும் நாள், என் தாய் என்னைக் கையில் பிடித்த வண்ணம் தான் வேலை பார்க்கும் எஜமானின் வீட்டிற்குள் நுழைந்தாள். 'இந்தப் பையன்தான் அம்மா' என்று என்னை அவ்வீட்டு எஜமானனிடம் காட்டிக் கூறினாள்.

''பெயர் என்ன?'' என்று கேட்டாள் அந்த அம்மாள்.

''சுந்தரம்'' என்றாள் என் தாய். உள்ளே சென்று சில நிமிடங்கட்கெல்லாம் எஜமானி திரும்பி வந்தாள். கையில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் வைத்திருந்தாள். அதை என் தாயிடம் கொடுத்து என்னைக் கையில் பிடித்துக் கொண்டாள். என் தாய் ''அம்மா உங்க பிள்ளை மாதிரி வச்சுக்கணும்'' என்று கூறி என்னைப் பார்த்து அழுதாள்.

எஜமானி, ''ஏண்டி! உன் பிள்ளை வேறு என் பிள்ளை வேறா? இவனை நான் கடுமையா நடத்துவேன்னு நினைக்கிறியா?'' என்றாள்.

''அம்மா உங்க குணம் எனக்குத் தெரியாதா? பிறந்தா நல்ல இடத்திலே பிறக்கணும் இல்லேன்னாப் பிறக்கப்படாது. பிறந்து மூணு வருஷம் வரை வளர்த்து விட்டுப் பிரியறதுன்னா எந்தத் தாய்க்குத் தான் மனது சம்மதிக்கும்? உலகத்திலே எத்தனைப் பேர் பெரிய பெரிய பணக்காரங்கள்லாம் பிள்ளையில்லாமத் தவிக்கிறாங்க; பெத்தும் பெறாதவளாப் போகணும்னு இருக்கேம்மா - விதி' என்றாள்.

என் பக்கம் திரும்பி, ''சுந்தர் இவங்கதாம்பா இனி உனக்கு அம்மா! சொல்றபடி ஒழுங்காக் கேட்டுக்கிட்டு இருப்பா'' என்று அன்போடு அணைத்து முத்தமிட்டு விட்டு, பெரிய பாரத்தை இறக்கி வைத்து விட்டவள் போல் வெளியே சென்றாள்.

இரண்டு ஆண்டுகள் சென்றன; நான் அவர்களை அப்பா, அம்மா என்றே அழைத்து வந்தேன். அம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. நான் வந்த அதிர்ஷ்டம் தான் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். குழந்தை ரேவதி நட்சத்திரத்திலே பிறந்ததால் ரேவதி என்றே பெயரிட்டனர். ஆறு வயதில் என்னைப் பள்ளியில் சேர்த்தார்கள். பெற்றவர்களைப் பற்றிய எண்ணம் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. கஷ்டம் என்பதே தெரியாமல் வளர்ந்து வந்தேன். நான் முதலாவது பாரம் படிக்கும்போது ரேவதியையும் பள்ளியில் சேர்த்தார்கள். ஒரு நாள் எங்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைத்திருந்தார்கள். போய் விட்டுத் திரும்பி வந்தேன். என் அறையில் ரேவதி யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன். சுமார் பத்து வயதிருக்கும். ஒரு பெண் - நல்ல சிவப்பு என்று சொல்லிவிட முடியாது. மூக்கும் முழியுமாய்ப் பார்ப்பதற்கு அழகாயிருந்தாள்.

''யார் ரேவதி அது?'' என்றேன்.

''கமலி அண்ணா! கல்கத்தாவிலுள்ள அத்தையின் மகள்.''

''ஊஹூம்'' என்று சொல்லி விட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். பக்கத்து அறையில் அம்மா யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். ரேவதியிடமிருந்து அவர்தான் அத்தை என்று தெரிந்து கொண்டேன். அம்மா பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதிலிருந்து தான் முற்கூறிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். சில நாட்களுக்குப் பிறகு அத்தை மாமா எல்லோரும் கல்கத்தாவுக்குப் போய் விட்டார்கள். கமலியும் போய் விட்டாள்.

நான் காலேஜில் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் மாலை வேளை நானும் நண்பன் வாசுவும் பேசிக் கொண்டிருந்தோம். வாசு சொன்னான் ''சுந்தரம் நீ கேசவன் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவன் பெரிய குடிகாரன். உன் அப்பாவோடு கூட ஒரு நாள் சண்டை போட்டு விட்டான்.''

அன்று முதல் நான் கேசவனோடு அதிகம் பேசுவதில்லை. ஒரு நாள் பள்ளி முடிந்து வெளியே வந்தேன். கேசவன் வந்தான். ''சுந்தரம் வா கிளப்புக்கு போய் விட்டுப் போகலாம்'' என்று கூப்பிட்டான். தட்ட முடியவில்லை. போக மனமில்லாமல் போனேன். ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தோம்.

''இரண்டு கிளாஸ் ஒயின்!'' என்று உத்தரவிட்டான்.

''என்ன கேசவா! இது ஹோட்டல் என்று சொன்னாய்?''

'ஆமாப்பா, ஆமாம்! இது ஹோட்டல் தான். பிராண்டி ஹோட்டல். இன்று ஒரு நாள் சாப்பிட்டுத்தான் பாரேன்'' என்றான் கேசவன்.

''அப்படியானால் நான் போகிறேன்'' என்று எழுந்தேன்.

''வாட்ச்மேன்! இவனைப் பிடித்து வெளியே தள்ளு'' என்று உத்தரவிட்டான்.

காவல்காரன் என்னைப் பிடித்துத் தள்ளினான். தடுக்கி விழுந்தேன். முழங்காலில் சரியான காயம். ஆயினும் பெரிய கண்டத்திலிருந்து தப்பியது போன்ற உணர்ச்சி, கடமையைச் செய்து விட்டதில், சந்தோஷம். வேகமாக நடந்தேன். கேட்டைத் தாண்டும் போது திருடனைப் போல் அங்குமிங்கும் பார்த்தேன் நான் குற்றவாளியல்ல. ஆயினும் உண்மையறியா உலகத்தின் முன் நான் குற்றவாளிதானே? நான் சந்தேகப்பட்டது போல் என் தந்தை அந்த வழியே போனார். அது தான் காலேஜிலிருந்து வீட்டிற்குப் போகும் வழி. என்னைப் பார்த்துவிட்டார். கோபத்தோடு முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தார். நானும் வேகமாக ஓடி, ''அப்பா'' என்றேன். ஒன்றும் பதில் இல்லை. மறுபடியும் ''அப்பா!'' என்றேன், நான் களங்க மற்றவன். என்பதைக் கூற '' சீ...சீ...சீ...'' என்று சொல்லி

விட்டு வேகமாக நடந்தார். நான் நடையைச் சிறிது தளர்த்திக் கொண்டேன். ஏதோ ஓர் எண்ணம் தோன்ற வாசுவைத் தேடிச் சென்றேன். வாசு வெளியே போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது. மெதுவாக வீட்டை நோக்கி நடந்தேன். வீட்டின் அருகில் வந்ததும் நின்று உற்றுக் கேட்டேன். வாசு என்னைத் தேடி வந்தவன் அப்பாவோடு பேசிக் கொண்டிருந்தான்.

''மடப்பயல்! என்ன சொல்லியும் தெரியவில்லை. அந்தத் தடியனோடு சேர்ந்து குடிக்கக் கூடக் கற்றுக் கொண்டு விட்டான். நாயைத் தூக்கி நடு வீட்டில் வைத்தால்?'' இது அப்பாவின் குரல்.

வாசு ''இருக்காதே சார்! சுந்தரம் ஒரு நாளும் அந்த வேலைக்குப் போக மாட்டானே,''

''நான் கண்ணால் பார்த்தது பொய்யா?''

எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''நாயைத் தூக்கி...'' என்று எனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். ஒரு சிறு அமைதி. வாசு அப்பாவின் சந்தேகத்தைச் சிறிது தணித்திருக்கிறான். ஆனால் பூராவும் தணிவதற்குச் சாத்தியம் இல்லையே? மீண்டும் துக்கம். கண்களைத் துடைத்துக் கொண்டு அவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தேன். தந்தையின் கோபம் என்னைக் கண்டதும் எல்லை கடந்தது.

''சீ நாயே; திரும்ப என் முகத்திலே விழிக்கிறதுக்கு உனக்கு வெட்கமில்லே? போடா வெளியே பிச்சைக்காரப் பயலே!'' என்று கையை ஓங்கிக் கொண்டு வந்தார். வாசு என் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு, ''நீ ரூமிற்குப் போ சுந்தரம்'' என்றான். நான் அழுது கொண்டே அறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் விம்மி விம்மி அழுதேன்.

எழுதிய காகிதங்களை இழுப்பறைக்குள் வைத்து விட்டு மேஜையின்மேல் படுத்தவன் அயர்ந்து தூங்கி விட்டேன். ரேவதி வந்தாள். ''அண்ணா!'' என்றாள். கண் விழித்தேன். அவள் குரலில் ஒலித்த

**1943-44 வாக்கில் கவியரசர் கண்ணதாசனின் தொடக்க காலப் படைப்புகளில் ஒன்று 'அனாதை'. இக்கதை இதுவரை எந்தத் தொகுப்பிலும் சேரவில்லை.**

**கண்ணதாசன் தம் இளம் வயதில் ஜீவா நாரணதுரைக் கண்ணன் அவர்களோடு நல்ல தொடர்பு கொண்டிருந்தார். ஒரு கட்டுரையில் '(1946) ஜீவாவைத் தேடி தூணைமேடு சௌராஷ்டிரா நகருக்கு நடந்து சென்றேன்' என்று எழுதியுள்ளார்.**

**இக்கதை ஜீவா நாரண துரைக்கண்ணன் நடத்திய 'பிரசண்ட விகடன்' இதழில் மே 15, 1946-இல் வெளிவந்துள்ளது.**

**- தி.வ. மெய்கண்டார்.**

சகோதரபாசம் என் துக்கத்தைச் சிறிது குறைத்தது.

''ஒன்றுமில்லை ரேவதி'' என்று சொல்லிவிட்டு முகத்தைக் கழுவி விட்டுவந்தேன்,

'' அம்மா எங்கே ரேவதி?'' என்று கேட்டேன்.

'' நேற்று மழையில் நனைந்ததனால் சிறிது ஜுரம் அடிக்கிறது. ஹாலில் படுத்திருக்கிறாள். நான்தான் இன்று சமையல் செய்தேன் என்றாள். வேகமாக ஓடினேன் அம்மா அறைக்குள் ''அப்பா-அம்மா'' என்று முனகிக் கொண்டிருந்தாள்.

''அம்மா!'' என்றேன்.

''சுந்தரம்.... சாப்பிட்டாயா?'' என்றாள்.

''நான் சாப்பிடுகிறேன் அம்மா, நீ காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லையாமே? ரேவதியைக் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வரச் சொல்கிறேன். சாப்பிடுகிறாயா?''

''வேண்டாமப்பா! வாயெல்லாம் கசக்கிறது. சிறிது நேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். நீ போய்ச் சாப்பிடு.''

தொடர்ந்து வரும் துன்பங்களை எண்ணி எண்ணி நலிந்து கொண்டிருந்த உள்ளத்திற்குச் சாப்பாடு வேப்பங்காயாக இருந்தது... ''சரி!'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தேன். வாசு, கேசவனிடம் விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளப் போய் விட்டான்.

அன்று இரவு அம்மாவுக்கு உடம்பு சிறிது அதிகமாக இருந்தது. நான் டாக்டரை அழைத்து வந்தேன். அவர்வந்து பார்த்துவிட்டு மருந்து கொடுத்தார். ''நிமோனியா ஜுரம். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நாளைக் காலையில் வருகிறேன்.'' என்று சொல்லி விட்டுப் போனார். இரவு முழுவதும் பயத்துடனே கழிந்தது. காலை சுமார் ஐந்து மணிக்கு அம்மா ஏதோ பிதற்றினாள். நான் இதே நினைவாகப் படுத்திருந்தவன் சிறிது நேரம் சப்தம் கேட்டதும் விழித்துக் கொண்டேன். எழுந்து 'ஸ்விட்'சைப் போட்டேன். அவள் முகம் பார்வைக்கு விகாரமாயிருந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். வெறித்து வெறித்துப் பார்த்தாள். ரேவதியை எழுப்பினேன். ரேவதி விஷயம் புரியாமல் கத்தினாள். அப்பா ஓடி வந்தார். ஆனால் அதற்குள் அன்னை விடை பெற்றுக்கொண்டாள்!

விதியின் விசித்திர விளையாட்டில் இன்பமே துன்பமாக மாறும் பொழுது, துன்பத்தைத் தொடர்ந்து துன்பம் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது.

மறுநாட் காலை உறவினர்களுக்குக் கடிதங்கள் பறந்தன.

ஒருநாள் காலை வாசலில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. அதிலிருந்து அத்தை, மாமா, கமலி எல்லோரும் வந்து இறங்கினர். அத்தை மிகவும் வருந்தினாள்.

பத்து நாளுக்கு பிறகு ஒருநாள் என் கல்யாண விஷயமாகப் பூரண சம்மதம் என்று சொல்லி விட்டார். ஆனால் அத்தை மட்டும் சம்மதிக்கவில்லை.

''எத்தனையோ நல்ல பையன்களையெல்லாம் விட்டு விட்டு எங்கேயோ கிடந்த பிச்சைக்காரப் பயலுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சொல்கிறாயே அண்ணா?'' என்றாள் எனக்குக் கேட்கும்படியாக, அதற்காக எனக்கு வருத்தமே ஏற்படவில்லை. ''துக்கம் அதிகமாகும் போது அழத்தோன்றாது'' என்ற பெரியாரின் மொழி ஞாபகத்துக்கு வந்தது, நாற்காலியில் உட்கார்ந்து சிந்தனையைச் செல்லவிட்டுக் கொண்டிருந்தேன். அறைக் கதவு திறக்கப்பட்டதைக் கூடக் கவனிக்கவில்லை.

''அத்தான்!'' என்று ஒரு குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

''யாரைக் கூப்பிடுகிறாய்?'' நான் பிச்சைக் காரப் பயல் அல்லவா? எங்கேயோ கிடந்த பிச்சைக்காரப் பயலை உரிமை கொண்டாடுகிறாயே?'' என்றேன்.

''அத்தான்!'' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள். ''அத்தான்! அம்மா உங்களைப் பிச்சைக்காரன் என்றாள். நான் கொள்ளைக்காரன் என்கிறேன்''

''சொல்லம்மா, சொல். என் பிறப்பின் ரகசியமே அதுதானே?''

தனக்குத்தான் சொந்தமானவன் என்று நினைத்தவள் போல இடது கையைத் தோளில்வைத்து வலது கையால் முகத்தை நிமிர்த்திய வண்ணம் ''அத்தான்!'' என்றாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. 'கமலம்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தேன் என் துக்கமெல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது. அவள் முகத்தோடு என் முகத்தைச் சேர்க்கப் போகும் சமயம், அத்தையும் சம்மதித்து விட்டாள் என்பதைத் தெரிவிக்க ரேவதி ''அண்ணா!'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்தாள்.

''இதேதடா பூஜை வேளையில் கரடி புகுந்தது போல'' என்று நினைத்துக் கொண்டு 'என்ன சனியனே! என்ன வேண்டும்?'' என்றேன்.

''சனியனுக்குத் தானே! பிடித்துக் கொள்ள ஓர் அரசமரம் வேண்டும்'' என்றாள்.

''அதோ!'' என்று அப்பொழுது தான் வந்து கொண்டிருந்த வாசுவைச் சுட்டிக் காட்டினேன்.

''போ! அண்ணா!'' என்று கூறிவிட்டு ஓடி மறைந்தாள் ரேவதி.

நானும் வாசுவும் சிரித்தோம். கமலியும் சிரித்தாள். அன்னையின் படத்தில் செருகியிருந்த பூவும் சிரித்தது.

**—'இளந்தமிழன்' இதழிலிருந்து.**

சென்னையில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 448 குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதி உதவியும், தலா 5 கிலோ அரிசி, சேலை, வேட்டி ஆகியவைகளும் வழங்கினார் (13.7.1992).





# கோவை மாவட்டம் வளர்ச்சிப் பணிகள்!

கொங்கு மண்டலம் என்றும் கொங்கு நாடு என்றும் பழங்காலத்தில் கூறப்பட்ட கோவை மாவட்டம் தற்பொழுது பெரியார், நீலகிரி, கோவை என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகின்றது.

காடுகளை அழித்து தோட்டங்களை உண்டாக்கி வேளாண்மையில் ஈடுபட்ட கொங்கு நாட்டு மக்கள், வேளாண்மைக்கு நீர் ஆதாரம் குறைந்தபொழுது, நீருக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டி அதன் மூலம் கிணற்றுப் பாசனத்தைப் பெருக்கினார்கள். உழைக்கும் ஆர்வம் கொண்ட கொங்கு மண்டல மக்கள் கிணற்று நீரை மேலே கொண்டு வர மின்மோட்டார் மற்றும் பம்ப்செட்டுகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதனால் அதன் உபயோகம் அதிக அளவில் பெருகி, மின் மோட்டார் பம்ப்செட்டுகள் தயாரிப்பதிலும் ஈடுபட்டனர். அதன் மூலம் இப்பகுதியில் தொழில் வளர ஆரம்பித்தது.

கொங்கு மண்டலத்தின் கலசமாக விளங்குகின்ற கோவை மாவட்டம், நல்ல தட்பவெட்ப நிலையைக் கொண்டு விளங்குவதால் பருத்தி உற்பத்தியும், பருத்தி நூல் உற்பத்தித் தொழிலகங்களும் உருவாகின. இதனால் நூற்பாலைகளுக்குத் தேவையான எந்திரங்கள், உபரிப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களும் பெருக ஆரம்பித்தன.

தமிழக அரசு மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், பல்வேறு திட்டங்களையும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் வறுமையை ஒழிக்கவும், கிராம வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக நல்லபல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டுக்கு 710.90 மி.மீ. மழை பெய்ய வேண்டிய கோவை மாவட்டத்தில் 553.64 மி.மீ. மழையே கடந்த ஆண்டு பெய்துள்ளது. இது (-) 22.12 சதவிகிதக் குறைந்த மழையாகும். இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை மற்றும் வறட்சியைப் போக்க, தமிழ அரசு முதல் கட்டமாக ரூ.97 இலட்சம் ஒதுக்கி 200 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க உத்தரவிட்டது. இதில் 130 ஆழ்குழாய்க் கிணறுகள் கிராமப் பகுதிக்கும், 70 ஆழ்குழாய்க் கிணறுகள் நகர்ப் பகுதிக்கும் ஒதுக்கப்பட்டு மொத்தம் 196 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, தமிழக அரசு கோவை மாவட்டத்திற்கு ரூ.24 இலட்சத்தை ஒதுக்கி குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் கிராமப் பகுதிகளுக்கு மேலும் 32 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, இன்னும் ஒரு சில நாட்களில் முடிவடைந்து அவற்றை மக்கள் பயன்படுத்துவார்கள். மேலும் 80 ஆழ்குழாய்க் கிணறுகள் புதுப்பிக்க ரூ.29.60 இலட்சமும் ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பல்லடம், திருப்பூர், பொங்கலூர் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டும், தண்ணீர் கிடைக்காத பகுதிகளில் 39-க்கும் மேற்பட்ட லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

கோவை மாநகரைப் பொறுத்தவரை குடிநீர் வழங்குவது சிறுவாணி அணையாகும். நாம் எதிர்பார்த்த தென்மேற்குப் பருவ மழை பெய்யாமல் தாமதமாகி வருவதால் அணையில் நீர்மட்டம் உயரவில்லை. தற்பொழுது நீரின் அளவு 866.67 மீட்டர் ஆகும். இதில் குறைந்த பட்சம் 863.40 மீட்டர் வரையில் தான் அணையிலிருந்து நீர் எடுக்கலாம். அணையின் அதிக பட்ச நீர் அளவு 878.50 மீட்டர் ஆகும்.

கடந்த ஏழு ஆண்டுகளை விட இன்றைய நிலையில் இவ்வாண்டு தான் சிறுவாணி நீர் அளவு மிகக் குறைவாக உள்ளது. வழக்கமாக இதற்கு முத்திக்குளம், பட்டியாறு ஆறு, பம்பாறு, ஆணைக்கொரையாறு ஆகிய அருவிகளிலிருந்து நீர் வரும். இவ்வாண்டு இதன் மூலம் நீர் வரவில்லை. இப்போதுள்ள நீரின் அளவைக் கொண்டு இனிமேல் கோவை மாநகராட்சிப் பகுதிக்கு 51 எம்.எல்.டி. நீரும், சுற்றுப்புறப் பகுதிக்கு 9 எம்.எல்.டி. நீரும் 14.6.92 முதல் ஒருநாள் விட்டு ஒருநாள் மட்டும் பகுதி வாரியாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பருவமழை தவறியுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் இருக்கின்ற நீரின் அளவைக் கருத்தில் கொண்டு, நீரை வீணாக்காமல் அத்தியாவசியத் தேவைக்கு மட்டும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படிக், கேட்டுக் கொள்வதோடு, முறைகேடாகச் சிறுவாணி நீரை நேரடியாக எடுப்பது, தோட்டத்திற்குப் பாய்ச்சுவது போன்றவைகளைப் பறக்கும் படையினர் கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

இந்தியாவிலேயே 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடமும், தமிழகத்தில் கோவை மாவட்டம் முதலிடமும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் 100 சதவிகிதத்திற்கு மேல் நிறைவேற்றி கோவை மாவட்டம் சாதனை படைத்துள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 117 சதவிகிதமும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 123 சதவிகிதமும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக இந்த ஆண்டு தமிழக அரசு ரூ.4 இலட்சத்தை கோவைக்குப் பரிசாக வழங்கியுள்ளது. மேலும் தமிழகத்திலேயே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சாதனை படைத்ததற்காகவும், முதலிடம் பெற்றதற்காகவும் சுழற் கோப்பையைத் தமிழக அரசிடம் பெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

> ★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும் தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.
>
> - பெருந்தலைவர் காமராசர்.



சிறுசேமிப்பை எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டு 1991-92-இல் இலக்கான ரூ.49 கோடியை மிஞ்சி ரூ.52.64 கோடியைக் கோவை மாவட்டம் வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. இது 106 சதவிகிதம் ஆகும். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பரிசும் வழங்கியுள்ளார்கள். அதேபோல் இந்த ஆண்டிற்குக் கொடுக்கப்பட்டுள்ள ரூ.50 கோடி இலக்கைப் பொதுமக்கள் ஆதரவோடு கோவை மாவட்டம் எளிதில் அடையும் என்பதில் சந்தேகமில்லை. சிறுசேமிப்பில் சிறந்த சாதனை படைத்ததற்காக, கோவை மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ரூ.75 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி கோவை மாவட்ட நிர்வாகம் திருமூர்த்தி அணை சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ரூ.5 இலட்சமும், பொள்ளாச்சியில் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு ரூ.6 இலட்சமும், திருப்பூர், பல்லடம் பகுதியில் குடிநீர்க் குழாய் விரிவாக்கம் மற்றும் ஆழப்படுத்த ரூ.3.25 இலட்சமும், அண்மையில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு தினத்தன்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ராஜீவ் காந்தி நகருக்குச் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.3 இலட்சமும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.11 இலட்சமும் ஒதுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இத்தொகை மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

அரசு பதவியேற்றதும் கிராம மக்கள் நலம் பேணுகின்ற வகையில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் அறிவிக்கப்பட்டு ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டு இதன்மூலம் கோவை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் கிராமச் சாலைகள், தார்ச்சாலை, பள்ளிக் கட்டடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள், கிராமக் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சிறுபாசனக் குளங்கள் பராமரிப்பு போன்றவைகளுக்காகச் செயல்படுத்தப்படுகின்றது.

கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் போதிய மருத்துவ வசதிகள் பெறாமல் இருப்பதைக் கண்டு புதிய அரசு பதவியேற்றதும், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்' நல்ல நோக்கத்தோடு தமிழகம் தழுவிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் அனைத்து கிராம மக்களும் மருத்துவப் பரிசோதனை வசதி பெற்று வருகிறார்கள். தொடர் மருத்துவ வசதியும் செய்யப்படுகின்றது. கோவை மாவட்டத்தில் 461 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, அதன் மூலம் 2 இலட்சத்து 32 ஆயிரத்து 351 பேர் பயனடைந்துள்ளனர்.

தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் துறையில், தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதலிடத்



திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 368 பெண்கள் உட்பட 546 பேருக்கு ரூ.50 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 13.7.92 அன்று சென்னையில் வழங்கினார்.

திற்குக் [illegible] சீரிய முயற்சிக்கு ஆதரவாக, முன்னோடியாக, தொழில் புரட்சிக்கே வழி காட்டும் மாவட்டமாகத் திகழ்கிறது என்றே கூறலாம்.

தொழில்களைப் பெருமளவு தொடங்கி, .வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் முகமாக பொள்ளாச்சி, வால்பாறை, பல்லடம் வட்டங்கள் தொழிலில் பின்தங்கியவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கு தொடங்கும் தொழில்களுக்கு நிலையாக முதலீட்டின் 15 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. பின்னலாடை ஏற்றுமதி செய்யும் தொழில் முதலியவைகளைத் தனியாகத் தொடங்க திருப்பூர் அருகில் முதலிபாளையத்தில் 86.65 ஏக்கர் நிலப் பரப்பில் திருப்பூர் பனியன் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பாக முதல் கட்டமாக 157 தொழிற்கூடங்கள் கொண்ட. தொழிற்பேட்டைக்கு, சிட்கோ மூலமாக அரசின் சலுகைகள் பெற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திருப்பூர், புனியன் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு ரூ.1000 கோடி அளவில் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கின்றது. முதலிபாளையத்தில் தொடங்கப்பட்டுள்ள பனியன் தொழிற்பேட்டை மூலம் மேலும் அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கோவை மாவட்டத்தில் சுமார் 17,000 சிறுதொழில்கள் நிறுவனமும், 140 நடுத்தர, பெருந் தொழில்களும் இயங்கி வருகின்றன. 1991/92-ஆம் ஆண்டு 850 புதிய சிறுதொழில்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 8,300 தற்காலிகச் சான்றிதழ்கள் அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் தொழில் துறையில் தமிழகத்தின் பெருமையிலும், வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதைப் போல இப்பொழுது சுற்றுலாத் துறையில் வேகமாக முன்னேறி ஒரு சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற்று வருகிறது. கோவை வளர்ச்சிக்காக சுற்றுலா, நடப்பாண்டில் கோவை மாவட்ட நிர்வாகம் சிறுசேமிப்புச் சாதனையின் பொருட்டு வழங்கப்பட்ட பரிசுத் தொகையிலிருந்து ரூ.3 இலட்சம் ஒதுக்கி, பல்வேறு விதமாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

கோவை மாவட்ட நிர்வாகத்தின் சீரிய முயற்சியால் இன்று சுற்றுலாத் தலமாக்கப்பட்டிருக்கும் பகுதி பொள்ளாச்சி அருகில் உள்ள திருமூர்த்தி அணையாகும். அணையின் அடிவாரத்தில் அமைந்துள்ள புகழ்மிக்க கோயில் மற்றும் அருவியை இணைக்க இருப்புப் பாலம் ஒன்று தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் காட்டாறு போல் ஏற்படும் வெள்ளத்தால் பலர் மரணம் அடைந்துள்ளனர். இந்த ஆபத்தைப் போக்க தற்பொழுது ரூ.5 இலட்சம் செலவில் பாது காப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர உல்லாசப் பயணிகளுக்காக இந்த அணையில் 2 மோட்டார் படகுகளும் சமீபத்தில் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் தினசரி 200- லிருந்து 250 சுற்றுலாப் பயணிகள் பயனடைகின்றனர்.

தற்போது தனியார் நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் படகுத் துறை (போட் அவுஸ்) ஒன்று வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது. மேலும், சிறுவர்களைக் கவரும் வகையில் முதலைப்பண்ணை ஒன்றும், மான் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும், பயணிகள் தங்குமிடம், உணவு விடுதிகள், பேருந்து நிற்குமிடம் அமைப்பது, காவல் நிலையம் அமைப்பது போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜி.டி. மோகன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

## விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.


## இந்த இதழில்...


இந்தியக்குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா ... 2
மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழ்த் திரையுலகம் நடத்திய மாபெரும் பாராட்டு ... 4
பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா ... 10
தெரு விளையாட்டரங்கம் ... 11
மலட்டுத் தன்மை நீங்க ... 17
காவிரிப் பாசனப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி ... 21
ஆதிதிராவிடர் நலம் ... 23
சேலம் அரசு அருங்காட்சியகத்தில் இயற்கைப் பாதுகாப்புப் பயிற்சி முகாம் ... 24
நூல் நயம் ... 26
வனவிலங்குப் புகலிடங்கள் ... 27
கோவை மாவட்ட சமுதாய நலப்பணிகள் ... 31
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்: ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 33
படமும் செய்தியும் ... 34
கோவை, நீலகிரி மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் ... 36
சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 42
ஒலிம்பிக் போட்டி ... 43
மாணவர் பக்கம் ... 45
துணுக்குகள் 46
வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் அரசு 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆடித் திங்கள் - 17
மலர்:23 இதழ்:3
1-8-1992




தமிழரசு



# இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா

இந்தியத் திருநாட்டின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். 13.7.1992 அன்று நடைபெற்ற இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில், டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களும், எதிர்க்கட்சிகளின் சார்பில் பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் அவர்களும் போட்டியிட்டனர்.

டாக்டர் சர்மா அவர்கள் மொத்த வாக்குகளில் 64.78 சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடினார். பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் அவர்கள் 33.21 சதவிகித வாக்குகளைப் பெற்றார். செல்லாத வாக்குகள் 1.65 சதவிகிதம் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்குகளின் மொத்த மதிப்பு 10,26,188 ஆகும். டாக்டர் சர்மா அவர்கள் பெற்ற வாக்குகளின் மதிப்பு 6,75,864. பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் பெற்ற வாக்குகளின் மதிப்பு 3,46,485 ஆகும். செல்லாத வாக்குகளின் மதிப்பு 17,199.

**வாழ்க்கைக் குறிப்பு**

டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 1918-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் போபாலில் பிறந்தார். அவர் செயிண்ட் ஜான்ஸ் காலேஜ் (ஆக்ரா) அலகாபாத் பல்கலைக் கழகம், லக்னோ பல்கலைக் கழகம், ஃபிட்ஸ் வில்லியம் காலேஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம், லிங்கன்ஸ் இன், ஹார்வார்ட் சட்டக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

அவர் ஆங்கில இலக்கியத்திலும், இந்தியிலும், சமஸ்கிருதத்திலும், மாநிலத்திலேயே முதலிடத்தைப் பெற்று எம்.ஏ., பட்டங்களைப் பெற்றார். கேம்பிரிட்ஜில் சட்டப்படிப்பில் பி.எச்டி. பட்டம் பெற்றார். லக்னோ பல்கலைக் கழகத்திலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் சட்ட ஆசிரியராகப் பணியாற்றினார்.

அவரது சமூகப்பணிக்காக அவருக்கு லக்னோ பல்கலைக் கழகம் 'சக்ரவர்த்தி' தங்கப்பதக்கத்தைப் பரிசாக வழங்கியது. அவர் ஆந்திரம், பஞ்சாப், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பதவி வகித்தார். அவர் டெல்லிப் பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி பல்கலைக் கழகம், காந்தி கிராமம் ரூரல் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் வேந்தராக (Chancellor) ஆகப் பணியாற்றியுள்ளார்.

இவருக்கு விக்ரம் பல்கலைக் கழகம், போபால் பல்கலைக் கழகம், ஆக்ரா பல்கலைக் கழகம், ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் (திருப்பதி), தேவி அகில்யா விஷ்வ வித்யாலயா (இந்தூர்) ஆகியவை டாக்டர் ஆஃப் லாஸ் (Honoris Causa) பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது. ரூர்கே பல்கலைக் கழகம் 'Doctor of Social Science' என்ற பட்டத்தினையும், மொரீஷியஸ் பல்கலைக் கழகம் 'Doctor of Civil Law' என்ற பட்டத்தினையும் வழங்கிச் சிறப்பித்தன.

இவர் சர்வதேச விவகாரங்கள், மொழி, சட்டம், தத்துவம், கல்வி, கிராம வளர்ச்சி, மதங்களைப் பற்றிய ஆய்வு ஆகியவற்றில் தீவிர நாட்டம் கொண்டவர்.

இவருடைய கல்லூரி நாட்களில் ஓட்டப்பந்தயங்கள், படகு ஓட்டுதல், நீச்சல் ஆகியவற்றில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். லக்னோ பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குச் சிறந்த நீச்சல் வீரராக விளங்கினார்.

டாக்டர் சர்மா அவர்கள் 1940-இல் லக்னோவில் தம்முடைய வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். தீவிர சுதந்திரப் போராட்ட வீரரான இவர் விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டும், போபாலில் 'மர்ஜர்' இயக்கத்தில் கலந்து கொண்டும் சிறை சென்றார்.

1952-56-இல் போபால் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தார். பின்பு மத்தியப் பிரதேச அரசியல் அமைச்சராக விளங்கினார் (1956-67). மத்திய தொலைத் தொடர்பு அமைச்சராக 1974-77-இல் பதவி ஏற்றார்.

இவர் போபால் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் (1950- 52) மத்தியப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் (1967-68) விளங்கினார். இந்திய தேசிய காங்கிரஸின் பொதுச் செயலாளராக 1968-72-இல் பதவி வகித்தார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராக 32 ஆண்டுகளும் (1952-84) காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராக 20 ஆண்டுகளும், இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவராக இரண்டாண்டுகளும் (1972-74), போபால் சட்டமன்ற உறுப்பினராகவும் (1952-56) மத்திய பிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் (1956-71) நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1971-77, 1980-84) பதவி வகித்தார்.

டாக்டர் சர்மா அவர்கள் 1987-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப் பேற்றார்.

1980-இல் ஆஸ்லோவில் நடைபெற்ற நாடாளுமன்ற மாநாட்டில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கிச் சென்றார். ரஷ்யாவில் கொண்டாடப்பட்ட 40-ஆம் இந்திய விடுதலை நாள் விழாவில் கலந்து கொள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களை இவர் தலைமை தாங்கி அழைத்துச் சென்றார், இவர் ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதிய புத்தகங்கள் இவரது கூர்ந்த அறிவிற்கும், பழுத்த அனுபவத்திற்கும், சிறந்த ராஜ தந்திரத்திற்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## இந்தியக் குடியரசுத் தலைவர்கள்

டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 9-வது இந்தியக் குடியரசுத் தலைவராக 25.7.92 அன்று பதவியேற்றார். இவருக்கு முன் இப்பதவி வகித்த எட்டுத் தலைவர்கள் வருமாறு:

1. டாக்டர் இராஜேந்திர பிரசாத்
   26.1.1950 - 13.5.1962
2. டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்
   13.5.1962 - 13.5.1967
3. டாக்டர் ஜாகிர் உசைன்
   13.5.1967 - 3.5.1969
4. வி.வி. கிரி
   24.8.1969 - 24.8.1974
5. ஃபக்ருதீன் அலி அகமது
   24.8.1974 - 11.2.1977
6. நீலம் சஞ்சீவ ரெட்டி
   25.7.1977 - 25.7.1982
7. கியானி ஜெயில் சிங்
   25.7.1982 - 25.7.1987
8. ஆர். வெங்கடராமன்
   25.7.1987 - 25.7.1992



★ குடி என்பது வளர்ந்து கொண்டே வரும் ஒரு சமூகத் தீமை.

★ குடிப்பது ஒரு கெட்ட பழக்கம் என்பதைவிட, ஒரு நோய் என்றே அதைச் சொல்ல வேண்டும்.

## குடியரசுத் தலைவர் மாளிகை

புதுடெல்லியில் உள்ள மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகையான 'ராஷ்டிரபதி பவன்' ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது ஆங்கில அரசுப் பிரதிநிதிகள் (Viceroys) தங்குவதற்காக இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டடக் கலைச்சிற்பி சர் எட்வின் லுடியென்ஸ் என்பவரால் கட்டப்பட்டது.

சிறப்புமிக்க இந்த வைஸ்ராய் மாளிகை 17 மில்லியன் பவுண்டு மதிப்பீட்டில் (இன்றைய இந்திய ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 70 கோடி ரூபாய்) கட்டப்பட்டது. இந்த மாளிகையைக் கட்டி முடிக்க 17 ஆண்டுகள் பிடித்தன. முதன்முதலாக இந்தப் பிரமாண்டமான மாளிகையில் குடியேறினார் இர்வின் பிரபு (1931).

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த வைஸ்ராய் மாளிகை அரசினர் இல்லம் என்று அழைக்கப்பட்டு, பின்னர் 1950-இல் இந்தியக் குடியரசாகப் பிரகடனம் படுத்தப்பட்ட பிறகு, இந்த அரசினர் இல்லம்.

'ராஷ்டிரபதி பவன்' என்று பெயரிடப்பட்டு குடியரசுத் தலைவர் மாளிகையாக ஆக்கப்பட்டது.

'ராஷ்டிரபதி பவன்' 4 மாடிகளுடன் 340 அறைகளைத் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய பிரமாண்டமான மாளிகையாகும். இந்தப் பிரமாண்ட மாளிகையின் நிலப்பரப்பு மட்டும் சுமார் 200,000 சதுர அடியாகும்.

நன்றி 'இந்து'.



# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திரையுலகம் நடத்திய மாபெரும் பாராட்டு விழா !

**தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:**

திரை உலகின் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றாகக் கூட்டி, நேசக்கரம் நீட்டி, பாசமழை பொழிந்து, தென்னகத் திரை உலகமே திரண்டெழுந்து, சிறப்புமிக்க ஒரு விழாவை எனக்காக எடுத்து, என்னைப் பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறீர்கள். எல்லாச் சிறப்பும் பொருந்துகிற வகையில், இந்த விழாவினை எடுக்க முனைந்து, வெற்றி கண்டிருக்கிறீர்கள்.

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், இத்தனையும் இணைந்த முத்தமிழ் விழாவாக இவ்விழாவினை ஆக்கியிருக்கிறீர்கள்.

சிறிது நேரத்திற்கு முன், தென்னகத் திரை உலகில், தனது இசையின் மூலம் நிரந்தர இடம் பெற்றுள்ள, திரு எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் இசைக் குழுவினரின் இசை மழையில், நாம் நனைந்து சொக்கிப் போனோம். பிறகு நாடகத் தமிழின் எழுச்சியினைக் கண்டு களித்தோம். நடனத்தின் வனப்பில் மூழ்கிப் போனோம். பல் சுவை நிகழ்ச்சிகளைப் பார்த்துத் திளைத்தோம். அதை அடுத்து, இயற்றமிழை எடுத்துக் காட்டும், பலரின் அருந்தமிழ்ப் பாராட்டுகளை அள்ளிப் பருகினோம்.

இவையெல்லாம் போதாது என்று பூர்ண கும்பமிட்டு, பொன்னாடை போர்த்தி, பூமாலை அணிவித்து, நினைவுப் பரிசுகளை வழங்கி என்னைப் பாராட்டி, சீராட்டி, அரசு சிம்மாசனத்தில் அமர்த்திப் போற்றியிருக்கிறீர்கள். கடந்த காலத்திலிருந்து இன்றைய நாள்வரை, பலரால் நான் பாராட்டப் பெற்றேன் என்றாலும்கூட, இன்றைக்கு எனக்குக் கிடைத்த பாராட்டு, ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இன்றைய பாராட்டு என் தாய் வீட்டுப் பாராட்டு! என் குடும்பத்தினர் கொடுத்த பாராட்டு!!

இப்படி நான் சொல்லுவதற்குக் காரணம், என்னை ஆளாக்கி, தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி, ஏறத்தாழ 18 ஆண்டுக் காலம், வாழ்வும், வளமும் அளித்த அரும்பெரும் திரை உலகம், என் தாய் வீடு என்றால், அது பொருத்தம்தானே!

இன்றைக்குத் தன் குலக்கொடி, தனிப்பெரும் கோலோச்சும் தன்மை கண்டு, வியந்து பாராட்டி, உளமார நீங்கள் மகிழ்வதை என்னால் காண முடிகிறது, உணர முடிகிறது. இந்த நன்னாளை, நலம் மிக்க பொன்னாளை, எண்ணி எண்ணி மகிழ்கிறேன். எனக்கு இப்படி ஒரு மாபெரும் பாராட்டு விழாவைத் திரை உலகமே திரண்டு வந்து, அதன் அனைத்து அங்கங்களும் ஒன்றாக இணைந்து, எடுப்பும், சிறப்பும் மிக்க ஒரு விழாவாக, இப்படி நடத்தும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இவ்வாறு என் மீது அன்பைப் பொழிந்து, என்னைப் பெருமைப்படுத்திய, கலை உலகச் சகோதர, சகோதரிகளுக்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் மிகச் சிறப்பாக, கலை நிகழ்ச்சிகளை அமைத்து, நடத்திய கலை விற்பன்னர்கள் அனைவருக்கும், என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த விழாவில் கலந்து கொண்டு, வாழ்த்துரைகள் வழங்கிய திரைப்பட உலகின் சகோதர சகோதரிகளுக்கு, என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலர்ந்த முகத்தோடு, தன் வீட்டுப்பிள்ளை தரணி ஆள்கின்றதே என்ற பெருமையோடு, இவ்விழாவிற்கு விரும்பி வந்து, நிறைந்த நெஞ்சோடு, என்னை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு மாபெரும், மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பைத் தந்த அனைவருக்கும், என் உளமார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்குகிறேன்.!

நான் திரை உலகில் காலடி எடுத்து வைத்த நிகழ்ச்சி பலருக்குத் தெரியாது. அந்த நினைவை உங்களுடன் இந்தத் தருணத்தில் பகிர்ந்து கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். நான் Bangalore, Bishop Cotton Girls' High School-இல் படித்துக் கொண்டிருந்த பொழுது, கோடை விடுமுறைக்காக, என் தாயாருடன் ஒரு முறை சென்னை வந்தேன். அப்பொழுது எனது தாயார் 'ஸ்ரீசைலம் மகாத்மியம்' என்ற கன்னடத் திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அன்று இரவு படப்பிடிப்பிற்காக, நான் என் தாயாருடன் ஸ்டுடியோவிற்குச் சென்றேன்.

அன்றைய தினம் அந்த புராணத் திரைப்படத்தில், ஒரு குழந்தை நட்சத்திரம் பார்வதி போல வேடம் அணிந்து நடிக்கும் காட்சி, படமாக்கப்படுவதாக இருந்தது. எல்லோரும் படப்பிடிப்பிற்காக இரவு 9 மணி முதலே தயாராக இருந்தனர். ஆனால் இரவு 10 மணி ஆகியும், அந்தக் குழந்தை நட்சத்திரம் வரவில்லை. படத் தயாரிப்பாளரும், இயக்குநரும் பதட்டம் அடைந்தனர். அன்று படப்பிடிப்பு ரத்தானால், ஏற்படக் கூடிய வீண் நஷ்டத்தையும் எண்ணிக் கலங்கினர். குழந்தை நட்சத்திரத்திற்கு, உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்றும், அவர் படப்பிடிப்பிற்கு வரமுடியாது என்றும் செய்தி வந்தது.

என்ன செய்வது என்று திகைத்து நின்ற அந்தத் தயாரிப்பாளரும், இயக்குநரும், என்னைப் பார்த்தனர். என் தாயாரை அணுகி, அந்தப்பார்வதி வேடத்தில் என்னை நடிக்க அனுமதிக்குமாறு கோரினர். அவர்களது சிரமங்களை உணர்ந்த என் தாயார், அவர்களுக்கு அப்பொழுது உதவும் எண்ணத்துடன், என்னை அன்று நடிக்க அனுமதித்தார்கள். பார்வதி வேடம் அணிந்து, குழந்தை நட்சத்திரமாக அன்று நடித்ததுதான், நான் திரை உலகில் எடுத்து வைத்த முதல் அடி. அப்பொழுது எனக்கு வயது 7. ஒரே ஒரு காட்சியில் மட்டும் நடிப்பதாக இருந்த நான், நன்றாக நடித்ததைக் கண்ட தயாரிப்பாளர் எனக்காக ஒரு பாடல் காட்சியையே புதிதாக அந்தப் படத்தில் அறிமுகப்படுத்தி, என்னையே அதில் நடிக்க வைத்தார்.

அதன் பின்னர், திரைப்படங்களில் நடிக்கும் எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. ஏனெனில், நான் சட்டம் படித்து வழக்கறிஞர் ஆகவேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாதவாறு எனக்கு 'Chinnatha Gombe' மற்றும் 'வெண்ணிற ஆடை', ஆகிய திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபின், என் வாழ்க்கைப் பாதையே மாறி விட்டது. அதன்பின், படிப்படியான என்னுடைய வளர்ச்சி, மற்றும் பல்வேறு கால கட்டங்களில், எனது திரை உலக உயர்வுகளைத்தான் நீங்கள் நன்கு அறிவீர்களே!

திரை உலகம், மற்றவர்களைவிட எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்துள்ள மகத்தான நன்மையை, இந்த நல்ல நேரத்தில் நினைவு கூர்வது, எனது தலையாய கடமையாகும். எனது இன்றைய உயர்விற்குக் காரணமான, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை, எனக்கு அறிமுகம் செய்து வைத்த, இச்சீர்மிகு திரை உலகை, நான் எப்படி மறக்க முடியும்? எனக்கு முதன் முதலாக அறிமுகத்தையும், புகழையும், பொருளையும், பெருமையையும் ஈட்டித் தந்த, இந்தத் திரை உலகை, நான் என் வாழ்நாளில் எப்போதும் மறக்க மாட்டேன்.



**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தமிழ்த் திரையுலகம் மாபெரும் பாராட்டு விழாவை நடத்தியது.

25.7.92 அன்று மாலை, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சிறப்பிக்கும் சீர்மிகு விழா தொடங்கியது.

மாண்புமிகு அமைச்சர்கள், தமிழ்த் திரையுலக நட்சத்திரங்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் மண்டபத்தில் குழுமியிருக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபை, பல்வேறு திரைப்படச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களை மேடைக்கு அழைத்து வந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கையில் அமர்ந்ததும், மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெற்றது. இதையடுத்து பானுப்பிரியாவின் நடனமும், கவுண்டமணி-செந்தில் மற்றும் எஸ்.வி. சேகர், சின்னி ஜெயந்த் ஆகியோர் நடித்த நாடகமும் நடைபெற்றன.

தொடர்ந்து, தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச்சபையின் தலைவர் திரு. ஏ. ரமேஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரையுலகின் சார்பில் அவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பின்னர் திரு. டி.வி.எஸ். ராஜூ, திரு. டி. ராமானுஜம், திரு. ஜி.வி., திரு. எம். சரவணன், திரு. எல். சுரேஷ், திரு. ராதா ரவி, திரு. மோகன் காந்திராமன், திரு. எம். பக்தவச்சலா, திரு. சங்கரன் நாயர் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்.

திருவாளர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், கே. பாக்கியராஜ், ஏ.எஸ். பிரகாசம், ஸ்ரீதர், கே. பாலாஜி, பிரபு, கார்த்திக், பாரதிராஜா, விஜயகாந்த், பி. வாசு, எம்.என். நம்பியார், முக்தா சீனிவாசன், சத்யராஜ், டாக்டர் கே. ஜக்கையா (முன்னாள் எம்.பி.) ஏ.சி. திருலோகசந்தர், பி. மாதவன், டி. ராமானுஜம், திருமதி எம்.என். ராஜம், திருமதி பண்டரிபாய், திருமதி மனோரமா, ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பின்னர், சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில், தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் செயலர் திரு ராமனாதன் நன்றி நவின்றார்.

- என். இளங்கோ.

**திரை உலகில் உள்ள அனைத்துக் கஷ்ட நஷ்டங்களையும், ஏற்ற தாழ்வுகளையும், நான் அனுபவத்தாலேயே அறிந்தவள். இந்தத் திரை உலக வாழ்வில், எனக்குக் கிடைத்த பாடம், படிப்பினை, அனுபவம், அறிவு அனைத்தும், இன்றைக்கு நான் எடுத்திருக்கும் பொறுப்புக்கு, அடிப்படைகளாகவும், அரண்களாகவும் நிற்கின்றன என்றால், அது மிகையாகாது.**

அந்தக் காலகட்டத்தில், எனக்கு ஆதரவு நல்கிய அனைத்துப் பெரியோர்களும், என் மனதில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ளார்கள். குறிப்பாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் சேர்ந்து நான் நடித்ததும், அவர்களின் நிழலாக நான் நின்றதும், என் மனத்திரையில் நீங்கா நினைவுச் சின்னங்களாகும். எனது ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு என்னைத் திரை உலகில் வழி நடத்திச் சென்றார்.

அதன்பின் அரசியலுக்கும் வா என்று ஆணையிட்டு, அழைத்துச் சென்றார். இன்றைய எனது இந்த உயர்விற்கு, அன்றே அடித்தளம் அமைத்தார். அவரிடம் அரசியல் பாடம் பயின்ற நான், அவர் சுட்டிக் காட்டிய வழியில், அவரது அடிதொடர்ந்து, இன்றைக்குத் தமிழகத்தை வழி நடத்திச் செல்லுகின்ற, ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுள்ளேன் என்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

ஏழை எளியோரை இனங்கண்டு, அவர்களுக்கு வேண்டியதை விரைவில் செய்து கொடுக்க, தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசுதான், எங்கள் அரசு. சமுதாயத்தின் பல்வேறு சாரார்களின் குறை களைந்து, நிறை செய்வதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையாகும். இந்தத் தத்துவங்களை உள்ளடக்கிய எங்கள் அரசு, ஆட்சிக் கட்டிலில் ஏறிய உடனேயே சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் அழைத்து, நேரடியாக அவர்தம் குறைகளைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகள் எடுத்ததை, நீங்கள் நன்கறிவீர்கள். தொழிலதிபர்களை அழைத்துப் பேசினேன்; தொழிலாளர் குறை கேட்டு அறிந்தேன்; வேளாண் பெருங்குடி மக்களின் வெவ்வேறு கோரிக்கைகளைத் தெரிந்து கொண்டேன். மாணவர், ஆசிரியர் பிரச்சினையைக் கேட்டறிந்தேன்; பொதுமக்களை வாரந்தோறும் சந்தித்து வருகிறேன். இதேபோல, நான் திரை உலகப் பிரமுகர்களையும் அழைத்துப் பேசினேன். அதைத் தொடர்ந்து, உங்களின் கோரிக்கைகளை ஆராயுமாறு, தலைமைச் செயலாளருக்கும், உள்துறைச் செயலாளருக்கும், ஆணை பிறப்பித்தேன்.



தமிழகத் திரைப் படத்துறையின் வளர்ச்சியில், மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ள எங்கள் அரசு, விரைவில் சென்னை தரமணியில், 'Film City' என்ற திரைப்பட நகரை நிர்மாணிக்கும். அதன் கால்கோல் விழா அண்மையில் நடைபெற்றதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். ஓராண்டுக் காலத்திற்குள், இந்தத் திரைப்பட நகரைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உருவாகி வரும் இந்தத் 'திரைப்பட நகர்', திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படுகிறது. இந்தத் திரைப்பட நகரில், ஒரு திரைப்படம் எடுப்பதற்கு என்னென்ன வசதிகள் தேவையோ, குறிப்பாகப் படப்பிடிப்புத் தளங்கள், பல்வேறு திரைப்படங்களுக்கும் பயன்படுத்தக் கூடிய பொது இடங்களான, ரயில்வே நிலையம், விமான நிலையம், பூங்கா, நீச்சல்குளம், அங்காடிகள், காவல் நிலையம், கோயில்கள், ஆலயங்கள், மருத்துவமனை, போன்ற அனைத்தையும் தத்ரூபமாகக் காட்டக்கூடிய அமைப்புகளும், மற்றும் படப்பிடிப்பு அரங்கம், மறு ஒலிப்பதிவு - அதாவது Re-recording செய்யும் அரங்கம், வீடியோ அரங்கம், போன்ற அனைத்து வசதிகளும் கொண்டதாய் விளங்கும். சர்வதேச அளவிற்குத் தரம் வாய்ந்த, தேவையான வசதிகளை இந்தத் திரைப்பட நகரில் தருவதே எங்களது குறிக்கோள் என்பதை, உங்களிடையே தெரிவித்துக் கொள்வதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இன்றைய திரை உலகத்தின் மாபெரும் பாதிப்பாக, அச்சுறுத்தலாக, கேபிள் டி.வி., வீடியோ இருந்து வருவதை, திரை உலகம் நன்கறியும். இந்தப் பாதிப்பிலிருந்து திரை உலகத்தைப் பாதுகாக்க, இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழகத்தில்தான், கேபிள் டி.வி., வீடியோ மூலம் திரைப்படம் காட்டுவதை ஒழுங்குபடுத்தச் சட்டம் நிறைவேற்றியுள்ளோம் என்பதை, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.**

தொழில்களிலேயே திரைப்படத் தொழில் மிக மிக நுண்ணியது; மக்களை ஈர்க்கும் சாதனங்களில் மகத்தானது; வலிமை மிக்கது. இதில் முத்தமிழ் உண்டு; கண்ணுக்கினிய காட்சி உண்டு; காதுக்கினிய கானம் உண்டு; அறிவுக்கினிய கருத்து உண்டு. திரைப்படம் ஒரு அரிய, சிறந்த கலை. உள்ளதை உள்ளபடி சொல்லுவது சொல்லுவது அறிவியல் - உள்ளதை உணர்ந்தபடி சொல்லுவது கலை. அறிவியல் மூளைக்கு இன்பமூட்டுவது; கலை இதயத்திற்கு இன்பமூட்டுவது. அதனால் தான், கலைக்கு என்றுமே வலிவு அதிகம். திரைப்படக்கலை, எல்லோரையும் எளிதில் சென்றடைவதால், இதில் சொல்லப்பட்ட கருத்து, நீதி, நெறி, படிப்பினை, பலருக்குப் பாடமாக அமைகிறது.

திரைப்படம் ஒன்றினை உருவாக்குவது என்பது, எத்தனைக் கடினமான காரியம் என்பதை நான் அறிவேன். நடிகர்கள், நடிகைகள், இயக்குநர், கதாசிரியர், வசனகர்த்தா, இசை அமைப்பாளர்,



பாடல் ஆசிரியர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், எடிட்டர், போன்ற பல்வேறு கலைஞர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், அவர்களது உதவியாளர்கள் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்து, ஒருமுகமாக ஒத்துழைத்தால் தான், ஒரு தயாரிப்பாளர் திரைப்படத்தை முடித்து, வெற்றிகரமாக வெளியிட முடியும். தனிப்பட்ட பலரின் திறமைகளை, ஒன்றாக இணைத்து உருவாகும் திரைப்படம், ஒவ்வொருவரின் முத்திரையைத் தன்னகத்தே கொண்டுதான். வெளி வருகிறது.

எனவே, ஒற்றுமை என்பது, திரைப்படத் துறைக்கு மிக மிக அவசியமானது. திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரை அரங்கு உரிமையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர், அனைவரும் ஒரு முகமாகச் செயல்பட வேண்டும். அவர்களுக்குள் விலகல், விரிசல் கூடாது. ஒருவருக்கு ஒருவர் பனிப்போரில் ஈடுபடக் கூடாது. Conflict of interest என்பதை நீக்கி, Commonality of interest என்பதை வளர்த்துக்கொண்டு, செயல்பட வேண்டும். இது இயலாவிட்டால், ஒருவருக்கொருவர், 'நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற நெறிப்படி, உதவி செய்யாவிட்டாலும், உபத்திரமாவது செய்யாமல் இருக்க வேண்டும்.

திரைப்படத் தொழிலின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், இது மிக மிக அவசியமான ஒன்றாகும்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவரும், மற்றவர்களும், வெவ்வேறு மட்டங்களில் இந்தத் தொழிலுக்கு எற்பட்டிருக்கின்ற அச்சுறுத்தல்களையும், ஆபத்துக்களையும், என்னிடத்தில் பல்வேறு சமயங்களில் விளக்கிக் கூறி இருக்கிறார்கள். எழுத்து வடிவத்திலும், கோரிக்கைகளாகக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், திரைப்படத் தயாரிப்



**மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார் (22.7.92)**

பாளர்கள் சார்பாக, விநியோகஸ்தர்கள் சார்பாக, திரையரங்கு உரிமையாளர்கள் சார்பாக, திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சார்பாக, ஃபெடரேஷன் மூலமாக, அதுவும் 24 கிராஃப்ட்ஸ் (Crafts) தொடர்பாக, எழுப்பப்பட்ட கோரிக்கைகள், பிரச்சினைகள், குறைபாடுகள், இடர்ப்பாடுகள், எல்லாம் அரசு மட்டத்தில் ஆராயப்பட்டன. என்னுடன் நேரடியாக விவாதிக்கப்பட்டன. நீங்கள் கேட்பதை எல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்ற மனம் எனக்கு இருந்தாலும், வரையறுத்த வருவாய்க்கு ஆட்பட்ட அரசிடம், தற்போது போதிய பணம் இல்லாததால், உங்களின் ஏக்கத்தால் ஏற்பட்ட தாக்கத்தை, என்னால் எவ்வளவு தூரம் ஈடேற்றி வைக்க முடியும் என்று தெரியவில்லை. இருப்பினும், எல்லோருக்கும் எல்லாவற்றையும் செய்யத் துடிக்கும் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு, உங்களை நிச்சயமாக ஏமாற்றாது.

திரைப்படத் தயாரிப்பில், பெரிய முதலீடு செய்து பிரபல நடிகர்களை வைத்து பிரம்மாண்டமான தயாரிப்புகளைச் செய்யும் பெரும் முதலாளிகளும்; சிறு முதலீடு செய்து, நிறையப் படங்களைத் தயாரிக்கும், சிறு சிறு தயாரிப்பாளர்களும் உண்டு. ஏறத்தாழ 95 சதவிகிதத்திற்கு மேல் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் சிறு சிறு பட முதலாளிகளின் பெரு முயற்சிதான் என்பதை, நான் நன்கறிவேன். இவர்களை நம்பி, பல இலட்சக் கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள, இச்சிறு முதலாளிகள் தான், திரைப்படத் தொழிலின் இதயத் துடிப்பாக இயங்கி வருகின்றனர். தொழில் ரீதியாகப் பல்ல கஷ்ட நஷ்டங்களை, நாள்தோறும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். படத் தயாரிப்பில் ஏற்படும், அளவுக்கு மீறிய செலவினங்கள், அளவுக்கு மீறிய வட்டி விகிதம் போன்றவற்றால், பொருளாதார மூச்சுத் திணறலில், சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உதவ, அரசு ஏற்கெனவே ஒரு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை, செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் சிறு முதலீட்டுப் படங்கள் ஒவ்வொன்றுக்கும், 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், இந்த உதவித் தொகையை அரசு, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் என்ற நல்ல செய்தியை, உங்களுக்குச் சொல்லுவதில் உவகை அடைகிறேன். மேலும், இந்த ஆண்டு முதல், 50 படங்களுக்குக் குறையாமல், தகுதியின் அடிப்படையில், இவ்வுதவித் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த உதவித் தொகையும், திரைப்படம் திரையிடப்பட்ட 3 மாதங்களுக்குள் வழங்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அரசுக்குச் சொந்தமான இடங்களில், வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்க Out-door shooting செய்ய, பல்வேறு துறைகளைத் தனித்தனியே அணுகி, அனுமதி செய்ய தற்போதைய முறையை மாற்றி, Single Window System மூலம், அதாவது, ஒரே இடத்தில் அனைத்துத் துறைகளின் அனுமதியைப் பெறும் வகையில், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரையரங்கு உரிமையாளர்கள், திரையரங்கு நுழைவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்கவேண்டும் என்றும், தற்போதைய சூழ்நிலையில் திரையரங்கைப் பராமரிப்பதற்கு அதிகச் செலவு ஏற்படுகிறது என்றும், ஒரு சில மாநிலங்களில் இருப்பதைப்போல், ஒரு சிறு தொகையைப் பராமரிப்புக்கெனத் திரையரங்குகள் வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்றும், நீண்ட நாட்களாகக் கோரி வருகிறீர்கள். உங்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, குளிர்சாதன வசதியுடைய திரையரங்குகளுக்கு ஒரு டிக்கெட்டிற்கு 25 பைசா வீதமும், பிற திரையரங்குகளுக்கு, ஒரு டிக்கெட்டிற்கு 10 பைசா வீதமும், பராமரிப்புச் செலவுக்கென வசூலித்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று, இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

திரையரங்குகளில் காட்டப்படும் சிலைடுகளுக்குத் தற்போது விதிக்கப்படும் வரியை, நீக்க வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையினை ஏற்று இந்த வரியினை நீக்க அரசு விரைவில் ஆணை பிறப்பிக்கும்.



சென்னை நகரை அழகுபடுத்தும் நன்முயற்சியில் ஒத்துழைத்து, அதே நேரத்தில் விளம்பரங்களை ஒட்ட, தனி இடங்களை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையையும் ஏற்று, திரைப்பட விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு, ஒரு சில குறிப்பிட்ட இடங்கள், சென்னை நகரில் விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒதுக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழிலாளர் பெருமக்களின் நலன் காக்கும் பொருட்டு, திரைப்படத் தொழிலாளச் சகோதரர்கள், அவர்கள் பணிபுரியும்பொழுது, விபத்தில் சிக்குண்டு இறந்தாலோ, அல்லது காயம் அடைந்தாலோ, அவர்களுக்கு முறையே 10,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய் உதவித் தொகையாக, இனி அரசு வழங்கும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்து போனவர் குடும்பத்திற்கு 10,000 ரூபாயும், காயமுற்றவர்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும்.**

சிறந்த திரைப்படங்கள் மற்றும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், தொழிலாளர் பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும். திரைப்பட நகரத்திற்கான ஆலோசனைக் குழுவிடும், அதாவது, Film City Advisory Committee -யிலும், இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க முயற்சிக்கப்படும். இதேபோல், மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலும், Regional Labour Advisory Committee-யிலும், இவர்களுக்கு இடம் அளிக்கப்படும், என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவை தவிர, விற்பனை வரி, கேளிக்கை வரி போன்றவற்றைக் குறைக்க வேண்டும், வேறு சில சலுகைகள் வழங்க வேண்டும், எனக் கேட்டிருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, உங்களுக்கு உதவி செய்ய, அரசிற்கு நிறைய மனம் உண்டு; ஆனால் பணம் தான் இல்லை. உங்களின் கோரிக்கைகள் என் மனதிலே, ஆழமாகப் பதிந்திருக்கின்றன. உரிய நேரத்தில், முடிந்ததை உறுதியாகச் செய்வேன் என்பதை மட்டும், இத்தருணத்தில் கூறிக் கொள்கிறேன்.

உங்களின் சகோதரி என்ற முறையில் நான் உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'உழைப்பே உயர்வு' என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தாரக மந்திரம், பொதுவாக, வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும், என்றாலும், திரைப்படத் துறைக்கு அது மிக மிகப் பொருத்தமானதாகும். திரை உலகில் ஒருவர், தனது உழைப்பால் மட்டும்தான் உயர, வளர, புகழ் பெற முடியும். எனவே, 'உண்மை - உழைப்பு - உறுதி - துணிவு - நேர்மை' என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுங்கள், அது உங்களை உயர்த்தும்; நீங்கள் ஈடுபட்டுள்ள தொழிலை வாழவைக்கும். அதில் வெற்றிகள் பலவற்றை உங்களுக்குத் தேடித் தரும்!

## மதுவின் தீமை பற்றி அண்ணல் காந்தியடிகள்

**★ அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த் தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.**

**★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக் கேடுதான்.**

பிறகு உயர்வுகள் பல தொடர்ந்து உங்களைத் தானாகவே நாடி வரும்.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவாக, புதிய புதிய தொழில் நுட்பங்களும், புதிய சாதனங்களும் உருவாகி வருகின்றன. இந்த விஞ்ஞான வளர்ச்சியை யாரும் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. இதுபோன்ற மாற்றங்கள் ஏற்படுவது காலத்தின் கட்டளை. உலக வாழ்க்கையின் இயல்பு. அத்தகைய அறிவியல் மாறுதல்கள் ஏற்படும்பொழுது அவற்றை நாம் வரவேற்பதோடு, அதற்கு ஏற்ப நாம் நம்மை மாற்றிக் கொண்டு, அவற்றையும் நம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால் தான், வெற்றி காண முடியும்.

தூங்கிக் கிடக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் பலம் திரைப்படத்திற்கு மட்டுமே உண்டு. செம்மையான கருத்துக்கள் மக்கள் மனதிலே பதிந்திட, மக்களிடையே புதுமைக் கருத்துக்களைத் தோற்றுவிக்க, ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட, சினிமாவை விட ஒரு சிறந்த சாதனம் இல்லை என்பதை, என்னால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். எனவே, இன்றைய சினிமாத் துறையில் உள்ளவர்கள் அத்தகையதொரு அரிய சமுதாயப் பணியில், தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதே, எனது விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

அதே நேரத்தில், தனி மனித சுதந்திரத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் காவலர்களாய், திரைப்படத் துறையினர் திகழ வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குறிப்பாக - திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள சகோதர, சகோதரிகள் மீது, மக்கள் வைத்திருக்கும் மகத்தான நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும், நல்லெண்ணத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றி உங்கள் வாழ்க்கையில் உயர்ந்திடுவதோடு, இந்த மாநிலத்தையும், இந்த நாட்டையும் உயர்த்திட, தூஷுரையேற்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.



அமையாதா!'... என்கிற கற்பனை தமிழ்நாட்டு மக்களாகிய நமது நெஞ்சங்களில்மட்டும் தழைக்கக் கூடாதா என்ன?

இயன்றவரை அந்த இனிய கனவைக் கைகூடச் செய்திடும் மேலான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது நம்முடைய தமிழ்நாடு அரசு!

ஆம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 18.7.92 அன்று, சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கத்தைப் பார்வையிட்டாரல்லவா? 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' போல மிக விரைவில் மாபெரும் அளவிலே உருமாற விருக்கிறது இந்த நேரு ஸ்டேடியம்!

**தங்கக் கோப்பை கால்பந்துப் போட்டிகள்**

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் - இந்த விளையாட்டரங்கில், உலகிலுள்ள அனைத்து நாடுகள் அளவில் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டிகள் சென்னையில் உள்ள நேரு ஸ்டேடியத்திலேதான் நடைபெற விருக்கின்றன.

அதற்குத் தக்கதாக - உலகில் உள்ள எல்லா நாடுகளும் விளையாடும் தகுதிபெற்றதாகத் தரம் உடையதாக 'நேரு ஸ்டேடியத்தை' உருவாக்கும் முயற்சியை முனைந்து மேற்கொண்டிருக்கிறது நமது தமிழ்நாடு அரசு.

இதற்காக மட்டும் 30 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் துவக்கப்பட்ட இப்பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு பெறக் கூடும்.

நல்லிதயம் படைத்தோரின் நன்கொடைகளின் மூலமே இப்பணி தொடர உள்ளது; எனினும் - குறியீட்டுத் தொகையான இந்த 30 கோடி ரூபாயில், மத்திய அரசு தரும் 2 கோடி ரூபாயும், மாநில அரசின் 5 கோடி ரூபாயும் அடங்கும். இதுவரை - சற்றேறக்குறைய 16 இலட்சம் ரூபாய் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற ஏப்ரல் மாதமே இதுகுறித்த அறிவிப்பொன்றைச் செய்தித்தாள்கள் மூலம் வெளியிட்டார்.

**நன்கொடைக்குச் சலுகை**

நிதிமிகுந்தோர், பொதுமக்கள், அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள் ஆகியோரிடமிருந்து தான் குறிப்பிட்ட நிதியானது வசூலிக்கப்படுகிறது. இந்நிதிக்கு வருமான வரிச்சட்டம் '80-ஜி' பிரிவின் கீழ், தக்க சலுகை தரப்படுகிறது. கடித எண் டி.ஐ.டி.(இ)/2(34)/92-93 நாள் 15.6.92.

இதற்காகவே - தமிழ்நாடு விளையாட்டு அரங்கங்கள் சங்கம் (Tamil Nadu Sports Stadia Society) என்னும் புதியதோர் அமைப்பு உருவாக்கப்பட்டு - பதிவும் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே இந்த அமைப்பின் தலைவராவார்.

தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 4.3.92-ஆம் நாள் ஆணையின்படியே இந்தப் புதிய ஏற்பாடு.

எழிலுற மட்டுமல்ல; எல்லா நாட்டு விளையாட்டு வீரர்களுக்கும் ஏற்றதாகவும் அதற்கென வரையறுக்கப்பட்டுள்ள பன்னாட்டுக் குறியளவின்படி, நவீன வசதிகளோடு நம் தமிழகத்தில் அமைய விருக்கிறது இந்த விளையாட்டரங்கம்.

உலகிலேயே, ஆறுமாத காலத்தில் கட்டி முடிக்கப்படவிருக்கும் இந்த அதிநவீன விளையாட்டரங்கம் - இந்தியாவில் உள்ள எல்லா விளையாட்டரங்கங்களில் இணையற்றதாக விளங்கும்.

**கட்டுமானப் பணிகள்**

விளையாட்டரங்கக் கட்டுமானப் பணியைப் பொறுத்தமட்டில் - திரு. சி.ஆர். நாராயணராவ் மற்றும் எல் அண்டு டி குழுவினர் (L & T Ltd) ஆகியோர் கட்டடக் கலைஞர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இ.சி.சி. குழுவினர் (ECC Group) கட்டடப் பொறியாளர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

குறித்த காலத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர அவசியத்தால், அதற்கான நிதியாதாரம் குறித்து மக்களிடையே தக்கவாறு பிரச்சாரம் செய்யுமாறு, அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

பலதரப்பட்ட விளையாட்டுகளுக்கும் ஏற்ப, அமைக்கப்பட்டுவரும் இவ்வரங்கத்தின் அமைப்புக்கு எவ்வித ஊறும் விளைவிக்காத வண்ணம், வணிக வளாகம் (Shopping Complex) ஒன்றும் கட்டப்படவிருக்கிறது. எல்லாமே அண்மைக் காலத்தில் ஒரு சர்வதேச விளையாட்டரங்கம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள வரைமுறைப்படி வகையுற நிறுவப்படும்.

**விளையாட்டரங்கின் அமைப்பு**

அனைத்து நாடுகள் போட்டிக்கான அளவுடைய கால்பந்தாட்டத் திடல், 8 பிரிவுகள் உடைய ஓடுபாதை, குண்டெறிதல், உயரம் தாண்டுதல், தட்டெறிதல், சங்கிலியில் பிணைக்கப்பட்ட குண்டு வீசுதல், ஈட்டி எறிதல், வளைவு நெளிவு மட்டுமன்றிச் சேரும் சகதியும், மேடும் பள்ளமும், மணலும் நீரும் போன்ற பலவிதத் தடைகளோடும் கூடிய குதிரைப் பந்தயம் (Steeple Chase) ஆகிய போட்டிகளுக்கான இடவசதி கொண்ட தாக இந்த அரங்கம் விளங்கும்.

இவைதவிர, செயற்கைத் தரைப் பரப்பு ஓடுதளமும் இங்கிருக்கும்.

ஒரே நேரத்தில் - இங்கு நடைபெறும் போட்டிகளை 40,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்க முடியும்.

முக்கியமானவர்கள், மிக முக்கியமானவர்கள், சிறப்பு அழைப்பாளர்களுக்காக 500 தனி இருக்கைகள் அமைக்கப்படும்.

செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற அமைப்புகளைச் சேர்ந்த செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் ஆகியோருக்கென்று தனிப்பட்ட 500 இருக்கைகள் இவ்வரங்கில் இருக்கும்.

**மக்களுக்கான வசதிகள்**

இந்த அரங்கத்தின் எந்தப் பகுதியில் அமர்ந்தாலும், எவ்விதத் தடையும் இன்றி மக்கள் எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் கண்டுகளிக்க முடியும் அத்தகைய வசதியுடன் பார்வையாளர் இருக்கைப் பகுதி அமைக்கப்படுகிறது.

இரண்டு அடுக்குகள் கொண்டதாகப் பார்வையாளர் மாடம் இருக்கும்.

ஒவ்வோர் அடுக்கிலும் தனித்தனிக் கழிவறைகள், சிறு கடைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகிய யாவும் இருக்கும்.



சேலம் மாவட்டம்:



## பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா

**மாண்**புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், மாநில அளவிலான பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா 15.7.92 அன்று சேலம் நகராட்சிக் கலையரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள் கலந்து கொண்டு, பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேருரையாற்றி, அரசின் நலிந்தோர்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மாவட்டச் சிறுசேமிப்புக் குலுக்கலில் 'ஏஏ' மற்றும் 'ஏபி' வரிசையில் சிறப்புப் பரிசு பெற்ற இரண்டு நபர்களுக்கு மாருதி கார் வழங்கியும், குடும்ப நலத்துறையின் சார்பில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நபர்களில் பரிசு பெற்ற நான்கு நபர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் வழங்கியும் சிறப்பித்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் துணை இயக்குநர், திரு. இரா: நடேசன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் தேசப்பற்றையும், நிர்வாகத் திறமையினையும், அன்னாரின் எளிமையையும், பெருமகனார் கல்விக்கு ஆற்றிய அரும்பணிகளையும் குறிப்பிட்டு, சேலம் 2-வது தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். நடேசன் அவர்களும், சேலம் 1-வது தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ஜெயராமன் அவர்களும், நாமக்கல் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். அன்பழகன் அவர்களும் விரிவாகப் பேசினர்.

விழாவிற்குச் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எம்.பி. ஆறுமுகம், அவர்கள் தலைமையேற்று - பெருந்தலைவர் காமராசர் ஆற்றிய அரும்பணிகள் குறித்துப் பேசினார்.

விழாவில், பெருந்திரளான பொது மக்களும், மாணவ மாணவிகளும், முக்கியப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்துப் பேசினார்.

விழாவின் முடிவில் காது கேளாத சிறுவன் ஒருவன் மாண்புமிகு அமைச்சரை அணுகி தனக்குக் காது கேட்காத குறையைக் கூறி உதவி கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயே தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ.300 வழங்கி, காது காட்கும் கருவி வாங்கிக் கொள்ளப் பணித்தார்.

பின்னர், சிறுசேமிப்புத் துறையின் சார்பில் - தேர்ந்தெடுக்கப் பட்டோருக்கு 2 மாருதி காரையும் பல்வேறு பரிசுகளையும் சுமார் 8 இலட்சம் மதிப்பில் வழங்கினார்.

குடும்ப நலத்துறையின் சார்பில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குக் குலுக்கல் முறையில் பரிசு கொடுக்கும் திட்டத்தின்கீழ், முதல் பரிசாக 3.75 கிராம் எடையுள்ள இரண்டு தங்கப்பதக்கங்களும், இரண்டாவது பரிசாக 3 நபர்களுக்குத் தலா ஒரு தங்கப் பதக்கமும் (3.75 கிராம்) வழங்கினார்.

ஏழை மாணவ மாணவிகள் 40 பேருக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்கியதோடு, பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் 9 நபர்களுக்கு இலவசச் சலவைப் பெட்டிகளையும், 7 நபர்களுக்கு இலவச முடிதிருத்தும் கருவிகளையும் வழங்கினார். மேலும் முதியோர் உதவித் தொகை 12 நபர்களுக்கும், இலவச வீட்டு மனைப்பட்டா26 நபர்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர், பல்வேறு பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முடிவில், சேலம் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நா. தில்லை கோவிந்தன் நன்றி கூறினார்.

**போதையின் நன்கொடை வாதை**

**மதியை அழிக்கும்**
**மதுவை ஒழிப்போம்**

**கொலையினும் கொடியது குடி!**

**முதலில் மயக்கம் பிறகு மரணம்**
**இதுதான் மதுவின் வழக்கம்!**



[illegible] மாநகரில் உள்ள நேரு விளையாட்டரங்கம், நடகளம் உட்பட எல்லா [illegible] போட்டிகளையும் நடத்தும் [illegible] விரிவாக்கப்படுகிறது. 54,000 சதுர [illegible] பகுதியோடு [illegible] இருக்கும்; [illegible] 20 அடி [illegible] நடைபெற்றுவரும் [illegible] 2,000 தொழிலாளர்களும் [illegible] ஈடுபடுத்தப் [illegible] விவரங்களை விளக்கும் [illegible]

# சென்னை நேரு விளையாட்டரங்கம்

பார்சிலோனா போலாகிறது

## 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' ஆகிறது!

உலக நாடுகளெல்லாம் உவப்போடு பங்கேற்கின்ற 25-வது ஒலிம்பிக் போட்டிகள் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனா நகரில் துவங்கியுள்ளன. இந்திய நேரப்படி 24.7.92 வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு அந்தப் போட்டியினை ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜூவான் கார்லோஸ் களிப்போடு துவக்கிவைத்த கண்கொள்ளாக் காட்சியை நாமெல்லாம் தொலைக்காட்சி மூலம் கண்டு மகிழ்ந்தோம்.

பார்சிலோனா நகரின் இதயப் பகுதியில் இருக்கின்ற மிகப் பெரிய 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியத்தில் இந்த ஒலிம்பிக் போட்டி நடக்கிறது.

முதல் நாளன்றே 172 நாடுகளைச் சேர்ந்த 10,000 விளையாட்டு வீரர்களும் ஐயாயிரத்திற்கும் அதிகமான பயிற்சியாளர்களும் அதிகாரிகளும் இதில் பங்கேற்றிருக்கின்றனர்.

கியூபா அதிபர் பிடல் காஸ்ட்டிரோ, சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் கோர்பச்சேவ், தென்னாப்பிரிக்க நாட்டிலுள்ள கறுப்பர் இனக் காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்களெல்லாம் அவ்விழாவிலே கலந்து கொண்டனர்; இவைகளையெல்லாம், உலகு முழுவதிலுமாக 350 கோடி மக்கள் தொலைக்காட்சியில் கண்டு உவந்ததாகக் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

பார்சிலோனா நகரில் உள்ள அந்த 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' போல நம் நாட்டிலும் ஒன்று

**இப்போது ஒலிம்பிக் போட்டிகள் நடக்கிற ஸ்டேடியத்தின் படமல்ல இது; எதிர்காலத்தில் நடத்தப்படவிருக்கிற சென்னை ஸ்டேடியத்தின் (மாதிரிப்) படம்!**





30 ஆயிரம் பார்வையாளர்களுக்குக் கவர்ச்சி மிக்க கூடைநாற்காலிகள் (Polypropylene bucket Seats) இங்கு போடப்பட்டிருக்கும்.

**விளையாட்டு வீரர்களுக்கான வசதிகள்**

இந்த அரங்கில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வருகை தருவோருக்கென்றே பல்வேறு வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

குறிப்பாக - ஒரே நேரத்தில், 100 பேர் அமர்ந்து கலந்துரையாடத் தக்க தனி அரங்கு ஒன்றும் இங்கே நிறுவப்படும்.

விளையாட்டு வீரர்களுக்கும், நடுவர்களுக்கும், மருத்துவப் பரிசோதனையாளர்களுக்கும் தனித்தனி அறைகள் கட்டப்படும்; அவைகளிலெல்லாம் தனித்தனிக் கழிப்பறைகள் இருக்கும்.

விளையாட்டு வீரர்கள், களத்தில் இறங்கு முன்பு தனிப்பயிற்சி பெறத்தக்க அறைகள், தனிப் பெட்டிகள் (Lockers), போதை மருந்து பற்றிய பரிசோதனைக்கெனத் தனி அறைகள் எல்லாம் உருவாக்கப்படும்; அத்தனையும் குளிரூட்டப்பட்டவைகளாக (Airconditioned) இருக்கும்.

விளையாட்டு வீரர்களும், பன்னாட்டுப் பிரதிநிதிகளும் மட்டுமே அரங்கினுள் செல்வதற்காக மிகுந்த பாதுகாப்புடைய சுரங்கப்பாதைகள் (Subway) அமைக்கப்படும்.

**முக்கியமானவர்களுக்காக...**

பல்வேறு தரப்பட்ட முக்கியஸ்தர்களின் வாகனங்கள் செல்லுவதற்காகத் தனிப்பாதைகள், கார் நிறுத்துமிடங்கள், லிஃப்ட்டுகள், ஓய்வெடுக்கும் அறைகள், சிற்றுண்டி உணவகங்கள் ஆகியவைகளும் இங்கிருக்கும்.

ஆர்டரின்பேரில் உணவளிக்கத்தக்க, கலந்தாய்வுக் கூடங்களும் உண்டு.

மிகமிக முக்கியமானவர்களின் உடைமைகள் வைப்பதற்கெனத் தனித்தனிப் பாதுகாப்புப் பெட்டிகளும் அவ்வறைகளில் வைக்கப்படும்.

**செய்தியாளர்களுக்காக...**

சென்னையில் அமையவிருக்கும் இந்த விசாலமான விநோத அரங்கில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து, அவை பற்றிய செய்திகளைச் செகம் முழுவதும் பரப்பக்கூடிய செய்தியாளர்களுக்கும் இங்கே பல வசதிகள் செய்து தரப்படும்.

கட்டுப்பாடும் கண்காணிப்பும் உடைய நுழைவு வாயில் வழியாகவே இவர்கள் தமது பகுதிக்குச் செல்ல வேண்டியதாயிருக்கும். இவர்களுக்குத் தனித்தனி மாடங்கள் ஒதுக்கப்படும்.



தத்தம் அலுவலகங்களோடு, உடனுக்குடன் செய்தியாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக ஃபேக்ஸ் (FAX), டெலக்ஸ் (Telex), தொலைபேசி இணைப்புகள் போன்ற செய்தித் தொடர்புச் சாதன வசதிகள் செய்து தரப்படும்.

விளையாட்டரங்கை நோக்கிய, குளிரூட்டப்பட்ட சிற்றுண்டிச் சாலைகளும் அவர்களுக்கு உண்டு. அதைப்போலத் தொலைக்காட்சி வருணனையாளர்க்கென்றும் தனிமேடை உருவாக்கப்படும்.

**உடற்பயிற்சியாளர்கள்**

ஆண்-பெண் உடற்பயிற்சியாளர்கள் 150 பேர் தங்கத் தக்கதாகச் சமையற்கூடம் - உணவுக் கூடத்துடன் ஒரு தனிக் கட்டடம் இங்கு எழுப்பப்படும்.

இவர்களுக்கென - விருந்தினர்களும் தங்குவதற்கேற்ப இருவர் தங்கும் அறைகள் அமையும்; எல்லா வசதிகளும் அதிலிருக்கும்.

உடற்பயிற்சி செய்வதற்கெனத் தனிக்கூடமும் அங்கிருக்கும்.

விளையாட்டுக் குழுவினர் தனிப்படவும், சேர்ந்தும் கலந்துரையாடல் செய்யத்தக்க அரங்குகளும் அக்கட்டடத்தில் அமையும்.

**ஒளி அமைப்பு**

இங்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளை உலகம் முழுவதும் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பத்தக்க மின்விளக்குகள் விளையாட்டரங்கமெங்கும் ஒளிவெள்ளம் பாய்ச்சும்.

உவகையூட்டும் ஒளிவட்டங்களைக் குறுக்கும் நெடுக்குமாகச் செலுத்தத்தக்க 'CIE' குறியீட்டு ஒளியமைப்பும் பொருத்தப்படும்.

அவ்வாறு செலுத்தப்படும் ஒளிக்கற்றைகள், பார்வையாளர்களின் கண்களைக் கூசச் செய்யாதிருக்கும்படியான எல்லாக் கட்டுப்பாடுகளும் 'CIE' மூலமே - அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கும் முறையில் மேற்கொள்ளப்படும்.

ஆங்காங்கே விளக்குக் கம்பங்களிலும், பார்வையாளர் அரங்கின் மேற்கூறைகளிலும் பொருத்தப்படும் சக்தி வாய்ந்த மின் விளக்குகள் இரவைப் பகலாக்கி இன்புறச் செய்யும்.

வண்ணத் தொலைக்காட்சிகளுக்காக-போட்டிகளுக்காக - போட்டியிடுவோர் பயிற்சிக்காக என மூவகைப்பட்ட மின்னியக்கி, 'ஸ்விட்ச்' முறை கையாளப்படும்.

அவசரகால ஒளிப்பாய்ச்சு முறையும் கடைப்பிடிக்கப்படும்.



மின்சாரத்தின் உதவியால் மட்டுமன்றி 'ஜெனரேட்டரா'லும் விளையாட்டுத் திடலை ஒளிமயமாக்குவோர் எப்போதும் தயார் நிலையிலிருப்பார்கள்.

**ஒலிபெருக்கி அமைப்பு முறை**

விசாலமாக இருக்கும் விளையாட்டுத் திடல் முழுவதும் கேட்கத்தக்க ஒலிபெருக்கி வசதி - அவசர கால ஒலி பெருக்கிக்கான தனிப்பிரிவு - போட்டிகள் நடக்கும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கேட்கத் தக்க ஒலி பெருக்கி ஆகியவை இங்கே இருக்கும்.

அவைகளைத் தவிர - பொது அறிவிப்புகள், சிறப்பு அறிவிப்புகள், வண்டி - வாகன அழைப்புகள் ஆகியவற்றுக்கெனத் தனித்தனி ஒலிபரப்புப் பிரிவுகளும் செயல்படும்.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

அவசரகால உதவிக்கென இரண்டுகட்ட வெளியேறும் வழிகள் இவ்வரங்கில் அமையும்.

ஆடுகளத்தில் இருப்போருக்கு இரண்டு வட்டப் பாதுகாப்பு (Ring Security) எப்போதும் இருக்கும். முதலுதவிக்கும், தீயணைப்புக்கும் என வண்டி வாகனங்கள் வரவும் போகவும் இரண்டு தனி வழிகள் விடப்பட்டிருக்கும்.

விளையாட்டரங்கின் முன்புறத்திலும், கீழ்த் தளத்திலும் வனப்புமிக்க வணிக வளாகங்கள் அமைக்கப்படும்.

**அரங்க அமைப்பிற்குத் தனிக்குழு**

சென்னை மாநகரில், 1993-இல் நடைபெறவிருக்கும் அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட்டியைக் கருத்தில் கொண்டு, அனைத்து நாட்டுத் தகுதிக்கேற்ப (International Standards) நேரு ஸ்டேடியத்தை மேற்கண்டவாறு எல்லா வசதிகளோடும் உருவாக்க 25 பேர் கொண்ட ஓர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சி நிர்வாகத் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில் தரப்பட்டுள்ள அக்குழு பற்றிய விவரம் வருமாறு:

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் - குழுத் தலைவர்.
2. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் - துணைத் தலைவர்.
3. அரசு தலைமைச் செயலாளர் அவர்கள்: உறுப்பினர்.
4. அரசுச் செயலாளர் - நிதித்துறை : உறுப்பினர்.
5. அரசுச் செயலாளர் - உள்ளாட்சித்துறை: உறுப்பினர்.
6. அரசுச் செயலாளர் - பொதுப்பணித்துறை: உறுப்பினர்.
7. அரசுச் செயலாளர் - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை: உறுப்பினர்-செயலாளர்.
8. அரசுச் செயலாளர் - கல்வித் துறை உறுப்பினர்.



9. காவல்துறை இயக்குநர் (DGP) உறுப்பினர்.
10. காவல்துறைத் தலைவர், சட்டம்-ஒழுங்கு (I G of Police) உறுப்பினர்
11. தனி அலுவலர் - சென்னை மாநகராட்சி: உறுப்பினர்.
12. ஆணையாளர் - சென்னை மாநகராட்சி: உறுப்பினர்.
13. நிர்வாக இயக்குநர் - விளையாட்டு வளர்ச்சிக் கழகம்: உறுப்பினர்.
14. திரு. எம். கோபால கிருஷ்ணன், தலைவர்-இந்தியன் வங்கி: உறுப்பினர்.
15. திரு. பி. சிவந்தி ஆதித்தன் - தலைவர் - இந்திய ஒலிம்பிக் அசோஷியேஷன்: உறுப்பினர்
16. திரு. எம்.ஏ.எம். இராமசாமி, தொழிலதிபர்: உறுப்பினர்.
17. திரு. ஏ.சி. முத்தையா, தொழிலதிபர்: உறுப்பினர்.
18. திரு. எல்.சி. இராமமூர்த்தி, தொழிலதிபர், தமிழ்நாடு கால்பந்தாட்டக் குழுத் தலைவர்: உறுப்பினர்.
19. திரு. ஆர். பழனியப்பன், தொழிலதிபர் - தமிழ்நாடு கால்பந்தாட்ட உயர்மட்டக் குழுத் தலைவர்: உறுப்பினர்
20. திரு. சி.ஆர். விசுவநாதன், தலைவர் - தமிழ்நாடு ஒலிம்பிக் அசோஷியேஷன்: உறுப்பினர்.



★ தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத்திற்காகவும், ஜனநாயக முறையில் நாங்கள் கடைசிவரை போராடுவோம்; அதை அடையும்வரை ஓயமாட்டோம்.

21. திரு. கே. முருகன், இணைச் செயலாளர் - இந்தியன் அசோஷியேஷன்: உறுப்பினர்.
22. திரு. எச். கிருஷ்ணமூர்த்தி, நிர்வாக இயக்குநர் - 'மெட்ராஸ் ரிஃபைனரீஸ்' : உறுப்பினர்.
23. திரு. வேணுசீனிவாசன், சுந்தரம் கிளைட்டன் லிமிடெட் - உறுப்பினர்.
24. திரு. எல். புத்தசிங், மண்டல நிர்வாகி- இந்தியன் டொபாகோ கம்பெனி: உறுப்பினர்.
25. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-600 005: உறுப்பினர்.

- இவர்களே அக்குழுவில் அங்கம் வகிப் போராவர்.

**நகராட்சிச் செயலாளர் பணிகள்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு வாரியத்தின் அரசுச் செயலாளர் அவர்களும் இந்தக் குழுவில் உறுப்பினர் செயலாளராக இருந்து செயல்படுவார்.

பொதுமக்கள் இதற்கென அளிக்கும் நிதியை இவரே பெற்று இந்தியன் வங்கியில் இதற்காகத் தனிப்படத் துவக்கப்பட்டுள்ள கணக்கில் சேர்க்க வேண்டிய முக்கியப் பொறுப்பில் இருப்ப வராவார்.

**குழுவின் குறிக்கோள்கள்**

நேரு விளையாட்டரங்கத்தை விரிவாக்க அமைக்கப்பட்டுள்ள குழுவானது, மிகப் பழமை யான இப்போதுள்ள விளையாட்டரங்கக் கட்டடத்தை இடிப்பதை முதற்கட்டப்பணியாக மேற்கொள்ளும்.

அவ்வாறு இந்தப் பணி முடிவுற்றபின், புதிய விளையாட்டரங்கத்தை உருவாக்கும் கட்டுமானப் பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ளும்.

ஜவகர்லால் நேரு, 10-வது தங்கக்கோப்பைக் கான அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட் டியை அடுத்த ஆண்டில் இக்குழுவே முன் நின்று நடத்தும்.

அரசிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், விளையாட்டரங்கம் உருவாக்கத்திற்குத் தேவை யான நிதி திரட்டுவதும் - முறைப்படி அந்நிதியைப் பயன்படுத்தி, குறைவின்றி அரசுக் குறிக்கோளை நிறைவேற்றுவதும் இந்தக் குழுவின் அடிப்படைக் கொள்கையாக இருக்கும்.

பழைய கட்டடங்களை இடித்துப் புதிய அரங் கைப் பொலிவுற நிர்மாணித்த பிறகு - அதை நிர்வகிப்பது, கால்பந்தாட்டப் போட்டி நிகழ்ச்சி களை முன்னின்று முறைப்படி நடத்துவது போன்ற பணிகளையும் இக்குழுவே மேற்கொள்ளும்.

- இவ்வாறு 4.3.92-ஆம் நாளைய அரசு ஆணை தெளிவாகத் தெரிவிக்கிறது. தமிழ்நாடு விளையாட்டு அரங்கங்களின் சங்கம் (Tamil Nadu Sports Stadia Society) சார்பில் மேற்கண்ட செய்தி களை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு வாரியத்தின் அரசுச் செயலாளர் திரு. ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

**- பி.எல். ராஜேந்திரன்.**

## சென்னை அரசினர் பொதுமருத்துவமனைக்குக் கூடுதல் 'கோபால்ட் தெரபி' கருவி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில், புற்று நோய்ச் சிகிச்சை அளிப்பதற்காக, ரூ.65 இலட்சம் செலவில் கூடுதல் 'கோபால்ட் தெரபி' கருவி வாங்க ஆணையிட்டுள்ளார்.



இதே மருத்துவமனையில் சில காலமாக செயல்படாதிருக்கும் 'கோபால்ட் தெரபி' மருத் துவப் பிரிவு விரைவில் பழுதுபார்க்கப்பட்டு உபயோகத்திற்குக் கொண்டுவரப்படும்.

காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தில் விரைவில் இரண்டாவது 'கோபால்ட் தெரபி' கருவி நிறுவப் படும்.

அதேபோல, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள 'கோபால்ட் டெலி தெரபி' யூனிட், பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்தால் ஆண்டு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்திடமிருந்து இந்த யூனிட்டை உபயோகிக்க தடையில்லாச் சான்றிதழ் (No objection certificate) பெற்ற பிறகு, இன்னும் சில நாட்களில் இந்த யூனிட்டும் செயல்படத் தொடங்கும்.



# மலட்டுத் தன்மை நீங்க...

மலட்டுத்தன்மை - உலகின் எல்லாப் பகுதிகளிலும் பருவ வயதை அடைந்த ஆண் - பெண் களைப் பாதிக்கும் பொதுவான தொரு பிரச்சினையாகும். இது - வாழும் நிலப்பகுதிக்கு ஏற்ப வேறு படக்கூடியது. திருமணமான ஆண் பெண்களில் 8 முதல் 15 சதவீதத் தினர் குழந்தை பெறுவதில் சிக்கல் களை எதிர்கொள்கின்றனர்.

இதன்படி பார்த்தால் உலகில் 5 முதல் 8 கோடிப் பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் எனலாம். மலட்டுத்தன்மை, குறிப்பிடத்தகுந்த அளவு ஏமாற்றத்தையும் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியின்மையையும் தோற்றுவிக்கிறது.

சர்வதேச மற்றும் அந்தந்த நாடு களின் அரசாங்கங்களின் முயற்சி களினால் இன்றைய உலகின் மக்கள்தொகைப் பெருக்கம் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் கருத்தடைச் சாதனங்கள் பயன்படுத் தப்படுவது அதிகரித்து, பெரிய குடும்பங்களை அமைப்பது குறைந் துள்ளது. இத்தனைப் பின்னணி களுக்கு இடையிலும், மலட்டுத்தன்மை யுடன் இருப்பது அவ்வளவாக முக் கியத்துவம் பெறவில்லை.

ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெறுவதே இன்றைய நிலையிலும் பெருமைக்குரியதாக இருந்து வருகிறது. இன்னும்கூட மலட்டுத் தன்மையைப் போக்க, தடுக்க, அறிந்து சிகிச்சை பெற மருத்துவ உதவி நாடப்படுகிறது.

திருமணமானவர்களுக்குக் குழந்தை பெறும் தகுதி இல்லையென்றால் அது பின்வரும் அடிப்படைகளால் தோன்றியிருக்கக்கூடும்;

**முதல் நிலை மலட்டுத்தன்மை**

தடையின்றிப் பாலுறவு கொண்டு வந்த போதிலும், திருமணமாகி 2 ஆண்டுகள் ஆன பிறகும் பெண் கருத்தரிக்கா நிலை.

**இரண்டாம் நிலை மலட்டுத்தன்மை**

பெண்ணானவள் முன்பு கருத் தரித்திருந்தபோதிலும், தற்போது கருத்தரிக்க இயலாத நிலை.

**கருத்தரிக்கும் தன்மையில் குறைவு**

சில கணவன் மனைவியரிடம் கருத்தரிப்பு நிகழ இயலாத அள விற்கு (இருவரிடமும்) கருத்தரிக்கும் தன்மையில் குறைவு ஏற்படுவதுண்டு.

மேலே நாம் பார்த்த பல்வேறு விதமான மலட்டுத்தன்மைகளும் பிறவிக் குறைபாடுகளின் காரண மாகவோ அல்லது இடையில் பீடிக் கப்பட்டதாலோ நேரிடலாம். பிறவிக் காரணம் ஆண் அல்லது பெண் ணின் இனப்பெருக்க மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் பிறவிக் குறை பாட்டை அடிப்படையாகக் கொண் டது. கருவகங்கள் (Ovaries) வேலை செய்யாமையால் கருவுறுதல் நிகழாமை, போன்றவைகளை இதற்கு

எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இத்தகைய காரணங்கள் முதல்நிலை மலட்டுத்தன்மையின் விளைவுகளாகும்.

### ஆண்களும் காரணமாகலாம்

இதே போல ஆண்களிடமும் பிறவிக் கோளாறுகள் உண்டு. எடுத்துக்காட்டாக - ஆணின் இனப் பெருக்க உறுப்பான விந்தகங்கள் (Testis) அடி வயிற்றுப் பகுதியில் புதைந்திருந்து, சிறுவனாக இருக்கும் பருவத்தில் வெளியே தொங்கும் விந்தக உறைக்கு இடம் பெயர்ந்து வருவது வழக்கம்.

ஆனால் சில சமயங்களில் இது நடைபெறுவதில்லை; விந்தகம் முதிர்ச்சியடையாமல் விந்து உற்பத்தி செய்வதில்லை.

இடையில் பீடிக்கப்பட்ட காரணங்களை எடுத்துக்கொண்டால், பெண்களிடம் இரண்டு முக்கியமான ஹார்மோன்கள் உற்பத்தியில் பற்றாக்குறை இருக்கலாம். Follicle Stimulating Hormone (FSH), Luteinising Hormone (LH) என்பன அவை. இவை பிட்யூட்டரி சுரப்பியில் சுரக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் கருத்தரிப்பே நடைபெறாது அல்லது எப்போதாவது ஒருமுறை மட்டுமே நடைபெறும். இப்படிப்பட்ட நேரங்களில் ஹார்மோன் ஊசிகள் அல்லது விசேட மருந்துகள் எடுப்பது, பெரும்பாலும் மாதவிலக்குச் சுழற்சியைச் சரிப்படுத்தி, கருவுறுதலுக்கு வழிவகுக்கக்கூடும்.

பெண்களிடையே மலட்டுத் தன்மை ஏற்படுவதற்குத் தொற்றுகள் ஏற்படுவது மிகச் சாதாரணமான காரணங்களில் ஒன்றாகும். தொற்றுகள் ஏற்படுவதினால் கருவகங்களிலும், கருக்குழாயிலும் சுவர்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கருக்குழாயின் வழியே கருவானது வெளியேறாதபடி தடுத்துவிடும். கருக்குழாயில் தொற்று ஏற்பட்டுப் பாதிப்பிற்குள்ளானால் அடைப்பு ஏற்படும். கருச் சிதைவு மற்றும் மகப்பேறு சமயத்தில் இப்படிப்பட்ட தொற்றுகள் ஏற்பட சாத்தியம் உண்டு. இதனால் கருப்பை மற்றும் கருக்குழாய்கள் தொற்றுவதுண்டு சேதமடைந்துவிடுவதுண்டு. குறிப்பாக - தவறான முறைகளில் கருச் சிதைவு செய்யப்பட்டால் அல்லது மகப்பேறு நிகழ்ந்தால் இப்படித் தொற்று ஏற்படுகிறது.

### ஆய்வின் முடிவுகள்

பிறப்பு உறுப்பு மண்டலத்தில் ஏற்பட்ட தொற்று மலட்டுத்தன்மையை உண்டாக்குவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்று 25 நாடுகளில் உலகச் சுகாதார நிறுவனம் செய்த பெரிய ஆய்வு ஒன்று புலப்படுத்தியுள்ளது. முன்னேறிய நாடுகளில் உள்ள மூன்றில் ஒரு பங்குப் பெண்கள் மலட்டுத்தன்மை உடையவர்களாக இருப்பதாகத் தெரிகிறது.

இவர்களுக்கு அடையட்ட கருக்குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றுகள் இடுப்புப் பகுதியிலுள்ள உறுப்புகளில் இருந்ததற்கான சான்றுகள் காணப்பட்டன. ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இதே அளவு எண்ணிக்கை காணப்பட்டுள்ளது. ஆனால் ஆப்பிரிக்க நாடுகளில் கிட்டத்தட்ட இருமடங்கு (63 சதவீதம்) பெண்களுக்கு மேற்கண்ட வகை தொற்றுகள் ஏற்பட்டுள்ளன. உண்மையில் 40 சதவீத ஆப்பிரிக்கப் பெண்களுக்குக் கருக்குழாய் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் இதற்கு முன்பு கருவுற்றவர்களே.

கொனோரியா என்ற பால்வினை நோய்க்கும் கருக்குழாய் அடைப்பு மலட்டுத்தனத்திற்கும் தொடர்பு உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உண்டான

### குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் தமிழ்நாடு சாதனை!

*தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் மேலும் குறைக்கப் பட்டுள்ளது. 1989-இல் 1000-க்கு 23.1 என்ற விகிதத்தில் இருந்த பிறப்பு விகிதம் தற்சமயம் 22.1 சதவிதிதமாகக் குறைந்துள்ளது. 1981-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் கணிசமான அளவுக்குக் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (1981-இல் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 28 சதவிகிதம்). குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தியதன் விளைவாகவே இந்தச் சாதனையை அடைய முடிந்தது.*

*தமிழ்நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் மக்கட்தொகைப் பெருக்கம் குறைவாக உள்ளது. தமிழ்நாட்டில் மக்கட்தொகை வளர்ச்சி விகிதம் 1.49 சதவிகிதம்.*

*குழந்தை பிறப்பைப் போலவே குழந்தைகள் இறப்பு விகிதமும் கணிசமாகக் குறைந்துள்ளது. 1989-இல் ஆயிரத்துக்கு 8.6 என்று இருந்தது, 1991-இல் 1000-க்கு 8 ஆகக் குறைந்திருக்கிறது. இது தமிழகத்தில் தற்போது சுகாதார நலம் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதையே எடுத்துக் காட்டுகிறது.*

*மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள கிராமச் சுகாதார உதவியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஏறத்தாழ 5,000 பேர் ஒதுக்கப்பட்டு, அவர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. சுகாதார உதவியாளர்கள் நல்ல முறையில் பிரச்சாரம் செய்வதை ஊக்குவிக்க ஒரு சவரன் தங்கம் பரிசளிக்கும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.*





மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டம், பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்திருக்கின்ற படகுக் குழாமை (Boat Club) 6.7.92 அன்று பார்வையிட்டார்.

கொள்ளை நோய்களால் இப்படிப் பட்ட ஒரு நிலை ஏற்பட்டதுண்டு. இது ஆண்டிபயாடிக்கு மருந்துகளுக்கு எதிர்ப்பை அதிகரித்து வருகிறது. இப்படிப்பட்ட தொற்று பெரும்பாலும் நோயறிகுறி அற்றதாகவே உள்ளது. உடனுக்குடன் மாறுபடுகிற நிலையற்ற நோயறிகுறிகளையே இது உண்டுபண்ணுகிறது.

### பால்வினைத் தொற்று நோய்

அண்மையில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள Chlamydia எனப்படும் பாக்டீரியா கிருமி மலட்டுத் தன்மையை விளைவிப்பதில் கொனோரியாவைவிட அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கொனோரியாவைப் போலவே இந்த Chlamydia-வும் பால்வினை (தொற்று) நோய்தான். ஆனால் இந்தக் கிருமியால் ஏற்பட்ட தொற்று நோய்தான். ஆனால் இந்தக் கிருமியால் ஏற்பட்ட தொற்று ஆணிடமும் சரி பெண்ணிடமும் சரி, எந்த அறிகுறியையும் உண்டுபண்ணுவதில்லை. இப்படிப்பட்ட தொற்றுகள் ஆண்டிபயாடிக்குகளைக் கொண்டு சிறப்பாகக் குணப்படுத்தப்பட முடியும். ஆனால், சிகிச்சையில் பெற்ற வெற்றி, மறுபடியும் தொற்று ஏற்படுவதினின்று பாதுகாப்பை அளித்துவிடாது.

காசநோய் கருப்பையின் சுவர்ப் பகுதியைத் தாக்கி, கருவுற்ற அண்டவணுவைக் கருப்பையில் ஒட்டாதபடி தடுக்கவும், கருக்குழாய்களில் அடைப்பை உண்டாக்கவும் கூடும். பெண்களிடையே ஏற்பட்டுள்ள மலட்டுத்தன்மையில் சுமார் 5 சதவீதம் வரை இப்படிப்பட்ட கோளாறால் விளைவது எனப்படுகிறது.

வேறு சில மலட்டுத்தன்மைக் கோளாறுகளில் உடலுறவு இயல்பான விதத்தில் நடைபெற்றிராது. எனவே புணர்வாயில் விந்து பீய்ச்சப்பட்டிருக்காது. இது கணவன் மனைவி இருவரது அறியாமையினாலும் விளைந்திருக்கலாம். அல்லது பெண்களுக்கு உடலுறவைப் பற்றிய உளவியல் சார்ந்த பயங்கள் நேரிட்டிருக்கலாம்.

இடையில் உண்டான மலட்டுத் தன்மைகளில், விந்தகங்களில் புட்டாலம்மை (பொன்னுக்கு வீங்கி) வைரஸ் (Mumps Virus) தொற்று ஏற்படுவது உண்டு. காசநோயும் சிபிலிஸ் நோயும் கூட விந்தகங்களைத் தாக்கக்கூடும். இதனால் விந்தகங்களிலிருந்து வரும் நாளத்தில் விந்து கடந்துசெல்லாதபடி அடைப்பு ஏற்படும்.

வெளியே தொங்கும் விந்தக உறைக்குக் கீழிறங்கி வராத விந்தங்களைச் சரியாக்கச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சை சரியான முறையில் செய்யப்படாவிட்டால் அல்லது அரிதாக ஒரு சில கேசுகளில் ஹெர்னியா எனப்படும் அண்டவாதத்தை (Inguinal herina) சரிப்படுத்தும் போதும் விந்தகங்களுக்குச் செல்லும் இரத்த ஓட்ட வழி சேதமடைந்து, விந்தகங்கள் பழுதாகி சரிவர இயங்காமல் போய்விடும்.

### வெப்பத்தால் விளையும் கேடு

இது விந்தகங்களைச் சுற்றிலும் இரத்தம் பாய்வதன் அளவைப் பெருக்கி அதன் வெப்பநிலையை உயர்த்திவிடும். விந்தகங்களின் வெப்பநிலை உயர்ந்தால் விந்து உற்பத்தி பெருமளவு குறைந்துவிடும் என்பது நன்கு அறியப்பட்டதாகும்.

இறுக்கமான உள்ளாடைகளை அணிவதால் ஆண் மலடு உண்டாகிறது என்று கூறப்படுவதும் உண்மையே. இந்தச் சுருண்ட சிரை நாளங்களை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். சிரை நாளங்களை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

எனினும் இது விந்து உற்பத்தியில் முன்னேற்றத்தை உண்டு பண்ணுமா என்பதும், இதனால் பெண் கருவுற வாய்ப்பு உண்டா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

### குடியாலும் கேடுவரும்

குடிவெறிக்கு ஆளானவர்கள் லைபிடோ ¬Libido) குறைவால் மலட்டுத்தன்மை அடைகின்றனர். சில ஆண்டிபயாடிக்குகள் ¬Antibiotics) மற்றும் ஆண்டி டெப்ரசண்ட்ஸ் ¬Anti depressants) உட்பட சிற்சில மருந்துகளும் விந்து உற்பத்தியைக் குறைக்கும் என்று அறியப்படுகிறது.

பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத் தன்மையின் காரணங்களைப் பற்றி அறிந்துள்ளதைவிட ஆண்களுக்கு ஏற்படும் மலட்டுத்தன்மையின் காரணங்களைப் பற்றிச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. ஆண்களுக்கு மலட்டுத்தன்மை உண்டாக்கும் இக் காரணங்களில், சிலவற்றையே மருத்

# சென்னையில் பழைய தெரு விளக்குகள் புத்தொளி பெறுகின்றன

சென்னை மாநகராட்சி காமராசர் சாலை, இராஜாஜி சாலை, சாந்தோம் நெடுஞ்சாலை, கிரீன்வேஸ் சாலை, சர்தார் படேல் சாலை, அண்ணா சாலை ஆகியவற்றில் பழைய விளக்குகளுக்குப் பதிலாக, 1,500 புதிய சோடியம் ஆவி விளக்குகளை ரூ.60 இலட்சம் செலவில் அமைத்து வருகிறது. அகற்றப்படும் பழைய விளக்குகள் சுத்தம் செய்யப்பட்டும் பழுது பார்க்கப்பட்டும், பேருந்து செல்லும் சாலைகளில் குழல் விளக்குகளுக்குப் பதிலாகப் பொருத்தப்படும். இந்த ஆண்டிற்குள் எல்லாப் பேருந்துத் தடங்களிலும் சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்த மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

வட சென்னையில் ஜி.ஏ. சாலை, கல்லறைச் சாலை, புதிய ஆவடிச் சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம் தோட்டச் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, டாக்டர் அம்பேத்கர் சாலை, கல்லூரிச் சாலை, சூரியநாராயணா சாலை மற்றும் தென் சென்னையில் இராம கிருஷ்ணா மடம் சாலை, டி.டி.கே. சாலை, காந்தி மண்டபம் சாலை, பெசண்ட் நகர், 3-வது அவின்யூ, அசோக் நகர் 10-வது அவின்யூ, கவுடியா மடம் சாலை இவற்றில் ரூ.200 இலட்சம் செலவில் சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட உள்ளன.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட கொடுங்கையூர், கொளத்தூர், வில்லிவாக்கம், திருமங்கலம், விருகம்பாக்கம், வேளச்சேரி, தரமணி, திருவான்மியூர் போன்ற பஞ்சாயத்துப் பகுதிகளில் 7,000 குழல் விளக்குகள் ரூ.560 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளன. இவை யாவும் மாநகராட்சியின் தரத்திற்கேற்ப புதைமின் கம்பிகளுடன் அமைக்கப்படும்.

கிட்டத்தட்ட 300 கி.மீ. நீளத்திற்கு மாநகராட்சி பல்வேறு பகுதிகளிலும் உள்ள பழைய பழுதடைந்த புதைமின் கம்பிகள் ரூ.200 இலட்சம் செலவில் இந்த ஆண்டு மாற்றியமைக்கப்படும்.

தெரு விளக்குகள் பழுது பார்ப்பதைத் துரிதமாகச் செய்ய ஏற்கெனவே உள்ள 22 எந்திர ஏணிகளுடன் புதிதாக 5 எந்திர ஏணிகள் ரூ.30 இலட்சம் செலவில் வாங்கிச் சேர்க்கப்படும். இரண்டு எந்திர ஏணிகள், 6 பணியாளர்கள் ஒரு இளம் பொறியாளரைக் கொண்ட தனிக் குழுக்கள் பழுது பார்த்தலை விரைவாகச் செய்திட அமைக்கப்பட உள்ளது. பழுது என்ன என்பதைக் கண்டு பிடிப்பதில் காலத்தை வீணாக்காமல், புதிய விளக்குத் தொகுதியை மாற்றி அமைத்துத் தெரு விளக்குகளை உடனடியாகப் பழுது பார்க்கும் முறை செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த ஆண்டு சென்னை மாநகராட்சி ரூ.1.160 இலட்சம், தெரு விளக்குகளுக்காக நிதி ஒதுக்கியுள்ளது.

---

துவச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும்.

இதனால் தெரியவருவது என்னவெனில், திருமணமானவர்களிடையே உண்டாகும் மலட்டுத்தன்மையில் குறைந்தது 40 சதவீதத்திற்காவது ஆண்கள் பொறுப்பு உடையவர்கள் என்பதாகும்.

ஏராளமான திருமணமான ஆண்-பெண்கள் ஒரு கோளாறும் உடையவர்களல்ல என்று பரிசோதனைகளின் வாயிலாக அறியப்பட்ட போதிலும், குழந்தை பெறாதவர்களாகவே இருக்கின்றனர். கரு வெளியேறுதல், சினைப்படுதல் கருப்பையில் வளர்தல் போன்ற விஷயங்களில் அண்மைக்கால ஆய்வுகள் மற்றும் நடைமுறைச் செயல்பாடுகளின் வாயிலாகப் பல தம்பதிகளுக்கு வெற்றிகரமாகச் சிகிச்சை அளித்து வருகின்றபோதிலும், பின்னுங்கூட பதிலளிக்கக்கூடாத கேள்விகள் பல உண்டு.

சோதனைக் குழாய்க் குழந்தை (In Vitro fertilization) முறை கருக் குழாயில் அடைப்பு ஏற்பட்ட பெண்களுக்கே பெருமளவில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், மலட்டுத்தன்மையைத் தீர்மானிக்க முடியாத பல நேரங்களில் இந்தச் சோதனைக்குழாய் முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த பத்தாண்டுகளாக இந்தச் சிகிச்சை முறை பெருமளவு பிரபலமடைந்துள்ளது. ஆனால் இதற்கு ஆகும் செலவும் அதிகம். உயர் பயிற்சி பெற்ற நிபுணர்களும் தேவை. இதில் நான்கு அல்லது ஐந்தில் ஒன்றுதான் சிறந்த பலன் தருவதாய் உள்ளது.

எந்தப் பிணியையும் சமாளிக்க முதலாவதாகச் செய்யவேண்டியது அதனைத் தடுக்க முயல்வதேயாகும். பிறவிக் கோளாறுகள் விந்து உற்பத்தியில் உள்ள கோளாறுகள் அல்லது மருந்துகளால், சூழ்நிலையால் அல்லது மன இறுக்கங்களால் உண்டாகும் மலட்டுத்தன்மைக் கோளாறுகள் போன்றவற்றைத் தடுப்பதென்பது கடினமான காரியம் தான்.

ஆனால், பிறப்பு உறுப்பு களில் ஏற்படும் தொற்றுகளை இருபாலரிடமும் தடுக்கமுடியும். கிளாமிடியா (Chlamydia) கொனோரியா (Gonorrhoea) போன்ற பால்வினை நோய்களே இத்தகைய தொற்றுகளுக்குப் பெருங் காரணம். என்றாலும், மலட்டுத்தன்மையை உண்டாக்கும் இத்தகைய தடுக்கப்படக்கூடிய காரணங்களை முறையான சுகாதாரக் கல்வி, சமுதாய ஒழுக்கம்; பாலியல் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு குறிப்பிடத்தகுந்த அளவு குறைத்துவிட முடியும்.

'நன்றி: நல்வழி'



# காவிரிப்பாசனப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி

எஸ், ஜெயராமன்
பி. நளாயினி
அ. சேக்தாவுது
அ. அப்துல் கரீம்
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்
ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்

சணல் பயிர் நார்வகைப் பயிராகும். நார்வகைப் பயிர்களில் பருத்திக்கு அடுத்து சிறப்புடையது சணலாகும். சணல் பயிரிலிருந்து கிடைக்கும் நார் மென்மையும், வலிமையும் உடையது. இந்த நாரிலிருந்து சணல், கோணிப்பை அல்லது சாக்கு, பல வகையான கயிறுகள், தரை விரிப்புகள், காகிதம், பல பயனுள்ள அலங்காரப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் சணல் பயிர் சுமார் 8 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 10.8 இலட்சம் டன் சணல் நார் உற்பத்தி செய்யப் படுகின்றது. தமிழ்நாட்டில் தற்பொழுது தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் சணல் பயிர்ச் சாகுபடி செய்யப்படுகின்றது. சணல் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மகசூலைப் பெருக்கிடவும் அகில இந்திய ஒருங்கிணைந்த சணல் பயிர் ஆராய்ச்சித் திட்டம் தற்பொழுது தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறையில் செயல்படுகின்றது. இந்த ஆராய்ச்சியின் பலனாக காவேரி டெல்டாப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி செய்து அதிக வருமானம் பெற வாய்ப்பு உள்ளது.

சணல் பயிர்ச் சாகுபடிக்கு மணற்பாங்கான வண்டல், ஆற்று வண்டல், வண்டல் மிகுந்த களி மண் முதலியன ஏற்றவை. இப்பயிரை தை முதல் சித்திரைப் பட்டங்கள் வரை விதைகளை விதைத்துச் சாகுபடி செய்ய வேண்டும். எள், உளுந்து பயிர்களுக்கு மாற்றுப் பயிராகக் கோடையில் சாகுபடி செய்ய மிகவும் ஏற்றது.

சணல் விதைகள் மிகச் சிறியதாக இருப்பதால் நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும். கடைசி உழவில் எக்டேருக்கு 5 டன்கள் அதாவது பத்து வண்டிகள் தொழு எரு இட வேண்டும். அத்துடன் அடியுரமாக இரசாயன உரங்களில் தலா 20 கிலோ வீதம் தழைச்சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து இட வேண்டும். நீர்ப்பாசன வசதிகளுக்கு ஏற்பப் பாத்திகளை அமைக்க வேண்டும்.

சணல் பயிரில் 'ஒலிடோரியஸ்' என்ற டோசா சணலும் 'கேப்சுலாரிஸ்' என்ற வெள்ளைச் சணலும் உள்ளன. டோசா சணல் வகையில் ஜே.ஆர்.ஓ. 524, ஜே.ஆர்.ஓ.878, ஜே.ஆர்,ஓ.7835 என்ற இரகங்களும், வெள்ளைச் சணல் வகையில் ஜே.ஆர்.சி.212, ஜே.ஆர்.சி.321, ஜே.ஆர்.சி.7447 இரகங்களும் சாகுபடிக்கு ஏற்றவை.

சணல் விதைகளைக் கைத் தெளிப்பு முறையிலும் வரிசை விதைப்பு முறையிலும் விதைக்கலாம். கைத்தெளிப்பு முறையில் தெளிக்க எக்டேருக்கு 9 கிலோ விதையும், வரிசையில் விதைக்க எக்டேருக்கு 6 கிலோ விதையும் தேவைப்படும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியிலும் செடிக்குச் செடி 5 செ.மீ. இடைவெளியிலும் விதைக்க வேண்டும். அதிக மகசூலுக்கு ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 67 செடிகள் இருக்க வேண்டும்.

விதை விதைத்த 20-25 நாட்களில் முதல் கைக்களையும் 35-40 நாட்களில் இரண்டாவது கைக்களையும் எடுக்க வேண்டும். கூலியாட்கள் கிடைக்காத சூழ்நிலையிலோ அல்லது கைக்களை எடுக்க அதிகச் சாகுபடி செலவு ஆகும் சமயங்களிலோ சணல் விதைகளை விதைப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்போ அல்லது விதைத்த மூன்று நாட்கள் கழித்தோ 'புளுகுளோராலின்' என்றகளைக்கொல்லி மருந்தை எக்டே ருக்கு 1.5 முதல் 2 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். பின்னர் விதைத்த 30-35 நாட்களில் ஒரு கைக்களை எடுத்தால் களைகளை நன்கு கட்டுப்படுத்தலாம்.

மேலுரமாக 10 கிலோ தழைச் சத்தை முதல் களை எடுத்த பின்பும் (20-25 நாட்கள்) மேலும் ஒரு முறை 10 கிலோ தழைச் சத்தை இரண்டாவது களை எடுத்த பின்பும் (35-40 நாட்களில்) இட வேண்டும். வறட்சிக் காலங்களில் அல்லது உரப் பற்றாக்குறை சமயங்களில் கைத் தெளிப்பான் மூலம் எக்டேருக்கு 8 கிலோ தழைச்சத்து வீதம் 40-45 நாளில் ஒரு முறையும் 70-75 நாளில் மற்றொரு முறையும் 2 சதம் யூரியா கரைசலை (20 கிராம் யூரியா ஒரு லிட்டர் தண்ணீரில்) தெளித்துப் பயன் பெறலாம்.

சணல் நார்ப் பயிரில் பச்சைத் தண்டுகளின் உயரம் மற்றும் எடை ஆகியவற்றைப் பொறுத்தே மகசூல் கிடைப்பதால் தண்ணீர்ப் பற்றாக் குறை இன்றிச் சாகுபடி செய்ய வேண்டும். சணல் பயிருக்கு 500 மி.லிட்டர் தண்ணீர் தேவைப் படுகிறது. விதைகள் விதைத்தவுடன் முதல் தண்ணீர் கட்ட வேண்டும். பிறகு, மண்ணின் தன்மைக்கேற்ப உயிர்த் தண்ணீர் கட்ட வேண்டும். பிற்பாடு 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போது மானது. சணல் பயிரில் டோசா வகை ரகங்கள் வறட்சியிலும் நன்கு வளரக் கூடியது. வெள்ளைச் சணல் ரகங்கள் நீர் தேங்கிய பகுதிகளிலும் நன்கு வளரக் கூடியது.

பொதுவாக, கூன் வண்டு, மஞ்சள் மற்றும் சிவப்பு சிலந்திப் பூச்சி, புழுக்கள் போன்றவை சணல் பயிரைத் தாக்கும் பூச்சிகளாகும். இவற்றைக் கட்டுப்படுத்த எண் டோசல்பான், ஜெல்த்தேன், பாஸோ லோன் போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை விதைத்த 45 நாட்களிலிருந்து 15 முதல் 20 நாட்களுக்கு ஒருதடவை தேவைக்கு ஏற்ப தெளிக்க வேண்டும். நோய்களில் தண்டு அழுகல் மற்றும் வேரழுகல் நோய் சணல் பயிரைப் பாதிக்கின் றன. இவைகளைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ சணல் விதைகளுடன் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளாக அக்ரோசான் 5 கிராம், டைத்தேன் எம்.45•5 கிராம், பாவிஸ்டின் 2 கிராம் போன்ற ஏதேனும் ஒரு மருந்தினைக் கொண்டு விதை நேர்த்தி செய்து நோய்களைக் கட்டுப் படுத்த வேண்டும்.

சணல் பயிரை விதைத்த 100 முதல் 110 நாளில் அறுவடை செய்யலாம். செடியில் இளங் காய்கள் தோன்றும்பொழுது அறு வடை செய்தால் அதிக அளவுதரமான நார் மகசூலைப் பெற இயலும். பயிர் சுழற்சித் திட்டத்திற்கும், சூழ்நிலைக்கும் தகுந்தவாறு அதிகப் பட்சமாக 120 முதல் 140 நாட்கள் கழித்தும் அறுவடை செய்யலாம். அறுவடை செய்த பின்பு 20 முதல் 30 சணல் தண்டுகளை வைத்து கட்டுக் கட்டாகக் கட்ட வேண்டும். இவற்றை வயலிலேயே இரண்டு


சணல் பயிர்

மூன்று நாட்கள் செங்குத்தாக நிறுத்தி வைக்க வேண்டும். இவ் விதம் செய்வதால் செடியில் உள்ள இலைகள் உதிர்ந்து விடும். இது நிலத்தின் தழைச்சத்தினையும் அங் ககப் பொருட்களின் அளவையும் அதிகரித்து மண்வளத்தை அதி கரிக்கப் பயன்படுகிறது.

அறுவடை செய்த சணல் தண்டு களை 15 முதல் 20 நாட்கள் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். பின்பு நாரினையும், தண்டுகளையும் பிரித்தெடுக்க வேண்டும். பச்சைத் தண்டுகளின் மகசூலாக எக்டேருக்கு 45 முதல் 50 டன்களும், சணல் நார் மகசூலாக எக்டேருக்கு 30 முதல் 32 குவிண்டால் வரையிலும் கிடைக்கின்றது.

ஒரு டன் பச்சைத் தண்டுகளின் விலை ரூ.300 ஆகும். சணல் நார்ப்பயிர்ச் சாகுபடி செய்ய எக்டேருக்கு ரூ.6000 வரை தேவைப் படுகிறது. சணல் பயிரை நல்ல முறையில் சாகுபடி செய்வதால் 110 நாட்களில் எக்டேருக்கு நிகர இலாபமாக ரூ.9000 பெறமுடியும்.

பச்சைத் தண்டுகளை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட முகவரி களைத் தொடர்பு கொள்ளலாம்.

1. தலைமை நிர்வாகி
   சென்னை சணல் தொடர்பக
   நிறுவனம்
   எக்சேஞ்ச் ஹால், எண்-1
   காலேஜ் ரோடு
   புதிய நகர்
   கிழக்கு குரோம்பேட்டை
   சென்னை-600 044
2. விவசாய வாணிபக் கழகம்
   சென்னை சணல் தொடர்பக
   நிறுவனம்
   அக்ரகார வீதி
   புலவனூர்-607 205
   அண்ணா கிராமம் ஒன்றியம்
   பண்ருட்டி வட்டம்
   தென்னார்க்காடு மாவட்டம்

சணல் சாகுபடி நுட்பங்கள் சம் பந்தமான விவரங்களை மேலும் தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட முக வரியில் தொடர்பு கொள்ளலாம்:

இயக்குநர்
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்
ஆடுதுறை-612 101
தஞ்சாவூர் மாவட்டம்



# ஆதிதிராவிடர் நலம்



ஆதிதிராவிடர் சமுதாயத் தினர் சமூகத்தில் உள்ள மற்ற வர்களைப் போல வாழ்க்கை நிலை யில் முன்னேற்றமும், பொருளாதார நிலையில் உயர்வும் அடைய வேண் டும் என்ற எண்ணத்தோடு அவர் களுக்கு எனத் தனியாகப் பல திட்டங்களை அரசு தீட்டி விரைவாக நிறைவேற்றி வருகிறது.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா வினையொட்டி ரூபாய் ஒரு கோடி செலவில் மணி மண்டபம் ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளதும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் நூல் நிலைய வசதி செய்யப்படவுள் ளதும், ஆதிதிராவிடர் சமுதாயத் தினருக்குத் தமிழக அரசு அளித்த பரிசுகளாகும்.

இந்தியாவிலேயே முதல் முறை யாக ஆதிதிராவிடர்களுக்கு எனத் தனியாகத் தொழிற்பேட்டைகளை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. கோவை, பெரியார் மாவட்டங் களில் அமையவிருக்கும் தொழிற் பேட்டைகளில் தலா 100 தொழிற் கூடங்கள் வீதம் 200 தொழிற் கூடங்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனை வோர்களுக்கென அமைக்கப்பட உள்ளன. 80 கோடி ரூபாய் செல வில் இத்திட்டத்தைத் தமிழக அரசு உருவாக்குகிறது.

இரால் வளர்ப்பு நம் நாட்டிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் இலாபம் மிகுந்துள்ள தொழில் ஆகும். தமிழ்நாட்டில் கடற்கரை யோரப் பகுதிகளில் ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் ஒரு எக்டேர் வீதம் நிலம் வழங்கப் பட்டு, இரால் வளர்ப்புப் பண்ணை ஒவ் வொன்றும் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு அவற்றில் இரால் வளர்க்கும் திட்டத்தை விரை வில் தமிழக அரசு செயலாக்க உள்ளது. இத்திட்ட அமலாக்கத்தில் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த விதவைப் பெண்கள் ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தமிழகத்தில் பட்டுப்புழு வளர்ப்பு நல்ல இலாபம் ஈட்டக் கூடிய தொழிலாக இருந்து வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நிலமற்ற ஆதிதிராவிடர் குடும் பங்கள் பயன்பெறும் வகையில் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர்த்து தமிழ்நாட்டி லுள்ள ஏனைய மாவட்டங்களில் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு, பட்டுப் புழு வளர்ப்புக்குத் தேவையான பாசன வசதி, பட்டுப்புழு வளர்ப்புக் கூடங்கள், அதற்குத் தேவையான உபகரணங்கள் ஆகியவைகளும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வழங்கப்படும். 400 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் இத்திட் டத்தில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இதுமட்டுமின்றி நிலச் சொந்தக் காரர்களாக உள்ள ஆதிதிராவிடர் 4,000 நபர்களுக்கு அவர்களுடைய நிலத்தில் பட்டுப்புழு வளர்ப்பைத் தொடங்க வசதிகள் செய்து கொடுக் கப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உதவியுடன் தமிழக அரசு இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கும்.

## ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக தாட்கோ மூலம் நிதியுதவி

ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத் திற்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது தாட்கோ மூலமாகச் சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும் தனித் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் (1992-93) 2000 இந்து ஆதிதிராவிடர் பயனடையும் வகை யில் ரூ.31 கோடி திட்ட மதிப்பீட்டுடன் கூடிய ஒரு திட்டத்தினை 22 மாவட்டங்களில் செயல் படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி செயல் திட்டம் அரசு மானியம் ரூ.3 கோடிக்கும், விளிம்புத் தொகை ரூ.4 கோடிக்கும் மற்றும் வங்கிக் கடன் 24 கோடிக்கும் வகை செய்கிறது.

## சேலம் அரசு அருங்காட்சியகத்தில்

# இயற்கைப் பாதுகாப்புப் பயிற்சி முகாம்



சேலத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில், ஓமலூர் சாலையில் சேலம் அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ளது. 11.2.1976-இல் தனியாரின் முயற்சியால் தொடங்கப்பட்ட இவ்வருங்காட்சியகம், 1.4.1979-ஆம் ஆண்டு அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டு, கடந்த 16 ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

அருங்காட்சியகத்தில் கற்சிலைகள் பிரிவு, முந்து வரலாற்றுப் பிரிவு, தாவரவியல் பிரிவு, விலங்கியல் பிரிவு, நாணயவியல் பிரிவு, புவி அமைப்பியல் பிரிவு, பண்பாட்டியல் பிரிவு, ஓவியங்கள் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் உள்ளன. அருங்காட்சியகத்தில் மேற்கண்ட பிரிவுகளில் காட்சிப் பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதோடு, பல்வேறு கல்விப் பணிகளும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

கல்வி சம்பந்தப்பட்ட பல்வேறு சொற்பொழிவுகள், காட்சி வில்லைப் படங்கள் (Slides), கண்காட்சிகள், கருத்தரங்குகள், செயற்களங்கள், பயிற்சி வகுப்புகள், சிறுவர் ஓவியப் போட்டிகள், வினாடி-வினாப் போட்டிகள் ஆகியவை அருங்காட்சியகத்தில் நடத்தப்படுகின்றன. மேலும், பொதுமக்களுக்காக வாரம் ஒரு முறை கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன. இக்கல்விப் பணிகளினால் மாணவர்களும், பொதுமக்களும் மிகுந்த பயனடைகின்றனர்.

அண்மையில், புதிய நிகழ்ச்சியாக 'இயற்கைப் பாதுகாப்பு' (Nature Conservation) என்ற பயிற்சி முகாம் மாணவர்களுக்காக அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது. 3.6.92 முதல் 6.6.92 வரை நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்ட இப்பயிற்சி முகாமில், சேலம் அரசு கலைக்கல்லூரி, வைஸ்யா கல்லூரி, சேலம் சட்டக் கல்லூரி, ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளின் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர். பங்கு பெற்ற மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களாவர்.

இப்பயிற்சி வகுப்பின் நோக்கம், நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்துவதேயாகும். இருபதாம் நூற்றாண்டின் முடிவில் இருக்கும் நாம் வெகுவிரைவில் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டைச் சந்திக்கவிருக்கிறோம். இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் மிகப் பெரிய பிரச்சினையாக மக்கட் தொகைப் பெருக்கமும், சுற்றுச் சூழல் பிரிச்சினையும் நம்மை எதிர் நோக்கியுள்ளன. காடுகள் வெகு விரைவாக அழிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களும், செயற்பாடுகளும் போதுமானதாக இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஒரு நாட்டின் வளமான வாழ்விற்கு அதன் மொத்த நிலப் பரப்பில், காடுகள் 33 சதவிகிதமாக இருப்பது மிகவும் இன்றியமையாதது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால், நமது நாட்டில் 15 சதவிகிதத்திற்கும் குறைவாகவே காடுகளின் பரப்பு அமைந்துள்ளது. மேலும், வன விலங்குகளை அழித்தலும், மனிதனின் செயற்பாடுகளினால் சுற்றுச் சூழல் மாசுபடுதலும் கவனிக்கத் தக்கதாகும்.

இப்பயிற்சி வகுப்பின் முதல் நாளன்று, உயிரினங்களும் அதன் சுற்றுச் சூழலும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பது பற்றியும், காடுகளின் முக்கியத்துவமும், அதன் அழிவினால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகளும் விரிவாக எடுத்துரைக்கப் பட்டன. மனிதனின்றித் தாவரங்களினால் வாழ முடியும், ஆனால், தாவரங்களின்றி மனிதனால் வாழ முடியாது என்ற அடிப்படை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

இரண்டாம் நாளன்று, இந்தியாவில் காணப்படும் காடுகளின் வகைபாடுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும்; இந்திய வன விலங்குகளின் வகைபாடுகளையும், அவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் உணர்த்தும் வகையில் சொற்பொழிவுகளும், படக்காட்சிகளும் அமைந்திருந்தன.

பசுமை மாறாக் காடுகள், இலையுதிர் காடுகள், முட்புதர்க் காடுகள், சதுப்பு நிலக்காடுகள் ஆகிய பல வகைக் காடுகளும், உயிரினங்களைப் பாதுகாப்பதில் அவற்றின் பங்கு, அல்லது உயிரினங்களின் வளர்ச்சிக்கு வழிவகுப்பது போன்றவை விளக்கப்பட்டன. மாணவர்களுக்கு உயிரினங்களைக் கண்டு மகிழும் ஈர்ப்புச் சக்தி அதிகமாக வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் வன விலங்குகள், தாவரங்கள் பற்றிய எழில் மிகு காட்சி வில்லைப் படங்கள், சொற்பொழிவுகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

மூன்றாம் நாளன்று; சுற்றுச் சூழல் மாசு படுதல் (Pollution), மாசு படுதலின் வகைகள், அதனால் ஏற்படும் பாதிப்பு அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பன பற்றியும் விளக்கம் தரப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகளால் சுற்றுச் சூழல் மிக அதிக அளவில் பாதிக்கப் படுகிறது. மேலும், மாசுக் கட்டுப்பாடு என்பது வளர்ந்துவரும் நாடுகளிலும் முக்கியப் பிரச்சினை ஆகிவிட்டது. இவற்றை மாணவர்கள் தெளிவாக அறியும் வண்ணம் படக்காட்சிகள், சொற்பொழிவுகள் நடைபெற்றன.

நான்காம் நாளன்று; நீர்-நிலம் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும், இவற்றை எவ்வாறு அதிகப் பயன் பெறும் வகையில் பயன்படுத்த இயலும் என்பது பற்றியும் விளக்கப் பட்டது. மேலும், சக்தியை (Energy) சேமிப்பது எவ்வாறு என்பது பற்றியும், மாற்றுச் சக்திப் பொருட்களின் (Alternative Energy Sources) தத்துவம் பற்றியும் விளக்கப்பட்டது.

வரலாறு, கலை, அறிவியல் முதலிய பல்வேறு கல்விப் பிரிவில் படிக்கும் இம்மாணவர்கள், இந்த நான்கு நாட்கள் பயிற்சி வகுப்பின் மூலம் இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தை மிகவும் உணர்ந்தவர்களாயினர்.



இப்பயிற்சியில் பங்கு கொண்ட மாணவர்கள் அனைவரும் இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்த செயல்வீரர்களாக, இக்கருத்தை மற்றவர்களிடையே பரப்புபவர்களாக, தம் கல்லூரிகளிலும், வீடுகளிலும், பொது இடங்களிலும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பவர்களாகத் திகழ்வார்கள் என்று பெரும் நம்பிக்கை கொள்ளலாம்.

இயற்கையைக் கண்டுகளிக்கும் பொருட்டு, மலை வழிப் பயணமாக (Trekking Programme) மாணவர்களை அழைத்துச் செல்லுதலிலும், இயற்கை சூழ்ந்த வனப்பகுதிகளில் வினாடி-வினாப் போட்டிகள், ஓவியப் போட்டி நடத்துதலிலும், சேலம் அருங்காட்சியகம் ஏற்கெனவே முன்னோடியாக உள்ளது. அருங்காட்சியக வளாகத்தில் தற்பொழுது நடத்தப்பட்ட இப்பயிற்சி வகுப்பை சேலம் மாவட்ட வனப் பாதுகாவலர் திரு. எஸ். பாலாஜி அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தம் தொடக்கவுரையின்போது, அழிந்து வரும் காடுகளின் முக்கியத்துவம் பற்றியும், மாணவர்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கைப் பற்றியும் விரிவாகப் பேசினார். பயிற்சியின் நிறைவு நாளன்று சேலம் ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.எம்.வெள்ளியங்கிரி அவர்கள், மாணவர்கள் இயற்கையைக் கண்டு மகிழ்வதன் அவசியத்தை எடுத்துரைத்து, பங்கு பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.


ஜா.ரா. அசோகன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்


## சென்னைக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம்

சென்னை மெரினா கடற்கரையில், ரூ.5 கோடி செலவில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்று அமைக்கப்படுகிறது.

கடலில் உயிரினங்கள் எப்படி வாழ்கிறதோ, அதே அமைப்பில் கடலைப் போலக் காட்சியகம் அமைக்கப்படும். ஆசியா கண்டத்திலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு இந்தக் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் அமைக்கப்படும்.

இந்த காட்சியகம் அமைக்கும் திட்டத்தில் முதல்கட்டமாக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் துவக்கப் படவுள்ளன. இந்த காட்சியகத்தின் கடல்வாழ் உயிரினங்களான ஜால், டால்பின் போன்ற மீன் வகைகள் கடலில் உள்ளது போல இங்கு அமைக்கப்பட்டிருக்கும்.

# நூல் நயம்

### கிரியா யோகம்

**மூலம்: நித்யா முக்தானந்தா**
**தமிழில்: மகரிஷி க. அருணாசலம்**
பக்கம்:52 விலை:ரூ.6/-

**ரி**ஷிகேசம், தெய்வநெறிக்கழக நிறுவனரான பரமஹம்ச சிவானந்தரின் முதன்மை மாணாக்கரான நித்ய முக்தானந்தர், பல ஆண்டுகள் தமது குருநாதரின் நேர்ப் பார்வையில் 'கிரியா யோகம்' பயின்று அனுபவம் அடைந்தவர். அவர் எழுதிய ''கிரியா யோக்'' என்ற இந்தி நூலின் தமிழ் வடிவம் இது.

'கிரியா யோகம்' என்றால் என்ன?

யோக நூல்களில் சொல்லப்படும் பதினைந்து நாடிகளில் மிக முக்கியமானவை மூன்று நாடிகள். பிங்கலை, இடா, சுஷுசும்னா (சுழுமுனை) என்பன. சுழுமுனை மிக முக்கியம் வாய்ந்தநாடி. சாதாரணமாக காற்று மூக்குத் துவாரங்கள் வழியாக போய்வந்து கொண்டிருக்கிறது. சுழுமுனைநாடி புருவங்களிலிருந்து புருவங்களின் மத்தியில் திருகுடி என்னும் இடத்திலிருந்து முதுகந்தண்டின் அடிநுனிவரை இருக்கிறது. இந்த அடிநுனியை மூலாதாரம் என்கின்றனர். மூலாதாரம் ஒரு விரற்கடை அளவுக்கு மூடியுள்ளது. இதை ஒரு மனப் பயிற்சியால் வெப்ப மூட்டி கரைத்து அங்குள்ள உயிர் ஆற்றலை சுழுமுனை குழல்வழியே திரிகுடிக்கு ஏற்றுகின்றனர். ஏறிய ஆற்றல் அவ்வழியே இறங்குகின்றது. இப்படி விரும்பியபோது ஏற்றவும் இறங்கவும் செய்யும் செயலே கிரியா யோகம்.

உடலோம்பலில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் உயிர் எடுத்ததன் பயனை இழந்துவிடாமல் உயிரை வளர்க்கும் இந்தத் தந்திரத்தை பயின்றுபயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூலை தமிழில் தந்துள்ளதாகச் சொல்கிறார் அறிஞர் மகரிஷி க. அருணாசலம். அவரின் இம்முயற்சி பாராட்டுக்குரியது.

பிரணாயாமம் செய்வோருக்குப் பெரிதும் பயன்படும் இந்நூல்.

—மாமூலன்

### குறள் வழிச் சிந்தனைகள்

**ஆசிரியர்: ப. முருகன்**
**வெளியீடு:**
தி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை-98.
பக்கம்:142 விலை:ரூ.14/-

**வா**ன்புகழ் வள்ளுவர் பெருமை பேசும், பைந்தமிழ்க் கட்டுரைகளின் பெட்டகம். இரண்டடித் திருக்குறள் குறித்த 27 கட்டுரைகள் இந்நூலில் அடக்கம்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., சிலம்பொலி செல்லப்பன், சி.பா., முதலான தமிழறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் கவின்மிகு தொகுப்பு.

### உடற்கல்வியும் சுகாதாரக் கல்வியும்

**ஆசிரியர்கள்: எஸ். டேவிட்சன்**
**வை. இளங்கோ**
**வெளியீடு:**
சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-வது தெரு,
சென்னை-14.
பக்கம்:213 விலை:ரூ.25/-

**உ**டல் நலம் பெற உடற் பயிற்சிகள் இன்றியமையாததாகிறது. அவற்றை வலியுறுத்துகிறது இந்தப் புத்தகம். எளிய நடையில், தக்க விளக்கப் படங்களும் உள்ளன. பள்ளி மாணவர்க்குப் பயனுள்ள கையேடு.

**கீ**ழ்க்காணும் இரண்டு நூல்களும் மதுரை, காந்திய இலக்கியச் சங்கத்தால் வெளியிடப் பெற்றவை.

*1. பிரார்த்தனை அர்த்தமும் ஆற்றலும்*
விலை:ரூ.5 பக்கம்:48

**அ**ண்ணல் காந்தியடிகள் பிரார்த்தனை என்ன? ஏன்? எப்படி? என்பதை விளக்கும் கையேடு.

**2. பதினொரு மகா விரதங்கள்**
விலை:ரூ.5 பக்கம்:58

**அ**ண்ணல் காந்தியடிகள் மேற்கொண்ட விரதங்கள் குறித்து விளக்கும் நூல் இது. சத்தியம், அகிம்சை, எளிய வாழ்க்கை முதலான பண்புகளின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்கிறோம்.

### எங்கள் போதிமரம்

**ஆசிரியர்: தென்னம்பட்டு ஏகாம்பரம்,**
**வெளியிட்டோர்:**
கலைஞன் பதிப்பகம்,
10, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.
பக்கம்:124 விலை:ரூ.16/-

**க**வியரங்கில் பாடிய கவிதைகள், தனிக் கவிதைகள், ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம் என 33 தலைப்புகளின் கீழான கவிதைத் தொகுப்பே இந்நூல்.

கடலில் சிறிது தூரத்திற்கு அலை; அதன்பின் அமைதியான நீர்ப்பரப்புப் போல, இந்நூலின் தொடக்கப் பக்கங்கள் சிலவற்றில் மரபுக் கவிதைகள்; அதன்பின் புதுக் கவிதைகள் காணப்படுகின்றன; ஒன்று அப்படி இருந்திருக்கலாம் அல்லது இப்படியிருந்திருக்கலாம் என்பது நம் எண்ணம். ஆனால், ஒரு கல்லில் இரு மாங்காய் என்ற நினைவில் ஆசிரியர் எழுதியிருக்கலாமோ என்னவோ?

அத்தனைக் கவிதைகளிலும் புதுப் புதுச் சொல்லாட்சிகள் - புதுக் கற்பனைகள் - புதுப்புது கருத்துக்கள் இருப்பது படிக்கும் எவருக்கும் மன நிறைவளிக்கும்.

-'சோழராஜா'.

### உலகச் சிந்தனையாளர்களின் பொன்மொழிகள்

**ஆசிரியர்: கே.ஜி.எஃப். பழனிச்சாமி**
**வெளியீடு:**
சேது அலமி பிரசுரம்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.
பக்கம்:104 விலை:ரூ.13/-

''**உ**ழைப்பை விற்கலாம்; ஆன்மாவை விற்க முடியாது. இதயத்தில் ஈரமும், இரத்தத்தில் சூடும், மூளையில் விரைவும், ஆன்மாவில் சாந்தியும் பெறுவோர் வாழ்வில் முன்னேற்றம் அடைவார்கள்' ரஸ்கின் சொன்ன பொன்மொழி இது. இதுபோன்ற நம்நாட்டு, மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் சிந்திய சிந்தனை முத்துக்கள் அடங்கிய நூல்.

### பரீட்சையில் நிறைய மதிப்பெண் பெறுவதற்கு ஏற்ற வழிகள்

**ஆசிரியர்: எஸ்.ஆர். கோவிந்தராஜன்**
**வெளியீடு:**
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.
பக்கம்:80 விலை:ரூ.10/-

**ப**ள்ளிக்கூடமெல்லாம் இப்போது திறந்திருக்கிறது. மாணவர்கள் புத்தகச் சுமையோடு சென்று கொண்டிருக்கிறார்கள். தேர்வுகளும் ஒவ்வொன்றாக வரவிருக்கின்றன. வருகின்ற தேர்வுக்கு இப்போதிலிருந்துத தயாராக வேண்டும். அதற்கு வழி காட்டுகிறது இந்நூல். 'தேர்வில் வெற்றி பெறுவது எப்படி?' இதற்கு விளக்கம் தரும் கையேடு.

- பி.வி. கிரி.





# வன விலங்குப் புகலிடங்கள்

தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம்,கர்நாடக மாநிலங்களில் இருக்கும் முக்கியப் பறவை சரணாலயங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

**தமிழ்நாடு:** முதுமலை, கோடிக்கரை, ஆனைமலை, முண்டன் துறை, களக்காடு, கிண்டி, வேடன்தாங்கல்.

**கேரளம்:** தேக்கடி (பெரியார்), இராவிகுளம்.

**கர்நாடகம்:** பாண்டிபூர், நாகர் ஹலே, ரங்கன்திட்டு.

**ஆந்திரம்:** நெல்லப்பட்டு.

முதுமலை நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்திலிருந்து 65 கி.மீ. தொலைவில் மைசூர் செல்லும் பாதையில் இந்தச் சரணாலயம் உள்ளது. அடர்ந்து வளர்ந்த தேக்கு மரங்களும், மூங்கில் புதர்களும் மிகுதியாக நிறைந்த வனப்பகுதி இது. இங்கே யானை, காட்டெருமை, கடமான், புள்ளிமான், காட்டு நாய் (Dhole) சிறுத்தை, மலைப்பாம்பு, நீர்நாய், முதலை போன்ற விலங்குகளும் பல்வகைப் பறவைகளும் வாழ்கின்றன.

ஒவ்வோராண்டும் பிப்ரவரி மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரை இந்தச் சரணாலயத்தைச் சுற்றிப் பார்க்க ஏற்ற பருவம். அபயாரண்யம், கார்குடி மிசினகுடி, தெப்பக்காடு போன்ற இடங்களில் தங்குமிடமும், உண்ணும் வசதிகளும் உள்ளன. தெப்பக்காட்டில் இந்திய அரசு சுற்றுலாத் துறையின் இளைஞர் விடுதி இருக்கிறது. உதகை மைசூர் பேருந்தில் சென்று தெப்பக்காட்டில் இறங்கிக் கொள்ளலாம். முன்கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ள Wild Life Warden, Mahalingam Buildings, Coonoor Road, Ooty என்ற முகவரிக்கு எழுதலாம்.

**கோடிக்கரை சரணாலயம்**

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்துக்கு அருகே உள்ளது. இங்கே சதுப்பு நிலங்களும், கடலோரத்தில் சிறிய காடும் இருக்கின்றன. புள்ளி மான், பிளாக் பக், பெரல் போனிஸ், பெரல் பன்றிகள், குள்ள நரிகள், முயல்கள் போன்ற விலங்குகளும், பூநாரை (Flammingo) போன்ற நீர்ப் பறவைகளும், கடற்கரையில் கல்ஸ் (Gulls) டெர்ன்ஸ் (Terns), ntl; வேடர்ஸ் (Waders) போன்ற பறவையினங்களையும் காணலாம்.

சுற்றுலாப் பயணிகளுக்கு ...

பூநாரை இல்லம் என்னும் ஓய்வு மாளிகை 'சுற்றுலாப் பயணிகளுக்கென்று இருக்கிறது. திருத்துறைப் பூண்டியிலிருந்து புகை வண்டி, பேருந்து மூலமாகச் செல்ல வசதியுண்டு. மேலும் விவரங்களை அறியத் தஞ்சை மாவட்டக் காட்டிலாகா அலுவலருடன் தொடர்பு கொள்ளலாம்.

**ஆனைமலை சரணாலயம்**

கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் இது உள்ளது. ஆனைமலையில் உள்ள 'டாப்ஸ்லிப்' (Top Slip) என்ற இடத்திலிருந்து சரணாலயத்தின் எல்லை துவங்குகிறது. அடர்த்தியான மழைக் காடுகளும், தேக்கு மரங்களும், ஆனைமலையில் உள்ளன. சிங்கவால் குரங்கு (Lion Tailed Mecaque) நீலகிரி வரை ஆடு (Nilgiri Tahr), யானை, காட்டெருமை, சிறுத்தை, கரடி, காட்டுப்பன்றி, காட்டு நாய், நீலகிரி லங்கூர் குரங்கு, கடமான், புள்ளிமான், நான்கு மரிமான்,

பலவிதமான அணில்கள் போன்றவற்றை இங்கே காணலாம். புலிகள் இருப்பது தெரிந்தாலும், அபூர்வமாகவே தென்படுகின்றன.

டாப் ஸ்லிப்பில் தங்கவும், உண்ணவும் வசதி உண்டு. பொள்ளாச்சியிலிருந்து பரம்பிக்குளம் செல்லும் பேருந்து இவ்வழியாகச் செல்லுகிறது.

**இடவசதிக்கு:**

Wild Life Warden
Annamalai Sanctuary
Mahalingapuram, Pollachi.
என்ற முகவரியை அணுகலாம்.

**முண்டன்துறை சரணாலயம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ளது. வறண்ட இலையுதிர்க் காடுகளை இந்தச் சரணாலயத்தில் அதிகம் காணலாம். இங்கே புள்ளிமான், கடமான், கரடி, குரங்குகள், காட்டு நாய், சிறுத்தைப் புலி, முதலியவைகளைக் காணலாம். சிங்கவால் குரங்குகள் இங்கு நிறைய இருக்கின்றன.

அக்டோபர் முதல் ஜனவரி வரை சுற்றுலா சென்று மிருகங்களைக் காணலாம். இங்கே தங்க வசதியும், உண்ண வசதியும் உண்டு.

**தேவைகளுக்கு:**

Wild Life Warden,
Shencottai-2
என்ற முகவரியை அணுகவேண்டும்.

**களக்காடு சரணாலயம்**

திருநெல்வேலி நகரத்திலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது களக்காடு எனும் கிராமம். அங்கிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் இந்தச் சரணாலயம் தொடங்குகிறது. இந்தச் சிங்கவால் குரங்குகளுக்குப் புகழ்பெற்ற இடம். ஒரே இடத்தில் 4 வகைக் குரங்குகளையும், அதாவது சாதாரணக் குரங்கு, நீலகிரிக் குரங்கு, பானட் மெக்காக் (Bonnet Meccaque) சிங்கவால் குரங்கு அனைத்தையும் காணலாம். நீலகிரிக் காட்டாடு, கடமான்





வகை, கரடி, காட்டெருமை, யானை, புலி, பறக்கும் அணில், சிறுத்தை, காட்டு நாய், பாங்கோலின் (Pangolin) உட்பட பல விலங்குகள், பல வகைப் பறவைகள், ஊர்வன ஆகியவற்றை இங்கே காணலாம்.

செப்டம்பர் தொடங்கி மார்ச் வரை நல்ல பருவம், சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் 'செங்கலத்தேரி இல்லம்' என்னும் தங்கும் இல்லம் உள்ளது. இதற்கு நடந்துதான் செல்ல வேண்டும். உணவுக்கு வேண்டியவற்றைக் களக்காடு கிராமத்திலிருந்து தான் கொண்டு செல்ல வேண்டும்.

**மற்ற விவரங்களுக்கு,**

Wild Life Warden,
Kalakadu Sanctuary,
Tirunelveli
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

**வேடந்தாங்கல் பறவை சரணாலயம்**

சென்னையிலிருந்து சுமார் 80 கி.மீ. தொலைவில் உள்ளது இந்தச் சரணாலயம், கருங்குழியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள வேடந்தாங்கல் கிராமத்தில் ஒரு சிறிய பாசன ஏரியில் நிறையக் கடம்ப மரங்கள் உள்ளன. நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரையில் இங்கே கார்முரன்ஸ் (Carmorants), ஈக்ரேட்ஸ் (Egrets), சாம்பல் நிறக் கொக்குகள், ஹெராான்ஸ் (Herons), அலைவாய் கொக்குகள் (Open billed Stocks), டார்டர் (Darter), ஸ்பூன் பில் (Spoon Bill), வெள்ளை இப்பிஸ் (White Ibis), நைட் ஹெரான் (Night Herons), கிரிப் (Crebe), கிரே பெலிகன் (Gray Pelican), கார்கானி சிறவுகள் (Garganey), ஷாவெலஸ் (Shovellers), துடுப்பு வால் பறவைகள் (Pin Tails), வாத்துகள், உள்ளான்கள், சேன்டு பைப்பர் (Sand Pipers) போன்ற இடம் பெயர்ந்து வரும் பறவைகளும் இங்கேயே இருக்கக்கூடிய கூட்ஸ், கடல் அலா (Terns) நீர்க்கோழி (Moorhens) ஆகிய பறவைகளையும் இங்கே காணலாம்.

தாம்பரம், செங்கல்பட்டு, மதுராந்தகத்திலிருந்து வேடந்தாங்கலுக்குப் பேருந்து வசதி உண்டு. தங்குவதற்கு உணவு வசதியுடன் கூடிய வனத்துறை ஒய்வு இல்லம் உள்ளது.

முன் ஏற்பாடு செய்துகொள்ள,

Wild Life Warden,
49, 4th Main Road,
Adyar, Madras-20
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**கிண்டி தேசியப் பூங்கா**

சென்னை நகரில் அடையாற்றுக்கும், கிண்டிக்கும் இடையே சுமார் 2.82 ச.கி.மீ. பரப்பளவில் இந்தப் பூங்கா அமைந்துள்ளது. புள்ளிமான், பிளாக்பக் (Black Buck) குள்ள நரி, ஏறத்தாழ 187 வகைப் பறவையினங்கள் இங்கு உள்ளன. சுற்றிப் பார்க்கச் சிறு கட்டணம் செலுத்த வேண்டும்.



**கர்நாடக மாநிலம்**

**பண்டிபூர் சரணாலயம்**

மைசூர், உதகை நெடுஞ்சாலையில் முதுமலை சரணாலயத்திற்கு அடுத்தாற்போல் உள்ளது. முதுமலையைப் போலவே, இங்கும் விலங்குகளும், பறவைகளும் உள்ளன. தங்கவும், உண்பதற்கும், ஓய்வு விடுதிகள் உள்ளன.

மேலும் விவரங்களுக்கு
The Field Director
Bandipur Tiger Reserve,
Government House Complex
Mysore City
என்ற முகவரியுடன் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

**நாகர் ஹலே சரணாலயம்**

இது மைசூரிலிருந்து சுமார் 90 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள அடர்ந்த காடுகளில் யானை, புள்ளிமான், காட்டெருமை, காட்டுப்பன்றி, பானெட், மெக்காக் குரங்கு, காட்டுநாய் ஆகியவற்றைக் காணலாம். பெங்களூர், மைசூரிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு. உணவுடன் தங்க வசதியுண்டு.

தேவைகள் குறித்து:
Assistant Chief Conservator of Forests
Wild Life Sub-Division
18th Cross, Malleswaram
Bangalore
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**ரங்கன்திட்டுப் பறவை சரணாலயம்**

மைசூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு அருகே உள்ளது. காவிரி ஆறு இரண்டாகப் பிரிந்து ஸ்ரீரங்கப்பட்டிணத்தைச் சூழ்ந்து பின்பு ஒன்று சேருகிறது. இங்குள்ள சிறிய தீவுகளில் பறவைகள் கூடு கட்டிக் குஞ்சு



பொரிக்கின்றன. நீர்க்காக்கை, Carmorants, Darter, Pondheron, Cattle Egrets, Night Heron, Egrets, Open Bill Storks, White Ibis, Spoon Bills, Flying Fox, Stone Plaver, River Tern முதலிய அநேக விதப் பறவைகளை இங்கு ஜூலை மாதம் முதல் காணலாம். சிறிய படகுகளில் ஏறி, பறவைகள் கூடு கட்டியுள்ள தீவுகளைச் சுற்றி வரலாம். இங்கே சில முதலைகளையும் காணலாம்.

**கேரள மாநிலம்**

**இராவிகுளம் பூங்கா**

மூணாறிலிருந்து சுமார் 22 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது இந்தச் சரணாலயம். உயர்ந்த மலைகளில் நீலகிரிக் காட்டாடுகளை இங்கு காணலாம். யானை, காட்டெருமை, கடமான், வரை ஆடு, நீலகிரிக் குரங்கு, சிங்கவால் குரங்கு, பெரிய அணில், சிறுத்தை போன்றவை இங்கு காணப்படுகின்றன.

அக்டோபர் முதல் ஏப்ரல் வரை சென்று காண நல்ல பருவம். மூணாறுக்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

**தங்குமிடத்திற்கு**

The Divisional Forest Officer,
Munnar, Idukki District
Kerala
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

### சாண எரிவாயுக் கலன்கள் அமைத்தல்

1991-92-ஆம் நிதியாண்டில் 1,020 கலன்கள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், குறியீட்டினை மிஞ்சி 1,247 கலன்கள் அமைக்கப் பட்டு, கோவை மாவட்டம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது.

நடப்பு நிதியாண்டில் 1,200 கலன்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 57 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மற்றும் 150 கலன்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

### தூளா (புகையில்லா அடுப்புகள் அமைத்தல்)

இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 6000-க்கு மேல் 8800 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 6000 அடுப்புகள் கிராமப் புறப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம் (டோக்ரா)

இத்திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் ஏற்கெனவே 49 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு, மகளிர் பொருளாதார நிலையை மேம்படுத்த பல்வேறு வகையான உற்பத்திப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேலும் 59 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கிடத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், இது வரை 328 பெண்களுக்கு ரூ.7.470 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### சமூகக் காடுகள் திட்டம்

சமூகக் காடுகள் திட்டம் கோவை மாவட்டத்தில் 1992-93-இல் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம், ரூ· 28.380 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. 13,50,000 செடிகள் வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 'சிடா' நிறுவனத்தின் உதவியுடன் இந்த நிதியாண்டில் 21 கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், 21 சமூகக்காடு விரிவு அலுவலர்கள், 105 ஊர்நல அலுவலர்கள், 1000 தொகுப்பு வீடுகள் பயனாளிகள் மற்றும் 20 காவலர்களுக்கு 22.7.92 முதல் ரூ.51,625 செலவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

### 1991-92-இல் திட்டப்பணிகள் சாதனை விவரம்

(1.) ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

| வ. எண். | பணியின் விவரம் | சாதனை | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | தொகுப்பு வீடுகள் | 1980 | 306.250 |
| 2. | பள்ளிக் கட்டடங்கள் | 78 | 107.640 |
| 3. | ஊராட்சிக் கட்டடங்கள் | 19 | 13.300 |
| 4. | சத்துணவு மையங்கள் | 72 | 50.400 |
| 5. | பாசனக் குட்டைகள் | 112 | 109.300 |
| 6. | பாசனக் குளங்கள் மேம்படுத்துதல் | 14 | 14.850 |
| 7. | சாலைகள் | 181.02 கி.மீ | 296.680 |
| 8. | ஊராட்சி வேலைகள் | 1452 | 13.084 |
| 9. | சிறு பாலங்கள் | 3 | 6.820 |
| 10. | சமூகக் காடுகள் | 15.000 (450 எக்டேர்) | 28.380 |

| | | | |
|---|---|---|---|
| (2.) | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை | 9942 | மானியம் ரூ.258.246 இலட்சம் |
| (3.) | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சி பெற்றவர்கள் | 1470 | ரூ.21.060 இலட்சம் |
| (4.) | சாண எரிவாயுக்கலன் அமைத்தல் | 1247 | இந்து மாநிலத்தில் முதலிடம் |
| (5.) | தூளாக்கள் அமைத்தல் எண்ணிக்கை | 8800 | ரூ.5.456 இலட்சம். |

## சென்னை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு...

"சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குத் தனியார் பள்ளிகளைவிட அதிகமாகச் சம்பளம் - அரசாங்க விகிதத்தில் வழங்கப்படுகிறது. தனியார் பள்ளிகளில் இருக்கும் வேலைப் பளுவும் இவர்களுக்கு இல்லை. ஆகையால், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் முழு மூச்சுடன் பணியாற்றி, தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடு பட வேண்டும்.

"மாநகராட்சிப் பள்ளிகளில் சுமார் 2.50 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களுள் கூர்மையான அறிவுடைய மாணவர்களைப் பல சோதனைகள் நடத்தித் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சிகள் அளிக்க வழிவகை செய்யப்படும். மாநகராட்சி மருத்துவர்கள் மூலம் மாணவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்படும்."

[சைதாப்பேட்டை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற 6 முதல் 12-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கும், உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் அளித்து, சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில் கூறியது.]

# கருத்தடை செய்து கொண்டோர்க்குத் தங்கப்பதக்கம் பரிசளிப்பு

சென்னை மாநகரில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இரண்டாவது தங்கப் பதக்கக் குலுக்கல் 15.7.92 அன்று மாலை சென்னை ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள மாநகராட்சி தாய்சேய் நல மையத்தில் நடைபெற்றது.

கடந்த ஜூன் மாதம் சென்னை மாநகராட்சி மருத்துவ மனைகள், அரசு மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ மனைகள், தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மருத்துவ மனைகளில் மொத்தம் 2,520 பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். இவர்களுக்குப் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டிருந்தன. கூப்பன்களின் மறு பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, குலுக்கல் நடைபெற்றது. சென்னை மாநகராட்சியின் துணை ஆணையாளர் திரு. சி. சந்திரமௌலி இ.ஆ.ப., அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுத்தார்.

முதல் பரிசு அடையாறு காந்தி நகரைச் சார்ந்த திருமதி இலட்சுமிக்குக் கிடைத்தது. இவருக்கு 3.750 கிராம் எடையுள்ள இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்.

மூன்று இரண்டாவது பரிசுகள் - முறையே பல்லாவரத்தைச் சேர்ந்த திருமதி சாந்தி, வில்லிவாக்கத்தைச் சார்ந்த திருமதி பொன்மலர், கொடுங்கையூரைச் சேர்ந்த திருமதி ஜூலியட் ஆகியோருக்குக் கிடைத்தன.

இவர்களுக்குத் தலா 3.750 கிராம் உள்ள ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும். குலுக்கல் விழாவில் இந்திய மக்கள் தொகைத் திட்டம் ஐந்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹைமா பாலச்சந்திரன் வரவேற்புரை வழங்கினார்.

### பெரியார் சரணாலயம்

மதுரையிலிருந்து கோட்டயம் செல்லும் பாதையில் 140 கி.மீட்டர் தொலைவில் குமுளி அருகில் உள்ளது இந்தச் சரணாலயம். பெரியாற்றின் குறுக்கே அணை எழுப்பியதால் உண்டான செயற்கை ஏரி இங்குள்ள அனேகக் குன்றுகளைச் சூழ்ந்து கொண்டுள்ளது. இக்குன்றுகளில் யானை, காட்டெருமை, புலி ஆகியவற்றைக் காணலாம். மேலும், காட்டுப் பன்றி, நீலகிரிக் குரங்கு, கடமான், காட்டு நாய், புலி ஆகியவற்றையும் பார்க்கலாம். படகில் பயணம் செய்துதான் இந்தச் சரணாலயத்தைப் பார்க்க முடியும். அதிக அளவில் கழுகுகளையும், பலவிதப் பறவைகளையும் இங்கே காணலாம். ஏரியில், ஆமைகள், நீர் நாய்கள், நீர்ப் பறவைகளும் உள்ளன.

மதுரை - கோட்டயத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. இங்கும், அருகில் 5 கி.மீட்டர் தொலைவில் உள்ள குமுளி என்ற ஊரிலும் தங்க வசதிகள் உண்டு.



**மற்ற விபரங்களுக்கு:**

The Field Director,
Periyar Tiger Reserve,
Thekkady (Near Kumili)
Kerala

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

### ஆந்திர மாநிலம்

### நெல்லப்பட்டுப் பறவை சரணாலயம்

சென்னைக்கு வடக்கே 100 கி.மீட்டர் தொலைவில் துரைவாரி சத்திரம் என்றும் ஊருக்கு அடுத்தாற்போல் இந்தப் பறவை சரணாலயம் உள்ளது. பெலிகன் பறவைகள், இங்கே ஒரு பாசன ஏரியில் கூடு கட்டிக் குஞ்சு பொரித்து வருகின்றன.

நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை இங்கு இப் பறவைகளைக் காணலாம்.

('மதராஸ் நாச்சுரலிஸ்ட் சொசைட்டி'யின் 'நமது சுற்றுப்புறம் -ஒரு கண்ணோட்டம்' தொகுப்பு ஆசிரியர்கள் வி.ஜே. ராஜன் - எம். செல்வகுமார்.)

கோவை மாவட்டம்:

# சமுதாய நலப்பணிகள்

**1992-93**-ஆம் நிதியாண்டில் சுமார் 2,239 வேலைகள் ரூ.606.238 இலட்சத்தில் நிறைவேற்றத் திட்டமிட்டு செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரம் மற்றும் நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது முதல் தவணையாக ரூ.199.310 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைப் பயன்படுத்தி, சென்ற ஆண்டு நிலுவை வேலைகளும், நடப்பு ஆண்டில் கூட்டுக் குடியிருப்புகள், பத்து இலட்சம் கிணறுகள் திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிக்காக ரூ.26.670 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து 5 பாசனக் குளங்கள் மேம்படுத்தும் பணியும், 15 புதிய கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், 18 கி.மீ. மெட்டல் சாலை அமைக்கும் பணிகளும் துரித கதியில் நடந்துவருகின்றன. இதுவரை சுமார் 10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 15.8.92-க்குள் முடிக்கப்படும்.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் நிதியாண்டில் ரூ.843.30 இலட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் எடுக்கப்பட்டு, இதுவரை 658 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1992-93-ஆம் நிதியாண்டில் ரூ.1,122 இலட்சம் மதிப்புள்ள வேலைகளை எடுத்துச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரமும் நிதி ஒதுக்கீடும் எதிர்பார்க்கப்படுகிறது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் குறித்து புதிதாகக் கோவை மாவட்டத்தில் கணக்கெடுத்து முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 4,74,074 குடும்பங்களில் 1,83,871 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது மொத்தக் குடும்பங்களில் 39 சதவிகிதமாகும். கணக்கெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து 1992-93- ஆம் நிதியாண்டில் உதவி



செய்யவேண்டிய குடும்பங்களைத் தேர்வு செய்ய ஊராட்சி அளவிலான குழுக்கள் (Task Force) கூட்டம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கென மத்திய அரசு மானியமாக முதல் தவணையாக ரூ.30.431 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1992-93-ஆம். நிதியாண்டில் 11,000 குடும்பங்களுக்கு ரூ.324 இலட்சம் மானிய உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் (டிரைசம்)

இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் நிதியாண்டில் 1,348 நபர்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டு அரசு ஒதுக்கீடும் கிடைத்துள்ளது. பயிற்சியளிக்கப்பட வேண்டியவர்கள் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்

# ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 முதல் வாரந்தோறும், பொதுமக்களை மாவட்டவாரியாகச் சுழல் முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து, அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

20.7.92 அன்று, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலிருந்து வந்திருந்த 8000-க்கும் மேற்பட்ட பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களின் குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து அவற்றிற்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 17 பேர்களுக்கு ரூ.2,39,250, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக இருவருக்கு ரூ.40,000 மற்றும் முதியோர் ஓய்வுத் தொகை 71 நபர்களுக்கும் ஆக மொத்தம் 90 நபர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பர்கூர் தொகுதியிலுள்ள 69 சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்க்க, சத்துணவுக் கூடங்கள் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.9,60,000-க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கினார்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் தாம்பரம், கடப்பேரியைச் சேர்ந்த ராமசாமி என்பவரின் மகன் முருகன் என்ற பையன், தான் ஊனமுற்றவன் என்றும், தன்னால் நடக்க இயலாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், தன்னை ஊனமுற்றோர் விடுதியில் தங்க வைத்துக் படிக்க உதவி செய்ய வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 20.7.1992 அன்று தலைமைச் செயலகத்தில் மனுகொடுத்தார்.

அவருடைய மனுவில் வேண்டியுள்ள கோரிக்கையை உடனே செயல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள கூடுவாஞ்சேரியில் உள்ள அரசு மானியத்துடன் பிரபாவதி டிரஸ்டினால் நடத்தப்படும் ஊனமுற்றோருக்கான பள்ளியில், மனு கொடுத்த நாளான 20.7.1992 திங்கட்கிழமையன்றே சேர்க்கப்பட்டு திரு. முருகன் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதேபோல, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சாம்பசிவம் என்ற வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் தன்னை முதியோருக்கான இல்லத்தில் சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனு கொடுத்தார். அம்மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை உடனடியாகச் செயல்படுத்துமாறு உத்தரவிட்டதின் பேரில், திரு. சாம்பசிவம், சென்னை ஆந்திர மகிள சபா நடத்தும், முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

போர்க்கால அடிப்படையில்:

# கோவை, நீலகிரி மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள்

*மிகப் பெரிய மலை!*

சுரங்கப்பாதை கூடத் தெரிகிறது.... துணிந்து உள்ளே செல்கிறோம்.

அங்கே நூற்றுக் கணக்கானவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்!

மேலே மேலே செல்கிறோம்.

இப்போது, 600 மீட்டர் வரை, போகலாம் என்கிறார் ஒருவர்.

அப்படியானால், இது எங்கே போகிறது? எதற்காக இந்தச் சுரங்கம்?

அது ஒரு கதை... உண்மைக் கதை!

## பில்லூர் குடிநீர்த் திட்டம்

கோவை நகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது செல்வபுரம். இங்கு உள்ளதுதான் கட்டன் மலை. இந்த மலையில்தான் சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது.

'நீரின்றி அமையாது' உலகு என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பட்டி தொட்டிகளிலும் குடிநீர் கிடைத்திட அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அதில் ஒரு மிக முக்கியமான திட்டம்தான், கோவை மாவட்டப் பில்லூர் குடிநீர்த் திட்டம்.

கோவை நகரிலிருந்து 70 கி.மீ. தூரத்தில் உள்ளது பில்லூர் அணை. பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணை. இந்த நீரைக்கோவை மாவட்டத்திற்கு வழங்க, போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடந்து வருகின்றன.

பொதுவாக, சுரங்கப்பாதை விவசாயத்திற்கும், ரயில்பாதை அமைப்பதற்கும், மின் திட்டத்திற்கும்தான் அமைப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால், குடிநீருக்காக மலையைக் குடைந்து சுரங்கப்பாதை அமைக்கப்படுவது, இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவையாகும். அதுவும் 4½ கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்படுவது என்பது, விந்தைக்குரிய செய்தியாகும்.

**கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

**இதேபோல நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி மற்றும் கூடலூர் குடிநீர்த் திட்டமும் துரிதகதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

உலக வங்கி உதவியுடன் ரூ.100 கோடி செலவில், இப்போது இந்தப் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக, இந்தச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருவதும், இதில் சுமார் 500 பேர் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

*குடிநீர்ப் பஞ்சம் நீங்கிட....*

கோவை குடிநீர் வழங்கும் திட்டம், உலக வங்கி உதவியுடன், சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர்ச் சுரங்கங்கள், குடிநீர் வடிகால் வாரியத்திற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கட்டுமானம் செய்து தரப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கோவை, மதுக்கரை, செட்டிப்பாளையம், எட்டிமடை, ஒத்தக்கால் மண்டபம், திருமலையாம்பாளையம், வெள்ளலூர், பெரிய நாயக்கம்பாளையம், கூடலூர், துடியலூர் உட்பட பல பகுதிகளுக்குக் குடிநீர் கிடைக்கும் அதாவது, இத்திட்டம், கோவை மாவட்டத்தில் உள்ள 476 கிராமப்புறக் குடியிருப்புகள், 20 நகர்ப்புற ஊராட்சிகளுக்குக் குடிநீர் அளவினைக் கூடுதல் செய்வதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் பல்லாண்டுக் காலமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. அதற்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது. இந்த அரிய திட்டத்தின் மூலம் குடிநீர்ப் பஞ்சம் நீங்கி, மக்கள் குதூகலிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

கோவை குடிநீர்த் திட்டம், சிறுவாணியை ஆதாரமாகக் கொண்டு, 95,100 மக்கட்தொகைக்கு, நாளொன்றுக்கு 11.35 மில்லியன் லிட்டர் வீதம் 1927-இல் பணி தொடங்கப்பட்டது. இது 1931-இல் முடிக்கப்பட்டது. அதிகத் தேவையைப் பூர்த்தி செய்ய நாள் ஒன்றுக்கு 34.1 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க 1974-இல் வார்ப்பு இரும்புக் குழாய்கள் பதிப்பிக்கப்பட்டன.

வளரும் கோவை நகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, நாளொன்றுக்கு 101.4 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு, 12.47 இலட்சம் மக்கட்தொகையின் தேவையைப் பூரத்தி செய்ய 1982-இல் கோவைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தற்போது பயனில் உள்ள இச் சிறுவாணி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கோவை உள்ளூர்ப் பகுதிகளுக்கு இடைக்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. எனவேதான், மேற்கண்ட புதிய திட்டம் உருவாகி, இப்போது துரிதகதியில் இயங்கி வருகிறது.

**பில்லூர் அணையில்!.**

கோம்பை மலை!

இங்கே 40 மீட்டர் ஆழமுள்ள ராட்சதக் கிணறு தோண்டப்பட்டு உள்ளது.

மின்சார இழுவை மூலம், கிணற்றுக்குள்ளே கொண்டு செல்லப்படுகிறோம்!

இருபுறமும் சுரங்கப்பாதை குடையப்படுவதை அங்கே பார்த்து வியக்கிறோம்.

இது 3,850 மீட்டர் நீளத்திற்குக் குடையப்பட்டு, பிறகு வெள்ளியங்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் குழாய்ப் பாதைகள் மூலம் இணைக்கப்படும்.

கோம்பை மலையிலிருந்து, சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு 4½ கி.மீ. தூரமுள்ள கட்டன் மலைவரை பில்லூர் அணைப்பகுதியில், தண்ணீரைச் சுரங்கத்தின் வழியாகக் கொண்டு வரும் வேலை இப்போது மிகச் சுறுசுறுப்பாக, துரிதமாக நடைபெற்று வருகிறது.

**1991-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் இந்தப் பணிகள் தொடங்கின. 1993-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் கோவை நகர்க் குடிநீர்ப் பஞ்சம் தீரும்.**

*பில்லூர் அணை!*

கடல் போன்று பரந்த நீர்ப் பரப்புள்ள பவானி ஆற்றின் பவனி கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

பில்லூர் அணையின் நீளம் 356.620 மீ. கொள்ளளவு 44.37 மில்லியன் கன மீட்டர் (1568 மில்லியன் கன அடி), நீர்ப்பிடிப்புப் பரப்பு 1503 சதுர கி.மீ. (460 சதுர மைல்).

இந்த அணையின் நீரோட்டப் பகுதியில் ராட்சத நீர் ஊற்றுக் கிணறு தோண்டப்பட்டுள்ளது. அதையொட்டிச் சிறுபாலம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கிணற்றிலிருந்து சுத்திகரிக்கப்படாத நீரை விசை நீரேற்றிகள் மூலம் அருகே அமைக்கப்பட்டு வரும் சுரங்கத்திற்குச் செலுத்தப்படும். அதாவது, நெல்லிமரத்தூரில் இந்தச் சுரங்கப்பாதை உள்ளது. இதுவே, மேற்கண்ட குடிநீர்த் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுவரும் சுரங்கப் பாதையின் தொடக்கமாகும்!

**இப்படி நாலாபக்கமும், சுரங்கப்பாதை அமைக்கும். பணி, தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல், இரும்புக் குழாய்கள் பதித்தல் முதலான பணிகளும் திட்டமிட்டு, ஒரே சமயத்தில், ஒழுங்காக, துரிதமாக நடைபெற்று வருவதை இங்கே நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.**

**சுத்திகரிப்பு நிலையங்கள்**

*வெள்ளியங்காடு!*

இங்குதான், தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கான நிலையங்கள் வேகமாகக் கட்டப்பட்டு வருகின்றன.

முதலில் தண்ணீரிலுள்ள வண்டல் மண் தெளிய வைக்கப்பட்டும். பிறகு, தண்ணீரில் மருந்து கலந்து தெளிய வைக்கப்படும்.

அதன்பிறகு, தண்ணீர் நன்கு தெளிய வைக்கப்படும்.

மூன்று கட்டங்களில் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு, பிறகு விநியோகிக்கப்படும்.

ஒருபுறம் பெரிய பெரிய இரும்புக் குழாய்கள் இருப்பதைப் பார்க்கிறோம்.

அந்தக் குழாய்களுக்கு உள்ளும் புறமும் சிமெண்ட் கலவை கருவி





## படமும் செய்தியும்

திருப்பதி செல்லும் வழியில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்திறங்கிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, அவரது துணைவியார் திருமதி விமலா சர்மா ஆகியோரை, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் மாலை அணிவித்து அன்புடன் வரவேற்றனர் (27.7.92).



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் இரத்தக்கசிவினால் பாதிக்கப் பட்ட செல்வி வசந்தாவுக்கு மருத்துவச் செலவிற்காக ரூ. ஒரு இலட்சத்திற்கான வைப்பு நிதிப் பத்திரத்தை வழங்கினார் (20.7.92).

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 27.7.92 அன்று, தலைமைச் செயலகத்தில் மின்னணுத் தொலைபேசி இணைப்பகத்தைத் தொடங்கி வைத்தார்.



அமெரிக்காவில் சிகிச்சை பெற்று, தாயகம் திரும்பிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை, விமான நிலையத்தில் அமைச்சர் பெருமக்கள் வரவேற்றனர் (20.7.92).





**கோவை மாவட்டம், நெல்லிமரத்தூரில், அமைந்துள்ள சுரங்கப் பாதையின் ஆரம்பம்.**

மூலம் தெளிக்கப்படுகிறது. இதனால், இரும்பு துருப்பிடிக்கா வண்ணம் பாதுகாக்கப்படுகிறது.

அடுத்த கட்டத்தில், இந்தக் குழாய்கள் பூமியில் இறக்கப்பட்டு, இணைக்கப்படுகின்றன. அதாவது, குழாய்களை இணைத்துப் பற்ற வைக்கப்படுகிறது.

பிறகு இந்தக் குழாய்கள் கட்டன் மலையில் உள்ள குகைக்கு உந்தப்படும். தூய நீர் குகையிலிருந்து 1500 மி.மீ. விட்டமுள்ள சிமெண்ட் குழாய்கள் மற்றும் வெவ்வேறு விட்டமுள்ள கல்நார்க் குழாய்களில் புவிஈர்ப்புச் சக்தியின் மூலமாக, கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராமக் குடியிருப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். கோவை மாநகராட்சிக்குத் தேவையான நீர், முக்கியக் குழாயிலிருந்து சக்திச்சாலையைக் கடக்குமிடத்தில் துணை முக்கியக் குழாய் மூலம் சிவானந்தபுரத்தில் கட்டப்படும் முக்கிய மேல் நிலைத் தொட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு பிறகு பகிர்ந்தளிக்கப்படும்.

**உலக வங்கி பாராட்டு!**

'தமிழ்நாட்டில் உலக வங்கி உதவி மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள், செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை உலக வங்கி பாராட்டி இருக்கிறது' என்று உலக வங்கித் திட்டத் தலைமைப் பொறியாளர் திரு. வி.ஆர். வைத்தியநாதன் அவர்கள், செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்

அவர்மேலும் கூறுகையில்-

தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் உலக வங்கி நிதி உதவியின் 2-வது தவணையின் மூலம் கோவை, சேலம் மாவட்டங்களுக்குக் குடிநீர்த் திட்டப் பணிகளை மேம்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் கோவை மாவட்டத்தில் 500 கிராமங்களும், சேலம் மாவட்டத்தில் 260 கிராமங்களும் குடிநீர் வசதி பெறும்.

இந்தப் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் உலக வங்கியின் மூலம் ரூ.322 கோடி செலவில் நிறைவேற்றப்படும். உலக வங்கி குடிநீர்த் தட்டுப்பாடுள்ள இடங்களுக்குக் குடிநீர் வழங்க 2-வது தவணையாக இந்தத் தொகையைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் பொள்ளாச்சி, திருவண்ணார் மலை, காஞ்சிபுரம், சங்கரன்கோயில், புதுக்கோட்டை, மணப்பாறை ஆகிய நகரங்களுக்கும் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1985-இல் உலக வங்கியிடமிருந்து முதல் தவணையாகப் பெற்ற ரூ.142 கோடி நிதியிலிருந்து மாநிலத்தில் 44 நகரங்களுக்குக் குடிநீர் வசதியை விரிவாக்கியதுடன் கோவை, மதுரை, சேலம் நகரங்களின் குடிநீர்த் திட்டப்பணிகள் மேம்படுத்தப்பட்டன. இந்த நிதியிலிருந்து ஒரு சிறு தொகை குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து உலக வங்கயிடமிருந்து பெற்ற நிதியுதவியில் கணிசமான தொகையைச் சேமிக்க முடிந்தது.

தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டப் பணிகளைப் பார்வையிட்டு திருப்தி வெளியிட்ட பிறகு, உலக வங்கி கூடுதலாக நிதியுதவியைத் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியது.

நிர்வாக வழிமுறைகளை எளிதாக்கியதன் மூலம் 6.50 கோடி மதிப்பீட்டிலான ஒப்பந்தப் புள்ளி



# ரூ.100 கோடி செலவில் சுரங்கம் மூலம் கோவைக்குக் குடிநீர்! 20 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்!

களை 6 மாதங்களுக்குள்ளாகவே முடிவு செய்ய முடிந்தது.

கணிப்பொறிகளை (Computer) பயன்படுத்தியதன் மூலம் கணிசமான நேரமும் பணமும் மிச்சப்படுத்தியதுடன், பணியின் முன்னேற்றங்களையும் உடனுக்குடன் கண்காணிக்க முடிந்தது.

கோவை, மதுரை, சேலம் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் குழாய்களில் சேதம் ஏற்பட்டு தண்ணீர்க் கசிவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒரு புதிய திட்டத்தை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வாரியம் திட்டமிட்டிருக்கிறது. 'வாப்கோஸ்' (WAPCOS) என்ற மைய அரசு நிறுவனத்துடன் இணைந்து இந்த நீர்க் கசிவு கண்டு பிடிக்கும் பணி செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 30 முதல் 40 சதவிகிதம் வரை குழாய்க் கசிவு காரணமாக வீணாகும் தண்ணீர் சேமிக்கப்பட்டுப் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, மாநகராட்சி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அங்கு வாழும் மக்களின் சமுக, பொருளாதார நிலையின் அடிப்படையில் தண்ணீர் வரி வசூல் செய்யப்படும். இந்தப் புதிய வரி வசூல் திட்டத்தின் மூலம் குறைந்த வருவாய் உடைய மக்களிடம் குறைவான வரி வசூல் செய்வதுடன், மாநகராட்சிக்குக் குடி நீர் வரி மூலம் நிறைவு நிதி கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும்.



**கோவை மாவட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்; கட்டன் மலையில் சுரங்கப் பாதை.**

நீலகிரி மாவட்டத்தில்...

இயற்கையன்னை களிநடம் புரியும் ஊட்டி!

விண்ணைத் தொடும் நெடிய மரங்கள். கண்ணைக் கவரும் பன்னிற மலர்கள். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலன பசுமைக் கூட்டங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக குளுமை தவழும் சூழ்நிலை.

இங்கிருந்து, பார்சன் பள்ளத்தாக்கு நீர்த்தேக்கத்துக்குச் செல்கிறோம்.

ரூ.7½ கோடிச் செலவில், ஊட்டிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுவதை நேரில் பார்க்கிறோம்.

இப்போது இதன் விரிவாக்கப் பணி நடக்கிறது. தற்போது 10 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. பிறகு, 30 இலட்சம் காலன் தண்ணீர் விடப்படும். இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டபின், ஊட்டிக்குத் தண்ணீர்ப் பஞ்சமே இருக்காது. இங்கும், தற்போது ஒரு தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் துரிதமாகக் கட்டப்பட்டு வருகிறது.

**கூடலூரில்...**

ஊட்டியிலிருந்து நேரே கூடலூருக்குச் செல்கிறோம்.



பவானி ஆற்றின் குறுக்கில் கட்டப்பட்டுள்ள பில்லூர் அணை.

இங்கே, கூடலூர் குடிநீர் துணைத் திட்டம் செயல்படுவதை நேரில் பார்க்கிறோம்.

கூடலூரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில், ஹெலன் நீரோடையின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

அந்த இடத்திற்குப்போக வேண்டும்.. காடு முரடான பாதை... அதுவும் ஒற்றையடிப் பாதை... ஜீப்பில் போய்ச் சேருவதற்குள் போகும் போதும் என்றாகி விடுகிறது.

ஒரு அரை நாள், அங்கு நாம் போய் வரச் சலித்துக் கொள்கிறோம்.

ஆனால், மக்களுக்குக் குடிநீர் தடை இல்லாமல் வழங்க வேண்டும் என்னும் நோக்கில், முதலில் அந்த இடத்தைக் கண்டுபிடித்து, அதற்கான ஆக்கப் பணிகளைச் செய்து வரும் அரசையும், அரசு ஊழியர்களையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

உலகில் அதிகமாக மழை பெய்யும் சிரபுஞ்சிக்கு அடுத்தபடியாக, கூடலூரைச் சொல்லுகிறார்கள். ஆம். இங்கு மார்ச், ஏப்ரல் தவிர ஆண்டு முழுவதும் மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்த வளமான பூமியில் காபி, தேயிலை, மற்றும் ஏலம், கிராம்பு, மிளகு முதலான வாசனைத் திரவியங்கள் விளைகின்றன.

இரும்புக் குழாய்கள் துருப்பிடிக்கா வண்ணம் அதன் மீது, சிமெண்ட் கலவை தெளிக்கப்படுகிறது.





வெள்ளியங்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையம்.

**கூடலூருக்குக் குடிநீர்**

கூடலூர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு பேரூராட்சியாகும். 1981-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, பேரூராட்சியின் மக்கட்தொகை 21,983 ஆகும். தற்போது பேரூராட்சியின் அருகில் ஓடும் நான்கு ஓடைகளை நீர்மூலமாகக் கொண்டு, நீரேற்றிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வழங்கப்பட்டு வரும் தண்ணீர் மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. மேலும் கோடை காலங்களில் நீரோடைகள் வறண்டு விடுகின்றன. எனவே, கூடலூர் மற்றும் அதன் 18 உட்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் தமிழ்நாடு அரசு ரூ.281.15 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் மேற்கண்ட இத்துணைத் திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான தண்ணீர் பாண்டியாறு ஆற்றின் குறுக்கே 26 மீ நீளமும், 2 மீ. உயரமும் கொண்ட ஒரு சிற்றணை கட்டி, அதிலிருந்து நீர் எடுக்கப்பட உள்து. நாளொன்றிற்கு 2.87 மில்லியன் லிட்டர் இயல்பு நீர், 2.60 கி.மீ. நீளத்திற்கு வெவ்வேறு அளவுகளுள்ள வார்ப்பிரும்புக் குழாய்களின் மூலம் புவி ஈர்ப்புச் சக்தியினால் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிக்கப்பட்ட நீர் புவிஈர்ப்புச் சக்தியால் 17.34 கி.மீ. நீளத்திற்குப் பல்வேறு அளவுகளுள்ள இரும்பு, வார்ப்பு மற்றும் கலாய்க் குழாய்கள் மூலம் கொண்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்குத் தேவையான நீர், முக்கியக் குழாய்களிலிருந்து வெவ்வேறு இடங்களில் 6 துணை முக்கியக் குழாய்கள் மூலமாக நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்பு பகிர்மானக் குழாய்கள் மூலமாக, கூடலூர் மற்றும் அதன் 18 உட்கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவியுடன் செலவாகும் தொகையை, கூடலூர் பேரூராட்சி 25 சதவிகிதம் கடனாகவும், 75 சதவிகிதம் மானியமாகவும் ஏற்கிறது.

இப்போது இந்தத் திட்டம் முடிவுறும் தறுவாயில் உள்ளது.

**குடிநீர்ப் பஞ்சமே இல்லாத சூழ்நிலை**

இவ்வாறு, பட்டி தொட்டிகளிலும் குடிநீர் கிடைத்திட, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கோடை காலத்திலும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படா வண்ணம், அரசு பல நீர் ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்து ஆயத்தப் பணிகள் அனைத்தையும் ஒழுங்காகவும், அதே சமயத்தில் துரிதமாகவும் செய்து வருகிறது.

எதிர்காலத்தில் குடிநீர்ப் பஞ்சமே இல்லாத சூழ்நிலை உருவாகிட, எல்லா வகையிலும் அரசு அரும்பணியாற்றி வருகிறது என்றால், அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

**-பி.வி. கிரி.**

ஹெலன் நீரோடையின் குறுக்கே உள்ள தடுப்பணை.





# சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

சேலம் மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக் கணக்கான பொதுமக்களிடமிருந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 4.5.92 அன்று மனுக்களைப் பெற்று அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்தார். அன்று மனு கொடுத்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 520 நபர்களைத் தேர்ந்தெடுத்து, 27.7.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சேலத்திலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக, தையல் இயந்திரம் 40 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 10 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவி 51 பெண்களுக்கும், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதி உதவி 7 நபர்களுக்கும், கலப்புத் திருமண நிதி உதவி 15 நபர்களுக்கும், கண்பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கும், ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 3 பேர்களுக்கும், கடும் உடல் ஊனமுற்றோர் பராமரிப்புத் தொகை ஒருவருக்கும் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 168 நபர்களுக்கு ரூ.11.41 இலட்சம் மானியத்துடன் இணைந்த கடனும், லாரி வாங்க 3 பேர்களுக்கு ரூ.13.24 இலட்சம் மானியத்துடன் இணைந்த கடனும், உடல் ஊனமுற்றோர் 15 பேர்களுக்கு வங்கி மூலம் நிதி உதவியும், உழவு மாடுகள் வாங்க 5 பேர்களுக்கும், ஆட்டோ ரிக்ஷா வாங்க ஒருவருக்கும், காலணி தயாரிக்க ஒருவருக்கும், ஆயில் மில் நிறுவனக் கடன் ஒருவருக்கும், பாய்த்தொழில் செய்ய ஒருவருக்கும், புத்தகப் பைண்டிங் தொழில் செய்ய ஒருவருக்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், வீட்டுமனைப் பட்டா 30 பேர்களுக்கும், நிலப்பட்டா 5 பேர்களுக்கும், முன்னாள் இராணுவத்தினர் மகள் திருமண நிதி உதவி 2 நபர்களுக்கும், நலிந்தோர் நல நிதி உதவி 10 நபர்களுக்கும், பட்டு வளர்ச்சிக் கடனுதவி 10 நபர்களுக்கும், கதர் கிராமத் தொழில் நிதி உதவி 20 பேர்களுக்கும், இருதயச் சிகிச்சைக்காக முதல்வர் நிவாரண நிதி உதவி ஒருவருக்கும், விதவைகள் உதவித்தொகை 5 நபர்களுக்கும், கைத்தெளிப்பான் 5 நபர்களுக்கும், உடல் ஊனமுற்றோர் 20 பேர்களுக்குச் சக்கர வண்டிகளும், காதொலிக் கருவிகள் 5 பேர்களுக்கும், முடநீக்கியல் சாதனம் (காலிபர்) 12 பேர்களுக்கும் சக்கர நாற்காலி ஒருவருக்கும், விதவைகளின் குழந்தைகள் 10 பேர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், ஏழை மாணவர்கள் 10 பேர்களுக்குப் பாடப் புத்தகங்களும், நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 50 பேர்களுக்குக் கடனுதவியும் வமங்கப்பட்டன.

மொத்தம் 520 நபர்களுக்கு ரூ.41.994 இலட்சம் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அன்று நலத்திட்ட உதவிகள் பெற்ற 520 நபர்களில் 345 பேர் பெண்களாவர். நலத்திட்ட உதவிகள் பெற வந்த 9 தாய்மார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6 ஆண் குழந்தைகளுக்கு இராமச்சந்திரன், ராஜராஜன், வெற்றிவேந்தன், சக்கரவர்த்தி, கார்த்திகேயன், நரசிம்மன் என்றும், 3 பெண் குழந்தைகளுக்கு இராஜலட்சுமி, விஜயலட்சுமி, மகாலட்சுமி என்றும் பெயர் சூட்டினார்.





ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா நடைபெறும் மான்ஜூயிக் ஸ்டேடியம்.

# ஒலிம்பிக் போட்டி

உலகில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் மிகப் பெரியது, சிறப்பு வாய்ந்தது, ஒலிம்பிக் போட்டி ஆகும். இந்த ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. ஒலிம்பிக் போட்டி ஆரம்பமான 1896-ஆம் ஆண்டு முதல் இதுவரை 21 போட்டிகள், உலகின் பல்வேறு இடங்களில் நடந்தன. மூன்று ஒலிம்பிக் போட்டிகள் உலகப் போரின் காரணமாக கைவிடப்பட்டன. 25-வது ஒலிம்பிக் போட்டி தற்சமயம் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனாவில் நடைபெற்று வருகிறது.

**இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நடந்த ஆண்டும், இடமும்:**

முதலாவது ஒலிம்பிக் போட்டி : 1896 - கிரீஸ் நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரம்.

2-வது போட்டி : 1900 - பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் நகரம்.

3-வது போட்டி : 1904 - அமெரிக்காவிலுள்ள செயிண்ட் லூயிஸ்.

4-வது போட்டி : 1908 - இங்கிலாந்திலுள்ள இலண்டன் நகரம்.

5-வது போட்டி : 1912 - ஸ்வீடன் நாட்டிலுள்ள ஸ்டாக் ஹோம் நகரம்.

6-வது போட்டி : முதலாவது உலகப்போர் மூண்டதையொட்டி போட்டிகள் ரத்து செய்யப்பட்டன.

7-வது போட்டி : 1920 - பெல்ஜியம் நாட்டிலுள்ள ஆண்ட் வெர்ப் நகரம்.

8-வது போட்டி : 1924 - பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் நகரம்.

9-வது போட்டி : 1928 - நெதர்லாந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரம்.

10-வது போட்டி : 1932 - அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம்.

11-வது போட்டி : 1936 - ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரம்.

12-வது போட்டி, 13-வது போட்டி: 1940-இல் நடக்கவிருந்த 12-வது போட்டியும், 1944-இல் நடக்கவிருந்த 13-வது ஒலிம்பிக் போட்டியும் இரண்டாவது உலகப் போர் காரணமாக கைவிடப்பட்டன.

14-வது போட்டி : 1948 - இங்கிலாந்தி

லுள்ள இலண்டன் நகரம்.

15-வது போட்டி : 1952 - பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சின்கி நகரம்.

16-வது போட்டி : 1956 - ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள மெல்போர்ன் நகரம்.

17-வது போட்டி : 1960 - இத்தாலி நாட்டிலுள்ள ரோம் நகரம்.

18-வது போட்டி : 1964 - ஜப்பான் நாட்டிலுள்ள டோக்கியோ நகரம்.

19-வது போட்டி : 1968 - மெக்சிகோ நாட்டிலுள்ள மெக்சிகோ நகரம்.

20-வது போட்டி : 1972 - ஜெர்மனி நாட்டிலுள்ள மூனிச் நகரம்.

21-வது போட்டி : 1976 கனடா நாட்டிலுள்ள மாண்ட்ரீல் நகரம்.

22-வது போட்டி : 1980 ரஷ்யா நாட்டிலுள்ள மாஸ்கோ நகரம்.

23-வது போட்டி : 1984 - அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம்.

24-வது போட்டி : 1988 - தென் கொரியாவிலுள்ள சியோல் நகரம்.

25-வது ஒலிம்பிக் போட்டி ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனா நகரில் 25.7.1992 முதல் நடைபெற்று வருகிறது. 172 நாடுகளைச் சேர்ந்த பதினாறாயிரம் வீரர்கள், வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்கிறார்கள். ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் அதிக நாடுகள் பங்கு பெறுவதும், அதிக எண்ணிக்கையில் வீரர்கள், வீராங்கனைகள் பங்கு பெறுவதும் இந்த 25-வது ஒலிம்பிக் போட்டியில்தான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

32 ஆண்டுகளுக்குப் பிறகு தென்னாப்பிரிக்கா இந்த முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெறுவது குறிப்பிடத்தக்கது.

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 25 விளையாட்டுப்போட்டிகள் இடம் பெறுகின்றன. இவற்றில் இந்தியா மொத்தம் 12 விளையாட்டுகளில் பங்கு பெறுகிறது. அவை யாவன: ஹாக்கி, ஜூடோ, வில்வித்தை, பளு தூக்குதல், மல்யுத்தம், பாய்மரப் படகுப்போட்டி, அத்லெட்டிக்ஸ், துப்பாக்கி சுடுதல், டேபிள் டென்னிஸ், டென்னிஸ், இறகு பந்து மற்றும் குத்துச்சண்டை.

Barcelona '92

## பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி - 1992



★ இதற்கு முன்னர் கடந்த ஒலிம்பிக் போட்டிகளுடன் ஒப்பிடும் போது, இப்போது நடைபெறும் பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி பல சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ளது.

★ மிக அதிக அளவில் 257 பதக்கங்கள் இந்த ஒலிம்பிக் போட்டியின்போது வழங்கப்படுகின்றன. இது 1988-இல் சியோலில் வழங்கப் பட்ட பதக்கங்களைக் காட்டிலும் 15 கூடுதலாகும்.

★ ஒலிம்பிக் போட்டி வரலாற்றிலேயே முதன் முறையாக இந்த ஒலிம்பிக் போட்டியில் தான் போட்டியில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் ஒலிம்பிக் குழுவின் விருந்தினர்களாக நடத்தப்படுகிறார்கள்.

★ இதுவரை நடைபெற்ற எந்த ஒலிம்பிக் போட்டியின்போதும் இல்லாத அளவுக்கு இந்த பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியின் போது, அதிக அளவில் தொலைக்காட்சி வருமானம் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1960-இல் ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை முதன் முதலாகத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பியபோது 21 ஐரோப்பிய நகரங்களிலிருந்து சுமார் 400 மில்லியன் மக்கள் போட்டியைக் கண்டுகளித்தனர். 1988-இல் நடைபெற்ற சியோல் ஒலிம்பிக் போட்டியை, 150 நாடுகளிலிருந்து சுமார் 3 மில்லியன் மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். 1992 ஒலிம்பிக் போட்டியை, 170 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3.5 மில்லியன் மக்கள் பார்க்கக் கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

★ புறக்கணிப்பு இன்றி அநேகமாக அனைத்து நாடுகளும் பங்குகொள்ளும் ஒரே ஒலிம்பிக் போட்டி 1992 போட்டிதான் என்பது குறிப்பிடத் தக்கது.



## அறிவுச் சுடர்

நம் நாட்டில் இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கும் மிகப் பழமையான செய்தித் தாள் எது?

'பாம்பே சமாச்சார்'

மிக அதிகத் தடவை ஆஸ்கர் விருது பெற்றவர் யார்?

வால்ட் டிஸ்னி. 35 முறை விருது பெற்றவர்.

உலகிலேயே தேயிலையை அதிக அளவு உற்பத்தி செய்வதும், பயன் படுத்துவதும், ஏற்றுமதி செய்வதும் எந்த நாடு?

இந்தியா.

பியானோவைக் கண்டுபிடித்த நாடு எது?

இத்தாலி.

வில்லியம் சேக்ஸ்பியர் எழுதிய கடைசி நாவல் எது?

'தி டெம்பஸ்ட்'.

கிரிக்கெட் மட்டைகள் எந்த மரத்திலிருந்து தயார் செய்யப்படுகின்றன?

வில்லோ மரத்திலிருந்து.

1968-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெற்றன?

மெக்ஸிகோவில்.

கிரிக்கெட்டில் பத்தாயிரம் ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்தவர் யார்?

சுனில் கவாஸ்கர்.

மிகச் பெரிய பறவை எது?

நெருப்புக் கோழி

பின்நோக்கிப் பறக்கும் திறன் கொண்ட ஒரே பறவை எது?

தேன்சிட்டு.

1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கட் தொகை எவ்வளவு?

84.39 கோடி

மதுரை செ. மதுக்குமார்

மாணவர் பக்கம்

## கூட்டுறவால் கோடி இன்பம்!



ஏழுவண்ணம் இணைந்தகொடி ஒன்று ஒன்று
இணையில்லாத கூட்டுறவாம் நன்று நன்று
ஏழைவாழ்வில் ஏற்றும் ஒளி இன்று இன்று
ஈடில்லாத உயர்வுதரும் என்று என்று
பல்வழியும் கைகொடுக்கும் நின்று நின்று
பாமரரும் பயன்பெறலாம் சென்று சென்று
நிழல்கொடுக்கும் ஆலமரக் கன்று கன்று
நெருங்கி வந்தால் துயர் துடைக்கும் வென்று வென்று
தேன்கூடு ஒப்புமையாம் கண்டு கண்டு
தெவிட்டாத தேனமுதைக் கொண்டு கொண்டு
ஒருவர் நலம் பலர் உழைப்பில் உண்டு உண்டு
பலரும் வாழ ஒருவர் துணை தண்டு தண்டு
கொடுப்பதுவும் கொள்வதுவும் அண்ணே அண்ணே
கொள்கையிது என்றறிவீர் முன்னே முன்னே
கொண்டகடன் தீர்த்துவிட்டால் பின்னே பின்னே
கோடியின்பம் கொள்வதுதான் என்னே என்னே
வேற்றுமையில் ஒற்றுமையாம் கண்ணே கண்ணே!

- முத்துராசு.

## பொன்மொழிகள்

அறிவாளி தேர்வு செய்வது அடக்கத்தைத் தான். கனிகளைச் சுமந்திருக்கும் மரக்கிளை, பூமியை நோக்கித் தானே தன் தலையைத் தாழ்த்துகிறது.

- பேகன்

சந்தர்ப்பம் தானாக வரக்கூடியது அல்ல; மனிதன்தான் அதனைத் தானாக உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும்.

- பெர்னாட்ஷா

நேற்றைய நாளை எண்ணிக் கவலை வேண்டாம், இன்றைய நாள் தருவதை அனுபவியுங்கள்; நாளைக்காகத் திட்டம் தீட்டுங்கள், அதுவே உங்கள் நாள்!

- லாங்ஃபெல்லோ

பத்து ஆசிரியர் ஒரு குருவுக்குச் சமம், நூறு குருக்கள் ஒரு தந்தைக்குச் சமம், ஆயிரம் தந்தையர் ஒரு தாய்க்குச் சமம்.

- மனுநீதி

# துளிகள்

## வனத்துறை அலுவலர்களுக்கு முதல்வர் நிதி உதவி

தமிழகக் கேரள எல்லையில் குமிளிக்கு அருகாமையிலுள்ள அமராவதி குளம் என்ற இடத்தில் தமிழக வனத்துறையினரால் உருவாக்கப் பட்டிருந்த தேக்கு மற்றும் இலவ மரத் தோப்பு களை அழித்து, வனத்துறைக்குச் சொந்தமான, பாதுகாக்கப்பட்ட நிலம் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது.

1.7.1992 அன்று தமிழக வனத்துறையினர், இந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காகச் சென்ற போது, வனத்துறை அலுவலர்கள் மீது 100 பேர் கொண்ட ஆக்கிரமிப்பாளர் கும்பல் ஒன்று நாட்டுத்துப்பாக்கியால் சுட்டது. இதில் வனக் காவலர் திரு. பாலகிருஷ்ணன், படுகாயமடைந்து மரணமடைந்தார். அந்தச் சம்பவத்தின்போது, மற்றொரு வனக் காப்பாளர் ஒருவர் படுகாய முற்று மதுரை பொது மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டிருக்கிறார். அதேபோல வன அலு வலர்கள் 5 பேர் இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்து உள்ளனர்.

மரணமடைந்த வனக்காவலர் திரு. பால கிருஷ்ணன் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதி யிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். அதேபோல, படுகாயம் அடைந்து மதுரை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வனக்காப்பாளருக்கு ரூ.50,000-மும், காயமடைந்த 5 வன அலுவலர் களுக்குத் தலா ரூ.5,000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

## வாசனைத் திரவியம் ஏற்றுமதியில் சாதனை!

நமது நாட்டின் வாசனைத் திரவியம் ஏற்று மதியில் புதிய சாதனையாகச் சென்ற ஆண்டில் (1991-92-இல்) ரூ.364.02 கோடி மதிப்புள்ள 1,30,567 டன் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூபாய் மதிப்பில் 50 சதவிகிதமும், ஏற்றுமதி அளவில் 19 சதவிகிதமும் அதிகமாகும். சென்ற ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.300 கோடி மதிப்புள்ள 1,15,000 டன் வாசனைத் திரவியங்கள் ஆகும்.

வாசனைத் திரவிய ஏற்றுமதியில் உலக அளவில் சென்ற ஆண்டு இந்தியாவின் பங்கு 33 சதவிகிதமாகும்.

நடப்பு ஆண்டில் (1992-93) ரூ.426 கோடி மதிப்புள்ள ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கைத்தறி

• கடந்த நிதியாண்டில் ரூ.1,118.44 கோடி மதிப்புள்ள கைத்தறி ஜவுளித் துணிகள் இந்தியா விலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இது அதற்கு முந்தைய நிதியாண்டில் ஏற்றுமதியான ரூ.841.13 கோடியை விட 41 சதவிகிதம் அதிகமாகும். அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளுமே பெரு மளவில் கைத்தறித் துணிகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றன. ஏற்றுமதியை ஊக்கு விக்கக் கைத்தறி வளர்ச்சி ஆணையகம் பல புதிய டிசைன்களை அறிமுகப்படுத்த முயற்சி எடுத்து வருகிறது.

## வறுமைக் கோடு

தனிநபர் மாதச் செலவு அடிப்படையில் வறுமைக்கோடு கணக்கிடப்படுகிறது. இது கிராமப் புறங்களில் 49 ரூபாய் 9 காசாகவும், நகர்ப் புறங்களில் 56 ரூபாய் 64 காசாகவும் நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 1981-88-ஆம் ஆண்டு கணக்குப் படி வறுமைக் கோட்டக்குக் கீழே 23 கோடியே 76 இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். இது மொத்த மக்கள் தொகையில் சுமார் 30 சதவிகித மாகும். இதில் 19 கோடியே 59 இலட்சம் பேர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள்.

நமது நாட்டில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் தான் அதிகபட்சமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கிறார்கள். இங்கு சுமார் 4 கோடியே 48 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிக் கிறார்கள்.



# வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் அரசு



வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஒரு இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (துணை வேலைவாய்ப்பு அலுவல கங்கள் மற்றும் சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உட்பட) இயங்கி வருகின்றன.

வேலைவாய்ப்புகளையும், வேலை தேடுவோரையும் இணைக்கும் பணியை வேலைவாய்ப்பு அலுவல கங்கள் புரிந்து வருகின்றன. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஒவ் வொரு வருவாய் மாவட்டத்திலும் குறைந்த பட்சம் ஒரு அரசு தொழிற் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் பொறியி யலைச் சார்ந்த பிரிவுகளும், பொறி யியலைச் சாராத தொழில் பிரிவு களும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### வேலைவாய்ப்புப் பிரிவு

கீழ்க்காணும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக் கெனச் சொந்தக் கட்டடம் கட்டு வதற்கு ரூ.77.24 இலட்சம் தொகைக்கு அனுமதி வழங்கப் பட்டது.

கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர், தூத்துக்குடி, மதுரை. மேற்காணும் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகப் புதிய கட்டடம் ரூ.23.75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுத் திறப்பு விழா 15.5.92 அன்று கோவையில் மாண்புமிகு

**தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள், வேலைவாய்ப்பற்றோர்க்கான நிவாரணம் போன்ற பணிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சாதனைபடைத்து வருகிறது.**

முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கெனக் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன. ஏனைய வேலைவாய்ப்பு அலுவல கங்களின் கட்டுமானப் பணி 1992-93-ஆம் நிதியாண்டில் முடியு மென எதிர்பார்க்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோரின் கல்வித் தகுதிக்கேற்ப அவர்களைப் பணியில மர்த்தும் பணியினைக் கவனிப்பதற் காக, ஏற்கெனவே உள்ள 9 சிறப்புப் பிரிவுகளைத் தவிர, கீழ்க்காணும் 4 இடங்களில் உடல் ஊனமுற்றோருக் கான சிறப்புப் பிரிவுகள் அரசால் துவக்கப்பட்டன.

வேலூர், ஈரோடு, உதக மண்டலம், தூத்துக்குடி. விலை மதிப்பீட்டுக் கணக்கு மற்றும் மேலாண்மைத் துறையில் வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்வு ஆகிய வற்றை மேம்படுத்தும் நோக்குடன் ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ.-இல் 5 ஆதி திராவிட இன மாணவர்களுக்கு இத் துறையின் மூலம் பயிற்சி அளிக்கப் பட்டது. ஐ.டி.ஐ. மற்றும் என்.எ.சி. சான்றிதழ் பெற்ற ஆதிதிராவிடர் இன வேலையற்ற மாணவர்களுக்குத் தொழிற் சாலைகளில் உரிய பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், மத்திய அரசு, வங்கிகள், இரயில்வே ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற ஆதிதிரா விடர்களில் இதுவரை 4,228 பேர் களுக்குத் தகுந்த முன்னோடிப் பயிற்சி அளித்து அவர்கள் அந்தந்த வேலைக்கான போட்டித் தேர்வு களில் தேர்ச்சிபெற வகை செய்யப் பட்டது.

மைய அரசு உதவியுடன் தமிழ் நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலு வலகப் பணிகளைக் கம்ப்யூட்டர் மூலம் செய்யும் திட்டம் தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் அடையாறு, அண்ணாநகர், கோயம்புத்தூர், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூ.13.65 இலட்சமும், மைய அரசு ரூ.3.68 இலட்சமும் வழங்கியுள்ளன. அடையாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அனைத்துப் பணிகளும் கம்ப்யூட்டர் மூலம் செய்யப்படுகிறது. அண்ணா நகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் அனைத்துப் பணி களும் படிப்படியாகக் கம்ப்யூட்டர் மூலம் செய்யத் துவங்கப்பட்டுள்ளது கோவை மற்றும் திருச்சி மாவட்ட




Licence No. TN/MS(C)/PP-23
தென்னிந்திய
வர்த்தக

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய
குறளகம், சென்னை - 600 108


## இந்த இதழில்...


வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா
வண்டலூர் அண்ணா உயிரியல் ... 2
பூங்காவிற்கு மின்கலப் பேருந்து ... 8
கோவை மாவட்ட ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி
படமும் செய்தியும் ... 9
'வெள்ளையனே வெளியேறு'— வீர வரலாறு ... 10
தருமபுரி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 12
இருபது அம்சத் திட்டம்— இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம்! ... 16
நூல் நயம் ... 17
நெஞ்சையள்ளும் குற்றாலம் ... 18
சரித்திரத்தில் பொறி பறந்த நேரம்! (கவிதை) ... 19
மானிடவியல் படிமங்கள் ... 23
வேளாண்மைப் பொறியியல் துறையின் சாதனைகள் ... 24
தோட்டக்கலைத் துறையின் சாதனைகள் .. 27
காந்திய நெறியில் கலைவாணர் ... 31
பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 33
அரசு ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள் ... 39
மாவீரன் பகத்சிங் ... 42
... 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆடித் திங்கள் -

மலர்:23 இதழ்:4

16-8-1992


### அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

"வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன் விழா நிகழ்ச்சியில், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். (9.8.1992).

நான்காம் அட்டை:

குற்றால அருவியின் எழில்மிகு தோற்றம்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், அவ்வலுவலகப் பணிகள் அனைத்தும் படிப்படியாகக் கம்ப்யூட்டர் மூலம் செய்யத் தொடங்கப்படும். மேலும் மதுரை, வேலூர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை, மதுரை, சென்னையிலுள்ள தொழிற் நுட்ப அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கம்ப்யூட்டர் மயமாக்க அரசு ரூ.4.96 இலட்சம் வழங்கியுள்ளது. தவிரவும், மைய அரசு ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் 1992-இல் இத்துறை சம்பந்தப்பட்ட ஒரு அரங்கு அமைக்க அரசு ரூ.40,000-க்கு ஒப்புதல் வழங்கியது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சம்பந்தமாக மிக அழகான அரங்கு ஒன்று 1,000 சதுர அடியில் அமைக்கப்பட்டது. 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சி 6.1.92 முதல் 9.4.92 வரை நடைபெற்றது. இத்துறையின் அரங்கில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை விவரிக்கும்படியான விளக்கப் படங்கள், சுவரொட்டிகள், புகைப் படங்கள், மற்ற கவர்ச்சியான தள வாடங்களும் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.

16.6.91 முதல் 11.6.92 வரையிலான காலக் கட்டத்தில் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள் (5 ஆண்டுகளுக்கு மேல் உயிர் பதிவேட்டில் காத்திருந்து உரிய வயது மற்றும் இதர தகுதிக்கு உட்பட்டவர்கள்) எனத் தெரிந்தெடுக்கப்பட்ட 1,33,338 நபர்களுக்கு (பட்டதாரிகள்-9,946, பி.யூ.சி./பிளஸ்-2 - 46,768 மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. - 76,624) வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகையாக ரூ.9,19,60,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் இதர தகுதிக்குட்பட்ட 1,124 பார்வை அற்ற நபர்களுக்கு ரூ.12,72,950 வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1991-92-க்குரிய காலத்தில் தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பகங்கள் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட 29,661 மனுதாரர்களில் 10,655 பணியிடங்கள் பெண்களால் நிரப்பப்பட்டுள்ளன. இது 30 சதவிகிதத்திற்கும் மேற்பட்டதாகும். மேலும் இந்தக் காலத்தில் மொத்தம் 1,104 உடல் ஊனமுற்ற நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

### பயிற்சிப் பிரிவு

தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த தென்காசி மற்றும் அம்பாசமுத்திரத்திலுள்ள கிராமிய அடிப்படைச் சேவை நிலையங்கள் (Rural Basic Service Centre) இத்துறைக்கு மாற்றப்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களாக உயர்த்தப்பட்டன.

அம்பத்தூரில் உணவகம் மற்றும் உணவு தயாரித்தல் (Hotel and Catering Trade) பிரிவுடன் அடிப் படைப் பயிற்சி மையம் (Basic Training Centre) தொடங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கோவையில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு 1991-92-ஆம் ஆண்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

சேலம் பெண்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விடுதி கட்டும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினருக்கு மதுரை மற்றும் கோவையில் பிளாஸ்டிக் புராசசிங் (Plastic Processing Trade) பிரிவு ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிண்டியில் பெண்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில் இரசாயனப் பிரிவிற்காக (Chemical Trades) அடிப்படைப் பயிற்சி மையம் (Basic Training Centre) ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அரக்கோணம், தேனி, தாராபுரம், நாகர்கோவிலில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் ஆரம்பிக்கவும், இந்நான்கு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் கூடுதல் பணிமனை கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு தொழிற் பிரிவுடன் கூடிய 72 இருக்கைகள் கொண்ட பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றினை மதுரையில் ஆரம்பிக்கவும், அதற்குப் புதிய கட்டடம் கட்டவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புத் திட்டத்தின் கீழ் (Evening Class Scheme for Industrial Workers) இந்த ஓராண்டில் 1,925 தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

டிரைசம் (Training of Rural Youth for Self Employment) திட்டத்தின் கீழ் 374 கிராமப்புற இளைஞர்கள் தொழில் நுணுக்கத்தையும், தாமே சுயமாக வேலைவாய்ப்பினைப் பெறக் கூடிய திறமையினையும் பெற்றுள்ளனர்.

'தாட்கோ' (TAHDCO) திட்டம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இவ்வோராண்டில் 101 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பயனடைந்துள்ளனர்.

நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (Nehru Rozgar Yojana Scheme) 488 நகர்ப்புற வேலைவாய்ப்பற்ற ஏழை இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ●

**அட்டைப்பட விளக்கம்:** முதல் அட்டை: இந்தியாவின் 9-வது குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்ற டாக்டர். சங்கர் தயாள் சர்மா அவர்கள் (25.7.92)

நான்காம் அட்டை: தென்னிந்தியத் திரைப் பட வர்த்தக சபை அளித்த மாபெரும் பாராட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் (25.7.92)

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

# 'வெள்ளையனே வெளியேறு'

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டம், 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7,8 ஆகிய இரு நாட்களும் பம்பாயில் நடைபெற்றது. மகாத்மா காந்தியடிகளும், நேரு, படேல் போன்றவர்களும் கலந்துகொண்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாகத் தீரர் சத்தியமூர்த்தி, காமராசர் போன்ற பலரும் பங்கேற்றனர்.

இதற்கு முன்பாக - வார்தாவில் ஜூலை 6-ஆம் நாள் கூடிய கூட்டத்திலேயே வெள்ளையர்களை 'இந்தியாவை விட்டு வெளியேறு' (Quit India Movement) என ஆணையிடும் இயக்கத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டிருந்தது.

எனினும் - இந்த பம்பாய்க் கூட்டத்திலேதான் அதற்கான தீர்மானம், பண்டித நேருவால் கொண்டு வரப்பட்டு, சர்தார் வல்லபாய் படேலால் முன்மொழியப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## "இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி இந்த நாளில் நாம் சூளுரை ஏற்போம்!"

பொன்விழாக் காணும் ஒரு மாபெரும் இந்தியப் புரட்சியை, நன்றியுணர்வோடு நினைவு கூரும் இந்த நன்னாளில், நமது விடுதலைக்கு உழைத்திட்ட நல்லோரைச் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை - அது எங்கள் உயிர் மூச்சு' என்று முழக்கமிட்டு, எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத் தியாகத் தழும்பேறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர், இந்த அரங்கினில் அமர்ந்திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய சந்ததியினருக்குச் சுதந்திரத்தின் பெருமையை எடுத்துச் சொல்லத் தகுதியான பெரியவர், விடுதலைப் போராட்ட வீரர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள், இன்று நம்மிடையே தமிழகத்தில் உள்ள அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களின் பிரதிநிதியாக வீற்றிருக்கிறார்கள். சிலம்புச் செல்வர் அவர்கள், விடுதலைப் போரில் பங்கேற்று, காந்தியடிகளின் முன்னணித் தொண்டராக விளங்கியவர். காந்திய நெறிகளால் கவர்ந்திழுக்கப்பட்ட அவர், அன்னைத் தமிழுக்கும் அருந்தொண்டாற்றி வருகிறார். அவர் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதில் நமக்குத்தான் பெருமை. அவர் இவ்விழாவில் கலந்து கொண்டு தமது சிறப்புரை மூலம் நினைவுகூர்ந்த, சுதந்திரப் போராட்டக் கால உண்மைகள், நம்மை அந்தக் காலக் கட்டத்திற்கே அழைத்துச் சென்றன. அவர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தமையை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

### தனிச்சிறப்புக் கொண்டது

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நடந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று தொடங்கிய சுதந்திர வேள்வியின் பலனை, ஐந்தாண்டுகளிலே பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்து வருகின்றோம். நாடு விடுதலை அடைந்து 44 ஆண்டுகள் ஆயினும், விடுதலைக்கு வித் திட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை, மறவாமல் நினைவு கூர்கின்றோம். இந்த நினைவு நமது இரத்தத்தில், நமது சந்ததியினரின் உதிரத்தில், என்றென்றும் நின்று நிலைபெறத்தக்க, பெருமையும், புகழும் உடைய தனிச்சிறப்புக் கொண்டது.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, நம் விடுதலைக்காகப் போராடிய தியாகச் செம்மல்களைப் பாராட்டிப் போற்றுவது, நம் ஒவ்வொருவரின் பிறவிக் கடனாகும். வாழ்நாளெல்லாம் பாராட்டிப் பின்பற்ற வேண்டிய பெரும் கடமையாகும். 50 ஆண்டுகளுக்கு முன்னர், இதே ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாளினை எண்ணிப் பார்க்கின்றேன்! எத்தனையோ அடக்குமுறைகளை, அவிழ்த்துவிட்ட அச்சுறுத்தல்களை நடைமுறையாக்கிச் செயல்படுத்திய, ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, நம் தாய்த் திருநாட்டின் அடிமை விலங்கை அகற்றியே ஆகவேண்டும், என்ற ஒரே சிந்தனையில் செயல்பட்ட தியாக சீலர்களின் நாட்டுப் பற்றை எண்ணி, வியக்கின்றேன்!

அன்றைய தினம், அண்ணல் காந்தியடிகள் ஆற்றிய வீர உரை, இன்றும், அரை நூற்றாண்டுக்குப் பிறகும், உயிர்த்துடிப்புள்ள வாசக



# இயக்கப் பொன் விழா

இந்திய விடுதலைப் போரின் மகுடம்போல் விளங்கிய, 50 ஆண்டுகளுக்கு முந்திய அந்நாளை நினைவு கூர்ந்து சிறப்பிக்கும் வகையிலேயே - தமிழ்நாடு அரசால் - 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா கடந்த 9.8.1992 அன்று சென்னையில் மிகச் சிறப்போடு கொண்டாடப்பட்டது.

அவ்விழாவில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி, காந்தி மண்டபத்தில் எழுப்பப்படவிருக்கும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டி, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை இது:

## அதற்கு ஆதரவாக என்றும் உறுதுணை நிற்க, சென்னை விழாவில் முதல்வர் உரை!

மாக, நம் இதயச் சுவர்களில் எதிரொலிக்கின்றது. அதை நினைக்க நினைக்க, நம் நெஞ்சத்தில் விடுதலைக்கனல் கொழுந்துவிட்டு எரிவதை, இன்றும் நம்மால் உணர முடிகிறது.

### செய் அல்லது செத்து மடி!

"Everyone of you should,. from this moment onwards, consider yourself a free man or woman, and act as if you are free and are no longer under the heel of imperialism. I am not going to be satisfied, with anything short of complete freedom.

Do or die. We shall either free India or die in the attempt.'

— என்று அண்ணல் காந்தியடிகள் முழங்கினார்.

வைரம் பாய்ந்த இந்த வார்த்தைகள், இப்போது சொல்லும்போதே நமக்கு இவ்வளவு உணர்ச்சியூட்டுமானால், அன்று அடிமைப்பட்டு, அல்லலுற்றுக் கிடந்த மக்களுக்கு, அது எவ்வளவு ஆவேசத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

'வெள்ளையனே வெளியேறு' என்ற வீர முழக்கம், நாடெங்கும் ஒலித்து, அதை அடக்க ஆங்கில ஏகாதிபத்தியம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. மக்களோடு இராணுவம் மோதியது. நிராயுதபாணியான மக்களைத் துப்பாக்கியால் இராணுவம் சுட்டுப்பொசுக்கியது.

அன்று பற்றி எரிந்த விடுதலைத் தீ, 5 ஆண்டுக் காலத்தில் பாரதமாதாவின் விலங்குகளை உடைத்து, விடுதலை தந்தது. அதன் பயனாகத்தான் இன்று,



நம்மை நாமே ஆளும் நிலை ஏற்பட்டு, வல்லமை கொண்டு, வையகம் புகழ வாழுகிறோம்; புதிய வரலாறு படைக்கின்றோம்.

சுதந்திரப் போராட்டமே அரசியலுக்கு அப்பாற்பட்டது. எந்த ஒரு அரசியல் கட்சியும், அந்நியர் ஆட்சிக்கு ஆதரவு தந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒவ்வொரு கட்சியும் நமது நாட்டில் விடுதலைக்காகப் பல சோதனைகளை எதிர் கொண்டு போராடியுள்ளது.




### தனி உரிமை கொண்டாட முடியாது!

நாட்டின் விடுதலை, தேசபக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். ஒவ்வொரு இந்தியருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. எனவே எந்த ஒரு தனிப்பட்ட இனத்தினரோ, மதத்தினரோ, இடத்தினரோ, மொழியினரோ இதற்குத் தனி உரிமை கொண்டாட இயலாது. அனைவருக்கும் பொதுவான இந்த வெற்றியினை, ஒற்றுமை உணர்வோடு நினைவுகூர்வது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தத் தியாக வேள்வியில், தங்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அளித்தவர்களை, நாம் இதயம் நிறைந்த நன்றியுணர்வோடு, தொடர்ந்து நினைவு கூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

எதற்காக, எந்த இலட்சியத்திற்காக, அந்த விடுதலை வீரர்களும், வீராங்கனைகளும் போராடினார்களோ அந்த இலட்சியத்தை, அதன் பலனை, நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

அடிமைத்தளை அகன்று, அன்னை நாடு விடுதலை பெற்றுவிட்டது. அரசியல் விடுதலையை அடைந்த நாம், சமூக, பொருளாதார விடுதலை பெற, இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அன்று அந்த விடுதலையை, நமக்குப் பெற்றுத் தந்த அதே ஒற்றுமை உணர்வு, இன்று நம்மிடையே நிலவுமானால், நிச்சயமாக எந்த விடுதலையையும் நம்மால் எளிதாகப் பெற முடியும் என்பதை, இத்தருணத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால், சாதியால், மதத்தால், இனத்தால், இடத்தால் ஏற்படும் சச்சரவுகளால், நமது இலக்குகளை நாம் விரைவில் அடையமுடியாமல், தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை, நாம் மறைக்க முடியாது. இந்த வேறுபாடுகளைக் களைந்து, நாம் அனைவரும் இந்தியத் திருநாட்டின் குடிமக்கள், என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டால், நமது வெற்றிகளை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

### எங்களுக்கு வழிகாட்டட்டும்

இந்த விழா வழங்குகின்ற உத்வேகம், புத்துணர்ச்சி, நம்மிடம் தொடர்ந்து நிலைத்து இருக்க வேண்டியது, தற்போது மிகமிக அவசியம். இலட்சியப் பாதையில் வீறுநடை போட, உங்களது தியாகம் எங்களுக்கு வழிகாட்டட்டும்; உங்களது வீரம், எங்கள் விழிகளுக்குள் ஒளி ஊட்டட்டும், என்று வேண்டுகிறேன்.

எதிர்கால நம் தலைமுறையினருக்கு, இந்த நன்னாளை நினைவூட்டும் முகத்தான், சென்னை காந்தி மண்டப வளாகத்தில், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா ஆண்டு நினைவுத்தூண் ஒன்றை நிறுவிட, அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான அடிக்கல்லினை, இந்தப் புனித வேளையில் நாட்டியதை எண்ணிப், பெருமை அடைகின்றேன்.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, என்றென்றும் போற்றிப் புகழும் எங்கள் அரசு, 'வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா ஆண்டில்', நமது தமிழகத்தில் உள்ள விடுதலை வீரர்களைப் பாராட்டும் முகத்தான், இச்சீரிய விழாவினைச் சென்னையில் எடுத்துள்ளது.

விடுதலைப் போராட்டத்தியாகிகளின் கோரிக்கைகள் பல, நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன, என்பதை நான் அறிவேன். அரசிடம் உதவி நாடி வரும் மக்களுள், தலையாய இடம் அளிக்கப்பட வேண்டியவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று நான் குறிப்பிட்டால், அதனை மறுக்க முடியாது.

நமது நாட்டின் விடுதலைக்காகத் தங்களை வருத்திக்கொண்டு, சிறையில் வாடிய அத்தியாகசீலர்களுக்கு, அந்நியா ஆட்சியின் கொடுமைகளால், தாங்கொணாத் துயரமடைந்தும், சிறிதும் மனம் தளராது, தாம் கொண்ட சுதந்திர வேட்கையில் உறுதியாக இருந்த அந்த நல்லவர்களுக்கு, நாம் முன்னுரிமை கொடுப்பது தான் முறையாகும். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள், அரசாலும் அனைவராலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கென ஒருசில சிறு உதவிகள் புரிவது, அரசின் கடமை ஆகும். அந்த அடிப்படையில்தான், இந்நன்னாளில் கடமை உணர்வோடு, அவர்கள் பயன்பெறத்தக்க வகையில், ஒருசில அரசு சலுகைகளை அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### அரசு அளிக்கும் சலுகைகள்

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு, மத்திய அரசும், மாநில அரசும், ஓய்வூதியம் வழங்கி வருகின்றன. தற்போது, மத்திய அரசு வழங்கும் மாத ஓய்வூதியமாக 750 ரூபாயைத் தமிழகத்திலுள்ள 1,706 தியாகிகள் பெற்று வருகின்றனர்.

மத்திய அரசு வழங்கும் ஓய்வூதியத்துடன், தமிழக அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான 100 ரூபாயையும் சேர்த்து, 850 ரூபாய் பெற்று வரும் தியாகிகள், 4,023 பேர் உள்ளனர்.

மாநில அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான, 400 ரூபாயை மட்டும் பெற்று வரும் தியாகிகள், 6,681 பேர் இருக்கின்றனர்.

இனி இவர்கள் அனைவரும் மொத்த ஓய்வூதியமாக, ஒவ்வொரு மாதமும், 1,000 ரூபாய் பெறும் வகையில், ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆணையின்படி, இந்த மாதம் முதல், 750 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 250 ரூபாய் கூடுதலாகவும்; 850 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 150 ரூபாய் கூடுதலாகவும்; இதுவரை மாநில ஓய்வூதியமாக 400 ரூபாய் பெற்று வந்தவர்களுக்கு, 600 ரூபாய் கூடுதலாகவும் வழங்கப்படும்.

மேலும், சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியமான 400 ரூபாயை - 500 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள 15,169 விடுதலை வீரர்களும், அவர்தம் குடும்பத்தினரும், இந்த அறிவிப்புகளைப் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன். அரசிற்கு நிதி நெருக்கடியான இந்தச் சூழ்நிலையிலும், நாட்டிற்கு உழைத்த நல்லோருக்கு, இந்நன்னாளில் நாம் ஏதாவது உதவவேண்டுமே என்ற நல்லெண்ணத்தில்தான், அரசிற்கு 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படினும், அதனைப் பொருட்படுத்தாது, விடுதலை வீரர்களின் ஓய்வூதியங்களை உயர்த்தி ஆணையிட்டுள்ளேன்.

இதுவரை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய, சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச பஸ் பாஸ் சலுகையை சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, நீண்ட காலமாகவே அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது.

இந்த நன்னாளில், சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும், இலவச பஸ் பாஸ் வழங்கலாம் என்ற முடிவை அரசு எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை தவிர, மேலும் பல கோரிக்கைகள் உள்ளன என்பதையும் நான் அறிவேன். அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, விரைவில் உங்களுக்கு நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இவ்விழாவில் கலந்து கொள்ள, அனைத்து மாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ள, ஏறத்தாழ 1000 விடுதலை வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, இவற்றை எடுத்துச் செல்ல, பயணப்பெட்டி ஒன்றையும் அரசு கொடுத்துச் சிறப்பித்துள்ளதை எண்ணிப் பெருமைகொள்கிறேன்.

### விடுபட்ட விடுதலை வீரர்கள்

இன்றைய விழாவில், குறிப்பிட்ட ஒரு சில விடுதலை வீரர்களை மட்டும்தான் அழைத்துச் சிறப்பிக்க முடிந்தது. தமிழகத்தில் உள்ள எல்லா விடுதலைப் போராட்ட வீரர்களும், இன்று இவர்கள் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, வருகின்ற ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளன்று, நடைபெற இருக்கும் சுதந்திர நாள் விழாவில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களினால் சிறப்பிக்கப்படுவார்கள்.



இன்றைய விழாவில் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வீரருக்கும், பொன்னாடை அணிவித்து, பொன் விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, அவற்றை எடுத்துச் செல்லப் பயணப் பெட்டி ஒன்றும், சுதந்திர தினத்தன்று, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரித்திரப் புகழ் கூறும் இந்நன்னாளில், தமிழகத்தில் வாழும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும், என் அன்பு வாழ்த்துக்களை, மகிழ்ச்சியுடன் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்

அதே நேரத்தில், இந்தியாவைக் காக்கின்ற ஒப்பற்ற பணியில், தங்களை எப்போதும் ஈடுபடுத்திக் கொள்ளவும், இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி, அதற்கு ஆதரவாக என்றென்றும் உறுதுணையாக நிற்கவும், தமிழ்நாடும், தமிழக மக்களும், இந்த விழாவின் மூலம் சூளுரை ஏற்போம்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில், பொதுத்துறைச் செயலர் திரு. பெ. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா நிகழ்ச்சிகளைச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க. கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தொகுத்துரைத்தார்.

# கலைவாணர் அரங்க நிகழ்ச்சி: சிறப்பு அம்சங்கள்

**'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழாவும், அது தொடர்பான நினைவுத் தூண் அடிக்கல் நாட்டு விழாவும் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில், 9.8.92 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றன.**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டார்; சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்துக் கவுரவித்து, நினைவுப் பரிசு வழங்கி, கிண்டியில் இருக்கும் காந்தி மண்டபத்தில் எழுப்பப்படவிருக்கும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார்.

**மேடையில், மகாத்மா காந்தி அடிகள் உருவப்படம் பூச்சரங்களின் நடுவிலே பொலிவுறத் திகழ்ந்தது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா - நினைவுத் தூண் அடிக்கல் நாட்டுவிழா' என்ற எழுத்துக்கள் மலர்களாலேயே அலங்கரிக்கப்பட்டிருந்தன.**

**கண்காட்சி**

விழா நடைபெற்ற கலைவாணர் அரங்கின் வெளிப்புறம், மத்திய செய்தி-ஒலிபரப்புத் துறையினர் புகைப்படக் கண்காட்சி அமைத்திருந்தார்கள்.

விடுதலைப் போராட்டக் காலக் களக் காட்சிகள் பல அதில் இடம் பெற்றிருந்தன.

**அமைச்சர் கே.ஏ.கே.**

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

'இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிகச் சிறப்பாகத் தமிழகத்தில், அரசு சார்பில் இந்த விழா நடைபெற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முனைந்து நிற்பதே காரணம். அன்றைய தேசிய உணர்வு அணையாமல் காத்த பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கு உண்டு; அதன்பின் புரட்சித் தலைவருக்கு உண்டு; அதற்குப் பிறகு அவர் அடியொற்றி நடக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டுமே உண்டு. ஆகவேதான் அவர் இன்று ஒரு தேசியத் தலைவர்போல் திகழ்கிறார்!'

**தலைமைச் செயலாளர்**

அரசு தலைமைச் செயலாளர், திரு.டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்:

'மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெருமுயற்சியால் நடத்தப்படும் இந்த விழாவானது, இந்திய வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சியாக இடம் பெறும். முதல்வர் அவர்களின் இந்தத் தேசிய உணர்வானது தியாக சீலர்களால் பெரிதும் போற்றப்படும். 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்; அன்பு தன்னில் செழித்திடும் வையம்' என்று பாடினார் பாரதியார். அந்த வகையில், இந்த அரசு சாதிமத பேதமற்ற சமுதாயம் காணப் பாடுபட்டு வருகின்றது.

**வாழப்பாடி இராமமூர்த்தி**

தனது வாழ்த்துரையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதாவது:

'இந்திய விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் பெருமைப்படுத்துவதற்காக இந்த விழா எடுப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்கள் அன்று தேசியக் கொடிகளையெல்லாம்அறுத்துத்தீயிலிட்டபோது, அருணா ஆசப் அலி என்கிற வீரப் பெண்மணி ஒருவரே, பூனாவில், யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு நமது தேசியக் கொடியை ஏற்றினார். அதேபோல, இந்நாட்டில் பயங்கர வாதங்கள், அராஜகங்கள் தலை தூக்கியபோது, அதையெல்லாம் அடக்கிப் பெருமை கொண்ட வீரப் பெண்மணிதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

'தமிழகம் இன்று தேசிய நீரோட்டத்தோடு கலந்திருப்பதை, என்னைப் போன்ற தேசியவாதிகளெல்லாம் பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களே! எத்தகைய துன்பம் வரினும் சரி; எங்களைப் போன்ற தேசியவாதிகள் - சுதந்திரப் போராட்ட வீரர்கள் - தியாகிகளெல்லாம் உங்கள் பின்னால் நிற்கத் தயாராக இருக்கிறோம். எனவே, எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் நீங்கள் தைரியமாகச் செயல்படலாம்'.

**சிலம்புச் செல்வர் ம.பொ.சி.**

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரையாற்றினார்.

'இந்தியா சுதந்திரம் பெற்றதென்றால், அன்றைய தினம் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் வெறும் மனிதாத்மா அல்ல; மகாத்மா என்பதுதான் முக்கிய காரணம். அவர் தொடங்கிய ஆகஸ்ட் போராட்டத்தால், தேசமே சிறைச்சாலை ஆகிவிட்டது. 'தேசத்தையே சிறைச்சாலையாக்கிவிட்டு நீங்கள் சூப்பிரண்டெண்டாக இருக்கிறீர்கள்' என்று அதுபற்றி வைஸ்ராய்க்கே கடிதம் எழுதினார் காந்தியார்.

'டாக்டர் எம்.ஜி.ஆர். ஒரு சிறந்த தேசியவாதி போலவே திகழ்ந்தார்; பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடினார்; மகளிர் முன்னேற வேண்டும் என்று அவர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் மகளிர் பல்கலைக்கழகம் அமைத்தார். அவர் இன்று இல்லாவிட்டாலும், அதே ஒன்றுபட்ட அமைப்பாக இருந்து முதல்வர் அவர்கள் ஆட்சி செலுத்துவது கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்'.

**அமைச்சர் டாக்டர் நாவலர்**

அமெரிக்க நாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பியபின், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய முதல் விழா இது. டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதாவது:

'அருமை பெருமைமிக்க இந்த விழாவைத் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைக்கிணங்க கொண்டாடுகிறது என்றால், தமிழ்நாட்டில் உள்ள ஆறுகோடி மக்களும் கொண்டாடுவதாகவே பொருள். இந்த நேரத்தில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இன்னுயிர் நீத்தோரனைவருக்கும் நாம் வீரவணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த பெருமையாளர் என்பதனாலேதான் காந்தியாரை 'வாழ்க நீ எம்மான்' என்று பாரதி பாடினான். விடுதலைப் போராட்ட வீரர்களே! நீங்களெல்லாம் அன்று செய்த தியாகத்தின் நோக்கத்தை இன்றுள்ள இளைய தலைமுறையினர் பின்பற்றிச் செயல்பட முன்வரவேண்டும்'.

> • சேவை என்பது கூலியை உத்தேசித்தோ தனது சுயநலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்தான். **—தந்தை பெரியார்**

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை உரையாற்றினார்:

'நல்லவர்களைப் பாராட்ட நல்லவர்களாலேயே முடியும்; வல்லவர்களைப் பாராட்ட வல்லவர்களாலேயே முடியும். அதேபோல, தேசியவாதிகளின் தியாகத்தைப் பாராட்ட புரட்சிகரமான எண்ணத்தைத் தன் மனதிலே கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஒருவராலேதான் முடியும் என்பதை, இந்த விழாவின் மூலம் இந்தியத் துணைக் கண்டமே கண்டு பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நாளில், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட தியாக தீபத்தை ஏந்திப் பிடித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் கரத்தை வலுப்படுத்த தேசியவாதிகளெல்லாம் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில், தலை நிமிர்ந்த இந்தியாவைக் காணப் பாடுபடும் முதல் முதலமைச்சராகத் திகழ்பவர் நம் புரட்சித் தலைவி அவர்களேயாவார்'.

வாழ்த்துரை நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டினார். அக் கல்வெட்டில், பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

**'வெள்ளையனே வெளியேறு
இயக்கப் பொன்விழா
நினைவுத் தூண்'**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடித் திங்கள் 25-ஆம் நாள் (9.8.92) அடிக்கல் நாட்டப்பட்டது.**

**- டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப.,**
**தலைமைச் செயலாளர்**
**தமிழ்நாடு அரசு.**

**தியாகிகளுக்குப் பாராட்டு:**

இதற்குப் பிறகு சிறப்புரை ஆற்றி முடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆயிரம் பேர்களைச் சிறப்பிக்கும் வகையில் - அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கிப் பயணப்பெட்டி ஒன்றும் அளித்து மகிழ்ந்தார்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி., திரு. தளவாய், திரு.டி.செங்கல்வராயன், திரு.ஜெகதீசன், திருமதி மகாலட்சுமி பாரதி, திருமதி கமலா சுப்பிரமணியம் உட்பட 50 விடுதலைப் போராட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாமே மேடையில் சிறப்புச் செய்தார்.

பார்வையாளர் பகுதியிலிருந்த மற்றவர்களுக்கெல்லாம், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. க. பொன்னுசாமி, மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவரவர் இருக்கைக்கே சென்று பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

**தியாகிகள் சார்பில்...**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் - விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்தமைக்காக - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பிலும், தியாகிகள் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

- இவ் விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.



மின்கலப் பேருந்தினை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பார்வையிட்டுப் பயணம் செய்தார் (1.8.92)

## வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மின்கலப் பேருந்து

சென்னை வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு ரூ.5 இலட்சம் செலவில் பேட்டரியினால் இயங்கும் புதிய பேருந்து ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக இந்தப் பேருந்தினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 2.8.92 அன்று வண்டலூரில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

உயிரியல் பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் பேட்டரியில் இயங்கும் இந்த மின் பேருந்தைத் தமிழக அரசு வாங்கியுள்ளது. இந்த மினி மின்கலப் பேருந்து சத்தமில்லாமல் செல்வதால் விலங்குகளின் அருகில் சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்.

இன்னும் ஒருமாதக் காலத்திற்குள் இதே போன்று மேலும் இரண்டு மின்கலப் பேருந்துகள் தமிழக அரசின் சார்பில் வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு வழங்கப்படும்.

தற்போதுள்ள எண்ணெய்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டும், இறக்குமதி செய்யப்படும் எண்ணெயை நம்பி இருக்கும் தன்மையைக் குறைக்கும் பொருட்டும், எண்ணெய் உபயோகிப்பதை மிச்சப்படுத்தவும், அதனால் ஏற்படும் அன்னியச் செலாவணியைச் சேமிக்கும் பொருட்டும், இரைச்சல் மற்றும் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கவும், சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும், ஊட்டியில் சேரன் போக்குவரத்துக் கழகமும் தலா ஐந்து மின்கல ஊர்திகளைப் பரிசோதனை முறையில் இயக்கிட அரசு அறிவுரை வழங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து குறித்த 1992-93 கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

இதை ஒட்டி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் சென்னையில், மின்கலத்தினால் இயங்கும் ஐந்து ஊர்திகளை வாங்கி இயக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, பல்லவன் போக்குவரத்துக் கழகம், போபாலில் உள்ள பாரத கனரக மின்னியல் நிறுவனத்திடமிருந்து (BHEL) பேருந்து ஒன்றுக்குச் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து பேருந்துகளை வாங்கியுள்ளது. பேருந்து ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் Department of Non Conventional Energy and sources இடமிருந்து மானியம் பெறப்பட உள்ளது.

இவ்வூர்தி மின்கலத்தில் உள்ள மின்சக்தியினால் இயங்குகிறது. இது அதிகப்பட்சமாக ஒரு மணிக்குச் சுமார் 40 கி.மீ. வேகத்தில், சுமார் 70 கி.மீ. தொலைவு வரை செல்லும். இவ்வூர்தியை மீண்டும் இயக்குவதற்கு மின்கலன்கள் சுமார் 10 மணி நேரம் சார்ஜ் செய்யப்பட வேண்டும். இவ்வூர்தி 96 வோல்ட் 300 ஆம்பியர் ஹவர் லெட் ஆசிட் டிராக்சன் பாட்டரி உதவியால் இயங்குகிறது.

இந்த ஊர்தியின் மொத்த எடை சுமார் 4000 கி.கி. இதில் 18 பேர் செல்லலாம்.

இந்த மின்கல ஊர்தியினால், எண்ணெய்க்குப் பதில் மின் சக்தியைப் பயன்படுத்தி அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம். இரைச்சல் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மாசு ஏற்படுவதைத் தடுக்கலாம்.






## கோவை மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

கோவை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 481 பேர்களைத் தேர்ந்தெடுத்து 3.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கோவையிலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக, தையல் இயந்திரம் 9 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 19 பேர்களுக்கும், காதொலிக் கருவி 23 பேர்களுக்கும், பட்டு வளர்ச்சித் திட்டக் கருவிகள் 8 பேர்களுக்கும், பட்டு வளர்ச்சிக்கென நிதியுதவி 4 பேர்களுக்கும், சவரப்பெட்டி 5 பேர்களுக்கும் வழங்கப்பட்டது.

கலப்புத் திருமண உதவி 7 நபர்களுக்கும், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவி ஒருவருக்கும், விழியிழந்தோர் திருமண உதவி ஒருவருக்கும், விதவை மகள் திருமண உதவி 10 பேர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் சாலை விபத்து நிவாரண உதவி 3 பேர்களுக்கும், நலிந்தோர் நல உதவித் திட்டத்தின்கீழ் 113 பேர்களுக்குக் கடன் உதவியும், விபத்து நிவாரண உதவி 2 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 34 பெண்களுக்கு ரூ.1,70,000 நிதி உதவியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 111 நபர்களுக்கு கடன் உதவியும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 4 நபர்களுக்கு ரூ.10,75,087 வட்டியில்லாக் கடனும், உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கும், தாட்கோவின் மூலம் தொழில் தொடங்க 4 பேர்களுக்கு ரூ.13,03,000-மும், வீட்டு மனைப் பட்டா 23 பேர்களுக்கும், விதவை ஓய்வூதியம் 13 பேர்களுக்கும், குடிசை மாற்று வாரிய நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 27 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், கைத்தெளிப்பான் 5 பேர்களுக்கும், மூன்று சக்கர வண்டி 2 பேர்களுக்கும், பெண் ஆட்டோ ஓட்டுநர் கடனுதவி ஒருவருக்கும், விதவை குழந்தைகள் 10 பேர்களுக்கும், ஏழைக் குழந்தைகள் 20 பேர்களுக்கும் இலவசப் பாடநூல்களும், மாண்புமிகு முதல்வர் நிவாரண உதவி இருதய அறுவைச் சிகிச்சைக்காக 24 நபர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

மொத்தம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 481 நபர்களுக்கு ரூபாய் 40,63,589 பெறுமானமுள்ள உதவிகளை அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 340 பேர் பெண்களாவர்.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 நபர்களுக்கு இருதய அறுவைச சிகிச்சைக்காக மாண்புமிகு முதல்வர் நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் ரூ.1,63,000 நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி. காந்தகுமாரி பட்நாகர் அவர்களுக்குத் தமது இல்லத்தில் தேநீர் விருந்து அளித்தார் (29.7.'92).



சென்னை நகரில் போக்குவரத்துக் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நவீன ரக மோட்டார் சைக்கிள் மற்றும் கருவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார் (3.8.'92).



கோவையில் கே.ஜி. மருத்துவமனையில் ரூ.10 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவப் பிரிவுக் கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றித் திறந்து வைத்தார் (28.7.'92).



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தருமபுரி மாவட்டத்திலிருந்து வந்திருந்த மனுதாரர்களுக்குத் தலைமைச் செயலகத்தில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (10.8.92).

# 'வெள்ளையனே வெளியேறு' வீர வரலாறு!

இருநூறு ஆண்டுக்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய நாடு ஒன்று திரண்டு ஓரணியாகப் பிரம்மாண்டமாக எழுந்து நின்று, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு மாபெரும் சவாலை விடுத்த நாள், 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாளாகும்!

அந்நாள் நம் விடுதலைப் போரின் வீர வரலாற்றில் பொன்னெழுத்துக்களாகப் பிரகாசிக்கும் பெருநாள்! பிரமிக்க வைக்கும் நமது சக்தியை நாமே உணர்ந்த நன்னாள்! சூரியன் மறையாத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தையே நடுங்க வைத்த சிந்திக்க வைத்த நாள்! நமக்குப் பூரண சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற நாள். கோடானு கோடி இந்தியர்கள் ஆண்டாண்டு காலமாக எதிர்பார்த்த முழு விடுதலை நம்மை நோக்கி ஓடி வரத் தொடங்கி விட்டது என்பதை நாடு உணர்ந்த மகத்தான நாள்!

இரண்டாவது உலகப்போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை! 1941 டிசம்பர்த் திங்களில் போரில் குதித்த ஜப்பான் நாடு, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளை வென்று, ரங்கூனைக் கைப்பற்றி, இந்தியாவின் கிழக்கு எல்லையில் நின்று கொக்கரித்துக் கொண்டிருந்த நேரம்!

ஜப்பான் இந்தியாவுக்குள் எந்நேரமும் நுழையலாம் என அனைவரும் அஞ்சிக் கொண்டிருந்த நேரம் அது! அதே கால கட்டத்தில் இந்தியாவிற்குச்

**என். இளங்கோ**

சுயாட்சி வழங்க இங்கிலாந்தை அமெரிக்கா நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால், இங்கிலாந்தின் பிரதமர், வின்ஸ்டன் சர்ச்சில் இதற்குப் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தார். ஆங்கில சாம்ராஜ்யத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நான் பிரதமர் ஆகவில்லை என்று சர்ச்சில் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ('I did not become the King's First Minister to preside over the liquidation of the British Empire') மக்களுக்குத் தங்களை எந்த அரசு ஆளவேண்டுமென முடிவு செய்யும் உரிமை அனைவருக்கும் உண்டு என்று கூறும் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் (Atlantic Charter) அமெரிக்காவும், இங்கிலாந்தும் கையெழுத்திட்ட பின், இது இந்தியாவுக்குப் பொருந்தாது என ஆணித்தரமாகச் சர்ச்சில் கூறினார்.

ஆனால், உலகப் போரில் பர்மாவை நோக்கி ஜப்பான் நெருங்கி வந்து கொண்டிருக்கும் சமயம், இந்தியர்களைச் சமாதானப்படுத்தவும், அமெரிக்க நிர்பந்தத்தைத் திருப்திப்படுத்தவும், கிரிப்ஸ் மிஸனை (Cripps Mission) சர்ச்சில் இந்தியாவிற்கு அனுப்பினார். சர் ஸ்டோபோர்ட் கிரிப்ஸ் (Sir Stafford Cripps) இந்தியாவிற்கு ஒரு புதிய திட்டத்துடன் வந்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். உலகப் போர் முடிவுக்கு வருவதற்கு முன்பே இந்தியாவிற்குச் சுயாட்சி வழங்கப்படும். போருக்குப்பின் இந்தியா தனக்கெனப் புதியதோர்









அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுத்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக உலகப் போரில் இங்கிலாந்தை இந்தியா முழுமையாக ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டார். ஆனால், யாரையும் திருப்திப்படுத்தாத இந்தத் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல, இரண்டு நூற்றாண்டுகளாக நம்ப முடியாத ஆங்கிலேயர்களை இன்று நம்ப இந்தியர்கள் தயாராக இல்லை.

நடைபெற்றுக் கொண்டிருந்த உலகப் போரில் இங்கிலாந்து தோற்று விடக்கூடிய அபாயமும் இருந்தது. தோற்றுப் போகக் கூடிய நாட்டின் வாக்குறுதிகளை நம்ப இந்தியத் தலைவர்கள் தயாராக இல்லை. அது, வீழ்ச்சியுறுகின்ற வங்கிக்கு வழங்கப்படும் முன் தேதியிட்ட காசோலை போன்றதாகும் என வர்ணிக்கப்பட்டது. (It was like a post-dated cheque on a crashing bank) எனவே, கிரிப்ஸ் மிஸன் படுதோல்வியைத் தழுவியது. அதைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களைப் பற்றி அண்ணல் காந்தியடிகள் கொண்டிருந்த அபிப்பிராயம் அடியோடு மாறியது. ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் மிகுந்த வருத்தத்தைத் தருவதாக அண்ணல் கூறினார்.

'I used to say that my moral support was entirely with Britain. I am very sorry to confess that today my mind refuses to give that moral support. British behaviour towards India has filled me with great pain' என்று காந்தியடிகள் கூறினார். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருந்தால் தான் ஜப்பானியர்கள் இந்தியாவில் ஊடுருவுவார்கள். ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டிவிட்டால் ஜப்பானியர்கள் நம் மீது படையெடுக்க மாட்டார்கள் என ஆணித்தரமாக நம்பினார்.

'The presence of the British in India is an invitation to invade India. Their withdrawl removes the bait' என வாதிட்டார். வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறினால் நம் பாதுகாப்பை நாம் கவனித்துக் கொள்ளலாம் என முழங்கினார்.



★ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால், குடிப்பழக்கத்தை விலக்க வேண்டும்.

**சூரியன் மறையாத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தையே நடுங்க வைத்த - சிந்திக்க வைத்த நாள்! நமக்குப் பூரண சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற நாள்! கோடானு கோடி இந்தியர்கள் ஆண்டாண்டுக் காலமாக எதிர்பார்த்த முழு விடுதலை நம்மை நோக்கி ஓடி வரத் தொடங்கி விட்டது என்பதை நாடு உணர்ந்த மகத்தான நாள்! - 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாள்!**

அகிம்சைப் புரட்சியாக ஒரு மாபெரும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க மகாத்மா எண்ணினார். அந்த மகத்தான எண்ணத்தைத் தொடர்ந்து 1942-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் பதினான்காம் நாள் காங்கிரஸ் செயற்குழு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

'இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும்' என அத்தீர்மானம் கூறியது.

1920-ஆம் ஆண்டிற்குப் பின் தேக்கி வைக்கப்பட்ட அகிம்ஸா பலத்தை முழுவதுமாகப் பயன்படுத்தி, அண்ணல் காந்தியடிகளின் தலைமையின் கீழ் நாடு தழுவிய அறப்போராட்டம் தொடங்கும் என அது அகிலத்திற்குப் பறை சாற்றியது. இந்த 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் 8.8.1942 அன்று ஏற்றுக் கொண்டு, நாடு தழுவிய மாபெரும் அறப்போராட்டத்தை அறிவித்தது. அன்று மாலை அண்ணல் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார்:

'இந்த வினாடியிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாகக் கருதிச் செயல்பட வேண்டும். பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதைக் குறித்தும் நான் திருப்தி அடையப் போவதில்லை. நாம் செய்வோம் அல்லது செத்து மடிவோம். நாம் இந்தியாவை விடுதலை செய்வோம் அல்லது அம்முயற்சியில் செத்து மடிவோம்!'

'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் தொடங்கியது. மறுநாள் காலை அண்ணல் காந்தியடிகளும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். தலைவர்களைக் கைது செய்தால் போராட்டத்தை நசுக்கி விடலாம் எனத் தப்புக் கணக்கு போட்டனர் ஆங்கிலேயர். நாடெங்கும் கொழுந்து விட்டெரிந்த விடுதலைத் தீயை, அண்ணலின் கைது என்னும் பஞ்சை வைத்து அணைத்துவிடப் பார்த்தனர் ஆங்கிலேய அறிவாளிகள். பஞ்சு பற்றியது. நகரங்கள் கொதித்தன. நாடே கொந்தளித்தது. ஊரெங்கும் நாடெங்கும் கதவடைப்பு. வேலைநிறுத்தம் ஊர்வலங்கள் தொடர்ந்தன. அகிம்சா வழியில் நடைபெற்ற இப்போராட்டத்தைக் கைது, தடியடி, துப்பாக்கிச் சூடு ஆகியவற்றின் மூலம் நசுக்கப் பார்த்தது ஆங்கிலேய அரசாங்கம். விளைவு - அறப்போராட்டம் வன்முறையில் இறங்கியது. The police repression let loose by the police goaded to fury crowds that had intended to act quite peacefully' என ஒரு ஆங்கிலேயப் பததிரிகையாளர் அருமையாக வர்ணித்தார்.

அண்ணல் காந்தியடிகள் தொடங்கியது அறப்போர். அதை வன்முறையாக்கியது ஆங்கிலேயர்கள். சென்னை, பீகார், பம்பாய், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஆகிய பகுதிகளிலே வாழ்ந்த மக்கள், ஆங்கிலேயரின் அடக்குமுறையின் சின்னங்களை அடித்து நொறுக்கத் தலைப்பட்டனர். தபால் நிலையங்கள் எரிக்கப்பட்டன. ரயில்கள் கவிழ்க்கப்பட்டன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. போர்த்தளவாடங்கள் தயாரிப்பது நிறுத்தப்பட்டது.

தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால், நாட்டின் பல்வேறு பகுதிகள் தொடர்பின்றித் துண்டிக்கப்பட்டன. இப்பகுதிகளில் ஆங்கிலேயரின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்றே கூறலாம்.

வங்காளத்தில் மித்னாபூர், உத்திரப்பிரதேசத்தில் பாலியா மற்றும் பல்வேறு மாவட்டங்களில் 'இணை அரசாங்கங்கள்' 'Parallel Governments) நடைபெற்றன. சோசலிஸ்ட் குடியரசுப்படை போன்ற குழுக்கள் இக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இத்தகைய தனித்தனி நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி முறையான கொரில்லாப் போராக உருவாக்க ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அயராது பாடுபட்டனர். வன்முறை தொடர்ந்து பரவியது.

**"இந்த வினாடியிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாக கருதிச் செயல்பட வேண்டும். பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதைக் குறித்தும் நான் திருப்தி அடையப் போவதில்லை நாம் செய்வோம் அல்லது செத்து மடிவோம். நாம் இந்தியாவை விடுதலை செய்வோம் அல்லது அம் முயற்சியில் செத்து மடிவோம்" என்று முழங்கினார் அண்ணல் காந்தியடிகள்.**

1919-இல் பஞ்சாப் பிரச்சினைக்குப் பின் முதன்முறையாக மக்களை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது. நவீன ஆயுதங்களைக் கொண்டு அப்பாவி மக்களை மூர்க்கத் தனமாகத் தாக்கினர். இயந்திரத் துப்பாக்கிகளால் சுடப்பட்டும் விமானத் தாக்குதலுக்கு ஆட்பட்டும், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். பத்தாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். மக்களின் போராட்டத்தை நசுக்கப் பயங்கரமான முறைகள் கையாளப்பட்டன. செப்டம்பர் இறுதியில் ஆங்கிலேயர் போராட்டத்தை நசுக்கி நாட்டை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். போராட்டத் தீயின் கடைசிப் பொறி 1943-இல் அணைக்கப்பட்டது.

போராட்டம் நசுக்கப்பட்டாலும் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் இந்தியச் சுதந்திர வீர வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய போராட்டமாகும்!

நம்மையும், நமது சக்தியையும், நமக்கும் நாட்டுக்கும் ஆங்கிலேயருக்கும் உலகத்திற்கும் உணர்த்திய உன்னதப் போராட்டமாகும்!

**ஆங்கிலேயரின் ஆட்சியின் சவப் பெட்டியில் அடிக்கப்பட்ட முதல் ஆணி இப்போர்! விரைவில் வரப்போகும் விடுதலைக்கு முதல் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்த்து மலர்கள் தாம் இப்போர்!**

இப்போராட்டம் நடைபெற்று ஐம்பதாண்டு நிறைவுறும் இந்நன்னாளில், விடுதலை வீரர்களின் தியாகங்களை நினைவுகூர்ந்து அவர்களது உணர்வுகளை இதயத்தில் சுமந்து, புதியதோர் இந்தியாவை வலிமை மிக்க இந்தியாவை - வளமிக்க இந்தியாவை, இல்லாமையை இல்லாதாக்கி, உலகில் முதன்மை நாடாக்கி 2000-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்திட அயராது உழைப்போம்! வெற்றி நமதே!

**★ மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.** - மகாத்மா காந்தியடிகள்

# தருமபுரி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



தருமபுரி மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 426 பேர்களைத் தேர்ந்தெடுத்து 10.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தருமபுரியிலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அன்று அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக, 26 பேர்களுக்கு ரூபாய் 43,874 மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களும் சலவைப்பெட்டி 6 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 7 பெண்களுக்கு ரூ.35,000-மும், கலப்புத் திருமண உதவி 2 பேர்களுக்கும், விதவை மகள் திருமண உதவி 5 பேர்களுக்கும், விதவை உதவித்தொகை 5 பேர்களுக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலிகளுக்கான உதவித்தொகை 4 பேர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கான உதவித் தொகை 2 பேர்களுக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50 நபர்களுக்கு ரூபாய் 16 இலட்சத்து 90 ஆயிரம் கடனுதவியும், ரூபாய் 10 இலட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் 3 நபர்களுக்கு டிராக்டர் வாங்கக் கடனும், 11 நபர்களுக்கு தொழில் முதலீட்டுக் கழகக் கடன் உதவியாக ரூபாய் 51 இலட்சத்து 86 ஆயிரமும், 8 நபர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 85 ஆயிரம் தாட்கோ கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 9 நபர்களுக்குக் கடனுதவியும், பட்டு வளர்ச்சிக்காக 24 பேர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 74 ஆயிரத்து 400 கடனுதவியும், 20 பேர்களுக்குக் கூட்டுறவு நிலவள வங்கிக் கடனுதவியாக ரூபாய் 4 இலட்சத்து 2 ஆயிரமும், மண்பாண்டத் தொழில் செய்ய 15 நபர்களுக்குக் கடனுதவியும், 34 பெண்களுக்குத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூபாய் ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 400 கடனுதவியும், தெளிப்பு நீர்ப்பாசனத்திற்கென 2 பேர்களுக்குக் கடனுதவியும், ரூபாய் 60 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் 24 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், ரூபாய் 28 இலட்சத்து 18 ஆயிரத்து 950 மதிப்பீட்டில் 158 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும், 9 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், இருவருக்கு ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டன.

மொத்தம் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 426 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 23 இலட்சத்து 64 ஆயிரத்து 524 பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 229 பேர் பெண்களாவர்.

இதுதவிர, கடந்த 5.7.92 அன்று வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம், பாலூர் புதூரில் ஏற்பட்ட வன்முறைத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவித்தொகையாக ரூபாய் 57,000 வழங்கினார்.

ஆக மொத்தம் அன்று (10.8.92) 454 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 24 இலட்சத்து 21 ஆயிரத்து 524 ரூபாய் பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.



●● இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. ●●



# இருபது அம்சத் திட்டம்–இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம்

நம் நாட்டின் ஒட்டு மொத்தமான பொருளாதார நெருக்கடி நிலைமை, நமது பணியை மிகவும் கடுமையாக்கியுள்ள போதிலும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதென நாம் முடிவு செய்துள்ளோம்.

1991-92-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு ரூ.1,600 கோடி நிர்ணயிக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டின் திட்ட அமலாக்கம் மேற்காணும் திட்ட ஒதுக்கீட்டை மிஞ்சுமென எதிர் கொள்ளப்படுகிறது.

1992-93-ஆம் ஆண்டுக்குரிய உயரளவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.1,751 கோடி என வரையறை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சருடைய அயராத முயற்சிகளின் காரணமாக, 1992-93- ஆம் ஆண்டிற்கு அதிகத் திட்ட ஒதுக்கீடு வேண்டுமெனக் கோரப்பட்டது நியாயமான கோரிக்கையே என மத்தியத் திட்டக்குழுவால் உணரப்பட்டு, இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1992-97 குறித்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மத்தியத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும் இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாளில் புதுதில்லியில் நடைபெற்றது எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.10,200 கோடியாக மத்தியத் திட்டக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு தொகையான ரூ.5,700 கோடியை ஒப்பிடும்போது, மேற்காணும் திட்ட ஒதுக்கீடு 77 சதவிகிதம் அதிகமாகும் என அறியலாம்.

### இருபது அம்சத் திட்டம்

இருபது அம்சத் திட்டம் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தை மனதிற்கொண்டு உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டமாகும். வறுமையை அகற்றி, ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இருபது அம்சத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், உபரி நிலங்களைப் பிரித்து வழங்கும் திட்டம், கொத்தடிமைகளிலிருந்து மீட்கப்பட்டோர் மறுவாழ்வு, நோய்த் தடுப்புக் குடும்ப நலத் திட்டங்கள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, குடிசைப் பகுதி மேம்பாடு, மரம் நடுதல், கிராமப்புறங்களுக்கு மின்வசதி, பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு, மரபுசாரா எரிசக்தி உபகரணங்களைப் பிரபலப்படுத்துதல் ஆகியவை தொடர்பான திட்டங்கள் போன்று, இருபது அம்சத் திட்டத்தின் கீழ் வருகின்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகளின் செயல்பாட்டை மத்திய அரசு மறு ஆய்வு செய்கிறது.

மத்திய அரசு பல்வேறு மாநில அரசுகளின் செயல்பாடுகளை ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்த்த பின்னர், 1991-92-ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது என அறிவிப்புச் செய்துள்ளது. தமிழ்நாடு அரசு இத்தகைய சாதனையை இதற்கு முன்னர், 1982-83, 1984-85, 1988-89 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளிலும் நிகழ்த்தியுள்ளது.

மாநில அளவில், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, பெரியார், காமராசர், திண்டுக்கல்-அண்ணா ஆகிய ஐந்து மாவட்டங்கள் 1991-92-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைமுழுமையாக எய்தி, முதலிடத்தைப் பெற்றுள்ளன.

# நூல் நயம்

### பெண்களும் சமூகமும்

**ஆசிரியர்:** அ. ஜெய்குமார்

**வெளியீடு:**

உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி,
சென்னை-600 001.

பக்கம்:136 விலை:ரூ.15/-

புராண காலத்திலிருந்து இன்றைய நவீன காலம் வரை பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வருவதை இந்நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது. பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறியுள்ள நூலாசிரியர், பெண்டிர் நலன் காப்பதற்காக அரசு நடைமுறைப்படுத்திய ஆணைகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

பெண்ணுக்குத் தாலி கட்டும் வழக்கம் கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் நமது நாட்டில் நிலவவில்லை என்பது ஆய்வு முறையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்நாளில் ஆடவர்க்கு இணையாகச் சில பெண்கள் பட்டம் பதவி பெற்று ஒளி வீசித் திகழ்வதையும் குறிப்பிடத் தவறவில்லை• நூலாசிரியர் இனிய எளிய நடை இந்நூலின் சிறப்பம்சம்.

—தமிழ்ப்பித்தன்

### நகரத்தார் யார்? எவர்? (முதல் தொகுதி)

**ஆசிரியர் மற்றும் வெளியீடு:**

பழ. அண்ணாமலை,
8, நைனியப்பன் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:242 விலை:ரூ.35/-

ஒருவரைப் பற்றித் தெரிந்துகொள்ள 'முகவரி' மிக மிக அவசியமாகிறது. இந்த வகையில் பல தொகுப்புகள் வெளி வந்துள்ளன. வெளிவருகின்றன. எழுத்துலகில் 'தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?' தொகுப்பு அந்தந்தக் கால கட்டங்களில் வெளிவந்திருக்கின்றன. இதேபோலப்பல மொழிகளிலும் வெளிவருகின்றன.

'நகரத்தார் யார்? எவர்?' என்னும் இந்நூலில் நகரத்தார்களின் நனிபுகழ் வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. இச்சமூக எழுத்தாளர்கள், வணிகப் பெருமக்கள் முதலானோர் பற்றிய குறிப்புகளைத் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

### டாக்டர் தயாவின் கிறிஸ்து நெறிக் கவிதைகள்

**ஆசிரியர்:** அருள்திரு டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:73 விலை:ரூ.35/-

இந்நூலில் 31 கவிதைகள் உள்ளன. இயேசு பெருமானின் பெருமைகளைச் சித்திரிக்கும் சித்திரங்களாக இவை விளங்குகின்றன. முதல் பாடலிலிருந்து முடிவு வரை எல்லாப் பாடல்களுமே தித்திக்கும் தேனமுதங்களாகத் திகழ்கின்றன.

அகவல், எண்சீர் ஆசிரிய விருத்தம், ஆறடித் தரவு, வஞ்சித் துறை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, நேரிசை ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, திருப்புகழ்ச் சந்தம், எழுசீர் விருத்தம் இவ்வாறு பல இலக்கண மரபுகளில் கவிதைகள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

'அருமை பெருமை அகன்றாய் போற்றி
வெறுமைக் கோலம் விழைந்தாய் போற்றி
மனித உருவில் வந்தாய் போற்றி
புனித அன்பைப் பொழிந்தாய் போற்றி
ஏழைக் கோலம் ஏற்றாய் போற்றி
கோழைக்கு உதவும் குமரா போற்றி'

என்று சிலுவை ஏறிய செம்மலைப் போற்றுகின்றார் கவிஞர். பாடவும், படிக்கவும் ஏற்ற இனிய நூல்.

### எழுத்தும் நானும்

**ஆசிரியர்:** சு.ரா.

**வெளியீடு:**

மகாகவி பதிப்பகம்,
2, ஜயசங்கர் தெரு,
சென்னை-33

பக்கம்:80 விலை:ரூ.7.50/-

வி.எஸ். சுந்தரராஜன் என்ற பெயருக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சு.ரா. என்னும் பழம்பெரும் எழுத்தாளரின் அனுபவ முத்திரைகள் இந்நூலில் பதிக்கப்பட்டுள்ளன.

எழுத்துப்பணி, பத்திரிகை உலக நுழைவு, அரசுப் பணி என்று தன் வாழ்க்கை நிலைகளை நிலையுறுத்தியுள்ளார் ஆசிரியர். தம் எழுத்துக்கு உதவியவர்களையும் அவர்களது புகைப்படத்தையும் வெளியிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நூலுக்கு டாக்டர் விக்கிரமன் முன்னுரை எழுதிச் சிறப்பித்திருக்கிறார்.

### நாளைய உலகம் நமது கையில்

**ஆசிரியர்:** வே. எழிலரசு

**வெளியீடு:**

கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:128 விலை:ரூ.16/-

வாழ்க்கை வயல் முழுவதும் நம்பிக்கை நாற்றங்கால்களை நடவு செய்யுங்கள்.

நம்பிக்கைதான் வாழ்க்கையின் ஜீவ நாடி.

பணம், காற்று, தண்ணீர் இவைகளை விட நம்பிக்கை ஆதாரமானது. அதிக வலிவுடையது.

- என்று கட்டுரை தொடங்குகிறது. நமக்கும் நம்பிக்கை பிறக்கிறது, இது ஒரு நல்ல நூல் என்று. முழு வாழ்வு வாழ்வதற்கு, முழு மனிதனாகத் திகழ்வதற்கு, முன்னேற்றக் கருத்துக்கள் பல இந்நூல் முழுவதும் விரவியுள்ளன. ஆசிரியரின் அப்பழுக்கற்ற சிந்தனைச் சிதறல்கள் ஒவ்வொன்றும் முத்துக்கள்.

### ஸ்டில் மேதை நாகராஜ ராவ்

**ஆசிரியர்:** நீலம்

**வெளியீடு:**

சாந்தி பதிப்பகம்,
44, அண்ணாசாலை,
சென்னை-600 002.

பக்கம்:80 விலை:ரூ.15/-

திரைப்பட உலகில் 'ஸ்டில்' நாகராஜ ராவ் பேரும் புகழும் பெற்றவர். தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, காமிராவில் கைவண்ணம் காட்டியவர் அவர்.

பல்வேறு கோணங்களில் அவர் எடுத்த படங்கள் பலரால் பாராட்டப் பெற்று விடுகின்றன. மிக அற்புதமான அவரது படங்கள், அழியா ஓவியங்களாக விளங்கி வருகின்றன. அன்னாரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் அழகிய நூலே இது. இளம் புகைப்படக் கலைஞர்கள், இந்த மேதையின் வாழ்க்கையை அவசியம் படிக்க வேண்டும்.

—பி.வி.கிரி





# தென்றலை அள்ளும் குற்றாலம்

**என். ரெங்கநாதன்**

தமிழ்நாட்டின் தென் மாவட்டமான திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென் பொதிகை மலை தழுவி வரும் தென்றலோடு திருக்குற்றாலத்து அழகு சிந்தும் அருவிகளில் நீர் சொட்ட மலரின் மணமும், மலையில் வளர்ந்துள்ள பல்வேறு மூலிகைகளின் மணத்தையும் அள்ளி வரும் சாரலும் தோன்றும் ஆனி, ஆடி, ஆவணி (ஜூன் முதல் செப்டம்பர் வரை) திங்களில் நாட்டின்பல பகுதிகளிலிருந்து குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இருந்து மக்கள் அலை மோதுவர்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலோ - அப்பப்பா! கூட்டம் சொல்லி முடியாது. இயற்கை எழில் கொஞ்சும் செழுமை மிகு குற்றால அருவிகள் நாட்டவர் அனைவரையும் ஆண்டுதோறும் தவறாது வருகை தரத் தூண்டுகின்றன. வானத்தைத் தொட்டு நிற்கும் மலை முகடுகளும், வனப்பு மிகுந்த பறவைகளின் இன்னிசையும், வண்டூரும் மலர்களும், வழிபாட்டிற்குரிய தெய்வச் சிலைகளும், வரலாற்றுச் சிறப்பு மிக்க சிற்பங்களும் திருக் குற்றாலத்தில் கண்டு களிக்கத்தக்கன.

திருக்குற்றாலம் தென்காசி ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும், மதுரையில் இருந்து 160 கி.மீ. தூரத்திலும், திருநெல்வேலியில் இருந்து 60 கி.மீ. தூரத்திலும், திருவனந்தபுரத்திலிருந்து 115 கி.மீ. தூரத்திலும் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஏறத்தாழ 550 அடி உயரத்தில் உள்ளது. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை அருகில் உள்ள 'குத்தாலம்' என்ற ஊரை வேறுபடுத்துவதற்காக, குற்றாலத்தை திருக் குற்றாலம் என்றே அழைக்கிறார்கள்.

இருந்தாலும், சாரலின் போது சிறப்புப் பேருந்துகளும், வேன்களும் இயங்குகின்றன. திரு. காமராசர் முதலமைச்சராக இருந்த பொழுது மக்கள் குளிப்பதற்கேற்றவாறு செம்மைப்படுத்தப்பட்டதாகக் கூறுவர். ''சுள் சுள்' என்று விழும் அருவித் துளிகள் இங்கு குளிப்போரை மகிழ் விக்கும்.

**சிற்றருவி**

பேரருவிக்கு மிக அருகில் அமைந் துள்ள சிற்றருவி இரண்டு அருவி களாகப் பிரிக்கப்பட்டு ஆண்கள், பெண்கள் என்று தனித்தனியாகக் குளிக்க வசதி உண்டு. குளியலறை யில் குளிப்பது போல் இருக்கும். இங்கு குளிக்க நகரியத்தினர் சிறப்புக் கட்டணம் வசூலிப்பர்.

புது அருவி, பழத்தோட்ட அருவி, (சாமியார் அருவி) போன்ற அருவிகள் தற்பொழுது பிரசித்தம் பெற்று வருகின்றன.

**திருக்குற்றால நாதசுவாமி திருக்கோயில்**

மாணிக்கவாசகப் பெருந்தகை யார் தம் திருக்கோவையாரில் ''குற்றாலத்துக் கோல பிண்டி பொழில் வாய்தட வரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே'' எனச் சிறப்புற்ற குற்றால நாதர் திருக் கோயிலில் இறைவனுக்கு வலப்புறம் குழல் வாய் மொழி அம்பிகையும், இடப்புறம் பூரண மேரு ரூபமாக இறைவி பராசக்தியும் கொலுவீற்றி ருக்கிறார்கள்.

கோயிலில் உள்ள பிரகாரத் திலிருந்து பேரருவியின் அழகைக் கண்டு ரசிக்கலாம்.

இத்தலத்தில் வருடத்தில் சித்திரை விசு, ஐப்பசி விசு, மார்கழித் திருவாதிரை போன்ற திருவிழாக்கள் பத்து நாட்களும், தை மகத் தெப்பம் ஒரு நாளுமாக நடைபெற்று வருகின் றது. திருவிழாக் காலங்களில் இங்கு நடைபெறும் தாண்டவ தீபாரா தனையைப் போல் தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாது. காண்பவர்கள் கண்ணையும், கருத் தையும் ஒருங்கே ஈர்க்கக் கூடியது.

**சுற்றுலா வளர்ச்சி**

ஏழைகளின் நல்வாழ்வுத்தலம் என்ற பெயர் பெற்ற குற்றாலம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் சுற்றுலாத்தல மாகும்.

சாரல் சீசனின் போது அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பு பேருந்துகளை இயக்குகின்றன. தனியார் வேன்களும் அதிக அள வில் விடப்படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் உணவுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. உல்லாசப் படகு சவாரிக்கும் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சார்பில் தகவல் மையமும் இயங்குகின்றது. சாலை களும், அருவிப் பகுதிகளும் புதுப் பிக்கப்படுகின்றன.

**தங்குமிடங்கள்**

குற்றால நகரியத்தின் சார்பில் சிறுகுடில்கள், ஒருவர் தங்கும் அறை, இருவர் தங்கும் அறை, குடும்பம் தங்கும் அறை என்று பல்வேறு தங்கும் விடுதிகள் கட்டப் பட்டுள்ளன. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும்.

இவைத்தவிர கோயிலின் சார் பில் கட்டப்பட்ட தங்கும் விடுதிகள், வனத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை சார்பில் கட்டப்பட்ட ஆய்வு விடுதிகள், போக்குவரத்துக் கழகம் தொழி லாளர் அமைப்பு ஆகியவற்றின் ஓய்வு விடுதிகள், தனியார் விடு திகள் எனப் பலவகை தங்கும் விடுதிகள் உள்ளன. அருகில் உள்ள தென்காசியிலும் தனியார், அரசு தங்கும் விடுதிகள் உள்ளன. தென் காசி புகைவண்டி நிலையத்தில் தங்கும் விடுதிகள் அமைக்கப் பட்டுள்ளன.

**பொழுது போக்கு**

சாரல் 'சீசனி'ல் சாரல் திரு விழா நடத்தப்படுகின்றது. திரை யரங்கம், பூங்கா, பாம்புப் பூங்கா, படகுச் சவாரி, பொருட்காட்சி போன்றவையும் இதர பொழுது போக்கு அம்சங்களாகும்.

முடிவாகக் கூறினால், பார்த்தால்
பரவசம்
குறித்தால் உடலில் சுகம் -
உள்ளத்தில்
ஆனந்தம் இதுதான் குற்றாலம்.

சுருங்கக் கூறினால் இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் இடம், அழகின் சிரிப்பு குற்றாலம். குற்றாலம் சென்று அருவிகளில் குளித்து மகிழ்வோம்!

**- நன்றி: 'திட்டம்'.**



## இன்சாட்

முதன் முதலாக, முழுவதும் நம்நாட்டுப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது தலைமுறை பல நோக்குச் செயற்கைக் கோள் இன்சாட் - 2ஏ ஜூலை மாதம் 10-ஆம் தேதி பிரெஞ்சு கயானா வில் உள்ள கூரு என்ற இடத் திலிருந்து சக்தி வாய்ந்த 'ஏரியன்' என்ற ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

தற்போது விண்ணில் அது வெற்றிகரமாகச் சுற்றி வருகிறது. கர் நாடகாவில் ஹசனில் உள்ள தலைமை விண்வெளிக் கட்டுப் பாட்டு மையத்தின் கீழ் இது இயங் கும். செலுத்தப்படுவதற்கு முன் இன்சாட் 2ஏ-வின் மொத்த எடை 1906 கிலோ, நீளம் 23 மீட்டர். வானிலை பற்றிய விவரம், புயல் எச்சரிக்கை குறித்து இச் செயற்கைக் கோள் தெரிவிக்கும். தொலைத் தொடர்பு, தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்பிற்கும் இச் செயற்கைக்கோள் உதவும்.







### ஸ்பா ஆப் சௌத்

குற்றாலம் தென்னாட்டு ஸ்பா என்ற பெருமையுடைத்து. ஸ்பா என்பது பெல்ஜியம் நாட்டில் உள்ள ஊற்று நீர் வளம் நிறைந்த ஆரோக்கியத் தலம். அந்த ஊற்று நீர் மருத்துவ குணங்களைக் கொண்டதாக இருக்கும். அதே போல் குற்றாலம் இருப்பதால் முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள் இப்பெயரை இவ்விடத்திற்குச் சூட்டினர்.

### இலக்கியத்தில் குற்றாலம்

''மலையார் சாரல் மகவுடன்
வந்த மடமந்தி குலையார்
வாழைத் தீங்கனி மாந்தும்
குற்றாலம்''

என்று தமிழிலக்கிய 'வோர்ஸ்ட்வொர்த்து' திருஞானசம்பந்துப்பெருமானால் போற்றப்பட்ட இத்திருத்தலம் தென்னாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கில் பழம்பெருமை வாய்ந்தது. சிவபெருமானின் ஐவகை அம்பலங்களுள் ஒன்றான சித்திர சபையினைக் கொண்ட சிறப்புடைத்து.

திருக்குற்றாலத்தில் கோயில் கொண்டுள்ள திருக்குற்றால நாதரின் பெருமையினை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

''சுற்றாத ஊர் தோறும் சுற்ற
வேண்டாம் புலனீர்
குற்றாலம் என்றொருகாற்
கூறினால் - வற்றா
வடவருவியானே மறு
பிறவிச் சேற்றில்
நடவருவி யானே நமை.''

அருவியைத் தாங்கியுள்ள குற்றாலம் மலை மூன்று கொடுமுடிகளைப் பெற்றுள்ளது. அவை பட்சிப் பொற்றை, வாலியம் பொற்றை, திருமலை பொற்றை ஆகிய பெயர்களைப் பெற்று 'திரிகூட மலையாக'க் குற்றாலக் குறவஞ்சியில் பாராட்டப்படுகிறது.

### இயற்கை வளம்

இயற்கை அன்னையின் எல்லையில்லாப் பேரழகு இம்மலையில் எங்கும் பொங்கி வழிகிறது. தேக்கு, மயிலை, கோங்கு, அத்தி, புன்னை, ஆல், இலுப்பை, தென்னை, பலா, கமுகு, வாழை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சந்தனம், மங்குஸ்தான் ஆகிய மரங்கள் மணம் பரப்பி நிற்கின்றன. இம்மலையில் பூத்துக் குலுங்கும் மல்லிகை, செண்பகம், முல்லை, வெட்சி ஆகியவை வருவோரை வரவேற்கும் வண்ண மலர்களாகத் திகழ்கின்றன.

'பக்கம் வாழைப் பாய்
கனியோடு
பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி
தூங்கும் குற்றாலம்' -

என்று பாடுகிறார் சம்பந்தர், வேங்கை மரங்கள் சூழ்ந்த சோலையில் கோல வண்டுகள் குற்றால நாதரைப் பண் சுமந்த பாடலால் பாடும்.

'கொம்பார் சோலைக் கோல
வண்டு யாழ்செய் குற்றாலம்'
என்பார் ஞானசம்பந்தர்.

நில மலர்கள் சூழ்ந்த அணைகளை உடைய சோலைகளில் கோல மஞ்ஞை பேடையோடு ஆடும் குற்றாலத்தின் செந்நெல் வளத்தினைச் செழுமையினைத் திரிகூட ராசப்பக்கவிராயர்,''

''கன்னிமாப் பழுத்துக்
கதலித்தேன் கொழித்துச்
செந்நெல் காத்து அளிக்கும்
நன்னகர்ப் பதியான்''
என்று பாடுவார்.

### நெஞ்சை அள்ளும் அருவிகள்

குற்றால அருவிகளின் அழகைக் கான 'ஆயிரங்கண் போதாது வண்ணக்கிளியே - குற்றால அழகை நாம் காண்பதற்கு வண்ணக்கிளியே' என்று பாடி மகிழ்கிறார் கவிஞர். மலர்களும் கனிகளும் அங்கே மண்டிக் கிடிக்கும் அருவிகள் ஒன்றா, இரண்டா! ஒன்பது அருவிகள்! அவைகளை வர்ணிக்க அழகு தமிழில் வார்த்தைகள் இல்லை.

''போதும் பொன்னும் உந்தி
அருவி புடைசூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும்
குற்றாலம்'

- திருஞான சம்பந்தர்

குற்றால அருவிகள் காட்சிக்கும் மாட்சிக்கும் உரியவை. உடல் நலமும், உள்ள வளமும், தரும் குற்றால அருவி, நோயகற்றும் மூலிகை மணத்துடன் நீராடும் மக்களுக்குப் புதுத்தெம்பும், எழுச்சியும் நல்குகின்றது.

பொதிகை மலை திரிகூடமலை எனப்படும் குற்றால மலையிலிருந்து உருவாகிவரும் சிற்றாறு, தேனருவி, செண்பக அருவி, வற்றாத வட அருவி எண்ணும் பேரருவி, சிற்றருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றால அருவி, புது அருவி, பழத்தோட்ட அருவி என்று ஒன்பது அருவிகளாகப் பாய்ந்தோடிச் செல்வதைக் .காணக் கண் கோடி வேண்டும்.

### தேனருவி

''தேனருவித் திரை எழும்பி
வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்''

என்று திருக்குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் நயமுற நவிலும் 'தேனருவி' மலையடிவாரத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் மலை மேல் நடந்தால் நூறு அடி உயரத்தில் இருந்து விழும் அழகிய காட்சியினைக் காணலாம். தேனைப் போன்று மெல்லிய ஒழுங்குடன் மலர்களைப் போன்று நீர்த் துளி சிதறி விழுகிறது. அக்காட்சியைக் காணாத கண்ணும் கண்ணோ?

அருவி தண்ணீர் விழும் இடத்திலிருந்து சுமார் 30 அடி தூரத்திற்கு நீண்ட குளம் போன்ற பகுதியில் நீந்தி மகிழ்ந்து விளையாடலாம்.

### செண்பக அருவி

தேனருவியிலிருந்து புறப்பட்டோமானால் சுமார் 2½ கி.மீ. தூரத்தில், செண்பக அருவியினைக் காணலாம். தேனருவித் தண்ணீர் சிற்றாறு மலைக் குன்றுகளில் ஓடி மறுபடியும் ஓரிடத்தில் 30 அடி உயரத்தில் இருந்து அருவியாக விழுகிறது. 'செண்பக மரங்கள் நிறைந்த செழுமையான காட்டு வழியே பாய்ந்து வருவதால் இது 'செண்பக அருவி' எனப் பெயர் பெற்றது போலும். செண்பக தேவியின் சிறு கோயிலும் இங்கே இருக்கிறது. ''தேன் அலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும்'' என்று குற்றாலக் குறவஞ்சியில் புகழப்படும் இவ்விடம் நிலா விருந்துக்கும், மனைப்புற விருந்துக்கும் ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

### வட அருவி எனப்படும் பேரருவி

செண்பக அருவியிலிருந்து வரும் தண்ணீர் சுமார் 2 கி.மீ. தூரம் அடர்ந்த மா மரங்கள் சூழ்ந்த காட்டின் வழியே வந்து மாவடித் துறையைக் கடந்து சுமார் இருநூற்று தொண்ணூறு அடி உயரத்திலிருந்து இழுமென 'இழிதரும் அருவி'யாக ஓசையெழுப்பி விழுகின்றது. வட அருவி எனவும் அழைக்கப்படும் இப்பேரருவியில் இரவு, பகல் என்ற வேறுபாடினின்றி மக்கள் எந்நேரமும் குளித்து மகிழ்வர். வெகு உயரத்தில் இருந்து ஒரே வீழ்ச்சியாக இஃது விழுமாயின் இவ்வருவியில் நீராடுவதே இயலாததொன்றாவிடும். அதனால் இயற்கையிலேயே இடையில் பெரும் பாறையில் விழுந்து பொங்கிப் பரந்து விரிந்து மேலெழுவதால் இதனைப் ''பொங்குமா கடல்'' என்று அழைப்பர். மழைக் காலங்களில் இப்பகுதியை மலையின் உச்சியிலிருந்து இதனைப் பார்க்கும்பொழுது நிலை தடுமாறி பலர் இறக்கவும் நேரிடுகிறது. அதனால் குற்றால சாரல் காலத்தின் போது தடுப்பு அரண்கள் அமைக்கப்படும். காவல்துறையின் கண்காணிப்பும் இருக்கும். எத்தனை முறை குளித்தாலும் எப்பொழுது குளித்தாலும் நீர்க்கோவை போன்ற ஊறுகள் நேராச் சிறப்புடையவை குற்றால அருவிகள்.

### கண்கொள்ளா ஐந்தருவி

பேரருவியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் சிற்றாற்றின் ஒரு கூறு ஐந்தருவிகளாக விழுகிறது. ஆண்கள், பெண்கள் குளிப்பதற்கு என்று பிரிக்கப்பட்டுள்ளது. காட்சி அலங்கார ஒளிப்பிழம்புகள் இரவில் அருவியின் இயற்கை அழகுக்கு மெருகூட்டுகின்றன. அமைதியாகக் குளிக்க ஏற்ற அருவி. பந்தற் கூரைப் பாறை முருகன் திருக்கோயிலுடன் திகழ்கிறது.

### புலியருவி

பாசுபத்தன் அருவி எனப்படும் புலியருவி 'குழந்தைகள்' குளிப்பதற்கேற்ற இடம். கலைத் தந்தை கருமுத்து தியாகராசனாரால் புதுப்பிக்கப்பட்ட ஐயனார் கோயிலும், அருவியும் அவரை என்றும் நினைவு கூர்வன. பெயர்க் காரணம் கேட்டால் 'புலிகள் இங்கு வந்து நீரருந்தும்' என்று கூறுவர்.

### பழைய குற்றால அருவி

முப்பது அடி உயரத்தில் இருந்து விழும் பழைய குற்றால அருவி பேரருவியிலிருந்து சற்று தூரத்தில்

---



## ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 10 இலட்சம் ஊனமுற்றோர் நலத்திற்காக 1992-93-ஆம் ஆண்டிற்குச் சுமார் ரூ.700 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில், தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றோரின் நலன் மற்றும் மறுவாழ்வினை முழுமையாகக் கவனிப்பதற்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கான நலப்பணிகளை மேம்படுத்தும் பொருட்டும், சமுதாயத்தின் மிகவும் நலிவுற்ற இந்தப் பிரிவினரின் நெடுநாள் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் தற்போதுள்ள சமூக நலத்துறை பிரிக்கப்பட்டு 'ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்' உருவாக்கப்பட்டுள்ளது.

---





# மானிடவியல் படிமங்கள்

கடந்த ஏப்ரல் மாதம் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட 'தென் இந்தியப் படிமங்கள்' என்ற சிறப்புக் கண்காட்சியின் ஒரு பகுதியே 'மானிடவியல் படிமங்கள்' ஆகும்.

நமது வரலாற்றுக் காலப் படிமங்களை அறியு முன், இந்தியாவின் வெண்கலக் காலத்தைப் பற்றியும், முந்தைய வரலாற்றுத் தொல்பொருளியல் மக்கள் வெண்கலத்திலிருந்து வடித்த அரும்பொருள்கள் யாவை? அவை சமூக, பொருளாதார மற்றும் சமய வாழ்வில் எவ்வகையில் சம்பந்தப்படுத்தப்பட்டன; அவ்வித அரும்பொருள்கள் 2000 - 2500 ஆண்டுகளுக்குப் பிறகு எப்புதையல் தடயங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டன என்பதை எல்லாம் ஒன்று திரட்டி, ஒட்டு மொத்தமாக, அவைகளின் தோற்றம், வளர்ச்சி, பரிமாணம் ஆகியவைகளைக் கோவையாகக் காட்ட முற்படுவதே இந்த மானிடவியல் படிமங்கள் என்ற சிறப்புக் காட்சியின் உள்நோக்கமாகும்.

இவைதவிர, நமது கிராமிய, நாட்டுப்புற மக்களிடம் எளிய முறையில் வெண்கலத்தினாலாகிய கிராமியத் தெய்வங்களின் கலைப் பொருள் படைப்புகள், இம்மக்களின் சமய, தெய்வீக வழிப்பாட்டு முறைகள், அவர்களின் எளிய பண்பாடு நம்மிடமிருந்து எவ்வாறு சற்று வேறுபட்டுள்ளது என்பதையும் இக்காட்சி வெகு தெளிவாகக் காட்டுகிறது.

இவைகளைத் தவிர, நம்மோடும், கிராமிய மக்களோடும் இன்றும் வாழ்ந்து வருகின்ற, நமது காலத்துடன் வாழ்ந்து வருகின்ற, ஆனால் தனித்து மலைக்காடுகளில் வாழ்ந்துவரும் நமது பழங்குடிகளின் படிமங்கள் யாவை? அவைகள் கலைப் படைப்புகளா? சமயத்துடன் கொண்டுள்ள தொடர்பு, நம்மைப்போன்றமக்களால் அவர்களின் கலைக்கு ஏற்பட்ட சிதைவு, ஆகியவைகளையும் ஒருவாறு அறிய முயலுவதே இந்தச் சிறப்புக் கண்காட்சியின் சிறப்பு அம்சமாகும்.

இவை தவிர, வழிபாட்டில் உதவக்கூடிய வெண்கல அரும்பொருள்கள், இசைக்கருவிகள், ஆபரணங்கள், கலயங்கள், வெண்கல விளையாட்டுப் பொருள்கள், ஆகியவையும் காட்சிக்கு வைக்கப்பட்டள்ளன.

சிந்து நதிப் பண்பாட்டு நாகரிகம் தான் இந்தியாவின் வெண்கலக் காலத்தின் உதயத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. சுமார் கி.மு. 3500 ஆண்டுகளுக்கு முன் இந்நதிப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல நடனப் பெண், (மாதிரி உருவம்), செம்புக் கோடாரிகள், அம்பு முனை, தூண்டில் முள் ஆகியவைகளை ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் இந்தியாவின் கங்கை நதிப்புறச் செம்புப் பண்பாடு தமிழகத்திலும் (காலம் சுமார் கி.மு. 4000) பரவியுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் இராமநாதபுர மாவட்டச் சிவந்திப்பட்டியில் நமது அரசு அருங்காட்சியகத்தினால் சில ஆண்டுகளுக்கு முன், காப்பாட்சியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதையல் செம்புக் கலவைப் பிடிக்கத்தியும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர, பீகார், பரகுண்டாவில் 1887-இல் திரு. ராபர்ட் புட் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட பெரிய வெண்கலக் கோடாரியும் முதல்முறையாகக் காட்சியில் இடம் பெற்றுள்ளது.


**டாக்டர் நே. தேவசகாயம்**
காப்பாட்சியர்
மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை-8


தொடர்ச்சியாக, தென்னகத்தில் வெண்கலக் காலம் இரும்புக் காலத்துடன் கோக்கப்பட்டுள்ளதைத் திருநெல்வேலி ஆதிச்சநல்லூரில் திரு. அலெக்ஸாண்டர் ரே அவர்களால் கண்டெடுக்கப்பட்ட வெண்கலக் கடா, புலி, சேவல், எருமை உருவம் கொண்ட கிண்ணங்கள், வளையல்கள், மணிகள், ஆகியவை விளக்குகின்றன. தவிர, இதில் சிறப்பு இடத்தைப் பெறுவது வெண்கலச் சிறிய தாய் தெய்வப் படிமமாகும். இது வீட்டு வழிபாட்டிற்காக, தெய்வங்களின் உருவங்களைச் செய்து வழிபடும் பழக்கம் தோன்றிய காலத்தைச் சுட்டி காட்டுவது போல உள்ளது. இதன் காலம் கி.மு. 8 முதல் கி.பி. முதல் நூற்றாண்டாகும். அடுத்ததாக, தமிழகத்தில் நீலகிரியில் திரு பிரீக்ஸ் அவர்கள் 1878-ஆம் ஆண்டு தோண்டி எடுத்த வெண்கல மணிகள், கலயங்கள், வளையல்கள், கண்ணுக்கு மை தீட்டும் வெண்கலக் குச்சிகள், மோதிரங்கள் இடம் பெறுகின்றன. இவை தவிர மிகவும் புகழ் பெற்ற தாமரை மலர் போன்ற சித்திர வேலைப்பாடுள்ள வெண்கலக் கிண்ணம், மத்தியத்தரைக்கடலில் கி.மு. 3000 ஆண்டுக் காலத் தங்க கிண்ணத்தைப் போன்றுள்ளதாக இருக்கிறது. இது வெண்கலக் காலத்தின்கலை ஆர்வத்தை மிகச் சிறப்பாகக் காட்டுகிறது.

அடுத்ததாக, உள்ள காட்சிப் பெட்டிகளில், நாட்டுப்புறப் படிமங்களான மதுரை வீரன், முனியன், முனியப்பன், காளி, வினாயகர், மற்றும் பூசாரி உருவங்கள் இடம் பெறுகின்றன. இவை எழும்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்களில் விசாரணை முடிந்து அரசிற்கு உடைமையாக்கப்பட்டவைகளாகும். மற்றும் சில கிராமியப் படிமங்கள் மாவட்டங்களிலிருந்து புதையலாகக் கிடைத்தவையாகும்.

ஒரிஸ்ஸா கோண்டர் பழங்குடிகளின் படிமங்கள், மனித, பறவை, விலங்குகள் உருவத்தினாலானவை. இவை தங்கள் குலக் குறிகளாக வழிபட்டு, திருமண ஊர்வலங்களில் முன்னதாக எடுத்துச் செல்லவும், பின்னர் தங்களின் முன்னோருக்குப் படைப்பதாகவும் கூறப்படுகிறது. பொதுவாக, பழங்குடி மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் தாங்கள் செய்யும் உருவத்தின் வடிவமைப்பில் செலுத்தும் கவனத்தைவிட, கண்ணுக்குத் தெரியாத உட் சக்தியை அப்படிமங்களில் கொண்டுவருவதை, இப்படிமங்களில் காணலாம். கர்நாடகத்தின் பூத ஆலயங்களில், பித்தளை உருவங்கள் இறந்தவர்களையும், பூதங்களையும், சாந்தப்படுத்துவதற்காகப் படைக்கப்படுகின்றன. இவ்வகைப் படிமங்கள் மெழுகு உருக்கு முறையில் தயாரிக்கப்படுகின்றன.



வெண்கலத் தெய்வப் படிமம், ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

பித்தளை மற்றும் வெண்கலத்தினாலான வழிபாட்டுச் சடங்குப் பொருள்களான விஷ்ணு பாதம், சக்கரம், வழிபாட்டு இசைக்கருவிகளான தாளம், சேமங்கலம், பூசாரி கைச்சிலம்பு, விபூதி கிண்ணம் ஆகியவை இக்காலச் சமய நடை முறைகளைக் காட்டுகிறது.

நமது மக்களின் வாழ்க்கை, பொழுதுபோக்கு முறைகளைக் காட்ட வேலூரிலிருந்து பெறப்பட்ட வெண்கல வெற்றிலை உலக்கு, மற்றும் வீட்டு விளையாட்டுப் பொருளான மலபாரின் வெண்கலப் பல்லாங்குழி, தாயம் ஆகியவைகளும் காட்சியில் இடம் பெறுகின்றன.

திருவாச்சுடர், கிரீடம், பூக்கள் ஆகிய விக்கிரகங்களின் வேலைப்பாடான ஆபரணம் 1934-ஆம் ஆண்டு தஞ்சை, நன்னிலம், மணக்கல் கிராமத்தில் புதையலாகக் கண்டெடுக்கப்பட்டவையாகும். இவை தெய்வீக வழிபாட்டுக் கலாச்சாரத்தைக் காட்டுவனவாக உள்ளன.

ஆக மொத்தத்தில், வெண்கலக் காலத்தின் தோற்றம், வளர்ச்சி, பரிமாணத்துடன், நாட்டுப்புற, பழங்குடிகளின் படிமங்களும், நம் நாட்டு மக்களின் சமய, பொழுதுபோக்கு வெண்கலப் பொருள்களும் சேர்ந்து படைக்கப்பட்டுள்ள இந்த 'மானிடவியல் படிமங்கள்' என்ற சிறப்புக் கண்காட்சி முதல் தடவையாக, சிறப்பு அரும்பொருள்களைக் கொண்டு அமைந்திருப்பது கண்ணிற்கு விருந்தாகவும், கல்வி வளர்ச்சிக்கு உதவியாகவும்; அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

துள்ளனர். மேற்கூறிய மானிய விகிதத்தில் 1992-93-ஆம் ஆண்டு சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் அமைத்து பயனடைய இருக்கும் உழவர்களுக்கு அரசு ரூ.187.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தரமான பொருட்களை உபயோகப்படுத்தவும், தங்கு தடையில்லாமல் நீர்ப்பாசன அமைப்புகள் இயங்கவும், உழவர்களுக்குப் பயற்சி தரவும், விரிவான முறையில் நடைமுறைகளை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது.

தோட்டக்கலை வளர்ச்சிக்கென, சொட்டு நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்திட மத்திய அரசு நிதியுதவியோடு, ரூ.101.57 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும், தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க முன்வரும் உழவர்களுக்கு 50 சதவிகிதம் மானியத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 457 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

மாநிலத்தில் அதிக பரப்பளவு மானாவாரி நிலங்கள் மண் அரிப்பிற்கு உட்பட்டு நிலச் சீரழிவிற்கு இலக்காகின்றன. மண்ணைப் பாதுகாத்து நீர்வளத்தைப் பராமரித்து உற்பத்தித் திறனை உயர்த்தவேண்டியது மிக அவசியத் தேவையாக உள்ளது. மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளின் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 1991-92-இல், 76,462 எக்டேர் நிலங்களும் இவ்வாண்டு மே மாதம் முடிய 8,248 எக்டேர் நிலங்களும் பயனடைந்துள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் 1991-92-இல் 454 எக்டேரிலும், இவ்வாண்டு 11 எக்டேரிலும் செயல்படுத்தியுள்ளது. மேலும் இப்பணிகள் குந்தா மற்றும் கீழ்பவானி பகுதிகளில் நதிப்பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 7,596 எக்டேரிலும் இவ்வாண்டு 465 எக்டேரிலும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1991-92-இல் 1,573 எக்டேரிலும் இவ்வாண்டு 67 எக்டேரிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 1,648 எக்டேரிலும், இவ்வாண்டு 130 எக்டேரிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

காற்றரிப்புத் தடுப்புத் திட்டத்தின் மூலம் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1991-92-இல் 1,007 எக்டேரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் 4,063 எக்டேர் நிலப்பரப்பில் மேற்கொண்ட மண்வளப் பாதுகாப்புத் பணிகளினால் 1991-92-இல் 4,457 ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிடப் பழங்குடியைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



## தேயிலையிலிருந்து மூலிகை

தேயிலையிலிருந்து மூலிகை மருந்துகளைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் கல்கத்தாவிலுள்ள தேயிலை ஆராய்ச்சிச் சங்கம் ஈடுபட்டுள்ளது. தேயிலையில் வைட்டமின் B-12, புரோட்டீன், தாது உப்புக்கள், வைட்டமின்-கே ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஜப்பானில், தேயிலைச் சாற்றிலிருந்து இரத்த அழுத்தம், கொழுப்புச் சத்து ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய மாத்திரைகள் தயாரித்து விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

**நில மேம்பாடு**

வேளாண்மைப் பொறியியல் துறை நிலத்தைச் சமன்படுத்தி பயன்படுத்தவும், இயந்திரங்களைக் கொண்டு உழுவதற்கும் நில மேம்பாட்டுத் இத்திட்டத்தின் கீழ், உழவர்களுக்கு 115 புல்டோசர்கள் மூலம் 1991-92-இல் 1,72,062 மணிகளும், இவ்வாண்டு 42,589 மணிகள் பணி செய்தும், 177 உழுவைகள் (டிராக்டர்கள்) மூலம் 1991-92-இல் 1,15,021 மணிகளும், இவ்வாண்டு 12,370 மணிகள் பணி செய்தும் சாதனை படைத்துள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை புல்டோசர்கள் மூலம் 1991-92-இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்துச் சீரமைக்கும் பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ளது. கும்பகோணம் மகாமகம் குளத்தில் தூர் எடுக்கும் பணியினையும் வேளாண்மைப் பொறியியல் துறை புல்டோசர்கள் மூலம் குறுகிய காலத்தில் நிறைவேற்றிப் பாராட்டினையும் பெற்றது.

**சிறுபாசனம்**

இத்திட்டத்தில் சிறுபாசனக் கருகிகளாகிய வேளாண்மைப் பொறியியல் துறையின் 157 ஆழ்துளைக் கருவிகள், 92 பாறைவெடி மற்றும் 46 நீள் துளைக் கருவிகள், 387 கைத்துளைக் கருவிகள், 17 காற்றழுத்தக் கருவிகள், 25 மின் தடைக் கருவிகள் மற்றும் 2 மின் அளவியல் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி 1991-92-இல் 5,823 குழாய்க் கிணறுகளும், 3,501 வடிமுனை குழாய் கிணறுகளும் 6,011 கிணறுகளில் நீர் பெருக்கத்தை உண்டாக்க கிணற்றுக்குள் குழாய்க் கிணறு அமைத்தும், கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளும் செய்து வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது. இவ்வாண்டு 1,074 குழாய்க் கிணறுகளும், 714 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைத்து, 1,135 கிணறுகளில் நீர்ப்

## குடும்ப அட்டை தொடர்புடைய கோரிக்கைகளுக்காக...

சென்னை நகரில் உதவி ஆணையர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகங்களில் சில இடைத்தரகர்கள் வெளியிலிருந்து செயல்படுகின்றனர் என்றும், அவர்கள் அங்கீகரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்களை விற்கின்றார்கள் என்றும் புகார்கள் பெறப்படுகின்றன.

இந்த இடைத்தரகர்களை நீக்கவிட்டு நிர்வாகத்தைச் சீரமைக்கும் வகையில் குடும்ப அட்டை, ஒப்புவிப்புச் சான்றிதழ், நீக்கல் சான்றிதழ் மற்றும் கடை, வருமானம், முகவரி மாற்றம் கோரி மனு செய்பவர்களுக்கென்று அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், தொடர்புடைய உதவி ஆணையர் அலுவலகங்களில் விற்பனைக்கென்று வைக்கப்பட்டுள்ளன. மேற்படி படிவம் ஒன்றின் விலை ரூபாய் ஒன்று ஆகும். மேற்படி படிவத்தில் நீதிமன்றக் கட்டண வில்லை ஒட்ட வேண்டிய அவசியமில்லை. பொதுமக்கள் குடும்ப அட்டை தொடர்புடைய கோரிக்கைகளுக்காக மேற்படி அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களிலிருந்து பெற்று உபயோகிக்கும்படியும், இடைத் தரகர்களை ஊக்குவிக்காமல் இருக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெருக்கத்தை உண்டாக்கியும் வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

**சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்**

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை கிணறுகள் அமைக்க, ஆழப்படுத்த சிறு, குறு மற்றும் மலை வாழ் விவசாயிகளுக்கு முறையே ரூ.3,000, ரூ.4,000 மற்றும் ரூ.5,000 மானியம் வழங்கப்பட்டு 1991-92-இல் 5,232 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மொத்தம் ரூ.105 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்**

காவிரி, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம், ஆழியாறு, பெரியார்-வைகை பாசனப் பகுதிகளில் 1991-92-இல் 47,576 எக்டேர் பரப்பளவிலும், இவ்வாண்டு 8,197 எக்டேர் பரப்பளவிலும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் காவிரி, கீழ்பவானி, பெரியாறு- வைகை பாசனப் பகுதிகளில் 1991-92-இல் 15,493 எக்டேர் பரப்பளவில் சுழற்சிமுறை நீர் பங்கீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், 1991-92-இல் 187 கசிவு நீர்க் குட்டைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 10.926 இலட்சம் மனித வேலை நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டன. இவ்வாண்டு இது வரை 237 கசிவு நீர்க்குட்டைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 10.258 இலட்சம் மனித வேலை நாட்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்**
**மானாவாரி விவசாயத்திற்கெனத் தேசிய நீர்வடிப் பகுதி முகடு மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 594 நீர் வேகக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

**ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம்**

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் டானிடா உதவியுடன் 1991-92-இல் தரம் பாதிக்கப்பட்ட 1,650 எக்டேர் நிலப்பரப்பில் நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுப் பணிகளும், 1,110 எக்டேர் நிலப்பரப்பில் காற்றரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகளும், 1,028 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நிலமேம்பாட்டுப் பணிகளும், 2,140 எக்டேர் நிலப்பரப்பில் தேரிநில மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு இப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

**பண்ணை இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்**

விவசாய இயந்திரங்களை இயக்கவும், அதனைப் பராமரிக்கவும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு திருச்சி, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டு 1991-92-இல் 157 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பண்ணை இளைஞர்களுக்கும் உதவும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

# போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகள்

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் 17.7.92 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அலுவலகத்தில் தமிழகத்திலும், குறிப்பாக சென்னை நகரிலும் உள்ள போக்குவரத்து நெரிசலைச் சீரமைப்பது குறித்தும், போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, ஆய்வுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகித்தார்.

தமிழக உள்துறைச் செயலாளர், திரு மலைச்சாமி, போக்குவரத்துத்துறை ஆணையர் திரு. சிவசுப்பிரமணியம், இணைப் போக்குவரத்துத்துறை ஆணையர், துணைப் போக்குவரத்துத்துறை ஆணையர், மண்டல போக்குவரத்து அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளின் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இனி செயல்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன. விரைவில் சென்னை அசோக் நகரில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 2-வது தளத்தில் சென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் அலுவலகம் (மேற்கு) செயல்படும் என்றும், பல்வேறு மாவட்டங்களிலும் இவ்வலுவலகங்களக்காக நிலங்கள் கையகப்படுத்தும் நடவடிக்கை மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நியமனத்தில் நீதிமன்றங்களின் தடையாணை காரணமாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்குவதற்கான வழிவகைகளும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

போக்குவரத்துத் துறை அதிகாரிகளும், அலுவலர்களும் தமிழகம் எங்கும் உள்ள வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவதென்றும், உரிமம் இல்லாத வாகனங்கள், உரிமம் இல்லாமல் வாகனங்களை ஓட்டுதல், வரி கட்டாமல் வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகியவையும் குறிப்பாக மணல், செங்கல் ஆகியவைகளைக் கொண்டுச் செல்லும் லாரிகள் தற்போது வேகக் கட்டுப்பாட்டை மீறியும், ஆபத்தாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டும் நிலையையும் கண்காணிக்க வேண்டுமென்றும் துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில், டிரைவர் சீட்டில் இருவர் பயணம் செய்வது, அதிகக் கட்டணம் கேட்பது, குறைந்த தூரத்திற்கு வர மறுப்பது, பயணிகளிடம் மரியாதைக் குறைவாக நடப்பது ஆகியவைகள் குறித்துக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மேலும், இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை பெருகி வருவதால், சென்னை நகரின் முக்கியச் சாலைகளின் பேருந்து போக்குவரத்து பாதிக்கப்படுவதால், துரிதமாகவும் சொகுசாகவும் பயணம் செய்யும் வகையில் பேருந்துகளை விடுவது பற்றியும் ஆராயப்பட்டது. மேலும், துரிதப் போக்குவரத்திற்கு உதவிடும் மாற்று யோசனைகளைக் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

★ சென்ற ஆண்டில் மார்ச் முதல் செப்டம்பர் வரை 4,83,931 வெளிநாட்டினருக்கு இந்தியாவிற்கு வருவதற்காக விசா அளிக்கப்பட்டது.

★ தற்போது இந்தியாவில் 80,000 திபெத் நாட்டினர் அகதிகளாக உள்ளனர்.

★ சென்ற ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை பர்மாவில் இருந்து ஏறத்தாழ 70,000 குடும்பங்களைச் சேர்ந்த 2,10,270 இந்திய வம்சா வழியினர் நம் நாட்டுக்கு வந்துள்ளனர்.

★ நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஐந்தாவது முறையாக 1991-இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.



# வேளாண்மைப் பொறியியல் துறையின் சாதனைகள்

**வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழகத்தின் நிலவளம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. இத்துறை கீழ்க்கண்டவகையில் உழவர்களுக்கு உதவி வருகிறது.**



1. மண் அரிப்பைத் தடுத்தல் மற்றும் மண்ணில் ஈரம் காத்தல்.
2. பாசன வளங்களை உருவாக்குதல்/நிலைப்படுத்துதல் மற்றும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் சிக்கன நீர் உபயோகத்திற்கு வழிவகுத்தல்.
3. கிணறு, ஏரி, ஆற்றுப்பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்.
4. வேளாண்மைப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்குத் தேவையான பண்ணைக் கருவிகள் குறைந்த வாடகைக்கு அளித்தல்.
5. வளம் குன்றிய பாழடைந்த நிலையிலுள்ள நிலங்களையும், தரிசு நிலங்களையும் மேம்படுத்தி நிரந்தரமாகப் பயன்தரும் மாற்று நில உபயோக முறைகளைப் புகுத்துதல்.

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களை இத்துறை மேற்கொள்கிறது.

மண், நீர்வளப் பாதுகாப்பு, சிறுபாசனம், பாசனப்பகுதி மேம்பாடு, நிலமேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் மேற்கூறிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

**புதிய முயற்சிகள்**
**நுண்ணிய நீர்ப்பாசன முறைகள்**

நீர் உபயோகத்தினை உகந்த அளவிற்கு உயர்த்திடவும், சிக்கனத்தைப் புகுத்திடவும், ஒரு புதிய உத்வேகத்தோடு சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணிய நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை அமைத்துக்கொள்ள முன்வரும் உழவர்களுக்கென ரூ.40.01 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. உழவர்களைக் கவரும் வகையில் மானிய விகிதங்களையும் அரசு மாற்றியமைத்துள்ளது.

**நிலப்பரப்பு மானிய விகிதம் மானிய அளவு**

1. ஒரு எக்டேர் வரையில் 50சதவிகிதம் ரூ.12,500/எக்டேர்
2. ஒரு எக்டேருக்கு மேல் 2 எக்டேர் வரை 40 சதவிகிதம் ரூ.10,000/எக்டேர்
3. 2 எக்டேருக்கு மேல் 3 எக்டேர் வரை 30 சதவிகிதம் ரூ.7,500/எக்டேர்

உழவர்களிடையே இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. 301 உழவர்கள் இத்திட்டத்தின் மூலம் 1991-92-இல் பயனடைந்

**மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணில் ஈரம் காத்தல், பாசன வளங்களை உருவாக்குதல், நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் சிக்கன நீர் உபயோகத்திற்கு வழி வகுத்தல் முதலான பணிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை உறுதுணையாக உள்ளது.**

# நிலவிற்குச் செல்லலாம்!

(புலவர் க. அண்ணாமலை)



வட்ட நிலா வானிலே
வருகுது பார் தம்பிநீ
சுட்ட தோசை போலவே
தோன்றும் அந்த வெண்ணிலா
கெட்டிக் கார தம்பிநீ
கையில் பிடிக்க ஓடிவா
எட்டிப் பிடிக்க முயன்றிடு
ஏணி கொண்டு வந்திடு
நம்ப மாட்டேன் பாட்டிநீ
நாளும் சொல்லும் கதையிது
எம்பும் இராக்கெட் கொண்டுவா
ஏறிச் சென்று பறக்கலாம்
நீண்ட பயணம் செய்யலாம்
நிலவில் காலை வைக்கலாம்
புதுமை பலவும் பார்க்கலாம்
பூமியில் வந்து சேரலாம்!



- எல்லாவிதப் படிப்பும், எல்லாப் பயிற்சிகளும் மனிதனை மனிதனாக உருவாக்குவதற்குத்தான்.
- 'நான்' 'எனது' என்பவை மூட நம்பிக்கைகளாகும்.
- எளிமையில்தான் வெற்றி இரகசியம் அடங்கி இருக்கிறது.
- கருத்துக்களை எடுத்துச் செல்லும் ஒரு வாகனமே மொழி.

## தெரிந்து கொண்டால் நல்லது

இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும், அதன் தலைநகரங்களும் வருமாறு:

| | |
|---|---|
| ஆந்திரப்பிரதேசம் - | ஐதராபாத் |
| பீகார் - | பாட்னா |
| ஹரியானா - | சண்டிகர் |
| ஜம்மு, காஷ்மீர் - | ஸ்ரீநகர் (கோடை) ஜம்மு (குளிர்) |
| கேரளா - | திருவனந்தபுரம் |
| மணிப்பூர் - | இம்பால் |
| நாகாலாந்து - | கோஹிமா |
| ராஜஸ்தான் - | ஜெய்பூர் |
| திரிபுரா - | அகர்தலா |
| அருணாச்சலப் பிரதேசம் - | இடாநகர் |
| கோவா - | பானாஜி |
| இமாசலப்பிரதேசம் - | சிம்லா |
| மத்தியப்பிரதேசம் - | போபால் |
| மேகாலயா - | சில்லாங் |
| ஒரிஸ்ஸா - | புவனேஸ்வர் |
| சிக்கிம் - | காங்டாக் |
| உத்தரப்பிரதேசம் - | லக்னோ |
| அஸ்ஸாம் - | திஸ்பூர் |
| குஜராத் - | காந்திநகர் |
| கர்நாடகா - | பெங்களூர் |
| மகாராஷ்டிரா - | பம்பாய் |
| மிசோராம் - | ஐஜால் |
| பஞ்சாப் - | சண்டிகர் |
| தமிழ்நாடு - | சென்னை |
| மேற்கு வங்காளம் - | கல்கத்தா |

### யூனியன் பிரதேசங்கள்

அந்தமான், நிகோபார் - போர்ட் பிளேயர்
தத்ரா நகர் ஹவேலி - சில்வாஸா
டாமன் டயூ - டாமன்
இலட்சத் தீவுகள் - கவரத்தி
சண்டிகர் - சண்டிகர்
டெல்லி - டெல்லி
பாண்டிச்சேரி - பாண்டிச்சேரி

## உலகிலேயே மிக ஆழமான ஏரி!

உலகிலேயே மிக ஆழமான ஏரி எது?

அதுதான், ரஷ்யாவில் உள்ள பைக்கால் ஏரி.

இது பனி சூழ்ந்த சைபீரியாவில் உள்ளதால் இதை 'சைபீரியாவின் முத்து' என்று அழைக்கின்றனர். இந்த ஏரியைப் 'புனித ஏரி' என்றும் 'வாழும் அருங்காட்சியகம்' என்றும் அழைக்கின்றனர்.

பைக்கால் ஏரியின் உயர்ந்தபட்ச ஆழம், 1,637 மீட்டர் அதாவது ஒரு மைலுக்கும் மேல் ஆழம் உள்ளது இது!

இந்த ஏரிக்குள் 36 நதிகளும், சிற்றோடைகளும் கலந்து கலக்கின்றன.

இந்த ஏரியில் 27 தீவுகள் உள்ளன. விஞ்ஞானிகளின் ஆய்வுக்கூடமாகத் திகழும் இந்த ஏரியின் அடியில் வெப்ப நீரூற்றுக்கள் உள்ளன.

உலகில் எங்கும் இல்லாத 1,500 வகையான உயிரினங்கள் இங்கு உள்ளன. இங்கு மட்டும் 60,000 சீல்கள் எனப்படும் பிராணிகள் வாழ்கின்றன!

இந்த ஏரி ஆறு மாதம் நீர்ப்பரப்பாக இருக்கும்; ஆறு மாதம் பனிக்கட்டியாக உறைந்து விடும்!

இந்த ஏரியின் கரையில் வளரும் ஒரு வகைப் புல்லுக்குத் 'தெய்வப்புல்' என்று பெயர்.

—ஆதாரம்: 'தினமணி'





# தோட்டக்கலைத்துறையின் சாதனைகள்

**1991-92-ஆம் ஆண்டு தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 74.27 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவற்றில் பழங்கள் உற்பத்தி 31.54 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவை 1990-91-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களில் 10.5 சதவிகிதம் அதிகமாகும். இதுபோன்றே காய்கறிகளின் உற்பத்தி 37.46 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவை 1990-91-ஆம் ஆண்டின் சாதனையைவிட 12 சதவிகிதம் அதிகமாகும்.**

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பழங்கள், காய்கறி உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு அடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1991-92-ஆம் ஆண்டுதோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 74.27 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை களில் பழங்கள் உற்பத்தி 31.54 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை 1990-91-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களைவிட 10.5 சதவிகிதம் அதிகமாகும். இதுபோன்றே காய்கறிகளின் உற்பத்தி 37.46 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை 1990-91-ஆம் ஆண்டின் சாதனையை விட 12 சதவிகிதம் அதிகமாகும்.

தோட்டக்கலைத் துறையின் மூலம் 1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம். 2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம், 3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், 4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 5. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், 6. பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் ஆகிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி 12,000 எக்டேர் பரப்பளவில் நிலையான தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது.

கிராமப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஊட்டச் சத்துள்ள பழங்கள் கிடைக்கும் வகையில் கிராமப்புறங்களில் ஊட்டச்சத்துத் தோட்டம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 37,500 குடும்பங்கள் பயன்பெற்றனர். இத்திட்டத்திற்காக ரூ.18.70 இலட்சம் செலவிடப்பட்டது.

காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வீரிய இரகக் காய்கறி சிறுதளைகள் வேளாண்

யத்தை எடுத்துரைப்பதற்காக ஒரு திரைப்படத்தையே தயாரித்தார். பேரறிஞர் அண்ணா அவர்களால் கதை, வசனம் எழுதப்பட்ட 'நல்ல தம்பி' என்னும் அந்தப் படத்தில், அண்ணல் வலியுறுத்திய மது விலக்குக் கொள்கையை, மண்ணுல கில் மட்டுமின்றி தேவருலகுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார் கலைவாணர்! ஜமீன் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, சமத்துவம், சகோ தரத்துவம் போன்ற - அண்ணலின் கொள்கைகள் பலவற்றை அந்தத் திரைப்படத்தில் காட்சிகளாக்கிக் காண்பித்தார் கலைவாணர்.

பட முதலாளிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு திரைப்படத்தில் நடித்து வந்தவர்தான் கலைவாணர் என்றாலும் சம்பாதித்த பணத்தைத் தானும் தன்னைச் சார்ந்தவர்களும், மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்னும் சுயநலப் பண்பு படைத்த வரல்லவர் அவர். இல்லை என்று வந்தவர்களுக்கெல்லாம் அள்ளி வழங்கிய வள்ளல் அவர்.

அண்ணல் காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர், அவரது நினைவைப் போற்றும் வகையில், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்து, தமது ஊரான நாகர்கோவி லில் ஒரு நினைவுத் தூணை எழுப் பினார் கலைவாணர். அண்ணலும் மறைந்து விட்டார். அவருக்கு நினைவுத் தூண் எழுப்பிய கலை வாணரும் மறைந்து விட்டார். ஆனால் அந்தத் தூண் இன்றும் நிலைத்து நிற்கிறது. அண்ணலின் மீது கலைவாணருக்கு இருந்த பற்று, பாசம், அன்பு, மரியாதை ஆகிய வற்றைக் காவியம்போல நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக் கிறது.

அண்ணல் காந்தியடிகள் வெள்ளிக் கிழமையன்று மறைந்தார். காந்தியத் தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த கலைவாணர், அப்போது ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதிலே அவர் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்:

'வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஞாயிற்றுக் கிழமை அரசு விடுமுறை நாளை மாற்றி இனிமேல் காந்தியடிகள் மறைவெய் திய வெள்ளிக் கிழமையை விடு முறை நாளாக்க வேண்டும்' என்பது தான் அந்த வேண்டுகோள்.

அவரது வேண்டுகோள் நிறை வேற்றப்படவில்லை. ஆனால் அண்ணல் காந்தியடிகள் மறை வெய்திய வெள்ளிக் கிழமையில் தான் கலைவாணரும் மறைந்தார்.

முன்ஷி பரமு பிள்ளை என்னும் மலையாள எழுத்தாளரின் சமூகக் கதை ஒன்றை மணமகள் என்ற பெயரில் திரைப்படமாக்கினார் கலைவாணர். படத்தை அவரே இயக்கவும் செய்தார். அத்துடன் ஊருக்கெல்லாம் அறிவுரை கூறி



(கலைவாணர் நினைவு நாள்: ஆகஸ்டு—30)

அன்பு நெறியைப் போதித்து வரும் ஆசிரியர் பாத்திரத்தை ஏற்று நடித் தார். படம் வெளிவந்த பின்னர், அதனைப் பொதுமக்களின் முன்னி லையில் நாடகமாகவும் நடத்தி வந்தார். நாடகத்தில் அவர், ஆசிரியர் பாத்திரத்தை ஏற்க வில்லை. வில்லன் பாகவதரின் நண்பனாக வேடம் தாங்கி நடித்தார். நாடகத் தில் ஒரு கட்டம்.

தீய காரியம் ஒன்றைச் செய்வ தற்குக் கலைவாணரிடம் யோசனை கேட்பான் அந்த வில்லன். கலை வாணர் யோசனை சொல்வதற்கு முயற்சிப்பார். அப்போது ஏதோ ஒன்று தடை செய்வது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படும். உடனே மேடையில் சுற்று முற்றும் பார்ப்பார். அங்கே அண்ணல் காந்தியடிகளின் மார்பளவு உருவச் சிலை ஒன்று இடம்பெற்றிருக்கும். அண்ணலின் கருணை பொங்கும் விழிகளும் அமைதி தவழும் முகமும் கலைவாணரின் மனத்தில் சங் கடத்தை ஏற்படுத்தும். உடனே சிலையை மேடையிலுள்ள திரைச் சீலையின் பக்கம் பார்க்குமாறு திருப்பி வைத்துவிட்டு யோசனை சொல்லத் தொடங்குவார். அப் போதும் அவருக்கு மனஉறுத்தல் தோன்றும்; பின்னர் ஒரு துணியைக் கொண்டு சிலையின் முகத்தை மறைப்பார். மறுபடி யோசனை சொல்வதற்கு முனைவார். அப் போதும் அவருக்கு உறுத்தல் இருந்து கொண்டே இருக்கும். உடனே அண்ணலின் உருவச் சிலையை இருகைகளாலும் அப்படியே எடுத்து, மேடையை விட்டு அப்புறப்படுத்தி - கண்பார்வைக்குத் தெரியாத இடத் தில் வைத்துவிட்டுத் திரும்பி வரு வார். 'இப்பக் கேளு! யோசனை சொல்றேன்' என்பார் தனது நண்ப னான வில்லனிடம்.



## தெருவிளக்குகளை எரிய வைப்பதில், தீவிர கவனம்

தெருவிளக்குகளை எரிய வைப்பதில் சென்னை மாநகராட்சி தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. விளக்குகள் எரியவில்லை எனப் புகார்கள் ஏதேனும் வந்தால் அவை உடனடியாகக் கவனிக்கப் பட்டு வருகின்றன.

குடிசைப் பகுதிகளில் விளக்குகள் சரியாக எரியவில்லை என்று புகார் வந்ததன் காரணமாக குடிசைப் பகுதிகளில் விளக்குகளை எரியச் செய்வ தற்குத் தீவிரத் திட்டம் ஒன்றைத் தீட்டி சென்னை மாநகராட்சி கடந்த சில நாட்களாகச் செயல் படுத்தியது.

இந்தத் திட்டத்தில் 590 குடிசைப் பகுதிகளில் மொத்தமுள்ள விளக்குகள் 8,000 ஆகும். இந்த 8,000 விளக்குகளிலுள்ள குறைபாடுகளை நீக்கி, அவை அனைத்தையும் எரியும்படி சென்னை மாநகராட்சி செய்துள்ளது. இதற்குத் தனியாக ஆட்களும், வண்டிகளும் ஒதுக்கப்பட்டு, மின் துறையின் உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இதுமட்டுமல்லாது, குடிசைப் பகுதிககளில் முக்கிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. குழல் விளக்குகள் பொருத்தப்பட்டால் ஓர் ஆண்டுக் காலமே எரி யும், அதற்கு மாறாக இந்தச் சோடியம் ஆவி விளக்குகள் மூன்று ஆண்டுக் காலம் பயன் அளிக்கும். அதிக வெளிச்சத்தையும் தரும். இதன் மூலம் குடிசைப் பகுதிகளில் அதிக ஒளி பெற வாய்ப்புள்ளது. இன்னும் 100 சோடியம் ஆவி விளக்குகளைக் குடிசைப் பகுதிகளில் பொருத்து வதற்குச் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை மாநகரில் மொத்தம் 60,000 விளக்குகள் இருக்கின்றன. இப்பொழுது எரியாத விளக்குகளின் எண்ணிக்கை 2,600 மட்டுமே யாகும். இது மொத்த விளக்குகளில் 4.2 சதவிகித மாகும். தீவிர செயல்பாட்டிற்குப் பிறகு சுமார் 25 சதவிகிதம் எரியாமல் இருந்த தெருவிளக்குகள் 4.2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதில் திருவல்லிக்கேணி மண்டலம் முன்னணியில் இருக்கிறது. இந்த மண்டலத்திலுள்ள மொத்த விளக்குகள் 4,439 ஆகும். இதில் எரியாத விளக்குகள் 115 மட்டுமேயாகும். இந்த மண்டலத் தில் எரியாத விளக்குகள் 2.6 சதவிகிதமாக இருக்கிறது. இது ஒரு சாதனையாகும்.

பூந்தமல்லி நெடுஞ்சாலை, அண்ணா சாலை, ராஜாஜி சாலை, காமராசர் சாலை ஆகிய சாலைகளில் மின் ஒளியை அதிகரிக்கத் திட் டங்கள் தீட்டப்பட்டுள்ளன. ராஜாஜி சாலை, காமராசர் சாலைகளில் புதிய சோடியம் ஆவி விளக்குகள் ஏற்கெனவே பொருத்தப்பட்டுள்ளன. இதே போன்று அண்ணா சாலையிலும் புதிய சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாது ராஜாஜி சாலை, காமராசர் சாலைகளில் நடுவில் மின் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. இதனைச் செய்து முடித்தால், இந்தச் சாலைகளில் வெளிச்சம் கணிசமான அளவுக்கு அதிகரிக்கும்.

பேருந்து செல்லும் சாலைகள் அனைத்திலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் இவை செய்து முடிக்கப் படும்.

காந்தியடிகளின் பொம்மை அருகில் இருந்தால் கூட, தீய எண்ணம் ஒருவருக்கு உருவாகாது என்பதை, எடுத்துக்காட்டு உவமை அணிபோலக் குறிப்பால் உணர்த் தினார் கலைவாணர். (இக் காட்சி திரைப்படத்தில் கிடையாது; நாடகத் திற்கென்றே கலைவாணரால் அமைக்கப்பட்டது.)

இந்திய நாட்டிலிருந்து ருஷ்ய நாட்டிற்கு 1950-ஆம் ஆண்டில் சென்ற கலைக்குழுவில் தமிழகத்தின் சார்பில், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம், டைரக்டர் கே. சுப்ரமணியம், ஒளிப்பதிவாளர் நிமாய்கோஷ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ருஷ்யாவில் ஒரு பொதுக் கூட் டத்தில் கலைவாணர் சொற்பொழி வாற்றினார். அவர் தமிழில் ஆற்றும் உரையை கே. சுப்ரமணியம் ஆங் கிலத்தில் மொழி பெயர்க்க, ஆங்கில உரையைக் கேட்டு ருஷ்யர் ஒருவர், ருஷ்ய மொழியில் பெயர்த்து வந்தார்.

காந்தியத்திற்கும் கம்யூனிசத்துக் கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் குறித்துத் தமது உரையிலே விளக்கிக் கொண்டு வந்தார் கலைவாணர்.

கம்யூனிசம் ஜெட் வேகத்தில் செல்கிறது. எங்கள் காந்தியம் மாட்டு வண்டி வேகத்தில் செல கிறது' என்று குறிப்பிட்டார். இந்தக் கருத்தை கே. சுப்ரமணியம் ஆங் கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆனால் ருஷ்யர், தமது மொழியில் பெயர்க்கவில்லை. கம்யூனிசத்தைப் பற்றிக் கலைவாணர் ஏதோ குறை கூறுகிறார் என்று ருஷ்யர் நினைத் துக் கொண்டார். அதனால்தான் அவர் மொழி பெயர்க்கவில்லை. தனது கருத்து ருஷ்ய மொழியில் பெயர்க்கப்படவில்லை என்பதைக் கலைவாணர் புரிந்து கொண்டு விட்டார்.

'நான் சொல்லும் கருத்தெல லாம் ருஷ்ய மொழியில் பெயர்த்துச் சொல்லப்பட்டால்தான் நான் மேற் கொண்டு பேசுவேன். இல்லை யென்றால் உரையாற்ற மாட்டேன்' என்று தெரிவித்து விட்டு இருக்கை யில் அமர்ந்துவிட்டார் கலைவாணர். ஒரு வகையில் அன்று, அவர், அங்கே அறப்போரையே நிகழ்த்தி விட்டார். பின்னர் அந்த ருஷ்யர் வேறு வழியின்றி, கலைவாணர் சொல்லிய அந்தக் கருத்தை மொழி பெயர்த்துக் கூறினார்.

ருஷ்ய நாட்டுக்குச் சென்று காந்தியத்தை வலியுறுத்தியது மட்டு மல்லாமல், காந்திய நெறியில் அறப் போரையும் செய்தார் கலைவாணர். இறுதி வரை அவர் அண்ணலின் தொண்டராகவே திகழ்ந்தார்; கடைசி மூச்சு உள்ளவரை காந்தி யத்தை மறவாதவராக வாழ்ந்தார்.

பெருமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ரூ.2 .37 இலட்சம் செலவிடப்பட்டு 3,200 விவசாயிகள் பயனடைந்தனர். இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ.10.50 இலட்சத்தை அதிகமாக ஒதுக்கியுள்ளது.

பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம் பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2,600 பழங்குடி மக்களுக்குப் பழத்தோட்டங்கள் இலவசமாக அமைத்துத் தரப்பட்டது. இத்திட்டத்திற்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.82 இலட்சம் செலவிடப்பட்டது.

பழைய தோட்டங்களில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பழைய தோட்டங்கள் புனரமைப்புத் திட்டம் 1991-92-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மா, கொய்யா, எலுமிச்சை போன்ற பழத்தோட்டங்கள் 600 எக்டேர் பரப்பளவில் புனரமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.7.64 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து 50 முன்னோடித் தோட்டக்கலை விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அண்டை மாநிலங்களில் அதிக அளவில் காய்கறி, பழங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளுக்கு நவீன சாகுபடி செய்யும் முறையை அறிந்து கொள்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேசிய தோட்டக்கலை வாரிய உதவியுடன் தோட்டக்கலை விளை பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்புக் கிடங்குகள் கட்ட, விளை பொருட்களை விளையுமிடத்திலிருந்து எடுத்து தொலைவிலுள்ள இடங்களுக்கு விற்பனை செய்ய உதவும் வகையில் லாரி வாங்க, மேலும் தோட்டக் கலைப் பொருட்கள் அழுகாமல் பாதுகாக்க குளிர்ப்பதன அறைகட்டுதல், ஆகிய வசதிகள் செய்ய தமிழக அரசு மானியம் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் மாங்கனிகளின் உற்பத்தியை அதிகமாக்கும் நோக்கத்துடனும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தியாகும் பல வகைப்பட்ட மாங்கனிகளைத் தமிழ்நாடு வேளாண் மக்கள் காண்பதற்காகவும், கிருஷ்ணகிரியில் அகில இந்திய மாங்கனி விழா, தமிழக அரசினால் நடத்தப்பட்டது. இம்மாங்கனி விழாவில் கருத்தரங்கும் நடத்தப்பட்டது. மேலும் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் ஏர்க்காடு ஆகிய இடங்களில் மலர்க் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

53 தோட்டக்கலைப் பண்ணைகள் இத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தோட்டக்கலைப் பண்ணைகளில் பல்வேறுபட்ட தோட்டக்கலைப் பயிர்கள் 202 இலட்சம் எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்பட்டு, பல்வேறு திட்டங்களின் மூலம் வேளாண் மக்களுக்கு வழங்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் தோட்டக்கலைத் துறையில் பல்வேறு திட்டங்கள் ரூபாய் 11 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன.

## 80 ஆயிரம் குழந்தைகளுக்குத் தடுப்பூசி

**சென்னை** மாநகராட்சி இந்த ஆண்டு சென்னை நகர எல்லைக்குள் 80 ஆயிரம் குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போட ஏற்பாடுகள் செய்துள்ளது என சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா.பூர்ணலிங்கம் தெரிவித்தார்.

அவர் 29.7.92 அன்று தண்டையார்ப் பேட்டை நேத்தாஜி நகர் சீதக்காதி நகர் மெட்ரிக் குலேசன் பள்ளியில் தட்டம்மைத் தடுப்பூசி முகாம் ஒன்றைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் இதை அறிவித்தார். அவர் மேலும் பேசுகையில், நம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகளுள் முக்கியமானது மக்கள் தொகைப் பெருக்கம் தற்போது 85 கோடி மக்கள் தொகையுடைய நம்நாடு கி.பி. 2025-இல் 150 கோடியாக அதிகரிக்கும் என்று தெரிவித்து, மக்கள்தொகைக் குறைப்பு மிகமிக அவசியம் என்றார். சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சம் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து சிகிச்சையளிக்கப்படும் என்றும், அனைத்து முதல் வகுப்பு மாணவர்களுக்கும் இது செய்யப்பட்டு விட்டது என்றும், மற்ற வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் செய்து முடிக்கப்படும் என்றும் கூறினார்.

அரிமாச் சங்க மாநில ஆளுநர் திரு. கே.ஜே. தாமஸ் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய டாக்டர் ஆர்.நஞ்சுண்டராவ் அவர்கள், இந்தியாவில் இண்டு கோடி குழந்தைகளைத் தட்டம்மை தாக்குகிறது. இதில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மரணம் ஏற்படுகிறது. இக்கொடுமையைத் தடுக்க 7-வது மாதத்தில் குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போட வேண்டும். 130 குடிசைப் பகுதிகளைத் தத்தெடுத்து அங்கு வாழும் மக்களுக்கு நலக் கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இருக்கிறோம் என்று கூறினார்.

டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணா நன்றி கூறினார். சென்னை மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு. ச. சந்திரமௌலி, இந்திய மக்கள் தொகைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஹைமா பாலச்சந்தர், மாநகராட்சித் தலைமைப் பொறியாளர் திரு. கா.பா. விப்ரதாஸ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.





# காந்திய நெறியில் கலைவாணர்

—புலவர் தமிழ்ப்பித்தன்

**அண்ணல்** காந்தியடிகளிடமும் காந்திய நெறியிலும் மிகுந்த பற்று வைத்திருந்தார் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். தமது நாடகங்களிலும் திரைப்படங்களிலும் சொற்பொழிவுகளிலும் காந்தியக் கொள்கையை நீண்ட நெடுங்காலமாகவே அவர் வலியுறுத்தி வந்தார். காந்திய நெறிகளைப் பிரச்சாரம் செய்வதில் அவர் தன்னிகரற்றவராகவும் விளங்கினார். கிந்தனார் கதாகாலட்சேபம் போல காந்தி மகான் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் அவர் வெற்றிகரமாக நடத்தி வந்தார். அண்ணலிடம் அவர் கொண்டிருந்த அன்புக்கு அளவே இல்லை.

இந்திய விடுதலை இயக்கத்தில் அண்ணல் பற்பல அற்புதங்களை உருவாக்கி, மக்களை எல்லாம் நாட்டு விடுதலை உணர்வுக்கு ஆளாக்கி வந்த சமயத்தில், தமிழகத்தில் பல நாடக ஆசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் நாடகங்களின் மூலம் தேச பக்தியை வளர்த்து வந்தார்கள். பலர், தேச பக்திப் பாடல்களை எழுதியும் பாடியும், மகிழ்ந்தார்கள்; மகிழ்வித்தார்கள். அதன் காரணமாக நடிகர் பலர் அந்நிய ஏகாதிபத்திய அரசினால் கைது செய்யப்பட்டனர்; நாடகங்கள் பல தடை செய்யப்பட்டன.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா, ஸ்காட்லாந்து நவீனம் ஒன்றை அடித்தளமாக வைத்து, தேச பக்தியை வலியுறுத்தும் 'பாணபுரத்து வீரன்' என்னும் நாடகத்தை நூல் வடிவில் தீட்டியிருந்தார். அந்நாடகத்தின் அருமையை உணர்ந்த டி.கே.எஸ். சகோதரர்கள் 'தேசபக்தி' என்னும் தலைப்பில், அதனை 1931- ஆம் ஆண்டில் அரங்கேற்றம் செய்தனர். டி.கே.எஸ். சகோதரர்கள், கே.ஆர். ராமசாமி ஆகியோருடன் கலைவாணரும் அந்நாடகத்தில் நடித்து வந்தார். நாடகம் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. விடுதலை இயக்கத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கு அந்த நாடகம் தூண்டியது.

நாடகத்தின் இறுதிக் காட்சியில், கதாநாயகனான பாணபுரத்து வீரன், ஊர்க் குடிமக்களை விடுதலைப் போருக்கு ஆயத்தம் செய்வான். அப்போது குடிமக்கள் அனைவரும் தம் கைகளில் கிடைத்த பொருள்களை எல்லாம் ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு வருவார்கள். கம்பு, கட்டாரி, கோடரி, கடப்பாரை, அரிவாள் போன்ற ஆயுதங்களை ஏந்தியவாறு குடிமக்கள் வேடம் போட்ட நடிகர்கள் மேடைக்கு வருவார்கள். கடைசிக் குடிமகனாகக் கலைவாணர், தன் கையிலே கைராட்டினத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டு மேடைக்கு வந்து, 'இந்த ராட்டினத்தை வச்சே ஏகாதிபத்திய வெறியர்களை நாட்டை விட்டே ஓட்டிடுறேன்' என்று கூறுவார். 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமொன்று' செய்து, கைராட்டையினாலேயே வெள்ளையரை ஓட்டி விடலாம், என்று முழங்கிய அண்ணலின் கொள்கையை நாடகத்தில் தக்க வகையில் புகுத்திப் பொதுமக்களிடம் சபாஷ் பெற்றார் கலைவாணர்.

இந்தியத் திருநாடு அந்நியரின் பிடியிலிருந்து விடுபடுவதற்குரிய நாள் நெருங்கிக் கொண்டிருந்த சமயம். நாடெங்கும் தேச உணர்வு மிக்க நாடகங்கள் - திரைப்படங்கள் உருவாகி வந்தன. கலைவாணர் தமது நாடக மன்றத்தின் மூலமாக 'நாம் இருவர்' என்னும் தேச உணர்வு மிக்க நாடகத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் எதிர்பாராமல் கிரிமினல் வழக்கொன்றின் காரணமாக அவர் சிறைத் தண்டனை பெற்றார். அதனால் நாடகம் டி.ஏ. மதுரம் அவர்களின் முயற்சியால் அரங்கேற்றம் செய்யப்பட்டது. சென்னை ஒற்றை வாடை அரங்கில் பல மாதங்களாக அந்நாடகம் நடைபெற்று வெற்றிக் கொடியை நாட்டியது. பின்னர் ஏ.வி.எம். நிறுவனத்தார் அந்நாடகத்தைத் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டுப் பொதுமக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றனர். நாம் இருவரின் சிறப்புக்குக் கலைவாணரும் காரணமாக இருந்தார் என்பது அடிப்படை உண்மை.

நாடு முழுவதும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அண்ணல் காந்தியடிகள் முனைப்புக் காண்பித்து வந்தார். அவரது தலையாய கொள்கைகளில் மதுவிலக்கும் ஒன்றாகும். 1947 அக்டோபர் 2-ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட வாரியாக மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. குடிப்பழக்கத்தின் கொடுமையைத் தலைவர்கள் அவ்வப்போது மேடையில் எடுத்துரைத்து மக்களுக்கு அறிவூட்டி வந்தார்கள். கலைவாணர், மதுவிலக்கின் அவசி

# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்". ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

விஜய் என்றாலே வெற்றி!




மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

HTA 8249







கவிஞர் அ. மறைமலையான்

விதைக்காமல் கதிர்மணிகள் விளைவ தில்லை;
வேர்க்காமல் உலைக்களத்தில் கருவி இல்லை;
செதுக்காமல் கருங்கல்லை சிலைகள் இல்லை;
தேம்பாமல் குழந்தைக்குப் பாலும் இல்லை;
உதைக்காமல் உந்துவண்டி ஓட்டம் இல்லை;
உருகாமல் மெழுகுவத்தி ஒளியும் இல்லை;
மிதிக்காத களிமண்ணால் பாண்டம் இல்லை;
மிகச்சிறிய பலன்பெறவும் உழைப்பே மூச்சு!

உறங்கிவிட்ட வீணையினால் இசைதான் ஏது?
உருளாத சக்கரத்தால் பயணம் உண்டோ?
வருங்காலம் நிகழ்காலம் எல்லாம் ஏது
வையம்எனும் பூப்பந்தே சுழலா விட்டால்?
நெருங்கிவரும் வாய்ப்பெல்லாம் விலகும் அன்றோ
நீள்துயிலில் உழைக்காத மனிதன் கண்டே!
பெருங்கவலை பேரச்சம் சூழும்; இந்தப்
பிறப்புக்கே சிறப்பேது உழைக்கா விட்டால்?

பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.2,68,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.1,74,490 மதிப்பில் பாடப்புத்தகங்கள் வழங்கிச். செலவிடப்பட்டுள்ளது. இதனால் 4,615 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.5,75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 8,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிகப் பிற்பட்டோர் இனத்தவர்களுக்கு நிலம் கையகம் செய்து வீட்டுமனை வழங்க ரூ.6.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை ரூ.3,91,195 செலவிடப்பட்டு, 175 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிட நலத் துறையின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 351 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு ரூ.67,817 செலவு செய்யப்பட்டுள்ளது.

152 அரசுப் பள்ளிகளில், 9 மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மாண மாணவிகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இராணுவம் மற்றும் காவல் துறையில் சேருவதற்கு முன்பயிற்சி அளிக்க ரூ.1.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கு 86 தகுதி வாய்ந்த ஆதிதிராவிட இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 15 நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்குச் சிலேட்டுகளும், பாடப்புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட நலத்துறையின் கீழுள்ள பர்கூர், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளியாக 1992-93 கல்வியாண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் நடப்பாண்டில் வேளாண் துறையின் கீழ் ரூபாய் ஒரு கோடி செலவில் பல்வேறு வகையான மானிய உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. தரமான நெல் விதைகள் வாங்கிட ரகத்திற்கேற்ப கிலோவுக்கு ரூபாய் ஒன்று முதல் ரூ.2 வரையும், பயிர்ப்பாதுகப்புக் கருவிகள் மற்றும் வேளாண் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும் விவசாயிகளுக்கு 'ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூ.19.8 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விதைகள் வாங்கிட கிலோவுக்கு ரூ.4 வீதமும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும், வேளாண் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க ரூ.42.7 இலட்சம் செலவில் பல்வேறு மானிய உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன

## டால்பின்

**சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டினால் ஒன்றும் அறியாத பிராணிகள் கொல்லப்படும் சோகக் கதையைக் கேளுங்கள். கங்கை நதி அசுத்தமடைவதால் அதில் வாழுகின்ற டால்பின்கள் இறந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

**கங்கையைத் தூய்மைப்படுத்தும் முயற்சிகள் ஒருபுறமிருக்க, இந்த டால்பின்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவற்றை 'அழிந்து வரும் உயிரின வகை'யாக அறிவித்ததுடன், பீகாரில் கங்கையிலேயே 'விக்ரமஷிலா டால்பின் சரணாலய'த்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.**

தரமான எண்ணெய் வித்து விதைகளை விவசாயிகளிடமிருந்து வாங்கி அரசு வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் மானிய உதவியுடன் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு இதுவரை 245 டன் நிலக்கடலை விதைகளும், 6 டன் எள் விதைகளும், 4 டன் இதர வித்தைகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இப்பணி தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக மே 1992 மாதம் முடிய மொத்தம் 306 நபர்களுக்கு ரூ.75.55 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது. இதில் 6 ஆதிதிராவிடர்களுக்காக ரூ.1.10 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின்கீழ், 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

இத்திட்டத்தின் கீழ், பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு பெற்ற 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டு உள்ள ஆண் பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.10 ஆயிரத்திற்கு மிகாமல் இருந்தால், சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்பு உள்ளது.

நடப்பாண்டில் 8 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 127769.700 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டு 1200 ஏக்கர் அளவில் மல்பரிப் பயிர் இறவை சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 376.95 ஏக்கர்களில் மல்பரி இறவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு 24 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 24 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 360 பயன்தாரர்களுக்கு மல்பரிப் பயிர்க் கடனும், 720 பயன்தாரர்களுக்கு ரூ.61,40,500 பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களுக்கான கடனும், 400 பயன்தாரர்களுக்குப் புழு வளர்ப்பு மனை அமைக்கக் கடனும், புதிய கிணறு அமைக்க 3 பேருக்கும், கிணறு ஆழப்படுத்த 12 பேருக்கும், 15 தனியார் நூற்பகங்களுக்கும் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 1992 முதல் ஜூன் 1992 முடிய 436 நபர்களுக்கு, குடும்ப நிவாரண நிதியாக ரூ.13,08,000 வழங்கப்பட்டு உள்ளது. விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 3 நபர்களுக்கு ரூ.20,000-மும், 32 நபர்களுக்குச் சாலை விபத்து நிவாரண நிதியாக ரூ.48,000-மும் மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.



# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும் கவிதைப் போட்டி

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் புரட்சித் தலைவி - மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான பள்ளிக் கல்லூரிகளில் பயிலும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் கவிதைப் போட்டியை நடத்தி, சிறந்த கவிஞர்களுக்குப் பரிசுகள் வழங்க முடிவு செய்துள்ளது. தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளி வரையில் உள்ள மாணவ-மாணவிகளுக்கு ஒரு போட்டியும், 17 வயது முதல் 25 வயது வரையிலான கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு ஒரு போட்டியும் நடத்த மன்றம் திட்டமிட்டுள்ளது.

கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள இளம் கவிஞர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கவிதையினை எழுதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும்:-

1. கவிதை, தங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமைக்கலாம்.

2. கவிதை, இருபது வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று தலைப்புகளுக்குள் ஏதாவது ஒரு தலைப்பில் கவிதை எழுதலாம்:-

**பள்ளி மாணவ-மாணவிகளுக்கு:**

அ. எங்கள் கையில் எதிர்காலம்.
ஆ. காலம் கனியும்.
இ. நேயம் வளர்ப்போம் நெஞ்சம் நிறைவோம்.

**கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு:**

அ. கனவுகள் கரை ஏறும்.
ஆ. சிறகுகள் விரிப்போம் சிந்தனை வளர்ப்போம்.
இ. சேறும் சோறும்.

4. ஒருவர் ஒரு தலைப்பின்கீழ் மட்டுமே கவிதை எழுதுதல் வேண்டும்.

5. கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கவிஞர்கள் கவிதையினை இணைத்து கீழ்க்கண்ட விவரங்களைப் படிவம் போன்று பூர்த்தி செய்து, 'உறுப்பினர்-செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'பொன்னி', 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை-600 028' என்ற முகவரிக்கு 24.8.1992 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அ. கவிஞர் பெயர் -
ஆ. வயது -
இ. தந்தை பெயர் -
ஈ. வீட்டு முகவரி -
உ. பள்ளி/கல்லூரி பெயர் -
ஊ. படிக்கும் வகுப்பு -

**உறுதிமொழி**

இத்துடன் அனுப்பியுள்ள '          ' என்ற தலைப்புள்ள கவிதை என் சொந்தக் கற்பனையே. இது தழுவலோ அல்லது மொழிபெயர்ப்போ அன்று என்று உறுதியளிக்கிறேன்' என எழுதிக் கையொப்பமிட்டுக் கவிதையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

பரிசீலனைக்குப் பிறகு தகுதியுள்ள கவிஞர்கள் கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள்.

தேர்வு செய்யப்படும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ- மாணவிகளுக்குத் தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

முதல் பரிசு - ரூ.1,000 வீதம் 2 பரிசுகள்.
இரண்டாம் பரிசு - ரூ.500 வீதம் 2 பரிசுகள்.
மூன்றாம் பரிசு - ரூ.300 வீதம் 2 பரிசுகள்.
ஆறுதல் பரிசுகள் - ரூ.100 வீதம் 4 பரிசுகள்.

**1992 செப்டம்பர் 11-ஆம் தேதியன்று சென்னை, மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் நடைபெறும் 'இயல் விழாவில்' பரிசுகள் வழங்கப்படும்.**

இக்கவிதைப் போட்டி தொடர்பான அனைத்து விளக்கங்களிலும் மன்ற உறுப்பினர்-செயலாளர் அவர்களின் தீர்ப்பே இறுதியானது.



## 64 ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்புத்தொழிற் பயிற்சி

இந்து ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை நல்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், அம்பத்தூர் மற்றும் மதுரையிலுள்ள 2 தொழிற்பயிற்சி நிலையங்களில் தலா 32 மாணவர் வீதம் 64 ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்புத் தொழில் பயிற்சி (Plastic Processing Operator Trade) என்ற புதிய பயிற்சியை அளித்திட ரூ.18,12,000 மானியமாக வழங்கிட அரசு ஆணை பிறப்பித் துள்ளது.

## உங்களுக்குத் தெரியுமா?

- உலக மக்கட்தொகை ஆண்டுக்கு 92 மில்லியன் வீதம் அதிகரித்து வருகிறது.
- உலகில் ஆண்டுதோறும் சுமார் 17 மில்லியன் எக்டேர் பரப்பள வுள்ள வனங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.
- பூமிக்கு மேலே வாயு மண்டலத் தைச் சுற்றியுள்ள ஒசோன் அடுக்கு (Ozone layer) விஞ்ஞானிகள் சில ஆண்டுகளுக்கு முன்பு நினைத்த தைக் காட்டிலும் மிக விரைவாக இரு மடங்கு அளவில் சுருங்கிக் கொண்டு வருகிறது.

## புதிய ஒலிபரப்பு

நாட்டிலுள்ள அனைத்து வர்த்தக ஒலிபரப்பு நிலையங்களிலிருந்தும் "அப்னே அதிகார்" என்ற நிகழ்ச்சி ஜூலை மாதம் ஐந்தாம் தேதியிலிருந்து ஒலிபரப்பப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை யிலும் வர்த்தக ஒலிபரப்பில் பகல் 12.20 மணிக்கு ஒலிபரப்பப்படும். நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட் களை வாங்கும்போது சந்தையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் மக்களுக்கு அறிவுறுத்துவதாகும். கணவன் மற்றும் மனைவி கதாபாத்திரங்களின் உரையாடல் வாயி லாக, நுகர்வோரின் பிரச்சினைகளும் அவற்றைச் சரிசெய்யும் வழிகளும் இந்த நிகழ்ச்சியில் சொல்லப் படும்.

## நீர்

நீரின் உபயோகத்தைச் சொல்லத் தேவை யில்லை. வீட்டு உபயோகத்திற்கும், இதரத் தேவை களுக்கும் இப்போது பயன்படும் நீரின் அளவு ஆண்டொன்றுக்கு 25 பில்லியன் கன மீட்டர் ஆகும்.

2025-ஆம் ஆண்டில் 40 பில்லியன் கன மீட்டர் நீர் தேவைப்படும். நகரங்கள், தொழிற் பேட்டைகள், வறட்சிப் பிரதேசங்கள் எனக்குறிப் பிட்ட சில பகுதிகளில் மட்டும் நீரின் தேவை அதிகமாக இருப்பது கவலை தரும் விஷயமே.

அதிகரிக்கும் மக்கள் தொகைக்கு ஏற்ப, 2050-இல் 450 மில்லியன் டன் உணவு தானி யங்கள் விளைவிக்கப்பட வேண்டும். இதற்கேற்ப பாசன வசதியும் அதிகரிக்கும். எனவே, வருங் காலம் வளம்பெற நீரைச் சிக்கனமாகச் செல வழிப்போம்!

## நாணயம்

'நாணய'த்துக்குள்ள மதிப்பே தனிதானே! ஒரு ரூபாய் நாணயங்களைத் தயாரிப்பதற்காக 1,455 மெட்ரிக் டன் எவர்சில்வரை அரசின் நாணயச்சாலைக்கு வழங்கும் ஆர்டர், பலத்த சர்வதேசப் போட்டிகளுக்கிடையே நமது சேலம் எஃகு ஆலைக்குக் கிடைத்திருக்கிறது.

வட்ட வடிவில், நாணய உருவில் இது முத்திரை பதிப்பதற்காக நாணயச்சாலைக்குப் போய்ச் சேரும். ஏற்கெனவே 25 காசு, 50 காசு நாணயங்களுக்காக 3,300 மெட்ரிக் டன் எவர் சில்வரை சேலம் ஆலை வழங்கியிருக்கிறது. இதனி டையே, உலக அளவிலான தர நிர்ணய அளவு கோலான ISO 9000-ஐப் பெறும் தகுதியைச் சேலம் எஃகு ஆலையின் தயாரிப்புகள் எட்டி விட்டன!

# துணுக்குகள்



### பெரியார் மாவட்டத்தில்:

# வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்திற்குட் பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களி லும் 1992-93-ஆம் ஆண்டிற்கு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 10,830 நபர்களுக்கு ரூ.270.750 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. இதில் நாளது வரை 718 நபர்களுக்கு ரூ.13.38 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. நாளதுவரையில் 45 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டிற்கான டிரைசம் பயிற்சியாளர்கள் 1,400 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு, 10.6.91 மற்றும் 1.9.91 முதல் பயிற்சி தொடங்கப்பட்டது. இது வரை 686 நபர்கள் பயிற்சி முடித் துள்ளனர். மீதி நபர்கள் 31.8.92-இல் தங்களது பயிற்சியை முடிப் பார்கள். பயிற்சி முடித்த 686 நபர்களில் 176 நபர்கள் சுயவேலை வாய்ப்பும், 510 நபர்கள் ஊதிய அடிப்படையிலும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் 96 நபர்களுக்குத் தாங்கள் பெற்ற பயிற்சியில் தொழில் புரிய மானியத் துடன் கூடிய கடன் உதவி வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜூன் திங்களில், இருதய அறுவைச் சிகிச்சை இனங் களுக்கு, மாண்புமிகு முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.41 ஆயிரம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு இருபது அம்சத் திட்டத்தினை, பெரியார் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல் படுத்தியமைக்காக, தமிழக அரசு பெரியார் மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ரூ.4 இலட்சம் வழங்கி உள்ளது. இத்தொகையினைக் கொண்டு 10 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வரு கின்றன.

1992-93-ஆம் ஆண்டிற்கு, வறட்சி நிவாரணத் திட்டப்பணி களுக்காக, ரூ.32 இலட்சம் ஒதுக் கீட்டில் கன்னிவாடி பேரூராட்சி, மொங்கநல்லாம்பாளையம், சென்னி மலை பேரூராட்சி ஒட்டன்குட்டை, அந்தியூர் வட்டாரம் காக்காயனூர், பெருந்துறை வட்டாரம் ராக்கியா பாளையம், காங்கயம் வட்டாரம் செம்மாங்குழிபாளையம், தாராபுரம் நகராட்சி, ஈரோடு வட்டாரம் ஈரோடு ஜவுளிநகர், வெள்ளக் கோவில் பேரூராட்சி புதுப்பை, மூலனூர் பேரூராட்சி ரசினாம் பாளையம், தாராபுரம் வட்டாரம் தளவாய்ப்பட்டினம், சத்தி வட்டா ரம் திக்கரை, ஈரோடு வட்டாரம் மூலப்பாளையம், தாராபுரம் வட்டா ரம் சுண்ணாம்புக்காடு ஆகிய இடங்களில் திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும்பணி தொடங் கப்பட்டு, தாராபுரம், ஈரோடு ஜவுளி நகர் ஆகிய இரண்டு இடங் களில் கிணறுகள் முடிவு பெற்று உள்ளன.

ரூ.10.48 இலட்சம் ஒதுக்கீட்டில் குழாய் நீட்டிப்பின் மூலம் குடிநீர் வழங்கும் பணிகள் 5 இடங்களில் தொடங்கப்பட்டு, மூலனூர் மற்றும் வெள்ளக்கோவில் பேரூராட்சிகளில் இரண்டு பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

ரூ.6 இலட்சம் செலவில் 303 ஆழ்குழாய்க் கிணறுகளில் தூர் நீக்கம் செய்யப்பட்டு, குடிநீர் வழங்கும் பணி சீரமைக்கப்பட்டு உள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத் தின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.33.75 இலட்சம் ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட 75 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத் தின்கீழ் 1992-ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 9,206 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விநியோகம் செய்யப் பட்டது.

பெரியார் மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் இல்லாத 2,857 குடும் பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் மே மற்றும் ஜூன் மாதங்களில் 3,349 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப் பட்டுள்ளன.

கல்வி உதவித்தொகைத் திட் டத்தின்கீழ், பிற்பட்ட மாணவ, மாணவியர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைரூ.4,92,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.3,24,268 மதிப்பீட்டிற்குப் பாடப்புத்தகங்கள் வழங்கிச் செலவு செய்யப்பட்டு, 8,600 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள் ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இல வசக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.7,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மிகப் பிற்பட்ட வகுப்பினருக்குப்



# அரசு ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள்!

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசு அலுவலக சங்கங்களுடன் 1.8.92 அன்று தலைமைச் செயலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார். அலுவலக சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட முடிவுகளை அறிவித்தார்.

23.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகச் சட்டப் பேரவையில் அமைச்சுப் பணியாளர்களின் கோரிக்கைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளை அறிவித்திருந்தார். அதன்படி கீழ்க்கண்ட பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது.

தற்போது பல துறைகளின் ஒரு உதவியாளருக்குக் கீழ் 3 அல்லது 4 இளநிலை உதவியாளர்கள் இருக்கிறார்கள். இதனை மாற்றி ஒரே சீராக அனைத்துத் துறைகளிலும் 2 உதவியாளர்களுக்கு ஒரு இளநிலை உதவியாளர் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 11,854 இளநிலை உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

அதேபோல், பல துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் 10 அல்லது 15 உதவியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலை இருந்து வருகின்றது. இதனை ஒரே சீராக மாற்றி, அனைத்துத் துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் 5 உதவியாளர்கள் அல்லது 5 இளநிலை உதவியாளர்கள் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 2,050 உதவியாளர்களுக்குக் கண்காணிப்பாளர் பதவி உயர்வு கிடைக்கும்.

அலுவலக மேலாளர் (Office Manager) ரூ.1820-3200 என்ற ஊதிய விகிதத்தில் தற்போது 250 பணியிடங்கள் இருக்கின்றன. இந்த ஊதிய விகிதத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இக்கோரிக்கையினை ஏற்று இவர்களுக்கு ரூ.2000-3200 என்ற ஊதிய விகிதத்தை வழங்க இந்த அரசு தீர்மானித்துள்ளது.

பல துறைகளில் அமைச்சுப் பணியாளர்கள் மேலாளர் பதவிக்கு மேல் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது. இவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் அனைத்துத் துறைகளிலும் அந்தந்தத் துறைகளில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உயர் பதவிகள் தோற்றுவிக்கப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

| அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | தோற்றுவிக்கப்படவிருக்கும் புதிய பணியிடம் |
|---|---|
| 100-க்குக் கீழே | ஒரு அலுவலக மேலாளர் |
| 100-க்குக் மேல் | ஒரு உதவி |
| 500-க்குக் கீழ் | இயக்குநர் |
| 500-க்கு மேல் | |
| 2500-க்குக் கீழ் | ஒரு துணை இயக்குநர் |
| 2500-க்கு மேல் | ஒரு இணை இயக்குநர் |

இந்தப் புதிய பணியிடங்களுக்கு அமைச்சுப் பணியாளர்களே பணியமர்த்தப்படுவார்கள்.

இந்தப் பதவி உயர்வு அளிக்கும் திட்டத்திற்கான ஆணை (1.8.1992) வெளியிடப்படும். இத்திட்டத்தின் வாயிலாக 14,000 அமைச்சுப் பணியாளர்கள் பயன் அடைவார்கள். ஏற்கெனவே இந்தத் திட்டம் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனை மாற்றி நடப்பாண்டில் உடனடியாக 50 சதவிகிதமும், அடுத்த நிதியாண்டில் அதாவது 1993-94-இல் ஜூலை 1993-க்குள் மீதமுள்ள 50 சதவிகிதமும் செயல்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனை விரைவாகச் செயல்படுத்துவதன் வாயிலாக அமைச்சுப் பணியாளர்களுக்கு உடனடியாகப் பலன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அலுவலர் குழுவின் பரிந்துரைகளின்படி ஐந்தாவது ஊதியக்குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டு 214 பணியாளர் பிரிவுகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு புதிய ஊதிய விகிதங்களுக்கான ஆணைகள் இன்று பிறப்பிக்கப்படும். இந்த ஊதிய விகிதங்களில் உள்ள மாற்றங்கள் 1.6.1988-இல் இருந்து அதாவது ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தி நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு பணப் பயன் 1.4.1992 முதல் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும். புதிய ஊதிய விகிதம் கிடைக்கக் கூடிய 214 பிரிவினர்களில் பல தொழில்நுட்பப் பிரிவினர்களும் அடங்குவார்கள்.

கடுமையான நிதிநிலையின் காரணத்தினால் புதிய அகவிலைப்படி விகிதங்களை இந்த அரசு வழங்கும்பொழுது 4 மாதங்களுக்கான அதாவது 1.1.92-இல் இருந்து 30.4.92 வரை உள்ள நிலுவை அகவிலைப்படித் தொகையை மட்டும் அரசு அலுவலர்களின் சேம நல நிதியில் கணக்கு வைக்கப்பட்டு இந்தத் தொகை 12 சதவிகித வட்டியுடன் அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் என்று ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று இதில் சில மாற்றத்தைக் கொண்டு வரத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஓய்வுபெறும் கட்டத்தில் இந்த நிலுவைத் தொகையைத் திரும்ப அளிப்பது என்ற நிபந்தனை கைவிடப்பட்டு இந்த நிலுவைத்தொகை ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின்படி அரசு அலுவலர்களுக்குச் சேமநல நிதியிலிருந்து வழங்கப்படும் முன் பணங்களுக்குக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தற்போது செல வீட்டுப்படிகள் (Out of pocket expenses) சென்னையில் நாள் ஒன்றுக்கு ரூ.4 என்ற விகிதத்திலும் மாவட்டங்களில் நாள் ஒன்றுக்கு ரூ.3 என்ற விகிதத்திலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனை ஒரே சீராக மாற்றி நாள் ஒன்றுக்கு ரூ.10 என்று உயர்த்தப்பட்டு 1.8.92-இல் இருந்து வழங்கப்படும்.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றக்கூடிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு ஆண்டுதோறும் 2 இணைச் சீருடைகள் வழங்கப்படுகின்றது. இதனை மாற்றி நடப்பாண்டிலிருந்து 4 இணைச் சீருடைகள் வழங்கப்படும். இதரத் துறைகளில் பணியாற்றக் கூடிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு 3 இணைச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை மாற்றி ஆண்டுதோறும் 3 இணைச் சீருடைகள் வழங்கப்படும். இந்தச் சீருடைகள் அனைத்தும் கைத்தறி மற்றும் காதி பாலியஸ்டராக வழங்கப்படும்.

அரசு ஊர்தி ஓட்டுநர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று அவர்களுடைய சங்கக் கட்டடத்திற்கு ரூ.2.5 இலட்சம் நன்கொடையாக வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த ஆண்டு முதல் இவ்வரசு, மாசற்ற பணிபுரியும் அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்குப் பரிசு வழங்கும் புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த



முடிவு செய்துள்ளது. இதன்படி பரிசுத்தொகை ஊர்தி ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.500 என்ற அளவில் சிறு சேமிப்புச் சான்றிதழாக வழங்கப் படும். இத்திட்டத்தின்படி குறைந்தது 10 ஆண்டுகள் பணி முடித்து விபத்து இல்லாமல் சிறப்பாகப் பணிபுரிந்த அரசு ஊர்தி ஓட்டுநர்கள் இந்தப் பரிசுக்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். அதேபோல 20 ஆண்டுகள் பணிமுடித்து, விபத்து இல்லாமல் சிறப்பாகப் பணிபுரிந்த அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

அலுவலக உதவியாளர்களின் கோரிக்கையை ஏற்று தற்போது இளநிலை உதவியாளர் பதவிக்கு அலுவலக உதவியாளர்களுக்கு 10 சதவிகிதம் என்ற ஒதுக்கீட்டை 20 சதவிகிதமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்படும்.

தலைமைச் செயலகம் மற்றும் இதரத் துறை களில் பணியாற்றக்கூடிய சுருக்கெழுத்து தட்டச்சர் களுக்குப் பணி விதிமுறைகளில் மாற்றம் செய்து மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் உடனடியாக வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்குப் பண்டிகை முன்பணம் இதுவரை வழங்கப்பட்டு வருகிற ரூ.500-லிருந்து ரூ.750-ஆக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 கோடி செலவாகும்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி உயர்வு பற்றி, சங்கப் பிரதிநிதிகளின் கோரிக் கையைப் பரிசீலனை செய்து, 1993-94-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது அறிவிக்கப்படும்.

மேற்கண்ட முடிவுகளை அரசு அறிவித்திருப்ப தால், வேலைநிறுத்தம் பற்றிய அறிவிப்பினை, அலுவலர் சங்கப் பிரதிநிதிகள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1.8.92 அன்று அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கை சம்பந்தமாக, சங்கப் பிரதிநிதிகளுடன் கோட்டை யில் பேச்சு வார்த்தை நடத்தி சில முடிவுகளை அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக அரசு அலுவலர் சங்கங்கள் அமைச்சுப் பணியாளர் களுக்கு மேலும் சில பயன்கள் தரும் வகையில் தங்களுடைய கோரிக்கைகளை ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர் களை மீண்டும் கேட்டுக் கொண்டனர்.

அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4.8.92 அன்று அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதி களை அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கத்திரும் பவும் தனது இல்லத்திற்கு அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவற்றை அறிவித்தார்.

(1) அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அவர் தம் நிலையில் உள்ளவர்கள் சம்பந்தமான கோரிக் கைகளைப் பொறுத்தவரை ஊதிய விகிதங்களை மறுபடியும் மாற்றி அமைப்பதில் பல்வேறு சிக்க லான புதிய பிரச்சினைகள் உருவாகக் கூடிய சூழ்நிலையில் இதனைக் கைவிடுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. எனவே, அடுத்த ஊதியக்குழு ஏற் படுத்தும் வரை ஊதிய விகிதங்களைப் பற்றி மறு பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது.

(2) அதே நேரத்தில் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் நிலையில் உள்ளவர்களின் மனம் தளராமல் அவர்களை உற்சாகப்படுத்திப் பணி யாற்றும் வகையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன.

5 சதவிகித தனி ஊதியம் (Perso nal Pay) பழைய ஊதிய விகிதம் ரூ.475-775-லிருந்து ரூ.775-1025 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள பதிவுறு எழுத்தர்கள் போன்றவர் களுக்கும், பழைய ஊதிய விகிதம் ரூ.610-1075-லிருந்து ரூ.950-1500 என்ற ஊதிய விகிதத் திற்குச் சென்றவர்களுக்கும் ரூ.975-1660 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் போன்ற அலுவலர்களுக் கும், பழைய ஊதிய விகிதம் ரூ.705-1230-லிருந்து ரூ.1200-2040 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள உதவியாளர் போன்ற பிரிவினர்களுக்கும் பழைய ஊதிய விகிதம் ரூ.905-1545-லிருந்து புதிய ஊதிய விகிதம் ரூ.1600- 2660-க்குச் சென்றுள்ள கண்காணிப் பாளர்களுக்கும் வழங்கப்படும். இந்தச் சலுகை ஆகஸ்ட் 1992 முதல் அமலுக்கு வரும்.

மேற்கண்ட பதவிகளில் உள்ளவர்களுக்கும், அதனை ஒட்டியுள்ள தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் உள்ளவர்களுக்கும் இந்தத் தனி ஊதியம் பொருந்தும். மேலும் மேற்கண்ட பதவிகளுக்குள் பதவி உயர்வு கிட்டும் கட்டத்திலும் இந்தத் தனி ஊதியம் தொடரும்.

(3) தற்போது தேர்வு நிலைத் தகுதிக்குச் செல்வதற்குத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

இதனை அடுத்து, அரசு அலுவலர் சங்கங்கள் மேலும் ஊதிய விகிதங்களைப் பற்றி அடுத்த ஊதியக் குழு அமைக்கப்படும் வரை பிரச்சினை களை எழுப்புவது இல்லை என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் உள்ள தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித் தார்கள்.

இதனைத் தொடர்ந்து 5.8.92 அன்று நடை பெற இருந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் போராட்டம் கைவிடப்பட்டது என்று அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகள் அறிவித்தார்கள். மேலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இப்பிரச்சினையைச் சுமுகமான முறை யில் முடித்து வைத்ததற்குத் தங்களுடைய நன்றி யைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இன்று நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தை யின்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நிதிச் செயலாளர் திரு. என். நாராயணன் மற்றும் முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன் ஆகி யோர்களும் கலந்து கொண்டார்கள்.

இன்று நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையில் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி அண்டு டி) பிரிவின் தலைவர் திரு. கே.ஜி. மோகன், செயலாளர் திரு. என். சங்கரன், தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஒன்றியத்தின் தலைவர் திரு. சிவ. இளங்கோ, செயலாளர் திரு. நெல்லை மணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. பாலசுப்ரமணியன், செயலாளர் திரு. பி.எஸ். சௌந்தரபாண்டியன், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. கங்காதரன், செயலாளர் திரு. எம்.ஆர். அப்பன் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தின் (சி அண்டு டி) தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் மற்றும் இதர சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.

## மின்மயம்!

இந்திய இரயில்வேயில், முதன் முதலாக மின்மயம் தொடங்கப்பட்டது 1925-இல். பம்பாயி லுள்ள விக்டோரியா டெர்மினலுக்கும், குர்லா துறைமுகத்திற்கும் இடையில் முதல் மின்சார இரயில் ஓடியது. இது 1930-இல் கல்யாண் ரயில் நிலையம் வரை விரிவாக்கப்பட்டது.

சென்னை புறநகர்ப் பிரிவு மின்மயம் 1929-இல் செய்யப்பட்டது. பத்து ஆண்டிற்குள் மொத்தம் 388 கிலோ மீட்டர் தூரம் மின்மயமாக்கப் பட்டது.

பெருநகரங்களான தில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னைக்கிடையேயும் வேறு சில முக்கிய தடங் களிலும் மின்மயமாக்கும் பணி தொடர்ந்தது. அத்தியாவசியப் பொருட்களான உணவு தானி யங்கள், சிமெண்ட், உரம், நிலக்கரி, இரும்புத் தாது ஆகியவற்றை விரைந்து எடுத்துச் செல்ல மின் ரயில் உதவியது.

தற்போது, 1991-92-இல் தில்லி-சென்னை, தில்லி -பம்பாய், கல்கத்தா-பம்பாய் (நாக்பூர் வழி) ஆகிய மூன்று முக்கியத் தடங்கள் முழுது மாக மின்மயமாக்கப்பட்டன.

## கடற் செல்வம்

'திரைகடலோடித் திரவியம் தேடு' என்பது பழமொழி. திரைகடலுக்குள் திரவியம் தேடு என்பது புதுமொழி. நம் நாட்டின் முப்புறமும் சூழ்ந்துள்ள கடலின் மடியிலிருந்து பிடிக்கப்பட்ட மீன் வகையறாக்களின் மூலம் 1991-92-இல் நமக்கு 578 மில்லியன் அமெரிக்க டாலர் கிடைத் துள்ளது (ரூ.1,424 கோடி). 1988-89-இல் இத்துறையின் ஏற்றுமதி மதிப்பு ரூ.597.85 கோடி அளவிலேயே இருந்தது. (412.88 மில்லியன் அமெரிக்க டாலர்).

இறால் மீனுக்கே அதிக வரவேற்பு; இத்துறை யின் ஏற்றுமதியில் 45 சதவிகித மதிப்பில், 74 சதவிகிதத்தையும் இறால் மீனே தட்டிச் செல் கிறது. ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளே பெருமளவில் இறக்குமதி செய்கின்றன.

இத்துறை மேலும் வளர்ச்சி பெற, ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு அரசு ஊக்கம் அளித்து வரு கின்றது. கடல்வள ஏற்றுமதி வளர்ச்சி ஆணைய கத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.14.25 கோடி ஒதுக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## கைவினைப் பொருட்கள்

எளிய கருவிகளால் நமது பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கலை உணர்வுடன் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்கள் வெளி நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்று வரு கின்றன. இந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் நமக்குக் கணிசமான அந்நியச் செலாவணி கிடைத்து வருகின்றது.

1990-91-ஆம் ஆண்டில் கைவினைப் பொருள் ஏற்றுமதி மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி ரூ.1,220 கோடியாகும். இது 21 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகின்றது. சென்ற நிதியாண்டில் ரூ.1,810 கோடி கிடைத்தது. இது 48.5 சதவிகித வளர்ச்சியாகும். நடப்பு ஆண்டில் ரூ.2,076 கோடி அந்நியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- நன்றி 'தூவானம்'.



# மாவீரன் பகத்சிங்

— ரகமி

நம் நாடு ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை அடைய, ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடிய வீரர்களுள் வட நாட்டில் அஞ்சா நெஞ்சனாகத் திகழ்ந்தவன் தான் பகத்சிங்! இவனது பெயரை அறியாத இந்தியரே இல்லை எனலாம்.

நம் தமிழ்நாட்டில் 1911 ஜூன் 17-இல் மணியாச்சி ரயில்வே ஜங்க்ஷனில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷை, செங்கோட்டை வாஞ்சி என்ற இளைஞன், தன்னிடமிருந்த பிஸ்டலினால் சுட்டுக் கொன்று, அடுத்த சில நிமிடங்களில் அதே பிஸ்டலினால் தன்னையும் சுட்டுக் கொண்டு வீரமரணம் அடைந்தான்.

தென்னாட்டில் நிகழ்ந்த இச்சம்பவம் அடுத்து 18 ஆண்டுகள் கழித்து வட நாட்டில் 1929-இல் பஞ்சாப் வீரன் எனப் புகழப்படும் வீர இளைஞன் பகத்சிங்கின் துணிச்சலான குண்டு வீச்சுச் சம்பவம் மிக முக்கியமானதாகும்.

தற்போது பாகிஸ்தானைச் சேர்ந்த ஃபைஸலாபாத் என வழங்கும் 'லியால்பூர்' முன்பு பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்திருந்தது. (ஃபைஸலாபாத் தான் கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகள் நடக்குமிடம்.) லியால்பூரில் சுதேசியம், தேசபக்தி, சுதந்திர உணர்ச்சி இம் மூன்றும் நிறைந்த சர்தார் அர்ஜுன் சிங் பரம்பரையைச் சேர்ந்த சர்தார் கிஸன் சிங்கிற்கு 1907 செப்டம்பர் 28-ல் பகத்சிங் இரண்டாவது புதல்வராகப் பிறந்தான்.

பள்ளியில் சேர்க்கப்பட்ட பகத்சிங் படிப்போடு, எந்நேரமும் முரட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து, இதர மாணவர்களை வீண் வம்புகளுக்கு இழுத்தல், கலாட்டா, தெருச் சண்டைகளில் ஈடுபட்டான். மெட்ரிகுலேஷன் தேறிய பகத்சிங் கல்லூரியில் சேர்ந்ததும், அங்கு சுகதேவ், யஷ்பால் என்ற இரு நண்பர்கள் இவனிடம் நெருங்கிப் பழகினர். மாணவப் பருவத்திலிருந்தே இம் மூவரும் ஆங்கிலேய ஆட்சி ஒழிப்பு, நாட்டு விடுதலை போன்ற எண்ணங்களில் கவனம் செலுத்தினர். அதோடு அச்சமயம் கான்பூரில் நடந்த காங்கிரஸ் மகாசபை கூட்டத்திற்குச் சென்ற பகத்சிங், தலைவர்களின் பிரசங்கத்தினால் அவனது மனதில் சுதந்திர உணர்ச்சி மேலும் தீவிரமாகியது.

இச்சமயம் வடநாட்டில் பல இடங்களில் 'பப்பர் அகாலி சங்கம்' தோன்றி ஆங்கிலேய ஆட்சியை எதிர்க்கப் பல இளைஞர்களை ஊக்குவித்ததில், பகத்சிங்கும் இச்சங்கத்தில் சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டினான். தங்களது திட்டங்களை நிறைவேற்ற ஆங்கிலேயர்கள் மீது வெடிகுண்டுகளை வீச, குண்டுகளைத் தயாரிக்கப் பெரும்பணம் தேவைப்படவே, இக்கோஷ்டியைச் சேர்ந்த சில தீவிரவாதிகள் 1926-இல் 'கா கோரி' என்ற ரயில்வே ஸ்டேஷனில் ரயிலை நிறுத்தி, அதில் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய சர்க்கார் கஜானா பெட்டிகளைக் கொள்ளை அடித்தனர். கொள்ளைக் கூட்டத்தாரை போலீஸ் பிடித்தபோது, பகத்சிங் அவர்களிடம் அகப்படாமல் தப்பிவிட்டான். பின்னர் 'காகோரி ரயில் கொள்ளை வழக்கில்' பகத்சிங்கின் நெருங்கிய நண்பர்கள் நால்வர் தூக்கிலிடப்பட்டதும், மனம் குமுறிய அவன் ஆட்சியாளர்களை எப்படியாவது பழி தீர்த்துக் கொள்வதில் முனைந்தான்.

பகத்சிங்கின் எண்ணத்தைத் துப்பறிந்த ரகசிய போலீஸ், பகத்சிங்கை கண்காணித்தது. 1926-இல் லாகூரில் ராம் லீலா வைபவத்தில் நடந்த வெடிகுண்டு வீச்சுக்குப் பகத்சிங்கும் காரணகர்த்தாவாகி இருக்கலாம் என வீணான காரணம் காட்டி அவனைக் கைது செய்தனர். இதனைக் கண்டு கொஞ்சமும் அஞ்சாத பகத்சிங் முறைப்படி ஜாமீனில் வெளி வந்து புரட்சி வேலையில் ஈடுபட்டான்.

1928-இல் நாளுக்கு நாள் நாடெங்கும் விடுதலைப் போராட்டம் பலமடைவதைக் கண்ட ஆங்கிலேயர்கள், மக்களை நேரிடையாகச் சந்தித்து அவர்களுக்குத் திருப்தியாக ஆட்சியை நடத்துவதைப் பற்றி ஆராய 'சைமன் கமிஷன்' என்ற பெயரில் ஒரு குழுவை அமைத்தது. இதில் பெரும்பாலும் வெள்ளையர்களே இருந்தார்களே தவிர, ஒரு இந்தியப் பிரதிநிதியுமில்லை. இதனால் இக்குழு எங்குச் சென்றாலும் பகிஷ்கரிப்பதென்று காங்கிரஸ் தலைவர்கள் தீர்மானித்து 'சைமன்! திரும்பிப் போ' (Simon go back) எனக் கூக்குரலிட்டனர். லாகூருக்கு வரும் சைமன் கமிஷனை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் நடத்த, லாலா லஜ்பத்ராய் மற்றும் சில தலைவர்கள் புறப்பட்டனர். ஊர்வலத்திற்குத் தடை விதித்ததோடு, அதனை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவித்தது.

தடையை மீறி லாலா லஜ்பத்ராய் ஊர்வலம் நடத்திய போது இந்தியர்கள் மீது வெறிகொண்ட லாகூர் பெரிய போலீஸ் அதிகாரி ஸ்காட் என்பவரும், இவருக்குத் துணையாக 'சண்டர்ஸீம்' கூட்டத்தைக் கலைக்கத் தடியடிப் பிரயோகம் செய்தபோது லாலா லஜ்பத்ராயைப் பலமாக தாக்கினார்கள். பலத்த காயங்களுடன் லாலாஜி நவம்பர் 17-இல் காலமானார். இதனால் பஞ்சாப் மக்கள் கொதித்தெழுந்து லாலாஜியை கடுமையாகத் தாக்கிய பெரிய போலீஸ் அதிகாரியான ஸ்காட்டை பதிலுக்குத் தீர்த்துக் கட்டுவதென்று முடிவெடுத்து இதனை நிறைவேற்றி வைக்கும் வேலை பகத்சிங், ராஜகுரு, சந்திரசேகர் ஆஸாத் ஆகிய மூவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சமயமும் நெருங்கியது. லாகூர் போலீஸ் நிலையத்திற்குள் ஸ்காட் வந்திருப்பதாக விஷயமறிந்த இம்மூவரும் போலீஸ் நிலையத்திற்கு அருகிலேயே ரிவால்வருடன் பதுங்கியிருந்தனர். திடீரென நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வெளிவந்த நபர் தூரப் பார்வைக்கு 'ஸ்காட்'டைப் போலிருக்கவே, ராஜகுரு தனது பிஸ்டலினால் அவரை குறிபார்த்துச் சுட்டான். பகத்சிங்கும் இரண்டு மூன்று முறைகள் சுடவே வந்த நபர் குண்டுகளுக்குப் பலியானார். ஆனால் பலியானது ஸ்காட் அல்ல! அவருக்குத் துணையாக இருந்த சாண்டர்ஸ்! இதனைக் கண்ட போலீசார் சுட்ட கொலையாளியைத் தேடினர். போலீசில் சிக்காமல் இம்மூவரும் மாறுவேடத்தில் தப்பித்து விட்டனர்.

சுமார் நான்கு மாதங்களாகியும் போலீஸில் பகத்சிங் மற்றும் அவனது நண்பர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இருப்பினும் எல்லா இடங்களிலும் ரகசியப் போலீஸ் தீவிரமாயினர். 1929 ஏப்ரல் 8-இல் டில்லி சட்டமன்றம் கூடியது. அங்கு ஆங்கிலேய அதிகாரிகள் அமர்ந்திருந்த பக்கத்தில் திடீரென்று வெடிகுண்டுகள் வெடித்தன. குண்டுகள் வெடித்த இடம் பெரும் பள்ளமாகியதோடு, அருகிலிருந்த மரச்சாமான்களும் தவிடுபொடியாயின. மண்டபம் முழுவதும் பயங்கரப் புகை மண்டலம். கூடியிருந்த அனைவரும் அங்குமிங்கும் ஓடினர். போலீசும் குண்டு வெடித்ததின் காரணத்தை அறிய அங்கு மண்டபத்தைச் சுற்றி ரோந்து பார்த்ததில், அங்கு இளைஞர்கள் இருவரும் கைகளில் பிஸ்டல், வெடிகுண்டுகளுடன் காட்சி அளித்தனர். அவர்களில் ஒருவன் பகத்சிங்! மற்றொருவன் புத்தூகேஸ்வரதத்! இருவரும் தங்களிடமிருந்த பிஸ்டலையும், வெடிகுண்டுகளையும் அருகேயிருந்த மேசைமீது வைத்துவிட்டு 'புரட்சி ஓங்குக!', 'ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று கோஷமிட்டு அசையாமல் நின்றனர். உடனே போலீஸ் இருவரையும் கைது செய்து, அவர்கள் மீது குற்றங்களும் சாட்டினர்.

டில்லி கோர்ட்டில் நடந்த விசாரணையில் பகத்சிங், கேஸ்வரதத் இருவருக்கும் ஆயுள் தண்டனை தீர்ப்பாகியது. சிறையில் தன்போன்ற தீவிரவாதிகளை மிகக் கேவலமாக நடத்துவதைக் கண்ட பகத்சிங் சிறையிலேயே உண்ணாவிரதம் இருந்தார். தொடர்ந்து சுமார் ஒரு மாத காலம் தீவிர உண்ணாவிரதம் இருந்த பகத்சிங்கின் வேண்டுகோளை ஆட்சியாளர்கள் ஏற்று, சிறைக் கொடுமையைச் சற்று தளர்த்தினர்.

போலீஸ் அதிகாரி 'சாண்டர்ஸ் கொலை', டில்லி சட்டமன்றத்தில் வெடிகுண்டு வீச்சு சம்பந்தமாகப் போலீஸார் பலரைக் கைது செய்தனர். தவிர லாகூரில் வெடிகுண்டு தயாரிப்புப் பட்டறையை நடத்தியதாகவும், மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் செய்தது பெரும் ராஜதுரோகமான செயலென்றும் காரணங்கள் காட்டி, இதில் பகத்சிங், கேஸ்வரதத் இருவரையும் குற்றவாளியாகச் சேர்த்தனர். ஏற்கெனவே வேறொரு வழக்கில் பலர் கைதாகி இருந்தனர். இதில் சுகதேவ், ராஜ குரு, விஜய குமார் சிங் மூவரும் பகத்சிங்குடன் சேர்ந்தனர். ராஜத் துரோகக் குற்ற விசாரணைகள் கோர்ட்டிற்குக் கொண்டு வராமல் சிறைக்குள்ளேயே நட்ந்தது. விசாரணையைக் கவனிக்கப் பொதுமக்களை விடாமல் சில குறிப்பட்டவர்களே விசேஷ அனுமதியின்பேரில் வரமுடிந்தது. ஆனால் பகத்சிங் இந்த விசாரணை பப்ளிக் கோர்ட்டில் நடந்தால் மக்கள் பார்த்து, இதனால் அவர்கள் வெளியில் பிரச்சாரங்கள் செய்ய முடியும் எனக் கருதி அவன் மீண்டும் சிறைக்குள் போராட்டங்கள் நடத்தினான். கடைசியில் சர்க்கார் சிறைக்குள் நடக்கும் விசாரணையைப் பொதுமக்கள் எவ்விதத் தடையுமின்றி பார்க்க அனுமதித்தது.

ஒவ்வொரு நாளும் விசாரணையின் போது பொதுமக்கள் திரண்டு வந்து, விசாரணையை நேரில் கண்டு, மனக் கொதிப்பும் அடைந்தனர். கைதிகளை விலங்கு இட்டபடியே சிறைக்குள் உணவு அருந்துவது, நீதி விசாரணையிலும் விலங்குடன் வரவேண்டும் என்ற உத்தரவுகளையெல்லாம் பகத்சிங் தீவிரமாக எதிர்த்தான். தேசத்துரோகக் குற்றவாளிகளின் ரகசியங்களை அறிய அரசு, அக்குற்றவாளிகளில் சிலரை சர்க்காருக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களுக்குச் சலுகை காட்டி, இதர குற்றவாளிகளின் ரகசியங்களை அறிவது வழக்கம். இந்நிலையில் ஜெய்கோபால் என்ற குற்றவாளி தனது நண்பர்களைக் காட்டிக் கொடுக்கும் 'அப்ரூவராக' (அநுகூலசத்ரு) மாறி பகத்சிங், மற்றும் அவனுடைய நண்பர்களின் ராஜத் துரோகச் செயல்களை வெளிப்படுத்தினான். விசாரணையில் பல திடுக்கிடும் சம்பவங்கள் வெளிப்பட்டன. எல்லாக் குற்றங்களிலும் பகத்சிங்கின் புரட்சிச் செயல்களே காரணமாக இருந்ததோடு, இவனுக்குத் துணையாக ராஜகுரு, சுதேவ் ஒத்துழைத்தது ருசுவாகியது. பகத்சிங், மற்றும் இரு நண்பர்கள் எவ்வளவு எதிர்த்து வாதாடியும், இவர்களின் வாக்கு மூலங்கள்எடுபடவில்லை. இதைப்பற்றி பகத்சிங் கவலைப்படவே இல்லை.

1930 அக்டோபர் 4-ந் தேதி பகத்சிங், மற்றும் அவனது சகாக்கள் தங்கியிருந்த இடத்திற்கு கோர்ட்டிலிருந்து தீர்ப்பு வந்தது. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இம் மூவருக்கும் தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பு கூறப்பட்டது. தீர்ப்பைக் கேட்டு பகத்சிங் எக்களித்தான். அவனது நண்பர்களும் கைகொட்டி நகைத்தனர். தீர்ப்பை எதிர்த்து பகத்சிங் லண்டன் மாநகரிலுள்ள பிரீவிகௌன்சில் கோர்ட்டிற்கு அப்பீல் செய்தான். அப்பீல் மரண தண்டனையை எதிர்த்து அல்ல! இந்தியாவில்புரட்சியை ஆங்கிலேயர்கள் நன்கு அறியவே, இந்த அப்பீல் கடைசியில் அங்கு அப்பீலில் கீழ் கோர்ட்டுத் தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்தது.

சில ஆங்கிலேய அதிகாரிகள், இம் மூவரிடம் கவர்னர் ஜெனரலுக்கு விசேஷ கருணை மனு அனுப்புங்கள். உங்கள் தூக்குத் தண்டனை ரத்தாகும் என்பதற்கு பகத்சிங், 'எங்கள் மீது பல குற்றங்கள் கூறப்பட்டுள்ளன. தவிர பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியை எதிர்த்துப்போர்தொடுத்ததாய்எங்கள் மீது ராஜத் துரோகமும் சாட்டப்பட்டுள்ளது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே நாங்கள் தேசத்துரோகக் குற்றவாளிகள்! நாங்கள் பாரத நாட்டுக்காரர்.! நாங்கள் பிறருக்கு இரக்கம் காட்டுவோமே தவிர, நாங்கள் இதுவரை இரக்கம் கேட்டதில்லை. நாங்கள் மூவரும் உங்களிடம் இரக்கம் பிச்சை கேட்கப்போவதில்லை. எங்களைத் தூக்கு மேடைக்கு அனுப்புவதை விட உங்களிடமுள்ள பீரங்கி வாயில்கள் முன்போ, அல்லது துப்பாக்கி முனைகள் முன்போ நிறுத்தியோ, சுட்டுத்



★ குடிப்பழக்கம் நம் நாட்டிலிருந்து அகலுவதற்குச் சமூக ஊழியர்களும், சிறப்பாகப் பெண்கள் அனைவரும் மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும்.

★ போதைப் பொருள்களின் முழு ஒழிப்பிற்காகச் சூறாவளிப் பிரச்சாரம் செய்வதைப் புனிதமான கடமையாகக் கொள்வீர்களாக!

★ மதுவை ஒழிப்பதற்கு மருத்துவர்கள் சரியான வகையில் உதவக் கூடும். இந்தச் சீர்திருத்தம் செய்வதில் பெண்களுக்கும் - மாணவர்களுக்கும் சிறப்பான உரிமையுண்டு.

# அறிவியல் விந்தை

## நுண்ணலை துணி உலர்த்தி

**து**ணியை வெயிலில் காயப்போட்டு உலர்த்துவார்கள். அந்தத் துணியை உலர்த்துவதற்கு 'மின்துணி உலர்த்தி' என்ற கருவியும் பயன்படுகிறது. வெப்ப வாயுவின் உதவியாலும் துணியை உலர்த்தும் முறையும் இருக்கிறது. தற்போது 'நுண்ணலை துணி உலர்த்தி' (Micro Wave Dryer) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மேக்னட்ரான் என்ற வேதியியல் பொருளிலிருந்து நுண்ணலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவை தண்ணீரின் மூலக் கூறுகளை ஆவியாக்கித் துணியிலிருந்து வெளியேற்றிவிடுகின்றன. ஆகையால், துணி உலர்ந்து விடுகிறது.

மின்துணி உலர்த்தி, 66 டிகிரி செல்ஷியஸ் வரை, துணியைச் சூடேற்றிச் செயல்படும். இதன் காரணமாகச் சில வகை உயர்ந்த துணிகள் பாழாகிவிடும். ஆனால் நுண்ணலை துணி உலர்த்தி, 38 டிகிரி செல்ஷியஸ் வரையே செயல்படும். அதை 32 டிகிரி செ. வரை குறைக்கலாம். ஆகையால், எந்த வகை மென்மையான துணியையும் இது பாதிப்பதில்லை. அது மட்டுமல்ல.

மின்துணி உலர்த்திக்குத் தேவைப்படும் மின்சாரத்தில், 25 டிகிரி குறைவான அளவே இதற்குப் போதும். இதற்கு முன்பு, இப்படிப்பட்ட ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால், அது வெற்றி பெறவில்லை. தற்போது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள கொர்ரிங் அறிவியல் ஆராய்ச்சியகமும், வெப்ப ஆற்றல் கழகம் என்ற மற்றொரு நிறுவனமும் இணைந்து இந்தப் புதுக் கருவியைக் கண்டுபிடித்திருக்கின்றன. இன்னும் மூன்றாண்டுகளுக்குள் இது விற்பனைக்கு வரும்.

இதைப் போன்ற 'நுண்ணலை அடுப்பும்' அமெரிக்காவில் உள்ளது. அது மக்களிடையில் பரவலாகப் பயன்பட்டு வருகிறது.

## செயற்கைத் தோல்!

**அ**றுவை மருத்துவம் நடக்கும்போது, வேறு ஒருவருடைய இரத்தம் பயன்படுகிறது. கண் சீர் கெட்டுவிட்டால், மற்றொருவரின் கண் பொருத்தப்படுகிறது. ஆனால், ஒருவருடைய உடம்பிலுள்ள மேல் தோல் தீப்புண்ணால் கரிந்து விட்டால், இன்னொருவருடைய தோலை எடுத்துப் பொருத்த முடிவதில்லை. இது தீப்புண் ஆற்றும் மருத்துவர்களுக்குத் தொல்லை தருவதாக இருக்கிறது. வேறு ஒருவருடைய தோலை எடுத்துத் தீப்புண்பட்டவரின் உடம்பில் வைத்து மருத்துவம் செய்ய முயன்றால், அதை, அந்த உடம்பு ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கிவிடுகிறது.

உடம்பின், சிறு பாகத்தில் தீப்புண் ஏற்பட்டுவிட்டால், அந்த உடம்பின் மற்றொரு பகுதியிலிருந்து கொஞ்சம் தோலை எடுத்து எரிந்து போன பாகத்தில் வைத்து மருந்திட்டால் அது விரைவில் ஆறிவிடுகிறது. ஆனால், உடம்பில் பாதி அளவுக்குத் தோல் எரிந்து விட்டால், அவரைக் காப்பாற்றவே முடியாது.

ஆகவே, இப்படிப்பட்டவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஆய்வு நடந்து வருகிறது. அதன் விளைவாகச் செயற்கைத் தோல் உருவாக்கப்படும் நிலை இப்போது இருக்கிறது. அந்தச் செயற்கைத் தோலை எந்த உடம்பும் ஏற்றுக் கொள்ளும். இதனால், வருங்காலத்தில் பலருடைய உயிரைக் காப்பாற்ற முடியும்.

## நிலா வண்டி

**எ**ட்டு சக்கரங்கள்; ஏறக்குறைய கிராமத்து மாட்டு வண்டி போன்ற உருவமைப்பு; நண்டின் கால்போன்ற பிடிக்கும் உறுப்புகள்; குத்தூசி போன்ற சில பகுதிகள் - இப்படி, இவற்றைக் கொண்ட வண்டி ஒன்று தற்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. அது பூமியில் ஓடாது, நிலவில் ஓடப்போகிறது. அதை 'நிலா வண்டி' என்று சொல்லலாம். நிலாவிற்குச் செல்லப்போகும் விண்வெளி வீரர்கள், இதில் ஏறிக் கொண்டு அங்கே சுற்றிவரப் போகிறார்கள்.

இந்த வண்டி மேலும் பல தனிச் சிறப்புகளைக் கொண்டது. இது அழுத்தம் தாங்கக் கூடியது. கதிர்வீச்சு, மிகு வெப்பம், ஆகியவற்றைச் சமாளிக்கும் தன்மை உடையது. எவ்வித அதிர்ச்சிக்கும் ஈடுகொடுக்கக் கூடியது.

முன்பு ஒரு வண்டி நிலாவில் ஓடியது. அதில் சில குறைபாடுகள் இருந்தன. அவை, இந்தப் புதிய வண்டியில் நீக்கப்பட்டன. இந்த வண்டி ஆறு மாதம் வரை இயங்கும். இது 1999-ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- டாக்டர் மலையமான்.

---

தள்ளுங்கள்! நாங்கள் மகிழ்ச்சியோடு செல்லுகிறோம். இதனைத்தான் நாங்களும் மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். மிக விரைவிலேயே முன்பு 1857-இல் நடந்த 'இந்திய சுதந்திரப் போர்' மறுபடியும் வர இருக்கிறது. அதில் சத்தியமும் நேர்மையும் ஜெயிக்காவிடில் அத்துடன் அப்போர் நின்று விடாது. தொடர்ந்து நடக்கும். எங்களோடு இந்தப் போராட்டம் நின்றுவிடாது. தொடர்ந்து நடக்கும். இன்றைய நிகழ்ச்சி நாளைய வரலாறாக அமையும்! நாங்கள் எங்கள் கடமையைச் செய்து விட்டோம் ("I have done my duty to the Country") நாங்கள் பாரத தேசச் சுதந்திரத்திற்காக உயிர் துறப்பதைக் கௌரவமாக நினைக்கிறோம். தண்டனையை நிறைவேற்றுங்கள்'' என்று கர்ஜித்தான்.

1931-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் நாள் மாலை 6 மணி! பாரத நாட்டு விடுதலைக்காகத் தனது வாழ்நாட்களை அர்ப்பணித்த மாவீரன் பகத்சிங், அவனது இரு நண்பர்களான ராஜகுரு, சுகதேவ் 'புரட்சி வாழ்க!' 'ஏகாதிபத்தியம் ஒழிக!' 'மக்கள் ஆட்சி வாழ்க!' என்ற கோஷங்களுடன் தங்களுக்காக அலங்கரிக்கப்பட்ட தூக்குமேடையில் ஏறி நின்று தூக்குக் கயிற்றுக்கு முத்தமிட்டனர். இரவு சுமார் 7½ மணிக்கு அம் மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது!

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து, நம் பாரத தேசத்தை மீட்கப் புரட்சி செய்து வீர மரணம் அடைந்த பகத்சிங்கை, இளைஞர்களிடம் புரட்சிக் கனலை ஏற்படுத்திய தலைவனை, புரட்சியின் சின்னமாகிய எரிகின்ற தீப்பந்தத்துடன் (Torch) ஒப்பிட்டு அவ்வீரனுடைய சிலையையும் கையில் தீப்பந்தத்துடன் அமைத்து இன்றும் 'காஜியாபாத்' மக்களின் தியாக உணர்வையும், நன்றி மறவாத தன்மையையும் பிரதிபலிக்கச் செய்து, இளைஞன் பகத்சிங் ஜீவிய சிலையாக நிற்கிறான்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



# தமிழரசு

1-9-1992 ரூ.1

இயக்குநர்,
தமிழ்நாடு
2 ? செப் 199?
தமிழ்நாடு
சென்னை - 600 008.



# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.




இந்தியச் சுதந்திர நாள் விழாவையொட்டி- மேதகு தமிழக ஆளுநர் திரு. பி.என். சிங் அவர்கள் 15.8.92 அன்று அளித்த தேநீர் விருந்தில்- முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி காந்தகுமாரி பட்நாகர்- மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கரன்சிங் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

## இந்த இதழில்...


ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர் ... 2
பிரதமர் — முதல்வர் சந்திப்பு ... 3
சுதந்திர தின விழாவில் முதல்வர் உரை ... 4
பர்கூர் மக்களுக்கு முதல்வர் நலத்திட்ட உதவிகள் ... 9
ராஜீவ்: வாழ்க்கை வரலாறு ... 11
ஓட்டுநர்களும் குடிப் பழக்கமும் ... 17
விளாகம்: மாதிரி கிராமம் ... 19
தமிழ்த்தென்றல் திரு.வி.க. ... 24
மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்கள் ... 27
என்னெய்ப்பனை ஆராய்ச்சி ... 30
கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ... 33
தொழிலாளர் நலம் பெறட்டும் (கவிதை)... 39
பரிபூரண மதுவிலக்குக் கொள்கை ... 43
வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட மக்களுக்கு முதல்வர் உதவிகள் ... 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆவணித் திங்கள் - 16
மலர்:23 இதழ்:5
1-9-1992



161444

## இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர்

இந்தியாவின் 9-ஆவது குடியரசுத் துணைத் தலைவராக திரு. கே.ஆர். நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. கே.ஆர். நாராயணன் 4.2.1921 அன்று கேரளாவில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். பல்வேறு சோதனைகளைக் கடந்து பொருளாதாரத்தில் முதல் வகுப்பில் தேறிப் பட்டம் பெற்றார். திருவாங்கூர் பல்கலைக்கழகப் பேராசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் சில ஆங்கிலப் பத்திரிகைகளில் பணிபுரிந்தார்.

நாடு சுதந்திரம் அடைந்தபின், இலண்டனில் இவரை இந்தியத் தூதரக அதிகாரியாக பண்டித நேரு நியமித்தார். இதைத் தொடர்ந்து தாய்லாந்து, துருக்கி, ரங்கூன், டோக்கியோ, ஆஸ்திரேலியா, சீனா போன்ற பல்வேறு நாடுகளில் தூதராகப் பணியாற்றினார்.

இந்தியா-சீனா உறவு மிகவும் பாதிக்கப்பட்ட கால கட்டமான 1963 முதல் 1967 வரை சீனத் தூதராக இருந்தார். இந்தியா-சீனா போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தூதர் உறவு ஏற்பட்டபோது, 1976-இல் இவரே மீண்டும் சீனத் தூதராகச் சென்றார்.

1978-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமிக்கப் பட்டார். அதற்குப் பின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவரகள் இவரை அமெரிக்கத் தூதராக அனுப்பினார். நான்கு ஆண்டுக்காலம் அப்பதவி வகித்துவிட்டுத் தாயகம் திரும்பிய திரு. கே.ஆர். நாராயணன், அரசியலில் குதித்தார். 1984-இல் கேரளா ஒட்டப்பாலம் பாராளுமன்றத் தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். இதைத் தொடர்ந்து வெளிவிவகாரத் துணை ராஜாங்க அமைச்சரானார்.

19.8.92 அன்று நடைபெற்ற குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் இ. காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட, திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை எதிர்த்துச் சுயேட்சை வேட்பாளர் திரு. ஜோகிந்தர் சிங் போட்டியிட்டார். இத் தேர்தலில் திரு. கே.ஆர். நாராயணன் மகத்தான வெற்றியடைந்தார்.

இத் தேர்தலில் 92.4 சதவிகிதம் வாக்குகள் பதிவாயின. இத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான 768 உறுப்பினர்களில் 711 எம்.பி.-க்கள் வாக்களித்தனர். திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு 700 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ஜோகிந்தர் சிங் அவர்களுக்கு ஒரே ஒரு ஓட்டு மட்டும் பதிவாகி இருந்தது. பத்து ஓட்டுக்கள் செல்லாதவையென அறிவிக்கப்பட்டன.

திரு. கே.ஆர். நாராயணன் குடியரசுத் துணைத் தலைவராக 21.8.1992 அன்று பதவி ஏற்றார். குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் புதிய குடியரசுத் துணைத் தலைவர் அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். புதுடெல்லி ராஷ்டிரபதி பவன் அசோக மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில், மாண்புமிகு பிரதமர், மத்திய அமைச்சர்கள், முன்னாள் பிரதமர்கள் திரு. வி.பி. சிங், திரு. சந்திரசேகர், பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.








## பிரதமர் - முதல்வர் சந்திப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, 17.8.'92 அன்று காலை புதுடெல்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தச் சந்திப்பின் போது, தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமருடன் பேசினார்.

தமிழ்நாட்டிலுள்ள அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யும், தமிழக அரசின் திட்டத்துக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும், நிலக்கரி இறக்குமதிக்குச் சுங்கவரி விலக்கு அளிக்க வேண்டுமெனவும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

உலக வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்துக்கு அனுமதி பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தோடு தொடர்புடைய சென்னைக் குடிநீர் வழங்கல் விநியோகத் திட்டத்தை விரைவுபடுத்த மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். உலக வங்கியின் கோரிக்கைக்கிணங்க இந்தத் திட்டத்திலுள்ள சில இடையூறுகளைக் களைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் உதவ வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் பெருகிவரும் மின்சாரத் தேவையைச் சமாளிக்க கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். இதற்காக உள்நாட்டிலேயே கிடைக்கும் அணுமின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

தூத்துக்குடித் துறைமுகத்தைச் சுங்க தீர்வையற்ற துறைமுகமாக உருவாக்கினால் ஏற்படும் நன்மைகளை விளக்கிக் கூறிய முதல்வர், கிழக்குக் கடற்கரையில் தூத்துக்குடியில் சுங்கத் தீர்வையற்ற ஒரு துறைமுகத்தை உருவாக்க அனுமதி அளிக்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அயல் நாட்டுக் கூட்டுடன், அதுவும் முக்கியமாக சிங்கப்பூர் நாட்டு ஒத்துழைப்புடன் தொழிற்சாலைகளை உருவாக்க, சென்னைக்கு அருகே சிங்கப்பூருக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் மையம் ஒன்றை அமைப்பது குறித்த திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இது தொடர்பாக பல்வேறு வசதிகளை அளிக்க சிங்கப்பூர் அரசுடன் தொடர்பு கொள்ளுமாறு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழக அரசின் நிதிநிலை- குறிப்பாக சிறு சேமிப்புக்காக வழங்கப்பட்டுவந்த வருமான வரி விலக்கை திரும்பப் பெற்றது போன்ற விஷயங்கள் இந்த பேச்சு வார்த்தையின்போது இடம் பெற்றன.

தமிழக அரசு எதிர் நோக்கியுள்ள விசேஷ பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.



## “மத்திய அரசோடு சுமுகமான உறவு உரிமைகளை விட்டுக்கொடுக்காத மரபு என்கிற புரட்சித்தலைவரின் அந்த வரலாற்றுப் பாதையில் நமது அரசு வீறுநடை போடுகிறது”

# சுதந்திரதின விழாவில் முதல்வர் பெருமிதம்!

**தா**யகம் விடுதலை பெற்ற இந்தத் தங்கத் திருநாளைத் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கொண்டாடும் இந்த இனியவேளையில், விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டொளி வீசிப் பறக்கும் பாரதத் தாயின் மணிக்கொடியை, சரித்திரப் புகழ்மிக்க இந்தக் கோட்டையில் ஏற்றி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்த மாபெரும் வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கும் தமிழகத்துச் சான்றோர்கள், பெரியோர்கள், தாய்மார்கள் ஆகிய அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் அதே நேரத்தில், எல்லோர்க்கும் என் விடுதலை நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ’ என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப, ‘பூரண சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை’ எனப் பிரகடனம் செய்து, ‘வெள்ளையனே வெளியேறு’ என வீர முழக்கமிட்டு, 50 ஆண்டுகள் நிறைவேறியதை நெஞ்சில் பதிக்கும் ஆண்டிலே, வருகின்ற விடுதலைத் திருநாள் என்பதால், இந்த நாளின் வரலாற்றுப் பெருமை இரட்டிப்பாகிறது.

### வரலாற்று நாயகர்கள்

எந்தக் கோட்டை ஆங்கில ஆதிக்கத்தின் அதிகாரக் கோட்டையாக இருந்ததோ, அந்தக் கோட்டையில், பாரதத் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதும், அதைப் பெருமிதத்தோடு நாம் பார்ப்பதும், பெருமையோடு பார்த்துப் பரவசப்படுவதும், எத்தனைச் சிறப்புக்குரியது என எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இந்த மாபெரும் பெருமையை நமக்கு வழங்கிய வீரத்தின் விளை நிலங்களான, வரலாற்று நாயகர்களை, தியாகத்தின் திருவுருவங்களை, நன்றிப் பெருக்கோடு நான் நினைத்துப் பார்க்கிறேன்.

சுதந்திரக் காற்றை, நாம் சுவாசிப்பதற்காகத் தங்களது மூச்சை நிறுத்திக் கொண்டவர்கள், என்றென்றும் நம் இதயத்தில் நிலைத்து நிற்கிறார்கள். அவர்களது வீரத்தையும், தீரத்தையும் எண்ணிப்பார்க்கிற நாளாக, இந்த நாள் விளங்குகிறது.

இந்தத் திருநாளில் அந்தப் பெருந்தகையாளர்களுக்கு, உங்களோடு சேர்ந்து என் வீர வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்த நாள், விடுதலையை வென்றெடுத்த திருநாள் மட்டுமல்ல; நாமெல்லாம் ஒன்றுபட்ட திருநாளும் கூட!

‘வாழ்கின்றார் முப்பது கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்குமே’ என்பதுதான் முன்பு இந்தியா இருந்த நிலை! இப்படிப் பிரிந்து பிரிந்து பேதப்பட்டுக் கிடந்த நம்மை, இணைத்துப் பிணைத்த நாள்தான், இந்தப் புனித நாள்.

### நமது தலையாய கடமை

பெற்ற விடுதலையைப் பேணிக்காப்பதும், ‘இந்தியா ஒன்றே’ என்ற ஒற்றுமை உணர்வை எப்போதும் வளர்ப்பதும், நமது தலையாய கடமை, எனவேதான், நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற தீய உணர்வு தலைதூக்குகிற போது எல்லாம், அதை வேரோடு கிள்ளியெறியக் கிளர்ந்தெழுந்துள்ளது எங்கள் அரசு.

விடுதலை பெற்றதன் தலையாய நோக்கங்களை எய்துவதிலும் எப்போதும் முன்னணியில் இருந்து வந்துள்ளது எங்கள் அரசு.

இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுவதும், நம் செந்தமிழ் நாட்டின் உரிமைக்குக் குரல் கொடுப்பதும், முரண்பட்டவை அல்ல என்றே கருதுகிறேன்.

### காவிரிப் பிரச்சினை

தாய்த் திருநாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில், எவருக்கும் முன்னால் நிற்கின்ற நாம், நம் மாநிலத்தின் அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும், மற்ற எவரைக் காட்டிலும் முன்னால் நிற்கிறோம்.

இந்த இரண்டிலுமே வெற்றி பெறுகிறோம் என்பதுதான் நமது அரசு படைத்திருக்கிற தனிப் பெருமையாகும். இந்த அடிப்படையில் அமைந்ததே காவிரிப் பிரச்சினையில் நாம் அடைந்த வெற்றி ஆகும்.

இந்த மண்ணின் உயிர்ப்பிரச்சினையும், உரிமைப் பிரச்சினையுமாகிய, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு, உச்சநீதிமன்றத் தீர்ப்பு நமக்குக் கிடைத்த தார்மீக வெற்றி! நமது நியாயக் குரலுக்கு நீதி செவிகொடுத்தது. நியாயம் மறந்த சில உள்ளங்கள் அதை மதிக்க மறுக்கின்றன.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாகிய காவிரிப் பிரச்சினையில், உரிய வெற்றியை அடைந்தே தீருவோம்! நாம் ஈட்டிய வெற்றியின்

## விடுதலை நாள் விழா

**இ**ந்தியாவின் 46-வது விடுதலை நாள் விழா சென்னைத் தலைமைச் செயலகத்தில் 15.8.1992 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கோட்டையை வந்தடைந்த போது, அங்கு குழுமியிருந்த ஆயிரக் கணக்கானோரின் வாழ்த்தொலிகள் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் முப்படை அதிகாரிகள், காவல்துறைத் தலைவர், திரு. எஸ். ஸ்ரீபால், மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் - சென்னை நகர ஷெரீப், திரு. சுரேஷ் கிருஷ்ணா ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

சரியாக, காலை 8.30 மணிக்குக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பட்டொளி வீசிப் பறந்த தேசியக் கொடியிலிருந்து பூமாரி பொழிய, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசியக் கொடிக்கு முதல்வர் அவர்கள் வணக்கம் செலுத்தினார்.

பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கோட்டைக் கொத்தளத்தில் விடுதலை நாள் சிறப்புரை ஆற்றினார்.

சிறப்புரையைத் தொடர்ந்து, முதல்வர் அவர்கள், உடல் ஊன முற்ற குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி காந்தகுமரி பட்நாகர், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலானவர்கள் பலரும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

பலன் கிடைக்கும்வரை இப்பிரச்சினையில் நாம் ஓயமாட்டோம்; ஒதுங்க மாட்டோம் என்கிற உறுதிமொழியே இவ்விடுதலை நாளில் நாம் மேற்கொள்ளும் சபதமாகும்.

**கச்சத் தீவுப் பிரச்சினை**

இந்த மண்ணின் ஒரு பகுதியாக இருந்து, இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டுவிட்ட கச்சத்தீவை, மீண்டும் பாரதத்தோடு இணைக்க வேண்டும் என்று, கடந்த ஆண்டு இதே நேரத்தில் இதே இடத்தில் குறிப்பிட்டேன்.

அந்த என் உணர்வினை அரசின் சார்பில் நம் சட்டமன்றப் பேரவையிலேயே தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். இந்திய நாட்டின் இறையாண்மை கருதியும், தமிழக மீனவரின் உரிமை காக்கவும், நாம் விடுத்திருந்த கோரிக்கைக்கு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அதுபற்றி 'ஆழ்ந்தும் விரிவாகவும் பரிசீலிக்கிறோம்' என ஆறுதல் தரும் பதில் அனுப்பி இருக்கிறார்.

மத்திய அரசோடு சுமுகமான உறவும், நம் உரிமைகளை விட்டுக்கொடுக்காத மரபும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நமக்குக் காட்டிச் சென்ற வரலாற்றுப் பாதைகளாகும். அந்த வெற்றிப் பாதையில், நம் அரசு வீறுநடை போடுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த தத்துவங்களைச் செயலாக்குவதே இந்த அரசின் இலட்சியம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சுதந்திரம் என்பது அரசியல் விடுதலையோடு நின்றுவிடுவதன்று, விடுதலை பெற்ற நாடு, ஆண்டாண்டுக் காலம் அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட நாடு, தன் பொருளாதார சமூகக் கட்டமைப்புகளைச் சீர்படுத்திக் கொள்ளச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது, அதன் தலையாய கடமை ஆகும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் எங்கள் அரசு பல அரிய சாதனைகளை ஆற்றியுள்ளது. பல ஆண்டுகளாக மூடிக் கிடந்த பி அண்டு சி ஆலை, எங்களுடைய சீரிய முயற்சியால் தான் மீண்டும் திறக்கப்பட்டு, 8,000 தொழிலாளர்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மற்றும் கே.சி.பி. ஆலைகள், எங்கள் முயற்சியால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

**எந்தப் பிரச்சினையானாலும்...**

கிறித்துவக் கல்லூரிப் பிரச்சினையாகட்டும், அரசு ஊழியர்கள் பிரச்சினையாகட்டும், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையாகட்டும், மக்கள் நலனைப் பாதிக்கின்ற எந்தப் பிரச்சினையானாலும், எங்கள் அரசு உடனடியாக அதில் தலையிட்டு, நேரிடையாகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அமைதியான வழியில் அப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதை, நீங்கள் அறிவீர்கள்.

தமிழகத்திலுள்ள கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கை, பெருவாரியாக அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டம், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் வாழும், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகள், மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, 42 கோடி ரூபாய் செலவில், இலவசமாக சேலை-வேட்டிகளை வழங்கியது எங்கள் அரசு.

நாம் விடுதலை பெற்றதன் நோக்கமே, இவை போன்ற அடித்தளத்து மக்களுக்கு உதவும் திட்டங்களை மேற்கொள்வதும், அவர்களுக்குச் சேவை செய்வதுமே ஆகும்.





மகளிர் மேம்பாடு, இந்த அரசின் கவனத்தை எந்த அளவுக்கு ஈர்த்திருக்கிறது என்பதற்கு, நமது செயல்பாடுகளும், குறிப்பாக ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு என்னும் திட்டமும், ஏற்ற எடுத்துக்காட்டுகளாகும்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள், இவர்கள் நலம் காக்க, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் உயர்ந்து விளங்க, அரசு அரிய பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

**புதியதோர் புரட்சி**

இதுவரை எந்த அரசும் செய்ய முன்வராத புரட்சியாக, ஆதிதிராவிடர்களுக்கென முதன் முறையாக, 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைகளை, கோவை, பெரியார் மாவட்டங்களில் அமைக்க, எங்கள் அரசுதான் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதுபோலவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சியிலும் அரசு ஆர்வத்தோடு திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளை, மத்திய அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்றும், பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 27 சதவிகிதம் என்ற அளவோடு இல்லாம், தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது போல், 50 சதவிகிதம் அளவுக்கு இருக்க வேண்டும் என்றும், வற்புறுத்தி, சட்டப்பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

இதுபோன்ற சமூகத்தின் நலிந்த தரப்பினரின் நலம் காப்பதில், எங்கள் அரசு முன் நிற்கிறது.

மருத்துவ வசதிகள், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் வாழும் எல்லா ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறப்பு மருத்துவ நலத்திட்டத்தின்கீழ், ஊர்ஊராக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதை, நீங்கள் அறிவீர்கள்.

மருத்துவரைப் பார்க்க மக்கள் வருவதைவிட, மக்களிடம் மருத்துவர் செல்ல வேண்டும் என்னும் நம் விருப்பத்தின் செயற்பாடாக, இன்று, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இன்றைக்கு ஆலயங்களிலே திருப்பணிகள், ஓர் அமைதியான ஆன்மீகப் புரட்சிக்கு அடிப்படை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

அண்டை மாநிலமான கர்நாடகம், உச்ச நீதிமன்ற ஆணையினை மதித்துக் காவிரி நீர் தர மறுத்தாலும், இயற்கை அன்னை, நம் நியாயமான உரிமைகளைக் காக்கும் வகையில் கை கொடுத்து உதவியுள்ளது. தமிழகத்தில், தானிய விளைச்சல் இந்த ஆண்டு, 90.7 இலட்சம் டன் என்று, இதுவரை அடையாத உயர்ந்த நிலையை எய்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



● ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும்; அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

**சமுதாய முன்னேற்றம்**

இந்நிலை, வள்ளுவப் பெருந்தகையின்
'குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

- என்ற குறள் வரிகளை மெய்ப்பித்துள்ளது.

சமுதாய முன்னேற்றத்துக்காக நாம் எடுத்து வரும் முயற்சிகள் பல. எந்த மாறுதலும் அடிப்படையிலிருந்து தொடங்கவேண்டும். எனவேதான் 'அடித்தள' மக்களுக்குத் தன்னிறைவு அளிக்கின்ற திட்டங்களை, நாம் செயல்படுத்தி வருகின்றோம்.

திங்கட்கிழமைதோறும், மாவட்ட வாரியாக மக்களைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, உரிய கவனத்தோடு அவற்றைப் பரிசீலித்து, விரைந்து உரிய நடவடிக்கைகளையும், உதவிகளையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

**புகழ்க்கொடை வழங்கப்படும்**

கடந்த சில நாட்களுக்கு முன்னர், பெங்களூரில் உள்ள பயிற்சி நிறுவன விமானப்படைத் தளபதி என்னைச் சந்தித்தபொழுது, முப்படையும் சார்ந்த விருதுபெற்ற படை வீரர்களின் சார்பாக ஒரு கோரிக்கையை முன் வைத்தார். முப்படை வீரர்களுக்குப் போர்க்காலத்தில் அவர்கள் புரிந்த வீரசாகசச் செயலுக்காக வீரப்பதக்கங்களும், பணிக்காலத்தில் செய்த பாராட்டத்தக்க சேவைக்காகச் சேவா பதக்கங்களும் மத்திய அரசு வழங்கி வருகிறது. அவ்வாறு பதக்கம் பெறும் வீரர்களில், சில குறிப்பிட்ட விருதுகள் பெற்றவர்களுக்கு மட்டும் மாநில அரசு புகழ்க்கொடையாகப் பண முடிப்பு வழங்கிவந்தது. புகழ்க்கொடை பெறத் தகுதியான விருதுகள் பெறும் பட்டியல் 1990-ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டதுடன், பரிசுத் தொகையும் உயர்த்தப்பட்டது.

இந்த ஆணை 1990-ஆம் ஆண்டு முதல் விருது பெறும் வீரர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இதனை நாடு சுதந்திரம் அடைந்த நாளான ஆகஸ்ட் 15, 1947 முதல் அமல்படுத்தினால் 1990- க்கு முன்னர் விருதுபெற்ற முப்படை வீரர்களும் பயன் பெறுவர் என்றும், இக்கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். முப்படை வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அனைவரும் பயன்பெறத்தக்க வகையிலும் இந்தக்

# மக்கள் தொகைக்கட்டுப்பாடு - ஒரு புதிய திட்டம்

**வி**ரைவான பலன்களை எதிர்நோக்கித் தீட்டப்பட்டுள்ள புதிய மக்கள் தொகைக் கட்டுப்பாடுத் திட்டம், அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டது. மாநிலங்களுக்கும், மத்திய நிர்வாகப் பகுதிகளுக்கும் (யூனியன் பிரதேசங்களுக்கும்) நிதி ஒதுக்குவதில் ஒரு புதிய முறை (Cafeteria approach) கடைப்பிடிக்கப்படுகிறது.

இப்புதிய முறையின்படி, மத்திய அரசின் உதவியை அதிக அளவில் பெற, மாநிலங்கள் பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சியைக் காட்ட வேண்டும். தற்போது நடைமுறையில் இருக்கும் முறையின்படி, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாநிலங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையைச் சரி பார்க்க இயலாத காரணத்தினால், இந்த முறை ரத்து செய்யப்படுகிறது. இளம் தம்பதிகளை மையமாகக் கொண்ட புதிய திட்டம் ஒன்று இப்போது வகுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசுகள், மத்திய நிர்வாகப் பகுதிகள், ஆகியவைகளின் ஒப்புதலுடன் ஒரு புதிய செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இச்செயல் திட்டத்தில் தனி நபர்களுக்கு வழங்கப்படும் பல சலுகைகள் ரத்து செய்யப்படுகின்றன. அதற்குப் பதிலாக சமூக அடிப்படையிலான சலுகைகளும், சிறு குடும்பத்தைக் கொண்டுள்ள நபர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

சமூக அடிப்படையிலான சலுகைகள் அரசின் பல்வேறு சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுடன் சம்பந்தப்படுத்தப்படும். சலுகைகளை வழங்கும் வகைகளை முடிவு செய்யும் பொறுப்பு மாநில அரசைச் சாரும்.

தற்போது மாநில அரசுகளுக்கு, லூப் பொருத்துபவருக்கென ரூ.10-ம் (IUD Insertion) ஆண் கருத்தடைக்கு ரூ.180-ம் (Vasectomy), பெண் கருத்தடைக்கு ரூ.200-ம் (Tubectomy) வழங்கப்படுகிறது.

கருத்தடைச் சாதனங்களை மேம்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதுவரை இலவசமாக வழங்கப்பட்ட இவை, இனிமேல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படும். பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சில இடங்களில் இலவசமாகவும் வழங்கப்படும். ஏனெனில் இவை இலவசமாக வழங்கப்படும்போது நிறைய வீணாவதுடன் பிறப்பு விகிதத்திலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படவில்லை. கருத்தடைச் சாதனங்களின் தரமும் மேம்படுத்தப்படும்.

குடும்ப நலச் சேவை மையங்களின் தரம் மேம்படுத்தப்படும். நகர்ப்புறங்களிலுள்ள சேரிகளிலும் அடிப்படைச் சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

2000-வது ஆண்டில் அனைவருக்கும் சுகாதாரம் என்னும் இலட்சியத்தை அடையும் வகையில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பாதுகாப்புத் திட்டம் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தில் மூன்று வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் வைட்டமின் ஏ மாத்திரைகள் வழங்குவது, ஆரம்பச் சுகாதார மையங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருவது போன்றவை அடங்கும். இத்திட்டம் இறப்பு விகிதத்தைக் குறைப்பதிலும், குடும்ப நலத்திட்டத்திலும் பெரும் பங்கு வகிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**- ஆதாரம்: பத்திரிகைத் தகவல் அலுவலகம்.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, ஏர்மார்ஷல் திரு. ஆர்.கே. தவான் அவர்கள் சந்தித்து உரையாடினார் (12.8.92).**





# ராஜீவ்

**ஆகஸ்ட் 20 ராஜீவ் காந்தியின் 48-வது பிறந்தநாள் நினைவாக:**

இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்றபின், இந்நாட்டின் பிரதமர் பதவியை அலங்கரித்த - ஜவகர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், சரண்சிங், திருமதி இந்திராகாந்தி ஆகியோரையடுத்து, ஆறாவதாக அப்பதவிக்கு வந்த பெருமையாளரே திரு. ராஜீவ் காந்தி அவர்கள்.

திருமதி இந்திராகாந்தி அவர்கள் 1984 அக்டோபர் 31-இல் படுகொலை செய்யப்பட்ட பிறகு, அப்பதவியில் அமர்த்தப்பட்ட இவரே, அதுவரை இருந்த பிரதமர்களையெல்லாம்விட வயதில் இளைஞராக இருந்தார். அதேநேரத்தில் - பாரம்பரியப் பெருமைமிக்க குடும்பத்தைச் சேர்ந்த அவர், அனுபவ முதிர்ச்சியும் உடையவராக இருந்தார்.

இளமைக்கேற்ற சுறுசுறுப்பு அவரிடம் எப்போதும் குடிகொண்டிருந்தது. அவர் வேகத்திற்குப் பணியாற்ற அரசு உயர் அதிகாரிகளெல்லாம்கூட திணறிப்போன சம்பவங்கள் - நாட்கள் பல உண்டு.

அந்தத் திறமையாளரின் வரலாறு இது:

திரு. ராஜீவ் காந்தி அவர்கள், 1981-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசியலில் நுழைந்ததிலிருந்தே, அவரது அன்னை திருமதி இந்திராகாந்தி அவர்களின் அரசியல் வாரிசாகவும் கருதப்பட்டார்.

20.8.1944 அன்று,ராஜீவ் - பம்பாயில் இந்திராகாந்தி-பெரோஸ் காந்தி தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தார். அவருக்கு ராஜீவ்ரதன் காந்தி என்று பெயரிடப்பட்டது. 'ராஜீவ்' என்றால் தாமரை என்று பொருள்படும்.

பேரக்குழந்தை ராஜீவ் பிறந்தபோது, தாத்தாவான பண்டித நேரு சிறையில் இருந்தார். அவர்தான் ராஜீவ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

ராஜீவுக்குப் பத்து வயதானபோது 'போர்டிங்' பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பிறகு - பூனாவில் உள்ள டூன் பள்ளியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்று வெளியே வந்தார். இவருக்கு 16 வயதானபோது, தந்தையார் பெரோஸ் காந்தி இறந்து போனார்.

1962-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர், 'டிரினிடி' கல்லூரியில் 'மெக்கானிகல் என்ஜினியரிங்' படிப்பில் சேர்ந்தார். இங்குதான் 1965-ஆம் ஆண்டு, தமது எதிர்கால மனைவியான சோனியா மெய்னோ என்ற இத்தாலியப் பெண்ணை அவர் சந்தித்தார். அந்த முதல் சந்திப்பே காதலாக மலர்ந்தது.

ராஜீவ்-சோனியா திருமணம் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்தது.

படிக்கும்போதே தாத்தா நேரு அளித்த ஊக்கத்தின்பேரில், விமானம் ஓட்டும் பயிற்சியிலும் ராஜீவ் ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார். 1968 மே மாதம் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பயிற்சி விமானியாக அவர் சேர்ந்தார். 7 மாதத்திற்குப் பின், டகோடா விமானத்தில் பயணிகளை ஏற்றிச் செல்லுமளவுக்கு திறம்மிக்க விமானியாக அவர் திகழ்ந்தார். ஓராண்டிற்குப் பின் 'போக்கர் பிரண்ட்ஷிப்' விமானத்தை அவர் ஓட்டத் தொடங்கினார். பின்னர் அவர் 'ஆவ்ரோ' விமானங்களை ஓட்டும் தகுதி பெற்றார்.

அரசியலிலே நுழையும் வரை, இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் 12 ஆண்டுக்காலம் விமானியாகப் பணிபுரிந்தார்.

1981-ஆம் ஆண்டு மே 10-ஆம் நாள், தன் வேலையை விட்டுவிலகி முதலில் வேண்டாவெறுப்போடுதான் அரசியல் உலகில் அவர் அடியெடுத்து வைத்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் அமேதி தொகுதியில் போட்டியிடும் அவசியத்திற்கு ஆளானார். அத்தேர்தலில், அனைவரும்

***கோரிக்கையை ஏற்று, அரசு வழங்கும் புகழ்க்கொடை பண முடிப்பு வழங்குவது 1947-ஆம் ஆண்டு முதலே செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன். இதனால் 1990-ஆம் ஆண்டுக்கு முன்னர் விருதுபெற்ற 207 முப்படை வீரர்களுக்கு அரசு 5 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாயைப் புகழ்கொடை யாக விரைவில் வழங்கும்.***

விடுதலை வீரர்களை நினைவு கூர்வதிலும், இன்று நம்மிடையே வாழும் அந்தத் தியாக சீலர்களைக் கௌரவிப்பதிலும், சிறப்புச் செய்வதி லும், நம் அரசு முன் நிற்கிறது. கடந்த 9-ஆம் தேதியன்று 'வெள்ளையனே வெளியேறு' என்னும் வீர இயக்கத்தின் பொன் விழா நாளை முன் னிட்டு, நம் அரசு நடத்திய விழாவில் தியாகி களுக்கெல்லாம், விடுதலைப் போராட்ட வீரர் களுக்கெல்லாம், பாராட்டு நடத்தியதோடு, அவர் களது ஓய்வூதியத்தை வேறுபாடின்றி அனைவர்க் கும் ஒரே சீராக ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன். அது மட்டுமல்லா மல், நமது அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய, அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறேன்

வசதி இல்லாதவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்ய, 20 ஆயிரம் ரூபாய் உதவி, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வாரந் தோறும் இலவச அரிசி, இறந்த நெசவாளர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் என்று, சமுதாயத்தின் சகல தரப்பின ருக்கும் உதவிகளை அள்ளித்தந்து, சாதனைகளைப் படைத்து வருகின்றது எங்கள் அரசு என்றால் அது மிகையாகாது.

**சாதிமதங்களைப் பாரோம்**

நமது ஒற்றுமை உறுதிப்பட வேண்டுமானால், வளர்ச்சிப் பாதையில் நாம் ஏறுநடைபோட வேண்டுமானால், சாதிகளையும், மதங்களையும் அரசியலாக்கும் சக்திகள், தோற்கடிக்கப்பட வேண்டும்.

சாதி அடிப்படையில் அரசியல் அமைப்புகள் உருவாவது, நம்மை - நம் வளர்ச்சியைப், பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளும் பிற்போக்கு நடவடிக்கைகளாகும்.

இன்னுமொரு செய்தியையும் இந்தப் புனித வேளையில், பொறுப்புமிக்க நம் மக்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியது, என் கடமையாகும்.

நாம் எடுக்கின்ற தீர்மானங்கள், தீட்டிவரும் திட்டங்கள், செயலாக்கி வரும் சாதனைகள், இவற்றில் மக்களின் பங்கு மகத்தானது. திட்டங் களின் பயன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமானால், ஜனநாயகம் வெற்றி பெறத் தங்களது பங்கேற்பு எவ்வளவு அவசியமானது என்பதை, மக்கள் உணர வேண்டும்.

எனவே அரசின் பணிகளில் தோளோடு தோள் நின்று, ஊக்கம் தர வேண்டியது, உங்கள் கடமை என்பதை, இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று நாம் நாமாக இருப்பதற்கு யார் காரணமோ, அவர்களை எல்லாம் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்கிறேன்.

***இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசு, பேரறிஞர் அண்ணாவின் அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அரசு; சுருங்கக்கூறின், இது உங் களின் அரசு என்பதை, மட்டற்ற மகிழ்வோடும், பெருமிதத்தோடும் கூறிக்கொண்டு,***

***'பாரத பூமி பழம் பெரும் பூமி***
***நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்'***

என்று எல்லோரையும் வேண்டிக்கொண்டு, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

'தமிழரசு' 1.8.1992 தேதிய இதழ் அட்டைப்படமும்- குடியரசுத் தலைவரைப் பற்றிய கட்டுரையும் மிகவும் அற்புதம்.

—எஸ்.பி.ஆர். சுபா,
சென்னை-24.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கமானது, வருங் காலத்தில் ஒலிம்பிக் போட்டி நடத்து மளவுக்கு உருவாக்கப்படுவதாகத் 'தமிழரசு' மூலம் அறிந்து மகிழ்ந் தோம்; ஒலிம்பிக் போட்டி பற்றியும் வெளியிட்டிருந்தீர்கள்; இதே போலத் தொடர்ந்து ஒரு விளை யாட்டுப் பகுதி வெளியிடலாமே?

—ஆர். சிவகுகன்
திருச்சி.

கோவை, நீலகிரி மாவட்டங் களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசு மேற்கொண்டிருக்கும் அரிய பணிகள் பற்றிய கட்டுரை யைப் படித்தோம்; இதே பகுதியில் இருந்தும் எங்களுக்கே தெரியாத பல செய்திகள் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது எங்களை மிக மிக மகிழ்வித்தது.

—தி. உமா, ஆர். சித்தார்த்தன்
கோயம்புத்தூர்.




16.7.92 'தமிழரசில்' கர்ம வீரர் காமராசர் பற்றிய கட்டுரை ஒன்று வெளியிட்டிருந்தீர்கள்; அதில் அவர் பிறந்த ஆண்டு 1930 என்று இருக்கிறது; அது தவறு. அது 1903 என்று இருந்திருக்க வேண்டும். அதுதான் சரி.

—அ. கருத்தோவியன்
கருகம்பத்தூர், வேலூர்-13.

(ஆசிரியர்: நீங்கள் குறிப்பிட் டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்.)

'தமிழரசு' பாராட்டுக்குரியதாக வும், விலை மதிப்பற்றதாகவும் விளங்குகிறது; வாழ்த்துகள். ஆனால், சரியான தேதியில் புத்தகம் வெளி வருமானால் இன்னமும் சிறப்பாக இருக்குமே.

—வி. அன்னப்பன்,
சென்னை-12.



# பார்கூர் மக்களுக்கு முதல்வர் வழங்கிய பல்வேறு உதவிகள்...



*மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தனது தொகுதியான பார்கூர் மக்களின் குறைகளைத் தீர்க்க, அங்கே இயங்கிக் கொண்டிருக்கும் தனது அலுவலகம் மூலம் அந்தத் தொகுதி மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவற்றைப் பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனுப்பி அவர்களுடைய, குறைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.*

*அந்த அடிப்படையில், பார்கூர் தொகுதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மனுக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் படித்துப் பரிசீலனை செய்து, 4-வது கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் 92 நபர்களுக்கு 19.8.1992 அன்று தனது இல்லத்திற்கு அவர்களை வரவழைத்து, அவர்களது பல்வேறு குறைகளைத் தன்னுடைய சொந்தச் செலவில் நிறைவேற்றி வைத்தார்.*

*[illegible] நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 10 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், தச்சு வேலைக் கருவிகள் இருவருக்கும் வழங்கினார்கள். மேலும் டீக்கடை வைக்க நிதி உதவி கோரியிருந்த மனுதாரர்கள் நால்வருக்கு-பாய்லர், டீ கெட்டில், ஸ்டவ், பால் பாத்திரம் முதலான 20 வகையான உபகரணங்களை வழங்கினார்.*

*அதேபோல், சிற்றுண்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய ஒருவருக்கு ஸ்டவ், இட்லிப் பாத்திரம், வாணலி, அடுக்கு, வாட்டர் ஜக் முதலான 26 வகையான உபகரணங்களை வழங்கினார். பெட்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய இருவருக்கு வியாபாரம் செய்ய 27 கண்ணாடி ஜாடிகளில் பிஸ்கட், சாக்லெட் மற்றும் தின்பண்டங்கள் ஆகியவற்றையும் வழங்கினார். கட் பீஸ் துணிக்கடை வைக்க நிதி உதவி கோரிய இருவருக்கு அவர்கள் தலையில் சுமந்து வியாபாரம் செய்யும் அளவிற்குத் துணி வகைகளை வாங்கி வழங்கினார்.*

*சைக்கிள் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர்களுக்குத் தலா 6 சைக்கிள்கள் வீதமும் அதனுடன் சைக்கிள் ரிப்பேர் செய்வதற்கான சாதனங்களையும் வழங்கினார். வியாபாரம் செய்ய நிதி உதவி கோரிய 5 நபர்களுக்கும், தொழில் கருவிகள் வாங்க நிதி உதவி ஒருவருக்கும், பொதுவாக நிதி உதவி கோரிய 15 நபர்களுக்கும், இருதய நோய், ஆஸ்துமா, வாத நோய் போன்ற நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சைக்காக நிதி உதவி கோரிய 21 நபர்களுக்கும், ஊனமுற்ற 13 நபர்களுக்கும் நிதி உதவி அன்றுவழங்கினார்.*

*செவித்திறன் குன்றிய ஒருவருக்குக் காது கேளாதவருக்கான கருவி மற்றும் பண உதவியும், உடல் ஊனமுற்ற இருவருக்கு மூன்று சக்கர வண்டியும் பண உதவியும் வழங்கினார். மிதி வண்டி கோரிய 5 நபர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கினார்.*

*மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து பல்வேறு உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தனிப் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள்; அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களது இல்லத்திற்கு வரவழைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்ட பின்னர் பார்கூருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள்*

*அவர்கள் அனைவருடைய போக்குவரத்து, உணவு மற்றும் தங்குவதற்கான செலவுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே தம் சொந்தச் செலவில் ஏற்றுக் கொண்டார்.*



• முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும்; அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.

எதிர்பார்த்ததற்கு மேலாக 2 இலட்சத்து 37 அயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

அத்தேர்தலுக்குப் பின், அரசியல் நுணுக்கங்கள் அவருக்கு அத்துபடியாயின.

1981 - ஜூன் 25-ஆம் தேதி இளைஞர் காங்கிரஸ்(இ) தேசியச் செயற்குழு உறுப்பினரானார். 1983 பிப்ரவரி 2-ஆம் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி(இ) பொதுச்செயலாளராகவே பொறுப்பேற்றார்.

பின்னர், அவர் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதியாகப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளார். 1983 செப்டம்பரில், தமது அன்னையுடன் அவர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றார். அங்கு ஐ.நா. 37-வது பொதுச் சபைக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அந்தக் கன்னிப்பேச்சே கருத்தாழம் மிக்கதாக இருந்தது.

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் 101 நாடுகள் அடங்கிய அணிசேரா நாடுகள் இயக்கத்துக்கு ராஜீவ் காந்தி அவர்கள் தலைவர் ஆனார்.

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி, உலக ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும் அரும்பாடுபட்டு வந்தார். இதன் காரணமாக, நான்காண்டுகளுக்கு முன்பே இவர் பெயர் நோபல் பரிசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டது. 1985-இல் பஞ்சாப்-அசாம் ஒப்பந்தங்கள் இவரால் கையெழுத்திடப்பட்டன.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இவர் மேற்கொண்ட வீரமும் விவேகமும் முயற்சியும் குறிப்பிடத்தக்கவை. ராஜீவால் அமைதி காப்புப்படையும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவரால் 1987-இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் நம் நாட்டுச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது.

1988-இல், மாலத்தீவில் அந்நாட்டு அதிபர் கயூமுக்கு எதிராக நடைபெற்ற புரட்சியை அடக்க இந்தியப் படைகள் திரு. ராஜீவால் அனுப்பி வைக்கப்பட்டன.

ஜவகர் ரோஜர் யோஜனா, பஞ்சாயத்து ராஜ் போன்ற மசோதாக்கள் இவரால்தான் கொண்டுவரப்பட்டு அமல்படுத்தப்பட்டன.

1989-இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் இவருக்கு ஒரு சோதனையாக அமைந்தது.



அத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தபின், திரு. ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமர் பதவியை இழந்தார்.

வளைகுடாப் போர் மூண்டபோது, அதை அரும்பாடுபட்டு முடிவிற்குக் கொண்டுவரச் சமாதான நடவடிக்கையில் இவர் ஈடுபட்டார்; இதுவே இவர் மேற்கொண்ட கடைசிச் சமாதான முயற்சியாகும்.

ராஜீவ் இந்தியத் திருநாட்டின் பிரதமராக இருந்த சமயத்தில், கொலை பாதகர்களால் இரண்டு முறை அவர் உயிருக்குக் குறி வைக்கப்பட்டது.

ஆனால், 1991 மே, 21-இல், தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொண்டதுபோது - திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில் கொலை வெறியர்களால் மிகக் கொடுமையான முறையில் கொல்லப்பட்டார்.

ஜவகர்லால் நேரு குடும்பத்தில் கடந்த பதினோராண்டுகளில் மூன்று கொடிய சாவுகள் நிகழ்ந்துள்ளன. 1980-இல் திரு. சஞ்சய் காந்தி விமான விபத்தில் சிக்கிக் கொடூரமாக உயிரிழந்தார்.

1984-இல் இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் தமது பாதுகாவலராலேயே பயங்கரமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

21.5.1991 அன்று தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழகத்திற்கு வந்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள், சென்னைக்கு அருகே உள்ள ஸ்ரீபெரும்புதூரில் எதிர்பாராத பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகிப் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது உடல் அரசு மரியாதைகளுடன், டில்லியில் யமுனை நதிக்கரையில், அன்னையார் இந்திராகாந்தி நினைவிடம் அருகே 24.5.1991 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.15 மணியளவில் அவருடைய புதல்வர் ராகுல் காந்தியால் எரியூட்டப்பட்டது.

கடந்த மே 21-ஆம் தேதி, இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

ராஜீவின் மறைவிடத்தில், நினைவில்லம் அமைப்பதற்கெனத் தமிழக அரசு 12 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது.

- 'முடிகொண்டான்'




'நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்' என்ற கேலிப் பேச்சுக்கு இனி இடமில்லை. காளான்கள் இப்போது மனிதனின் முக்கிய உணவு வகைகளில் ஒன்றாக மாறி வருகின்றன. அதிக புரோட்டீனும், பெரும்பான்மை வைட்டமின்களும் கொண்டவை அவை. அதே சமயம், அவை சிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டிருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

'அமானிடா மஸ்காரியா' என்ற காளான், சுரப்பிகளின் வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. ஓமியோபதி மருத்துவ முறையில், மூளையின் செயல்பாட்டினைச் சரிசெய்ய இது மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

'சைலோசைப் மெக்ஸிகேன்' எனப்படும் காளான் மனநோய்களுக்கு மருந்தாகும்.

'ஆரிகுலேயா பாலிடிரைகா' என்ற வகை, இரத்தத்தில் 'கொலஸ்ட்ராலை'க் கட்டுப்படுத்துவதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இதில் இன்னொரு ரகம், இரத்தக் கொதிப்பைக் குறைக்கும் சக்தி கொண்டது. மேற்கண்ட வகைகள் நீங்கலாக, பாக்டீரியா எதிர்ப்புத்திறன், மஞ்சை எதிர்ப்புச் சக்தி, வைரஸ் கிருமி எதிர்ப்புத்திறன் முதலிய காரணங்களுக்காகச் சில வகைக் காளான்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் உச்சகட்டமாக ஒரு விதக் காளானிலிருந்து கிடைக்கும் 'லென்டினன் சல்பேட்' என்ற பொருளுக்கு 'AIDS' நோயைக் கட்டுப்படுத்தும் குணம் இருப்பதாக ஜப்பான் நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

சீனாவில் மட்டும் 107 வகையான மருத்துவ ரகக் காளான்கள் வளர்க்கப்படுகின்றன.

கேரளாவில் நிலத்தடியில் வளரும் காளான் ஒன்று, ஆயுர்வேத மருத்துவர்களால் மஞ்சள் காமாலை, காது வலி முதலிய நோய்களுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது.

## குளிர் காலத்தில்

# கோழிப்பண்ணை

## பராமரிப்பு

**கோ**ழிகளின் உற்பத்தித் திறன் தொடர்ந்து நிலையானதாக இருக்க, வெப்ப தட்பச் சூழ்நிலைக்கேற்ப அவைகளை நன்கு பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். கோடை காலத்தில் கூடுதலான வெப்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது போலக் குளிர் காலத்திலும் கூடுதலாகக் குளிரிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். மழை மற்றும் பனி ஆகியவற்றால், கோழிகள் உள்ள வீட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு, கோழிகளின் வளர்ச்சி குறைந்து முட்டை இனக் கோழிகளில் முட்டை இடும் திறனும், கறிக்கோழிகளில் எடைகுறைவாகும்நிலையும்ஏற்படும். எனவே, கோழிப்பண்ணையாளர்கள் குளிர் காலத்தில் கோழிகளைப் பராமரிக்க வேண்டிய வழிமுறைகளை அறிந்து தகுந்த முன்னேற்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**கோழி வீட்டின் கூரை பராமரிப்பு**

பெரும்பாலும் கோழிகளின் வீடுகள் கூரையால் வேயப்பட்டுள்ளதால், நாளடைவில் கூடை பழுதடைந்து ஓட்டை ஏற்படலாம். இதை மழைக்காலம் ஆரம்பிக்குமுன்பே சீர்படுத்தவேண்டும். தேவைப்பட்டால் புதிய கூரை அமைக்கலாம் அல்லது ஓட்டை விழுந்த இடங்களில் புதிய கூரை போட்டுச் சரி செய்யவேண்டியது மிகவும் அவசியம். இதனைச் சீர்செய்யாவிடில், மழைக் காலத்தில் ஒழுகல் ஏற்பட்டு கோழி வீட்டினுள் மழை நீர் புகுந்து ஈரமாக்கிவிடும். இதனால், முட்டையிடும் கோழிகள் நனைந்து தீவனம் சரிவரத் தின்னாமல் முட்டை குறைந்துவிடும். கறிக்கோழிகளின் வளர்ச்சித் திறன் குறைந்து எடை குறைந்துவிடும். ஆழ்கூளம் நனைந்துவிடும். இதன் விளைவாகக் காக்கிடியோசிஸ் என்ற இரத்தக் கழிச்சல் நோய் ஏற்படும். கோழிகளில் இறப்பு ஏற்படலாம். இதனால் பொருளாதார நட்டம் ஏற்படக் கூடும்.

**டாக்டர் என். மாரிமுத்து**
கால்நடை பராமரிப்புத்துறை
விவசாயக் கல்லூரி, மதுரை.

**பண்ணை பக்கவாட்டில் திரை அமைத்தல்**

மழைச்சாரல் கோழி வீட்டினுள் புகாமலிருக்கப் படுதா அல்லது கோணிச் சாக்குகளைப் பக்கவாட்டுத் திரையாக மழை பெய்யும் நேரங்களில் தொங்கவிடவேண்டும். மழை நின்றவுடன் படுதாவினைச் சுருட்டி வைக்கவேண்டும். இரவு நேரங்களில் படுதாவினை இறக்கி விட்டுக் காலையில் வெயில் வந்தவுடன் மீண்டும் சுருட்டி, கட்டி வைக்க வேண்டும். அதிகாலையில் சுற்றுப்புறம் குளிராக இருக்கும். எனவே, சூரிய வெப்பம் வந்த பின்பு பக்கவாட்டுத் திரைகளைச் சுருட்டி வைக்கவேண்டும்.

**ஆழ்கூளம் பராமரிப்பு**

ஆழ்கூளம் எந்த நேரத்திலும் இல்லாமலிருப்பது மிகமிக அவசியம்.





மழைச் சாரல் மற்றும் மழைத் தண்ணீர் ஒழுகுதல் மூலம் ஆழ்கூளம் நனைந்து விட்டால், அதை உடனே அப்புறப்படுத்த வேண்டும். இல்லையேல் கோழிகளுக்கு இரத்தக் கழிச்சல் நோய் உண்டாகும். கோழி எச்சத்தில் சுமார் 70 சதவிகிதத்துக்கு மேல் ஈரப்பதம் இருப்பதாலும், மழைக் காலங்களில் சுற்றுப்புறம் ஈரப்பதத்துடனிருப்பதாலும், ஆழ்கூளம் விரைவில் உலர்வதில்லை. இதனால் காக்சிடியோசிஸ் எனும் இரத்தக் கழிச்சல் நோய் வரக்கூடும். ஆழ்கூளத்தில் ஈரப்பதம் 25 சதவிகிதத்துக்குமேல் இருந்தால் அம்மோனியா வாயு உற்பத்தியாகி கோழிகளைப் பாதிக்கும். கண் எரிச்சல் ஏற்படும். தீவனம் உட்கொள்வது குறையும்.

முட்டை இனக் கோழிகளில் முட்டை உற்பத்தி குறைந்துவிடும். கறிக் கோழிகளில் வளர்ச்சி குறைந்து எடை குறைந்து விடும். இதனால் பண்ணையின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். இந்நிலையைத் தவிர்க்க, பண்ணையில், 100 ச.அடி. பரப்பிற்கு 8 முதல் 10 கிலோ என்ற விகிதத்தில் சுண்ணாம்புத்தூளைத் தூவி நன்கு கிளறிவிடவேண்டும். ஆழ்கூளத்தின் ஈரத் தன்மையைப் பொறுத்து வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை அப்படி விடுவது அவசியம். கூட்டு முறையில் வளர்க்கப்படும்போது ஈத்தொல்லையை நீக்க மழைக் காலத்தில் கோழி எச்சத்தின் மீது சுண்ணாம்புத்தூள், மலத்தியான், சுமத்தியான் ஏதாவது ஒன்றினைத் தெளிக்க வேண்டும்.

**கூடுதலாக வெப்பம் அளித்தல்**

குளிர்காலத்தில் காலையில் பனிமூட்டமாக இருக்கும். இதனால் சற்றுப்புறக் காற்று, ஈரப்பதத்துடனிருக்கும். இவ்விதச் சூழ்நிலையில் எலக்ட்ரிக் ஹீட்டர் பயன்படுத்தி கோழி வீட்டில் வெப்பம் கொடுத்தல் அவசியம். இதோடு நன்கு பகல் வெளிச்சம் வரும்வரை செயற்கை வெளிச்சம் கொடுத்து பல்புகளை எரியவிட வேண்டும். இதனால் கோழிகள் ஒரே இடத்தில் அடையாமல் பரவலாக நடந்து திரியவும் தீவனம் உட்கொள்ளவும் ஏதுவாகும். ஒரு நாளைக்கு 16 மணி நேரத்துக்குக் குறையாமல் வெளிச்சம் கிடைக்கவேண்டும்.

**தீவனம் அளித்தல்**

கோடை காலத்தில் சிலர் பண்ணைத் தீவனத்துடன் தண்ணீர் கலந்து பிசைந்து வைப்பார்கள். இப்படிக் கூளத்தை குளிர் காலத்தில் மாற்றி உயர் தீவனமாகக் குளிர் காலத்தில் கொடுக்க வேண்டும். குளிர் காலத்தில் கோழிகளுக்குக் கூடுதலாக எரிசக்தி தேவைப்படுவதால் எப்போதும் கொடுக்கப்படும் தீவனத்தைவிட எரிசக்தி கூடுதலாகக் கிடைக்கும்படி தீவனக் கலவையை மாற்றி அமைக்கத் தீவனம் தயாரித்துக் கொடுக்கவேண்டும். கோழிகளுக்குத் தேவையான கூடுதல் வெப்பம் கிடைக்க கரும்பாலைக் கழிவு (Molasses) ரைஸ்பாலிஷ், மக்காச் சோளம் போன்றவற்றைத் தீவனத்தில் கலந்து கொடுக்கலாம்.

**தண்ணீர் அளித்தல்**

குளிர் காலத்தில் தண்ணீர் பொதுவாகக் குளிர்ச்சியாக இருக்கும். குளிர்ச்சியாக உள்ள நீரைக் கோழிகளுக்குக் கொடுத்தால், உட்கொள்ளும் அளவு குறைந்துவிடும். இதனைத் தவிர்க்க, குளிர் காலத்தில் கொடுக்கும் தண்ணீரைச் சிறிது சூடாக்கிக் கொடுத்தால் உட்கொள்ளும் தண்ணீரின் அளவு அதிகரிக்கும். இதனால் வளர்ச்சி விகிதம் பாதிக்காமலிருக்க வாய்ப்புண்டு.

**குளிர் காலத்தில் ஏற்படும் நோய்கள்.**

குளிர் காற்று மனிதர்களைப் பாதிப்பதுபோல் கோழிகளையும் பாதிக்கின்றன. சுற்றுப்புறக் காற்றும் மிகவும் ஈரப்பதம் நிறைந்ததாக இருப்பதால் கோழிகளில் சளி, நுரையீரல் நோய், இரத்தக் கழிச்சல் போன்ற நோய்கள் ஏற்படலாம். இவற்றிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க ஈரப்பதம் அதிகமுள்ள ஆழ் களத்தை உடனே அப்புறப்படுத்தி, புதிதாக உலர்ந்த ஆழ்கூளம் போடவேண்டும். வளர்க்கப்படும் கோழிகளின் எண்ணிக்கை அப்பண்ணையின் பரப்பளவுக்கு எத்தனை வைத்துப் பராமரிக்க முடியுமோ அதற்குமேல் கூடுதலான எண்ணிக்கையில் வளர்க்கக் கூடாது. நெருக்கடியைத் தவிர்க்கவேண்டும். குளிர் காலத்தில் கோழித் தீவனத்தில் அவசியம் காக்சிடியோஸ்டேட் மருந்து கலந்து கொடுக்கவேண்டும். சளி, நுரையீரல் நோய் வராமலிருக்க ஆண்டிபயாடிக் மருந்து நீரில் கலந்து கொடுக்க வேண்டும். முட்டை இனக் கோழிகளில் குடற்புழு நீக்கம் செய்வது அவசியம். குளிர் காலத்தில் கோழிகளின் உற்பத்தித் திறன் குறையாமலிருக்கவும் நோய்ப் பாதுகாப்புச் செய்யவும் மேற்கூறிய பராமரிப்பு முறைகளைக் கோழிப் பண்ணையாளர்கள் கடைப்பிடித்து, பண்ணையின் பொருளாதாரம் கூடுதலாக்கக் குளிர் காலத்தில் கோழிகளை நன்கு பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.



# நூல் நயம்

## பேறறிஞர் அண்ணா

**ஆசிரியர்:** ஞா. மாணிக்கவாசகன்
**வெளியீடு:**
உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித்தெரு,
சென்னை-600 001.

பக்கம்:194 விலை:ரூ.25/-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருவாழ்வு, நமக்கெல்லாம் வழிகாட்டியாக, குறிப்பாக இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

இந்த நூலில், அவரது வாழ்க்கைப் பயணங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணாவின் எழுத்து, பேச்சு, தொண்டு எல்லாம் தொகுப்பெற்றுப் படிப்போர்க்குப் பயன் தருவனவாக அமைந்துள்ளன. எல்லாரும் படிக்க வேண்டிய நூல்.

## திருக்குறள் எளிய உரை

**ஆசிரியர்:** புலவர் ச. சீனிவாசன்
**வெளியீடு:**
சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:267 விலை:ரூ.12/-

வான்புகழ் வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு எளிய இனிய உரை எழுதியுள்ளார் ஆசிரியர். எல்லாத் திறத்தாரும் படித்துப் புரிந்து கொள்ளத் தக்க வகையிலே குறளும், அதற்கு நேரே அதன் பொருளும் கொடுத்திருப்பது இந்நூலின் சிறப்பம்சம். நூலின் இறுதியில் திருவள்ளுவமாலையும், செய்யுள் முதற் குறிப்பு அகர வரிசையும் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மலிவு விலையில், கையடக்க அச்சமைப்பு கொண்டது இந்நூல்.

—பி.வி.ஜி.

## ஆயிரம் விடுகதைகள்

**ஆசிரியர்:** சௌந்தரி நடராசன்
**வெளியீடு:**
முத்துசுந்தரி பிரசுரம்,
12, திருவள்ளுவர் தெரு,
ஔவை நகர், பாடி,
சென்னை-600 050

பக்கம்:132 விலை:ரூ.16/-

விடுகதைகள் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை சொல்லி மகிழும் ஒரு வினாடி வினாவாகும். அத்தகைய விடுகதைகள் இந்நூலில் நிறைந்துள்ளன. உதாரணத்துக்குச் சில:

அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல; நிலையாக இருக்காது நிலவும் அல்ல - அது என்ன? (புகை)

அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல; அழகான வாலுண்டு குரங்கும் அல்ல - அது என்ன? (பட்டம்)

## தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?

**ஆசிரியர்:** எஸ்.ஆர். கோவிந்தராசன்
**வெளியீடு:**
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:187 விலை:ரூ.24/-

மாணவர்கள், எழுத்தாளர்கள், ஏன், எழுதத் துடிக்கும் எல்லோருமே பிழையின்றி எழுத வேண்டும். எழுத்துப் பிழைகள், நல்லவயலில் களைகள் போன்றவை. அவற்றைக் களைதல் வேண்டும். அதற்கு வழி வகை கூறுகிறது இந்நூல்.

பிழை இல்லாமல் எழுத வேண்டுமானால், ஓரளவாவது இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும். 'எளிய அடிப்படை இலக்கணம்' என்னும் தலைப்பில் ஆசிரியர் இரத்தினச் சுருக்கமாக இலக்கணம் கற்க வழி கோலுகிறார்.

## குறுந்தொகை ஓவியங்கள்

**ஆசிரியர்:**
டாக்டர் சரளா இராசகோபாலன்,
**வெளியீடு:**
ஒளிப் பதிப்பகம்,
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18

பக்கம்:160 விலை:ரூ.20/-

தமிழ் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவ்வக் காலக்கலை, நாகரிகம், பண்பாடு முதலான தன்மைகளை எடுத்துக்காட்டி அந்தத் தமிழ்ச் செல்வங்களை மனத்தில் பதிக்க வேண்டும். அத்தகைய செல்வங்களுள் ஒன்றுதான் குறுந்தொகை.

அத்தகைய குறுந்தொகைக் காட்சிகள் சிலவற்றை எழுத்தோவியமாகத் தீட்டியுள்ளார் ஆசிரியர். எளிய நடையில், எல்லாரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பு.

—பி.வி. கிரி

## காந்தியடிகள் கண்ட கடவுளும் சமயமும்

**தொகுப்பாசிரியர்:**
வீ.சேரந்தையா பிள்ளை
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

பக்கம்:177 விலை:ரூ.16/-

அண்ணல் காந்தியடிகளுக்கு ஆன்மீகமும், சமயமும் இரு கண்களாக விளங்கின. அவர்தம் வாழ்நாள் முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு உண்மையான ஆன்மீகவாதியாகவும் விளங்கினார். அவரது கருத்துக்கள் நூல் முழுவதும் விரவியுள்ளன.

காந்தியடிகள் கண்ட கடவுள், நம்பிக்கை, பகுத்தறிவு, ஒழுக்கம், பிரார்த்தனை, வழிபாடு, அருள்நெறி முதலான தத்துவங்கள், தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய நூல்.

## வள்ளுவம் பன்னோக்குப் பார்வை

**ஆசிரியர்:** ப. முருகேசம்
**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

பக்கம்:163 விலை:ரூ.16.50/-

இது ஒரு அருமையான தொகுப்பு நூல். வான்புகழ் வள்ளுவர் குறித்து, பல்துறை அறிஞர் பெருமக்கள் எழுதிய 25 கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

டாக்டர் வ.சுப. மாணிக்கம், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம், டாக்டர் க.த. திருநாவுக்கரசு, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் சுப்புரெட்டியார், டாக்டர் ந. சஞ்சீவி முதலானோரின் அரிய கருத்துக்கள் நிறைந்த படைப்புகள் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.



# ஓட்டுநர்களும் குடிப்பழக்கமும்

பொதுத் தொண்டில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஓட்டுநர்களின் ஒவ்வொறு உறுப்பும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். ஏதாவது ஒரு உறுப்பு ஊனப்பட்டிருந்தால் கூட, ஓட்டுநர் தொழிலைச் செம்மையாகப் புரியவே இயலாது.

ஆரம்ப காலத்தில் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் கொண்டவர்கள் ஓட்டுநர் தொழிலுக்கு வந்துவிட்டால் எக்காலத்தும் கடமை தவறாத நற்பண்பும், கருணை மாறாத செயல் திறனும், உயிர்களின் மீது அன்பும், பரிவும், தேசாபிமானமும் கொண்டவர்களாக மாறிவிடுவார்கள். அதனால் தான் ஓட்டுநர் தொழில் ஓர் உயர்ந்த தொழிலாக மதிக்கப்படுகிறது.

### ஒரு நாட்டின் கண்போன்றவர் ஓட்டுநர்

பல உயிர்களைப் பாதுகாத்திட வேண்டிய பொறுப்பு மிக்க ஒவ்வொரு ஓட்டுநருக்கும் உடல்நிலை பாதிக்கப்படாமல் முடிவெடுக்கும் தன்மையும், உடல் உறுப்புக்கள் இயங்கும் தன்மையும் சிறப்பாக இருத்தல் வேண்டும்.

சாதாரணமாக ஒரு குதிரை பூட்டிய வண்டியை ஓட்டுபவர் அக்குதிரை ஏதாவது இடக்குப் புரிந்தால் என்ன செய்கிறார்? எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்கிறார். அதே போல் 110 குதிரை சக்தி திறனைக் கொண்ட ஒரு வாகனத்தை ஓட்டுகின்ற ஓட்டுநர் எவ்வளவு சிரமத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது? நல்ல திடகாத்திரமாக இருப்பவர்களாலேயே நிலைமைகளைச் சமாளிக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதிலும் மதுபானத்தை அருந்தி வாகனத்தை ஓட்டுவதாயிருந்தால்.... அய்யகோ! விளைவுகளை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது.

### குடி குடியைக் கெடுக்கும்

குடிப்பதால் தன்னிலை மறப்பதோடல்லாமல் உணர்வுகளையும், மனநிலையையும் மயங்கச் செய்கிறது. மூளையும் பாதிக்கப்பட்டு, முடிவெடுக்கும் தன்மையும் குறைந்து விடுகிறது. கண்கள் பார்க்கும் தன்மையையும், தசைநார்கள் தளர்ந்து உடல் உறுப்புகள் இயங்கும் கட்டுப்பாடுகளையும் இழந்து விடுகின்றன.

மதுபானம் அருந்தும் பழக்கமுடைய சில ஓட்டுநர்களை அண்மையில் ஆய்வுக் கூடத்தில் விசாரித்த போது...

'நான் எவ்வளவு குடிச்சாலும் ஸ்டெடியா இருப்பேங்க''...

''நான் எப்பவுமே 'நிதானத்தை' மட்டும் விட மாட்டேங்க'...

- என்றெல்லாம் கூறினார்கள்.

இப்படி ஸ்டெடியாக இருப்பதாகக் கூறிக்கொண்டு இருப்பவர்களால் எத்தனை விபத்துக்கள் விளைந்து, உயிர்ச் சேதங்கள் பொருட் சேதங்கள் பெருமளவில் ஏற்பட்டுள்ளதாக உலக ஏடுகள் பக்கம் பக்கமாக எழுதி வருவதை நாம் படித்து வருகிறோம்!



மதுபானம் அருந்தியதும் ஏறக்குறைய 20 அல்லது 40 நிமிடங்களில் மதுவானது இரத்தத்தில் கலந்து போதையை உண்டாக்குகிறது. மதுவின் அளவு இரத்தத்தில் 0.10 சதவிகிதம் மேற்பட்டால் மயக்க நிலை ஏற்பட ஏதுவாகும்.

**சட்டரீதியாக ஓட்டுநர் ஒருவர் பணிபுரியும்போது சிறிதளவுகூட மது அவர் இரத்தத்தில் கலந்த அறிகுறியே இருக்கக்கூடாது. இருந்தால் 'குற்றப்பத்திரிகை' தாக்கல் செய்யலாம். அவரது உரிமம் பறிக்கப்படலாம்.**

குடிபோதையில் வாகனத்தை ஓட்டுவது செக்‌ஷன் 117 மோட்டார் வாகனச் சட்டப்படி குற்றமாகும். அவை...

சிற்றுந்துகளாக இருந்தாலும் சரி;
சரக்குந்துகளாக இருந்தாலும் சரி;
பேருந்துகளாக இருந்தாலும் சரி;

எந்தவொரு சூழ்நிலையிலும் ஓட்டுநர் மதுவருந்தி ஓட்டுவது பெருங்குற்றமாகும். வாலிபர்களானாலும், வயதானவர்களானாலும் மதுஅருந்தி வாகனத்தை ஓட்டுவது முடியாத, இயலாத காரியமாகும். அதனால் பொதுச்சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஓட்டுநர்கள் மது அருந்துவதை நிறுத்தி, தமது குடும்பத்திற்கும், தாய் நாட்டிற்கும் நன்மை செய்தல்வேண்டும்.

**மோட்டார் வாகனச் சட்டம் 71**

**வரையறுக்கப்பட்ட வேகக்கட்டுப்பாடு எல்லைகள்**

**வாகனங்கள் — நகர்ப்புறங்கள் — மற்ற புறநகர்கள்**

சிற்றுந்துகள் 50 கி.மீ. எல்லை
(கார், டாக்சி, இல்லை
மோட்டார் சைக்கிள்)

பேருந்துகள் 35 கி.மீ. 60 கி.மீ.
(பயணிகள் பேருந்து)



**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் சங்கப் பிரதிநிதிகள் 12.8.92 அன்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள்.**

சிறுவாகனங்கள் 35 கி.மீ. 50 கி.மீ.

நடுத்தரச் சரக்குந்துகள் 35 கி.மீ. 50 கி.மீ.
(டெம்போக்கள்)

கனரகச் சரக்குந்துகள் 35 கி.மீ. 50 கி.மீ.
(லாரி-டிரக்)

இவை அல்லாத வாகனங்கள் 20 கி.மீ. 30 கி.மீ.

இந்த வரையறுக்கப்பட்ட வேகத்திற்குமேல் வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.

**போதையில் மூடிய பாதை
(உண்மைச் சம்பவம்)**

குடிபோதையினால் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று மேட்டுப்பாளையம் சாலையில் நீலமலைராணியின் நுழைவு வாயிலில் நிகழ்ந்தது. அன்றையதினம் மாலை மணி 3.30. கோலமிகு குன்னூரை நோக்கி மேட்டுப்பாளையத்திலிருந்து பயணிகள் பேருந்தொன்று பாங்காகச் சென்று கொண்டிருந்தது.

அதே நேரத்தில் உதகையிலிருந்து கீழ்நோக்கி நன்கு பாரமேற்றப்பட்ட 'சரக்குந்து' ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. பேருந்தானது 'தூரிப்பாலம்' எனப்படும் ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய வழியினைக் கொண்ட இரும்பு இணைப்புப் பாலத்தை நெருங்கியதும், முறைப்படி முன்னால் வாகனம் ஏதாவது வருகின்றதா?... ஏதாவது 'ஹார்ன்' சப்தம் கேட்கின்றதா?... என்பதை நன்கு தெரிந்து, உறுதி செய்தபின்னர், ஓட்டுநர் பாலத்தைப் பயன்படுத்தினார். பாலத்தின் முக்கால் பாகத்தையும் கடந்துவந்து கொண்டிருக்கும்பொழுது, உதகையிலிருந்து கீழ் நோக்கி வரும் சரக்குந்து நிற்காமல், வேகத்தையும் குறைக்காமல் பாலத்தை நெருங்குவதை உணர்ந்த பேருந்தின் ஓட்டுநர் உடனே ஒலி கொடுத்தார். முகப்பு விளக்கினை ஒளிரவிட்டார்.... இருந்தும என்ன பயன்?... தொடர்ந்து இரண்டு மூன்று நாள் ஓடியதனால் அசதியாக இருக்கிறது. மலைவழித் தடத்தில் கை, கால்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்று அந்தச் சரக்குந்து ஓட்டுநர் 'மது' அருந்தி இருந்தார்.

அதனால் கண்பார்வை செயல்படும் தன்மை முடிவெடுக்கும் தன்மை, உடல் உறுப்புக்கள், உணர்வுகள் மயங்கிய நிலையில், "மேலே வரும் வாகனங்களுக்கு வழிவிட வேண்டும்" என்கிற சாலை விதியினையும் அனுசரிக்காமல், சாலை எச்சரிக்கைச் சின்னத்தையும் பார்க்காமல், ஒரு பேருந்து மட்டுமே செல்லக்கூடிய பாதையினைக் கொண்ட பாலத்தில் முழுவதும் கடந்துவிட்ட பேருந்து செல்ல வழிவிடாமல், எதிர்பார்க்கும் தன்மையை இழந்து புகுந்துவிட்டார்..

விளைவு...? மகப் பயங்கரமாக... மயிர்க்கூச்செறியும்படியாக நிகழ்ந்துவிட்டது. சரக்குந்தானது பாலத்தின்மீது மோதி இரும்புக் கிராதிகளின் மீதேறி, பயணிகள் பேருந்தின்மீது சாய்ந்துவிட்டது. பேருந்தின் ஓட்டுநர் மிகவும் சாதுரியமாக, லாவகமாகப் பேருந்தை நிறுத்திவிட்டார். இல்லையெனில் பல விலை மதிப்பில்லாத உயிர்கள் அங்கே பலியாகி இரத்த ஆறு ஓடியிருக்கும்.

இதனால் அன்றையப்பொழுது அனைத்து வாகனங்களும் அந்த வழியில் செல்லமுடியாமல் 100 கி.மீ. அதிகமான மாற்றுவழியில் திருப்பிவிடப்பட்டன. அதனால் எத்தனைப் பேருக்குச் சிரமம்! எவ்வளவு வேதனை!!

அத்தனையும் - மது அருந்திய அந்த ஓட்டுநராலன்றோ உணர்வுகளை, உடமைகளை, இழக்க நேர்ந்தது... அது மட்டுமா?

ஆயிரமாயிரம் வாகனங்களுக்கு வீணான எரிபொருள் செலவு...

அவசர வேலை நிமித்தம் பயணம் செய்வோருக்கு உரிய நேரத்தில் போய்ச் சேரமுடியாமை...

பொதுவுடமைப் பொருட்கள் சேதம்!!

அத்தனையும் குடியைக் கெடுக்கும் குடியினால் வந்ததன்றோ! ஆகவே, குடிப்பதை நிறுத்துவோம்! குடிகளைக் காப்பாற்றுவோம்!!

**தகவல்:
சேரன் போக்குவரத்துக் கழகம்.**



# செங்கல்பட்டு-

# எம்.ஜி.ஆர் மாவட்டத்தில்

# விளாகம்

# மாதிரி கிராமம்

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், மிகவும் பின் தங்கிய மற்றும் வறுமைக்கோட்டிற்கும் கீழே வாழும் அதிகமாக நெசவுத்தொழில் செய்யும் மக்களைக் கொண்ட 25 கிராமங்களை மாதிரி கிராமங்களாகத் தேர்வு செய்து அக்கிராமத்தினருக்குக் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களை வறுமைக் கோட்டிற்கும் மேலே கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் தமிழ்நாட்டிலேயே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில், செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த 'விளாகம்' கிராமம் மாதிரி கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமம், திருக்கழுக்குன்றம் கருங்குழிச் சாலையில் 10-வது கிலோ மீட்டரில் பிரியும் கிளைச் சாலையில் 2-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது.

**விளாகம் - ஒரு கண்ணோட்டம்**

விளாகம் கிராமத்தில் மொத்தம் 269-குடும்பங்கள் உள்ளன. 193 குடும்பங்கள் கிராமத்தின் மத்தியிலும் 76 குடும்பங்கள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலும் உள்ளன. ஆண்கள் 564 பேர்களும், பெண்கள் 460 பேர்களும், குழந்தைகள் 393 பேர்களும் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் 76 குடும்பங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 64 குடும்பங்களும், பிற்படுத்தப்பட்டோர் 114 குடும்பங்களும் இதர வகுப்பினர் 15 குடும்பங்களும் உள்ளனர். உடல் ஊன முற்றோர் 6 பேர்களும், விதவைகள் 13 பேர்களும் உள்ளனர். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 555 பேர்களும், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 584 பேர்களும் உள்ளனர்.

50 குடும்பத்தினர் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். 70 நபர்கள் வங்கிக் கணக்கு வைத்துள்ளார்கள். 138 வீடுகள் மின்சார வசதியைப் பெற்றுள்ளன. 247 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். 66 நபர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். 2 நபர்கள் விசைத்தறி வைத்து உள்ளனர். 66 நபர்கள் சொந்தத் தறிகள் வைத்து உள்ளனர். 83 நபர்கள் நெசவுக் கூலி வேலைகள் செய்கிறார்கள். 263 நபர்களுக்குச் சொந்தமாக வீடுகள் உள்ளன. இவர்கள் 194 கால்நடைகளையும், 50 பறவைகளையும் வைத்துள்ளனர்.

ஆண்டு வருமானமாக 125 குடும்பங்கள் ரூ.4,000-க்குள்ளும் 83 குடும்பங்கள் ரூ.4,000 முதல் ரூ.6,000-க்குள்ளும், 36 குடும்பங்கள் ரூ.6,000 முதல் 8,500-க்குள்ளும், 17 குடும்பங்கள் ரூ.8,500 முதல் 11,000- க்குள்ளும், 8 குடும்பங்கள் ரூ.11,000-மும் அதற்கு மேலும் பெற்று வருகின்றன.

**திட்டங்களைச் செயல்படுத்த அலுவலர்கள் குழு**

இக்கிராம மக்களை, வறுமைக் கோட்டிற்கும் மேலே கொண்டு வந்து சேர்த்திட கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களைத் தலைவராகவும், உதவி இயக்குநர், துணை இயக்குநர் மாநில அளவிலான நெசவாளர் சேவை மையம், முதன்மைக் கல்வி அலுவலர், நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மாநிலக் கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் உதவி இயக்குநர் கைத்தறி நூல் மற்றும் துணிநூல் துறை அவர்களை அமைப்பாளராகவும் கொண்டு செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தனியார் தறி முதலாளிகளின் பிடியில் சிக்கி, மிகவும் குறைந்த கூலிக்கு நெசவு செய்து அதனால் சொற்ப வருவாய் பெற்று வாழும் நெசவாளிகளின் வருமானத்தை உயர்த்தவும், வருவாயை நிரந்தரமான மற்றும் நம்பகமானதொன்றாக மாற்றிடவும் இவர்களையும் கூட்டுறவின் கீழ் கொண்டு வருவது இன்றியமையாதது என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கிராமத்தின் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி ரூ.25 இலட்சம் அரசு திட்டத் தொகையாக ஒதுக்கீடு செய்து பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

கோட்டப் பொறியாளர் சர்க்கரை அபிவிருத்தித் திட்டம், கடலூர் மூலம், நெடுஞ்சாலையிலிருந்து விளாகம் கிராமத்திற்கு 3 கி.மீ.

**ஆ. கோபாலன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்
மாவட்டம்**



• விளாகம் கிராமத்தின் ஒரு தோற்றம்

தூரம் சாலை வசதி செய்யப்பட உள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விளாகம் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிதண்ணீர் இணைப்பு செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. விளாகம் கிராமத்திற்கு 3 கி.மீ. தொலைவில் உள்ள வள்ளிபுரம் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் விரிவாக்க மையம் ஒன்று தொடங்கவும், பேருந்து வசதியும் இக்கிராமத்திற்கு அதிகப்படுத்தப்படும். தற்போது உள்ள ஆரம்பப் பள்ளியை நடுத்தரப் பள்ளியாக ஆக்க நடவடிக்கை எடுக்கப்படும். தொலைபேசியுடன் தந்தி வசதி கொண்ட ஒரு கிளை அஞ்சல் நிலையம் ஒன்று தொடங்கப்படும்.

பொழுதுபோக்கு வசதிக்காக வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி வைப்பதற்காக • சிறிய கட்டடம் ஒன்றும், படிப்பதற்கான பொது நூலகத்திற்குச் சிறிய கட்டடம் ஒன்றும் கட்டிச் செயல்படுத்தப்படும். கால்நடை மருத்துவ வசதிக்கு, தற்போது வள்ளிபுரத்தில் இயங்கிவரும் கால்நடை மருத்துவ நிலையத்திலிருந்து இக்கிராமத்திற்கெனக் கிளை அமைத்து மருத்துவ வசதி ஏற்படுத்தவும் கூட்டுறவு விரிவாக்க அலுவலர் மூலம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும்.

கைத்தறித்துறையில் தற்போது புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தகுதி வாய்ந்த புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் தகுதியற்றவர்களுக்கு நெசவுப் பயிற்சியளிக்கவும் உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி யளிக்கவும் அவர்களின் சராசரி வருமானத்தை உயர்த்தவும் தகுந்த ஏற்பாடுகள் செய்து தர, காஞ்சிபுரம் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் குறைந்த பட்சம் ஐந்து சென்ட் நிலமுள்ளவர்களுக்கு இலவசமாகப் புல்விதை வழங்கி வளர்ந்த புல்லை விலைக்குக் கொள்முதல் செய்து இக்கிராமத்தவருக்கு உதவ முடிவு செய்யப்பட்டது. முதியோர் கல்வி வசதி செய்யவும், பட்டுப்புழு வளர்த்து வருவாய் பெறவும், வருவாய்த்துறையின் சார்பில் தகுதி வாய்ந்த நபர்களுக்குக் குடும்ப அட்டை வழங்கவும் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். சமூகக் காடுகள் வளர்ப்பின் கீழ் இக்கிராம மக்களுக்குத் தென்னை, பப்பாளி, தேக்கு, முருங்கைக் கன்றுகள் பயிர்செய்ய இலவசமாக வழங்கப்படும். குறைந்தது 2 மாடுகளுக்கு மேல் வைத்து இருப்பவர்களுக்குச் சாண எரிவாயு வசதி செய்யப்படும். சமூக நலத்துறையின் சார்பில், அனைத்து நலத்திட்ட உதவிகளையும், அதை எப்படிப் பெறவேண்டும் என்று கிராம மக்களுக்கு அறிவித்து உதவிகள் செய்யப்படும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து நலத்திட்டங்களும் இக்கிராம மக்களுக்குச் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

**விளாகம் கிராம மக்களை மேம்படுத்த மேம்பாட்டுத் திட்டங்கள்**

மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மூலம் 40 நபர்களுக்குக் கைத்தறிகள் வழங்கவும், 5 நபர்களுக்கு





• விளாகம் கிராமம் மேம்பாட்டுப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அலுவலர்கள்.

விசைத்தறிகள் வழங்கவும், 33 நபர்களுக்கு வீடு கட்டவும், உதவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 37 நபர்களுக்கு ஆடுகள் வாங்கி வளர்த்து ஆட்டுப்பண்ணை வைக்கவும், 28 நபர்களுக்குப் பால் மாடுகள் வாங்கவும், 2 நபர்களுக்கு மாடுகளுடன் டயர் வண்டி வழங்கவும் 3 நபர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கவும் ஒருவருக்குப் பவர் டிரில்லிங் கொடுக்கவும், 4 நபர்களுக்குப் பம்ப்செட் வைக்கவும், ஒரு நபருக்குத் தச்சுத் தொழில் கருவி களும், 3 நபர்களுக்கு வாத்துகள் வாங்கவும், 3 நபர்களுக்குச் சலவைக் கருவிகள் பெறவும், 2 நபர்கள் காய்கறிக் கடைகள் வைக்கவும், 2 நபர்கள் ஆயில் என்ஜின்கள் வாங்கவும், ஒருவர் டிராக்டர் வாங்கவும், 2 நபர்கள் இட்லி கடை வைக்கவும் உதவிடத் திட்டமிடப்பட்டு, செயலாக்கம் பெற்று வருகிறது.

இக்கிராமத்தில் உள்ளவர்களுக்குச் சொந்தமாக வீடுகள் கட்டக் கடன் தொகையும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகிறது. பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வீட்டிற்கு 10 மரக் கன்றுகள் இலவசமாகக் கொடுத்து வளர்க்கப்பட உள்ளது. மாடுகள் அதிகம் வளர்க்கும் குடும்பத்தினருக்கு 'பையோகாஸ்' அமைக்க மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படவுள்ளது. மண்சாலைகள் அனைத்தும், மெட்டல் சாலைகளாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் வசிக்கும் வில்லியர்கள் எனும் பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படவுள்ளது. இத்தகைய திட்டங்களினால் வறுமைக்கோட்டிற்கும் கீழே இருந்து ஏழ்மையில் உழன்று வாடிக் கொண்டிருக்கும், விளாகம் கிராமத்து மக்களுக்கு ஒரு விடிவுகாலம் காத்து இருக்கிறது.

★ இந்தியாவில், சராசரியாக, தனி நபர் சமையல் எண்ணெய் நுகர்வு ஆண்டொன்றுக்கு 7.14 கிலோவாகும். உலக சராசரி 14.5 கிலோவாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் நிலையான வளர்ச்சி காணப்பட்டாலும், சமையல் எண்ணெய்த் தேவைக்கும் விநியோகத்துக்கும் இடையே பெரிய இடைவெளி காணப்படுகிறது.

1990-91-இல் பற்றாக்குறை ஆறு இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் இது ஏழு இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இடைவெளியைப் போக்க அரசு சமையல் எண்ணெயை இறக்குமதி செய்தது. 1989-90-இல் 6.07 இலட்சம் டன்னும், 1990-91-இல் 1.08 இலட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்பட்டது.

# நம்மை வாழவைக்கும் பூண்டு!



எஸ். அனந்தகுமார்,
தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம்,
புதுக்கோட்டை-622 303.

நமது உணவில் வெள்ளைப் பூண்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. இது உணவில் மணத்திற்காகவும், சில மருத்துவப் பயன்களுக்காகவும் சேர்க்கப்படுகிறது.

முற்காலத்திலிருந்தே நமது முன்னோர்கள் வெள்ளைப்பூண்டின் பெரும்பயனை உணர்ந்து சமையலுக்கும், மருந்துக்கும் பயன்படுத்தி இருக்கிறார்கள். வெள்ளைப்பூண்டின் பிறப்பிடம் ஆசியா. முதலில் சீனாவிலிருந்து, ஸ்பானிஷ்காரர்கள், போச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர்கள் இதைத் தங்கள் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அதன் பின் வெள்ளைப் பூண்டு உலகம் முழுவதும் பரவியது.

பூண்டிலிருந்து 'அல்லிசாடின்' என்ற மருந்தைத் தயாரிக்கிறார்கள். நாட்டு வைத்தியத்தில் பூண்டிலிருந்து மாத்திரைகள், லேகியங்கள், தைலம் ஆகியவை தயாரிக்கப்படுகிறது.

பூண்டில் காரம் இருக்கிறது. ஒரு வித நெடி உள்ளது. நமக்கு ஏற்படும் பலவித நோய்களைக் குணமாக்கும் மருத்துவச் சக்தி பூண்டுக்கு உள்ளது. வெள்ளைப்பூண்டு உடலுக்கு உற்சாகம் தருகிறது. கண் நலம் பேணுகிறது. செரிமான சக்தியைத் தூண்டுகிறது. இருதய பலத்திற்கும், வாத நோயைக் குணப்படுத்தவும் உதவுகிறது. வாயு தொந்தரவு, மலச் சிக்கல், மூல நோய்களுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுவதோடு மட்டுமின்றி, இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறுகளை நீக்குகிறது. வெள்ளைப்பூண்டிற்குப் பாக்டீரியாவை அழிக்கும் சக்தி உள்ளது. டைபாய்டு, காலரா மற்றும் தோல் நோய்களைக் குணமாக்குகிறது. சிறுநீரை அதிகரிக்கிறது. சீதபேதி, உஷ்ண பேதியை நீக்குகிறது.

★ பூண்டைத் தட்டி ரசம் செய்து, சாதத்தோடு சாப்பிட்டால் கபம் குறையும்.

★ பூண்டை வதக்கிப் போட்டு, வற்றல் குழம்பு செய்து சாப்பிட - குளிரால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும்.

★ பூண்டுடன் சிறிது ஓமத்தை நசுக்கிப் போட்டு, கசாயம் வைத்துக் குழந்தைகட்குக் கொடுக்க குழந்தைகளின் வாந்தி, கொட்டாவி குறையும்.

★ வெற்றிலைக் காம்பு, வசம்பு, திப்பிலி, பூண்டு இவைகளைச் சம அளவு எடுத்து வெந்நீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க - குழந்தைகளின் மாந்தம் குறையும், களித் தொல்லையும் குறையும்.

★ பூண்டுச் சாற்றைக் காதில் இரு துளிகள் விட, காதுவலி குணமாகும்.

★ பூண்டுச் சாற்றில், சிறிது உப்பு கலந்து - உடம்பில் எங்கேனும் சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் பூசினால் சுளுக்கு மறையும்.

★ வெறும் பூண்டுச் சாற்றை தடவி, நீவி விட்டாலும் சுளுக்கு மறையும்.

★ காய்ச்சிய பசும்பாலில் இரண்டு, மூன்று பூண்டைப் போட்டு பருக நன்கு தூக்கம் வரும், ரத்தக் கொதிப்பு அடங்கும்.

★ பசும்பாலில், பூண்டை வேக வைத்து அப்பூண்டைச் சாப்பிட்டு பாலைக் குடித்தால் வாய்வுத் தொல்லை குறையும், ஈசினோபிலியா குறையும்.

★ பூண்டுத் தைலத்தை உடலில் தேய்த்து வர சருமத்தில் ஏற்படும் நமைச்சல், அரிப்பு மறையும்.

★ பூண்டு - கபத்தை வெளியேற்றும், மலத்தை இளக்கும்.

★ வெள்ளைப் பூண்டு, வசம்பு, ஊமத்தை வேர் இவைகளைச் சம அளவு எடுத்து, நன்கு அரைத்து, நல்லெண்ணையில் கலந்து, காய்ச்சி, நன்கு சிவந்து வரும்போது இறக்கி விடவும். இந்த எண்ணெய்யை ஆறாத புண்கள், காயத்தின் மேல் பூசினால் ஆறிவிடும்.

★ பூண்டையும், குப்பைமேனி இலையையும் அரைத்துச் சாறு எடுத்து, இச்சாறைக் குழந்தைகட்குக் கொடுக்க, வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியே வந்துவிடும்.

★ பூண்டைப் பொன்னாங்கண்ணிக் கீரையோடு சேர்த்து சாப்பிட மூல நோய் நீங்கும்.

★ பூண்டில், சிறிது எலுமிச்சை சாறுவிட்டு அரைத்து இருவேளை சாப்பிடக் கீல் வாதம் குணமாகும்.

★ பூண்டையும் - துத்தி இலையையும் சேர்த்து, லேசாக நசுக்கி, நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி, எண்ணையை முகப்பருவில் தடவ, முகப் பரு மறையும்.

★ பூண்டு, மிளகு, துத்தி இலை இவைகளை, ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து, இத்தோடு 15 கிராம் வசம்பு சேர்த்து நன்றாக அரைத்துப் பெண்கள் சூதக காலத்தில் சாப்பிட, சூதக வலி வராது.

★ பூண்டு, மிளகு, கரிசலாங் கண்ணிக் கீரை மூன்றையும், அரைத்துக் காலையில் மட்டும் மூன்று நாட்கள் நெல்லிக்காய் அளவு சாப்பிட சோகை நோய் குணமாகும்.

★ அரைக்கீரையோடு, பூண்டு, சீரகம், பச்சை மிளகாய் சேர்த்து, புளி சேர்க்காமல், சமையல் செய்து சாப்பிட வாயுத் தொல்லை நீங்கும்.

★ பூண்டு பல் ஒன்றை சுட்டு சிறிது சர்க்கரை சேர்த்துப் பாலில் இட்டுக் காய்ச்சி குழந்தைகட்குக் கொடுத்து வர கபம் நீங்கும்.

★ பூண்டைப் பச்சையாகச் சாப்பிட வாதநோய் நீங்கும்.

★ ஏதாவது விஷப் பூச்சிகள் கடித்து விட்டால், கடித்த இடத்தில் பூண்டை அரைத்துக் கட்ட விஷமிறங்கும்.

★ பூண்டை நசுக்கி, சாறெடுத்து, சாலை உள் நாக்கில் தடவ, உள் நாக்கு வளர்ச்சி குறையும்.

★ பூண்டு சாறையும், இஞ்சிச் சாறையும் சம அளவு கலந்து காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிட நெஞ்சுக் குத்து நீங்கும்.

★ ஒரு வெள்ளைப்பூண்டு, 7 மிளகு, 9 மிளகாய் இலை இவைகளைச் சேர்த்து அரைத்து காலை, மாலை சாப்பிட்டால் குளிர் காய்ச்சல் போய்விடும்.

★ பூண்டு, வசம்பு, ஓமம் இவைகளைச் சம அளவு எடுத்து - இடித்து மூன்று நாட்கள் சாப்பிட மாந்த ஜன்னி குறையும்.

★ பூண்டைப் பொடி செய்து, தேனில் குழைத்து தலை, புருவத்தில் பூச்சிவெட்டு ஏற்பட்டு, முடி வளராமலிருக்குமிடங்களில் தேய்த்து வர முடி வளரும்.

★ பச்சைப் பூண்டை உண்பதால் உடல் பலம் பெறும், உற்சாகம் ஏற்படும். அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுவலி மறையும், புளிப்பால் உண்டாகும் எரிச்சல் நீங்கும். ரத்த அழுத்தம் குறையும்.

★ பூண்டை, சுண்ணாம்பு நீரில் நனைத்துக் கட்ட நகச்சுற்று குறையும்.

★ பூண்டை நெய்யில் வறுத்து, உணவு உண்ணும்போது, சாதத்தில் சேர்த்து 40 நாட்கள் சாப்பிட - வாய்வுத் தொல்லை மறையும்.

★ பூண்டுச் சாற்றையும், எலுமிச்சம் பழச்சாற்றையும் சேர்த்து, குழைத்துத் தொடை இடுக்குகளில் ஏற்படும் கக்கூஸ் படையில் தடவ, படை மறைந்துவிடும்.

★ வெள்ளைப் பூண்டு-2, வெற்றிலை-2-ம், சேர்த்து அரைத்து தேமல் மேல் தேய்த்துவரத் தேமல் மறைந்துவிடும்.

★ பூண்டை நசுக்கி, நீரில் கரைத்து நல்ல பாம்பு இருக்குமிடங்களில் தெளித்தால் அந்த நெடியில் பாம்பு ஓடிவிடும்.

★ பூண்டு உடல் வலியைப் போக்கும். பூண்டை, வெல்லத்தோடு சேர்த்து கொடுத்தால் உடல் வலி மறையும்.

★ பூண்டுச் சாற்றை டி.பி. நோயாளிகள் பருகி வந்தால், டி.பி. குறையும்.

★ பூண்டையும், சிறிது உப்பையும் சேர்த்துத் தின்றால் - திடீரென ஏற்படும் வயிற்றுவலி, நெஞ்சு எரிச்சல், நெஞ்சுக் கரிப்பு குறையும்.

- நன்றி: 'நில வளம்'

## மூலிகைச் செடி

நாட்பட்ட நோய்கள் பல, நாட்டு வைத்திய முறையின்படி, பச்சிலைகளையும், மூலிகைகளையும் கொண்டு குணமாக்கப்பட்டு வருகின்றன. அந்த மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பல்வேறு மாநிலங்களில் கூடுதலாக 22,206 எக்டேர் நிலப்பரப்பில் மூலிகைச் செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதற்காகச் சுற்றுச் சூழல் - வனத்துறை அமைச்சகம் அந்த மாநிலங்களுக்கு 14.16 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம், பஞ்சாப், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், ஒரிசா, பீகார், அரியானா, ஜம்மு-காஷ்மீர், குஜராத், மத்தியப் பிரதேசம், அருணாசலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா மாநிலங்களில் இத்திட்டம் செயலபடுத்தப்பட்டு, மூலிகைச் செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

## சுகாதாரம்



• கி.பி.2000-வது ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்காக 1983-ஆம் ஆண்டின் தேசிய சுகாதாரக் கொள்கை விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ரூ.100 கோடி செலவில் குழந்தை பிறப்பு மற்றும் பராமரிப்பு சம்மந்தமான மையமொன்றை இந்தியாவில் நிறுவ ஜப்பான் திட்டமிட்டுள்ளது. ரூ.250 கோடி செலவில் 13 மாநிலங்களில் உள்ள 143 மாவட்டங்களில் தொழுநோய் ஒழிப்புத் திட்டமொன்று தொடங்கப் பட்டுள்ளது. இதன் மூலம் கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள் தொழுநோய் ஒழிப்பு இலக்கினை எட்ட வாய்ப்புள்ளது. பார்வை இழப்புக் கட்டுப்பாடு திட்டத்திற்காக உலக வங்கி ரூ.250 கோடியை இந்தியாவிற்கு அளிக்கும். அமெரிக்க நாட்டு உதவியுடன் ரூ.800 கோடி செலவில் புதிய முறையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

# தமிழ்த் தென்றல் திரு.வி.க

புலவர் புனிதவதி நமசிவாயம்



தமிழகத்தில் அரசியல் கருத்துக் களை அழகிய தமிழில் எழுத முடியும், பேசமுடியும் எனத் 'தேச பக்தன்' இதழின் வாயிலாகத் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டியவர் தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்கள். தமிழ்த் தென்றல், இராயப்பேட்டை முனிவர்; தேசபக்தன் முதலியார்; என்றெல்லாம் தமிழர்கள் செல்ல மாக அழைத்தார்கள் இவரை.

இந்தியா அந்நிய ஆதிக்கத்தினின் றும் விடுதலை பெற்ற திங்கள் ஆகஸ்ட் திங்கள். இச்சிறப்பு மிக்க ஆகஸ்ட் 26, 1883-இல் திரு.வி.க. தம் தாய் தந்தையர்க்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். வறுமைச் சூழலில் வாணிபம் செய்யத் திரு வாரூரிலிருந்து சென்னைக்கு அருகே உள்ள துள்ளம் எனும் கிராமத் திற்குக் குடியேறினர், பெற்றோர். அங்கு தான் திரு.வி.க. பிறந்தார். துள்ளத்தில் பிறந்தவராயினும் முன்னோர் பிறந்த ஊரின் பெய ரையே தம் பெயர் முன் இட்டு மகிழ்வார். திருவாளர் திருவாரூர் வி. கல்யாணசுந்தரம் என்றே தம் நூற்களில் குறிப்பர்.

இவரின் தாயின் பெயர் சின்னம்மாள், தந்தையின் பெயர் விருத்தாசலனார். திரு.வி.க.-வின் வளர்ச்சி, வாழ்க்கை பல விதமான சோதனைக்கு இலக்காகியது. முதலில் வறுமைச் சூழலில் நிலவியது. தந்தை யின் தளராத உழைப்பால் வாழ்க்கை நடைபோட்டது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்காகத் திரு.வி.க.-வின் குடும்பம் சென்னை இராயப்பேட்டையை நாடியது. அரிசி மண்டி வைத்து வாழ்ந்தனர். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரி யில் மெட்ரிகுலேஷன் வரை பயின் றார். அப்பள்ளியில் தமிழாசிரிய ராய் விளங்கிய யாழ்ப்பாணம் ந. கதிரைவேற்பிள்ளை தொடர்பு ஏற்பட்டது. கதிரைவேற்பிள்ளை வழக்கு ஒன்றில் சான்று கூறச் சென்றதால் திரு.வி.க.-வின் தேர்வு தடைப்பட்டது.

திரு.வி.க. அவர்கள் ந. கதிரை வேற்பிள்ளை அவர்களிடம் சில தமிழ் நூல்கள் பாடங்கேட்டார், மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், யாழ்ப்பாணம் சுவாமி நாத பண்டிதர், திருக்குறள் சிதம்பர முதலியார், மறைமலையடிகளார் முதலியவர்களிடம் தமிழ் நூல்கள் பயின்றார். மற்றும் இவர் கடலங் குடி நடேச சாஸ்திரியார், பாம்பன் சுவாமிகள், அயோத்தியதாஸ் பண்டிதர், சக்ரவர்த்தி நாயனார், அப்துல் கரீம், ச. சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் தொடர்பால் பல்கலைச் செல்வரானார்.

இவர் ஸ்பென்சர் அண்டு கம் பெனியில் சிறிது காலம் பணி செய் தார். பின்னர் தாம் பயின்ற வெஸ்லி கல்லூரியிலேயே தமிழ் ஆசிரியராய் அமர்ந்தார். சிறந்த ஆசிரியராகப் புகழ் பெற்றார். இவரது அடிமனம், தேசப்பற்று, தேச சேவையில் ஈடுபட்டது. காரணம் பள்ளிப் படிப்பு நின்றதும் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையிலும் திருவல்லிக் கேணி சிவனடியார் திருக்கூட்டத் திலும் சேர்ந்து தொண்டு செய்தார். அதுவல்லாது ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரிடமும் அன்னிபெசன்ட் அம்மையாரிடமும், எஸ். சீனிவாச அய்யங்காரிடமும் நெருங்கிப் பழகிப் பல பொதுத் தொண்டு களில் ஈடுபட்டார்.

பொதுத்தொண்டு, தேசபக்தி காரணமாகத் தமிழ் ஆசிரியர் பதவி யினின்றும் விலகினார். உடன் 'தேசபக்தன்' இதழின் ஆசிரியராய் அமர்ந்தார். இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர் 'நவசக்தி' எனும் இதழினைத் தோற்றுவித்தார். இவ் விதழ்களில் அரசியல் கருத்துக்களைத் தமிழில் நன்கு விளக்க முடியும் என்ற நிலையில் சிறந்த முறையில் நடத்தினார். அதில் அரசியல் அறிவோடு கலைச் செல்வத்தையும் வழங்க முற் பட்டார். சிறப்புமிக்க தலையங் கங்கள் எழுதுவதில் மிக வல்லவர். இவரது தலையங்கத்தை மட்டும் படிப்பதற்கென்றே நவசக்தி இதழி னைத் தவறாது படித்தவர்கள் பலர். நவசக்தி இதழ் சிறப்பாக வெளி வந்ததற்கு மூல காரணம் இவரது சகோதரர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் 'சாது அச்சுக் கூடம்' என்ற சிறந்த அச்சகம் ஒன்றை நடத்தி வந்ததே.

இவர் கமலாம்பிகை எனும் அம்மையாரை 1912-இல் மணந்து ஆறு ஆண்டுகள் குடும்ப வாழ்க்கை நடத்தினார். ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் பிறந்து மறைந்தன. துணைவியாரும் மறைந்தார். மறுமணம் செய்து கொள்ளவில்லை.

என் கடன் பணி செய்து கிடப் பதே என்ற நெறியில் - இவர் பணி இடைவிடாது தமிழ்த் தொண்டு, சமூகத் தொண்டு, அரசியல் தொண்டு தொழிலாளர் தொண்டு, சமயத் தொண்டு எனப் பலவேறு துறை களில் சிறந்து விளங்கியது.

திரு.வி.க. அவர்களின் தேசியம் இறைவழி நிற்கும் அரசியல் வாழ்வு.

> • பசி, வறுமை, சுகாதாரக் குறைவு, எழுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, மூடப்பழக்கங்கள், பரம்பரை வழக்கங்கள் என்ற கனமான சுமைகளை விஞ்ஞானம் ஒன்றுதான் நீக்க முடியும்.
>
> - ஜவகர்லால் நேரு.



மகாத்மாவின் அரசியல் வாழ்வும் ஒத்துழையாமை இயக்கமும் சமய வாழ்வின் அடிப்படையில் மலர்ச்சி பெற்றிருந்தன. ஆகவேதான் திரு.வி.க.-விற்கு மகாத்மாவின் நெறியில் கவர்ச்சி ஏற்பட்டு மகாத் மாவை அடிகளாக்கி 'காந்தி அடி களும் மனித வாழ்க்கையும்' என்னும் நூலை இயற்றினார்.

திரு.வி.க. தொழிலாளர் நலனுக் காகவும் அரும்பாடுபட்டார். காரல் மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை அறம் இவரைக் கவர்ந்தது. முதலாளி- தொழிலாளி வேற்றுமையைக் களைய முற்பட்டார். திரு. வாடியா எனும் அறிஞரின் உதவியால் 1918-இல் இந்தியாவிலேயே முதல் தொழிலாளர் சங்கமாகிய 'சென்னைத் தொழிலாளர் சங்கத்தைத்' தோற்று வித்தார். அதன் வளர்ச்சிக்கு அருந் தொண்டுகள் செய்தார். தொழிலாளர் நற்பணியில் தீவிர மாக உழைத்த திரு.வி.க.-வை ஒரு சமயம் ஆங்கில அரசு நாடு கடத்த வும் திட்டமிட்டது. இதனைச் சர் தியாகராயர் தடுத்து நிறுத்தினார் என்பது நினைவு கூரத்தக்கது.

மகளிர் சமுதாயம் சிறந்து விளங்க இவர் புரிந்த தொண்டுகள் ஒப்பற்றவை. பெண் பிறவியே உயர்ந்தது என்றும் விழுமிய பண்பு டையது எனவும் அடிக்கடி பேசியும் எழுதியும் வந்தார். மகளிர் சமூகநல அமைப்புகளுக்கு ஆதரவு நல்கினார். இல்லற நெறியே சிறந்த நெறி எனப் போற்றினார். போலித் துறவினைச் சாடினார். தீண்டாமை ஒழிப்பிலும் சாதிவேற்றுமை நீக்கத்திலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். இவைகளைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழகம் முழுவதிலும் பரவச் செய்தார்.

தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக இந்தி மொழி நுழைந்தபோது அதனைத் திரு.வி.க. எதிர்த்தார். இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற தந்தை பெரியார் அவர்களின் சிறப் பியல்புகளை 'நவசக்தி' இதழில் தலையங்கமாகத் தீட்டி 'சிறையில் கிழச் சிங்கம்' என்ற தலைப்பிட் டார். அரசு இத்தலையங்கத்துக்குப் பணிந்தது.

இளைஞர்களை ஊக்குவித்து அறவழி கூறி அவர்களை இந்த நாட்டின் தலைவர்களாக விளங்கச் செய்ய இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. இளைஞர் முன் னேற்ற அமைப்புகள் பலவற்றில் ஈடு பட்டிருந்தார்.

திரு.வி.க. அவர்கள் எத்துறை யில் ஈடுபட்டுத் தொண்டு செய்த போதிலும் அன்பு, எளிமை, தூய்மை, பொதுமை ஆகிய நெறிகளே அவரு டைய வாழ்வில் முகிழ்த்தன. இவரு டைய நடை, உடை, பழக்கம் தமிழகம் எங்கும் உள்ள இளைஞர் களையும் தொழிலாளர்களையும் கவர்ந்தன. தூய்மையான இவரது உள்ளத்தை அளந்து கூற இயலாது. இவர் உள்ளத்தின் பொதுமை காலம், இடம், நிறம், சாதி, சமயம், கட்சிக் கருத்து முதலிய பல வேறு பாடுகளைக் கடந்து பலரிடத்தும் அன்பு செலுத்தும் ஆன்மநேயம் ஒருமைப்பாடு உடையது. இயற்கைக் காட்சியில் அதிக ஈடுபாடு. இவர்தம் தமிழ் எழுத்து நடை இவருக்கே உரிய கவிதை நடையாய் விளங்கும். சொற்களில் இனிமை தவழும். மேடைப் பேச்சிலும் கேட்போர் உள்ளத்தைக் கவரச் செய்தார் அரசியல், சமயம், இலக்கியம், சீர்திருத்தம் முதலிய பல துறை களிலும் நூல்கள் செய்துள்ளார். இவரெழுதிய கவிதை நூல்கள் பதி னைந்திற்கும் மேற்பட்டன.

பெரிய புராணத்துக்கும் காரைக் கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரை, திருக்குறள் பாயிரப்

## சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர்களுக்கு நவீன மோட்டார் சைக்கிள்

சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர்களுக்கு நவீன கருவிகள் வாங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, உலக வங்கி மற்றும் தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் சார்பாக சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர்களுக்கு நவீன கருவிகள் வாங்க ரூ.68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன் முதல் கட்டமாக, ரூ.31 இலட்சத்து 86 ஆயிரம் செலவில் நவீன கருவிகள் வழங்கும் விழா அண்மையில் சென்னையில் நடந்தது. இந்த விழாவில் சென்னை நகரப் போக்குவரத்து ஆய்வாளர்கள் மற்றும் துணை ஆய்வாளர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய 35 புதிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நவீன மோட்டார் சைக்கிள்களின் முன் பகுதியில் உயர்ந்த கண்ணாடி பொருத்தப்பட்ட பாதுகாப்பு உறை அமைக்கப்பட்டுள்ளது. முதல்வர் போன்ற முக்கிய பிரமுகர்கள் வருவதைத் தெரிவிக்கும் பொருட்டு முன்பகுதியில் இரண்டு சைரன்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன இவற்றைத் தவிர சுழலும் விளக்குகள், பொது மக்களுக்கு முக்கிய செய்திகளைத் தெரிவிக்கும் பொருட்டு தனியாக 'மைக்' வசதி, ஆவணங்கள் வைக்க வசதியாகத் தனிப்பெட்டி மற்றும் ஒயர்லெஸ் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.



இந்த மோட்டார் சைக்கிள்களை 'என்பீல்டு' நிறுவனம் தயாரித்து வழங்கியுள்ளது. ஒரு மோட்டார் சைக்கிளின் விலை ரூ.35 ஆயிரம் ஆகும்.

பகுதிக்கு விளக்கவுரை இயற்றியுள்ளார் இவர்.

சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து; தமிழ்த் தென்றல், தமிழ்ச் சோலை; முடியா-காதலா சீர்திருத்தமா; இந்தியாவும் விடுதலையும், என்ற நூல்களும்...

முருகன் அல்லது அழகு; மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை; உள்ளொளி; பரம்பொருள் வாழ்க்கை வழி முதலிய அன்னாரின் நூல்களில் மிகச் சிறந்தவை. இப்படிப் பல நூல்கள்.

உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்; முருகன் அருள் வேட்டல், திருமால் அருள்வேட்டல், பொதுமை வேட்டல்; புதுமைவேட்டல்; கிறித்துவின் அருள்வேட்டல்; கிறிஸ்து மொழிக் குறள், இருளில் ஒளி; முதுமை உளறல்; முதலியன இவரது கவிதை நூல்கள்.

தமிழ்மொழி, தமிழர் வாழ்வு நெறிமலர்ந்து செழிக்கப் பல அறிஞர்கள் ஒத்துழைப்போடு 'சென்னைத் தமிழ்ச் சங்கம்' என்ற அமைப்பினைக் கண்டார். அதன் வாயிலாகப் பல்வேறு ஆக்கப் பணிகள் செய்வித்தார். சுமார் 40 ஆண்டுக்காலம் தமிழ்நாடு எங்கனும் சென்று தொண்டாற்றினார். இவரைச் சிலர் பௌத்தர் எனவும் சிலர் சமணர் எனவும், சிலர் கிறிஸ்துவர் எனவும், சிலர் வேதாந்தி எனவும் கூறுவர். ஆனால் இவரது நெறி சமரச சுத்த சன்மார்க்க நெறியின்பாலபட்டது. ஓயாது உழைத்த இவர் தம் வாழ்நாள் முடிவில் இரண்டு ஆண்டுகள் கண் ஒளி மங்கித் துன்பப்பட்டார். மருத்துவம் செய்துகொள்ள மறுத்தார். 17.9.1953-இல் இயற்கை எய்தினார்.



# மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்கள்!



அ.ப.ஜெயபால்

'குடி குடியைக் கெடுக்கும்' என்னும் விளம்பரங்களின் மூலம் மதுவின் தீமைகள் பற்றி அன்றாடம் பிரச்சாரங்கள் செய்து வந்த போதும் மதுவின் ஆதிக்கம் நாட்டில் அதிகமாகிக் கொண்டே வருகின்றது.

மதுவை அருந்துபவர்களின் வாழ்க்கை நிலை எப்படியிருக்கிறது என்று அறிந்திருந்தாலும் அதனால் ஏற்படுகின்ற கடுமையான விளைவுகளைப் பற்றி எவரும் கவலைப் படுவதே இல்லை.

பார்ப்பதற்குத் திடகாத்திரமாக இருப்பார். அவர் தினசரி மதுவை அளவுக்கு மீறி அருந்திவிட்டு மதி மயக்கத்தினால் மற்றவரின் நலனைப் பாதிக்கும்படி நடந்து கொள்வார். ஆனால் பார்ப்பதற்குத் திடகாத்திரமாக இருந்த அவர் திடீர் என்று ஒரு நாள் எதிர்பாராமல் இறந்து விடுகிறார். இவரது இறப்பு இயற்கையாக ஏற்பட்டது அல்ல! மதுவினால் ஏற்பட்டதுதான். மது தினசரி தன் வாழ்நாளின் கணக்கைக் கழித்துக் கொண்டு வருவதைப் புரியாமல் இருந்தமையால்தான் ஏற்பட்டது.

மது அருந்துவதினால் விரைவில் மரணம் நம்மை அணுகுகிறது என்பதை அறிந்திருப்பார்களானால், நிச்சயமாக அவர்கள் மதுவினை நாடி மதி மயங்கமாட்டார்கள். மது அருந்துவதினால் எப்படி மரணம் ஏற்படுகிறது என்பதை இளைஞர் சமுதாயம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆகையால் மதுவினால் மரணம் எப்படி ஏற்படுகிறது என்பதனைப் பார்ப்போம்.

மது அருந்தும்போது அது தொண்டை, உணவுக் குழாய் ஆகியப் பகுதிகளை மூடியிருக்கும் மெல்லிய ஜவ்வில் இறங்கும்போது எரிச்சல் உண்டாகிறது. வயிற்றில் பாதுகாப்பாக அமைந்துள்ள ஜவ்வில் மது எரிச்சலை உண்டாக்கி இரைப்பையிலும், சிறுகுடலின் முன் பகுதியான டியோடினத்திலும் புண்களை உண்டாக்குகிறது. வயிற்றில் பாதுகாப்பாக அமைந்துள்ள ஜவ்வில் மது எரிச்சலை உண்டாக்கி இரைப்பையிலும், சிறுகுடலின் முன் பகுதியான டியோடினத்திலும் புண்களை உண்டாக்குகின்றது. பின் வயிற்றில் உட் சுவர்களில் சிறுகுடல் பகுதியில் தையாமின், போலிக் அமிலம் கொழுப்பு, வைட்டமின் பி-1, பி-12, அமினோ அமிலங்கள் சிலோஸ் ஆகிய பல ஊட்டச்சத்துக்களை உறிஞ்சாதபடி மது தடுத்து விடுகிறது.

வயிறு டியோடினம் பகுதிகளில் அமைந்த மெல்லிய ஜவ்வினால்





# திட்டக்குழு உறுப்பினர் பெற்ற இணையற்ற கௌரவ விருது!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட தமிழக அரசின் திட்டக்குழு உறுப்பினர்களில் புகழ்பெற்ற முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். நடராஜன் ஒருவராவார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதியில் பிறந்து - மதுரையில் படித்து - சென்னையில் மருத்துவத்துறையில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கி ஓய்வு பெற்றுள்ள இவருக்கு அண்மையில், இணையற்ற சிறப்பு விருது ஒன்று கிடைத்திருக்கிறது.

1950-இல், இங்கிலாந்தில் உள்ள லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் படித்து எஃப்.ஆர்.சி.எஸ்., பட்டம் பெற்ற இவரை இவருடைய பொதுச் சேவைக்காக The Royal College of Surgeons of England என்ற அமைப்பானது பாராட்டி, கௌரவ எஃப்.ஆர்.சி.எஸ். பட்டமளித்துச் சிறப்பித்திருக்கிறது!

இந்தியா-ஜப்பான் இராணுவ மருத்துவமனை, சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னைப் பொது மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை ஆகியவைகளிலெல்லாம் - மருத்துவராகவும், பேராசிரியராகவும், முதல்வராகவும் இருந்து 1976-இல் ஓய்வுபெற்றவர் டாக்டர் எம். நடராஜன். இப்போது பல அமைப்புகளில் முடநீக்கியல் துறை ஆலோசகராக இருப்பவர்.

'1991-92-ஆம் ஆண்டுக்கான இந்தக் கவுரவ விருதானது முடநீக்கியல் துறை மருத்துவச் சிறப்பிற்காக எனக்கும் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த இதயநோய் மருத்துவ நிபுணரான டாக்டர் அலய்ன் கார்பென்டியர் என்பவருக்குமாக, எங்கள் இரண்டே இரண்டு பேருக்கு மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த யுனிவர்சிடி தொடங்கி இந்த நூறாண்டுக் காலத்தில், அவ் விருதைப் பெறும் இரண்டாவது இந்தியன் - முதலாவது தமிழ்நாட்டுக்காரன் நான்தான்....'

- என்றெல்லாம் பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் டாக்டர் எம். நடராஜன் 'எனது இத்தகைய பெருமைக்கும் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டு மருத்துவத்துறை பெற்றிருக்கும் வளர்ச்சியும் ஒரு முக்கியக் காரணமாகும்' என்று மனந்திறந்து சொன்னார்.

டென்மார்க், ஒல்ட்டோ, ஜெர்மனி, சிங்கப்பூர், சான்ஃபிரான்சிஸ்கோ, ஜெனீவா, ஆக்ஸ்போர்டு, மணிலா, பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து போன்ற பல இடங்களுக்கும் அழைப்பின்பேரில் பறந்து போய்ப் பல மருத்துவக் கருத்தரங்குகளில் பங்கேற்றுச் சிறப்பித்த புகழும் - சிறந்த தமிழ்ப் புலமையும் பெற்றவர் திட்டக்குழு உறுப்பினரான டாக்டர் எம். நடராஜன். இணையற்ற எஃப்.ஆர்.சி.எஸ். கௌரவ விருது அவருக்குக் கிடைத்ததில் தமிழக மருத்துவத்துறையே பெருமைப்படலாம்தானே!

- பி.எல்.ஆர்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, சிகாகோ கான்சலேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள திரு. கே.ஆர். சின்கா அவர்கள் சந்தித்தார் (11.8.'92).



# தனியார் வனங்களிலுள்ள மரங்களை வெட்டுவதற்குக் கட்டுப்பாடு: மாண்புமிகு முதல்வர் உத்தரவு

வனப்பகுதிகளிலுள்ள தனியார் நிலங்களில் மரங்கள் வெட்டுவதற்குக் கட்டுப்பாடு விதித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வனத்துறை உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, வனத்துறையில் மட்டும் ரூ.17 கோடியே 87 இலட்சம் பெருமானமுள்ள பொருட்கள் பிடிபட்டுள்ளன. வனக் குற்றங்களுக்காக 182 பேர் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். வனத்துறை மேம்பாட்டுக்காக ரூ.1.27 கோடி செலவில் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வனத்துறையினருக்கு நவீன துப்பாக்கிகள் வாங்க ரூ.18 இலட்சமும், வயர்லெஸ் கருவிகள் வாங்க ரூ.67.90 இலட்சமும், வாகனங்கள் வாங்குவதற்காக ரூ.37 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் மரம் வெட்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கு முன்பு வனத்துறைச் செயலாளரிடம் கலந்து பேசிய பிறகே வனத்துறை அதிகாரிகள் அனுமதி வழங்க வேண்டும்.

மலைவாழ் மக்கள் நலனுக்காக அவர்களுக்கு. அதிக விளைச்சல் தரும் புளி, வேப்ப மரக் கன்றுகளை வனத்துறையினர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மரங்கள் 4 ஆண்டுக் காலத்திலேயே பயன்தரத் தொடங்கிவிடும். இந்த ஆண்டு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படும். இந்த மக்கள் வனத்துறை விதிமுறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளப் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்.

1993-ஆம் ஆண்டுக்குள் அனைத்து வனப் பகுதிகளிலும் வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தேக்கு மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை அனுமதி அளிக்கும் எல்லா இடங்களிலும் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும். இதைத் தவிர விறகுக்காகக் கருவேலம் மரம் போன்ற மரங்களை அதிக அளவில் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது.

உட்சுவரால் 95 சதவிகிதம் மது ஈர்க்கப்படுகிறது. இரத்த ஓட்டத்தில் மது கலந்த பின் உடலில் உள்ள எல்லாச் செல்களையும், திசுக்களையும் அடைகிறது. மது இரத்தத்தில் சிவப்பு அணுக்களை குவியலாகச் சேர்த்து இரத்த ஓட்ட வேகத்தைக் குறைத்து திசுக்களுக்குப் பிராண வாயு செல்லாமல் தடுத்து விடுகின்றது. மேலும் கிருமிகளுக்கு எதிராகப் போரிடும் வெள்ளை அணுக்களின் சக்தியைக் குறைக்கிறது. சிவப்பு அணுக்களின் உற்பத்தியைக் குறைத்துச் சோகை நோயையும் உருவாக்குகிறது. மது கணையத்தில் உள்ள செல்களை உறுத்தி வீங்கச் செய்கிறது. இதனால் செரிமான நீர்கள் செல்ல முடியாமல் தடுக்கப்படுகின்றது.

இரசாயனங்கள் சிறுகுடலுக்குள் செல்ல முடியாததால் கணையத்தையே ஜீரணிக்க ஆரம்பித்து மிகக் கடுமையான 'ஹெமெராஜிக்பான் கிரிடிடிஸ்' எனப்படும் நோயை ஏற்படுத்துகிறது. மது குடிப்பவர்களை இந்நோய் தாக்கினால் ஐந்தில் ஒருவர் முதல் தாக்குதலிலேயே மரணமடைகிறார். இந்த நோய் கணையத்தைச் சேதப்படுத்தி இன்சுலின் தட்டுப்பாட்டை உண்டாக்கி நீரிழிவைத் தோற்றுவிக்கும். மது கல்லீரலின் செல்களில் எரிவூட்டி வீங்கச் செய்து சிறுகுடலை நோக்கிச் செல்லும் சிறுகுழாயை அடைகிறது. இதனால் கல்லீரலினால் பித்த நீர் வடிக்கப்படுவது தடைப்பட்டு மஞ்சள் காமாலை நோய் ஏற்படுகின்றது.

கடைசியில் கல்லீரலை ஈரலரிப்பு நோய் தாக்குகின்றது. குடிக்காதவர்களைவிட, குடித்தவர்களின் கல்லீரல் எட்டு மடங்குகடினமாகி விடும். இதயத்தின் தசைகளை வீங்கச் செய்து நச்சுத் தன்மையை ஏற்படுத்துகிறது. கொழுப்பை ஒரே இடத்தில் குவியச் செய்து ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாடுகள் சரியாக நடைபெறாமல் செய்கிறது.

மேலும், மூத்திரப்பையின் உட்சுவரைப் பாதித்துச் சரியாக விரியாமல் செய்து நீர்ப்பிரித்தலின் திரவ விரயம் ஏற்படுத்துகின்றது.

மதுவினால் புரோஸ்டிரேட் சுரப்பிகள் வீங்கி - ஆண்களின் உடலுறவுத் தன்மையை மோசமாகப் பாதிக்கின்றது. மற்றும் மூளையின் முக்கியப் பகுதிகளைப் பார்த்து இணைத்துச் செயல்படாமல் தடுத்து குழப்பம் ஏற்பட்டு தொடர்புகளைத் துண்டித்து மூளையின் செயல்பாட்டை மந்தப்படுத்தி மயக்க நிலையை நீட்டித்து மரணத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் இம்மதுவிற்கு அடிமையாகி மரணமடைவதைத் தவிர்க்க வேண்டும்.

'குடி குடியைக் கெடுக்கும்' என்பதுடன் 'மது மரணத்தைக் கொடுக்கும்' என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

மது அருந்துபவர்கள் மதுவின் தீமைகளை அறிந்து திருந்துவார்களானால், மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்களை தவிர்க்கலாம்.

# காவிரிப் பாசனப் பகுதியில் எண்ணெய்ப் பனை அறிமுக ஆராய்ச்சி!

- சுப. இராமநாதன், பெ. நளாயினி, அ. ஷேக் தாவுத், அ. அப்துல் கரீம்,
ஒருங்கிணைந்த எண்ணெய்ப்பனை ஆராய்ச்சித் திட்டம், ஆடுதுறை.

நமது நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி தற்போதுள்ள தேவையைவிட மிகக் குறைவாக இருப்பதால் பெருமளவில் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. எண்ணெய் உபயோகத்தைப் பொறுத்த மட்டில் நமது நாட்டில் நபர் ஒருவரால் ஆண்டு ஒன்றுக்கு 5 கிலோ எண்ணெய் மட்டுமே உபயோகப் படுத்தப்படுகிறது.

இது, மேலை நாடுகளில் உபயோகிப்பதைவிட சுமார் ஆறில் ஒரு பங்கு மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் இருந்து கிடைக்கின்ற எண்ணெய் அளவை ஒப்பிடுவோமேயானால் சராசரியாக நிலக்கடையில் இருந்து ஏக்கருக்கு 150 கிலோ எண்ணெயும், எள்ளிலிருந்து 36 கிலோ எண்ணெயும் ஆமணக்கு என்கிற கொட்டைமுத்துவிலிருந்து 89 கிலோ எண்ணெயும், சூரிய காந்தியிலிருந்து 162 கிலோ எண்ணெயும் கிடைக்கிறது.

உலகிலேயே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தையும், நிலக்கடலை மற்றும் எள் உற்பத்தியில் முதலிடத்தையும் வகித்தும் தனி மனிதர் ஒவ்வொருவரும் உபயோகிக்கும் எண்ணெயின் அளவு மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணம் தொன்றுதொட்டுப் பழக்கத்தில் இருந்துவரும் மேற்கூறிய எண்ணெய் வித்துப் பயிர்களின் சாகுபடியும் எண்ணைய்ப் பனை போன்ற எண்ணெய்ச் சத்து மிகுந்த பயிர்களின் அறிமுகமின்மையுமே யாகும். தற்போதுள்ள எண்ணெய் வித்துப் பயிர்கள் பெருமளவில் மானாவாரிப் பகுதிகளில் தகுந்த இரசாயன உரமோ நுண்ணுயிரோ இடாமலே பயிரிடப்படுவது மகசூல் குறைவதற்கான மற்றொரு காரணம். எனவே, தமிழ்நாட்டில் எண்ணைய்ப் பனைச் சாகுபடியை அறிமுகப் படுத்தும் நோக்கத்துடன் இப்பயிர்ச் சாகுபடி பற்றிய ஆய்வுகள் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் 1989-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றன.

மூன்றாண்டு எண்ணெய்ப்பனை



மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் மானாவாரிப் பயிராக வளர்ந்து வந்த எண்ணெய்ப் பனையின் சிறப்பு அம்சம், எந்த எண்ணெய் வித்துப் பயிரிலும் இல்லாத அளவு எண்ணெய் உற்பத்தியாகும். எண்ணெய்ப் பனையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கரில் 1,600 கிலோ முதல் 2,400 கிலோ வரை எண்ணெய் பெற முடிகிறது. இந்தியாவில் தற்போது கேரள மாநிலத்தில் 9,000 ஏக்கரிலும் அந்தமான் தீவுகளில் 4,500 ஏக்கரிலும் எண்ணெய்ப் பனை பயிர் செய்யப்பட்டு வருகிறது.



எண்ணெய் எடுப்பதற்கு உகந்த முற்றிய பழங்கள்

## சாகுபடிக் குறிப்புகள்

எண்ணெய்ப் ;,னைக்கு உகந்த வெப்பநிலை 20 டிகிரி செ. முதல் 35 டிகிரி செ. வரை ஆண்டிற்கு 2,000 - 2,500 மி.மீட்டர் மழை பரவலாக உள்ள பகுதிகளில் வளரும் தன்மையானதாக இருந்தாலும், 4 மாதங்கள் வரை வறட்சி நிலவும் பகுதிகளிலும் சூழ்நிலையைத் தாங்கி வளரும் திறன் கொண்டது.கோடையில் பாசன வசதி அவசியம் தேவை. பெரும்பாலும் எல்லா வகையான மண் வளத்திலும வளரக் கூடிய தன்மையுடையது.

பனைக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த எண்ணெய்ப் பனையில் 3 ரகங்கள் உள்ளன. அவை 1. டுரா 2. பிஸிஃபெரா 3. டெனிரா ஆகியவையாகும்.

டெனிரா ரகம் முதல் இரண்டு ரகங்களையும் கலப்பு செய்து பெறப்பட்ட வீரிய ஒட்டு ரகமாகும். எண்ணெய்ப் பனை நடவுக்கு முக்கோண முறையில் கன்றுக்குக் கன்று இடைவெளி 9 மீட்டர் இருத்தல் அவசியம். இவ்வாறு நடவு செய்தால். ஒரு ஏக்கருக்கு 60 கன்றுகள் வரை நடலாம். பருவ காலங்களில் அதாவது மே, ஜூன் மர்தங்களில் நடவு செய்தல் நன்று. நட்ட 3 ஆண்டுகளுக்கு, பகுதிகளுக்கு உகந்த ஊடு பயிர் செய்தால், நடைமுறைச் செலவுகளை ஈடுசெய்ய முடியும்.

எண்ணைய்ப் பனையின் வேர்ப் பாகத்தைச் சுற்றிலும் எப்போதும் களைகள் இல்லாமல் இருத்தல் அவசியம். இதற்குக் களைக்கொல்லிகளை உபயோகப்படுத்தலாம். பெர்னாக்சோன் என்ற களைக்கொல்லியை மட்டும் உபயோகப்படுத்தல் கூடாது.

## உரமிடுதல்

முதல் ஆண்டில், கன்று ஒன்றுக்கு 400 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து, 400 கிராம் சாம்பல் சத்து, இரண்டாவது ஆண்டு 800 கிராம் தழைச்சத்து 400 கிராம் மணிச்சத்து 800 கிராம் சாம்பல்சத்து மூன்றாவது ஆண்டு முதல் 1200 கிராம் தழை, 600 கிராம் மணி, 1200 கிராம் சாம்பல் சத்து இடவேண்டும். மக்னீசியச் சத்துக்குறைவாக உள்ள அறிகுறிகள் தென்படின் மக்னீசிய உப்பு இட வேண்டும். இந்த உர அளவுகளை இரு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதி மே மாதத்திலும் இரண்டாம் பகுதி செப்டம்பர் மாதத்திலும் மரத்திலிருந்து 2 மீட்டர் இடைவெளியில் மரத்தைச் சுற்றி அளித்தல் வேண்டும். தழை உரம் மற்றும் மக்கிய தொழுஉரம் அதிக அளவில் இடுவது மிகச் சிறந்தது.

கோடைக் காலங்களில் மரம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 100 லிட்டர் தண்ணீர் அளிக்கப்பட வேண்டும். கோடையில் நீர்ப் பற்றாக்குறை மகசூலைப் பெரிதும் பாதிக்கும்.

## பின்செய் நேர்த்தி

பாசன நீரைச் சேமிக்கச் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது சிறந்தது. காய்ந்த மற்றும் பூச்சி நோய் தாக்கிய மட்டைகளையும், பாளைகளையும் முதல் மூன்றாண்டுகளுக்கு அகற்ற வேண்டும். மரம் மகசூலுக்கு வரும் போது 40 மட்டைகளை மட்டும் மரத்தில் வைத்துவிட்டு இதர மட்டைகளை அகற்றி விடலாம். அதிக அளவில் மட்டைகளை அகற்றுதலும் மகசூலைப் பாதிக்கும். மரத்தை ஆண்டுக்கு ஒருமுறை சுத்தம் செய்வது கோடைப்பருவத்தில் செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியமான பின்செய் நேர்த்தியாகும்.

## பயிர்ப்பாதுகாப்பு

எண்ணெய்ப்பனையை ஆந்த்ராக் நோஸ் எனப்படும் இலைப்புள்ளி நோய், குருத்து அழுகல் நோய், குலை தவறுதல் ஆகியவை தாக்குகின்றன. இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம்.45 அல்லது கேப்டான் 20 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து அடிக்கலாம். தாமிர வகை பூஞ்சாணக் கொல்லிகளை உபயோகப்படுத்தக் கூடாது. குருத்தழுகல் நோயைக் கட்டுப்படுத்த நோயால் தாக்கப்பட்ட கன்றுகளை அழித்து விட வேண்டும். குலை தவறுதல் நோயின் அறிகுறிகள் குலையின் காய்பிடிக்காமல் இருத்தல், குலை

காய்தல், குலை அழுகல் ஆகியன வாகும். இந்த நோய் 20 சதம் வரை பாதிப்பை உண்டாக்கும். இந்த நோய்க்குக் காரணம் அதிக அளவில் மட்டைகளைக் கழித்தல், நீர்ப் பற்றாக்குறை மற்றும் பராமரிப்புக் குறைவு ஆகியவைகளாகும். நோயைக் கட்டுப்படுத்த சிபாரிசுப் படி மட்டைகளைக் குறைத்தல் ஆண் பூக்களை வெட்டி எறிதல், பாசன வசதி செய்தல் ஆகியன அவசிய மாகும்.

தென்னையைத் தாக்கக்கூடிய காண்டாமிருக வண்டு, சிவப்புக் கூன் வண்டு ஆகியன இம்மரத்தை யும் தாக்குகின்றன. அத்துடன் பழுத்த குலையைப் பறவைகள் அதிகம் தாக்குகின்றன. இதைக் கட்டுப் படுத்த வெடிச்சத்தம் ஏற்படுத்துதல், தோட்டத்தின் வெளிப்புறம் இருக் கும் மரங்களில் இறந்த பறவை களைத் தொங்கவிடுதல் ஆகியன செய்யலாம். தவிர, இத் தோட்டத் தில் எலி, முள்ளம்பன்றி, அணில், குரங்குகள் மற்றும் காட்டு நாய் களின் தாக்குதலும் மிகுந்து காணப் படும்.

## சாதனை

பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப் பில் இந்தியா புதிய சாதனை படைத் துள்ளது. தேயிலை மற்றும் தோட்டப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் 'டைகோஃபோல்' என்ற அதிகத் திறனுள்ள பூச்சிக்கொல்லி மருந்தை இனி இந்தியா சொந்தமாகவே தயாரிக்கும்.

உலகில் அமெரிக்காவும், இஸ் ரேலும் மட்டுமே இதுவரை இம் மருந்தைத் தயாரித்தன. அரசு நிறு வனமான இந்துஸ்தான் இன்செக்டி சைட்ஸ் நிறுவனம் தனது ஆராய்ச்சி களின் மூலம் 'டைகோஃபோல்' தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித் துள்ளது. நமக்கு ஆண்டொன்றுக்கு 20 கோடி டன் அளவுக்கு இம் மருந்து தேவைப்படுகிறது. ஆனால், 2 கோடி டன் மட்டுமே கிடைக் கிறது - அதுவும் இறக்குமதி மூலம். இந்நிலை இனி இல்லை. முயற்சி களுக்கு வானமே எல்லை என்ப தற்கு இதைவிடச் சிறப்பான சாட்சி இல்லை!

- நன்றி: 'தூவானம்'.

### அறுவடை

நட்ட 4 ஆண்டுகளில் முதல் அறுவடை செய்யலாம். அறுவடைக் காலத்தில், தோட்டம் தவறாமல் கண்காணிக்கப்பட வேண்டும். குலையிலிருந்து ஓரிரு பழங்கள் கீழே விழ ஆரம்பிக்கும் தருணம் தான் அறுவடைக்கு ஏற்ற பருவம்.

எண்ணெய்ப்பனை மகசூல் பழுத்த குலை எடையிலேயே கணக்கிடப் படுகிறது. ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு 8 முதல் 10 மெட்ரிக் டன்கள் வரை கிடைக்கும். அதிலிருந்து 20 சத விகிதம் அதாவது 1.6 முதல் 2.0 டன்கள் எண்ணெய் பிழியலாம். சராசரியாக ஒரு குலை எடை 30 கிலோ இருக்கும். 100 கிலோ எடையுள்ள குலைகளும் உண்டு. ஒவ்வொரு குலையிலும் 1,000 முதல் 2,000 பழங்கள் வரை இருக்கும் எண்ணெய்ப்பனையி லிருந்து இரு வகையான எண்ணெய் எடுக்கப்படுகின்றது. ஒன்று நார்ப் பகுதியிலிருந்து கிடைக்கும் எண் ணெய் - இரண்டாவது கொட்டைப் பகுதியினுள் உள்ள பருப்பிலிருந்து கிடைக்கும் எண்ணெய்.

### எண்ணெய் பிழியும் ஆலை

ஒரு மணிக்கு 3 டன்கள் குலை களைப் பிழியக் கூடிய சக்தியுடைய ஆலை அமைக்கக் குறைந்தது 500 ஏக்கரில் எண்ணெய்ப்பனை சாகு படி செய்யவேண்டும். குலைகள் அறுவடை செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அறைத்து எண் ணெய் பிழியப்பட வேண்டும். 100 ஏக்கர் வரை இருக்கும் தோட் டங்களுக்கு மனித சக்தியால் இயக் கக் கூடிய ஆலைகளை அமைத்துக் கொள்ளலாம்.

எனவே, நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் எண்ணெய்ப்பனை பயிரிடுவதால், நமது நாட்டில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவை விரைவில் காணலாம்.



## எண்ணெய்

தமிழ்நாட்டின் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடி கிராமத்தில் அமையவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, ஆண்டொன் றுக்கு 5 இலட்சம் டன் எண் ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண் டதாய் இருக்கும். சென்னை சுத்தி கரிப்பு ஆலை அமைக்கவுள்ள இந் தத் தொழிற்சாலைக்குச் சமீபத்தில் தான் மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இதை நிறுவு வதற்கு ரூ.155 கோடி தேவைப் படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதர வாயுக்களிடமிருந்து சமையல் வாயுவைப் பிரித்தெடுக்கும் வசதி யும், அவற்றை நறுமணப்படுத்தும் வசதிகளும் பனங்குடி ஆலையில் ஏற்படவுள்ளது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 15,000 மில்லியன் டன் சமையல் வாயு, ப்ரோ பேன் 1,600 மில்லியன் டன், திரவ வடிவில் இயற்கை வாயு 6,000 மில்லியன் டன் கிடைக்கும்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1996-97) பெட் ரோலியப் பொருட்களுக்கான நமது வருடாந்திரத் தேவை 79 மில்லியன் டன் அளவை எட்டக்கூடும். இது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 102 மில்லியன் டன் அளவை நெருங்கக்கூடும். தேவை யைக் கூடிய மட்டிலும் உள்நாட்டு உற்பத்தியை வைத்தே சமாளிக்கும் நோக்கோடு அரசு பல திட்டங் களைத் தீட்டி, செயலாற்றி வரு கிறது.



# கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி



**வெ**ள்ளை ஏகாதி பத்தியம் வீழ்த்தப்பட வேண்டு மானால், அவர்கள் இங்கே காலூன்றக் காரணமான வியாபாரத்துறையை முதலில் நாம் கைப்பற்றியாக வேண்டும் என்ற ஓர் ஒப்பற்ற திட்டத்தை முதலில் வகுத்த பெருமை யாளர்தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார். இந்த உயரிய நோக்கத்தோடு தான் 'சுதேசி கப்பல் கம்பெனி' யைத் துவக்கினார் இவர்.

இன்றைய சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் என்ற சிற் றூரில், உலகநாதப்பிள்ளை- பரமாயி அம்மாள் தம்பதியின ருக்குப் பிறந்தவர் தான் வ.உ. சிதம்பரனார். 5.9.1872-இல் பிறந்தவரான இவர், இளமைக் காலக் கல்வியை ஒட்டப்பிடா ரத்தில் முடித்தார். தனது மகன் ஆங்கிலக் கல்வி பெறுவதற் காகவே இவருடைய தந்தை யார் ஒட்டப்பிடாரத்தில் ஓர் ஆங்கிலப்பள்ளி நிறுவினார். அதன் பின்னர் இவருடைய படிப்பு தூத்துக்குடியில் தொடர்ந்தது. சேவியர் உயர் நிலைப் பள்ளியிலும், கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் படித்து வந்த வ.உ.சி. தமிழிலும் ஆங்கிலத் திலும் பெரும்புலமை மிக்க வரானார்.

23-வது வயதில், திருச் செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் மகள் வள்ளியம் மைக்கும் வ.உ.சி.-க்கும் திருமணம் நடந்தேறியது. தம்முடைய சுயசரிதையை மட்டுமல்ல; மாண்புறக் குடும்பம் நடத்திய தனது



முதல் மனைவியைக் குறித்தும் 'வள்ளியம்மை சரித்திரம்' என்ற அரிய கவிதை நூலை ஆக்கிய பெருமையாளர் இவர்.

சிதம்பரனாரின் பாட்டனாரும், பெரிய தந்தையாரும், தந்தையாரும் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிந்தோர் ஆவர். அந்த வேட்கை இவரையும் ஆட்கொண்டது. திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வி பயின்று 1895-ஆம் ஆண்டு வாக்குவல்லமை மிகுந்த வழக்கறிஞர் ஆனார்.

ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞர் தொழில் தொடங்கினார் வ.உ.சி. பரம்பரை பரம்பரையாக வழக்கறிஞர் தொழில் நடத்தும் குடும்பத்தார் ஆகையால், அந்நாளில் அவ்வீடு 'வக்கில் ஐயா வீடு' என்றே ஊர்மக்களால் குறிப்பிடப்பட்டது.

நமது வ.உ. சிதம்பரனார், குற்றவியல் துறையில் நிகரற்ற வழக்கறிராகத் திகழ்ந்தார். ஐந்தாண்டுக்குப் பின் இவருடைய வழக்கறிஞர் தொழில் தூத்துக்குடியிலே தொடரலாயிற்று. நேர்மையின் நிலைக்கலனாக விளங்கிய இவரிடமிருந்த வாதத்திறமையால் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. இதனால் பொருளாதார மேம்பாடு இவருக்கு உண்டாயிற்று.

இந்த நிலையில், 1901-ஆம் ஆண்டில், மனைவி வள்ளியம்மை இயற்கை எய்தினார். பிறகு சில காலத்தின்பின், உற்றார் உறவினர் வலியுறுத்தலின் பேரில் முதல் மனைவியின் குடும்பத்தைச் சேர்ந்த மீனாட்சியம்மையை மணம் முடித்துக்கொண்டார். நான்கு ஆண் மக்கள், நான்கு பெண் மக்கள் இவருக்கு.

தலைசிறந்த பேச்சாற்றல் மட்டுமல்ல; இணையற்ற எழுத்தாற்றலும் இவருக்குண்டு. அதன் காரணமாகவே 'விவேகபானு' என்ற மாத இதழ் வ.உ.சி.-யால் தொடங்கப்பெற்றது.

'தமிழ்நேஷனல்', 'இந்து நேசன்' ஆகிய பத்திரிகைகளும் இவரால் நடத்தப்பட்டன. மெய்யறிவு, மெய்யறம், எனது பாடல் திரட்டு, வ.உ.சி. கண்ட பாரதி சுயசரிதை போன்ற நூல்களையும் எழுதினார். தமிழ்ப் புலமை மிக்கவர் ஆதலால் இன்னிலை, திருக்குறள், சிவஞானபோதம் ஆகியவற்றுக்கு உரை எழுதினார். தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சிவஞானபோதம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.

சமூக சீர்திருத்தக் கொள்கைகளிலே இவருக்கிருந்த நாட்டம் மகத்தானது. 'தீண்டாமை நமக்கு வேண்டாமே' என்று பேசுவதோடு மட்டும் நின்றுவிடாமல் சகஜானந்தா என்ற பிற்பட்ட வகுப்பினரையும், இராமையா தேசிகர் என்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினரையும், தம் வீட்டிலேயே ஆதரித்து அன்பு காட்டி வந்தவர் வ.உ. சிதம்பரனார்.

சைவ சித்தாந்த சபை, மதுரைத் தமிழ்ச் சங்கம், வாலிபர் சங்கம், பிரம்ம சங்கம் போன்ற பல சங்கங்களில் உறுப்பினராக மட்டும் அல்ல; கைத்தொழில் சங்கம், தருமசங்கம் ஆகியற்றைத் தோற்றுவித்த சிறப்பும் சிதம்பரனாருக்கு உண்டு.

விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணானந்தரின் சந்திப்பு, வ.உ.சி.-யின் உள்ளத்தில் சிறிது சிறிதாக சுதந்திரக் கனல் மூட்டியது.

'மேலைக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிட 'சுதேசிக் கப்பல் கம்பெனி 10 இலட்சம் ரூபாய் பங்கு முதலீட்டில் துவங்கப்பட்டது. மதுரை தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் இதற்குத்




## வ.உ.சி. கையெழுத்து

தலைவராகவும், வ.உ.சி. செயலாளராகவும், சி. விஜயராகவாச்சாரியார் சட்ட ஆலோசகராகவும் பொறுப் பேற்றார்கள். வெள்ளையர் வியாபாரம் இதனால் சற்று நொடித்தது.

இந்தக் காரணத்தால், சிதம்பரனாரை எப்படியும் ஒடுக்கியே தீர்வது எனக் கருதிய ஆங்கிலேய அரசினர் பலவகையிலும் தொல்லை கொடுக்கலாயினர்.

திலகரையே தம் குருவாகக் கொண்டு தேசியம் வளர்ப்பதில் தீவிரம் காட்டலானார் வ.உ.சி. மகாகவி பாரதியாரும் சொல்வல்லார் சுப்பிரமணிய சிவாவும் இந்திய விடுதலைப் போரில் இவரோடு தோளோடு தோள் நின்றார்கள்.

1905-இல், திருநெல்வேலியில் இவரால் 'தேசாபிமானிகள் சங்கம்', 'ஜன சங்கம்' ஆகியவை உருவாக்கப்பட்டன.

வேகமும் நுணுக்கமும் மிக்க இவருடைய சொற்பெருக்கு நாடெங்கும் மக்களை எழுச்சிமயமாக்கவே, வெள்ளையராட்சி வெகுண்டெழுந்தது. அப்போதிருந்த திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுதுரை தூண்டுதலால் அரசாங்கமே சிதம்பரனார் மீது பேசியும், எழுதியும் நாட்டின் அமைதியைக் குலைத்தார் என்று வழக்குத் தொடுத்தது.





### கல்வி

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், ஒன்பது முதல் 45 வயதுக்குட்பட்டவர்களில் எத்தனைப் பேர் எழுத்தறிவில்லாமல் உள்ளனர் என்பது குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அதில் 5,06,243 பேர் எழுத்தறிவின்றி உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 1,79,172 பேர் ஆண்கள், 3,27,071 பேர் பெண்கள். இதில் 1,65,196 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பையும், 19,586 பேர் மலைவாழ் வகுப்பையும் சார்ந்தவர்கள். இந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கும் முழு எழுத்தறிவு இயககத்தின் மூலம் இவர்கள் கல்வி பெறுவார்கள்.

#### பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி

தமிழ்நாட்டில் 100 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு நடப்புக் கல்வியாண்டில் (1992-93) 100 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் 12-ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பெண்களுக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும். இந்த வகுப்புகளில் முப்பது மாணவியர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர். இம்மாணவியர் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வுக்காகப் பயிற்சி பெறுவர்.

மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இப்பயிற்சியினைத் தருவார்கள். நிலம் மற்றும் கட்டட வசதிகள் உள்ள அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் மட்டுமே இந்தப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

வழக்கு முடிவில் - வ.உ. சிதம்பரனாருக்கு 40 ஆண்டுக் கால ச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கோயம்புத்தூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட இவர், மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டார். கொடிய வெள்ளையர் அங்கே, வ.உ.சி.யை எண்ணெய்ச் செக்கு இழுக்கச் செய்து பெரும் இன்னலுக்கு ஆளாக்கினார்கள்.

இதற்கிடையில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி' ஆங்கிலேயர் சூழ்ச்சியால் சீர்குலைந்து போன செய்தியும் சிதம்பரனார் நெஞ்சத்தில் வேல் பாய்ச்சுவதாக வந்தது.

இந்திய விடுதலைப் போரில், இன்னுயிரும் துச்சமென முழுமூச்சோடு இறங்கியதன் காரணமாக 35-ஆம் வயதில் அடைக்கப்பட்ட சிங்கத் தமிழர் சிதம்பரனார், 1912- ஆம் ஆண்டு டிசம்பரில் விடுதலை செய்யப்பட்டார்.

சிறைக்குள்ளிருந்த காலத்திலேயே மிகவும் நோய்வாய்ப்பட்டு நலிந்த வ.உ.சி., விடுதலை பெற்று வெளியே வந்தபின் - பழைய வேகத்தோடு சுதந்திரப் போரில் ஈடுபட இயலாத நிலை, வறுமை அரவணைக்க, வழக்கறிஞர் தொழிலும் நடத்த வகையின்றிச் சென்னை வந்து சேர்ந்தார். அரிசி-நெய் வாணிபம் செய்து வாழ்க்கை நடத்த முயன்றார். அதுவும் இயலாத நிலையில் மீண்டும் கோவில்பட்டியிலும் தூத்துக்குடியிலும் வழக்கறிஞர் தொழிலைத் தொடர முயன்று தோற்றார். நலிந்த நிலையிலேயே தூத்துக்குடியில் 18.11.1936- இல் 'தென்னாட்டுத் திலகம்' எனப் போற்றப்பட்ட வ.உ.சிதம்பரனாரின் இன்னுயிர் பிரிந்தது.

அன்னாரின் சுடர்வீசிய சுதந்திர உணர்வுக்குப் பெரும் மதிப்பளிக்கும் வகையில் - தமிழக அரசு 1986 அக்டோபர் 19-ஆம் நாள் ஒட்டப்பிடாரத்தில் வ.உ. சிதம்பரனார் பிறந்த இல்லத்தை அரசுடைமையாக - நினைவு இல்லமாக மாற்றியது. சிதம்பரனார் மாவட்டம் அமைத்துச் சிறப்பும் செய்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

மத்திய அரசு அன்னாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

சென்னைத் துறைமுகத்தின் முன்னால், சிலை உருவாகி நிற்கும் வ.உ.சிதம்பரனார், தன்னலம் கருதாமல் பொது நலமே கருதிப் பாடுபட்ட தியாக சீலராவார்.

[- 'பூவழகி பதிப்பக வெளியீடான 'கட்டபொம்மன் முதல் காந்தியார் வரை' நூலிலிருந்து.]



# விலங்கினங்களின் புற்றுநோய் ஆய்வில் புதிய முன்னேற்றங்கள்

இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் இணைந்து ''விலங்கினங்களின் புற்றுநோய் ஆய்வில் புதிய முன்னேற்றங்கள்'' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை ஆகஸ்டு 6-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தின.

இத்தகைய கருத்தரங்கை முதன்முறையாக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நோய்க்குறியியல் துறை நடத்தியது. இத்துறை, நீண்டகாலமாகப் புற்றுநோய் ஆய்வில் ஈடுபட்டு, கால்நடைப் பணியாளர்கட்கு, புற்றுநோய் அறிதலில் புதிய உத்திகளை அளித்து வருகிறது.

புற்றுநோய், மனிதர்களைப் போலவே, கால்நடைகளையும், பறவைகளையும் கொடூரமாகத் தாக்கவல்லது. கால்நடைகள் மற்றும் பறவைகளில் ஏற்படும் புற்றுநோயால் பெருத்த பொருளாதாரச் சேதம் பண்ணையாளர்கட்கு உண்டாகிறது. மாடுகளில் இரத்தப் புற்றுநோய், 'சைனஸ்' புற்றுநோய் முதலியனவும், பறவைகளில் 'லிம்பாய்ட்' புற்றுநோயும் குறிப்பிடத்தக்கன. புற்றுநோய் ஆய்வுத்துறையில், அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள், இவ்வகைப் புற்றுநோய்களின் இயல்புகள் குறித்து அறிவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

முதன்முதலில் ''புற்றுநோய்த் தடுப்பூசி'' கோழிகளுக்கு ஏற்படும் 'மேரக்ஸ் நோயிற்கு' எதிராகவே தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவைபோன்ற தடுப்புமுறைகளைப் பெற, ஆய்வக விலங்கினங்களில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் ஆய்வுகளே வழிகோலும். மேலும் ஆய்வக விலங்கினங்கள், மனிதப் புற்றுநோய்களுக்குத் தகுந்த மாதிரிகளாக விளங்குகின்றன.

இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கம் 'புற்றுநோய் ஆய்வு' என்ற தலைப்பிட்டு பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தும் பெருமையினை, இந்தியாவின் முதல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளது. இக்கருத்தரங்கில், இந்தியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 150 புற்றுநோய் வல்லுநர்கள் கலந்து கொண்டனர். புற்றுநோய் ஆய்வின் புதிய பரிமாணங்களையும், முன்னேற்றங்களையும் வல்லுநர்கள் தங்களுக்கிடையே பரிமாற்றம் செய்து கொள்ள இக்கருத்தரங்கு வழிவகுத்துள்ளது. இக்கருத்தரங்குகள் மூலம், கால்நடைகளின் புற்றுநோயினால் ஏற்படும் பொருளாதார இழப்பினை ஈடுகட்ட வழிமுறைகளை உருவாக்க இயலும்.

மனிதர்களுக்கு ஏற்படும் புற்றுநோயைக் களைய விலங்கினங்களில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் ஆய்வுகளே வழிகோலும். ஆதலால், இக்கருத்தரங்கு மனிதர்களின் இக்கொடிய நோய்கள் தீர ஏற்ற புதிய அணுகுமுறைகளை முன் வைக்கும் என நம்பப்படுகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர். வி. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கினை, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் தொடங்கி வைத்து விழா மலரை வெளியிட்டார். விழா மலர் முதல் பிரதியை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் திரு. கே.எம். நாராயணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர். பி. ரிச்சர்ட் மாசிலாமணி அவர்களின் திருவுருவப் படத்தினை, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர். எஸ். பி. அன்புமணி அவர்கள் திறந்துவைத்து அவருக்குப் புகழஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கத்தின் தலைவர் டாக்டர். எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக விலங்கியல் சுகாதார கல்வி மைய இயக்குநர் டாக்டர். வேணுகோபாலன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

—ஜே. சந்திரன்





அந்நியச் செலாவணி ஈட்டும்

# ஆமணக்கு

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் வீரத்தின் விளைநிலம்... ஆனால் வேளாண்மைக்கு, வானம் பார்த்த பூமி, நல்ல வளமான செம்மண் நிறைந்துள்ள பூமி, எனவே, இம் மண்ணுக்கேற்ற விளைபொருட்களைத் தேர்வு செய்து, விவசாயம் செய்வதில் இம்மாவட்ட வேளாண்துறை ஆர்வம் காட்டிவருகிறது.

இதன் முதற்படியாக இம்மாவட்டத்தில் எளிதில் சாகுபடி செய்யக் கூடியதும், மானாவாரி நிலத்திற்கு ஏற்றதும், வறட்சியைத் தாங்கக் கூடியதுமான ஒரு பணப்பயிரை, அதிலும் அந்நியச் செலாவணி ஈட்டும் சக்தி பெற்ற பயிரைப் பயிரிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளோம். அந்தப் பயிரின் பெயர்தான் ஆமணக்கு!...

இம் மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலும் இப்பணப்பயிரைப் பயிர் செய்ய வைப்பதன் முக்கியத்துவத்தை விவசாயப் பெருங்குடி மக்களிடையே கருத்தரங்கு, கண்காட்சி, விளக்கக் கூட்டங்கள் நடத்திப்பரப்பி வருகிறது இம் மாவட்டம். இந்த 'ஆமணக்கின்' மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கணக்கிட்டால் நமக்கு ஆச்சரியமே மேலோங்குகிறது. ஆம்... இதோ பாருங்கள் பட்டியலை!...

1. மசகிற்கு
2. மருத்துவத்திற்கு
3. சோப்பு செய்திட
4. கிரீஸ் தயாரிக்க
5. மெட்டல்சோப் செய்ய
6. பிரேக் எண்ணெய்
7. பெயிண்டு தயாரிக்க
8. செயற்கை மரப்பலகை
9. மெழுகு தயாரிக்க
10. அழகுச் சாதன பொருட்கள்
11. ஒட்டுப் பொருட்கள்
12. அச்சு மை தயாரிக்க
13. ஸ்நோ தயாரிக்க
14. நைலான் தயாரிக்க .
15. தொழிற்சாலைக் கரைபொருள்
16. பிளாஸ்டிக் தயாரிக்க
17. லூப்ரிகேசன் ஆயில் தயாரிக்க இது பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் ஆமணக்குப் பயிர் சுமார் 27,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 4,200 மெ.டன் ஆமணக்கு விதை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆமணக்கு விதையில் 50 முதல் 52 சதவிகிதம் வரை எண்ணெய்ச்சத்து உள்ளது. ஆமணக்கு எண்ணெய் அதிகக் குளிரிலும் உறையாது. முக்கியமாக ஆகாய விமானங்களின் இயந்திரங்களுக்கு 'லூப்ரிகேசன்' எண்ணெயாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆமணக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தருகிறது.

### சாகுபடி முறைகள்

ஆமணக்குப் பயிரை இறைவையிலும், மானாவாரியிலும், தனிப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், ஊடு பயிராகவும், வரப்புப் பயிராகவும், பயிரிடலாம். தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆமணக்கு மானாவாரியில் கலப்புப் பயிராக நிலக்கடலை, சிறுதானியங்களுடன் பயிர் செய்யப்படுகிறது. கரும்பு, பருத்தி, மிளகாய் ஆகியவற்றுடன் வ்ரப்புப் பயிராகப் பயிரிடலாம். மானாவாரிப் பயிரை ஜூலை முதல் நவம்பர்-டிசம்பர் மாதங்களிலும், பாசனப் பயிரை டிசம்பர்-ஜனவரி முதல் ஜூன்-ஜூலை மாதங்களிலும் பயிர் செய்யலாம்.

ஆமணக்குப் பயிருக்கு வண்டல் கலந்த செம்மண் பூமி சிறந்தது. களர் அமிலத் தன்மை உள்ள நிலத்தைத் தவிர்க்கவும் வடிகால் வசதி அவசியம் இருக்கவேண்டும்.

### நிலம் தயாரிப்பும், அடியுரமும்

ஆமணக்குப் பயிர் செய்வதற்கு முன்னால் ஓரிரு மழைக்குப்பின் நிலத்தை நன்றாகப் பண்படுத்தி உழவு செய்ய வேண்டும். பின்பு ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட்டு ஒருமுறை உழவு செய்ய வேண்டும். ஆமணக்குப் பயிருக்கு ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 6 கிலோ மணிச்சத்து மற்றும் 6 கிலோ சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்கள் அடியுரமாக இடவேண்டும்.

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை

### விதையும், விதைப்பும்

ஆமணக்கினைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 4 கிலோ விதை தேவைப் படும். கலப்புப் பயிராகப் பயிரிட்டால் ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானது. நீண்டகால இரகங்களான டிஎம்வி.1, டிஎம்வி.2, டிஎம்வி.3 மற்றும் எஸ்.ஏ.1 இரகங்களுக்கு 90.90 செ.மீ. இடைவெளியில் விதைக்கவேண்டும்.

குறுகியகால இரகங்களான எஸ்.ஏ.2, டிஎம்வி.4 மற்றும் டிஎம்வி.5 இரகங்களை 60-45 செ.மீ. இடைவெளியில் தனிப்பயிராக விதைக்க வேண்டும். கலப்புப் பயிருக்கு 30 செ.மீ. முதல் 45 செ.மீ. வரை இடைவெளி தேவை.

### பின்செய் நேர்த்தி

விதைத்த 10-வது நாளில் 20 மணிநேரம் நீரில் ஊறவைத்த விதையைக் கொண்டு இடைவெளியை நிரப்பவேண்டும். விதைத்த 15 அல்லது 20 நாட்களில் செடிகளைக் கலைத்து தேவையான எண்ணிக்கை மட்டும் இருக்கும்படி செய்ய வேண்டும். வரிசைக்கு இடைவெளியில் ஜூனியர்ஹோ கருவியால் களை எடுக்கவேண்டும். செடிகள் நன்கு வளர்ந்து இடைவெளி மூடும் வரை இந்த இடை உழவு அவசியம்: விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் களையும் பின்பு 20 நாட்கள் கழித்து இரண்டாவது களையும் எடுப்பது நல்லது.

### பயிர்ப் பாதுகாப்பு

ஆமணக்கில் முக்கியமாக இலைப்புழு தாக்குதல் விதைத்த 45 முதல் 55 நாட்களில் காணப் படும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மாலத்தியான் 50 சதவிகிதம் இ.சி. 800 மி. அல்லது பென்தியான் 100 சதவிகிதம் இ.சி.400 மி. அல்லது நனையும் செவின் 800 கிராம் இதில் ஏதாவது ஒன்றினைத் தெளிக்க வேண்டும். இம்மருந்தினை 2 அல்லது 3 முறை தெளிக்க வேண்டி இருக்கும்.

பயிர் சிலந்தி தாக்குதல் காணப்பட்டால் நனையும் கந்தகம் ஏக்கருக்கு 600 கிராம் தெளிக்க வேண்டும். மானாவாரியில் இலைப்புழுக்களைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதவிகிதம் அல்லது என்டோசல்பான் 4 சதவிகிதம் தூள் மருந்தினை ஏக்கருக்கு 10 கிலோ தூவவும். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த பூக்கும் தருணத்திலிருந்து இலைப் புழுக்களுக்கு தெளிக்கும் மருந்தையே 20 நாட் களுக்கு ஒருமுறை தெளிக்கவேண்டும்.

### அறுவடை

ஆமணக்கின் குலையில் இரண்டு அல்லது மூன்று காய்கள் காய்த்திருப்பின் அந்தக் குலையை அறுவடை செய்யலாம். ஆமணக்கில் இரண்டு அல்லது மூன்று முறை அறுவடைசெய்ய வேண் டும். முற்றிய குலைகளை அறுவடை செய்து காய வைத்து விதை எடுக்கும் கருவி அல்லது தடியால் அடித்து விதையைப் பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை மூன்று நாட்களுக்கு நன்றாக வெயிலில் காய்வைத்துப் பிறகு சேமிக்கவேண்டும்.

**சாகுபடி செலவினம் தோராயமாக ஏக்கருக்கு**

| | |
|---|---|
| 1. நிலம் தயாரித்தல் | — ரூ.260 |
| 2. விதை 4 கிலோ | ரூ.40 |
| 3. விதை நேர்த்தி மருந்து | — ரூ.2 |
| 4. விதைக்க ஆகும்செலவு | — ரூ.200 |
| 5. உரம் தொழுஉரம் 10 வண்டி | — ரூ.250 |
| தழைச்சத்து 12 கிலோ– 26 கிலோ யூரியா | — ரூ.83 |
| மணிச்சத்து 6 கிலோ 38 கிலோ சூப்பர் | — ரூ.48 |
| சாம்பல் சத்து 6 கிலோ 10 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ் | — ரூ.17 |
| 6. களை எடுத்தல் | — ரூ.120 |
| 7. பயிர்ப் பாதுகாப்பு | — ரூ.300 |
| 8. அறுவடை மற்றும் இதர செலவினம் | — ரூ.150 |
| மொத்தம் | ரூ.1,470 |

**வரவினம்:**

**மகசூல் (தனிப்பயிரானால்)**

ஏக்கருக்கு — 300 கிலோ முதல் 400 கிலோ (350 கிலோ)

| | |
|---|---|
| வரவு—கிலோ 10 ரூபாய் வீதம் | ரூ.3,500 |
| செலவு | — ரூ.1,470 |
| ஏக்கருக்கு நிகர லாபம் | — ரூ.2,030 |

**ஊடுபயிர் மற்றும் வரப்புப்பயிர்ச் சாகுபடி செய்வதால் வருமானம்:**

**செலவு:**

| | |
|---|---|
| ஏக்கருக்கு விதை 2 கிலோ | — ரூ.20 |
| விதைப்பு செய்ய செலவு | — ரூ.20 |
| அறுவடை மற்றும் சுத்திசெய்யும் செலவு | — ரூ.60 |
| மொத்தம் | ரூ.100 |

**வரவு:**

| | |
|---|---|
| மகசூல் ஏக்கருக்கு 100 கிலோ சராசரி கிலோ ரூ.10 வீதம் | ரூ.1000 |
| செலவு | — ரூ.100 |
| ஏக்கருக்கு நிகர லாபம் | ரூ.900 |

நம் நாட்டில் இல்லாத வளம் இல்லை. இருக்கின்ற செல்வத்தில் எதை எப்படிப் பயன்படுத்தினால், அது நாட்டுக்கும், நமக்கும் நல்லது என்று ஆய்ந்து அதன்படி செயலாற்றிப் பணி புரிந்தால் நாம் வளர்வோம்! நாடும் வளம்பெறும்!



கல்வி என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல; வாழ்க்கையின் முதன்மையை முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான்





# தொழிலாளர் நலம் பெறட்டும்!

இல. பழனியப்பன்

உழைப்பின் பெருமையினை உள்ளபடி சொல்வதென்றால்
உண்மைக்கு மறுபெயரே உழைப்பென்பார் சான்றோர்கள்
சலிப்பில்லா உழைப்பாலே சாதனைகள் கைகூடும்!
சன்மார்க்க நெறியினிலே வேதனைகள் மறைந்தோடும்!

இன்றைக்குத் தொழிலாளர் இருக்கின்ற நிலைமையினை
இதமாகப் படம்பிடித்து நாமிங்கே கண்டிடுவோம்!
என்றைக்கும் 'குடி'யோடு இன்ப'மது' காணுவதால்
எத்தனையோ குடியிங்கு அடியோடு சாய்ந்ததன்றோ!

எத்தனையோ திட்டங்கள் இந்நாட்டில் வந்தபின்னும்
இல்லாமைகோலோச்சக் காரணமேன் தோழர்களே!
முத்தான உழைப்பதனை மூலதனம் ஆக்கிவிட்டால்
இத்தரையில் பொற்காலம் இனிதே மலர்ந்துவிடும்!

உற்பத்தி வளர்ந்தோங்க உழைப்பே உயிர்நாடி!
உலகின் நலன்காட்டும் ஒழுங்கான கண்ணாடி!
கற்பித்த கல்வியுடன் கவினுழைப்பும் சேர்ந்துவிட்டால்
கட்டாயம் இந்நாட்டில் கவலைகள் பறந்தோடும்!

தொழிலாளர் நலம்பெற்றால் சமுதாயம் மேன்மையுறும்!
தொடராக மக்களுக்குப் பெரும்நன்மை கூடிவரும்!
எழிலான வாழ்க்கைநிதம் ஏற்றமுடன் தேடிவரும்!
ஏற்றத் தாழ்வுகளும் எங்கோ போய்மறையும்!

நிர்வாகம் தொழிலாளர் நேர்மையுடன் இணைந்திட்டால்
நிச்சயமாய்த் தொழிலுறவு நீங்காது நிலைத்திருக்கும்
புதுவேகம் இந்நாட்டில் பூரிப்பாய் வந்துவிடும்!
புத்துணர்வு நம்மனதில் பூத்துக் குலுங்கிநிற்கும்!

கடமையும் உரிமையும் கண்களாய்க் கொண்டவரே
கனிவான தொழிலாளர் என்றிடுவார் நண்பர்களே!
உடைமை கருதாமல் ஓரணியில் இணைந்திருப்பின்
உலகத்தில் தொழிலாளர் உயர்ந்திடுதல் நிச்சயமே!







## வாழவைத்த தெய்வங்களே வாழ்க!

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்த "வாழ வைத்த தெய்வங்களே வாழ்க" என்ற மதுவிலக்குப் பிரச்சார ஒலி நாடா வெளியீட்டு விழா 25.8.92 அன்று சென்னை தேனாம்பேட்டை காமராசர் நினைவு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் "வாழ வைத்த தெய்வங்களே வாழ்க" என்ற மதுவிலக்குப் பிரச்சார ஒலி, நாடாவினையும் "திராவிட சக்தி" என்னும் நாட்டிய நிகழ்ச்சியின் "ஒலி நாடா" வினையும் வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்.

இந்நாடாக்களின் முதல் பிரதிகளை சட்டப்பேரவைத் தலைவர் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தயாரித்த "வாழவைத்த தெய்வங்களே வாழ்க" - ஒளி நாடா அரங்கத்தில் ஒளி பரப்பப்பட்டது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எழுதி, திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்கள் தயாரித்தளித்த "திராவிட சக்தி" என்னும் நாட்டிய நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மாணவ மாணவியர்கள் பங்கு கொண்ட இந்த நாட்டிய நிகழ்ச்சி அனைவரது கண்ணையும் கருத்தையும் வெகுவாகக் கவர்ந்தது.

அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், செய்தியாளர்களும், ஏராளமான பொதுமக்களும் வருகைதந்து சிறப்பித்த இந்நிகழ்ச்சியின் இறுதியில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் அவர்கள் நன்றி நவின்றார்.

—விழாத் தொகுப்பு:
என். இளங்கோ

**முதல் அட்டை:**

**இந்தியாவின் 46-ஆம் விடுதலை நாள் விழாவினையொட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலுள்ள கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றி வைத்துச் சிறப்புரையாற்றினார் (15.8.'92).**

**நான்காம் அட்டை:**

**இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேதகு டாக்டர் சங்கர்தயாள் சர்மா அவர்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் புதுடெல்லியில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார் (17.8.'92).**



# பரிபூரண மதுவிலக்குக் கொள்கை

## மாண்புமிகு முதல்வர் உரை

இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மனித சமுதாயத்தில் மிகக் கொடுமையான கேடு எனக் கருதப்படும் மது அரக்கனை, வேரோடு வீழ்த்திடும் முயற்சி, பன்னெடுங்காலமாகவே பண்பாளர்கள் பலராலும் தொடரப்பட்டு வருகிறது. "இது ஓர் சமுதாயக் கொடுமை; இதனை விரட்டுவது என்பது, வெள்ளையர்களை விரட்டுவதைவிட வேகமாக நடக்க வேண்டியது", என அண்ணல் காந்தியடிகள் விரும்பினார். மதுப்பழக்கம் அறவே அற்ற நாடென்ற பேற்றினை, இந்திய நாடு முழுமையாகப் பெற வேண்டும் எனக் கனவு கண்டார். அதுவே அவரது லட்சிய ராமராஜ்யம் என்ற நோக்கத்தோடு, இடையறாத மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

"உண்ணற்க கள்ளை....." எனக் கறாராகக் 'கள்ளுண்ணாமை' அதிகாரம் தந்த வள்ளுவர் பிறந்த மண், நம் தமிழ் மண் என்கிற காரணத்தால், மற்றெந்த மாநிலங்களை எல்லாம் விட, நம் தாயகமாம் தமிழகத்தில், 'மதுவிலக்கு' பரிபூரணமாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. மது போதையோடு தள்ளாடுபவன், மனிதனாகக் கருதப்படவே கூடாதவன் என்னும் அளவுக்கு, மதுப்பழக்கம் வெறுக்கப்பட்டு வந்தது.

எனவே தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணத்தில், மதுவிலக்குக் காரணமாக அரசுக்கு ஏற்பட்டு வந்த நிதி இழப்பைச் சுட்டிக்காட்டியபோது, "எத்தனைக் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அதன் காரணமாக மதுவிலக்கைக் கைவிட மாட்டேன்" எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அண்ணாவின் வழித்தோன்றலும் அவரது இதயக்கனியுமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், அந்த நெறியிலிருந்து மாறுபாடின்றி, கடுமை காட்டி வந்தார். அவருடைய அரசியல் வாரிசென, உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, உங்கள் சகோதரியான நானும், அந்நன்னெறி வழியினின்று, துளியும் பிறழா நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறேன்.

மது மயக்கம் என்பது இம்மியும் இல்லா, பரிபூரண மதுவிலக்கு மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிடும் இலக்கினைக் கொண்டே, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். பரிபூரண மதுவிலக்குக் கொள்கையில், அழுத்தமான பிடிப்பினைக் கொண்டிருந்த, இத்தனை தலைவர்கள் தோன்றி, இக் கொள்கைக்கெனக் குரல் கொடுத்து வந்தும் கூட, இன்றைக்கு மதுவினை முழுமையாக ஒழிக்க முடியாமைக்கு, அடிப்படைக் காரணம் என்னவென்பதைத் பலரும் அறிந்திருக்கிறீர்கள்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்ட வரை, மதுவென்பது என்னவென்றே அறியாதிருந்த ஒரு தலைமுறைக்கு மதுவை அறிமுகப்படுத்தி - சாராயம், கள், பிராந்தி, விஸ்கி - என என்னென்ன தீமைகள் இருந்ததோ, அத்தனை போதைப் பொருள்களையும் தங்கு தடையின்றி விற்பனை செய்து, இத் தலைமுறையினையே கெடுத்து நாசமாக்கிய பெருமை, அண்ணாவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த கருணாநிதியையே சாரும். அவரால் புகுத்தப்பட்டு, கெடுத்து நாசமாக்கப்பட்ட, ஓர் சமுதாய அமைப்பைச் சீர்திருத்த, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, எவ்வளவு சிரமமாய் இருந்தது என்பதையும் அனைவரும் அறிவீர்கள்.

மதுவிலக்குச் சட்டங்களை மிகக் கடுமையாக்கிய அவரே, அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை எதிர்நோக்கினார். எனவே, சிறிது காலம், தற்காலிகமாய் மதுவிலக்கைத் தளர்த்தி, பின்னர், படிப்படியாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், முதலில் கள், சாராயக் கடைகளை அடியோடு மூடினார்.

ஆனால் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதைபோல், புரட்சித் தலைவருக்குப் பின்னர், ஒரு தலைமுறையையே கெடுத்த கருணாநிதி, மீண்டும் ஆட்சிக்கு வந்த காரணத்தால், தன் பழைய பாணியை விட, கொஞ்சம் கூடுதலாகவே மது அரக்கனை ஆரத் தழுவத் தொடங்கினார். முன் எப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில், மலிவு விலை மதுக் கடைகளை காண நேரிட்டது.



# மாம்பழத்தின் கதை

உலகில் பயிரிடப்படும் ஆறு மிக முக்கியப் பழவகைகளில் மாம்பழமும் ஒன்று. இந்தியாவுக்கே சொந்தமான இந்த மாம்பழம் சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாக நமது நாட்டில் பயிரிடப்பட்டு வருகிறது.

தற்சமயம் நமது நாட்டில் புயிரிடப் படும் பழவகைகளில் 42 சதவிகிதப் பரப்பில் மாம்பழமே பயிர் செய்யப் படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 9.5 மெட்ரிக் டன் மாம்பழங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப் படுகின்றன. இது நமது நாட்டில் உற்பத்தியாகும் மொத்த பழவகைகளில் சுமார் 40 சதவிகிதம் ஆகும். இனிய சுவையும், உயர்ந்த நறுமணமும் கொண்ட மாம்பழத்தில் வைட்டமின் ஏ மற்றும் சி அடங்கியிருப்பதால் இது அனைவராலும் விரும்பி உண்ணக்கூடிய ஒரு பழமாகும்.

### மாம்பழ உற்பத்தியில் இந்தியா

உலகில் சுமார் 63 நாடுகளில் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டாலும், உலகிலேயே இந்தியாவில்தான் மிக அதிக அளவில் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது, உலகில் தயாராகும் மாம்பழங்களில் 60 சதவிகிதத்துக்கு மேல் நமது நாட்டில் தான் உற்பத்தி செய்யப் படுகின்றன. இந்தியாவிற்கு அடுத்த படியாக மெக்சிகோ, பாகிஸ்தான், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகள் மாம்பழங்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

### மாம்பழ வகைகள்

பழவகைகளிலேயே மாம்பழம் ஒன்றுதான் பலவகைகளில் (Varieties) உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 41 இனங்களில் சுமார் 360 வகை மாம்பழங்கள் விளைகின்றன. இவற்றில் சுமார் 20 வகை பழங்களே வணிக ரீதியில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நமது நாட்டில் விளையும் மாம்பழ வகைகளில் மிக முக்கியமானவை நீலம், அல்போன்சோ, பேகம் பள்ளி, லங்ரா, தேசரி, பாதாமி போன்றவைகளாகும்.

இந்தியாவில் மாம்பழப் பருவம் பொதுவாக மார்ச் மாதம் தொடங்கி ஜூலை மாதம் முடிவடையும். இவற்றில் தென்னகத்தில் விளையும் அல்போன்சோ, மதராஸி போன்ற ரகங்களே முதலில் அங்காடிகளுக்கு விற்பனைக்கு வருகின்றன. இந்த ரகங்கள் பிப்ரவரி மாதம் நடுவிலேயே விற்பனைக்குத் தயாராகி விடுகின்றன. உத்தரப்பிரதேச மாநிலத்தில் விளையும், தேசரி, லாங்ரா போன்ற ரகங்கள் ஏப்ரல் மாதம் இறுதியில் விற்பனைக்குத் தயாராகி ஜூலை மாதம் இறுதி வரை கிடைக்கும்.

### மாம்பழ ஏற்றுமதி

உலகில் உற்பத்தியாகும் மாம்பழங்களில் சுமார் 60 சதவிகிதம் இந்தியாவில் விளைந்தாலும் உலக அளவில் நமது மாம்பழ ஏற்றுமதி 10 சதவிகிதத்துக்கும் குறைவே ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள மாம்பழங்கள் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன.

தொன்றுதொட்டு மேற்காசிய நாடுகளே நமது நாட்டிலிருந்து அதிக அளவில் மாம்பழங்களை இறக்குமதி செய்கின்றன. இதிலும் குறிப்பாக ஐக்கிய அரசு குடியரசிற்கே பெருமளவில் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துடன் பிரிட்டன், கனடா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் சிறிய அளவில் மாம்பழங்கள் நமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சில கடுமையான விதிமுறைகளின் காரணமாக, உலகின் மிகப் பெரிய விற்பனை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு நமது நாட்டிலிருந்து மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. மாம்பழங்களைப் பக்குவப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் நமது நாட்டில் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

இந்தியாவிலிருந்து தற்சமயம் சுமார் 1000 மெட்ரிக் டன் அளவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மாம்பழம் ஏற்றுமதியாகின்றது. ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன் தான் அதிக அளவில் நம்மிடமிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்கிறது. இதைத் தொடர்ந்து பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் நமது மாம்பழங்களுக்கு முக்கிய வியாபாரத் தலங்களாகும். தற்சமயம் இந்தியா மார்ச், ஏப்ரல் ஆகிய இரு மாதங்களில் சுமார் 1000 மெட்ரிக் டன் அளவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மாம்பழங்களை ஏற்றுமதி செய்கிறது.

### மாம்பழ உற்பத்தி

நமது நாட்டில் ஆண்டுக்கு 9 முதல் 10 மெட்ரிக் டன் வரை மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தியாவில் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றில் உத்திரப் பிரதேசம் 34.27 சதவிகிதமும், ஆந்திரப் பிரதேசம் 19.09 சதவிகிதமும், பீகார் மாநிலம் 13.44 சதவிகிதமும், ஒரிஸ்ஸா மாநிலம் 8.22 சதவிகிதமும் உற்பத்தி செய்கின்றன.

**- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.**





மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள்- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (24.8.92).



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, மாண்புமிகு மொரிசியஸ் நாட்டுக் கல்வி மற்றும் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் சந்தித்தார் (24.8.92).

சென்ற பொதுத் தேர்தலின் போது, தமிழகம் எங்கும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, ஆங்காங்கு தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையோடும், என்னிடம் முறையிட்ட முதல் கோரிக்கையே, ''அம்மா; இந்தப் பாவிகள் திறந்த சாராயக் கடைகளை நீங்கள் தான் மூட வேண்டும்'' என்ற கோரிக்கை ஆகும். எனவே தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த உடன், நான் போட்ட முதல் கையெழுத்தே, கருணாநிதியின் மலிவு விலை மதுக்கடைகளை மூடும் கையெழுத்துதான் என்பதைத் தமிழகமே அறியும்.

மலிவு விலை மதுக்கடைகளை மூடியவுடன் எல்லோரும் நினைத்தது, கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடும் என்பதாகும். ஆனால் அதனைத் தடுக்கவும் ஓர் வழி கண்டுபிடித்து, மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்ட அதே வேளையில், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் - விற்போர் - கடத்துவோர் அனைவரையும் கண்காணித்துத் தடுக்கும் பொறுப்பு, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுடையதாகும் - மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து, தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டதையும் அறிவீர்கள்.

இத்தனை நடவடிக்கைகளுக்குப் பின்னரும் கூட, பூரண மதுவிலக்கு என்ற நம் இலக்கை எய்த முடியவில்லையே என்ற ஏக்கம், எனக்கு இல்லாமல் இல்லை. என் ஒரே கையெழுத்தால், கருணாநிதி புகுத்திய மலிவு விலை மதுக்கடைகளைத் துரத்த முடிந்தது. ஆனால் கருணாநிதியால் கெடுக்கப்பட்ட, மது என்பதையே என்னவென்று அறியாதிருந்த ஓர் இளம் தலைமுறையினையே திருத்தி, மதுப்பழக்கத்தில் இருந்து விடுபடச் செய்வது என்பது, ஒரு கையெழுத்தால், அல்லது ஓர் அரசாங்கச் சட்டத்தால், முடியாதென்றே கருதுகிறேன். சட்டத்தால் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டாலும், அதன் பாதிப்பு, ஏழை எளியோர் மற்றும் அப்பாவி மக்கள் மீது, மிக அதிகமாய் இருந்திடும் என்றும் கருதுகிறேன். எனவே, இன்றைக்கு மலிவு விலை மதுக்கடைகளை மூடிய கையோடு, மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுவிட்ட ஓர் சமுதாயத்தையே திருத்தி, அதிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

என் தலைமையில் அமைக்கப்பட்டு - பல்வேறு சான்றோர்கள், கல்விமான்கள், சமூக சேவகர்கள், கலை உலகத்தினர் ஆகியோர் இடம் பெற்றுள்ள மதுவிலக்குப் பிரச்சார உயர் மட்டக்குழு,

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம், தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் சார்பில் ரூ.25 இலட்சம்-மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களால் நேரு விளையாட்டரங்கச் சீரமைப்புக்கான நிதியாக வழங்கப் பட்டது (21.8.92).**



ஏற்கெனவே பல முடிவுகள் மேற்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அரசின் மூலம் 'வெளிச்சம்' என்னும் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 'நீங்க நல்லா இருக்கனும்' என்னும் திரைப்படமும், மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கெனத் தயாராகி வருவதையும், அது தமிழக மக்களின் கவனத்தை விரைவில் கவர்ந்து, ஓர் நல்வழிப் பாதையில் அவர்களை நடத்திச் செல்ல உள்ளது என்பதையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவின் கொடுமைகளை, தீமைகளை, மக்களுக்கு எடுத்து விளக்கி, மது என்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பது மட்டுமல்லாமல், ஓர் சமுதாயத்தையே நாசப்படுத்தும் அளவுக்கு, வீட்டுக்கு வீடு தீங்கு விளைவிப்பதாகும் என்ற கருத்தை, மக்கள் மனதில் வேறூன்றச் செய்யும் முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வழியில் சிறந்த சிந்தனையாளரும், சீர்திருத்த நோக்கம் கொண்டவருமான, கல்வி அமைச்சர் டாக்டர் அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்துள்ள, 'வாழ வைத்த தெய்வங்களே, வாழ்க' என்னும் இப்பிரச்சார கேசட், இப்போது வெளியிடப்பட்டது.

இத்தகைய பிரச்சாரங்கள் மூலம், மதுப்பழக்கத்திற்கு ஆளானோர் மனதில், ஓர் மாற்றத்தை உருவாக்க முடியும்; மதுவை அடியோடு கண்ணுக்குத் தெரியாத தூரம் வரை, துரத்த முடியும் என்ற நம்பிக்கையோடு, இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்கள் நம்பிக்கை ஈடேறும்; இதில் வெற்றி காண்போம் என்ற உறுதி எங்களுக்கு உண்டு. 'மது அரக்கனை வீழ்த்தி - பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினோம்', என்ற திக்கு நோக்கி, விரைந்து செல்லும் நம் பயணத்தில், ஓர் மைல் கல்லாக அமையும் இக்கேசட்டை, மெத்த மன ஆறுதலுடன் வெளியிடுகிறேன்.

இந்தச் சிறப்புக் கேசட்டை வெளிக்கொணர்ந்துள்ள கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கு இடையே, எப்படி இந்த மதுவிலக்குப் பிரச்சாரக் கேசட்டை எழுதி தயாரித்தார், என்பதை எண்ணிப் பார்த்து வியக்கின்றேன். மதுரை வெற்றி மாநாட்டிற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் என்னைச் சந்தித்தபொழுது, தான் உருவாக்கும் 'திராவிட சக்தி' என்ற நாட்டிய நாடகதை, மாநாட்டில் அரங்கேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நானும் முடிந்தால் அரங்கேற்றலாம் என்று சொன்னேன். இந்த நாட்டிய நாடகத்தை, எப்படியும் மாநாட்டில் சிறப்பாக அரங்கேற்ற வேண்டும், என்ற ஒரே குறிக்கோளுடன், இரவு பகல் என்று பாராது, தான் விமானத்தில் பயணம் செய்யும் பொழுதும், இடைவிடாது எழுதி முடித்து, சிறப்பாக அதனைத் தயாரித்து, மதுரை மாநாட்டிலேயே அவர் அரங்கேற்றினார்.

பத்தே நாட்களில் இந்த நாட்டிய நாடகம்

**இராமநாதபுரம் மாவட்டத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, எழுத்தறிவு இல்லாத 10 முதல் 45 வயதிற்குட்பட்ட சுமார் 2.50 இலட்சம் பேர் பயன்பெறுவார்கள். இதற்காக மாவட்ட அறிவொளி இயக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.20 இலட்சம் முன்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

தயாரிக்கப்பட்டது. இந்த வேகத்திற்கு ஈடு கொடுப்பது போல, மிகக்குறுகிய கால அவகாசத்தில், சிறப்பாக இசை அமைத்துக் கொடுத்த, திரு எல். வைத்தியநாதன் அவர்களையும், நடனம் அமைத்துக் கொடுத்த திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்களையும், எவ்வளவு பாராட்டினாலும் தகும். அது மட்டுமல்ல, இதிலுள்ள மற்றொரு சிறப்பிற்குரிய அம்சம் என்னவென்றால், இந்த நாட்டிய நாடகத்தில் பங்கு பெற்ற அத்தனை நடனமணிகளும், கல்வி பயின்றுவரும் மாணவிகள் ஆகும்.

இந்த இளம் மாணவிகள், மிகுந்த ஈடுபாட்டுடன், இரவு பகல் என்று பாராது, பயிற்சி பெற்று, ஒரு சில நாட்களில் இந்த நாட்டிய நாடகத்தைச் சிறப்புற, வெற்றிகரமாக நடத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய கலை ஆர்வத்திற்கும், நினைவாற்றலுக்கும், நம் இயக்கத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கும் பிடிப்பிற்கும், மதிப்பிற்கும், அவர்களுடைய இந்தக் கடும் உழைப்பே சிறந்த எடுத்துக்காட்டாகும். எனவே, தங்களது குடும்ப நிகழ்ச்சி போல் எண்ணி, இவ்வளவு ஆர்வத்துடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், மனமுவந்த பாராட்டுக்களையும் வழங்குவதோடு, அவர்களது எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டும் என்பதற்கான என் வாழ்த்துக்களையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சர் அன்பு அண்ணன் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் ஒரு அமைச்சர் மட்டுமல்ல; ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல; அவர் ஒரு தலை சிறந்த கலைஞர்; புலமை மிக்க கவிஞரும் கூட. இதனை நாம் இப்போது கண்டு களித்த 'திராவிட சக்தி' நாட்டிய நாடகத்திலிருந்து, உணர்ந்து கொள்ள முடியும். தம்முடைய திறமையையும், அறிவையும், நாட்டு மக்களின் நலனுக்காகவும், நமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டுள்ள அவரை, நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அவரது இச்சீரிய முயற்சிகளுக்கு என் சார்பாகவும், கழக உடன் பிறப்புகள் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எல்லா வளமும் பெற வேண்டும்; இது போன்ற அவரது முயற்சிகள் மேலும் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வ்ணக்கம்.

**(25.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேசட் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.)**

# ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



**வட** ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து மனுக் கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 570 நபர்களைத் தேர்ந்தெடுத்து 24.8.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வேலூரிலிருந்து அரசு செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நிதி உதவித் திட்டத்தின்கீழ், 77 பெண்களுக்குரூபாய் 3 இலட்சத்து 85ஆயிரம் நிதி உதவியும், கலப்புத் திருமண நிதியுதவி 14 பெண்களுக்கும், 29 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 7 விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமண நிதி உதவியும், இருவருக்கு அனாதைத் திருமண நிதி உதவியும், 10 பேர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், 11 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்குச் சவரப் பெட்டிகளும், 20 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், 10 நபர்களுக்குக் காதொலிக் கருவிகளும் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 20 நபர்களுக்கு ரூபாய் 45 இலட்சம் மூலதன மானியமாகவும், தாட்கோ தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், 12 பேர்களுக்கு ரூபாய் 15 இலட்சம் கடன் உதவியும், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 12[illegible] பெண்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ [illegible]9.48 இலட்சமும், ஒருங்கிணைந்த ஊரக வ[illegible]ர்ச்சித் திட்டத்தின்கீழ், 28 நபர்களுக்கு ரூ.1.7 இ[illegible]ட்சம் கடனுதவியும், டிரைசம் பயிற்சி பெற்ற 26 நபர்களுக்குக் கடனுதவியும்,சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ் 35 பேர்களுக்கு ரூ.2.96 இலட்சம் கடனுதவியும் வழங்கப்பட்டது.

கள்ளச்சாராயம் காய்ச்சி பின்னர் மனம் திருந்திய 7 பேர்களுக்கு மறுவாழ்வுக் கடனுதவியும், கூட்டுறவு வங்கி மூலமாகச் சிறுதொழில் தொடங்க 12 நபர்களுக்கு ரூ.7.55 இலட்சம் கடனுதவியும், மாநில நிலவள வங்கி மூல்மாக 4 பேர்களுக்கு ரூ.6 இலட்சம் கடனுதவியும், 10 நபர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளும், 15 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், நலிந்தோர் நல உதவி 10 நபர்களுக்கும், விபத்து நிவாரண நிதி 9 பேர்களுக்கும் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் கர்நாடகத் தமிழர் நிவாரண நிதியாக, 6 நபர்களுக்கு ரூ.1.4 இலட்சமும், இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஒருவருக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டது.

மொத்தம் 570 நபர்களுக்கு ரூ.1,22,48,200 (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து இருநூறு மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 386 நபர்கள் பெண்களாவர்.

இதுதவிர, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 11 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூபாய் 1 இலட்சத்து 92 ஆயிரத்து 500 நிதி உதவியும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

ஆக மொத்தம் ரூபாய் 1,24,40,700 (ஒரு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து நாற்பது ஆயிரத்து எழுநூறு) மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்று குழந்தைகளுக்கு, ராமச்சந்திரன், கண்ணம்மா, ராஜலட்சுமி என்று பெயர் சூட்டினார்.



### கொடைக்கானலில் காட்டுத் தீயைத் தவிர்க்க

# ரூ.32 இலட்சத்தில் திட்டம்

**கொ**டைக்கானல் வனப் பகுதியில் ஆண்டுதோறும் காட்டுத் தீயினால் நூற்றுக் கணக்கான எக்டேர் காடுகள் எரிந்து நாசமாகின்றன இதனைத் தவிர்க்க 31.80 இலட்சம் ரூபாயில் நவீன காட்டுத் தீ தடுப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் 40 சதவிகிதப் பகுதியை உள்ளடக்கியது தான் கொடைக்கானல் வனக் கோட்டமாகும். இக்கோட்டத்தின் பரப்பு 40 ஆயிரத்து 740 எக்டேர். இதில் சீகைத் தோட்டங்கள் 7 ஆயிரத்து 691 எக்டேரிலும், கற்பூரத் தோட்டங்கள் 5 ஆயிரத்து 998 எக்டேரிலும், தைல மரத் தோட்டங்கள் 2 ஆயிரத்து 626 எக்டேரிலும், பைன் மரத் தோட்டங்கள் 2 ஆயிரத்து 626 எக்டேரிலும், ஆல் நேப்பாள பைஸ் தோட்டங்கள் 50 எக்டேரிலும், இலவமரத் தோட்டங்கள் 153 எக்டேரிலும், தேக்கு மரத் தோட்டங்கள் 112 எக்டேரிலும் சோலா மரத் தோட்டங்கள் 181 எக்டேரிலும், வேறு பல்வகைத் தோட்டங்கள் 300 எக்டேரிலுமாக மொத்தம் 19 ஆயிரத்து 366 எக்டேரில் உள்ளன.

இவைதவிர 3 ஆயிரத்து 168 எக்டேரில் புல்வெளிகளும், இயற்கைக் காடுகள் 12 ஆயிரத்து 408 எக்டேரிலும், சோலை வனம் ஆயிரத்து 442 எக்டேரிலும், கற்பாறைகள் மற்றும் பாறை சார்ந்த நிலங்கள் 4 ஆயிரத்து 384 எக்டேரிலும், 21 ஆயிரத்து 404 எக்டேர் பரப்பளவு உள்ளது.

தொழில் நிறுவனங்களுக்காகக் கூழ் மரக் கட்டைகளும், சீகை மரப் பட்டைகள் 86 ஆயிரத்து 500 டன் இந்த ஆண்டு வழங்கப்பட உள்ளது. டேன் இந்தியா, சௌத் இந்தியா விஸ்கோஸ், சேஷசாயி பேப்பர் போர்டு, தமிழ்நாடு செய்தித் தாள் நிறுவனம் ஆகியவற்றிற்கு விற்கப் படுகிறது.

டன் 2 ஆயிரத்து 500 ரூபாய் விலையில் 10 ஆயிரத்து 200 டன் சீகைப் பட்டைகளும், சீகை மரக் கட்டைகள் டன் ஆயிரத்து 50 ரூபாய் விலையில் 49 ஆயிரத்து 300 டன்னும், கற்பூர மரக் கட்டைகள் டன் 769 ரூபாய் விலையில் 17 ஆயிரம் டன்னும், பைன்மரக் கட்டைகள் டன் 840 ரூபாய் விலையில் 10 ஆயிரம் டன்னும் சுமார் 10 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 500 எக்டேரில் சீகை மரத் தோட்டங்களும் மர உற்பத்தியும், 350 எக்டேரில் தைல மரத் தோட்டங்களும், பைன் மரத் தோட்டங்களும், கற்பூர மரத் தோட்டங்களும் வனத் துறையால் உற்பத்தி செய்யப்படுகின்றன. சோலை மற்றும் புல்வெளிப் பகுதிகளின் முக்கியத்துவத்தைக் கருதி புதிய பகுதியோ, புல்வெளிப்

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்





மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 538 மனுதாரர்களுக்குப் பல் வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (21.8.92).

பகுதியோ தோட்டங்கள் எழுப்பப் படுவதில்லை. புல்வெளிப் பகுதிகள் குறைந்தால் வன விலங்குகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவது டன் வனச் சூழலும் கெட்டுவிடும்.

கொடைக்கானல் மலைப் பகுதி யில் ஒவ்வொரு ஆண்டும் காட்டுத் தீ ஏற்படுகின்றது. இதனால் நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகள் அழிந்து விடுகின்றன. மரங்கள் எரிவதுடன் அபூர்வ வன விலங்குகளும் அழிந்து விடுகின்றன. கொடைக்கானல் மலைப் பகுதியில் புல்வெளிகள் அதிகமாக உள்ளதும் நெருப்புப் பரவக் காரணமாகிறது. மழை பெய் யாமல் வறட்சி ஏற்படும் காலங் களில் இந்தக் காட்டுத் தீ அதிக அளவில் ஏற்படுகிறது.

இம்மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் கவனமின்றி வீசி எறியும் சிகரெட் துண்டுகள் தீப்பிடிப்பதற்கு முக்கியக் காரணமாகும். கால்நடை மேய்ப்பவர்கள் தங்கள் கால்நடை களுக்குப் புதிதாகத் துளிர்ந்த பசுமைத் தீவனம் வேண்டுமென்பதற் காகக் காடுகளில் உள்ள காய்ந்து போன புல்பூண்டுகளில் தீ வைத்து விடுகின்றனர். காடுகளுக்கு அருகில் உள்ள தோட்டங்களைச் சேர்ந்த வர்கள் தங்கள் தோட்டத்துச் தேவை யற்ற கழிவுகளை எரிப்பதற்காக வைக்கும் நெருப்பும் காடுகளுக்குப் பரவிவிடுகிறது. காடுகளைப் பயிர் செய்யும் நிலங்களாக மாற்ற ஆக்கிர மிப்பாளர்கள் தீ வைத்து விடுகின் றனர். கடந்த கோடையின் போது இப்படி காடுகளுக்குத் தீ வைத்ததாக 45 பேரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காட்டுத் தீ ஏற்படாமல் தடுப்ப தற்காக ஒவ்வொரு ஆண்டும் தீத் தடுப்புக் கோடுகள் தேவையான இடங்களில் செதுக்கப்படுகின்றன தீத்தடுப்புக் காவலாளிகள் நியமிக் கப்படுகின்றனர். இவையல்லாது, சிறப்புத் தடுப்புக் குழுக்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன இருந்தபோதும் காட்டுத் தீ ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை. இதற்காக ரூ.31.80 இலட்சத்தில் நவீன காட்டுத் தீ தடுப்புத் திட்டம் தயார் செய்யப் பட்டு, 91 நவம்பரில் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

கெங்குவார்ப்பட்டி, பேரிஜம், வந்தரேவு, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் காடுகளில் தீப்பிடித் தால் உடனுக்குடன் கொடைக் கானல் அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்க வயல்லெஸ் கருவியுடன் வசதி செய்யப்படும். நவீன வாக னங்கள், தீயணைப்புக் கருவிகள் வசதியுடன் தயாராக இருக்கும் 30 பேர் கொண்ட குழு உடனடியாகத் தீப்பிடித்த இடத்திற்குச் சென்று, தீ மேலும் பரவிவிடாமல் தடுத்து அணைக்கும்.

கொடைக்கானல் மலைப் பகுதி யில் மூன்றரைச் சதவிகிதப் பரப் பில் மட்டுமே சோலை வனங்களும் 30.4 சதவிகிதப் பரப்பில் மட்டுமே இயற்கை வனங்களும் உள்ளன. சோலை வனங்களைப் பாதுகாப்ப தற்காக முள்கம்பி வேலிகளும், செயின் லிங் வேலிகளும் அமைக்கப் பட்டுள்ளன. இதை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் 20 எக்டேரில் சோலை வனம் வளர்க்கப்பட்டு வரு கிறது. இந்த ஆண்டு இது 30 எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகில் 3 இடங்களில்தான் சோலைவனங்கள் உள்ளன. அதில் ஒன்று கொடைக்கானல் மலைப் பகுதி என்பதால், அதைப் பாது காப்பதில தீவிர கவனம் செலுத்தப் படுகிறது. இந்தச் சோலைவனப் பகுதி அதிகரிப்பதால் வன விலங்கு களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

ஏழை மற்றும் விதவைப் பெண்கள் 200 பேருக்குக் குறைந்த விலையில் மூஞ்சிக்கல், ஏரி ஆகிய இடங்களில் வனத் துறை மூலம் விறகு விற்பனை செய்யப்படுகிறது. காட்டுக்குள் சென்று விறகு வெட்டு வதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் பாம்பார்புரத் தில் வனத்துறை மூலம் கால்நடைப் பராமரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. வனப் பகுதிக்குள் செல்லும் கால்நடைகளுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. இந்தக் கால்நடைகள் மூலம் வன விலங்கு களுக்கு நோய் ஏற்படுவது தவிர்க்கப் படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்ட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.






2 9 செப் 1992

விழாக் காலங்களில் விண்மீன் போல்
பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

DIPR/1642/MS/92




## இந்த இதழில்...


தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில்,
மாண்புமிகு முதல்வர் உரை ... 2

தந்தை பெரியார்
வாழ்க்கைக் குறிப்புகள் ... 6

குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா ... 9

பேரறிஞர் அண்ணா
வாழ்க்கைக் குறிப்புகள் ... 13

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 17

தருமபுரி மாவட்டத்தில் பழங்காலக்
கிராமிய நடனங்கள் ... 19

அரிய சிற்பம் கண்டுபிடிப்பு ... 21

தருமபுரி மாவட்டத்தில் அரசுத்
திட்டப் பணிகள் விளக்க முகாம் ... 24

விவசாயத்திற்குப் பயன்படும்
இயந்திரங்கள் ... 27

சென்னை தூய இருதய மகளிர்
மேல்நிலைப் பள்ளி ஆண்டு
விளையாட்டு விழாவில்
மாண்புமிகு முதல்வர் உரை ... 33

ஆசிரியர் தினவிழா ... 35

முன்னாள் மேயர் என். சிவராஜ் ... 37

வாழ்த்துவோம்! வணங்குவோம்! ... 41

டாக்டர் இராதாகிருஷ்ணன் ... 43

கண்ணைக் கவரும்
வண்ணப் பொம்மைகள் ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆவணித் திங்கள் - 31

மலர்:23 இதழ்:6

16-9-1992

பொருட்களை வழங்குவது மறுக்கப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட காட்கில் திட்டப்படி தேசிய சராசரிக்குக் கீழ் தனிநபர் வருமானம் பெறும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை •அடிப் படையாகக் கொள்ள வேண்டும். நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதி ஒதுக்கீடு செய்யும்பொழுதும் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையைக் கட்டுபடுத்துவதில் சாதனைகள் புரிந்த மாநிலங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக 8-வது திட்ட மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பநலத்திற்கான செயற்குழு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை, மாறாக சமுதாய பங்கேற்பினையே அது வலியுறுத்துகிறது. நாம் எதிர் பார்க்கும் பலன்களை அடைய தனிநபர் பங்கேற்பு மிகவும் முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்திற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகைகள் தவறாகப் பயன்படுத்தப்பட வில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், ஊக்கப் பரிசுகளுக்காகத் திட்டங்களை வகுத்துச் செயல்படலாம். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கே ஊக்கப் பரிசும், விருதும் போய்ச் சேரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும். சமூகம் முழுமைக்கும் பயன்படும் வகையில் இந்த ஊக்கப் பரிசு அமைய வேண்டும்.

குடும்ப நலத்திட்டத்தில் குறிப்பிட்ட இலக்கை எட்டும் மாநிலங்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தில் சமூகத்தின் அனைத்துத் தரப்புத் தலைவர்களையும் ஈடுபடுத்த வேண்டியது அவசியம் ஆகும். குடும்ப நலத் திட்டத்துக்கு ஆதரவாக மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதற்காகக் கட்டாயக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்" என்று சொல்ல வில்லை.

ஒவ்வொரு தனி மனிதனையும் சந்தித்துச் சிறிய குடும்பத்தின் தன்மைகளை எடுத்துக்கூறி அதனால் வீட்டுக்கும், நாட்டுக்கும் என்ன பயன் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காக வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும்.

முழு எழுத்தறிவு இயக்கத்தின் வெற்றியை நாம் முன் உதாரணமாகக் கொள்ள வேண்டும். முழு எழுத்தறிவு இயக்கத்தில் சமுதாயம் மொத்தமும், ஈடுபடுத்தப்படுவதைப்போல, அரசு மற்றும் தனியார் துறையில் உள்ள நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நாடு முழுவதும் குடும்ப நலத்திட்டத்துக்கான இயக்கம் தொடங்கப்பட வேண்டும். அதில் தனி நபர்களும் சமுதாய மொத்தமும் ஈடுபடுத்தப்பட வேண்டும். இதுபோன்ற இயக்கம்தான் மக்கள் பெருக்க ஆபத்தை வெற்றிகரமாகச் சமாளிக்க உதவும்.





## அறிஞர் அண்ணா ஒரு மகத்தான சக்தி!

**"அண்ணா"**

**இந்தப் பெயர் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்கிறது.**

**இரும்புத் திரை போட்டு மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த அந்தச் சக்தி, மறைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக உருவாகியிருக்கிறது.**

**இந்திய அரசியலில் ஜனநாயகத்தை முழு அளவில் நம்பியிருந்த, வளர்க்க விரும்பிய உண்மையான ஜனநாயக அரசியல் அறிஞர், அண்ணா அவர்களே.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

இது தொடர்பாக நான் தமிழ்நாட்டில் முழு நல்வாழ்வுக்கான செயல் திட்டத்தின் வெற்றிக் கதையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 6 மாதங்களில் 10 ஆயிரம் நல வாழ்வு முகாம்களை ஒவ்வொரு வாரமும் கிராம அளவில் நடத்தினோம். அப்போது டெட்டனஸ் தடுப்பு ஊசி போடுவது, முத்தடுப்பு ஊசி போடுவது, வைட்டமின் மாத்திரைகள் வழங்குவது போன்ற சேவைகள் இந்த முகாம் மூலம் வழங்கப்பட்டன. இந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களிடம் சிறு குடும்பங்களின் அவசியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

இந்த முகாம்களில் கலந்து கொள்வதற்கு மக்களிடையே பெரும் ஆர்வம் காணப்பட்டது. இந்த முகாம்களின் மூலம் சமுதாயத்துக்கு மிகுந்த பயன் கிடைத்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின் கீழ், மாவட்ட நிர்வாகம் குடும்பநலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கலாம்.

5 ஆயிரம் பேருக்கு ஒரு சமூகச் சேவகர் அல்லது செவிலியர் உள்ளனர்.

பலநோக்க சமூகச் சேவகர் பெரும் பங்காற்ற வேண்டி இருக்கும். சமூகச் சேவகர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

சமூகச் சேவகர்கள் மக்களின் சாதாரண நோய்களுக்கு மருந்துகளை இலவசமாக வழங்கப் போதுமான நிதியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும். இதன் பலனாகக் குடும்ப நலத் திட்டத்தில் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்தலாம்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் ஒரு முழுமையான குடும்ப நலத் திட்டமாக (Total Family Welfare Programme) விளங்க வேண்டும். அது பல்வேறு உடல் நல அம்சங்களைப் பற்றிய கல்வியைப் போதிக்க வேண்டும். நல்ல பொருளாதார வளர்ச்சிக்கும் குடும்ப நலத்திற்கும் உள்ள தொடர்பினை அனைத்து மக்களும் அறியும் வகையில் அரசு நிறுவனங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டு வசதியான வாழ்க்கை வாழ வழி வகுக்கும்படி இந்தக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே, அனைத்து மட்டங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கப் பரிசுகள் அளிக்கப்பட வேண்டும்.

மாவட்ட அளவில் எல்லா அரசுத்துறை நிறுவனங்களையும் சம்பந்தப்படுத்தி மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதன் தலைவராக மாவட்ட ஆட்சித்தலைவர் இருக்க வேண்டும்.

குடும்ப நலத்திட்டம் பற்றித் தேசிய அளவில் அனைத்து மட்டத் தலைவர்களையும் ஈடுபடுத்தி விவாதம் நடத்தப்பட வேண்டும். அதில் மக்கள் நல்வாழ்வு அலுவலர்கள் தங்களுடைய பணியைச் சிறப்பாக ஆற்றிடப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

என் ஆலோசனைகள் மீது இந்த துணைக்குழு தக்க பரிசீலனை நடத்தும் என்று நான் நம்புகிறேன்.

**—புதுடெல்லியில் 27.8.92 அன்று நடைபெற்ற, மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரை.**

## 'அறிஞர்' பட்டம் பெற்ற வரலாறு:

**1945-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்துக்கு அண்ணா சென்றிருந்தார். அக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் திரு. செய்குத்தம்பிப் பாவலரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசும்போது கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றிற்கு அண்ணா புது விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் பொருத்தமுடையதாகவே இருந்தது. அதைக் கேட்டுப் புலவர் செய்குத்தம்பி பாவலர் மிகவும் வியப்படைந்தார்.**

**கூட்டம் முடிந்ததும் அண்ணாவும், செய்குத் தம்பிப்பாவலரும் கம்பராமாயணத்தைப் பற்றிக் கலந்து பேசினார்கள். அப்போது செய்குத்தம்பிப் பாவலர், அண்ணாவின் கூரிய அறிவையும், சொற்போர் புரியும் ஆற்றலையும் அறிந்து வியந்தார். அண்ணா அவர்களுக்கு 'அறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கி மிகழ்ந்தார். அதன்பிறகு அண்ணாவை எல்லாரும் 'அறிஞர் அண்ணா' என்று அழைக்கலாயினர்.**

**பிற்காலத்திலோ அண்ணாவின் பேரறிவைக் கண்டு வியந்தவர்கள் அவருக்கு 'பேரறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கினார்கள். 'அறிஞர் அண்ணா' அவர்கள் 'பேரறிஞர் அண்ணா' என்று அழைக்கப்பட்டார்.**



## பெரியார் புரட்சி மொழிகள்

**★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.**

**★ பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.**

**★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.**

**★ விதியை நம்பி மதியை இழக்காதே.**

**★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.**

**★ மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.**

**★ பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.**

**★ பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால், எல்லாம் பாழ்.**

**★ தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய' வேண்டும்.**



# தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்தவேண்டும்:

## புதுடெல்லியில் நடைபெற்ற மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை

மக்கள் தொகை மற்றும் குடும்ப நலம் பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் துணைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக முதல் அமைச்சரை இந்தத் துணைக் குழுவுக்கு நியமித்து இருப்பதை, குடும்ப நலத் திட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்தி வரும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுக் கொள்கைகளுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

நமது எல்லா வளர்ச்சித் திட்டங்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்தான் மையமாக அமைய வேண்டும். கட்டுப்பாடு இல்லாத மக்கள் தொகைப் பெருக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, திருப்திகரமான பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித்தர நமது பொருளாதாரம் இடம் தரவில்லை. இப்போதுள்ள மக்கள் தொகை மட்டும் அல்ல, எதிர்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி மதிப்பீடு நமது பொருளாதார வளத்திற்குப் பெரும் சுமையாகவே இருக்கும். உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மூலம் அடையும் பொருளாதார வளர்ச்சியின் சிறு பலன்களைக் கூட ஆண்டு தோறும் பெருகிக் கொண்டே போகும் மக்கள் தொகை வளர்ச்சி மூலம் நாம் இழக்க நேரிடுகிறது.

கடந்த 1976-ஆம் ஆண்டில் மத்திய அரசு தனது மக்கள் தொகைக் கொள்கையைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியதன் கட்டாயத்தையும் அது வலியுறுத்தியது.

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,000 பேருக்கு 35 ஆக இருந்த குழந்தை பிறப்பு விகிதத்தை 6-வது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் (1980-இல்) 25 ஆகக் குறைத்திடவும் மத்திய அரசு கொள்கை அளவில் திட்டம் வகுத்து இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட குழந்தைப் பிறப்பு விகிதம் 1990-இல் 1,000 பேருக்கு 29.1 ஆகவே இருந்துள்ளது.

எட்டாவது திட்டக்கால இறுதியில், அதாவது 1997-ஆம் ஆண்டில், பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 26.7 ஆக இருக்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கு கூட





### நான் சாதாரண ஆள்தான் என்றாலும்...

நான் சாதாரண ஆள்தான் என்றாலும், உலகம் சுற்றியவன்; பூரண பகுத்தறிவுவாதி; சொத்து சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லாதவன்; சொந்தத்திற்கும் பணம் சேர்க்க வேண்டிய தேவையில்லாதவன்; சாதி உணர்ச்சி, சாதிப்பற்று இல்லாதவன்; என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டுமென்பவன்; 70 ஆண்டு உலக அனுபவம், 30 ஆண்டு வியாபார அனுபவம்.

- தந்தை பெரியார்.

நமக்கெல்லாம் பெரிய சவாலாகவே இருக்கிறது.

நமது மக்கள் தொகைக் . கொள்கை, நம் குறிக்கோள்களை வெளிப்படுத்துவதாகவே மட்டுமே இருக்கக் கூடாது என்றே நான் கருதுகிறேன். இந்த இயக்கம் தேசிய கிராம அளவில் அனைத்துத் துறைகளில் உள்ளவரையும் சாதி மத பேதமற்று அனைத்து மக்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

பெருகி வரும் மக்கள் பெருக்கத்தால் நிலைமை மோசமாகத்தான் உள்ளது என்றாலும் நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். மக்கள் தொகைத் திட்டங்களை நாம் வெற்றிகரமாக அமல் நடத்தி வருவதே இதற்குக் காரணம்.

சில மாநிலங்கள் இதில் குறிப்படத்தகுந்த சாதனைகளை நிகழ்த்தி உள்ளன.

கேரளாவில் பிறப்பு விகிதத்தை 1990-இல் 1,000 பேருக்கு 19 ஆகவும் தமிழ்நாட்டில் 22.4 ஆகவும், ஆந்திராவில் 25.6 ஆகவும் குறைத்து இருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பக் கட்டுப்பாட்டில் உள்ள பிரச்சினைகளைக் கருதும்போது இரு ஒரு சாதனையே ஆகும்.

உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 30 பேராக உள்ளது. இதில் உத்திரப்பிரதேசம் 1,000 பேருக்கு 35.7 பேர் என முதலிடத்தை வகிக்கிறது.

இதை நன்கு உணர்ந்த மைய அரசு 1,000 பேருக்கு 40 பேர் பிறப்பு விகிதம் உள்ள 90 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு பிறப்பு விகிதத்தைக் குறைக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

எது எப்படி இருந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த திட்டம் அமல் நடத்தப்படவேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இதுதான் இப்போதைய நமது தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் தகவல்கள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உறுதியான திட்டமும், செயல் அளவிலான நடவடிக்கைகளும் தேவை. தேசிய மக்கள் தொகைக் கொள்கையை இதற்காகப் புதுப்பிக்க வேண்டும்.

தேசிய அளவில் இது குறித்து அனைத்துத் தரப்பினரும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

எங்கள் சொந்த மாநிலத்தில் இந்தப் பணி குறித்து ஆய்வு நடத்தினோம். தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தில் கடந்த 1990-இல் மிகக் குறைந்த அளவு பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 15.7 ஆக இருந்தது. கோவை மாவட்டத்தில் 17 ஆகவும், தர்மபுரி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பிறப்பு விகிதம் அதிக அளவிலான 1,000 பேருக்கு 23.6 ஆகவும் இருந்தது. தேசிய அளவைக் காட்டிலும் இது குறைவுதான்.

பெரியார் கோவை மாவட்டங்களில் வாழும் மக்களின் முன்னேறிய பொருளாதார நிலையும் பிறப்பு விகிதக் குறைவுக்குக் காரணமாக அமைந்துள்ளது. பெரும்பாலும் விவசாய மாவட்டங்களாக விளங்கும் தர்மபுரி, வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டங்களின் பிறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. அவை பின்தங்கிய மாவட்டங்களாகும். வளமான பொருளாதார நிலைமை, குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. அது சிறு குடும்பத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. குறுகிய காலக் கட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் பலன் தரும் என்றாலும் தொலைநோக்குப் பார்வையுடன் நாம் அணுகினால் நல்ல கல்வி, நல்ல பொருளாதார வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் வசதிகளைப் பெருக்குவது போன்றவைதான் சிறந்த பலன்களைத் தரும் என்பதையே இது காட்டுகிறது.

இது தொடர்பான வேறு சில விஷயங்களை இந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். 1992 மே மாதம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசும் போது, குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றிக்குப் பரிசீலிப்பதற்குப் பதிலாக, கட்டுப்பாடுள்ள மூலதனப்



# தந்தை பெரியார் வாழ்க்கைக்குறிப்பு

*1879* - பெரியார் மாவட்டம், ஈரோட்டில் *17.9.1879* அன்று, வெங்கட்ட நாயக்கர்-சின்னத் தாயம்மை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

*1890* - பள்ளிப் படிப்பை விட்டு நிறுத்தப் பட்டு, மண்டிக்கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

*1898* - பத்தொன்பதாம் வயதில் பதின்மூன்று வயது நாகம்மையைத் திருமணம் செய்து கொண்டார். இருபத்தொன்றாம் வயதில் ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார். அக்குழந்தை ஐந்து மாதத்தில் இறந்தது. பின்னர் குழந்தை இல்லை.

*1904* - இருபத்தைந்தாம் வயதில் தந்தையாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு துறவு பூண்டு, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்று பின் தந்தையாரால் அழைத்து வரப்பட்டார். வெங்கட்ட நாயக்கர் மண்டி, ஈவெ. இராமசாமி நாயக்கர் மண்டி என்று ஆயிற்று.

*1911* - தந்தையார் மறைவு.

*1914-1918* - காங்கிரஸ் மாநாடுகளை முன் நின்று நடத்தினார். ஈரோடு நகர் மன்றத்தலைவர் பதவியில் பல ஆண்டுகள் இருந்தார். சுமார் 28 கௌரவப் பதவிகள் வகித்தார்.

*1919* - நகர் மன்றத் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டுக் காங்கிரசில் சேர்ந்தார்.

*1920* - கௌரவப் பதவிகளை ராஜினாமா செய்தார். காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

காந்தியடிகளின் சீடரானதும், ஆடம்பர ஆடையை விட்டுக் கதர் உடுத்தினார். எண்பது வயதுத் தாயார், மனைவி, மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களையும் கதர் உடுக்கச் செய்தார். திருச்செங்கோட்டில் கதர் ஆசிரமத்தைத் திறந்தார்.

மதுதரும் மரங்களை வெட்ட வேண்டும் என்று காந்தியடிகள் சொன்னபோது, சேலம் தாதம்பட்டியில் தன் தோட்டத்திலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

*1921* - தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக இருந்தார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை நடத்திச் சிறைவாசம் ஏற்றார்.

*1923* - தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். ஈரோட்டில் பெரியார் இல்லம் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகமாக மாறியது.

*1924* - இந்தியாவிலேயே முதன் முதலாகக் கேரளத்தில் வைக்கம் மகாதேவர் கோயில்முன் தீண்டாமை ஒழிப்புச் சத்யாக்கிரகம் நடத்தி இரு முறை சிறைப்பட்டார். 'வைக்கம் வீரர்' என்று போற்றப்பட்டார்.

*1925* - தமிழ்நாடெங்கும் காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றினார். 'குடியரசு' வார ஏட்டை ஈரோட்டில் தொடங்கி சுயமரியாதை உணர்வுகளைப் பரப்பினார்.



காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் தனது வகுப்புரிமைத் தீர்மானம் ஏற்கப்படாததால், காங் கிரஸிலிருந்து வெளியேறினார்.

1926 - சமுதாயத்தில் வர்ணாச்சிரமத்தை விரட்டு வதற்காகச் சுயமரியாதை இயக்கத்தை ஆரம் பித்தார்.

1927 - ''வருணாச்சிரமம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும்'' என்று காந்தியடிகளிடம் வாதாடினார்.

1928 - 'ரிவோல்ட்' ஆங்கில ஏடு தொடங் கினார்.

1929 - முதல் மாநிலச் சுயமரியாதை மாநாட் டைச் செங்கல்பட்டில் கூட்டினார். கல்லூரி மாணவராக இருந்த பேரறிஞர் அண்ணா இதில் பார்வையாளராகக் கலந்து கொண்டார். டிசம்பரில் மலேயா நாட்டில் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார்.

மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டுச் சிறை சென் றனர்.

1930 - ஈரோட்டில் மாநில இரண்டாவது சுய மரியாதை மாநாடு கூட்டினார்.

1931 - விருதுநகரில் மாநில மூன்றாவது சுய மரியாதை மாநாடு கூட்டினார்.

1932 - இலங்கை, எகிப்து, ரஷியா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுக்கல், இங்கிலாந்து முதலிய நாடுகளில் 11 மாதங்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

1933 - 'புரட்சி' வார ஏட்டின் மூலம் சம தர்மப் பிரச்சாரம் செய்தார். மனைவி நாகம்மையார் இயற்கை எய்தினார்.

1934 - 'பகுத்தறிவு' வார ஏட்டைத் தொடங் கினார். 'பகுத்தறிவு' நாளிதழையும் சிறிது காலம் வெளியிட்டார்.

1935 - நீதிக் கட்சிக்கு ஆதரவு அளித்தார். 'பகுத்தறிவு' மாத ஏடு துவக்கினார். திருப்பூர் மாநாடு ஒன்றில் பேரறிஞர் அண்ணாவைக் கண்டு, அவரது சுயமரியாதை உணர்வைப் பாராட்டினார்-

1936 - தாயார் மறைவு.

1937 - கட்டாய இந்தியை எதிர்த்துக் காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தினார்.

1938 - செப்டம்பர் 26 - கட்டாய இந்தியை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி நடத்திச் சிறைவாசம் ஏற்றார். சிறையிலிருக்கும்போதே நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுயமரியாதை

இயக்கம் நீதிக்கட்சியுடன் இணைந்தது.

1938 - சென்னையில் டாக்டர் தருமாம்பாள் தலைமையில் கூடிய பெண்கள் மாநாட்டில் ''பெரியார்'' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1940 - பம்பாயில் டாக்டர் அம்பேத்கரை பேரறிஞர் அண்ணாவுடன் சந்தித்தார்.

1944 - ஆகஸ்டு 19 - சேலம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவின் தீர்மானத்தால் நீதிக் கட்சி, திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது.

1949 - ஜூலை 9 - மணியம்மையுடன் திருமணம். பேரறிஞர் அண்ணாவும், அவரது தோழர்களும் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறினர்.

1950 - செப்டம்பர் 18 - பெரியாரின் பொன் மொழிகள் நூலுக்காக ஆறுமாதம் சிறைத்தண்டனை விதிக்கப் பெற்று, பத்து நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

1951 - வகுப்புரிமைக்காகக் கிளர்ச்சி நடத்தி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தச் செய்தார்.

1954 - பெருந்தலைவர் காமராசர் ஆட்சியை ஆதரித்தார்.

1967 - மார்ச் - பேரறிஞர் அண்ணா, தமிழக முதல்வரானதும், தந்தை பெரியாரைநேரில் சந்தித்து ஆசி பெற்றார். அதைப்பற்றிக் குறிப்பிடும் போது, ''நான் எவ்வளவோ அவர்களைத் திட்டினேன். ஒரு வார்த்தை அவர்கள் திருப்பிச் சொல்லவில்லை. அதிகாரம் கிடைத்தபோது, தந்தையிடம் மகன் வருவதுபோல, எந்த விதமான சங்கோஜமும் இல்லாமல் வந்தார்கள். எனக்குத்தான் அவர்கள் முகத்தைப் பார்க்கவே வெட்கமாய் இருந்தது' என்று குறிப்பிட்டார் தந்தை பெரியார்.

1973 - டிசம்பர் 19 அன்று சென்னை தியாகராய நகரில் ஆற்றிய சொற்பொழிவு அவரது இறுதிச் சொற்பொழிவு, அதுவே அவரது மரண சாசனம்.

டிசம்பர் 24 காலை 7.22 மணிக்குத்தந்தை பெரியார் தம் 95-ஆம் வயதில் மறைந்தார். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

டிசம்பர் 25 - அரசு மரியாதையுடன் அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, தேக்கு மரப் பெட்டியில் வைக்கப்பட்டு மாலை 4.57 மணிக்கு, சென்னை பெரியார் திடலில் அடக்கம் செய்யப்பட்டது.



# நினைவில் பெரியார்

1974 - ஆம் ஆண்டில் தமிழக அரசு வாங்கிய கப்பலுக்கு 'எம்.வி. தமிழ்ப் பெரியார்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1975 - ஈரோட்டில் பெரியார் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, பெரியார்-அண்ணா நினைவகமாக 17.9.1975 அன்று திறக்கப்பட்டது.

1978 - பெரியார் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

செப்டம்பர் 17 அன்று மைய அரசு ஈரோட்டில் பெரியார் நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு அமலாக்குவது பற்றிய அறிவிப்பை 18.9.1978 அன்று ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

1979 - செப்டம்பர் 24 அன்று ஈரோட்டைத் தலைமை இடமாகக் கொண்ட பெரியார் மாவட்டத்தை அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

பெரியார் புரட்சி மொழிகள் அடங்கிய நினைவுத் தூண்கள் மாவட்டத் தலைமை இடங்களில் நிறுவப்பட்டன. ''பெரியார் புரட்சி மொழிகள்'' நூல் வெளியிடப்பட்டது. ''பெரியார் வாழ்க்கை வரலாறு'' ''பெரியார் வாழ்க்கைச் சித்திர நூல்'' வெளியிடவும், வைக்கத்தில் நினைவகம் எழுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1980 - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பெரியாரின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.





# ''குழந்தைகள் திரைப்பட விழாவை ஆண்டுதோறும் அரசே நடத்தும்!''

## குழந்தைகள் திரைப்பட விழாவைத் துவக்கிவைத்து மாண்புமிகு முதல்வர் உரை

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில், குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா 10.9.92 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுப் பெருமைப் படுத்திய இந்த விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர், திரு.க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தொகுத்து வழங்கினார். செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கத்தில் வரவேற்புரையாற்றினார்.

குழந்தைகள் சார்பில் சிறுமி உஷா வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றும் விழாவின் தலைமை யேற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ.அரங்கநாயகம் - வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி ஆகியோருக்கும் சிறுவர் சிறுமிகளே பூச்செண்டு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

**விளக்கேற்றித் துவக்கிவைத்தல்:**

தனக்கு மலர்ச்செண்டு வழங்கிய சிறுமிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்பு முத்தமிட்டார். போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமிகளுக்கு 'மிக்கி மவுஸ்' சின்னமுடைய நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அளித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குழந்தைகள் திரைப்பட

விழாவைக் குத்துவிளக்கேற்றித் துவக்கிவைத்தார்.

**வாழ்த்துரைகள் :**

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

**முதல்வரின் விழாப் பேருரை :**

மாணவ மாணவிகளின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

"இன்று உங்களோடு கலந்து கொண்டு இருப்பதிலும் குழந்தைகள் திரைப்பட விழாவினைத் துவக்கி வைப்பதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டாவது அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழாப் போட்டியை 1981-ஆம் ஆண்டில் நடத்தும் விருந்துபசரிப்பாளராகச் சென்னை மாநகரம் இருந்தது என்பதையும், அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவ்விழா அமைப்புக் குழுவின் தலைவராக இருந்தார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, தற்போது தமிழ்நாட்டில் குழந்தைகள் திரைப்பட விழா இன்று மீண்டும் நடைபெறுகிறது.

இந்தக் குழந்தைகள் திரைப்பட விழா சென்னையில் மட்டுமல்ல மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற இதர நகரங்களிலும் இனி நடைபெறும்.

குழந்தைகள் திரைப்பட விழாவை நடத்துவதற்கு ஏதுவாக, குழந்தைகள் திரைப்படச் சங்கம் மூலம் தயாரிக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட படத்தின் சிறப்புக் காட்சி நடத்தப்படும்போது, கேளிக்கை வரிக்கு விலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ளோம்.

குழந்தைகளுக்கான திரைப்படத்தைக் கலைவாணர் அரங்கில் திரையிடும் பழக்கத்தையும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளோம்.

**சிறப்புக் காட்சிகள் :**

கலைவாணர் அரங்கத்தில் குழந்தைகள் திரைப்படம் காட்டுவதுடன் கூட, சென்னை மாநகரில் உள்ள இதர ஆறு திரையரங்க உரிமையாளர்களும் குழந்தைகளுக்குச் சிறப்புக் காட்சி நடத்த முன் வந்திருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பை நான் பாராட்டுகிறேன். அந்தத் திரை அரங்குகளின் உரிமையாளர்களைப் பின்பற்றி மேலும் பல உரிமையாளர்கள் குழந்தைகள் திரைப்படத்தைத் திரையிட முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த விழாவில் பெரும்பாலும் தமிழ், ஆங்கிலத் திரைப்படங்களே காட்டப்படும் என்று கேள்விப்பட்டேன். இனி வரும் ஆண்டுகளில் இந்தியாவின் இதர மண்டலங்களில் இருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் பரிசு பெற்ற திரைப்படங்களை வரவழைத்துத் திரையிட விரும்புகிறோம். இதனால், சக்திவாய்ந்த சாதனமாக விளங்கும் சினிமா மூலமாக, சிறந்த கலாச்சாரத் தொடர்பு ஏற்படும் வாய்ப்பு நமது குழந்தைகளுக்கும் கிடைக்கும்.

**திரைப்படச் சங்கம் :**

நமது முதல் பிரதமரும், குழந்தைகளின் மேல் அளவற்ற பாசம் கொண்டவருமான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், குழந்தைகளுக்கான திரைப்படத்தை ஊக்குவிப்பதின் அவசியத்தை உணர்ந்தார். இதன் விளைவாக 1955-ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான திரைப்படச் சங்கம் நிறுவப்பட்டது.



ஆயினும், பல்வேறு காரணங்களால் குழந்தைகளுக்கான திரைப்பட இயக்க வளர்ச்சியில் மெதுவான முன்னேற்றமே ஏற்பட்டுள்ளதை உணர்கிறேன்.

குழந்தைகளுக்கான திரைப்படச் சங்கம் சில நல்ல திரைப்படங்களைத் தயாரித்து உள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், அவ்வாறு தயாரிக்கப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இவ்வகையில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டது இந்திய நாடு. நமது நாட்டின் கல்வித் தரம் மிகவும் குறைவு. உலகிலேயே மிக மிகக் குறைந்ததும் ஆகும். ஆயினும், புத்தகங்களை வெளியிடுவதில் முன்னணியில் உள்ள உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

உலகில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் ஒன்றான இந்தியாவில்தான் நாம், இன்றும் உள்ளோம். நம்முடைய வாழ்க்கைத் தரமும் மிகவும் குறைவு. ஆனால், உலகில் உள்ள திரைப்படம் தயாரிக்கும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தியாவில் உள்ள எந்தக் குடும்பமும் அல்லது எந்தத் தம்பதியும் குழந்தை இல்லாமல் இருக்க விரும்புவதில்லை.

புத்தக வெளியீட்டிலும், குழந்தைகள் புத்தகம் உற்பத்தியிலும் மாபெரும் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குழந்தைகளுக்கான திரைப்படம் தயாரிப்பதில் வருந்தத்தக்க வகையில் அடிமட்டத்தில் உள்ளோம். இந்த நிலையை மாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது.

குழந்தைகளுக்கான திரைப்படத் தை ஏராளமான எண்ணிக்கையில் உற்பத்தி செய்யத் துவங்குவது சிறந்ததாகும். மக்களிடையே தகவல், கல்வி ஆகியவற்றைப் பரப்பும் சக்திவாய்ந்த சாதனமாகவும், மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் சாதனமாகவும் சினிமா உள்ளது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

சமுதாயத்தின் கலாச்சாரம், வாழ்க்கை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பிரசித்திபெற்ற கலையாகவும் சினிமா ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆகவே, நவீன சமுதாயத்தில் குழந்தைகள் திரைப்படம் முக்கிய அங்கம் வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

**வண்டலூர் பூங்கா**

சென்னை வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயிரியல் பூங்காவின் முகப்புத் தோற்றம் மாற்றியமைக்கப்படுவதுடன் வேறு பல வசதிகளும் செய்யப்படும்.

**குழந்தைகள் திரைப்படம்**

குழந்தைகள் திரைப்படம் குழந்தைகளுக்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல் வயது வந்தவர்களுக்கும் முக்கியமானதாகும். ஏனெனில் குழந்தைகள் படம் மூலமாகவே, குழந்தைகளைப் பற்றி வயது வந்தவர்கள் நன்கு தெரிந்து கொள்கிறார்கள். அத்துடன் குழந்தைகளுடன் மிகவும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய தேவை, விருப்பம், மனப்பாங்கு, உணர்ச்சிவயப்படுதல் ஆகியவற்றை நன்கு தெரிந்து கொள்ளவும் குழந்தைகள் திரைப்படம் உதவுகிறது.

இந்தியச் சமுதாயம் விரைவாக மாறி வருகிறது. பழமைக் கருத்துக்கள் உடைந்து நொறுங்குகின்றன. புதிய எண்ணங்கள் இன்னும் எழவில்லை. கூட்டுக் குடும்பங்கள் பிரிவது, நமது நாட்டில் ஏற்பட்டு வரும் மாபெரும் சமுதாய மாற்றமாகும்.

இந்தச் சூழ்நிலையில், குழந்தைகளை நன்கு பராமரித்து அவர்கள் நலமாகவும், அறிவுமிகுந்தவர்களாகவும், நாட்டின் நல்ல குடிமகனாகவும் ஆக்குவது மிகவும் முக்கியமானதாகும். தகவல் தொடர்புச் சாதனம் ஒவ்வொன்றையும், குழந்தைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும். இவ்வகையில் சினிமா இத்தேவையைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது. இந்த ஆதாரத்தை நாம் போதிய அளவில் உபயோகித்துக் குழந்தைகளுக்குச் சரியான கல்வியையும், முழுமையான சரியான கேளிக்கையையும் அளிக்காதது துரதிர்ஷ்டமேயாகும்.

நாம் அனைவரும் குழந்தையாக இருந்துள்ளோம். நம்மில் பலர், நமது குழந்தைப் பருவ நினைவுகளைப் பெரிதும் விரும்புகிறோம்.

தற்போது நாம் உள்ளதை விட, குழந்தைப் பருவத்தில் குழந்தைகளைப் போல் நாம் வெகுவேகமாகக் கற்றோம்.

மேதை பெர்ட்ராண்ட் ரஸல் - குழந்தைகளின் பேரார்வம் அவை வளர வளரக் குறைந்து விடுகிறது என்று சுட்டிக் காட்டியுள்ளார். இது அறிவியல் உண்மையாகும். ஆகவே, எல்லா வகையான கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் குழந்தை இருக்கும்போதே, அக்குழந்தை சிறந்த முறையில் கற்க நாம் ஆவன செய்ய வேண்டும். இதைக் குழந்தைகள் திரைப்பட இயக்கம் செய்ய முடியும்.

தமிழ்நாடு அரசின் செய்தி-சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்துள்ள குழந்தைகளுக்கான திரைப்பட விழாவைத் துவக்கிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த இயக்கத்திற்கு எங்களால் இயன்ற எல்லா வகையான ஊக்குவிப்பையும் அளிக்க நாங்கள் விரும்புகிறோம். இதன் ஆரம்பமாகக் குழந்தைகளுக்கான திரைப்பட விழாவைத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நடத்தும் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் அனைவரும் இந்த விழாவில் பங்கு கொண்டு, இந்த விழாவை மகிழ்ச்சியானதாகவும், நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகவும் ஆக்குவீர்கள் என்று நம்புகிறேன்."

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேருரை ஆற்றினார்கள்.

**நன்றியுரை:**

விழா முடிவில் - தென் பிராந்தியக் குழந்தைகள் திரைப்படத்துறை மேலாளர் திரு. சுபாஷ் பிலே நன்றி உரையாற்றினார்.

குழந்தைகள் சார்பில், செல்வி பிருந்தா நன்றி கூறினார்.

விழா முடிவில் குழந்தைகளுக்கான திரைப்படம் ஒன்றும் கலைவாணர் அரங்கில் திரையிடப்பட்டது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.




## இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர்

'பெரியார்' ஒரு தனி மனிதரின் பெயரல்ல. ஒரு நாட்டின் நூற்றாண்டு வரலாறு. மனித சமுதாயத்தின் ஒரு மகத்தான தத்துவம்.

உலகில் தோன்றி மறையும் கோடானு கோடி மனிதர்களில் மிகச் சிலரே இப்படி வரலாறாக, வாழ்க்கையின் தத்துவமாக வாழ்ந்து மறைகின்றனர்.

இத்தகைய ஒரு சிறப்பு. பெறற்கரிய பேறு, தமிழ் மண்ணிற்குக் கிடைத்தது. இந்த மண்ணிலேதான் பெரியார் பிறந்தார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று முழங்கினார் பாரதியார். அந்தத் தமிழகம்தான், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரை, விடுதலை வீரரை, பகுத்தறிவுப் பகலவனை, புத்துலகச் சிற்பியை - தந்தை பெரியாரை - உலகிற்கு வழங்கியது.

மென்மையாக உடலைத் தீண்டி, மெய்சிலிர்க்க வைக்கும் தென்றல் காற்றல்ல பெரியார்; சுழன்றடிக்கும் சூறாவளி.

சலசலவென்று ஒலி எழுப்பி, கண்களுக்கு விருந்தாய், கானிலே வளைந்தோடும் சிற்றாறல்ல பெரியார்; பொங்கிப் பாயும் கங்கை நதி.

காண்போர் மனம் கவரும் வெள்ளிப் பனி மலையல்ல பெரியார்; வெடித்துச் சிதறும் எரி மலை.

ஆம்! அவர் சித்தார்த்தனாகத்தான் பிறந்தார் ஆனால், புத்தராக மாறவில்லை!

போர்க்கோலம் பூண்டார்;

சமூக அநீதிகளை, அக்கிரமங்களை அழிக்கப் புறப்பட்டார்.

கொடுமைகளைக் கண்டு அஞ்சுவது கோழைத் தனம், ஒதுங்குவது ஈனத்தனம் என்று வீரமுழக்க மிட்டார்.

ஒரு நூற்றாண்டுக்கால வீர வரலாறு படைத் தார்.

**- டாக்டர் எம்.ஜி.ஆர்.**





# பேரறிஞர் அண்ணா வாழ்க்கைக் குறிப்பு

*1909*-செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், காஞ்சிபுரத்தில், எளிய நெசவாளர் குடும்பத்தில், நடராசன், பங்காரு அம்மாள் தம்பதியருக்கு *15-9-1909* அன்று பிறந்தார். இவரது வளர்ப்புத் தாய் சிற்றன்னை இராசாமணி அம்மையார்.

*1914*-காஞ்சிபுரம் பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றார்.

*1927*-காஞ்சிபுரம் நகராட்சியில் சில திங்கள் பணிபுரிந்தார்.

*1928*-சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்.

*1929*-பிப்ரவரி *17,18* தேதிகளில் செங்கல்பட்டு நகரில் நடந்த முதல் மாநில சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொண்டார்.

*1930*-பச்சையப்பன் கல்லூரி முதல்வர் உதவியால், சம்பளச் சலுகை பெற்று, பி.ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் சேர்ந்து படித்தார்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே, பெற்றோர் விருப்பப்படி, *1930*-இல் காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கும், இராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது.

*1932*-நீதிக்கட்சி அமைச்சரவையில் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த பொப்பிலி அரசர் தொடர்பு பேரறிஞர் அண்ணாவுக்கு ஏற்பட்டது.

*1935*-திருப்பூரில் நடந்த செங்குந்த வாலிபர் மாநாட்டில் முதன்முதலாக தந்தை பெரியாரைச் சந்தித்து உரையாடினார். அன்று முதல் தந்தை பெரியாரைத் தமது ஒரே தலைவராக ஏற்றார்

பி.ஏ.(ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருள் வசதி இன்மையால் மூன்று திங்களுக்கு மேல் சட்டப் படிப்பைத் தொடர முடியவில்லை.

சென்னையில் உள்ள தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகச் சில திங்கள் பணியாற்றினார்.

நீதிக்கட்சித் தலைவர் பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து தொடங்கிய 'பால பாரதி' என்ற வார ஏட்டிற்கு ஆசிரியராக இருந்து தொழிலாளர் நலம் பேணும் கட்டுரைகளை வரைந்தார்.

*1936*-சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெத்து நாயக்கன்பேட்டையில் நீதிக்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

*1938*-'விடுதலை', 'குடியரசு' ஏடுகளின் துணை

உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிப்ரவரி-4 - அண்ணாவின் உடல் அரசு மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டு, சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு எதிரில் மெரினா கடற்கரையில் காலை 11.30 மணிக்குச் சந்தன மரப்பெட்டியில் வைக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.

**நினைவில் அண்ணா**

தமிழக அரசு அண்ணா துயிலும் அந்த இடத்தில் கல்லறை எழுப்பி, ''எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'' என்று அதில் எழுதி வைத்து, அணையா விளக்கை ஏற்றிவைத்து, அண்ணா சதுக்கத்தை உருவாக்கி இருக்கிறது. அங்கு அண்ணாவின் அழகு தமிழைக் கேட்க ஒலிச்சாதன வசதி அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா நூலகமும், அண்ணா நூல்கள் விற்பனைக் கூடமும் அண்ணா சதுக்கத்தை அணி செய்கின்றன.

1969 தமிழகச் சட்டப் பேரவையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

1970-பிப்ரவரி 3 - மைய அரசு அண்ணா நினைவாக 20 காசு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

1971-சென்னை நகரில் மவுண்ட் ரோடுக்கு, அண்ணா சாலை என்ற பெயர் சூட்டப்பட்டது.

தமிழக அரசு வாங்கிய இரண்டு கப்பல்களுக்கு 'எம்.பி. தமிழ் அண்ணா' என்ற பெயரும், 'தமிழ் அண்ணா' என்ற பெயரும் சூட்டப்பட்டன.

1978-சென்னை, கிண்டியில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு 'அண்ணா பல்கலைக் கழகம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1980-செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த இல்லத்தைத் தமிழக அரசு 16.9.1980 அன்று 'அண்ணா நினைவு இல்லமாக' மாற்றியது.

1985-செப்டம்பர் 15 - அன்று, மதுரை மாவட்டத்தைப் பிரித்து, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நினைவாக, சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட, அண்ணா போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டது.

## தமிழர் தேடிய செல்வம்!

—பி.வி. கிரி



சமுதாயம் விழிப்புறவே
சத்தான படைப்புகளை
அமுதான தமிழ்மொழியில்
அடுக்கடுக்காய் வழங்கியவர்!

அறியாமை நீங்கிடவே
அறிவுச்சுடர் ஏந்திநாளும்
இருளாலே சூழநின்ற
இளைஞர்களை எழுப்பியவர்!

எடுப்பான எழுத்துகளால்
எண்ணங்களைக் கோத்திட்டே
துடிப்பான ஏடுகளில்
தொடர்ந்துநிதம் எழுதியவர்!

மேடையெலாம் முழக்கஞ்செய்து
மேதினியோர் போற்றிடவே
தேடியதோர் செல்வம்போல்
தோன்றியவர் நம்அண்ணா!





# ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 538 பேர்களைத் தேர்ந்தெடுத்து 21.8.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கடலூரிலிருந்து அரசுச் செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக 4 பேர்களுக்குத் தையல் இயந்திரங்களும், சலவைப்பெட்டி 4 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 50 பெண்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து 50 ஆயிரமும், கலப்புத் திருமண உதவி 7 பேர்களுக்கும்,விதவையின் மகள்திருமண உதவி 5 பேர்களுக்கும், விதவை மறுமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3 பேர்களுக்கும், 12 நரிக்குறவர்களுக்குப் பாசிமணி செய்வதற்கு கடன் உதவி ரூ.72 ஆயிரமும் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களுக்கு 123 நபர்களுக்கு ரூ.20 இலட்சத்து 39 ஆயிரத்து 850 வழங்கப் பட்டது. 49 மீனவர்களுக்கு ரூ.10 இலட்சத்து 78 ஆயிரம் மதிப்பீட்டில் விசைப்படகிற்கான இயந்திரமும் (Out Board Motor) வழங்கப்பட்டது. ஏழை மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையாக 10 நபர்களுக்கு ரூ.10 ஆயிரமும், 124 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், 33 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும் வழங்கப்பட்டன.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிரானைட்ஸ் தொழில் தொடங்க ஒருவருக்கு ரூ.48 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டது. ஆக மொத்தம் 538 பேர்களுக்கு 1,36,81,591 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்றுத் தொன்னூற்று ஒன்று மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 359 பேர் பெண்களாவர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருத்தாசலம் பகுதியைச் சேர்ந்த திருமதி தேவகி என்பவரின் குழந்தைக்கு 'சக்கரவர்த்தி' என்று பெயர் சூட்டினார்.

ஆசிரியர் ஆனார். 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டிற்கும் துணை ஆசிரியராக இருந்தார்.

செப்டம்பர் 26-இல் தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்று நான்கு மாதம் சிறைவாசம் ஏற்றார்.

*1939*-நீதிக்கட்சியின்பொதுச்செயலாளர் ஆனார்.

*1940*-பம்பாயில், தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர் சந்திப்பின்போது, மொழிபெயர்ப் பாளராகக் கலந்து கொண்டார்.

*1942*-மார்ச் 7 - 'திராவிட நாடு' வார ஏட்டின் ஆசிரியர் ஆனார்.

*1944*-ஆகஸ்டு 19 - சேலம் நீதிக்கட்சி மாநாட்டில், பேரறிஞர் அண்ணா தீர்மானம் மூலம், நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது.

*1946*-ஜூலை 29 - நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாவேந்தர் பாரதி தாசனுக்கு, பேரறிஞர் அண்ணா பொற்கிழி அளித்தார்.

*1947*-ஆகஸ்டு 15 நாடு விடுதலை பெற்ற திருநாளைப் பெரியார் துக்க நாள் எனல் பொருந்தாது என்று திராவிடநாடு ஏட்டில் பேரறிஞர் அண்ணா எழுதினார்.

*1948*-ஜூலை 17 - இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைவாசம் ஏற்றார்.

*1949*-ஜூலை 9 - தந்தை பெரியார் - மணியம்மை திருமணம் நடந்தது.

பேரறிஞர் அண்ணாவும் மற்றும் பலரும் திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறி 17.9.1949-இல் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர்.

தி.மு.க.-வின் முதல் பொதுச் செயலாளர் ஆக பேரறிஞர் அண்ணா ஆனார்.

*1950*-செப்டம்பர் 18 - ஆரியமாயை என்னும் நூல் எழுதியதற்காக ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

*1952*-ஆகஸ்டு - இந்தி எதிர்ப்பு அறப்போர் - இந்தி எழுத்துகளை அழித்தார்.

*1953*-ஜூன் 15 - தி.மு.க.-வின் அதிகார பூர்வ நாளேடான "நம்நாடு" ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

ஜூலை 15 - மும்முனைப் போராட்டத்தில் முன்னதாகக் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

*1956*-மே 17-20 - திருச்சியில் நடந்த தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில் பொதுத் தேர்தலில் பங்கேற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தி, தி.மு.க. பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பொதுமக்கள். அனுமதியைப் பெற்றார்.



## பெரியார் நம்மைப் பிரியார்!

### கவிஞர் சிங்காரவேலன்

விடியாத தமிழர்க்கு விடியல் தந்தே
விரிகதிராய் ஈரோட்டில் எழுந்த சிங்கம்!
படியாமை அறியாமை நோயில் வீழ்ந்தோர்
பகுத்தறிவாம் ஒளிபெறவே செய்த தங்கம்!
தடியூன்றி வாழ்ந்திட்ட நாளில் கூட
தமிழ்வளர்த்து இனம்காத்த உழைப்பின் குன்றம்!
இடிபோன்ற முழக்கத்தால் எழுச்சிப் பேச்சால்
இருட்தழ்ச்சி தனைவென்ற இரும்பு நெஞ்சம்!

*1957*-மார்ச் - காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூன் - 'ஹோம்லேண்ட்' ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

*1958*-ஜனவரி 3 - சென்னை வந்த பிரதமர் பண்டித நேருவுக்கு ஜனவரி 6-ஆம் தேதி கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டதால் கைது செய்யப் பட்டுச் சிறைவாசம் ஏற்றார். 5 நாள் கழித்து விடுதலை ஆனார். ஏப்ரல் 23, தடையை மீறிய குற்றத்திற்காக மீண்டும் சிறைவாசம் ஏற்றார்.

*1959*-சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களை வென்றது.

*1962*-பிப்ரவரி - காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தலில் தோல்வியடைந்தார். பின்னர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

ஜூலை-19 - விலைவாசி உயர்வு எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் கைதாகி வேலூர் சிறையில் பத்து வாரம் கடுங்காவல் தண்டனை பெற்றார். இந்தியா மீது சீனா போர் தொடுத்தது. அவர் விடுதலை பெற்ற உடன் நாட்டின் யுத்த முயற்சிகளுக்குப் பல உதவிகள் செய்தார்.

*1963*-ஜனவரி - கட்சியின் கோரிக்கை பிரிவினை அல்ல என்பதற்கேற்ற மாற்றம் செய்து கட்சியைக் காப்பாற்றினார். புதிதாக, "காஞ்சி" என்னும் வார ஏட்டினைத் தொடங்கினார்.

நவம்பர்-17 - கட்டாய இந்தி 17-வது மொழிப் பிரிவுச் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் நவம்பர் 16 அன்றே கைதாகி ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

*1965*-ஜனவரி 26 - முதல், இந்தியை இந்திய யூனியன் ஆட்சி மொழியாக்க நாடாளுமன்ற ஆட்சி மன்றக்குழு சிபாரிசு செய்ததை எதிர்த்து, 'ஜனவரி 26 துக்க நாள்' என, தி.மு.க. அறிவித்தது தொடர்பாக அண்ணா சிறைவாசம் ஏற்றார்.

ஜூலை - சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹாங்காங், கம்போடியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

*1967*-பிப்ரவரி - பொதுத்தேர்தலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுத்தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களில் வெற்றி.

மார்ச் - நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 6.3.1967 அன்று தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஏப்ரல்-26 - தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.

மே-15 - ரூபாய்க்குப் படியரிசித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ஜூலை-18 - சென்னை மாநிலத்தைத் 'தமிழ்நாடு' என்று அழைக்க அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் செய்திடும் பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றச் செய்தார்.

ஜூலை-23 - சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற மைய அரசை வற்புறுத்தி, தமிழ்நாடெங்கும் 'சேலம் எழுச்சி நாள்' கொண்டாடினார்.

ஆகஸ்ட்-16 - 'சீரணி' கண்டார்.

செப்டம்பர்-19 - சென்னையில் கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

*1968* - ஜனவரி 1 - உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் உருவச்சிலை சென்னை-அண்ணா சாலையின் மையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனவரி 2- தமிழ் வளர்த்த சான்றோருக்கும், கற்புக்கரசி கண்ணகிக்கும் சென்னைக் கடற்கரைச் சாலையில் சிலைகள் அமைத்துப் போற்றினார். ஜனவரி 3 - உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தைச் சென்னை மாநகரில் நடத்தினார். திருக்குறள் ஆராய்ச்சிக்கு ரூ.9 இலட்சம் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

ஜனவரி-23 - தாய்மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம் ஆகிய இரு மொழித் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றச் செய்தார்.



## பெரியார் ஒருவர்தான்!

'பெரியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்ட தல்ல. அது 35 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. 'வைக்கம் வீரர்' என்பதை இந்த அடியேன் கைப்பேனாதான் சூட்டியது.

திருவிதாங்கூரிலே தீண்டாமையை ஒழிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பெரியாருக்கே அந்தப் பெருமை; ஆனால், அந்தப் புகழ் யாருக்கோ போயிற்று!

பெரியாரது அந்த வீரத்தியாகம் எனது வாழ்க்கைக் குறிப்பிலுள்ளது. எனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லை. நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் இராமசாமியாகத்தானிருக்க முடியும்.

இந்த நாட்டில் பெரிய காரியம் செய்தவர்; பெரியார் ஒருவர்தான்!

- தமிழ்த் தென்றல் திரு.வி.க.

ஏப்ரல், மே - அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் சென்று வந்தார். அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகத்தில் சப்பெல்லோஷிப் விருது பெற்றார். வாடிகன் நகரில் போப்பாண்டவரைச் சந்தித்தார்.

செப்டம்பர்-8 - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

செப்டம்பர்-16 - அமெரிக்காவில் உலகப்புகழ் பெற்ற புற்றுநோய் மருத்துவமனையான மெமோரியல் மருத்துவமனையில் டாக்டர் மில்லரால் அண்ணாவுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

நவம்பர்-6 - சிகிச்சை முடிந்து அண்ணா சென்னை திரும்பினார். டிசம்பர் 1 - உடல் நலம் கெட்டிருந்தும் டாக்டர்கள் ஆலோசனையை மீறி, தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் கலந்து கொண்டு பேசினார்.

*1969*-ஜனவரி 14 அன்று பொங்கல் தினத்தில் சென்னை தியாகராய நகரில் கலைவாணர் சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அண்ணாவின் கடைசிப்பொதுநிகழ்ச்சி.

ஜனவரி-25 - அமெரிக்க டாக்டர் மில்லர் சென்னை வந்து அண்ணாவுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்தார்.

பிப்ரவரி-3 - (பிப்ரவரி 2 நள்ளிரவு 12.20 மணி) சென்னையில் மறைவு. அண்ணாவின்








# தருமபுரி மாவட்டத்தில் பழங்காலக் கிராமிய நடனங்கள்

பழங்காலத்தில் தமிழக மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகையாக நிலத்தைப் பாகுபாடு செய்திருந்தனர். இவற்றில் முல்லை நிலமென்பது காடும் காட்டைச் சேர்ந்த நிலமுமாகும். இக்காட்டில் வாழ்ந்த மக்களுக்கு முக்கியத் தொழில் ஆநிரைகள் மேய்த்தலும், அதன் மூலமாக வரும் பொருளைப் பெற்று வாழ்தலுமாகும்.

அம் முல்லை நில மக்களுக்குத் தெய்வம் 'திருமால்' ஆகும். இன்னும் திருமாலுக்குச் செய்யும் வழிபாட்டைச் 'சேவை' என்ற சொல்லால் குறிப்பதை வைணவத் தலங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக, 'அரையர் சேவை' 'திடுத்துழாய் சேவை' என்றும் இறைவன் தரிசனத்தைச் 'சேவை சாதிப்பது' என்றும் குறிப்பர்.

தருமபுரி மாவட்டத்தின் வடகோடியில் மலை சூழ்ந்த காடுகளும் அக்காட்டினை அடுத்த ஊர்களும் இருக்கின்றன. இன்று பெரும்பாலும் தெலுங்கு மக்கள் இங்கு வாழ்ந்தாலும், அடுத்துள்ள ஆந்திர மாநிலத்தின் தாக்கமும் அப்பகுதிகளில் இருந்து குடியேறியவர்களின் கலப்பும் இதற்குக் காரணங்களாகும். இவற்றுக்கிடையில் முழுக்க முழுக்கத் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற மிகச் சிறிய கிராமமே 'காட்டூர்' ஆகும்.

பழங்காலத்தில் காடுகெடுத்து நாடக்கி, குடியிருப்புகளை உருவாக்கிக்கொண்ட அவர்கள் தங்கள் வாழ்விடத்துக்குக் 'காட்டூர்' என்றே பெயர் வைத்துக்கொண்டனர். இக்காட்டுப் பகுதியில் உள்ள சிறிய மலைக்கு 'எத்துலா மலை' எனப்பெயர். ஆகையால், இவ்வூரை 'எதுலா மலைக்காட்டூர்' என்றே பெயர் வைத்து அழைக்கின்றனர். இச்சொல் 'எதிலாமலை' என்ற சொற்றொடரிலிருந்து வந்திருக்க வேண்டும். 'இணையிலாதமலை' என்று இதற்குப் பொருளாகும். மரங்களடர்ந்த காடாக இப்பகுதியும், மலையும் இருந்தது என்பதற்கு அடையாளமாக இன்றும் இம்மலையும் மலையைச் சுற்றி உள்ள சிறிய காட்டுப் பகுதியும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இதுகாறும் பார்த்தவற்றிலிருந்து, இப்பகுதி முல்லை நிலத்தைச் சார்ந்தது என்றும், இப்பகுதிக்குத் 'திருமால்' வழிபடு , கடவுளாக இருக்கிறார் எனவும் உணரலாம். ஆகவே, இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டை வைணவ முறைப்படி 'சேவையாட்டம்' எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் வேறிடங்களிலிருந்து இங்கு குடியேறியவர்கள் அல்லர். இவர்கள் இப்பகுதியின் பழங்குடியினரேயாவர். சேவையாட்டம் ஒரு குழு உணர்ச்சியுடன் ஆடுவதாகும். இவ்வாட்டத்தில் வீரமும், பக்தியும் கலந்திருக்கக் காணலாம் இவ்வாட்டத்தில் கையில் பிடித்திருக்கும் கோல்(பிரம்பு) ஆநிரை மேய்த்தலின் அடையாளம். சிவந்த ஆடைகள் வீரத்தின் அடையாளம். சிலவகை ஆபரணங்கள் அணிந்திருப்பர். தலைக்கவசம், மார்புக்கவசம் முதலியன இன்று எளிமையாக உருமாறியிருந்தாலும் அவை வீரர்கள் அணியும் உடற்கவசங்களின் வேற்று வடிவங்களேயாகும்.

காட்டில் இயற்கையாகப் பொறுக்கியெடுத்த மயிலிறகுகள் இவர்கள் உடலைச் சுற்றிக் கட்டிக்கொள்ளும் அலங்காரப்பொருள். கண்ணனை வழிபடுவதற்கு அடையாளமாக மயிலிறகுக் கொண்டை இவர்கள் தலையை அலங்கரிக்கும். காட்டில் இயற்கையாகக் கிடைத்த மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழலும் உறுமி எனப்படும் மேற்கருவியும் இதற்கு இசைக்கருவிகளாக இசைக்கப்படுகின்றன. வேறு எங்கும் காணப்படாத 'தலை உறுமி' எனும் தலையில் அணிந்து இசைக்கப்படும் ஒரு வாத்தியம் இங்கு சிறப்பிடம் பெறுகிறது. இக்கருவியை உடலில் வேறெங்கும் அணியாது தலையில் அணிவதற்கு இவர்கள் கூறும் காரணம் மெய்சிலிர்க்க வைக்கிறது. பௌர்ணமி நாளில் புலியால் கொல்லப்பட்ட பசுந்தோலைக் கொண்டு செய்யப்பட்டதால், பக்தியுடன் சிறப்பிடம்

—சி.க. சரவணன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.



கொடுக்கப்பட்டு, தலையில் அணிந்து இசைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். கண்ணன் அணிந்த திலகம் இவர்கள் நெற்றியை அலங்கரிக்கும்.

பனிரெண்டு அடைவுகளுடன் இவ்வாட்டம் ஆடப்படுகின்றது. இக்கருவிகளே தம் இசையின் மூலம் மாறி மாறி இசைக்கப்படும் போது ஆடிக்கொண்டே ஆடைகளை மாற்றிக் கொள்கின்றனர். இரண்டு புல்லாங்குழல்கள், இரண்டு தலை உறுமிகள் இவ்வாட்டத்தின் இசைக்குழுவாகும். தொடக்கத்தில் திருமாலுக்குச் செய்யும் வழிபாட்டு நாட்களிலும் வீரச் செயல் புரிந்த நாட்களிலும் ஆடப்பட்டு வந்த இவ்வாட்டம் இன்று திருமாலுக்குச் செய்யும் திருவிழா நாட்களில் ஆடப்படுகின்றது. இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே விரதமிருந்துதான் கோயில்களில் வைக்கப்பட்டிருக்கும் இப்பொருள்களை முறைப்படிப் பூசை செய்து எடுப்பர்.

இச் சேவையாட்டம் தற்போதும் இம்மாவட்டத்தில் இப்பகுதி மக்களால் ஆடப்பட்டு, கிராமியக்கலை எவ்விதத்திலும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## பேரிக்காய் சாப்பிடுங்கள்

பேரிக்காய் சாப்பிடுங்கள் பலவீனத்தாலோ அல்லது வேறு காரணங்களினாலோ இதயம் படபடப்புக்கு உள்ளாகிறதா? கை, கால்களில் நடுக்கமும் வியர்வை கொட்டுதலும் உண்டாகிறதா? அப்படியானால் தொடர்ந்து பேரிக்காய் சாப்பிட்டு வந்தால் மேற்கூறிய தொல்லைகள் நீங்கப்பெறலாம்.

வளர்கின்ற பருவத்தில் உள்ள பிள்ளைகளது எலும்புகள் உறுதியாகவும், சீராகவும் வளர பேரிக்காய் உதவும். ஆப்பிளைப்போல் கடித்து உண்பதால் பற்கள் பலம்பெறுகின்றன.

கருவுற்ற பெண்டிரும், தாய்ப்பால் தரும் மகளிரும் இப்பழத்தை உண்பதால் தேவையான போஷாக்கைப் பெறுவதுடன் பால் சுரப்பும் அதிகமாகும்.

வைட்டமின் ஏ, பி, மற்றும் சுண்ணாம்பு நிறைந்த இப்பழம் சீரண மண்டல உறுப்புகளுக்கும் வேண்டிய சத்துக்களை தந்து நல்ல பசியை உண்டாக்குகிறது. உணவும் எளிதில் சீரணமாகும்.

நன்றி: கூட்டுறவு



# அரிய கற்சிற்பம் கண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் உள்ள ஆனாங்கூர் என்னும் கிராமத்தில் இருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால், கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரன் என்று கருதப்படும் அரிய கற்சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலம் தொட்டு ஆனாங்கூர் என்னும் இவ்வூர் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தமை கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது. இதனைப் புலப்படுத்தும் கல்வெட்டு இவ்வூர் அருகில் உள்ள கால்வாய்க் கரையில் கண்டறியப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வூரின் வடமேற்குப் பகுதியில் அகஸ்தீஸ்வரர் கோயில் ஒன்றும் அமைந்துள்ளது. தற்போதைய கட்டட அமைப்பைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், இக்கோயில் கர்ப்பக் கிருகத்தின் உட்புறச் சுவரில் முதலாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு காணப் பெறுதலாகும். கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் இதுவே பழமையானதாகும்.

இக்கோயிலில் மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை உள்ள துண்டுக்கல்வெட்டுக்களும் சில இங்கு உள்ளன. இக்கிராமத்தில் கிடைத்துள்ள பல்லவர் காலக் கல்வெட்டில் இவ்வூர் தெய்வத்தின் பெயர், ''மகாதேவர்'' என்றும் ஊரின் பெயர் 'ஆனாங்கூர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இவ்வூரில் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்திலேயே ஒரு சிவன் கோயில் இருந்தது என்பதும், பின்னாளில் அதன் இடிபாட்டின் மீது குலோத்துங்கச் சோழன் காலத்தில் இக்கோயில் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கலாம் என்பதும் அறிய முடிகிறது.

முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் தெய்வத்தின் பெயர் ''ஆனாங்கூர் உடையார்'' என்று உணர முடிகிறது. வேறு ஒரு கல்வெட்டு மூலம், இக்கிராமம் பனையூர் நாட்டிற்குட்பட்ட மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் இக்கோயிலுக்கு விளக்கு எரிக்க 24 கழஞ்சுப்பொன் தானமாகத் தனிப்பட்ட ஒருவரால் வழங்கப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது.



## பொன்மொழிகள்

குடிப்பழக்கம் மனிதனைப் படுபாதாளத்தில் ஆழ்த்திக் குடும்பங்களையும், குழந்தைகளையும் நாசமாக்குகிறது.

●

நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிகளும், கல்லூரிகளும்தான். அங்குதான் எதிர்கால உலகமே உருவாக்கப்படுகிறது.

●

தீயை அணைக்க நீர் கேட்டால், சாம்பலாகப் போனபின் கொண்டு வரும் நீர் போன்றது, தக்க சமயத்தில் செய்யாத உதவி.

பகுதியாக விளங்கியது என்பதும் தெரியவருகிறது.

இக் கற்சிற்பத்தின் வடிவமைப்பைக் கொண்டு பார்க்கையில் கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இறைவன் யானை மீது அமர்ந்து காட்சி தருவதாக உள்ளது. இத்தெய்வமும் அதன் வாகனமும் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இறைவன் தலையில் அணிந்துள்ள மகுடம் ஜடாமகுடமா? அல்லது கிரீடமகுடமா? என்பதை எளிதில் அறிய இயலாவண்ணம் உள்ளது.

வலது மேற்கையில் சக்தி ஆயுதமும், இடது மேற்கையில் அக்கமாலையும் உள்ளன. வலது கீழ்க்கை லோல ஹஸ்தமாகக் கீழே தொங்கிய நிலையிலும் இடது கீழ்க்கையைத் தொடை வைத்தும் காணப்படுகிறார். தடித்த உருவில் காணப்பெறும் கழுத்தணியும், கையணிகளும் இச்சிற்பத்தின் பழமையை உறுதி செய்கின்றன. யானையைப் பொருத்துமட்டில் அதன் முகப் பகுதியை மட்டும் காணமுடிகிறது. தந்தங்கள் குட்டையாகவும், காதுப்பகுதி மிகவும் அகலமாகவும் காணப்படுகின்றது.

யானை மீதமர்ந்து காணப்பெறும் முருகன் அல்லது இந்திரன் உருவம் பலகைக் கல்லில் பெரிதாக வடிக்கப்பட்டுக் காணப்படுவது இதுவே முதன் முறையாகும். மலையைக் குடைந்து செதுக்கப்பட்ட உருவம் ஒன்று மகாபலிபுரத்தின் அருகே உள்ள சாளுவன்குப்பம் பகுதியில் அமைந்து உள்ள புலிக்குகையில் முன்புறச் சுவரில் முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் கிழக்குப் பக்கத்தில் சுமார் 50 கஜ தூரத்தில் கஜலட்சுமி மற்றும் கன்னிமார் எழுவர் கொண்ட 'சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கன்னிமார் எழுவரில் (தாய்மார் எழுவர்) ஐவர் உருவம் மட்டுமே கிடைத்துள்ளன. அவை அமர்ந்த



நிலையில் வலது கையில் உரிய ஆயுதமேந்தியும், இடது கையை இடது தொடை மீது வைத்த நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றின் உருவ அமைதியைக் கொண்டு பார்க்கையில் இவைகளும் முருகன் அல்லது இந்திரன் சிற்பத்தின் காலத்தைச் சார்ந்தவை என்று கருதலாம்.

தாமரை மலர் மீது அமர்ந்த நிலையில் காணப்பெறும் கஜலட்சுமி, இருகைகளிலும் தாமரை மலர் ஏந்தியும், இருபக்கமும் யானைகள் தும்பிக்கையை உயர்த்திய நிலையிலும் காணப்படுகிறார். தாமரை மலர்ப் பீடத்திற்குக் கீழ் இரு பூதகணங்களும் உள்ளன.

இத்துறையைச் சார்ந்த திரு. கோ.முத்துசாமி, கல்வெட்டாய்வாளர், இவ்வூரிலும் இவ்வூரைச் சுற்றியுள்ள ஏரிப்பகுதியிலும் கல்வெட்டாய்வு மேற்கொண்டபோது மேற்குறிப்பிட்ட சிற்பங்களுடன் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எட்டுக் கைகளுடன் கூடிய இரண்டு துர்க்கைச் சிற்பங்களையும் ஒரு விஷ்ணு சிற்பத்தையும் கண்டுபிடித்துள்ளார்.



# துணுக்குகள்

## போலியைக் கண்டு ஏமாறாதீர்!

அவசரமாக ரயிலில் பயணம் செய்பவர்கள், ஏமாற்று இடைத் தரகர்கள் கொடுக்கும் போலியான பெயரைக்கொண்ட டிக்கெட்டுகளை வாங்கி ஏமாந்துபோவது தெரிந்ததே. அத்தகைய போலி டிக்கெட்டுகளை வாங்கி ஏமாறாதீர்கள் என்று தொலைக்காட்சி மூலமும், பத்திரிகை மூலமும் மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1991-இல் போலியான டிக்கெட் மூலம் பயணம் செய்த 9,153 பேரை ரயில்வே வாரிய சிறப்புக் கண்காணிப்புக் குழு பிடித்தது. இவ்வாண்டு மே மாதம் வரை இது போன்று 2,796 பேர் பிடிக்கப் பட்டனர்.

1991-இல் போலியான பெயர்களில் டிக்கெட்டுகளை வாங்கி விற்பனை செய்த 2,269 இடைத் தரகர்களை இக்குழு பிடித்தது. இவ்வாண்டு மே மாதம் வரை 983 போலி இடைத்தரகர்களை இவ்வாரியம் பிடித்துள்ளது.

## மின்சாரம்

கடல் அலைகள், காற்றாலைகள், நீர், நிலக்கரி இவற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்போது சூரிய ஒளியைக் கொண்டும் மின்சாரம் தயாரிக்கும் முறையை மத்திய மின்னணு நிறுவனம் அமலாக்கி வருகிறது. சூரிய மின்கலம் சூரிய ஒளியை நேரடியாக மின்சாரமாக மாற்றுகிறது. இந்தச் சூரிய மின்கலன்களை உற்பத்தி செய்வதில் உலகில் ஐந்தாவது இடத்தை மத்திய மின்னணு நிறுவனம் வகிக்கிறது.

ஊரக மற்றும் கிராமப்பகுதிகளுக்கு ஏற்ப இந்நிறுவனம் சூரிய மின்கலன்களை வடிவமைத்துக் கொடுக்கிறது. இதுவரை இந்நிறுவனம் 26,000 மின்கலன்களை உற்பத்தி செய்து ஊரகப்பகுதிகளுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம், தொலைத்தொடர்பு, முதியோர் கல்வி மையங்கள், கிராம மருத்துவ மனைகள், ஆகியவற்றுக்குப் பயன்படுகிறது.

## அஞ்சல் சேவை

கிராமங்கள், கிராமப் பஞ்சாயத்துகள் எல்லாவற்றிலும் அஞ்சல் நிலையங்களை அமைப்பதற்கு அரசு எண்ணியுள்ளது. அந்த அஞ்சல் நிலையங்களில் பொதுத் தொலைபேசி இணைப்பு வசதியும் இருக்கும். நாட்டில் தற்போது 1,20,266 கிளை அஞ்சல் நிலையங்கள் இயங்குகின்றன. நாடு விடுதலை அடைந்த சமயத்தில் 22,216 அஞ்சல் நிலையங்களே இயங்கின. அஞ்சல் நிலையங்களின் வளர்ச்சி, புறப்பணியாளர்களின் துணையின்றிச் சாத்தியமாகியிருக்காது. தற்போது 2,94,372 புறப் பணியாளர்கள் அஞ்சல் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

அஞ்சல் சேவையை மேம்படுத்துவதற்காக, இரவு நேர விமான அஞ்சல் சேவையை மீண்டும் தொடங்கவும், அஞ்சல் பொருட்களின் காகிதத் தரத்தை உயர்த்துவதற்கும், பணவிடைகளை 'ஃபாக்ஸ்' வாயிலாக அனுப்புவதற்கும் திட்டங்கள் உள்ளன.

## வாசனையோடு வளம்

வாசனைத் திரவிய எண்ணெய் மற்றும் பிசின் ஏற்றுமதி மூலம் 1991-92-இல் 56 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இப்பொருட்களின் ஏற்றுமதியில் 60 சதவிகிதம் அமெரிக்கா வாங்கியது. இத்துறையில் ஆண்டுக்கு 30 சதவிகித வளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. இவற்றின் ஏற்றுமதி முனைப்பிற்கு உதவும் முகமாக, இப்பொருட்களின் மீதான ஏற்றுமதி வரி ஓராண்டுக்காலத்துக்கு (1993 ஜூன் இறுதி வரை) விதிக்கப்படாது என அரசு சலுகை அளித்துள்ளது.

## ஐந்து நிமிடம் போதுமே!

உள்ளூர்த் தொலைபேசி அழைப்பு ஒன்றின் காலக்கெடு தற்போது ஐந்து நிமிடங்களாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இணைப்புகளைக் கொண்டிருக்கும் மின்னணுத் தொலைபேசித் தொடர்பகங்களில் இம்முறை அமலாகியுள்ளது. தில்லி, பம்பாய், அகமதாபாத், சூரத், பரோடா, ராஜ்கோட், சென்னை, கல்கத்தா, பெங்களூரில் இம்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சுருக்கப் பேசி, சீராகச் செயல்பட உதவிடுவோம்!

சென்ற ஆண்டில் ஏழு இலட்சம் புதிய தொலைபேசி இணைப்புகள் கொடுக்கப்பட்டன. இருந்தபோதிலும், இவ்வசதிக்காகப் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 24 இலட்சம் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

—நன்றி: 'தூவானம்'

# தருமபுரி மாவட்டத்தில் அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம்

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சீரிய தலைமையின் கீழ் செயல்படும் தமிழக அரசு, மக்கள் போற்றும் மகத்தான திட்டங்களைத் தீட்டி, அந்தத் திட்டங்களின் பலன் மூலை முடுக்குகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் செயல்படுத்தி வருகின்றது.

அரசுத் திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்து, அதன் பயனை அடைகின்ற வகையில் அரசு 'பல்வறு வகையில் விளம்பரப்' பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில், 18.7.92 முதல் 26.7.92 வரை தருமபுரி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் அரசு நலத் திட்டப்பணிகள் விளக்க முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம் முகாமினையொட்டி மாவட்டத் தலைநகர் தருமபுரியில் மாவட்ட விளையாட்டரங்கில் அனைத்துத் துறைகள் பங்கேற்கும் அரசுத் திட்டப் பணிகள் விளக்கப் பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது. இந்தப் பொருட்காட்சியில் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் 31 இடம் பெற்றிருந்தன. 4 கைத்தறிக் கூட்டுறவுச் சங்க அரங்கங்கள், 15 தனியார் அரங்குகள் ஆகியவை இடம் பெற்றன.

பொருட்காட்சியில் தினசரி கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், ஆறு வீடியோ திரையரங்கங்கள் அமைக்கப்பட்டு, அதில்- பல்வேறு துறைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட வீடியோ கேசட் மூலம், வீடியோ படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு, அரசுத் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தருமபுரி மாவட்டத்தில் இம்முகாமானது தருமபுரி கோட்டத்தில் உள்ள நல்லம்பள்ளி, பென்னாகரம், கம்பைநல்லூர், மொறப்பூர், கிருஷ்ணாபுரம் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய இடங்களிலும் கிருஷ்ணகிரி கோட்டத்தில் வேப்பணப்பள்ளி, கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, மத்தூர், காவேரிப்பட்டணம், பாலக்கோடு ஆகிய இடங்களிலும், ஓசூர் கோட்டத்தில் ஓசூர், பாகலூர், பேரிகை, சூளகிரி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி ஆகிய இடங்களிலும் நடைபெற்றது.

முகாம் நடைபெறும் நாட்களில், கோட்ட அளவில் தினசரி காலை 8 மணி முதல் இரவு 12 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**காலை நிகழ்ச்சிகள்**

குழந்தைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துணவு வழங்குதல், கால்நடைகளுக்கு இலவச மருத்துவம்,



## தமிழக மாவட்டங்களும் தலைநகரங்களும்

1. சென்னை - சென்னை-600 005
2. வட ஆர்க்காடு-அம்பேத்கர் - வேலூர்-632 001
3. தென்னார்க்காடு - கடலூர்-607 001
4. திருச்சிராப்பள்ளி - திருச்சிராப்பள்ளி-620 008
5. இராமநாதபுரம் - இராமநாதபுரம்-623 501
6. திருநெல்வேலி-கட்டபொம்மன் - திருநெல்வேலி-627 009
7. கன்னியாகுமரி - நாகர்கோவில்-629 001
8. தர்மபுரி - தர்மபுரி-636 705
9. நீலகிரி - உதகமண்டலம்-643 001
10. காமராசர் - விருதுநகர்-626 001
11. திண்டுக்கல் அண்ணா - திண்டுக்கல்-624 001
12. நாகப்பட்டினம் காயிதேமில்லத் - நாகப்பட்டினம்-611 001
13. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். - காஞ்சிபுரம்-631 501
14. திருவண்ணாமலை சம்புவராயர் - திருவண்ணாமலை-606 601
15. தஞ்சாவூர் - தஞ்சாவூர்-613 001
16. புதுக்கோட்டை - புதுக்கோட்டை-622 001
17. மதுரை - மதுரை-625 020
18. சேலம் - சேலம்-636 007
19. பெரியார் - ஈரோடு-638 001
20. கோயம்புத்தூர் - கோயம்புத்தூர்-641 018
21. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் - சிவகங்கை-623 560
22. வ.உ. சிதம்பரனார் - தூத்துக்குடி-628 001

- தகவல்: அ. கந்தசுவாமி

இலவசக் கண் பரிசோதனை, முதியோர் ஓய்வூதியம் பெறத்தகுதியான நபர்களைத் தேர்வு செய்தல், வங்கிக்கடனுதவி பெற ஆலோசனைகள் வழங்கி மனுக்கள் பெறுதல், இலவச நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்க மனுக்கள் பெறுதல், மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளல், ஏழைகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்குதல், சுய தொழில் தொடங்குவோர்க்குத் தக்க ஆலோசனை வழங்குதல், குடும்ப நலம் - சிறுசேமிப்பு பற்றி, தக்க ஆலோசனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**பிற்பகல் நிகழ்ச்சிகள்**

தீண்டாமை, மதுவிலக்கு, சிறுசேமிப்பு, தேசிய ஒருமைப்பாடு, வரதட்சணை ஒழிப்பு, மகளிர் கல்வி, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல், சாலை விதிகள் கடைப்பிடித்தல், அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுதல் ஆகியவை பற்றி, பொதுமக்கள், அலுவலர்கள் அடங்கிய குழு விவாதம் நடைபெற்றது.

**மாலை நிகழ்ச்சிகள்**

கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், நாடகங்கள், விளையாட்டு, கரகம், காவடி மற்றும் அரசு சாதனைகளை விளக்கும் வீடியோ படக்காட்சிகள் நடைபெற்றன.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் தருமபுரி மாவட்டத்தில் தினசரி மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரே நேரத்தில் மூன்று இடங்களிலும் காலை நிகழ்ச்சியாக மேலே உள்ள நலத்திட்டப் பணிகளும், பிற்பகல் நிகழ்ச்சியாக 3 இடங்களில் குழு விவாதமும், இரவு நிகழ்ச்சியாக ஒரே நாளில் 16 இடங்களில் நாடகங்கள் வில்லுப்பாட்டு போன்றவைகளும், 48 இடங்களில் வீடியோ படக்காட்சிகளும் நடைபெற்றன.

### கால்நடைச் செல்வம்

*சமீபத்திய கணக்குப்படி, நாட்டில் மொத்தம் 192.8 மில்லியன் மாடுகள், 79.1 மில்லியன் எருமைகள், 44.9 மில்லியன் செம்மறி ஆடுகள், 100 மில்லியன் ஆடுகள், 10.7 மில்லியன் பன்றிகள், 253.7 மில்லியன் கோழி-வாத்து பறவை இனமும், சுமை தூக்கப் பயன்படும் 3 மில்லியன் கால்நடைகளும் உள்ளன.*

*இவற்றின் மூலம் நாம் அடையும் பல்வேறு பயன்களின் மதிப்பு ரூ.445 பில்லியன் (1990-91)! இது, நமது வேளாண் உற்பத்தியில் 25 சதவிகிதமாகும். இவற்றின் மூலம் (1991-92-இல்), நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாலின் அளவு 56.4 மில்லியன் டன்கள்; முட்டைகளின் எண்ணிக்கையோ 22,002 மில்லியன்; கம்பளி அறுவடை 43.4 மில்லியன் கிலோ!*

ஆக, முகாம் நடைபெறும் 7 நாட்களில் 21 இடங்களில் நலத் திட்டப்பணிகள் விளக்க முகாமும், 336 இடங்களில் வீடியோ படக்காட்சிகளும், 94 இடங்களில் கலை நிகழ்ச்சிகளும், தலைமையிடப் பொருட்காட்சியும் சேர்த்து, சிறப்புற நடைபெற்றன.

நலத்திட்ட முகாம்கள் நடைபெற்ற இடங்களில் பல்வேறு துறையின் மூலம் சிறிய அளவிலான கண்காட்சிகளும் நடைபெற்றன. அந்தச் சிறிய அளவிலான கண்காட்சியைப் பொதுமக்கள் மிகவும் ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களும் அதில் பங்கேற்று, தங்களது துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

சம்பந்தப்பட்ட துறைகள் ஆற்றுகின்ற பணிகளை மக்கள் நேரில் கண்டு தாங்கள் அதன் மூலம் என்ன பயன்பெறமுடியும் என்பதை அறிந்து அரசு அலுவலர்களுடன் கலந்துபேசி நிவர்த்தி செய்து கொண்டனர்.

மாலையில் குழு விவாதத்திலும் அலுவலர்களும், மக்களும் கலந்துரையாடினர். மக்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினர். அலுவலர் அதற்கான தகுந்த விளக்கம் அளித்தனர். முகாம் நடைபெற்ற எல்லா இடங்களிலும் கூட்டம் நடத்தப்பட்டது. மக்கள் திரளாக

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தலைநகரில் நடைபெற்ற பொருட்காட்சி மற்றும் கோட்ட அளவில் நடைபெற்ற சிறிய பொருட்காட்சி ஆகியவற்றில் 30-க்கு மேற்பட்ட அரசுத் துறைகளும் அதைச் சார்ந்த அலுவலர்களும்-இடைவிடாது நடந்த ஒரு வார கால முகாமில் பங்கேற்றுச் சிறப்பாகச் செய்தனர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறையைச் சார்ந்த அலுவலர் அதிக அளவில் இதில் ஈடுபட்டு முகாம் ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம் தொடக்க விழா 18.7.92 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள் பொருட்காட்சியினைத் திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்றினார். மேலும் விழாவில் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் திட்டப்பணிகள் விளக்க முகாமினைத் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி, விழாப் பேருரையாற்றினர்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. சிங்காரம், டாக்டர் வி. புருஷோத்தமன், திரு. கே.ஏ. மனோகரன், திரு. எம். வெங்கடராமரெட்டி ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் அவர்கள் நன்றி கூறினார்.

அரசு திட்டப் பணிகள் விளக்க முகாம் நிறைவு விழா 26.7.92 அன்று நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். செய்தி சுற்றுலாத்துறைச் செயலர், திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த அரங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

இந்நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசு சிறப்புப் பிரதிநிதி (புதுடில்லி) மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே.வி. தங்கபாலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. இரா. நடேசன் அவர்கள் நன்றி கூறினார்.

- மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி

## உதவி

எண்ணூரில் உள்ள புதிய துறைமுகத்தை மேம்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.559.25 கோடி நிதி உதவி அளிக்கும். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக் கரியை எடுத்துச் செல்ல இத்துறைமுகம் பயன்படுத்தப்படும். இந்த நிதியுதவியைத் தவிர, எண்ணூர் துறைமுகத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.450.45 கோடியை அளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரதீப் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் இவ்வங்கி ரூ.559.89 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இந்தியாவில் உள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதற்கு டச்சு அரசாங்கம் தொழில்நுட்ப உதவியினை நல்கும்.

நன்றி 'தூவானம்'.

## அரசு மருத்துவமனைகளில் மறுவாழ்வு மையங்கள்



குடிப்பழக்கம் என்பதும் ஒரு நோய்தான். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இந்தக் குடிப் பழக்க நோயைக் குணப்படுத்தும் சக்தியும் தற்போது ஏற்பட்டுள்ளது.

மது மற்றும் போதை மருந்து பழக்கத்துக்கு ஆளானவர்களை அப் பழக்கத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரசு மருத்துவமனைகளில் மறு வாழ்வு மையங்கள் விரைவில் அமைக்கப்படும்.

எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இத்தகைய மையங்கள் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த மையத்தில் மருந்துவர்கள், சமூகநல ஊழியர்கள் உட்பட பல்வேறு வகையான மருத்துவத்துறை உதவியாளர்கள் இருப்பார்கள். நடப்பு ஆண்டிலேயே இந்த மையங்கள் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.



## விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்கள்



நமது நாடு ஒரு விவசாய நாடாகும். விவசாயமே நமது நாட்டின் மிகப் பெரிய தொழில் ஆகும். விவசாயத்தில் நமது நாட்டில் 70 சதவிகிதம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் மொத்த வருவாயில் முதலிடம் வகித்து வந்த வேளாண்மைத்துறை இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தோடு, வேளாண்மை போட்டியிட இயலவில்லை.

நாம் வேளாண்மையில் தன்னிறைவு பெறப் புதியபுதிய உத்திகளைக் கையாள வேண்டியுள்ளது. புதிய கன்னிப் பிரதேசங்களைப் பாசனப் பகுதியில் கொண்டுவருவதால், புதிய புதிய பாசன முறைகளைப் பயன்படுத்தி பாசன நீரைச் சேமித்துப் பாசனப் பகுதியைப் பெருக்கி, விளைச்சலைப் பன்மடங்குபெருக்கினாலும் வேளாண்மையில் இயந்திரத்தை உபயோகிப்போரின் பங்கு குறைவாக இருப்பதால் நாம் நமது இலட்சியக் கனவை நனவாக்க இயலவில்லை. அதனால் வேளாண் தொழில் மிகக்கடினமான தொழில் என்ற கருத்தையே நமது மக்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே விவசாயம் ஒரு பரம்பரைத் தொழிலாகத்தான் வளர்ந்து வருகிறது.

புதியவர்கள் வேளாண்மையில் நாட்டம் இல்லாமல் உள்ளனர். வானம் பொய்த்து விடுவதாலும், வேளாண்மை முறையின்றி உள்ளதாலும் விவசாயப் பெருமக்களே, பெரும்பாலும் இளைய தலைமுறையினரே நகரத்தை நோக்கி– வேறு தொழிலை நாடுகின்றனர்.

வேளாண்மையில் உள்ள பல வேறு இடர்ப்பாடுகளை உணர்ந்த வேளாண் பொறியியல் வல்லுநர்கள், வேளாண் தொழிலை இலகுவாக மாற்றத் தேவைப்படும் பல வேறு இயந்திரங்களை வேளாண்மையில் புகுத்தியுள்ளனர். வேளாண்மைக்குத் தேவைப்படும் முதல் மூன்று முக்கிய மூலப்பொருளான நிலம், நீர், விதை இவை மூன்றிலும் இயந்திரத்தின் மூலம் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தி வேளாண் தொழிலை இலகுவான தொழிலாக மாற்றிய தோடு அல்லாமல், வேளாண்மைத் தொழிலைப்பற்றி இளைய தலைமுறையினரிடையே கொண்டுள்ள ஒரு தவறான கருத்தைப் பெருமளவு மாற்றியுள்ளது. முறையான நேரத்தில் வேளாண் பொறியாளர்கள் ஆற்றிய பங்கு பெருமளவு போற்றதக்கதாகும்.

நமது இளைய தலைமுறையினரிடையே, வேளாண்மைத் தொழிலில் நம்நாடு தன்னிறைவு அடைய முடியும், அடையச் செய்யலாம் என்ற ஒரு நம்பிக்கை எழுந்துள்ளது.

**வேளாண் தொழிலில், பொறியாளரது பங்கு என்ன?**

வேளாண் தொழிலுக்குத் தேவைப் படும் நிலம், நீர், பயிர் (அ) விதை, மனித ஆற்றல் இவை அனைத்தும் நம் நாட்டில் தேவையான அளவு உள்ளன. ஆனால், தேவைப்படும் நேரத்தில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் வேளாண் தொழிலைச் செவ்வனே செய்ய இயலாது. இவை நான்கும் முறையற்றுப் பிரிந்திருந்தாலும், சேர்ந்திருந்தாலும் நினைத்த இலக்கை அடைய இயலாது. இந் நான்கின் சரிவிகிதச் சேர்ப்பினால் ஒரு நாட்டின் வரலாற்றை மாற்றி அமைக்க முடியும்.

வேளாண்மைக்கு அடிப்படையானது நிலம். நிலம் நல்ல முறை



## நினைத்ததைச் சாதிக்கும் நேர்மைவாதி!

நமது மாபெரும் தலைவர் பெரியார் தமக்குச் சரியெனப்பட்டதை எவருடைய தயவு தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாது, பட்டவர்த்தனமாகச் சொல்லுவார். அது மற்றவர்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ அதைப் பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. தம் கருத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுவார்களோ என்ற பயம், அவருக்கு இருப்பதே இல்லை.

பெரியார் தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்தரமானவை. ஆனால், அவர் பிடிவாதக்காரரல்ல. தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, நேர்மையான வழியிலேயே பாடுபடுவார்.

—சர் ஏ.டி. பன்னீர்செல்வம்

யில் விவசாயம் மிக இலாபகரமாகச் செய்யலாம் என்ற உண்மையை இன்று உலகம் உணர்ந்துள்ளது. இதனால் நேரமும், செலவும் மிக மிகக் குறைகிறது. விவசாயத்தில் பயன்பட்ட மனித ஆற்றலை மற்ற தொழில்களில் ஈடுபடுத்த ஒரு வாய்ப்பை இன்றைய இயந்திரங்கள் மனித சமுதாயத்திற்கு அளித்துள்ளன. இதைத் தவிர விவசாயத்தில் பயன்படக்கூடிய இயந்திரங்களைப் பராமரிக்க, பழுதுபார்க்க வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இன்றைய விவசாயத்தில் இயந்திரத்தின் ஆற்றலே, மனித ஆற்றலை விட அதிகமுள்ளது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

'பட்டம்' என்ற குறுகிய வட்டத்தை விட்டு விவசாயம் இன்று வெளி வந்துவிட்டது. இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் விவசாயத்தில் ஓராண்டுப் பயிர் என்ற நிலை மாறி 90 நாட்கள் பயிர் என்று ஆண்டு 3 போகம் நல்ல விளைச்சலை நாம் பெற முடிகிறது எனில், அவற்றிற்குப் பெருமளவு காரணம் விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களேயாகும். விஞ்ஞானத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது. புதிய புதிய உத்திகள், இயந்திரங்கள் கண்டுபிடிப்பதன் மூலம் வேளாண் சமுதாயத்தின் வேலை மிக மிக எளிதாக்கப் படுகிறது. வேளாண் விவசாயிகளும், இதை உணர்ந்து, விஞ்ஞானத்தோடு ஒன்றுபடத் தயாரானால் களர் மேட்டையும் புதிய பாசனமுறைகள் மூலம் நல்ல விளை நிலமாக்கலாம். ஐந்து ஏக்கரில் பத்து ஏக்கருக்கு உண்டான விளைச்சலைப் பெறலாம்.

இவ்வியந்திரங்களின் பலனை அதிகம் பெற வேளாண் மக்கள் முன் வரவேண்டும். நமது பயிர்ச் சாகுபடிப் பரப்பு நமது வேளாண் மக்களிடத்தில் சிறிய சிறிய பரப்புகளாகப் பிரிந்து இருக்கின்றன. சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் மொத்த சாகுபடிப் பரப்பில் 75 சதவிகிதம் உள்ளனர். இவர்கள் தங்களிடம் ஒற்றுமை இல்லாத காரணத்தால், இவ்வியந்திரங்களில் தனித்தனியே முதலீடு செய்து உபயோகப்படுத்துவது என்பது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இவர்கள் இதன் பயனை நன்கு உணர்ந்தாலும், தங்களது நிதி நிலைமையைக் கருத்தில் கொள்வதால், இயந்திரங்களின் பலன் இவர்களுக்கு ஒரு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. இதை நன்கு உணர்ந்த நமது அரசும், மண் தள்ளும் இயந்திரம், உழுவை மற்றும் தேர்வு செய்யப்பட்ட கருவிகளை மட்டும் வேளாண் பொறியியல் துறை மூலம் மிகக் குறைந்த வாடகைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தது. தற்சமயம் மேற்கூறிய இயந்திரங்களுக்கு வேளாண் மக்களிடத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. அதன் பலனை நன்கு உணர்ந்த விவசாயிகள் வங்கியின் மூலம் நிதி ஆதரவு பெற்று மிக முக்கிய இயந்திரங்களை, பொதுவாக உழுவையை வாங்கிப்பலனை அடைகின்றனர்.

இன்றைய விவசாயிகளின் பிரச்சினையை உணர்ந்த அரசு வேளாண் பொறியியல் துறையின் மூலம், சிறு, குறு விவாசாயிகளை ஒன்றுபடுத்தி, அவர்களது தொழிலுக்கு அடிப்படைத் தேவையான நீரை அவர்களுக்கு அளிக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் சமுதாயக் கிணறுகளை அமைத்து, ஒரு முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளது.

இதேபோல, சிறு, குறு விவசாயிகள் ஒன்றுபட்டு அரசிடமிருந்து, விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களைப் பெற்று அதன் பலனைப் பெறுவார்களேயானால், தமிழகத்தில் வேளாண்மையில் தன்னிறைவு பெறுவோம். நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு ஓர் முன்னோடியாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இராமு. சக்திவேலு, பி.இ.,
செயற் பொறியாளர் (வே.பொ.)
மற்றும்
பி.வி. சுப்பிரமணியன், பி.இ.,
உதவிப் பொறியாளர் (வே.பொ.)
சென்னை.



# சிக்கனமே சீரான வாழ்வு

சிக்கனந்தான் சிறந்ததொரு வாழ்வளிக்கும்
சிந்தையில் கொண்டுவிட்டால் உயர்வளிக்கும்
எக்கணமும் அதன்வழியே சிறந்ததாகும்
என்றுமில்லை துன்பமென்று மகிழ்ந்திடலாம்

வரவுக்குள் செலவுதனை அடக்கவேண்டும்
வகையற்ற செலவுகளை முடக்கவேண்டும்
பரவுகின்ற ஆசையை விலக்கவேண்டும்
பகுத்தறிவால் வாழ்வுதனைத் துலக்கவேண்டும்

பெருமைக்கு வழிவிட்டு அலையவேண்டாம்
பெருந்துன்பம் கொண்டுநிலை குலையவேண்டாம்
வரும் பொருளின் அளவுதனை அறியவேண்டும்
வந்ததற்குள் நம்வாழ்வை நடத்தவேண்டும்

வீட்டுக்குள் சிக்கனத்தை வளர்க்கவேண்டும்
விளைகின்ற நன்மையை உணரவேண்டும்
நாட்டுக்கும் அவ்வழியே நன்மையாகும்
நம்மவர்கள் கடைப்பிடித்து வாழவேண்டும்

—கவிஞர் பூவேந்தன்



யில் பண்படுத்தப்பட்டபிறகே விவசாயம் செய்ய இயலும். மேடான நிலத்தைச் சமன் செய்ய மண்தள்ளு இயந்திரம் (புல்டோசர்) பயன்படுகிறது. மனித ஆற்றலைப் பயன்படுத்திச்சமன் செய்ய ஆகும் செலவையும், நேரத்தையும் விட மூன்றில் ஒரு பங்கு நேரமும், செலவுமே புல்டோசர் மூலம் ஆகும். மேலும், மனித ஆற்றலின் மூலம் சமன் செய்வதை விட மிகத் துல்லியமாக , விரைவாகச் சமன் செய்ய புல்டோசரால் ஏதுவாகும். தோட்டப்பயிர் பயிரிடப்படும் நிலங்களைச் சமன் செய்வதால், நிலம் சிறிதளவும் வீணாகாமல் விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்ற இயலும்.

புல்டோசரால் சமன் செய்யப்பட்ட நிலத்தைப் பண்படுத்த உருவாக்கப்பட்ட இயந்திரம் உழுவை இயந்திரமாகும். உழுவை இயந்திரம் விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். நன்செய் நிலமானாலும், புன்செய் நிலமானாலும் பொன்விலமாக மாற்றுவது உழுவை இயந்திரமாகும்.

உழுவை இயந்திரத்தின் கருவிகளான தட்டுக் கலப்பை, கொத்துக் கலப்பை போன்ற கருவிகளை உபயோகித்து கன்னி நிலத்தை, விளை நிலமாக மாற்ற இயலும். 6 ஜதை மாடு கட்டி இருசால் ஏர் உழ, ஒரு ஏக்கருக்குச் சுமார் 6 மணி நேரம் ஆகும். ஆனால் 4 ஏக்கர் நிலத்தை உழ, இயந்திர உழுவை உதவியினால் சுமார் 8 மணி நேரத்தில் முடித்துவிடலாம். நேரமும் செலவும் மிகமிகக் குறையும். மேலும், விவசாயத்தில் அனைத்துப் பணிகளும் பருவத்தை முடிக்க வேண்டி இருப்பதால், இயந்திர உழுவை ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது.

கன்னி நிலத்தை ஆழப் பிளந்து நன்கு உலர வைத்தல் வேண்டும். அதன் பின்னரே அதை நன்கு உழுது விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்ற முடியும். ஒரு பருவமழை வந்த பின்னர், மாடு கட்டி பூமியைப் பிளந்து காய்த்லும், மறுபடியும் ஒரு பருவ மழை வந்த பின்னர் நன்கு உழுதலும், மறுபடியும் நன்கு காய்தலும் அவசியம். அடுத்த மழை வந்த பிறகே பயிர்ச் சாகுபடிக்குப் பக்குவமாக இருக்கும். இரு பருவ மழைக்கு (அல்லது) ஏறக்குறைய ஓராண்டிற்குப் பிறகே நிலத்தைப் பக்குவமாக மாற்ற இயலும், அதாவது நிலத்தடி நீரை உபயோகப்படுத்த முடியாத இடத்தில் ஓராண்டு ஆகும். நிலத்திலுள்ள ஈரப்பதத்தைப் பொறுத்தே மாடு கட்டி உழ இயலும். ஆனால், இயந்திர உழுவையில், தட்டுக் கலப்பை மாட்டிப் பூமியைப் பிளந்து நன்கு புரட்டுவது, மிக மிக எளிதானது. ஈரப்பதம் அதிகமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஓரிரு நாட்கள் காய்ந்த பிறகு கொத்துக் கலப்பையை மாட்டி பெருந்துகள்களை மிக மிகச் சிறிய துகள்களாக உடைத்து, விவசாயத்திற்கு ஏற்றமுறையில் மாற்ற இயலும். கன்னி பூமியை, விளை நிலமாக மாற்ற ஒரு வாரம் போதுமானது.

அதேபோல நன்செய் நிலத்தை நன்கு உழுது நிலத்தைப் பயிர் செய்ய சேறு ஆக்க வேண்டும். இதற்கு மாடு கட்டி கலப்பை ஓட்டினால், குறைந்தது 15 நாட்களாவது வேண்டும். ஆனால், சக்கரக் கலப்பை கொண்டு ஒரே மணி நேரத்தில் நன்கு நிலத்தைக்குழைத்து சேறாக்க இயலும். இயந்திர உழுவையில் முதல் உழவு மற்றும் இரண்டாம் உழவு மிக எளிதாக்கப்படுகிறது. அதனால், விவசாயம் என்பது பரம்பரைத் தொழில் என்ற வரைமுறையிலிருந்து விலகி, அனைவரும் நாடும் வண்ணம் ஏற்றதாக இயந்திர உழுவை மாற்றுகிறது.

இதைத்தவிர இயந்திர உழுவையைக் கொண்டு ஆழமற்ற கிணறுகளிலிருந்து நீர் இறைக்கவும், உரம் மற்றும் விளைபொருள் இவைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் உபயோகப்படுத்தலாம். இயந்திர உழுவைக்கு, விவசாயத்தில் பணியில்லாக் காலங்களில், மற்ற பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதால் உபரி வருமானம் அதிகரிக்கிறது.

இயந்திர உழுவையில் முதலீடு அதிகம் என்றால் மாற்று வழியாக சிறிய பவர்டில்லர்களை உபயோகப் படுத்தலாம். இதற்கு முதலீடு குறைவு: ஆனால், டிராக்டருக்குரிய அத்தனைச் சிறப்புகளும் இதற்குண்டு.

இதைத்தவிர, இயந்திர உழுவையினால் நிலத்தை ஓரளவு சமன் செய்தல், பரம்படித்தல் ஆகிய வேலைகளுக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். சுருங்கக் கூறினால், இயந்திர உழுவை விவசாயத்தை இயந்திர மயமாக்க உதவும் ஓர் அடிப்படை இயந்திரமாகும்.

விவசாயத்திற்கு நிலம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல நீரும் மிக முக்கியமான மூலப்பொருளாகும். மனிதன் கவலை ஏற்றம் கட்டி நீர் இறைத்த காலம் போய், நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் தேவையான நீரை மிக மிக ஆழ் துளைக் கிணறுகளிலிருந்து மேலேற்றி, பயிருக்குப் பாய்ச்சப்படுகிறது. ஆதலால், மழை பொய்த்துவிடினும் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் ஆழத்திலுள்ள நீரை மேலேற்றி பாசனம் பண்ண இயலும் என்ற ஓர் நம்பிக்கையை மக்களிடையில் ஊட்ட முடிந்ததால், விவசாயம் அனைவரும் நாடும் தொழிலாக மாற்ற முடிந்தது.

நீர் இறைக்கும் இயந்திரம் விவசாயத்திற்குக் கிடைக்கப்பெற்ற மற்றுமோர் அரிய வரமாகும். அதனால், கவலை மற்றும் ஏற்றம் கூட்டி இறைப்பதற்கு வசதியாகப் பெரிய விட்டமுள்ள, குறைந்த ஆழமுள்ள திறந்த வெளிக்கிணறு அமைப்பதை விட்டுவிட்டு, நீர்த்



"இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டில் மகத்தான ஒரு சமுதாயப் புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கிறது. திராவிடர் கழகத் தலைவர் பெரியார்தான் அந்தப் புரட்சியைச் செய்தவர் என்பது அமெரிக்காவிலுள்ள மூத்த பேராசிரியர்களின் கருத்து ஆகும்".

- அமெரிக்கப் பேராசிரியர் ஜான்ரைலி.

(ஆதாரம்: 'ஆனந்த விகடன்' 16.7.1972)



தேவைக்கேற்றபடி மிக மிக ஆழமுள்ள குழாய்க்கிணறுகள் அமைக்க முடிந்தது. திறந்தவெளிக் கிணறு அமைக்கும் செலவு மற்றும் நேரத்தை விட, ஆழ்துளைக் கிணறு அமைக்க ஆகும் நேரம் மற்றும் செலவு மிக மிகக் குறைவு. நீர் கிடைக்கும் ஆழத்தைப் பொறுத்து நீர் மூழ்கி இறைக்கும் இயந்திரம் அல்லது சாதாரண நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவற்றைப் பொருத்திக் கொள்ளலாம்.

இதுமட்டுமல்லாமல், கிடைக்கும் நீரை நன்செய் மேட்டு நிலத்திற்கும் எடுத்துச் சென்று குழாய் மூலம் பாசனம் செய்வதற்கு முயலுவதால் நீர்ப்பாசனம் என்பது இளம் பாலகனுக்கும் புரிந்த, இயலுகின்ற ஒன்றாக முடிகிறது. நீர் இறைக்கும் இயந்திரம் இருப்பதால், மழை இல்லாவிடினும், ஓர் ஆழ்துளைக் கிணறு அமைத்து, நிலத்தின் எந்த மூலைக்கும், எந்த மேட்டுக்கும் நீர் பாய்ச்ச முடியும். அதனால், மானாவாரி சாகுபடி என்ற பிரிவு இனி வருங்காலத்தில் தோட்டப் பயிர்ச் சாகுபடிப் பிரிவு என்று மாறும். மானாவாரிச் சாகுபடி என்ற சொல்லே பழக்கத்திலிருந்து அறவே விடுபடும் என்பதில் சிறிதளவும் ஐயமேயில்லை.

இதற்கும் ஒருபடி முன்னேறி இன்று பாசனம் மிக மிக எளிதாக்கப்பட்டுவிட்டது. கிடைக்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய பாசன முறைகளான, தெளிப்புப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், இரட்டைக் குழாய் நுண்பாசனம் என்று முன்னேறியுள்ளது. பயிருக்கு நீர்த் தேவையான வேர்ப் பகுதியில் பாசனம் செய்யப்படுவதால், நீர்த் தேவை மிக மிகக் குறைகிறது. அதனால், அதிகப்படியான நிலத்தைச் சாகுபடியின் கீழ் கொண்டுவர முயலுகின்றது. இதைத் தவிர, இச் சிக்கனப் பாசன முறையிலேயே உரம் மற்றும் மருந்துகள் பயிருக்கு அளிக்க முடிவதால் 'ஒரே கல்லில் இரு மாங்காய்' என்ற பழமொழி பழைய மொழியாகி, இன்று 'ஒரே கல்லில் பல மாங்காய்' என்று நம்மால் பல இடத்தில் அடிக்க இயலுகிறது.

இன்று பாசனம் என்ற ஒரு சொல் 'பயிர்களுக்கேற்றவாறு பாசனம்' என்று பலவகையாகப் பிரிந்து பாசனத்தில் நம்நாடு ஓர் நுணுக்கமான அறிவைப் பெற்றிருக்கிறது.

பயிர்

விவசாயத்திற்குத் தேவையான மற்றொரு மூலப்பொருள் விதையாகும். நல்ல விதை நல்ல விளைச்சலைக் கொடுக்கவல்லது. நல்ல விதையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க நம்மால் முடியும். வேளாண் பொறியாளரது உதவியால் நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க முடியும். விதைப் பிரிப்பு இயந்திரம் மற்றும் விதைச் சுத்திகரிப்பு இயந்திரம் இவற்றை உபயோகிப்பதால் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுக்க இயலும். அதனால் நல்ல விளைச்சலைப் பெற இயலும், நல்ல விதையைத் தேர்ந்தெடுத்த பிறகு விதைக்கும் இயந்திரம் (Seed Drilles) மூலமாகச் சிலவகை எண்ணெய்ப் பயிர்களை விதைக்க இயலும். அதனால் ஆட்கூலியும், வேலையும் மிக மிகக் குறைகிறது. பயிருக்குப் பயிர் விட வேண்டிய தூரம் மிகத்துல்லியமாகப் பராமரிக்க முடியும். போதுமான இடைவெளி இருப்பதால் நல்ல விளைச்சலைப் பெறமுடிகிறது.

பயிர் நன்கு வளர்ந்த பின், மருந்து தெளிப்பதற்குப் பாசன முறையில் அன்றி ஸ்பிரேயர் மூலமாகவும் மருந்து தெளிக்கலாம். அதனால் மருந்து எல்லாப் பயிர்களுக்கும் ஒரே சீராகத் தெளிக்க முடிகிறது. கையினால் தெளிக்க முடியாத மருந்துகளை ஸ்பிரேயர் மூலமாகத் தெளிப்பதால் விவசாயிகளுக்கு உண்டாகும் ஆபத்தைத் தவிர்க்க முடிகிறது. நேரமும், செலவும் மிச்சமாகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பயிர் அறுவடைக்குத் தயாராகும் போது, அறுவடை இயந்திரம் மூலம் அறுத்தெடுத்து, தானியத்தை தனியாகப் பிரித்தெடுக்கலாம். அதேபோல எண்ணெய் வகைப் பயிரான மணிலாக் கொட்டையைப் பிரித்தெடுக்க இயந்திரம் உள்ளதால் பல நாட்கள் மனிதன் செய்ய வேண்டிய வேலையை இயந்திரம் சிலமணி நேரத்தில் முடித்து விடுகிறது.

அறுவடைக்குத் தயாரான பயிர்களை அறுத்தெடுத்து தானியத்தை உமி மற்றும் தோலிலிருந்து பிரித்தெடுத்து தரம் வாரியாக மெருகேற்றிப் பிரித்து மூட்டை கட்டிப் போடுமளவிற்கு இன்று இயந்திரங்கள் மார்க்கெட்டில் குவிந்துள்ளன. அவற்றை உபயோகிப்பதால் அறுவடை முடிந்த அடுத்த நாளில் சந்தைக்குத் தானியத்தையோ, பயிர்வகைகளையோ அனுப்ப முடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

நமது விவசாயிகள் இன்னும் சிறிதளவு மனம் மாறி விஞ்ஞானத்தோடு ஒன்றுபட்டு முன்னேறத் தயாரானால் நாற்று நடவும், களையெடுக்கவும் இயந்திரங்கள் மார்க்கெட்டில் குவிந்து விடும். அவர்களது வேலை மிக மிக எளிதாக்கப்பட்டு விடும். அதனால் அவர்களது மீதியுள்ள மனித உழைப்பை, இயந்திரங்கள் இல்லாத பகுதியில் செலவு செய்ய முன்வருவார்களானால், நமது நாட்டில் பொருளாதாரம் மற்ற நாட்டின் பொருளாதாரத்தை மிஞ்சி, பொறாமைப்படத்தக்க வகையில் அமையும்.

மனித ஆற்றல்

ஒரு காலத்தில், விவசாயம் முழு அளவு மனித ஆற்றலை நம்ப வேண்டியிருந்தது. விவசாயம் பருவத் தொழில் ஆகையால் கூலியாட்கள் கட்டுப்பாடு அதிகம் இருந்தது. ஆனால், இன்று வளர்ந்துள்ள சமுதாயத்தில் இயந்திரத்தின் பங்கு அதிகமாகி மனித ஆற்றலின் பங்கு மிக மிகக் குறைந்துள்ளது. மிகக் குறைந்த மனித ஆற்றலைப் பயன்படுத்தி, பல ஏக்கர் பண்ணை

பால

உலகில், அதிகக் கால்நடைகளைக் கொண்டிருக்கும் நாடு என்ற பெருமை நமக்கு உண்டு. பால் உற்பத்தியில் உலகில் மூன்றாவது இடத்தை இந்தியா வகிக்கிறது. 1980-81-இல் 3.16 கோடியாக இருந்த பால் உற்பத்தி, 1990-91-இல் 5.37 கோடி டன்களாக அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆண்டுதோறும் 40 இலட்சம் கறவை மாடுகள் அதிகம் தேவைப்படுகின்றன. இதற்கு ஆண்டுக்கு 3 கோடி கால்நடைகளைக் கருவுறச் செய்யவேண்டும்.

## மாணவர் பக்கம்:



## மயிலே! மயிலே!

இந்தியாவின் தேசியப்பறவை மயில் என்று உங்களுக்குத் தெரியும்.

மயில்களில் இரண்டு வகை உண்டு. இந்தியாவிலும், இலங்கையிலும் காணப் படும் மயில் நீல மயில் என்றும், மலேசியா, இந்தோனேஷியா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் காணப் படும் மயில், பச்சை மயில் என்றும் அழைக்கப்படுகிறது.

பச்சை மயிலுக்கே மதிப்பு அதிகம். அதாவது, அந்த மயிலுக்கே விலை அதிகம். நன்கு தோகை வளர்ந்த ஒரு இணை மயில்களின் விலை எவ்வளவு தெரியுமா? சுமார் 28,000 ரூபாய்!

பச்சை மயில்களின் வண்ணத் தோகை கண்ணைப் பறிக்கும். இதில் ஆண்-பெண் இரண்டும் அடங்கும். ஆனால், இந்தியாவில் உள்ள நீலமயில் வகையில் ஆண் மயில் மட்டுமே அழகு டையது வண்ணத் தோகை கொண்டது. பெண் மயிலின் வண்ணம் சுமாராகத் தான் இருக்கும்.

பிரிட்டனில், நாரிச் எனும் நகருக்கு அருகில் மிகப் பெரிய மயில் பண்ணை உள்ளது. இங்கு ஆயிரம் மயில்கள் உள்ளன.

ஐரோப்பாவில், மயில்களைச் செல்லப் பறவைகளாக வளர்க்கிறார்கள்.

—ஆதாரம்: தினமணி



## எல்லாரும் ஒன்று

(மயிலை முத்தெழிலன்)

இந்தியா என்பது நம்நாடு;
இன்பத். தமிழகம் நம்வீடு!
இந்தியப் புகழைத் தினம்பாடு;
இந்தியங் காக்கப் பாடுபடு!

ஆற்றுச் செல்வம் நமக்குண்டு;
அன்னைத் தமிழோ கற்கண்டு!
ஏற்றம் கொண்ட குறளுண்டு;
எண்ணிலா இயற்கை வளமுண்டு!

நல்லவர் வழியில் சென்றிடுவோம்
நம்பகை யாவும் வென்றிடுவோம்!
எல்லாரும் ஒன்றென வாழ்ந்திடுவோம்;
என்றும் மகிழ்வில் ஆழ்ந்திடுவோம்!







# நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே நேரத்தைச் செலவிடுங்கள்!

## மாண்புமிகு முதல்வர் உரை

தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள் வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், இந்தப் பள்ளிக்கூடம், எனது 'தாய் வீடு' போன்றது. எனது வாழ்வில் மகிழ்ச்சியான நாட்கள் பலவற்றை, நான் இங்குக் கழித்திருக் கிறேன்.

அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது 1964-ஆம் ஆண்டு நடந்த விளையாட்டு விழா. அதில் நான் ஒரு மாணவியாகக் கலந்துகொண்டேன். அத் துடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவிகளில், ''சிறந்த மாணவி''க்கான சுழற் கேடயத்தையும் நான் பெற்றேன்.

சுமார் 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும், அந்த இனிமையான நிகழ்ச்சி எனது நெஞ்சில் பசுமையாக உள்ளது.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் உயர் கல்வி பயில பெரிதும் விரும்பினேன். ஒரு கல்லூரியில் இடமும் கிடைத்தது. ஆனால், அந்த இளமையான வயதில் எனது குடும்பத்திற்குத் துணைபுரிய வேண்டிய பொறுப்பு எனது தோளில் விழுந்தது. அதனால், தொடர்ந்து படிக்க இயலவில்லை. இப்போது, முதலமைச்சர் என்ற முறையில், தமிழகத்தின் நிர்வாகத்தை நடத்திச் செல்லும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுள்ளேன்.

நாங்கள் படிக்கும்போது டெலிவிஷன், வீடியோ போன்ற மாணவ மாணவிகளின் கவனத் தைத் திசை திருப்பும் சாதனங்கள் இல்லை. இப்போது இதுபோன்ற ஏராளமான பொழுது போக்குச் சாதனங்கள் வந்துவிட்டன. இவற்றுக்கு மத்தியில் மாணவ-மாணவிகள் மணிக்கணக்கில் டெலிவிஷன், வீடியோவின் முன்பு உட்கார்ந்திருப் பதை அறிகிறேன். இது அவர்களின் உடலுக்கும், மனதுக்கும் கேடு விளைவிக்கும்.

எனவே, உங்களது நேரத்தை, அதிகப்பட்சம் நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே செல விடுங்கள். மாணவப் பருவத்தில் படிப்பவைதான்



மனதில் நிறையும். அது, உங்கள் வாழ்வின் இறுதி வரை துணை நிற்கும். நான், இன்று வரையில் ஒவ்வொரு இரவிலும் படிப்பதற்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கி வருகிறேன்.

கடந்த 1964-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தின் சார்பில் சுழற்கேடயம் வழங்கப்பட்டது. ஆங்கிலத் திறமை, பொது அறிவு, விளையாட்டு, கலை நிகழ்ச்சி போன்றவற்றுக்காக அந்தக் கேடயத்தை நான் பெற்றேன்.

இப்படி ஒட்டுமொத்த திறமைக்கான பரிசைப் பெற்ற கடைசி மாணவி நான்தான் என அறிகிறேன். இதற்கான காரணம் இதுபோல் எல்லாத் திறமையும் ஒருங்கிணைந்த மாணவியாக யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதுபோன்ற சிறந்த மாணவிகளை உருவாக்கி, அவர்கள் படிப்பை முடித்து வெளியேறும்போது, சுழற்கேடயம் வழங்கும் முறையை மீண்டும் கொண்டுவந்தால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இதற்கான கேடயத்தை நானே வழங்குகிறேன்.

அத்துடன், எனது சொந்தப் பணத்தில் இருந்து ஒரு இலட்ச ரூபாயைப் பள்ளிக்கூடத்திற்காக வழங்குகிறேன்.''

**(தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விளையாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 29.8.92 அன்று ஆற்றிய உரை)**

## பொன் மொழிகள்

**மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடு அடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.**

**- தந்தை பெரியார்.**

**நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.**

**- பேரறிஞர் அண்ணா.**

**உண்மை, அன்பு, மனத்தூய்மை இவற்றை எதிர்க்க எதனாலும் முடியாது. நீ மனத் தூய்மை உள்ளவனாக, தன்னலமற்றவனாக, அன்பானவனாக இருந்தால், சாவைக்கூடக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை.**

**- சுவாமி விவேகானந்தர்.**

**உங்கள் வீட்டுத் திண்ணை சும்மா இருக்குமானால், அதை ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாற்றுங்கள். அது ஒரு கோவிலைக் கட்டியதற்கு ஒப்பாகும்.**

**- மூதறிஞர் இராஜாஜி.**





# ஆசிரியர் தின விழா

மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரும், இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவருமான டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள், ஆசிரியர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இவ்வாண்டு ஆசிரியர் தின விழா 5.9.1992 அன்று, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு நல்லாசிரியர்களுக்கு விருதுகளையும், 1992 பொதுத் தேர்வுகளில் மாநிலத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசுகளையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றுப் பேசுகையில், ''ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு தலைமையாசிரியர் மூலமாக அனைத்து ஆசிரியர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முறையாக வாழ்த்துரை அனுப்பியிருக்கிறார்கள். சமுதாயத்தில் உள்ள அனைவரும் ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஆசிரியர் தின விழா கொண்டாடப்படுகிறது. அரசின் சார்பில் மக்கள் ஆதரவோடு இந்த விழா நடைபெறுகிறது.

''மற்ற தொழில்களுடன் போல ஆசிரியர் தொழிலை ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. மாணவர்கள் அனைவரையும் அறிவுடையவர்களாக, ஆற்றல் உடையவர்களாக ஆக்கும் மகத்தான பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. எனவே, ஆசிரியர் பெருமக்கள் சமுதாயச் சேவையாக, மக்களுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி ஆசிரியர் பணியில் ஈடுபட வேண்டும். அன்புள்ளத்தோடு செய்யும் தொழில் ஆசிரியர் தொழில். ஆகவேதான், ஆசிரியர்களைப் போற்றுகிறோம். அவர்களது தன்னலமற்ற சேவைக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்''. என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சார்பில் ஆசிரியப் பெருமக்களுக்கு இரண்டு செய்திகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1. 1990-91, 1991-92 ஆகிய இரு ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுநிலை ஆசிரியர்களை முந்தைய ஆட்சி நியமித்தது. அதை

# தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்துக்குப் பாராட்டு!

**1986**-87-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் 6 மாவட்டங்களில் டேனிடா திட்டத்தின் கீழ் முதல்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திட்டங்களை டென்மார்க் நாட்டிலிருந்து வந்த டேனிடா திட்ட அலுவலர்கள் அண்மையில் தமிழகத்திற்கு வருகை செய்து பார்வையிட்டனர். மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டில் இந்தத் திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாக இந்த அலுவலர்கள் பாராட்டு தெரிவித்தார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, டேனிடா திட்டத்தினைப் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த டென்மார்க் நாட்டு அலுவலர்கள் இசைவு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற ரூ.15 கோடி நிதியுதவி வழங்க இந்தக் குழு உறுதியளித்துள்ளது.

**பெண்களுக்குப் பயிற்சி:** இந்த டேனிடா 2-வது கட்ட திட்டத்தின்கீழ், மகளிர் பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இதன்படி அடுத்த ஏழு ஆண்டுகளில் ஆண்டுகளில் 70 ஆயிரம் பெண்கள் வீதம் சுமார் 5 இலட்சம் பெண்களுக்கு, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற விவசாயப் பணிகளில் பயிற்சி அளிக்கப்படும். பெண் விவசாய அலுவலர்கள் மூலம் இந்தப் பயிற்சியை அளிக்க அரசு பரிசீலனை செய்து வருவதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அன்று எதிர்க்கட்சியாக இருந்த எங்கள் அ.இ.அ.தி.மு.க. கட்சி எதிர்த்தது. வன்மையாகக் கண்டித்தது. ஒரே தகுதியுள்ள ஆசிரியர்களில் புதிதாக நியமிக்கப்படுபவர்களைக் குறைந்த சம்பளம் (தொகுப் பூதியம்) கொடுத்து வேலை வாங்குவது கொத்தடிமை முறைக்குச் சமமாகும் என்று கண்டித்தோம். ஆகவே, ஒப்பந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து வருகிறார்கள்.

2. நோய்வாய்ப்படும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து இதுவரை ரூ.950 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், சில ஆசிரியர்கள் இருதய, சிறுநீரக மற்றும் புற்று நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற இந்தத் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இந்த உதவித் தொகையை ரூ.25 ஆயிரமாக உயர்த்துவது குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து வருவதாகக் கூறினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், "நாட்டில் எந்தக் செல்வத்தையும்விட சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அறிவுச் செல்வம் எந்த அளவுக்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நாடு வளருகிறது. அறிவுத் திறனை மட்டும் வளர்த்தால் போதாது. ஆற்றல் திறனையும் வளர்க்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்ப அறிவியலாக மாற்றப்பட வேண்டும். குழந்தைகளை அறிவாளிகளாக ஆக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

1901-இல் தமிழ்நாட்டில் 100-க்கு 6 பேர்தான் எழுதப்படிக்க தெரிந்தவர்களாக இருந்தனர். ஆனால், இன்று 100-க்கு 64 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆக்கப்பட்டு தமிழகம் எழுத்தறிவில் இந்தியாவில் இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது.

"தமிழக அரசு இந்த ஆண்டு கல்விக்காக ரூ.1,518 கோடி ஒதுக்கியிருக்கிறது. மாநிலத்தின் வருவாயில் 23 சதவிகிதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. ஆண்டுக்கு ஆண்டு ஆசிரியர்களின் வசதி வாய்ப்புகளும் வளர்ந்து வந்திருக்கின்றன. கல்வியின் மூலமாகத்தான் அறிவுச் செல்வத்தையும், ஆற்றல் செல்வத்தையும் நாம் பெறமுடியும். ஆசிரியப் பணியிலிருந்து விலகிய பிறகும் தங்கள் தொண்டு தொடர வேண்டும்.

பிறருக்கு எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் 228 ஆசிரியர்களுக்கு 'நல்லாசிரியர் விருது'களையும், 1992 எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளி (பிளஸ் 2) பொதுத் தேர்வுகளில் அதிக மதிப் பெண்கள் பெற்ற 193 மாணவ மாணவியர்க்குக்குக் காசோலையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் ஆசிரியர் தேசிய நல நிதிக்கு, சென்னை மாவட்டத்தின் சார்பாக ரூ.4 இலட்சத்து 35 ஆயிரத்துக்கான காசோலையை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலச்சந்தர் இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சரிடம் வழங்கினார்.

முன்னதாக, கல்வித்துறைச் செயலர் திரு. வி. சங்கர சுப்பையன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. தி. நாச்சிமுத்து அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் ஏராளமான பள்ளிக் குழந்தைகளும் கலந்து கொண்டனர்.

முன்னதாக வண்ண உடை அணிந்த பள்ளி மாணவிகள் அமைச்சர்களை மலர்தூவி வரவேற்றனர்.

**ஜே. சந்திரன்.**





# நூற்றாண்டு விழாக் காணும் முன்னாள் மேயர் என். சிவராஜ்

ந.அ. கருணாகரன்

**1992**, செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாள், சென்னையின் முன்னாள் மேயர் ஆதிதிராவிட மக்களின் நல்வாழ்வுக்காக அரும்பாடுபட்ட மறைந்த பெரியவர் என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளாகும்.

அப்பொழுது சென்னை மாநிலத்தின் ஓர் ஊராகவும், இப்போது ஆந்திர மாநிலத்தில் உள்ள ஊராகவும் உள்ள கடப்பையில் 1892-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் நாள் பிறந்தார் என். சிவராஜ். இவரது தாயின் மூத்த சகோதரர் வி.ஜி.வேணுகோபால் இல்லம் கடப்பையில் இருந்தது.

மூன்று மாதங்கள் வரையில் கடப்பையிலும், பின்னர் சென்னை இராயப்பேட்டையிலும் வளர்ந்தார். நான்காம் வகுப்பு வரை வீட்டிலேயே பயின்று 1902-இல் சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் சேர்ந்து படித்து, வெஸ்லி கல்லூரியிலேயே இண்டர் மீடியட்டை முடித்து, சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டத்தையும், சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டத்தையும் பெற்றார்.

வி.ஜி. வேணுகோபால் பிள்ளை அவர்களின் இளைய சகோதரர் வி.ஜி. வாசுதேவ பிள்ளையின் மகள், மீனாம்பாளை 1918 ஜூலை 10-இல் சிவராஜ் அவர்கள் திருமணம் செய்துகொண்டார். அவரது தாய் மாமன்களாகிய வேணுகோபால் பிள்ளை, வாசுதேவப் பிள்ளை இருவருமே நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்கள். சென்னை மாநகராட்சி, மீனாம்பாளின் தந்தையின் பெயரில் வட சென்னையில் வாசுதேவப் பிள்ளைத் தெருவையும், வாசுதேவப் பிள்ளைப் பூங்கா ஒன்றையும் அமைத்தது. சிவராஜ் அவர்கள் நீதிக் கட்சியில் சேர்ந்து தீவிரமாக ஈடுபட்டதற்குக் காரணமே அவரது தாய் மாமன்கள் தாம். அவரது செயல்பாட்டிற்கெல்லாம் அவரது மனைவி மீனாம்பாள் உறுதுணையாக நின்று ஊக்குவித்தார்.

1923-இல் திரு. சிவராஜ் சென்னைப் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக இருந்திருக்கிறார். மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் செனட் உறுப்பினராக விளங்கி, பணியாற்றி வந்தார். சென்னை சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியில் அமர்ந்து பின்னர் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். 1926 முதல் 1936 வரை சென்னை சட்ட மன்றத்தில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினராக விளங்கி வந்தார்.

1929 ஆகஸ்ட் 25-இல் மதுரையில் நடைபெற்ற மதுரை மற்றும் இராமநாதபுரம் தென் இந்திய நல உரிமைச் சங்க இளைஞர் மாநாட்டிற்குத் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றினார். ஆந்திராவில், நெல்லூரில் 1929 அக்டோபர் 5,6 நாட்களில் திரு. எம். முனுசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் 11-வது மாநில மாநாட்டில் திரு. என். சிவராஜ் கலந்து கொண்டு, சர்.பி. பாத்ரோ, பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோரை ஆதரித்துப் பேசினார்.

ஆங்கில அரசு ஏழு அங்கத்தினர்கள் அடங்கிய சைமன் குழுவுடன் ஒன்பது இந்திய உறுப்பினர்களைக் கொண்ட இந்திய

**நான்காம் ஆட்டை சொல்லும் செய்தி:**

**சென்னையின் முன்னாள் மேயர், மறைந்த திரு. என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதெனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சென்னை, இராயப்பேட்டையில் அவர் வாழ்ந்த ஆண்டித் தெருவுக்கு 'மேயர் சிவராஜ் வீதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட திரு. என். சிவராஜ் அவர்களின் நினைவாக, சென்னையில் வெண்கலத்தால் செய்யப்பட்ட அவருடைய சிலை ஒன்று நிறுவப்படும்.**

**(தமிழ்நாடு சட்டப்பேரவையில் 25.3.1992 அன்று நடைபெற்ற செய்தி-சுற்றுலாத்துறைக் கொள்கை விளக்கக் குறிப்பில்)**

# மகாகவி பாரதி



## மக்கள் கவிஞர்

சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த தேசியச் சிமிழ்களில் அவற்றை அடைத்து. விட முடியாது. புராதன சம்பிரதாயங்களின், கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி, ஆவேசமாக எறிகிறார் அவர் சுடுசொற்களை.

பாரதியை, 'தேசியக்கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒருசாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம், கவிஞரின் மற்றொரு தன்மையை-அதாவது பாரதி மக்கள் கவிஞர் என்ற உண்மையை - மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

—பேரறிஞர் அண்ணா

## உலகக் கவி

பாரதி தமிழ்நாட்டின் கவி மட்டுமல்லர்; அவர் உலகக் கவி. அவருடைய கவிதைகளை எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டும்.

—பண்டித நேரு

## தமிழன் பெற்ற பேறு

மாகாண மொழிகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குஜராத்தி, மராத்தி போன்றவற்றினிலே, சென்ற முந்நூறு ஆண்டுகளிலே பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார் தமிழ்நாட்டில் திரு அவதாரம் செய்தது தமிழர்களுக்குக் கிடைத்த பாக்கியமாகும்.

—மூதறிஞர் ராஜாஜி

## உலகக் கவிஞர்

பாரதியார் உலகக் கவிஞர், உலகமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழத் தகுந்த உயரிய எண்ணங்களையும், கருத்துக்களையும் அவரது பாடல்களில் காணலாம்.பாரதியின் பாடல்களை அச்சில் படிப்பதைவிட, அதனைப் பிறர் உணர்ச்சியோடு பாடக் கேட்பதால் பெரும் பயன் ஏற்படும்.

—பெருந்தலைவர் காமராஜர்

## வளர்ச்சி

என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு, பாரதியின் தோழமையினால் விளக்குப்போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

—வ.உ.சிதம்பரனார்.





# வாழ்த்துவோம் வணங்குவோம்

எஸ். நல்லரசு

### செப்டம்பர் - 15!

தமிழ்நாட்டின் வரலாற்றில் இது ஒரு நன்னாள்! பேரறிஞர் அண்ணா பிறந்த பொன்னாள்! நம் கண்ணில் படுவது அண்ணா சிலை! அண்ணா சாலை! அண்ணா சதுக்கம்! அண்ணா மேம்பாலம்! அண்ணா பல்கலைக் கழகம்! அண்ணா மாவட்டம்!

இப்படி எங்கு சென்றாலும் நம் கண்ணிலும் கருத்திலும் நீக்கமற நிறைந்து நிற்கும் அண்ணா, தமிழ் நாட்டின் தலைசிறந்த தலைவராக, தமிழகத்தின் முதல்வராக, தரணியெங்கும் வாழும் தமிழ் மக்களின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டின் பெயரையும் புகழையும் உலகெல்லாம் பரப்பி உயர்ந்தார்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக'', என்றார் வள்ளுவர். வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு ஏற்பப்புகழோடு தோன்றி, புகழோடு வாழ்ந்தவர், தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர் பேரறிஞர் அண்ணா. 1909-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க காஞ்சிபுரத்தில் பிறந்தார்.

தமிழக மக்களின்பால் அவர் பொழிந்த அன்பாலும், அருள் தொண்டாலும் மக்களுக்கு அவர் அண்ணனானார். 'அண்ணா, அண்ணா' என்றே தமிழக மக்கள் அனைவராலும் அழைக்கப்பட்டார்; போற்றப்பட்டார்.

எம்.ஏ. பட்டம் பெற்ற அண்ணா இந்த நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தன்னை ஒப்படைத்தார். அவர் படித்து முடித்த காலத்தில் பதவிகளெல்லாம் அவரை எதிர்கொண்டு அழைத்தன. படித்த படிப்பை எல்லாம் பதவிக்குப் பாத காணிக்கையாக்கிட, அண்ணா விரும்பவில்லை.

பாராண்ட தமிழினம், 'பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டுக்' கிடந்ததைக் கண்டார். சாதிமத பேதங்களால் முட்டி மோதிக் கொண்டு சீரழிந்து கிடந்தது சமுதாயம். வறுமையில் வாடிக்கொண்டு தனது தாழ்நிலைக்குத் தலைவிதிதான் காரணம் என்று மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தனர் மக்கள்.

இந்தச் சமுதாயத்தைத் திருத்தித் தன்மான உணர்வூட்டி, பழம் பெருமை மீட்டித் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்திட தனது வாழ்வை அர்ப்பணித்தார். ஈரோட்டுச் சிங்கம், சீர்திருத்தச் செம்மல், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைத் தம் தலைவராகக் கொண்டார்.

தந்தை பெரியார் அண்ணாவுக்குத் தலைவர்; அனைவருக்கும் பெரியார். அவருடைய பிறந்த நாள் அடுத்து வருகிறது செப்டம்பர் 17-இல். தந்தையும் தனயனுமாய் இலட்சியத்தால் பிணைந்த இருவரது பிறந்த நாளும் இணைந்து வருகின்றன ஒரே வாரத்தில்.

பாவலர் பாராட்ட, காவலர் தாலாட்ட, கற்றறிந்தோர் சீராட்ட வளர்ந்த தமிழுக்கும், பத்தாக, எட்டாக, பதினெட்டாகப் பல்கிப் பெருகிய இலக்கியங்களுக்கும் சொந்தக்காரர்களான தமிழர்கள் தலைகுனிந்து கிடந்ததை அண்ணா கண்டார். தமது பேச்சையும் மூச்சையும் எண்ணத்தையும் எழுத்தையும் தமிழ்நாட்டுக்கே அர்ப்பணித்தார்.

'ஏ' தாழ்ந்த தமிழகமே! தன்னை மறந்த தமிழகமே' என்று கூவித் தமிழகத்தைத் தட்டி எழுப்பினார்.

மத்தியக் குழு ஒன்றையும், பத்து மாகாண குழுக்களையும் நிறுவி இந்தியாவின் நிலையை ஆராய அனுமதித்தது. சென்னை மாகாணக் குழுவில் என். சிவராஜ் இடம் பெற்றார்.



பேரறிஞர் அண்ணாவுடன்...

பச்சையப்பன் கல்லூரியில் 1929 பிப்ரவரி 14-இல் சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையின் பன்னிரெண்டாம் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டிற்கு சிவராஜ் தலைமை தாங்கி 1928 ஜனவரி 29- இல் ஆதிதிராவிடர்களின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், அதே ஆண்டில் அக்டோபர் மாதத்தில் நடந்த The Madras Provincial Depressed Classes Federation-னின் தலைவரான இரட்டைமலை சீனிவாசன் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக்கையையும், அங்கீகரிக்கச் செய்தார். 1929 பிப்ரவரி 18-இல் சென்னைக்கு வருகை தந்த சைமன் குழுவிடம் இரட்டைமலை சீனிவாசன் மற்றும் ஆதிதிராவிடத் தலைவருடன் சிவராஜும் சென்று அக்குழுவை சென்னை மன்றோ சிலைக்கு அருகில் எதிர்கொண்டு வரவேற்று தங்கள் மனுக்களை வழங்கினார்கள்.

இலண்டனில் 1930, 1931, 1932-இல் நடந்தேறிய மூன்று வட்டமேசை மாநாடுகளில், சென்னை மாநிலத்தின் சார்பாக ராவ்பகதூர் ஆர். சீனிவாசன் அவர்களும், பம்பாய் மாநிலத்தின் சார்பாக டாக்டர் அம்பேத்கரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டனர்.

என். சிவராஜ் அவர்களுக்கு இலண்டன் வட்டமேசை மாநாட்டிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பாரின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட ராவ் பகதூர் ஆர் சீனிவாசன் 1930 டிசம்பர் 3-லும், டாக்டர் அம்பேத்கர் 1931 ஜனவரி, 4-லும், 1932 நவம்பர் 9-லும் எழுதிய கடிதங்களில் அவர்களது பணி செம்மையாக நடைபெறுகிறது என்றும்

களில் இவர் காலத்தில் கட்டாயக் கல்வி வலியுறுத்தப்பட்டவுடன், பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களா என்பதைக் கண்காணிக்க 4 தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

திரு. என். சிவராஜ், வீணை, சித்தார், ஆர்மோனியமும் நன்றாக வாசிக்கக்கூடிய கலைஞர். மேல்நாட்டு நடனம் ஆடுவதிலும் இசையிலும் ஆர்வம் கொண்டவர். குதிரைச் சவாரி செய்வதில் வல்லவர். சென்னை ரேஸ் கிளப்பின் மேலாளராகவும் விளங்கினார். தென்னக விளையாட்டுக் கழகத் தனித்



ஜின்னாவுடன்... (இடையில் இருப்பவர் கிரிப்ஸ்)

அதில் வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்தார்கள்.

1945-46-இல் என். சிவராஜ் சென்னை மேயராக விளங்கினார். 194? ஜனவரி 29-இல் குடிசைப் பகுதி ?ளின் முன்னேற்றப் பணிக்காக ?ரு குறிப்பிட்ட காலத்திற்கான குழுவினை நகரசபையில் உருவாக்கி அதன் தலைவரானார். சென்னை மாநகரில் மதுவிலக்கைத் தீவிரப் படுத்தினார். மாநகராட்சிப் பள்ளி

தலைவராகவும் விளங்கினார். இவர் மேயராக விளங்கிய காலத்தில்தான் 'நேரு விளையாட்டு அரங்கம்' கட்டப்பட்டது.

1945 டிசம்பர் 25-ந் தேதி மாலையில் சென்னை கார்ன்ஸ்மித் மைதானத்தில் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அகில இந்திய செட்யூல்டு வகுப்பினரின் பெடரேஷனின் தேர்தல் கூட்டத்தில் மேயர் என். சிவராஜ்



டாக்டர் அம்பேத்கருடன்...





பண்டித நேருவுடன்...

தலைமை தாங்கினார். டாக்டர் அம்பேத்கரின் ஆங்கில உரையை அக்கூட்டத்தில் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

சென்னைக்கு ?, தெற்கே செங்கல் பட்டுப் போகும் பாதையில் தாம்பரம் ரெயில் நிலையத்திற்கு மேற்கே பெருவழிப்பாதையை ஒட்டிய இடத்தில் இடத்தில் ஒரு நகரை உருவாக்கி 1946 செப்டம்பர் 1-இல் மேயர் சிவராஜ் அவர்களால் அந்த நகருக்கு 'பெரியார் ராமசாமி நகர்' என்று பெயர் சூட்டப்பட்டது. அந்த விழாவில் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

திரு. என். சிவராஜ் அவர்களுக்குப் பிரிட்டிஷ் அரசு ராவ் சாகிப் என்ற பட்டத்தையும், ராவ் பகதூர் என்ற பட்டத்தையும் வழங்கியது.

1952-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். மீண்டும் 1957-இல் நடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957 முதல் 1962 வரை நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். 1959 மே 8-இல் சீனா பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

சான்பிரான்சிஸ்கோ, அமெரிக்கா,



முன்னாள் குடியரசுத் த[...] ஜாகீர் உசேனுடன்...

கனடா, பர்மா, மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டு, அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்றிய விளக்கங்களைப் பற்றி விவாதித்தார்.

1964 செப்டம்பர் 29-ஆம் நாள் காலை 5.30 மணி அளவில் மாரடைப்பால் காலமானார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 121-வது பிறந்த நாளையொட்டி, சென்னைத் துறைமுகம்அருகிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு 5.9.92 அன்று காலை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நுழைந்து மாணவர்களிடம் தமது சொல்லாற்றலால் கருத்துப்புரட்சி செய்தார். அவரது பேச்சுக்கும் எழுத்துக்கும் இருந்த காந்த சக்தி இளைஞர் சமுதாயத்தை ஈர்த்தது. மூத்த சமுதாயத்தைத் திருத்தியது. மாணவர்களும் - இளைஞர்களும் அண்ணாவின் சுட்டு விரல் ஆணைக்குப் பணிந்து நின்றனர்.

படித்தவர்கள், பட்டதாரிகள் முதல் பாமரர் வரை அண்ணாவைப் பின் தொடர்ந்தனர். அவரையே நம்பினர். அண்ணா முதலமைச்சர் ஆனார்.

ஆட்சியில் அமர்ந்த அண்ணா,

ஏழைகளை வாழவைக்கத் திட்டம் தந்தார். முதன்முறையாக வரியில்லாத வரவு - செலவுத் திட்டத்தைத் தந்தார்.

வறுமையில் வாடிய ஏழைகளுக்கு வயிற்றுக்கு உணவு தந்தார். படியரிசித் திட்டம் தந்து பாமரரை வாழவைத்தார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே -
இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே -
எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே-ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

என்று பாடினார் பாரதியார்.

ஆனால், அந்தச் செந்தமிழ்நாடு சொந்தப் பெயர் இல்லாமலே 'சென்னை மாகாணம்' என்ற வேறொரு பெயரைத் தாங்கி நின்றது. இந்த இழிநிலையை மாற்றித் 'தமிழ்நாடு' எனும் இனிய பெயரைத் தமது அமுதவாயால் தமிழ் மண்ணுக்குச் சூட்டி, தரணிக்கு நம் தமிழ்நாட்டை அறிமுகப்படுத்தினார். தமிழனைத் தலைநிமிரச் செய்தார் அண்ணா.

தீண்டாமை ஒழிப்பிலே தீவிரம் காட்டிய அண்ணா, சாதிக் கொடுமைக்கு முடிவுகட்ட கலப்புத் திருமணத்திற்கு அரசாங்கமே பரிசு வழங்கிடும் அரிய திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்தியாவில் வேறு எங்கும் நடந்திராத புதுமை இது. இதனால் தாழ்த்தப்பட்டோர் தலைநிமிர்ந்தனர். தன்மானம் பெற்றனர்.

அண்ணாவின் அறிவாற்றலைப் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள 'ஏல்' (Yale University) பல்கலைக் கழகம் அண்ணாவை அழைத்துச் சிறப்புப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. முன்பெல்லாம் இந்தச் சிறப்புப் பட்டம் அமெரிக்கர்களுக்கு மட்டுமே கிடைத்தது. இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற முதல் வெளிநாட்டவர் அண்ணாதான்.

தாம் பட்டம் பெற்றது மட்டுமல்ல, அந்தப் புகழ்மிக்க பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தி, குறளின் பெருமையை தமது ஆங்கிலப் புலமை மூலம் எடுத்துரைத்தார்.

தமிழ் மக்கள் வாழ்வு சிறக்க, தமிழ்நாட்டின் பெருமை பாரெங்கும் பரவிடத் தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிய அண்ணா புற்று நோயால் பாதிக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உடல் நலிந்தது.



வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெறவேண்டுமானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடா முயற்சியும் மிகமிக அவசியமாகும்.

- பேரறிஞர் அண்ணா.



தமிழ் மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழா நடந்தது. அந்த விழாவில் கலந்து கொண்டால் உடல் மேலும் மோசமடையும். உயிருக்கு ஆபத்து என்று கூறி மருத்துவர்கள் தடுத்தனர். ஆனால், "எது வாழ்வின் இலட்சியம் நிறைவேறும் இந்த விழாவில் கலந்து கொள்ளப் பயன்படாத உயிர் எனக்குத் தேவையில்லை'', என்று சொல்லிவிட்டு, விழாவில் அண்ணா கலந்து கொண்டார். தமிழ்நாடு என்ற பெயரைத் தந்தார். அதற்காகத் தம் வாழ்வையும் தந்தார்.

அண்ணா தலைசிறந்த பேச்சாளர், எண்ணற்ற பேச்சாளர்களை உருவாக்கினார். ஒப்பற்ற எழுத்தாளர், எழுத்தாளர் பரம்பரையையே உருவாக்கினார்.

அவர் ஒரு புதிய தமிழ் நடையைத் தந்தார். தமிழ் மேடைக்கு உயிரூட்டினார். அண்ணா இல்லையேல் தமிழ் இல்லை. தமிழ்நாடு இல்லை; தமிழருக்குத் தன்மான வாழ்வும் இல்லை.

தமிழின் மூச்சாய், தமிழரின் மூச்சாய் இருந்த அண்ணா 1969 பிப்ரவரி - 3-ஆம் நாள் மறைந்தார். தமிழகம் துயரத்தில் மூழ்கியது.

'நடக்கக் கூடாதது நடந்து விட்டது. நாட்டில் இருள் சூழ்ந்து விட்டது', என்று கூறித் தந்தை பெரியார் வேதனைப்பட்டார்.

அண்ணாவின் இறுதி ஊர்வலத்தில் அண்ணாவின் உடலைக் காணவும். வணங்கவும் திரண்டதைப் போன்ற பெருங்கூட்டம் உலக வரலாற்றில் வேறு எந்த இறுதி ஊர்வலத்திலும் எங்கும் எப்போதும் திரண்டதில்லை என கின்னஸ் புத்தகம் கணக்கெடுத்துக் கூறுகிறது. (கின்னஸ் புத்தகம் 1984).

தமிழுக்குத் தொண்டு செய்து
சிறைக்குச் சென்றோன்
தலைசிறந்த பேச்சு வல்லோன்;
தமிழன், வீரன்;
தமதென்றும் தமரென்றும்
பார்ப்பதன்றித் தமிழ்நாட்டின்
நலத்திலுக்கே.

'உயிர், உடல் அமைகவென உழைக்கும் மேலோன்!' என்று பாவேந்தர் பாரதிதாசன் அண்ணாவைப் பற்றிப் பாடினார்.

தமிழுக்காகவும், தமிழர் வாழ்வுக்காகவும் உயிரையும் உடலையும் தந்து உழைத்தவர் அண்ணா. அவர் வளர்த்த தமிழால், அவர் தந்த தமிழால், அவர் காத்த தமிழால் அவரை வாழ்த்துவோம்; வணங்குவோம்; அவர் வழி நிற்போம்.



**தத்துவமேதை**

# டாக்டர் இராதாகிருஷ்ணன்



ஒடிசலான உடலும், திண்ணிய நெஞ்சமும், கீழே பஞ்சகச்சமும் மேலே கோட்டும், தலையில் வெள்ளைத் தலைப்பாகையுமான தோற்றம் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்குச் சொந்தம். அமைதியான-அதே சமயத்தில் ஆழ்ந்த அழுத்தமான சொற்பொழிவாற்றல் மிக்கவர் அவர். தாய்மொழி தெலுங்கானாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவ்வம் மொழிப் பண்டிதர்களே வியக்கும்படியான சொல்லாட்சி அவருடையது.

அவரது முன்னோர்கள், சர்வபள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். நடுத்தரக் குடும்பமொன்றின் தலைவரான திரு. வீராசாமி என்பார், பிழைப்புத் தேடி, முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் வந்து குடியேறினார். அவருக்கு ஐந்து பிள்ளைகள்; ஒரே பெண். அவர்களில் இரண்டாவது மகனாக 1888-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி பிறந்தவர்தான் நமது டாக்டர் இராதாகிருஷ்ணன்.

வருங்காலத்தில் தலைசிறந்த தத்துவஞானியாகவோ, எதிர்கால இந்தியாவின் குடியரசுத் தலைவராகவோ தமது மகன் விளங்கப் போகிறார் என்று அந்தத் தந்தைக்குத் தெரியாது. தாமே தன் அன்பு மகனுக்கு ஆரம்பக் கல்வியைப் போதித்தார். பன்னிரண்டு வயதிற்கு மேலேதான் அவர் பள்ளியிலேயே சேர்க்கப்பட்டார். தந்தையார் மூலமே வடமொழியறிவும் வாய்க்கப்பட்ட அவர், கிறிஸ்துவக் கல்விக் கூடங்களில் படித்ததால் அந்த மதம் பற்றியும் இளமையிலேயே ஏராளமாகத் தெரிந்து கொண்டார். கிறிஸ்துவ வேதமான பைபிளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார்,

திருத்தணியில் பள்ளிப் படிப்பு முடிந்தது. கல்லூரிப் படிப்பு, வேலூர் ஊரிசுக் கல்லூரியில் தொடர்ந்தது. அங்கே எஃப்.ஏ. படிப்பு முடிந்ததும், சென்னையில் உள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் தத்துவப் படிப்பு அவரை ஆட்கொண்டது. இதற்கு இராதாகிருஷ்ணனைத் தூண்டியவர். அவரது சித்தப்பா மகனேயாவார். எம்.ஏ. வகுப்பிலும் தத்துவப் படிப்பை மேற்கொண்ட அவரை, அப்போது சுவாமி விவேகானந்தரின் விவேகம் மிக்க ஆன்மீகச் சொற்பொழிவுகள் அதிகம் கவர்ந்தன. வேதாந்தம். பயில விரும்பிய அவர், அத்துவைதத் தத்துவத்தை ஆழ்ந்து கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

கல்லூரி வாழ்வு தொடங்கு முன்பே, அக்கால வழக்கப்படி அவர் இல்லறவாசியாக்கப்பட்டு விட்டார். ஆம், அவருக்குப் பால்யப் பருவத்திலேயே திருமணம் முடிந்து விட்டது.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் முதன் முதலாக அவருக்குத் தர்க்க இயல் (Logic) துணைப் பேராசிரியர் வேலை கிடைத்தது. கல்விக் கண் திறக்கும் ஆசிரியர் பணியே சிறந்தது என்று முடிவெடுத்துக் கொண்ட அவர் சென்னை-சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து எல்.டி. பட்டம் பெற்றார்.

அதன் பின்னால், பிரஸிடென்சி கல்லூரியில் தர்க்க இயல் பேராசிரியர் பதவியே அவருக்கு அளிக்கப்பட்டது.

அவர் தயாரிக்கும் கட்டுரைகளும், ஆற்றும் சொற்பொழிவுகளும் மாணவர்களை மட்டுமல்ல; பேராசிரியர்களையும் வியந்து பெருமூச்செறிய வைப்பவைகளாக இருந்தன. எனவே, மாணவர்கள் மட்டுமன்றி, பேராசிரியப் பெருமக்களும் அவ்வப்போது அவரை அணுகிப் படிப்புத் தொடர்பான ஐயம் நீக்கிக் கொள்வாராயினர்.

அதன்பின், ராஜமகேந்திரத்தில் உள்ள கலைக் கல்லூரியில் அவர் தத்துவ விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பிறகு, மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் தத்துவநூற் பேராசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், மிகச் சிறந்த கற்றறிவாளரான இராதாகிருஷ்ணனைத் தமது தத்துவப் போதகப் பேராசிரியராகக் கொண்டு கல்கத்தா பல்கலைக் கழகம் பெருமை பெற்றது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும், மான்செஸ்டர் கல்லூரியும் - மற்றும் உலகெங்கும் உள்ள பிரசித்தி பெற்ற கல்வியமைப்புகளும் ஆர்வத்தோடு அவரை அழைத்து அறிவார்ந்த சொற்பொழிவாற்றச் செய்து சிறப்பித்தன; சிறப்புற்றன.

நாளடைவில் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான அவர், ஐந்தாண்டுக் காலத்திலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று, அங்கு சென்று ஒரு பிரிவின் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். கல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியர் பதவியை மீண்டும் ஒப்புக் கொண்டு உயர்வுற்றார். மிகச் சிறந்த கல்விமான் ஆன அவரை நோக்கி, காசிப் பல்கலைக் கழகம் துணைவேந்தராக வரும்படி நேசக்கரம் நீட்டியது. மிகப்

பெருந்தொகையை அதற்கான ஊதியமாகத் தர அவர்கள் இசைந்தார்கள். ஆனால், டாக்டர் இராதாகிருஷ்ணனோ அதற்கு முழுமையாகச் சென்றுவிட இயலாத நிலையில், துணைவேந்தரின் கௌரவப் பதவியை மட்டும் வகிப்பதாக இசைவளித்தார்.

இதற்கிடையே பல்வேறு ஆராய்ச்சிக் கழகங்களுக்கும் அவர் தலைமை தாங்கிப் பெருமை கொண்டார். சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற பல்வேறு நாடுகளும் அவரது திறமையை உணர்ந்து அவரை அழைத்துத் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்து அறிவு வளம் பெற்றன.

மேனாட்டில் போய்ப் படித்து விட்டு வந்தால் தான் மேதைமையடைய முடியும் என்ற நிலையை முற்றிலும் மாற்றிக் காட்டிய பெருமை இராதாகிருஷ்ணனுடையதாகும். இந்தியாவிலேயே படித்து மேதைமை கொண்ட அவரை மேனாடுகளெல்லாம் விரும்பியழைத்துப் பாராட்டிப் பெருமை கொண்டன.

இந்து மதத்தைப் போலவே புத்த மதத்தையும் ஆராய்ந்து, இரண்டிலும் உபநிடதக் கொள்கைகளே பரவலாகக் காணப்படுகின்றன என்று அறிவித்த சிறப்பினர் அவர்.

இவ்வாறெல்லாம் இந்தியாவின் புகழை உலக அரங்கில் ஓங்கி நிற்கச் செய்த அவருக்கு, 1952-இல் இந்நாட்டின் உதவிக் குடியரசுத் தலைவர் பதவி கிடைத்தது. அதற்கடுத்த சில காலத்திலேயே 'பாரத ரத்னா' விருது அவருக்கு அளிக்கப்பட்டது.

1962-இல் இந்தியாவின் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் இராதாகிருஷ்ணன், 1967-இல் அப்பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

பல்வேறு மதங்கள், மொழிகள் பற்றி ஆராய்ச்சியிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். உலகப் பல்கலைக் கழகங்கள் பலவும் அன்னாருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தன. இப்படி அவர் பெற்ற டாக்டர் பட்டங்களின் எண்ணிக்கை மட்டும் 133 ஆகும். 'டெம்பிள்டன் நிறுவனத்தார்' அவருக்கு 96 ஆயிரம் டாலர் மதிப்புள்ள பெரும் பரிசு ஒன்றையே வழங்கிக் கௌரவித்தார்கள்.

இந்தியத் தத்துவத்திலும் ஆன்மீக வளர்ச்சியிலும் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு எண்ணற்ற கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும் ஆக்கிச் சான்றோர்க்குள்ளே சுடர்விட்டுப் பிரகாசித்தார் அவர். முப்பதுக்கும் மேலான அரிய நூல்களை எழுதினார். பெண் கல்வி முன்னேற்றத்திற்காக அவர் பெருமுயற்சி மேற்கொண்டார்.

அனைத்துலகிலும் தம் காலடி படாத, உரைகேட்டு உவக்காத முக்கிய நாடுகளே இல்லை என்ற அளவுக்குப் புகழ் பெற்றிருந்த சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 1950-இல், இந்தியத் தூதராக ரஷ்ய நாட்டிலும் இருந்தவர். ஸ்டாலினாலேயே அப்போது புகழ்ந்து பேசப்பட்டவரும் கூட.

தன்னிகரற்ற தத்துவ மேதையான அவர் தமது 86-ஆம் வயதில் 17.4.1975 அன்று, உடல் நலம்குன்றி இயற்கை எய்தினார்.

— பி.எல்.ஆர்.



## சென்னைக் கடற்கரையை அழகுபடுத்த முதல்வர் உத்தரவு

சென்னை மாநகரை எழில் மிகுந்த நகரமாக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்பேரில் ரூ.1,500 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னையிலுள்ள மெரீனா கடற்கரையை அழகுபடுத்த 2 கோடி ரூபாயும், எலியட்ஸ் கடற்கரையை அழகு படுத்த 1.5 கோடி ரூபாயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியுள்ளார். இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருவதாக, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள், அண்மையில் சென்னை மெரீனா கடற்கரையில் துப்புரவுப் பணிகளைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் இதைத் தெரிவித்தார்.

சென்னை நகரின் சாலைகள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் இவ்வாண்டு சுமார் 20 ஆயிரம் மரக்கன்றுகளை நட மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. சென்னை நகரிலிருந்து மட்டும் சுமார் 2 ஆயிரம் டன் குப்பை அன்றாடம் அகற்றப்படுகிறது.



# கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள்



சின்னஞ்சிறிய விரல்கள் படைக்கும் சித்திர விசித்திரங்கள் சிந்தைக்கு விருந்தாய் அமைகின்றன.

கண் கவரும் அந்தக் காட்சிப் பொருள்கள், கைவினைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன.

கல்லும், மண்ணும், காகிதமும், துணியும், உலோகமும் கைவினைஞரின் கைபட்டதும், உருவகம் பெறுகின்றன. நம் உள்ளத்தைக் கவருகின்றன.

இவ்வாறு உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் வகையிலே, சென்னை நகரிலே பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் பல இடங்களிலே நடைபெற்று வருகின்றன. அவற்றுள் காதிகிராப்ட் பொம்மைக் கண்காட்சியும், சென்னை அண்ணாசாலையில் நடைபெறும் காதி கிராமோத்யோக் பவன் பொம்மைக் கண்காட்சியும் குறிப்பிடத்தக்கவை.

காதி கிராப்டில்

மாலை நேரம்!

ஆடவர், மகளிர், குழந்தைகள் என்று கூட்டம் அலைமோதுகிறது.

சிறிய, பெரிய பொம்மைகள் அங்கே காட்சியளிக்கின்றன.

வழக்கம்போல் இந்த ஆண்டும், அழகிய பொம்மைகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

கடவுளர் திருவுருவங்கள், தலைவர்கள், மரங்கள், பறவைகள் முதலான பொம்மைகள் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தன. மெல்லிய கண்ணாடிக் குழாயிலிருந்து நுணுக்கத்தோடு தயாரிக்கப்பட்ட பொம்மைகளும் கண்காட்சியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, பொம்மைகள் சென்னை கொசப்பேட்டை, கடலூர், பண்ருட்டி, விழுப்புரம் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.



இந்தக் கண்காட்சியில் ரூபாய் இரண்டிலிருந்து, ரூபாய் இரண்டாயிரம் வரை பொம்மைகளை வாங்கலாம்.

தமிழ்நாடு, தொன்மையான மட்பாண்டத் தொழிலுக்கும், சிறப்பான கலைவேலைப்பாடுகளுக்கும் பெயர் பெற்றதாகும் என்பது நாமறிந்ததே. கலைநுட்பம் வாய்ந்த அழகிய பூந்தொட்டிகள், கலைநயம் மிக்க தண்ணீர் ஜாடிகள், டெரகோட்டா பொம்மைகள், வழவழப்பான நவீன மட்பாண்டங்கள், நமது பண்டைய கலாச்சாரத்தை விளக்கும் பல்வகைப் பொம்மைகள், மெழுகினால் தயாரான பொம்மைகள், ஏழைகளின் குளிர் சாதனப் பெட்டிகள் ஆகியவை இங்கே கிடைக்கின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கடந்த 32 ஆண்டுகளாக மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர, பல்வேறு நலத்திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. வாரியத்தின் 4 அலகுகள் மூலமாகவும், 112 மட்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், மட்பாண்டத் தொழில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் 12,473 மட்பாண்டத் தொழிலாளர்கள் அவர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நிதி உதவி அளித்துள்ளது. 1991-92- ஆம் ஆண்டில் வாரியம் ரூ.14.61 கோடிக்கு மட்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழ்நாட்டில் 89,864 மட்பாண்டக் கைவினைஞர்களுக்கு, வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 38,000 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

நவராத்திரிப் பொம்மைக் கண்காட்சிக் காலங்களில் இக்கதர்



அங்காடியில் அதிக அளவில் பொம்மைகள் விற்பனையாவதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏழை, எளிய கைவினைஞர்கள் பயனடைகின்றனர்.

மின் விசையுடன் இயக்கக்கூடிய நவீன ஷிலா சக்கரம், முன்னேற்றமடைந்துள்ள மட்பாண்டச் சக்கரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவற்றில் அதிக அளவில் பல்வேறு மட்பாண்டப் பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு வசதியாக, சென்னைக்கு அருகில் உள்ள செவ்வாய்ப்பேட்டையில், ஒரு மண்டல மட்பாண்டப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய தென் மாநிலங்களில் உள்ள மட்பாண்டக் கைவினைஞர்களுக்கு இங்கு 5 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது ஒவ்வொருவருக்கும் ரூ.350 உதவித் தொகையும் பயணப்படிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் தொழில் செய்யும் மட்பாண்டக் கைவினைஞர்கள் அப்பகுதியிலேயே பயன்பெறும் வகையில், 4 இடங்களில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

உற்பத்தி அலகுகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் மூலம் உற்பத்தியாகும் பொம்மைகள் ஆண்டு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வந்தாலும், பெரும் அளவு விற்பனை நவராத்திரி விழாக் காலத்தில் தான் நடைபெறுகிறது.

களிமண் பொம்மைகள், காகிதப் பொம்மைகள் போன்றவை மிக அதிக அளவில் இங்கு விற்பனையாகும் பொம்மை வகைகளாகும்.

மேற்கு வங்காளம், கோலாப்பூர், கேரளா, ஆந்திரா முதலிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து புதிதாகப் பொம்மைகள் வரவழைக்கப்பட்டு, இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய கலைவேலைப்பாடு மிகுந்த பொம்மைகள், கைவினைஞர்களிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் ஏராளமான அளவில் வாங்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. கலை அழகு, தரம் மட்டுமல்லாது நியாயமான விலையிலும் பொம்மைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் இங்கு விற்பனை பன்மடங்கு அதிகரித்து வருவதே இதற்குச் சான்றாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் நவராத்திரிக் கொலுக் கண்காட்சிக் காலங்களில் அதாவது 1990-இல் ரூ.18.10 இலட்சத்துக்கும், 1991-இல் ரூ.22.50 இலட்சத்துக்கும் பொம்மைகள் விற்பனை ஆயின.

இவ்வாண்டு நவராத்திரிக் கொலுக் காலத்தில் பொம்மைகள் ரூ.30 இலட்சத்திற்கு விற்பனை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.









## காதி பவனில்

சென்னை அண்ணாசாலையில் உள்ள காதி கிராமோத்யோக் பவனில் பொம்மைக் கொலு தொடங்கப்பட்டுள்ளது.

கண்ணைக் கவரும் வகையிலே வண்ணப் பொம்மைகள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

வகை வகையான பொம்மைகளைப் பார்க்கும்போது, எல்லாவற்றையும் வாங்க வேண்டும் போல் தோன்றுகிறது.

கடவுளர் சிலைகள் முதல் காய்கறி, பழங்கள் வரை மிக நேர்த்தியாக, கலை நுட்பத்துடன் செய்யப்பட்டிருக்கிற பாங்கைக் கண்டு மகிழலாம்.

கிராமப்புற ஏழை எளியோர் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட, இது போன்ற பொம்மைக் கண்காட்சிகள் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது.

இந்த ஆண்டு, காதி பவன் பொம்மைக் கொலுவில், புதிய வகைகளாக மகளிர் பூப்பந்தாட்டம், முதியோர் கல்வி, அகத்தியர் காவேரி, மண் உண்ட கண்ணன், யசோதை- தயிர் கடைதல், வசுதேவர், இலட்சுமி நரசிம்மர், பகீரதன் பிரயத்தனம், லிங்கோத்தரன், வரம் தரும் தேவியர், பழக்கடை, காய்கறிக் கடை, அரிசிக்கடை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு, பொம்மைக் கண்காட்சி மூலம் ரூ.4.40 இலட்சம் விற்பனை நடந்தது. இவ்வாண்டு, ரூ.5.50 இலட்சம் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது நடைபெறுகிற இக்கண்காட்சியில் ரூ.1 முதல், ரூ.8,000 வரையிலான விலையில் பொம்மைகள் உள்ளன.

மரத்தாலான வேலைப்பாடு உள்ள விநாயகர் (இதன் விலை ரூ.8008), திருப்பதி வெங்கடாசலபதி, சமயபுரம் மாரியம்மன், இலட்சுமி நரசிம்மர் முதலான பொம்மைகள் காட்சியில் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

—பொ. மறைமலை






ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

verified

Licence No. TN/MS(C)/PP-23



முன்னாள் மேயர் திரு. என். சிவராஜ்
(29.9.1892 — 29.9.1964)